www.tamilarangam.net

# மண்ணுரிமை

முதற் பாகம்



குணா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# மண்ணுரிமை

## முதற்பகுதி

## குணா

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

தமிழக ஆய்வரண்
வெங்காலூர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதற்பதிப்பு: தி. பி. 2031 கும்பம்
(பிப்ருவரி-மார்ச் 2000)

நூற்பெயர்: மண்ணுரிமை — முதற்பகுதி
(*Mannurimai* , Volume I)

ஆசிரியர்: குணா ©

விலை: உருவா 150.00

வெளியீடு: தமிழக ஆய்வரண்
3155/A, 11வது பெருஞ்சாலை
எச். ஏ. எல். இரண்டாம் கட்டம்
பெங்களூர் 560 008.

நூல் கிடைக்குமிடம்:
வேர்கள்
10அ/3, வாத்துக்காரத் தெரு
உறையூர்
திருச்சி 620 003
தொலைபேசி: (0431) 723213

அச்சகம்
ஏசியன் கம்ப்யூட்டர் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
33, கிலேதார் தெரு, திருச்சிராப்பள்ளி - 2. போன்: 700888

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முன்னுரை

மண்ணுரிமையை எழுதத் தொடங்கியபின், அது நீண்டு கொண்டே போகிறது. இதுவரை வேர்கள் இதழில் தொடராக வந்த பகுதிகளை முதற்பகுதியாக வெளியிடலாமே என்னும் கருத்து அதனால் எழுந்தது. ஆகவேதான், அம் மண்ணுரிமையின் இம் முதற்பகுதி வெளிவருகிறது. மண்ணுரிமை என்னும் இந் நூலின் தலைப்புக்கான பொருத்தம் அதன் இரண்டாம் பகுதி வந்த பின்னரே முழுமையாக விளங்கும்.

தமிழகத்தை அதன் எல்லைப்புறங்களில் அடுத்தடுத்து அலை யலையாய்த் தாக்கியவண்ணம் இருந்த வடுக அநாகரிகர்கள் (Vadugar barbarians) தாம் நடாத்திய படையெடுப்புகளால் தமிழர்நிலத்தைப் பிடித்து, இன்று வரை அடிமைப்படுத்தி ஆண்டுவருகின்றனர் என்னும் புதிய வரலாற்றுக் கோட்பாடே இந் நூலின் முதற்பொருள். அதனால், ஆயிரத்து எழுநூற்று ஐம்பது ஆண்டுகளாய் அடிமைப் பட்டுக் கிடக்கும் தமிழரினத்தின் மண்ணுரிமையை இந்தி(ய) வந்தேறி யத்திற்குத் துணைநிற்கும் வடுக வந்தேறிகளிடமிருந்து மீட்பதென்பதே இந் நூலின் கருப்பொருள்.

மண்ணுரிமை என்பது ஒரு மீமிசை அரசியல். தமிழன் தன் உரிமையையும் கொற்றத்தையும் கொடியையும் பெருமையையும் ஒற்று மையையும் இழந்த வரலாறே, அவன் தன் மண்ணை இழந்த வரலா றாகும். இதைக் கோடிட்டுக் காட்டுவதோடு நில்லாமல், இழந்த மண்ணை மீட்டெடுக்க வேண்டும் என்று அறைகூவல் விடும் போர் முரசமே மண்ணுரிமை அரசியல். விடுதலைப் போருக்கான சங் கொலியே அம் மண்ணுரிமை அரசியல். தமிழகத்தில் பேயாட்டம் போட்டுவரும் வந்தேறிகளின் திராவிடக் கருத்தியலை அதன் நச்சு வேரோடு பிடுங்கி எறியும் உள்ளாற்றல் இந்த மண்ணுரிமை அரசிய லுக்கு உண்டு. 'இந்து'-இந்தி(ய) அடிமைத்தளையையும் அடித்து நொறுக்க வல்ல பேராற்றலும் அதற்குண்டு. தமிழரினம் என்னும் பேரினத்தின் அக, புற ஆற்றல்களை முழுமையாகவும் முனைப்பாகவும் கூர்மைப் படுத்தி வெளிப்படுத்தும் நோக்கே அதன் பெருவழி.

"தமிழனுக் குலகம் நடுங்கியதுண்டு — அங்குத்
தன்னாட்சி நிறுவிட எண்ணியதுண்டா?"

என்னும் பாவேந்தரின் பெருமூச்சுக்கு — ஏக்கத்துக்கு — நாம் வெட்டும் ஒரு வடிகாலே, மண்ணுரிமை அரசியல். தமிழரினத்தின் கொடியும் பீடும் பெருமையும் உலக அரங்கில் அரங்கேறச் செய்ய வல்ல மீப்பெரும் அரசியல் — விடுதலைப் பேரரசியல் — அம் மண்ணுரிமை அரசியல்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பல்லவ வடுகன் வந்தான்; படையாட்சிகளை அமைத்தான். தன் கைக்கு எட்டாத வளம் குறைந்த பகுதிகளில் தம் பக்கம் சேர்ந்த ஓரிரு தமிழரையும்கூடப் படையாட்சிகளாக்கினான். விசயநகரத்து நாயக்க வடுகன் வந்தான். காடும் மேடும் கரம்புமாயிருந்த சில பகுதி களை மட்டும் தமக்குத் துணைநின்ற சில மறவர்க்கும் கள்ளர்க்கும் பாளையப்பட்டுகளாக விட்டுக்கொடுத்து, தமிழரில் ஒருவனைக் கொண்டே நாடு முறையை ஒழித்துக்கட்டினான்! மண்ணாண்ட மள்ளரைப் பள்ளராக்கினான்! தொல்தமிழரைத் தீண்டாதவனாக்கி னான்! சான்றோரைக் காணத்தகாதோராக்கினான்! இத்தகைய வரலாற்றுப் பிறழ்ச்சிகளாலும் அட்டூழியங்களாலும் வடுகரின் ஆட்சி தமிழர்நிலத்தில் காலூன்றியது; காலப்போக்கில், விழுதூன்றியது.

சாதி-வரணக் கட்டமைப்புகளைத் தமிழரின் தலைமீது திணித்துச் சாதியால் பிரித்தாள்வதையே ஆட்சிக்கொள்கையாகக் கொண்ட வடுகர்கள், அன்றோடு ஓய்ந்தார்களா? இல்லையே! "திராவிடம்" என்னும் புதிய நச்சுக்கருத்தியலை வைத்துத் தமிழனின் எஞ்சிய மண்ணையும் உரிமையையும் பெருமையையும் மட்டுமன்றி, மானத்தைக் காக்கவென இடுப்பில் கிடந்த துண்டையும் உருவிக் கொண்டனரே! இவ்வாறு மண்ணையும் மானத்தையும் பறித்தவன், அவனுடைய தலையின்மீது சலுகை-இடவொதுக்கீடு என்னும் பெரிய திருவோட்டைத் திணித்துவிட்டான்! "திருவோடே உன் அமுதசுரபி!" என்னும் வடுகக் குறும்பை என்னவென்பது? தமிழரைச் சாதிவழியில் மோதவிட்டுப் பிரித்தாள்வதை அவ் வடுகர்கள் இன்னும் நிறுத்தினா ரில்லையே!

அத்தோடு நின்றதா அந்த வடுகக் குறும்பு? பழத்தில் நச்சுத் தோய்ந்த ஊசியைச் செருகுவதைப்போல், பொட்டுக்கட்டிகளைக் குறிக்கும் "சூத்திரன்" என்னும் பொல்லாப் பட்டத்தைப் பொட்டுக் கட்டும் வழக்கமே இல்லாத தமிழரின்மீதும் திணித்துவிட்டு, "பெரி யார் இங்கு பிறந்திராவிட்டால், நாமெல்லாம் சூத்திரர் என்னும் ஓர்மை நமக்குப் பிறந்திருக்குமா?" என நரித்தனத்தோடு கேட்கின்றனர்! தமிழரையும்கூடச் சாமி மாட்டைப்போல் அதற்குத் தலையாட்ட வைத்தனர்!

இன்று நாம் காணும் இது போன்ற அத்தனை அவலங்களை யும் பனிபோல் விலகச் செய்ய வல்லது மண்ணுரிமை அரசியல்.

வடுக உத்திகளையும் குறும்புகளையும் விளங்கிக் கொள்ளாமல், திருவோடே வீடும் விடுதலையும் எனக் கருதி மயங்கி நிற்கும் தொல் தமிழரையும் பிற அடிப்படைத் தமிழரையும் என்னென்பது? வந்தவன், புகுந்தவன், கொண்டவன், பிடுங்கினவன் ஆகியோரில் ஓரிருவரைச் சிலையாய் — தலைவர்களாய் — சமைத்துக் கொண்டு, வடுகனின் சாதி அரசியலுக்கு இரையாகிக் கிடக்கின்றனரே! இக் கோலத்திற்கு முடிவுகாண வல்லதே மண்ணுரிமை அரசியல்.

www.tamilarangam.net



வடுகன், தமிழரினத்தை அழித்த வரலாற்றுப் பகை. அவ் வடுகனையும் தமிழனையும் பிரித்துக் காட்டுவது அணுவைப் பிளப் பதைப் போன்ற வரலாற்று அறிவியல். அனலையும் புனலையும் கக்கும் அந்த அணுப்பிளப்பு மண்ணிலும் விண்ணிலும் பெரும் தீக் குழம்பைக் குடையாய் விரிக்கும். அந்த அணுவெடிப்பில்தான் தமிழன் உயிர்த்தெழுவான். தன்னைத்தானே தனக்குள் காண்பான். தன்னை யும் தன் வலிமையையும் விண்ணளாவிக் காட்டுவான்.

"அந்தப் பூதத்தை உறங்கவிடு! அது விழித்துக்கொண்டால், உலகமே நடுங்கும்!" எனச் சீனத்தைப்பற்றி நெப்போலியன் சொன் னானாம். அது மெய்யோ பொய்யோவென்பதை உலகம் இன்னும் அறியவில்லை. ஆனால், மூத்தகுடியான தமிழன் எழுந்தால் உலகமே நடுங்கும்! அது மட்டும் உறுதி. தொன்மையான நாகரிகமான சீனமும் மாசேதுங்கின் வாயிலாக உயிர்த்தெழுந்தது. இன்னொரு தொன்மை யான நாகரிகத்தவரான கிரேக்கருக்கும் தனிநாடு உண்டு. எகிப்திய னும் ஈராக்கியனும் இசுரேலியனும் பாரசீகனும் தனிநாடுகளைக் கண்டு உலகரங்கில் பீடுடன் நிற்கின்றனர். செவ்விந்திய நாகரிகங்களும்கூட வரலாற்றின் இடிபாடுகளிலிருந்து எழுந்து நிற்கப் பார்க்கின்றன.

அந்த நாகரிகங்களுக்கெல்லாம் முந்தைய தமிழர் நாகரிகம் அவ்வாறு தனிநாடாய் உயிர்த்தெழ விடமாட்டோம் என வடுகச் சூழ்ச்சி தடுத்து நிற்கிறது. "இந்தி"யமும் "இந்து"வியமும் ஐரோப்பிய கோணங்கி விளக்கங்களும் அதற்குத் தோள் கொடுக்கின்றன. இந்தப் பீடைகளுக்கெல்லாம் பாடை கட்ட வல்லது மண்ணுரிமை அரசியல்.

'ஆரிய'னாம் பொல்லா 'ஆரியன்'! அவன் இமயத்துக் கைபர், போலன் கணவாய்களின் வழியாக வந்து இத் துணைக்கண்டத்து வடக்கிலிருந்த திராவிடரையெல்லாம் தெற்குநோக்கி விரட்டிவிட் டானாம்! இப்படியொரு கதையை விட்டனர், எங்கோயிருந்து ஆள வந்த ஆங்கிலேயனும் அவன்வழி ஐரோப்பியனும்! இந்தக் கட்டுக் கதை, தமிழரினத்தின் உண்மை வரலாற்றை மறைக்கவும் — எஞ்சிய வற்றையும் குலைக்கவும் — மட்டுமே உதவியது. நாகரிகமென்பது வடக்கேயிருந்து தெற்கே வந்தது என்னும் புரட்டலைத் தழுவிய விளக்கம் அது. தமிழரினத்தை அலைக்கழிக்கவும் அழிக்கவும் கெடுக்க வும் குலைக்கவும் சிதைக்கவும் செய்தவன் வந்தேறி வடுகனே என்னும் உண்மையை அது நயம்பட மறைத்தது.

வடக்கிலிருந்து தெற்கே வந்த நாகரிகம் என்னும் புரட்டல் போக்குக்குத் துணையாய் வந்தது சிந்துவெளி நாகரிகத்தைப் பற்றிய அகழ்வாய்வுகள். இந் நிலையில், சிந்துவெளியில் தழைத்தோங்கிய பழந்தமிழ் நாகரிகத்தை வேரறுத்து மண்மூடிப்போகச் செய்தவர்கள் 'ஆரிய'ராகத்தானே இருக்க வேண்டும் என்னும் கேள்வி எழலாம்.

அந்தச் சிந்துவெளி நகரங்களின்மீது படையெடுத்தவர்கள் ஈரானிய அநாகரிகரும் மங்கோலிய இனத்தவரான அவுணர்களுமே

www.tamilarangam.net



ஆவர். பாரசீகர் வழிபட்டுவந்த அசுர மஸ்தா (Ahura Mazda) என்னும் தெய்வத்தின் பெயரை வைத்து அசுரர்கள் என்றுதானே அன்றைய பாரசீக அநாகரிகர் அழைக்கப்பட்டனர்? 'ஆரியர்கள்' தேவர்களாம். ஆனால், அந்தப் பாரசீக அநாகரிகர், அவ்வாறு சொல்லிக் கொண்ட தேவர்களாயில்லையே!

இதனால்தான், கைபர், போலன் கணவாய்களின் வழியாக வந்தவராக ஆரியரை இந் நூல் பார்க்கவில்லை. தமிழகத்துக் கணவாய் களின் வழியாகப் புகுந்த வடுகரையே ஆரியராக அடையாளம் காட்டுகிறது.

எப்படியாயினும், சிந்துவெளி நாகரிகம் ஒரு முதல் நாகரிக மன்று. அஃது ஒரு வழிநாகரிகம். அந்த வழிநாகரிகத்தை ஒரு முதல் நாகரிகமாக்கித் தலைகிழாகக் காட்டுவதில் வடுகருக்கு ஓர் உள்நோக்கம் உண்டு. வடுகத் திராவிடக் கருத்தியலாரின் புதுக் குறும்பு அது.

தொன்மத்தில் வரும் பகீரதன், வேறு யாருமல்லன். பஃறேர் செம்பியன் என்னும் பழந்தமிழ்ச் சோழ மன்னன் அவனாம். கங்கை யாற்றை வெட்டியவன் அவன் என்பர். அவனுக்கு முன்னோனே அழகு நந்தன். கங்கையாற்றின் துணையாறுகளில் ஒன்றான அழகு நந்தா ஆறு அவன் பெயரிலானது. இது போன்ற தொன்மக் கதைகளி லெல்லாம் புதைந்து கிடக்கும் வரலாற்றுத் துணுக்குகள், இத் துணைக் கண்டம் முழுவதையும் ஒருகால் தமிழ்ச் சோழர்கள் ஆண்டுவந்தனர் என்பதைக் காட்டுவன. அந்தச் சோழர்களின் படைப்புகளில் ஒன் றாகவே சிந்துவெளி நாகரிகம் இருந்திருக்க வேண்டும். இந்த உண்மை களையெல்லாம் "திராவிடக்" கொள்கை மறைக்கப் பார்க்கிறது.

தமிழர்க்குப் பெரும்பகை வடுகரே என்னும் வரலாற்று மெய்ம்மை இத்தகைய குழறுபடிகளால் திறம்பட மறைக்கப்படுகிறது. தன் பகைவன் இன்னான் எனத் தெரியாத— புரியாத — இனம் யாதும் உருப்படுமா? இன்னான்தான் பகைவன் என்பதை அறியாத எந்த இனமும் ஒன்றுபடவும் முடியாது; கடைத்தேறவும் முடியாது; தன் பகை முடிக்கவும் முடியாது.

ஒரு தேசிய இனத்தினுடைய வீழ்ச்சிக்குக் காரணமே படை யெடுப்புகள்தான் என்னும் வரலாற்றுப் பாடத்தைத் "திராவிட" அரசியல் மூடிமறைத்தது. தமிழர்நாட்டின்மீது நடந்த படையெடுப்பு களில் பெரும்பாலானவை கன்னட வடுகப் படையெடுப்புகளே என்னும் உண்மைக்கு அது கருந்திரை விரித்தது. கன்னட வடுகப் பகையே தமிழினத்தின் முதல் பகை என்னும் உண்மையை மறைத்து, "நாமெல்லாம் திராவிடர்கள்!" எனப் பசப்பிப் பகைவனை நண்ப னாகக் காட்டிக் கண்கட்டுவித்தையைச் செய்தது அந்தத் திராவிட அரசியல். தன்னுடைய இனச்சுரண்டலை அதன் வாயிலாக அது செவ்வனே மறைத்தது.

www.tamilarangam.net



அந்த இனப்பகையால்தான், கன்னடன் தமிழையும் தமிழ னையும் நஞ்சென வெறுக்கிறான். அம் மனநோயாளி இனத்தவனால் தமிழனின் நெஞ்சில் பட்ட புண்ணுக்குப் புனுகு பூசி மறைக்கப் பார்க் கிறது அந்தத் திராவிட அரசியல்.

வடுக நலன்களைக் கருதியே தமிழை மேடையரங்குச் சரக்காக மட்டுமே குறுக்கிய வடுக ஆளவந்தார்கள், தமிழ்நாட்டில் தமிழ் கட் டாயப் பாடமொழியாவதை எந்தெந்த வகைகளிலெல்லாம் தடுக்க முடியுமோ அந்தந்த வகைகளிலெல்லாம் தடுத்து வருகின்றனர். வடுகத் தனத்தின் இன்றைய வெளிப்பாடு அது. தமிழை மெல்லக் கெடுத்து, தமிழரையெல்லாம் 'தமிங்கிலம்' பேசவைத்துத் தமிழகத்தை இன்னொரு மோரீசியசாக ஆக்குவதே அந்த வடுகரின் இக்கால உத்தி. தொடக்கப் பள்ளி முதல் உயர்கல்வி வரையில் தமிழே படித்தறியாத இளந்தலை முறை தமிழரிடையே தோன்ற, அந்த வடுக வந்தேறியம் கால்கோளிட்டு விட்டது. தமிழனின் எஞ்சிய அடையாளங்களையும் ஒழிப்பது என் னும் நோக்கில், கல்வித்துறையில் வடுகத்தனம் வெறியாடுகிறது.

தமிழறிஞர்களும் தமிழ் ஓர்மையாளரும் இங்குமங்கும் போர்க் கொடி உயர்த்தத் தொடங்கியுள்ள நிலையில் — தமிழ்த் தேசிய ஓர்மை விடுதலை அரசியலாய் வடிவெடுத்துவரும் சூழலில் — காலத்தின் கட்டாயத்தால் பின்வாங்கத் தொடங்கியுள்ள வடுக ஆள வந்தார்கள், வேண்டா வெறுப்போடு ஐந்தாம் வகுப்பு வரை தாய் மொழிக் கல்விக்கு ஒப்புக்காவது ஒப்புகின்ற நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். மறுபுறம், ஆங்கிலப் பள்ளிகளின் வழியாகக் கல்வி வணிகம் நடாத்தி வரும் ஒட்டுண்ணிகளை உசுப்பிவிட்டு, தமிழ்வழிக் கல்விக்கு வேட்டு வைக்கக் கரவாகவும் கமுக்கமாகவும் அந்த ஆளவந் தாரும் அவர்தம் குலக்கொழுந்துகளும் முழு மூச்சாக இறங்கியுள்ளனர்.

மேடைத் தமிழையும் திரைப்படத் தமிழையும் வைத்து மிகப் பெரிய அரசியல் முதலாளித் திமிங்கலங்களான வடுக வந்தேறியின் குலக்கொழுந்துகள், தொலைக்காட்சி என்னும் ஊடகத்தை வைத்துத் தமிழை வேண்டுமென்றே கொத்துக்கறியாக்கித் தமிழரின் பேச்சு நடையையே "தமிங்கில"மாகக் கெடுப்பதில் ஓயாது அயராது பாடாற்றி வருகின்றனர். தமிழ்ச்சொற்களில் க, த, ப ஆகிய ஒலிப்புகளை அடி வயிற்றிலிருந்து வரும் ga, dha, ba எனச் சொல்லின் முதலில் ஒலிக்கக் கூடாது. சொல்லுக்கு இடையில் அவ்வொலிப்புகள் தானாய்த் திரிந்து வரும். "பால் மறவாக் குழந்தை" என்னும் பொருளிலான "பாலகன்" என்னும் தமிழ்ச்சொல்லைப் bâலகன் எனத் திரித்து ஒலித்த தால், அந்தத் தூய தமிழ்ச்சொல் ஒரு வேற்றுமொழிச் சொல்லானது. கு(ku)ணம் என்னும் தமிழ்ச்சொல், கு(gu)ணம் எனத் திரிந்து சங்கத மானது. சொல்லின் முதலில் வரும் க, த, ப ஆகிய ஒலிப்புகளைத் திரித்து அடிவயிற்று ஒலிப்புகளாக்கியதால், நூற்றுக்கணக்கான சொற் களைத் தமிழ் இழந்தது. சகரம் (cha) என்பதை ஸகரமாக ஒலித்து,

www.tamilarangam.net



இறுதியில் அதனை ஷகரமாக்கும் வடுகப் பிராமணக் குறும்பால் தமிழ் ஒலிப்பே தறிகெட்டுப் போய்விட்டது. சொல் (chol) என்பது "ஸொல்" என்றும் "ஷொல்" என்றும், சிறப்பு (chirappu) என்பது "ஸிறப்பு" என்றும் "ஷிறப்பு" என்றும் சிதையும் அளவுக்குப் பிராமணர்கள் தமிழைக் குலைத்து வருகின்றனர். ளகரம் லகரமாகிவிட்டது. ழகரம் ளகரமாகிவிட்டது. ணகரமும் னகரமாகிவிட்டது. வடுக வந்தேறிகள் தங்கள் கைகளிலுள்ள தொலைக்காட்சி போன்ற ஊடகங்களை வைத்துத் தமிழைத் திட்டமிட்டுக் கொலைபுரிந்து வருகின்றனர். தமிழின் வட்டார வழக்குகளெல்லாம் மெல்ல மறைய, உதிரித் தமிழும் (Lumpen Tamil) பிராமணத் தமிழுமே இன்றைய தமிழாகத் தொலைக்காட்சிகளில் புழங்குகின்றன. இவை யாவும் ஏதோ தற்செயலாக நடப்பனவல்ல. இத்தகைய வடுகக் குறும்புகள் சின்னஞ்சிறியனவாயினும், அவை யாவும் தமிழைக் குலைக்கும் பெருநோக்குடையன. தமிழை ஒழுங்காகப் பேசுவதும் — தமிழைத் தமிழாகப் பேசுவதும் — மிகவும் தாழ்வானவை என்னும் தாழ்வு மனப்பான்மை தமிழரிடம் ஊட்டி வளர்க்கப்படுகிறது. இது தமிழரின் பண்பாட்டை அழிக்கும் அழிம்பு வேலை.

தமிழுணர்வாளர்களும் இனஓர்மை மிக்க தமிழிளைஞர்களும் இவற்றையெல்லாம் கூர்ந்து கவனித்து வருகின்றனர். இதன் விளைவாக, அவர்களின் உள்ளங்களில் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியுள்ள தமிழ்க்காப்பு உணர்வு, பூதமாய் வடிவெடுக்கும் நாளும் மிகத் தொலைவில் இல்லை.

நல்ல தமிழை மேடையில் அடித்தொண்டையில் பேசுவதும் ஏட்டில் எழுதுவதும் என்னும் உத்தியை வைத்தே தமிழகத்தில் இயல்பாக முகிழ்த்த தமிழ்த் தேசிய ஓர்மையை 'திராவிட'மாய் மடைதிருப்பிக் கெடுத்த வடுக வந்தேறிகள், தமிழைக் கொழுகொம்பாய்க் கொண்டே ஓங்கி வளர்ந்தனர். நன்கு வளர்ந்தபின், மேற்போந்த தமிழ் அழிப்புக் குறும்புகளை அச்சமின்றியும் கூச்சமின்றியும் செய்யும் இன்றைய போங்கு, அவர்களுக்கு உடம்பில் குளிர்விட்டுப் போனதையே காட்டுகின்றது. இது போன்ற வடுகக் குறும்புகள் உள்ளபடியே இனஓர்மை பெற்றுவரும் தமிழர்களிடம் அவர்களைத் தோலுரித்துக் காட்ட உதவும். எதிர்மறைக்கு எதிர்மறை நேர்மறை என்னும் கணக்கு பொய்யாகிவிடுமோ?

இந்தப் பின்புலத்தில், மண்ணுரிமையைப் படியுங்கள்! தமிழரின ஓர்மைக்குப் படைக்கலம் படைக்கும் உலைக்களமாக இந் நூல் அமையும் என்னும் நம்பிக்கை எமக்குண்டு. ஆக்கமுறையில் திறனாய்க!

இறுதியாக, இந் நூல் அச்சேறப் பல்லாற்றானும் உதவிய அன்புத் தமிழ் நெஞ்சங்களுக்கு எம் நன்றி.

—குணா

www.tamilarangam.net

# உள்ளடக்கம்


1. மேலையர் விடும் கரடிகள்! ... 1
ஆப்பிரிக்காவின்மீது இந்தியா! ... 2
நான்கு பெரும் புரட்டல்கள் ... 2
1. கீழையுலகக் கொடுங்கோலும் ஆட்சிக்குலைவும் ... 2
2. ஊர்க்குடியரசுகளும் சாதிகளும் ... 4
3. நிலக்கிழமை ... 5
4. ஆரியர்-திராவிடர் கோட்பாடு ... 6
மார்க்சும் குழப்பினார் ... 7
இந்தியாவின்மீது ஆப்பிரிக்கா! ... 8
கூறுண்ட குழப்படி! ... 9
எத்தனை புரட்டுகள்! ... 10
வேளாளர் பெயர்ச்சிகள் ... 12
திணை முரண்பாடுகள் ... 13
வளங்கள் வெவ்வேறானவை ... 15
திறையாண்மையும் நேரடி ஆட்சியும் ... 16
நடுவரசின்றிப் பெருங்கோயிலா? ... 17
அயலார் வணிகம் ... 20
நடுவப்படைகள் ... 21
முட்டை—தலைப்பிரட்டை—வால்தவளை—தவளை ... 23
குறிப்புகள் ... 24
2. வடுக அநாகரிகர் ... 26
எல்லையில் தொல்லை! ... 28
காவல்நாடுகள் ... 29
வஞ்சகக் கோசர் வாய்மொழிக் கோசராம்! ... 33
ஒண்ட வந்தோர் ஆளவந்தாராயினர்! ... 35
கொங்குநாட்டுக் கொண்கானம் ... 41
வந்தேறிகள் படையெடுத்தனர்! ... 45
பங்காளிச் சண்டையில் வந்தேறி வடுகன்! ... 51
மோரியர் படையெடுப்பு ... 52
புறப்பகை ஓட்டியவன் அகப்பகையால் வீழ்ந்தான்! ... 55
உறவாடிக் கெடுத்த வந்தேறி! ... 56
வடுகரை விரட்டினர்! ... 57
அகப்பகை முடிக்க வடபுலம் நாடல்! ... 59

www.tamilarangam.net




| | | |
|---|---|---|
| குமலந்த படை, ஆறலைத்தது! | ... | 60 |
| புரையோடிய உட்பூசல்! | ... | 64 |
| வேந்தரும் வேளிரும் | ... | 66 |
| ஆந்திரப் பேரரசு | ... | 70 |
| தெற்குநோக்கிய பெயர்ச்சி | ... | 72 |
| ஒப்பியல் நோக்கு | ... | 74 |
| தமிழுக்கும் தமிழருக்கும் என்றும் பகை வடுகரே! | ... | 76 |
| பெண்ணாசையால் வந்த பகை! | ... | 78 |
| ஓட்டை போட்டனர்! | ... | 79 |
| வறட்சியால் வந்த பெயர்ச்சி! | ... | 80 |
| வடுகரான வேளிர்கள்! | ... | 81 |
| குறிப்புகள் | ... | 84 |
| 3. வடுகரின் தாயகம் | ... | 91 |
| இரும்பும் எஃகும் | ... | 92 |
| கொல்லுலை தோன்றிய கருப்பகுதி | ... | 97 |
| கரிசல்காட்டு வடுகர் | ... | 101 |
| குறிப்புகள் | ... | 108 |
| 4. அவிழ்க்கப்படும் புதிர்கள்! | ... | 109 |
| பண்ணையடிமை | ... | 109 |
| புலையரும் வேளாளரும் | ... | 110 |
| கள்ளர்குடிகள் | ... | 112 |
| வெறிச்சோடிய ஊர்களில்... | ... | 114 |
| அடங்காப்பற்றை அறியாத வெள்ளைமுளை! | ... | 115 |
| இடைநிலை | ... | 116 |
| இல்லை அந் நிலை! | ... | 119 |
| மூவேந்தர் கூட்டணி | ... | 119 |
| அகப்பகையால் அடங்கினர் | ... | 121 |
| புரையோடிய வந்தேறிகள்! | ... | 123 |
| பாட்டனுக்குப் பாடம் சொல்லும் பெயரன்! | ... | 124 |
| தொல்காப்பிய காலம் | ... | 125 |
| தெற்கிலிருந்து வடக்குநோக்கி... | ... | 127 |
| குறிப்புகள் | ... | 129 |
| 5. ஆரியர் யார்? | ... | 130 |
| தமிழகத்தின்மீது நடந்த படையெடுப்புகள் | ... | 131 |
| தெற்கிலேயே முதல் பேரரசுகள்! | ... | 153 |
| பிராமணியத்திற்குப் புறம்பான ஆரியம்! | ... | 157 |
| வடுகரும் ஆரியரே! | ... | 158 |
| தமிழரும் வடுகரும் சண்டையிட்ட பாரதப் போர்! | ... | 165 |

www.tamilarangam.net




குறிப்புகள் ... 173

6. அகரகாரப் பொருளியல் ... 177

காமாலைக் கண் ... 178

கன்னடன் பெற்றெடுத்த அகரகாரம் ... 179

அண்டர் பாதை, பாணப்பாடி! ... 180

கொங்கர் கங்கர்; வடுகப் பாணர் ... 181

வாள்வாய்க் கவிழ்ப்பு ... 181

மண்பறிப்பு மாராயம் ... 183

புலையர் தேயமே பொம்மர் தேயம்! ... 185

அப்பன் தடுத்தான், மகன் கெடுத்தான்! ... 186

நுணமங்கலம் செப்பேடு ... 186

பால்மடிக் கல்வெட்டு ... 187

நிலக்கொடை ம(ை)டமை ... 187

நெல்லரிசிப் பண்பாடு ... 188

தமிழை ஒழித்த வடுகவெறி! ... 191

கன்னட வடுகனும் சிங்கள வடுகனும் ... 192

பொன்குன்றமே பௌரிங்பேட்டை! ... 195

போற்றிய புலவரும், தாழ்த்திய வடுகரும் ... 196

மூவகை எழுத்துகள் ... 197

தமிழிசையைத் தம்வயமாக்கிய வடுகர் ... 198

மண்ணைப் பறித்த பல்லவ வடுகன்! ... 199

படையெடுப்புகளின் வழியாக நிலப்பறிப்புகள்! ... 205

முல்லைமாறி அரியநாயக முதலி ... 205

காணியாட்சியும் வந்தேறிப் பொருளியலும் ... 206

வடுக நிலக்கிழமை ... 207

வந்தேறியரை வாழவைத்த இறையிலி! ... 208

மண்ணை இழந்த தமிழர் மதிப்பையும் இழந்தனர்! ... 212

தமிழனுக்கு வடுகன் இட்ட பெயரே 'கொத்தடிமை'! ... 212

ஆளோலை அடிமைகள் ... 213

வடுகர் கொணர்ந்ததே மனுநூல்! ... 214

ஆளுநர்களே அரசராயினர்! ... 215

ஆட்சிமுறை ... 216

சாரிசாரியாக வந்தேறிகள்! ... 217

கட்டுக்குலையாத காணியாட்சி ... 218

கூரம் செப்பேடு கூறுவதென்ன? ... 219

பழைய வடுகரை வஞ்சித்த புதிய வடுகர்! ... 220

தண்டி பட்ட பாடும், பஞ்சவாரமும் ... 221

கல்வெட்டுகளும் செப்பேடுகளும் ... 222

வரியோ வரி, வடுக வரி! ... 223

www.tamilarangam.net



இடைக்காலச் சோழர்கள் கன்னடரே ... 224
பிராமணர் இல்லாத நாடா?! ... 225
திருப்புறம்பியத் திருப்பம் ... 226
வடுக மனு வழியில் வந்த 'சோழர்கள்'! ... 227
ஆசான் காணியும் வேதப்பள்ளியும் ... 228
பாண்டியனின் மணிமுடி ... 229
சோழர் முடியை நாடிய களப்பாளன்! ... 230
வந்தேறி வடுகச் சோழரின்கீழ்
விளங்கிய நிலவுறவுகள் ... 231
கழனி முதல் கானல் வரை ... 231
வெள்ளாளரும் காராளரானார்! ... 232
குடிநீக்காக் காராண்மையும்
குடிநீக்கிய காராண்மையும் ... 234
கடமையும் குடிமையும் ... 235
பற்றுகள் ... 236
பல்லவன் கொணர்ந்த பிரமதேயம் ... 237
அகரமும் கோயிலும் ... 242
இறைநீக்கியும், அரசனின்
பங்கு குறையவில்லையே! ... 244
தீண்டாச்சேரி ... 244
விரித்திகள் ... 247
வடுகருக்குக் கூலியின்றி உழைத்தனரே! ... 247
வடுகனுக்குத் துணைபோன வேளாண்! ... 249
ஊருக்குள் கட்டிவைத்த களப்பேறு ... 252
இருந்ததைத்தானே கெடுத்தான்? ... 255
வந்தேறிப் பொருளியலால் வந்த குழப்பங்கள் ... 256
ஆணை மீறல்கள் ... 257
வந்தேறிப் பிராமணர்க்குத் தமிழர்
காணி விற்கச் சொல்லி ஆணை! ... 258
பாண்டியர் வழியில் வளநாடுகள் ... 259
வடுகக் கெடுபிடிகள் ... 260
கொள்ளிடத்திற்கு வடக்கே வந்தேறிய கதை ... 261
தலைமாறிய பிரமதேயம் ... 262
காடு திருத்தி அகரமேற்றல் ... 263
தரம் போய் விரிப்பு வந்தது ... 264
புதிய உடன்பாடுகள் ... 265
ஊர் ஊராகப் படர்ந்த வடுக பட்டர்! ... 269
வந்தேறிகளால் வந்த பஞ்சங்கள் ... 270
நிலம் விற்றுக் கடன்கட்டிய கடவுள்! ... 271
கலகத்தை அடக்கக் கன்னடக் கூலிப்படை! ... 272

www.tamilarangam.net




கிளர்ந்த உழவர்க்குக் கிடைத்த சலுகைகள் ... 273
சோழனிடம் திறை கேட்டவன்
வடுகனிடம் திறை கட்டினான் ... 274
வரிசையும் வாடாக்கடனும் ... 275
பாண்டியநாட்டில் அகரகாரம் ... 276
பாண்டியநாட்டில் வடுகக் குடியேற்றங்கள்! ... 276
பங்குடையார்மக்களே பெருங்குடிமக்கள் ... 278
பாண்டியரின் இறக்கம் அகரங்களின் பெருக்கம் ... 279
பாண்டியர் மண்ணிலே கன்னட வடுகர்! ... 280
வாய் செத்துப்போன தமிழர்கள்! ... 282
நாடா, காடா? ... 282
அளவைகளில் தெகிடுதத்தம் ... 283
பெருங்கோயில் பண்பாடு ... 284
பெருங்கோயில் பிறந்த இடம் கருநாடகமே! ... 285
கற்றளிகள் வந்த கதை ... 286
கோயில் ஊர்களும் மடங்களும் ... 287
இலிங்க வழிபாடு ... 288
பெருங்கோயிலைப் பெற்றெடுத்த
காளமுகர், வடுகரே ... 290
வள்ளுவ வானியலே பெருந்தெய்வ வழிபாடு ... 290
வடுகரின் அநாகரிக வழிபாடுகள் ... 292
ஆரியனாம் வடுகனையே
ஆண்டவனாக்கிய சமயக்குரவர்! ... 292
வடுகக் கள்ளர் குகைகள் ... 293
சங்கதம் பிறந்தது தெற்கேதான்! ... 294
தெற்குநோக்கிச் சிவனியமும்
வடக்குநோக்கி மாலியமும் ... 295
பற்றி இயக்கத்தின் உள்ளீடு ... 295
இறையனார் அகப்பொருளில்
இல்லாத பேரின்பக் காதல் ... 297
தேவடியாள் முறை ... 298
ஆடலும் கூத்தும் ... 299
வடுகரின் காமக்களியாட்டங்கள் ... 301
சதிராட்டம் இல்லாத திருவிழாவா? ... 302
ஆடல் இல்லாத வழிபாடா? ... 303
கொழுத்த மடங்கள் ... 304
தமிழரைச் சுரண்டி மடங்களை வளர்த்தனர்! ... 305
அரசரையே ஆட்டிப்படைத்த மடங்கள்! ... 305
காராண்மையர் போராடினர் ... 306
புதிய வரிகள் ... 307

www.tamilarangam.net



குடியானவர் தலையில் கோயில் ... 308
கடைத் தேங்காயும் வழிப்பிள்ளையாரும்! ... 309
புற்றீசல்களாய்ப் பிரமதேயங்கள்! ... 310
தனியர் ஆக்கிய இறையிலிகள் ... 311
கோயிலுக்கு மட்டும் அடிமட்டத் தரப்படி! ... 312
நிலம் திருத்தல் ... 313
கோயில் காணிகளையும் கவர்ந்தனர்! ... 314
தற்கொலைத் தெய்வம் ... 316
சூத்திரன் யார்? ... 317
பறையருக்கும் சுடுகாடு ... 318
அகரகாரத்து வணிகம் ... 319
பரதவர் யார்? ... 319
சாத்தனும் மாநாய்க்கனும் ... 320
முன்னோடிக் காசுகள் ... 321
வழுதிக் காசு ... 322
உருப்படாத கோட்பாடு ... 323
கடலாடி இனமடா! ... 325
படையெடுப்புகளால் வந்த ஊரகமாக்கம் ... 326
வடுக வந்தேறியத்தின்கீழ் வணிகத்தின் புத்தெழுச்சி ... 328
ஐம்பொழில் ஐந்நூற்றுவர் ... 330
அகரகாரம் தாலாட்டிச் சீராட்டிய வணிகம் ... 333
வேளைக்காரப் படைகள் ... 333
ஊர்ச் சந்தையால் வந்த அங்காடி ... 334
கடன் அங்காடிகளான கோயில்கள் ... 336
பண்ட விளைப்பு துளிர்த்தது ... 336
புதிய வடுக வணிகம் ... 337
பெருகி ஓய்ந்த அகரகாரம் ... 339
கணவாய்க்கும்கூடக் காவல்! ... 339
எல்லைக்காவல் ஓட்டையான வரலாறு ... 340
நாயக்கரும் போலிகளும் ... 344
வடுகனுக்கு வந்த புது வலிமை ... 345
நாயக்கனை அடக்க பிராமணன் ... 346
பாளையக்காரன் கொள்ளை ... 348
அமரக்காணி முதல் பண்டாரவாடை வரை ... 349
காணிகள் எல்லாமே வடுகரிடம் ... 351
வடுகன் திணித்த மணியம்! ... 353
கோயில்களின் பெருக்கம் ... 355
ஆங்கிலேயனால் வந்த குழப்பம் ... 357
குறிப்புகள் ... 358

www.tamilarangam.net

# மேலையர் விடும் கரடிகள்!

1803ஆம் ஆண்டளவில் ஆங்கிலேயரின் கிழக்கிந்தியக் குழுமம் இத் துணைக்கண்டத்தின் பெரும்பகுதியைப் பிடித்துவிட்டது. பிடித்த இவ்வளவு பெரிய துணைக்கண்டத்தைக் கட்டியாள்வதற்கு அந்த ஆங்கிலேயர் இரண்டு பெரிய பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியிருந்தது. இவ்வளவு பெரிய நிலப்பரப்பில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி அதைக் காத்தல் என்பது அவற்றில் ஒன்று. முறைப்படி வரி விதிக்கவும், திறம்படத் தண்டவும் வல்ல நல்ல வரிமுறையை உருவாக்குவது அடுத்த உடனடித் தேவையாக இருந்தது. பிடித்த இத் துணைக்கண்டத்தில் சட்டம் ஒழுங்கைப் பேணவும், முறைப்படி வரித் தண்டவும் வேண்டுமாயின், படைவழி முற்றாண்மை மட்டும் போதாது என்பதை ஆங்கிலேய வந்தேறிகள் உணர்ந்தனர். இந்தியத் துணைக்கண்டத்தை ஆள்வதற்கு உகந்த ஆட்சிக் கூறுகளும் ஆட்சி வரம்புகளும் (units and boundaries) இன்னின்னவென இனம் கண்டாலன்றி, வரலாற்றாலும் மொழியாலும் பண்பாட்டாலும் வெவ்வேறாகிய தேசிய இனங்களைக்கொண்ட இவ்வளவு பெரிய நிலப்பரப்பை ஒட்டுக்காகக் கட்டியாள முடியாது என அவர்கள் உணர்ந்தனர். இந்த ஆட்சிக் கூறுகளையும் வரம்புகளையும் கண்டறிய, சென்ற இடமெல்லாம் இவ் வந்தேறிகள் எழுப்பிய கேள்விகள் என்னென்ன தெரியுமா? அவை:

1) இங்குப் பொறுப்பு யாரிடம் உள்ளது?

2) இது யாருக்குச் சொந்தமானது?

3) இன்னின்னார்க்கு உரிய உரிமைகளும் கடமைகளும் என்னென்ன?

இக் கேள்விகளுக்கு இவ் வந்தேறிகள் கண்ட விடைகள் பல இடங்களில் முழுமையானவையாக இருக்கவில்லை. அப்படி இருந்தும், தாம் கண்ட அரைகுறை விளக்கங்களை வைத்து இவர்கள் அரைகுறை ஆட்சியியல் கொள்கைகள் சிலவற்றைக் காலத்தின் தேவைக்கேற்ப ஆக்கிக்கொண்டனர்.

இந்தியத் துணைக்கண்டத்தில் இவர்கள் கண்டெடுத்த அடிப்படை ஆட்சிக்கூறுகளும் வரம்புகளும் என்ன தெரியுமா? ஊர்கள், தோட்டத்துரவுகள் (estates), உடைமைகள் ஆகியனவே அவையாம். இந்த அடிப்படை ஆட்சிக்கூறுகளிலும் ஆட்சி வரம்புகளிலும் அமைந்த அரசியல் பொருளியல் அதிகாரங்கள் யாவும் கிழார்கள் (சமீன்தார்கள்),

www.tamilarangam.net



(மணியக்காரர், பட்டேல், சௌதிரி, தாலுக்தார் போன்ற) ஊரதிகாரிகள், குடித்தலைவர்கள், அரசர்கள், இளவரசர்கள், நவாபுகள் ஆகியோரிடமே விளங்கிவந்ததாக அந்த ஆங்கிலேயர்கள் கருதினர்.[2]

## ஆப்பிரிக்காவின்மீது இந்தியா!

இத் துணைக்கண்டத்தில் கிடைத்த வந்தேறிப் பட்டறிவுகளையும் அரைகுறையான விளக்கங்களையும் பின்னர் அவர்கள் ஆப்பிரிக்கச் சூழல் மீதும் கற்பிக்கலாயினர். சிற்றூர்கள் (hamlets), கால்வழிகள் (lineages), குக்குலங்கள் (clans), பழங்குடிகள் (tribes) என்பனவே ஆப்பிரிக்க வாழ்வியலில் அவர்கள் கண்டறிந்த அடிப்படை ஆட்சிக் கூறுகளும் ஆட்சி வரம்புகளும் ஆகும்.

அதே போல், ஊர்த்தலைவர்கள், மூப்பர்கள், குடித்தலைவர்கள் ஆகியோரிடமே ஆப்பிரிக்காவில் அரசியலும் பொருளியலும் இருந்துவந்ததாக ஆங்கிலேயர்கள் கருதினர். தங்களின் இந்தியப் பட்டறிவுகளைக் கொண்டு ஆப்பிரிக்காவிலும் அதே போன்ற ஆட்சியமைப்புகளை உருவாக்கினர். மாவட்ட அதிகாரிகளை அமர்த்தல், உள்நாட்டவரை வைத்துக் கூலிப்படைகளையும் புறப்படைகளையும் (paramilitary) கட்டுதல், மெய்யின (race) அடிப்படையில் மக்களை வரணங்களாக வகுத்தல், உள்நாட்டவரைக் கீழ்நிலை அதிகாரிகளாக அமர்த்தல் என்றெல்லாம் அங்கும் அதே போன்ற வந்தேறிய ஆட்சி முறையை உருவாக்கினர்.[3]

'இந்தியா'வைப் பற்றிய ஆங்கிலேயரின் முதல் ஆட்சிக் கொள்கை உருவாவதற்குச் சர் என்றி மெய்ன் (Sir Henry Maine) என்பவரும் காரணமானார். 1857 இந்தி(ய)ப் படைக்கலகம் மூண்டு முடிந்து முழு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு *Ancient Law* என்னும் நூலை யாத்த இவர், அடுத்த பத்தாண்டுகளுக்குப் பிறகு கல்கத்தாவில் இந்திய ஆளுநர்-நாயகம் மன்றத்தின் சட்ட உறுப்பினராக *(Law Member of the Governor-General's Council)* பணிபுரிந்தார்.[4] இவரும் எமில் தர்க்கெய்ம் (Emile Durkheim) என்பவரும் ஆக்கிய படைப்புகள்தாம் பின்னர் "கூறுண்ட குமுகங்கள்" (Segmented Societies) என்னும் குழப்படிக் கொள்கைக்கு அடிப்படைகளாயின.

## நான்கு பெரும் புரட்டல்கள்

கூறப்படும் இந்திய வாழ்வியலைப்பற்றி நான்கு வகைக் கோட்பாடுகளை ஆங்கிலேய வந்தேறிகள் வடித்தனர். இந் நான்கு கோட்பாடுகளும் வெவ்வேறு காலக்கட்டங்களில் வெவ்வேறு அரசியல் பொருளியல் சூழல்களில் பிறந்தன.

### 1. கீழையுலகக் கொடுங்கோலும் ஆட்சிக்குலைவும்

ஆங்கிலேய வந்தேறிகள் இந்த இந்தியத் துணைக்கண்டத்தை இந்துத்தானம் என்றுதான் தொடக்கத்தில் அழைத்துவந்தனர். அவர்

www.tamilarangam.net



கள் கண்ட 'இந்துத்தானத்தில்' பேரரசுகள் இருந்தன. ஆனால், இப் பேரரசுகளில் நிலையின்மையே நிலையானதாக இருந்தது. இப் பேரரசுகளில் சட்டம் ஒழுங்கு இல்லை. மாந்தநெறிகள் அவற்றால் போற்றப் படவில்லை. ஆள்வோன் வைத்ததே சட்டம் என்னும் வகையில் பச்சைக் கொடுங்கோன்மையே கொற்றம் புரிந்தது. செங்கோல் இல்லை. நாட்டுப்பற்றும் அறவே இல்லை. பேரரசனான கொடுங் கோலனிடமே அதிகாரங்கள் குவிந்து கிடந்தன. சட்டநெறிமுறைகள் யாதுமில்லை. இந்துத்தானத்தில் இருந்த நிலபுலங்கள், தோட்டத்துரவுகள் எல்லாம் அரசனுக்கு மட்டுமே சொந்தமானவை. ஆயினும், இக் கொடுங்கோல் நெடுநாள் நிலைக்கவில்லை. இந்தக் கொடுங்கோலை அடுத்து உள்நாட்டுக் குழப்பங்கள் விளைந்தன. இதனால், ஆட்சியும் கெட்டுக் குலைந்தது. வடக்கேயிருந்து வந்த 'ஆரியர்' படையெடுப்புகள் வேறு 'இந்துத்தானத்தை' அலைக்கழித்தன. ஐரோப்பாவிலிருந்ததைப் போன்ற தலைமகனுரிமை (primogeniture) இன்மையால், அரசர்குலத் திற்குள்ளே ஓயாத சூழ்ச்சிகளும் அதிகாரப் போட்டிகளும் நிலவின. இதனால், அரசே குலைந்து உடைந்து கூறுகூறானது. ஒவ்வோர் ஊரும் ஒரு தனியரசானது. இந்த ஊர்களும் தமக்குள் சண்டை யிட்டுக் கொண்டன. இந் நிலையில், வல்லான் ஒருவன் தலைப் பட்டுப் பிறரை எல்லாம் வீழ்த்தி ஒரு புதிய அரசக்குலத்தை நிறுவி னான். இதனால், அக் கொடுங்கோல் மீண்டும் வந்து கொலுவேறியது. கொடுங்கோலும் ஆட்சிக்குலைவும் இவ்வாறு சுழல் வடிவில் அடுத் தடுத்து வந்தன.[5]

மேற்சொன்ன விளக்கமே **கீழையுலகக் கொடுங்கோலும் ஆட்சிக்குலைவும்** (Oriental Despotism and Anarchy) **என்னும் ஆட்சி யியல் விளக்கமானது.** இக் கோட்பாடு 1750க்கும் **1810க்கும் இடையில் மேலோங்கி நின்றது.**[6]

அலெக்சாண்டர் டவ் (Alexander Dow) எழுதிய *The History of Hindostan* (2 Vols, 1770) என்னும் நூலின் முன்னுரையிலும், *A Dissertation of the Origin and Nature of Despotism in Hindostan*, 1772) என்னும் நூலிலும் அந்தக் கோட்பாடு சினையுற்றது. இவ் வந்தேறி வரலாற்றியல் கோட்பாடு, ராபர்ட் ஓர்ம் (Robert Orm, 1752-53), ஜான் ஸ்காட் வேரிங் (John Scott-Waring, 1773), ஜேம்ஸ் கிராண்ட் (James Grant, 1786), சார்லஸ் கிராண்ட் (Charles Grant, 1792), மார்க் வில்க்ஸ் (Lt. Col. Mark Wilks, 1810), ஜான் புரூஸ் (John Bruce, 1810) ஆகியோ ரின் படைப்புகளாலும் அவர்கள் அரசுக்கு எழுதி விடுத்த அறிக்கை களாலும் தாலாட்டிச் சீராட்டி வளர்க்கப்பட்டது.

முகலாயர்களின் ஆட்சி வரலாற்றைப்பற்றி மேற்சொன்ன வந்தேறி அறிவாளிகள் நடத்திய ஆய்வுகளைத் தழுவிய வரலாற்றிய லாகவே 'கீழையுலகக் கொடுங்கோலும் ஆட்சிக் குலைவும்' என்னும் கோட்பாடு இருந்தது.[7]

www.tamilarangam.net



இது போன்ற வரலாற்றியல் விளக்கம் எதற்காக வடிக்கப் பட்டது?

இத் துணைக்கண்டத்தில் விளங்கிய அரசுகளுக்கு இடையில் ஓயாத போர்கள் நடந்துவந்தன. தத்தம் வணிகநலன்களைப் பேணிக் காக்க வேண்டி ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் அப் போர்களில் தலையிட்டனர். பிரெஞ்சுக்காரரை ஆங்கிலேயரின் கிழக்கிந்தியக் குழுமம் முற்றாக முறியடித்தது. பின்னர், தாம் பிடித்த நாடுகளில் எல்லாம் சட்டம் ஒழுங்கை மீட்க வேண்டிய கட்டாயத்திற்கு அஃது ஆளானது. கிழக்கிந்தியக் குழுமம் இவ்வாறு உள்நாட்டுப் போர்களில் தலையிட்டதையும், நாடு பிடித்ததையும் அக் குழுமத்தின் உரிமை யாளர்களிடமும், பிரித்தானியப் பாராளுமன்றத்திடமும், அரசியல் தெளிவு நிறைந்த பிரித்தானியக் குடிமக்களிடமும் ஞாயம் கற்பிக்க வேண்டியே `கீழையுலகக் கொடுங்கோலும் ஆட்சிக்குலைவும்' என்னும் வரலாற்றியல் விளக்கம் கற்பிக்கப்பட்டது.[8]

## 2. ஊர்க்குடியரசுகளும் சாதிகளும்

1803ஆம் ஆண்டளவில் இந்தியத் துணைக்கண்டத்தைப் பிடிக்கும் கிழக்கிந்தியக் குழுமத்தின் பணி ஓரளவு முற்றுப்பெற்றது. இவ்வாறு பிடித்த இப் பெருநிலத்தைக் கட்டியாள வேண்டிய புதிய சூழலை அக் கிழக்கிந்தியக் குழுமம் எதிர்கொண்டது. இதனால், ஊர்க்குடி யரசுகளும் சாதிகளும் என்னும் வரலாற்றியல் விளக்கத்தை 1810க்கும் 1857க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆங்கிலேய ஆளவந்தார்கள் வடித் தனர்.[9]

இதன்படி, இத் துணைக்கண்டத்திலுள்ள ஒவ்வோர் ஊரும் ஒரு தனிக்குடியரசு ஆகும். இந்த ஊர்க்குடியரசுகள், தாமாகவே தனித்து இயங்கிவந்த தன்னாட்சிக் குடியரசுகளாகும். வெளியுலகத் தொடர்பு இவற்றிற்கு ஏறத்தாழ இல்லை. நிலையில்லா அரசியல் சூழலிலும்கூட நிலைத்து நின்ற நிற்றிய அமைப்புகளாக அவ் வூர்க் குடியரசுகள் இருந்தன. அரசக்குலங்கள் அடுத்தடுத்துத் தோன்றின; பின்னர் வீழ்ந்தன. புரட்சிகள் அடுத்தடுத்து வந்தன. அயலாரின் படையெடுப்புகள் பல நடந்தன. ஆனால், அந்த ஊர்க்குடியரசுகள் மட்டும் மாறாமல் மருவாமல் அப்படியே நின்றன. இதனால், 'இந்தியா' நாட்டுப்புறங்களிலேயே உண்டு. 'இந்தியர்' என்போர் உண்மையில் கொடுங்கோலர் அல்லர். இவர்களின் வாழ்வியல் என்றும் குடும்பம், சாதி, ஊர் என்னும் இயல்பான அமைப்புகளைத் தழுவியது. ஊர்க்குமுகங்களைச் சாதி உறவுகளே பின்னிப் பிணைத் தன. 'இந்துத்தானத்தில்' விளங்கிய வகுப்புகளும் விளைப்பு உறவு களும் சாதி வடிவிலேயே இருந்தன. இதுவே 'ஊர்க்குடியரசுகளும் சாதிகளும்' என்னும் வரலாற்றியல் கோட்பாடாகும். இக் கோட் பாட்டைச் சார்லஸ் மெட்காஃப் (Charles Metcalf) முதலானோர் கற்பித்தனர்.[10]

www.tamilarangam.net



இவ்வளவு பெரிய துணைக்கண்டத்தைப் பிடித்துவிட்ட ஆங்கிலேயரின் கிழக்கிந்தியக் குழுமத்திற்கு, இப் பெருநிலத்தைக் கட்டியாளப் போதிய ஆங்கிலேய அதிகார வகுப்பினர் கிடைக்கவில்லை. ஆங்கிலேயரில் உதிரி வகுப்பினரே இங்குப் பெருமளவில் இருந்தனர். அதிகார வகுப்பினர் வெள்ளையரில் போதிய அளவில் இன்மையால், வரித்தண்டல், சட்டம் ஒழுங்குப் பேணல் முதலான ஆட்சிப் பணிகளுக்கு வேண்டிய ஆள்தேவைகளை உள்நாட்டு அதிகார வகுப்பினரைக் கொண்டு நிரப்பிக் கொள்ளவேண்டிய ஒரு சூழலுக்கு அக் குழுமம் ஆட்பட்டது. அது கட்டியமைக்கப் பார்த்த கிழார் (சமீன்தார்) முறையும் கைகொடுக்கவில்லை.

இந் நிலையில், ஆங்கிலேயர்கள் கற்பித்த ஒரு வரலாற்றுச் சப்பைக்கட்டே 'சாதிவழி ஊர்க்குடியரசுகளின் குவியல்தான் இந்தியா' என்னும் ஆட்சிக்கருத்தியலானது.

ஆங்கிலேயருக்கு முன்பிருந்த தென்னிந்திய அரசுகளில், தேசாந்த பிராமணர் என்னும் வந்தேறி மராத்தியரே உள்நாட்டு அதிகார வகுப்பினராகப் பரவலாக இருந்தனர். பழைய வந்தேறிகளான இந்த மராத்திய அதிகார வகுப்பினரைப் புதிய வந்தேறிகளான ஆங்கிலேயர்கள் இதனால் துணையாக்கிக்கொள்ளத் துணிந்தனர்.

ஆங்கிலேயரின் நெறிகளுக்கும் இயற்கைச் சட்டங்களுக்கும் புறம்பான பெண்குழவிக் கொலை, நரபலி, உடன்கட்டை ஏறுதல், வழிப்பறிக் கொள்ளை ஆகிய கொடிய வழக்காறுகளைத் தடுப்பது என்னும் அளவில் மட்டும் ஆங்கில ஆண்டைகள் நின்றுகொண்டனர். 'இந்தியரிடம்' வழிவழியாக வந்த அரசியல் குமுகியல் அமைப்புகளான குடும்பம், சாதி, ஊராட்சி முதலானவற்றில் தலையிடாமல் ஒதுங்கி நின்றனர். வரித்தண்டலை மட்டுமே பெரும் நாட்டமாகக் கொண்டு, உள்நாட்டு ஆண்டைகளுக்கு ஓரளவு தன்னாட்சி வழங்குவதே சாதி வழி ஊர்க்குடியரசுகள் என்னும் வந்தேறி ஆட்சிக்கொள்கையின் உள்ளீடாகும்.

## 3. நிலக்கிழமை

ஊர்க்குடியரசுகள் ஒருபுறம் கிடக்க, நிலக்கிழமை முறையும் கூட ஆங்கிலேயரின் வருகைக்கு முன்னரே இங்கு விளங்கிவந்தது என்னும் புதிய கோட்பாடு, 1860க்கும் 1910க்கும் இடையில் ஆங்கிலேயரின் அரசுக் கோட்பாடானது.[11] இராசத்தானம், மைசூர், ஐதராபாத் முதலான மன்னராட்சிகளின் வரலாற்றை வைத்து இப் புதிய விளக்கம் பிறந்தது. 1806 வேலூர் படைக்கலகத்தை அடுத்து, 1857 இந்தி(ய)ப் படைக்கலகம் வெடித்தது. கிழக்கிந்தியக் குழுமம் இதனால் நிலைதடுமாறியது. இக் கலகத்திற்குப் பிறகு, அக் கிழக்கிந்தியக் குழுமத்திடமிருந்த வந்தேறி ஆட்சியை இங்கிலாந்து முடியாட்சியே நேரடியாக எடுத்துக் கொண்டது. 'இந்திய அரசு' என்னும் அரசமைப்பைக்

www.tamilarangam.net



கொண்டு இங்கிலாந்தின் பேரரசியே இத் துணைக்கண்டத்தை நேரடியாக ஆளவேண்டிய புதிய சூழலுக்கு அது வழிகோலியது.

இந் நிலையில், இத் துணைக்கண்டத்திலான நிலக்கிழமை அமைப்புகளையும் உறவுகளையும் பற்றிய விளக்கங்கள் புதிய வரலாற்றியல் கோட்பாட்டிற்கு வித்திட்டன. முன்னால் மிகப் பெரிய கொடுங்கோலர்களாகத் தெரிந்த மன்னர்கள் எல்லாம் இப்போது அந்த ஆங்கில வந்தேறிகளுக்கு உள்நாட்டவரின் இயல்பான தலைவர்களாகத் தென்பட்டனர். 'கடவுளின் திருவருளால்' பிரித்தானிய முடியாட்சி 'இந்தியா'வைப் பெயரளவுக்கு ஆள, அம் முடியாட்சியின் பகராளுநர் (Viceroy), திருவருள் பெற்ற அம் முடியாட்சியின் நேரடி ஆளுநர்-நாயகமாகவும் (Governor-General) ஆனார். பிரித்தானியப் பாராளுமன்றத்தின் சார்பாளரான ஆளுநர்-நாயகமாகவும், அந்தப் பிரித்தானிய முடியாட்சியின் பேராளராகவும் அந்த இந்தியப் பகராளுநர் ஒரேபோழ்து இருந்தார். இவருக்குக் கீழே நிலக்கிழமை வழிநின்ற 'இந்திய' மன்னர்களும் மாகாண ஆளுநர்களும் இருந்தனர். இதுவே புதிய அரசியல் அதிகாரக் கட்டுக்கோப்பானது.

## 4. ஆரிய–திராவிடர் கோட்பாடு

இத் துணைக்கண்டத்தில் அடங்கிய பல்வேறு தேசிய இனங்களையும், மொழிகளையும், தனித்தனி அரசுகளையும், வரலாறுகளையும், பண்பாடுகளையும் ஆங்கிலேயர் காண மறுத்தனர். இயல்பான இம் மெய்ம்மைகளை ஒதுக்கித் தள்ளினர். பிராமணியத்தையே இந்துமதம் எனக் கற்பித்தனர். இத் துணைக்கண்டத்து மக்களை எல்லாம் மத அடிப்படையில், 'இந்து' என்றும், 'முசுலிம்' என்றும், 'பௌத்தர்' என்றும், 'அருகர்' என்றும், 'பார்சி' என்றும், 'கிறித்துவர்' என்றும் கற்பித்துப் பெரிய குழப்படியைச் செய்தவர்கள், இந்த ஆங்கிலேய வந்தேறிகளேயாவர்.

ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பிராமணர்கள் ஆங்கில வந்தேறியத்திற்கு எதிராகக் கிளம்பிய நிகழ்வு, ஆங்கிலேய ஆளவந்தாரை மிகவும் குழப்பியது. நிலக்கிழமைக் குமுகமாக இத் துணைக்கண்டத்து வாழ்வியலை விளக்கிய முந்தைய வரலாற்றியல் விளக்கத்தை இதனால் கைவிட்டுவிட்டு, புதியதொரு விளக்கத்தைத் தேடலாயினர். கிணறு வெட்டப் போய் பூதம் வந்த கதையாய், இந் நிலையில் ஆங்கிலேய வந்தேறிகளால் கற்பிக்கப்பட்டதே ஆரிய– திராவிட மெய்யினப் பூசல் என்னும் கருத்தியல். இக் கோட்பாடு, 1910 முதல் புழக்கத்திற்கு வந்தது.[12]

இதன் வாயிலாக, பிராமணனை உச்சியில் வைத்த நால்வரண வேற்றுமைக் கோட்பாடும், வினைக்கொள்கையுமே கூறப்படும் 'இந்திய' வாழ்வியலின் அடிப்படைக் கருத்தியல் எனக் கற்பிக்கப்பட்டது.

www.tamilarangam.net



இந்தக் கருத்தியல், பிராமணரின் முற்றாண்மையைக் குறைகூறியது. பிராமணரே 'ஆரியர்' எனக் கற்பித்தது.

1885ஆம் ஆண்டு முதல் தோன்றிய புதிய அரசமைப்பாலும், ஆங்கிலக் கல்வியாலும்கூட அப் பிராமணரின் மேலாண்மையைத் தூக்கியெறிய முடியவில்லை. சென்னை மாகாணத்திலும் பம்பாய் மாகாணத்திலும் கருக்கொண்ட பிராமண எதிர்ப்பு அரசியலுக்கு இந்த ஆரிய-திராவிடக் கருத்தியலே வித்திட்டது. இதனால், பிராமணச் சூழ்ச்சி அரசியலே 'இந்திய' அரசியல் என்று அது விளக்கியது.

மராட்டியத்தின் சித்பாவன் பிராமணரும் வங்காளத்தின் பத்திரலோக் என்னும் பிராமணருமே ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்ப்பதில் அன்று முந்திக்கொண்டு நின்றனர். இப் பிராமணரைத் தங்களின் வந்தேறிய ஆட்சிக்கு எதிரான சூழ்ச்சியாளராக ஆங்கிலேயர்கள் பார்த்தனர். இந்தச் சூழலில், அவர்களை எதிர்க்கவென்றே ஆரிய-திராவிட ஆட்சியியல் கோட்பாடு வடிக்கப்பட்டது.[13]

ஆரிய-திராவிடர் அல்லது 'பிராமணரல்லாதார்' என்னும் கோட்பாடும்கூட இந்தத் துணைக்கண்டத்தில் பல்வேறு தேசிய இனங்கள் அடங்கியிருக்கும் பச்சை உண்மையை வேண்டும் என்றே மூடிமறைத்தது. இதனால், பெரும்கேட்டிற்கும் சீரழிவிற்கும் ஆளானவர்கள் தமிழரே ஆவர். தமிழகத்தின் அரசியலில் பல நூறு ஆண்டுகளாய்க் கொற்றம் புரிந்துவந்த வந்தேறி வடுகரின் மேட்டிமையை நீட்டிக்க உதவிய ஓர் உருமறைப்பாய் அக் கோட்பாடு பயன்பட்டது.

## மார்க்சும் குழப்பினார்

ஆங்கிலேய வந்தேறிகளின் ஆட்சியியல் கருத்தியல்கள் இவ்வாறு எல்லாம் திருவுருவெடுத்தன. இது போன்ற ஐரோப்பிய வந்தேறிக் கருத்தியல்களுக்குக் கார்ல் மார்க்சும்கூட ஆட்பட்டார். ஆங்கிலேய வந்தேறிகளின் நலன்களைப் பேணிய இத்தகைய பிழையான ஒரு வரலாற்றியலைத் தழுவியே ஆசிய விளைப்புமுறை (Asiatic Mode of Production) என்னும் மூக்கு முழியற்ற ஒரு கருதுகோளை மார்க்சு முன்வைத்தார். 'ஆசிய விளைப்புமுறை' என்னும் இவருடைய கருதுகோளுக்கு மறைத்திரு ரிச்சர்ட் ஜோன் (Rev. Richard Jone, 1790-1885) என்பவர் தொகுத்தளித்த விளக்கங்களே அடிக்கால் ஆகின. செவ்விய முதலாளிய அரசியல் பொருளியல் வல்லுநர்களில் கடைக்குட்டியராக இருந்தவர்களில் இந்த ஜோனும் ஒருவராவார்.

1) செல்வப் பகிர்வைப் பற்றியும் வரிமுறையின் ஊற்றுக் கண்களைப் பற்றியுமான கட்டுரை (*An Essay on the Distribution of Wealth and on the Sources of Taxation*, 1831);

2) இலண்டன் அரசர் கல்லூரியில் **27.2.1833** அன்று ஆற்றிய அரசியல் பொருளியல் முதலானவற்றின் மீதான அறி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முக உரை (*An Introductory Lecture on Political Economy, etc., delivered on February 27, 1833 at the King's College, London*);

3) தேசங்களின் அரசியல் பொருளியல் மீதான உரைகள் அடங்கிய பாடநூல் (*Text-book of Lectures on the Political Economy of Nations*, 1852)

என்னும் இவரது உரைகளும் கட்டுரைகளுமே 'ஆசிய விளைப்பு முறைக்' கோட்பாடு பிறப்பதற்கான இடுபொருள்கள் என்பதை கார்ல் மார்க்சு எழுதிய மீத்தமதிப்புக் கோட்பாடுகள் (*Theories of Surplus Value*, Vol. IV of *Capital*, Part III) என்னும் முதல்பணம் என்னும் நூலின் நான்காம் பகுதியின் மூன்றாம் மடலம் தெளிவுறக் காட்டும்.[14]

மெகஸ்தனிஸ் கி.மு. 302ஆம் ஆண்டில் எழுதிய இண்டிக்கா (*Indica*) என்னும் நூலில் இந்தியாவைப்பற்றிக் கூறப்பட்டுள்ள குழறுபடியான கருத்துக்களை ரிச்சர்ட் ஜோன் குருட்டுத்தனமாக அப்படியே நம்பினார்.[15] அவரது கருத்துக்களின் சாய்க்கால் அவையேயாகும். ஜோனின் கருத்துக்களை ஆய்வும் அலசலும் இன்றி மார்க்சு அப்படியே தழுவிக் கொண்டார். இதனால்தான், அந்த 'ஆசிய விளைப்புமுறைக்' கோட்பாட்டை "மார்க்சியத்தின் யாக்கை மீதுள்ள அருவருப்பூட்டும் தொங்குதசை" ("That Awkward appendage to the corpus of Marxism...") என மால்கம் கால்டுவெல் கசப்புடன் கூறினார்.[16] ஐரோப்பாவில் கருக்கொண்டமையால், அம் மார்க்சியத்தின் வரலாற்றியல் கீழையுலக நாடுகளின் வரலாறுகளை எல்லாம் கொச்சைப்படுத்தியது எனச் சமீர் அமீன் என்னும் ஆப்பிரிக்க மார்க்சியர் கருதினார்.[17]

அம் மார்க்சின் 'ஆசிய விளைப்புமுறைக்' கோட்பாடு இதனால் கிழக்கிந்தியக் குழுமத்தின் வந்தேறி வரலாற்றியல் விளக்கங்களின் நீட்டிப்பேயன்றி வேறில்லை.

## இந்தியாவின்மீது ஆப்பிரிக்கா!

இந் நிலையில், 'இந்திய' மாதிரிகளை ஆப்பிரிக்க நாகரிகங்களின்மீது திணித்து வந்த பழைய போக்கு நேரெதிராகத் திசை மாறியது. ஆப்பிரிக்க மாந்தவியல் விளக்கங்களைக் கொண்டு வந்து இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள வெவ்வேறு தேசிய இனங்களின் மீது வலிந்து திணிக்கும் எதிர்காற்று எழுந்தது.[18]

முதலாம் உலகப் போருக்கு முன்னால் அந்தமான் தீவில் வாழும் பழங்குடிகளைப்பற்றி ரேட்கிளிஃப்-பிரௌன் (Radcliffe-Brown) என்னும் ஆங்கிலேய மாந்தவியலார் களஆய்வுகளை மேற்கொண்டார். இவரது ஆய்வுகளைத் தழுவி, மேயர் ஃபார்ட்டெஸ் (Meyer Fortes) என்பவர் 1953ஆம் ஆண்டில் *American Anthropologist* என்னும் ஓர் ஏட்டில் ஒருகால்வழி மரபுக் குழுக்களின் கட்டமைப்பு (*The Structure of Unilineal Descent Groups*) என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையே அத்தகைய எதிரோட்டத்திற்கு

www.tamilarangam.net



வெள்ளோட்டம் விட்டது. அன்று 'கோல்ட் கோஸ்ட்' எனப்பட்ட கானா என்னும் ஆப்பிரிக்க நாட்டில் இவர் பணிபுரிந்துவந்தார்.[19]

ஒவ்வொரு குமுகியல் கூறுக்கும் ஒரு தெளிவான வரம்பு (boundary) உண்டு. ஆனால், பண்பாட்டிற்குத் தெளிவான வரம்பு யாதுமில்லை. சிற்றூர், பேரூர், கால்வழி, பழங்குடி ஆகிய குமுகக்கூறுகளுக்குத் தெளிவான வரம்புகள் உண்டு. இவைதாம் வாழ்வியலின் அடிப்படைக் கூறுகளாகும். இந்த அடிப்படை மாந்தவியல் கூறுகளை இணைப்பது அரத்த உறவேயாகும். இந்த அரத்த உறவை வைத்தே ஒவ்வோர் ஆளின் உரிமைகளும் கடமைகளும் வரையறுக்கப்பட்டன. கூட்டு வாழ்க்கையே, 'ஒருகால்வழி மரபுக்குழுக்களின்' பேரியல்பு ஆகும்.

இந்த 'ஒருகால்வழி மரபுக்குழுக்களைக்' குக்குலங்கள் (clans) எனச் சொல்ல முடியாது. ஏனெனில், அக் குக்குலங்களின் முன்னோர்கள் உண்மையில் வாழ்ந்து மறைந்தவர்களாக இல்லை. தொன்ம (புராண)க் கதைகளில் வரும் கற்பனையான கதையுருவங்கள் அவர்களாவர். ஆனால்,'கால்வழி மரபுக்குழுக்'களின் முன்னோர்களோ, கண்டும் கேட்டும் அறிந்த உண்மையான மூதாதையராவர். இராசபுத்திரன் ஒருவனைப் பார்த்து அவனுடைய முன்னோர் யார் எனக் கேட்டால், தாங்கள் ஞாயிற்றுக்குப் பிறந்தவர் என்றோ, இராமன் வழிவந்தவர் என்றோ கூறுவான். இத்தகைய மீக்கற்பனை மூதாதையர்கள் குக்குலங்களுக்கு உண்டு. ஆனால், 'கால்வழி மரபுக் குழுக்'களுக்கு இல்லை.[20] இதுவே 'ஒரு கால்வழி மரபுக்குழுக் கோட்பாடு'.

ஆப்பிரிக்க நாகரிகங்களைப்பற்றிக் கற்பிக்கப்பெற்ற கருத்தாக்கங்களைக் கொண்டுவந்து கூறப்படும் இந்தி(ய) வரலாற்றின்மீது ஃபோர்ட்டெஸ் வலிந்து திணித்தார். இவருடைய அணுகலைத் தழுவி, திரோபிரியாந்து (Trobriand) தீவு மக்களை ஆய்ந்த பிரானிஸ்லாவ் மாலினோவ்ஸ்கி (Bronislaw Malinowsky, 1948), அந்தத் தீவில் வாழும் மக்களின் வாழ்வியலில் விளைந்த மாற்றங்களுக்கு அகக் காரணங்கள் யாதுமில்லை; புறக்காரணங்களாலேயே அங்கு மாற்றங்கள் விளைந்தனவெனக் கருத்துரைத்தார்.[21]

### கூறுண்ட குழப்படி!

இது போன்ற குழப்படியான வரலாற்றியல் கோட்பாடுகளைத் தழுவியே 'கூறுண்ட குமுகங்கள்' என்னும் ஒரு கோட்பாட்டை தார்க்கெய்ம் முன்வைத்தார். 'ஒருகால்வழி மரபுக்குழுக்கள்' என்னும் முந்தைய கருத்துக்கள்ளிக்கு இவர் இட்ட புதிய பெயர்தான் 'கூறுண்ட குமுகங்கள்' என்னும் அந்தப் பட்டப்பெயர்![22]

ஆப்பிரிக்க வாழ்வியல் மாதிரிகளைக் கொண்டுவந்து இந்தியத் துணைக்கண்டத்து மாதிரிகளின்மீது செயற்கையாகத் திணித்ததால் வந்ததே அக் 'கூறுண்ட குமுகக்' கோட்பாடாகும். ஆயினும், ஆப்பி

www.tamilarangam.net



ரிக்கக் குமுக மாதிரிகள் இந்தியத் துணைக் கண்ட மாதிரிகளிலிருந்து வேறுபடுவதைப் படித்துப் படித்துச் சொன்னவரும் உண்டு. பேராசிரியர் லாய்ட் ஃபாலர்ஸ் (Prof. Lloyd Fallers) என்பவர் இவர்களில் ஒருவராவார். ஆப்பிரிக்க மக்களைச் செல்வ அளவையும் அதிகாரத்தையும் வைத்தே பகுத்து வந்தனர். ஆனால் 'இந்தியா'விலோ, வெவ்வேறு பண்பாட்டு மட்டங்களைக் கொண்ட வரணங்களாகவும் சாதிகளாகவுமே மக்கள் பகுக்கப்பட்டனர். இது ஃபாலர்சின் கூற்று. இலக்கியவழி சமய மரபுகள் ஆப்பிரிக்கருக்கு இல்லாததையும் அவர் கோடிட்டுக் காட்டினார். மீமிசை ஆற்றலுள்ள இறைவனாக அரசனை வைத்த போங்கு ஆப்பிரிக்க நாகரிகங்களிலும் உண்டு. ஆனால், உள்ளூர் வரம்புகளைக் கடந்த தெளிவான `இறைமாட்சிக் கோட்பாடு', ஐரோப்பிய-ஆசிய நாகரிகங்களை மேம்படுத்திக் காட்டுகின்றது என்பது அவரது நிலைபாடு.[23]

மேற்போந்த குமுகிய, மாந்தவியக் கோட்பாடுகள் யாவும் இந்தியத் துணைக்கண்டத்தை ஒட்டுக்காக ஒரே முழுமையாக வைத்து, இல்லாத 'இந்து', 'இந்துத்தானம்' ஆகிய கருத்தாக்கங்களைக் கொண்டே புனையப்பட்ட பொய்க்கோட்பாடுகளாகும். தமிழர் பண்பாட்டின் முன்னோடிப் பங்கையும், தனித்தன்மையையும், தனித் தேசிய இனம் என்னும் தமிழரின் தனி அடையாளத்தையும் முற்றாகப் புறக்கணிக்கும் இத்தகைய கோட்பாடுகள் யாவும், புதிய பிராமணியக் கருத்தியலான 'இந்தி-இந்துக்' குழறுபடிக்கே நீர் பாய்ச்சுவன.

## எத்தனை புரட்டுகள்!

தமிழகத்தைப்பற்றி ஆய்ந்த மேலையுலக ஆய்வர்கள் செய்யும் குழப்பங்கள் சொல்லி மாளாதவை. 'கூறுண்ட அரசுகள்' என்னும் பொல்லாக் கருதுகோளை வைத்துக் குழப்புவோர்கள் அவர்களில் ஒரு கூறாவர். தமிழகத்திலிருந்த பேரரசுகளும்கூட நடுவப்படுத்தப்பட்ட ஆட்சிகளாக இல்லையெனச் சொல்லிவந்த அவர்கள், அந்நிலைபாட்டிலிருந்து பின்னர் பின்வாங்கினர்.[24]

இக் குறைக்கோட்பாட்டின் அடிப்படையில், தமிழகத்தின் புவிப்பண்பாட்டியலை இவர்கள் ஆற்றுப்பள்ளத்தாக்கு (river valley) அல்லது ஆற்றுப்படுகைப் பண்பாடு என்றும், சமவெளி (plains) அல்லது ஆற்றுப்படுகைக்கு அப்பால் அரும்பிய பண்பாடு என்றும் பகுக்கின்றனர்.[25] அவற்றிற்கு இடையில் விளங்கி வந்த முரண்பாட்டைப்பற்றி இவர்கள் திரித்துச் சொல்லிவருகின்றனர். மருதநிலப் பண்பாட்டிற்கும் குறிஞ்சி, முல்லை, பாலை ஆகிய பிற பண்பாடுகளுக்கும் இடையிலான முரண்பாட்டைப் பற்றிய விளக்கம் இஃதாகும். (சேயாறு என்னும் துணையாறும் அடங்கிய) பாலாறு-தென்பெண்ணையாற்றுப் படுகைகள் வடதமிழகத்தில் இருப்பன. தமிழ்நாட்டையே இரண்டாக வகுக்கும் காவிரிப்படுகை, குடகிலிருந்து பழனி

www.tamilarangam.net



மலை என வடக்கும் தெற்குமாக அகன்றுள்ளது. (சிற்றாற்றுப் படுகை உள்ளடங்கிய) பொருநை ஆற்றுப்படுகை இத் தமிழகத்தின் தெற்கேயுள்ளது. காவிரியாற்றுப் படுகைக்கும் பொருநையாற்றுப் படுகைக்கும் இடைப்பட்டது வைகையாற்றுப் படுகை.

ஆதொண்டை என்பானின் தலைமையில் தொண்டைமண்டலத்தைப் பிடித்த சோழர்கள் பாலாற்றங்கரைப் படுகைக்கு வடக்கே சோழர் குடியேற்றங்கள் அமைத்தனர். இந் நிலையில், தென்னகத்தின் மேற்குப் பகுதியிலிருந்த வேளாளர்கள், காவிரிக் கரையை ஒட்டித் தொண்டைமண்டலத்திற்கு இடம்பெயர்ந்தனர். தொண்டைமண்டலத்திலிருந்து பொருநை ஆற்றுப்படுகையை நோக்கிய தென்திசைப் பெயர்ச்சியையும் அவ் வேளாளர்குடி பின்னர் மேற்கொண்டது. 'கூறுண்ட அரசு' எனப்படும் மேலைச்சரக்கு இவ்வாறு விளக்குகின்றது.[26]

தமிழகத்தின் வடவெல்லையான வேங்கடமலைக்கு வடக்கேயிருந்து வந்து தமிழகத்திற்குள் ஊடுருவிய வம்ப வடுக அநாகரிகரைச் சோழப் பேரரசு அடித்துவிரட்டியது என்பது மெய். ஆனால், கி. மு. 3ஆம் நூற்றாண்டில் தமிழகத்தின்மீது நடந்த வம்ப மோரியர் படையெடுப்பின்போது வாழ்ந்துவந்த பல்குன்றத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன் என்னும் வேளிர் தலைவன் பாழி, ஏழிற்குன்றம் முதலான மலைகளை ஆண்டுவந்தான். இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த தொண்டைநாட்டில் ஒரு கோட்டமே பல்குன்றக் கோட்டமாகும். இந் நன்னனின் காலம், மூன்றாம் கரிகாலனின் காலத்திற்கும் முந்தியதாயின், வடுகக் குறும்பர்களை ஆதொண்டை அடக்கிய பின்னரே அவன் பெயரில் தொண்டை நாடு அமைந்தது என்னும் கருதுகோள் அடிபட்டுப் போகும். இத்துடன், பாலாற்றுப் படுகைக்கும், அதற்கு வடக்கேயுள்ள கொற்றலையாறு என்னும் மூத்த ஆற்றுப்படுகைக்கும் இடையில் கண்டெடுக்கப்பட்ட பழங்கற்காலக் கருவிகளும் வாழ்க்கைத் தடயங்களும், நெல் வேளாண்மை காவிரிக்கரையிலிருந்தே வடக்குநோக்கி வந்தது என்னும் கூற்றைக் கேள்விக்குரியதாக்குகின்றன.

நகரங்களைக் கட்டியமைத்த ஆரியர்கள் வடக்கிலிருந்து தென்னகத்திற்கு வந்த பின்னர் நகர்ப்புற வாழ்க்கையைப் பற்றிய அடிப்படை அறிவைத் தமிழருக்குக் கற்பித்தனராம்! இதனால், கி. பி. முதல் நூற்றாண்டில் வளர்ந்த தமிழ்க் கழக(சங்க)க் காலம் மலர்ந்ததாம்![27] இத் துணைக்கண்டத்தில் நகரங்களை முதன்முதலில் கட்டியெழுப்பியவர்கள் 'ஆரியரே' என்னும் கூற்றை அழுத்தமான ஆரியச் சார்பினரே சொன்னதில்லை! ஆகவே, ஆரியக் கூத்தைத் தழுவிய புரட்டுக் கொள்கையே இக் 'கூறுண்ட அரசுக்' கொள்கை. வடக்கிலிருந்து வந்ததே நாகரிகம் என்னும் நகைப்பிற்குரிய பாடத்தையே இம் மேலைநாட்டு 'முற்போக்குகள்' தங்களின் ஆய்வுகளின் முன்னிலையாகக் கொண்டுள்ளன.

www.tamilarangam.net



மார்க்சு, காவுட்ஸ்கி, இலெனின் முதலான ஐரோப்பியப் பொதுவுடைமை அறிஞர்களின் ஆய்வுகளால் ஈர்க்கப்பட்டுள்ளதாக அடையாளம் காட்டிக்கொள்ளும் வெள்ளையின ஆய்வர்கள்,[28] தமிழகத்தை ஆய்வதற்காக முதலில் சென்று வழிபடும் அறிவுக்கோயில் சென்னை அடையாற்றில் ஆரியக் கருத்தியலின் திருத்தலமாகத் திகழும் இறைநெறிக் கழக (Theosophical Society) நூலகமே என்பது புதிய செய்தியும் அன்று. ஆராய வந்த வெள்ளையரைப் பிராமணிய மார்க்சியம் தொற்றிக் கொண்டமையால், வரலாறு ஒருக்கலித்துப் படுத்துக்கொள்ளாமல் வேறு என்னதான் செய்யும்?!

## வேளாளர் பெயர்ச்சிகள்

தொண்டைமண்டல வேளாளர் எனப்படுவோர் தெற்கு நோக்கி வந்து பொருநையாற்றங்கரையில் குடியேறியது மெய்தான். தமிழரின் இனநலன்களை எல்லாம் காட்டிக் கொடுத்து விட்டு வந்தேறி வடுகரின் நாயக்கர் ஆட்சிக்குக் கால்கோளிட்டுத் தொன்மை வாய்ந்த சேர, சோழ, பாண்டியப் பேரரசுகளை வேரோடு பிடுங்கி எறிந்த அரியநாயக முதலியார் என்னும் தொண்டைமண்டலத்து வேளாளனுக்குப் புகலிடம் தந்தது திருநெல்வேலிச் சீர்மைதான்! மறுப்பார் இல்லை. நற்குடி 48,000 என்னும் பிரிவினரும், பசுங்குடி 12,000 என்னும் பிரிவினருமான தொண்டைமண்டல வேளாளரில், நற்குடி 48,000 பிரிவைச் சேர்ந்த 8,000 வேளாளரைச் சேர மன்னன் கேட்டுக்கொண்டதற்கு இணங்கச் சோழ அரசன் பரிசிலாகக் கொடுத்ததாகக் கர்னல் மெக்கன்சி தொகுத்த பாளையப்பட்டுகளின் வரலாறு சொல்கின்றது.[29] இப் பெயர்ச்சி இடைக்காலத்தின் பிற்பகுதியில் நடந்திருக்க வேண்டும். 'கூறுண்ட அரசுக்' கொள்கையர் கூறுவதுபோல், தொண்டைநாட்டில் ஆட்சி கெட்டுக் குழப்பம் தலைவிரித்தாடிய ஒரு சூழலிலேயே இவ் வேளாளர் பெயர்ச்சி நிகழ்ந்திருக்க வேண்டும்.

ஆனால், இத்தகைய குழப்பத்தைக் களப்பாளரின் காலத்திற்குக் கொண்டு செல்வது கேள்விக்குரியது. ஏனெனில், ஆதொண்டையின் பெயரில் மூன்றாம் கரிகாலனின் காலத்தில் தோன்றியதாகக் கூறப்படும் தொண்டைநாடு, கி. மு. 5ஆம் நூற்றாண்டில் தோன்றியிருக்க வேண்டும். இதையடுத்து, காவிரிக்கரையிலிருந்து கொண்டுவந்து குடியேற்றப்பட்ட வேளாளர்கள் பாலாற்றங்கரையில் குதிர்வதற்கு ஓரிரு நூற்றாண்டுகளாவது ஆகியிருக்க வேண்டும். ஆனால், கி. பி. மூன்றாம் நூற்றாண்டில்தான் களப்பாளர் தமிழகத்தின்மீது படையெடுத்தனர்.

அநாகரிகர் படையெடுப்பு எதுவும் திடுமென நிகழ்ந்து விடுவதில்லை. ஒரு வலிய பேரரசைப் பல தலைமுறைகளாக அதன் எல்லைப்புறங்களில் அரட்டவும் அலைக்கழிக்கவும் செய்த அநாகரிகர்கள், பின்னர் மெல்ல அதன் எல்லைகளுக்குள் ஊடுருவி

www.tamilarangam.net



இறுதியில் அந்தப் பேரரசையே வீழ்த்திட நீண்ட காலம் பிடித்திருக்க வேண்டும் என்பதை ஒப்பியல் உலக வரலாறு காட்டும்.

ஆகவே, குடியேறிய இரு நூற்றாண்டுகளுக்குள் இன்னொரு பெரிய இடப்பெயர்ச்சிக்குத் தொண்டைமண்டல வேளாளர்கள் ஆளாகித் தெற்குநோக்கி வந்தனர் என்னும் கூற்று ஏற்புடையதாக இல்லை. அம் மேலை ஆய்வாளர்களால் ஒரு பகுதி உண்மையே முழுமை போல் ஊதிக்காட்டப்படுகின்றது; தினை, பனையாக்கப்படு கின்றது. இதைப் பின்னர் ஆய்வோம்.

## தினை முரண்பாடுகள்

முப்பெரும் ஆற்றுப்பள்ளத்தாக்குகளில் கண்ட வாழ்விய லுக்கும், அவற்றிற்கு இடையில் விரிந்துகிடந்த சமவெளி வாழ்விய லுக்கும் இடையில் நிலவிய முரண்பாடே தமிழகத்தின் குமுகப் பொருளியல் வரலாற்றின் அடிக்கால் என்பது அக் 'கூறுண்ட அரசுக்' கொள்கையர் படிக்கும் பாடம். பாலாறு-தென்பெண்ணையாற்றுப் படுகைக்கும் காவிரிப் படுகைக்கும் இடையிலும், காவிரிப் படுகைக்கும் பொருநையாற்றுப் படுகைக்கும் இடையிலும் தோன்றிய ஆற்றங்கரை நாகரிகமும் பண்பாடும், அவ்விரு ஆற்றுப்படுகைகளுக்கும் இடையில் அமைந்த சமவெளிகளுக்கும் படர்ந்தன வென்பது இவர்களின் கூற்று.[30] இஃது ஒரு தலைகீழ்ப் பாடம்; தினையைப் பனையாக்கும் போங்கு.

நகரிமலை, சவ்வாதுமலை, கல்வரையன்மலை, சேரவரையன் மலை, பச்சைமலை, கொல்லிமலை, பழனிமலை என வடக்கு தெற்காகத் துண்டு துண்டாக உள்ள மலைத்தொடர்கள் தமிழ கத்தின் சமவெளிப் பரப்பை 'மேற்குச் சமவெளி' என்றும் 'கிழக்குச் சமவெளி' என்றும் இரண்டாக வகுப்பதாக இம் மேலை ஆய்வர்கள் கருதுகின்றனர். மேற்குச்சமவெளியில் திட்டுத்திட்டான மேட்டுச் சமவெளிகள் உண்டு. இத்தகைய மேட்டுச்சமவெளிகளில் எல்லாம் பெரிய சமவெளியே கொங்குநாடு என வைத்து அக் கொங்கு நிலப் பரப்பை அவர்கள் தனியாகவே பிரித்துக்காட்டுகின்றனர். கொங்கு நாட்டுக்கு 'பள்ளத்தாக்கு', 'சமவெளி' ஆகிய இரு தன்மைகளும் உண்டு என்கின்றனர்.[31]

ஆனால், (தஞ்சை, திருச்சி மாவட்டங்கள் அடங்கிய) சோழ நாட்டில் இருப்பதைவிட (கோவை, ஈரோடு, சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களிலும், பழனி, கருவூர் வட்டங்களும் அடங்கிய) கொங்கு நாட்டில்தான் அக் காவிரியாற்றுப் படுகை அகலமானது. ஓர் ஆறும் அதன் துணையாறுகளும் ஓடி வடிகின்ற நாட்டு நிலப்பரப்பே ஆற்றுப்படுகை ஆகும். பொதுவாக, ஓர் ஆறு பாய்ந்தோடும் வழியி லான குன்றுகளோ மலைகளோ அமைந்த நிலச்சரிவோ பள்ளமான நிலப்பரப்போதான் ஆற்றுப்பள்ளத்தாக்கு ஆகும். இவ் வகையில்,

www.tamilarangam.net



'ஆற்றுப்படுகை' அல்லது 'பள்ளத்தாக்கு' என்னும் இலக்கணம் கொங்குநாட்டுக்கு மட்டும் பொருந்தாதா என்ன? ஆனால், தமிழகத்தை ஆராய வந்த மேற்கத்திய 'முற்போக்கு'களின் கணக்கில் அது முற்றிலும் பொருந்தாது! தமிழகத்தின் எல்லைக்குள் அடங்கும் (சின்னாறு, பாலாறு முதலான துணையாறுகளையுடைய) காவிரி, (காஞ்சியாறு, நீலிப்பள்ளம், நள்ளாறு, வண்ணான்கரை முதலான துணையாறுகளுள்ள) நொய்யல், (குதிரையாறு, குடகனாறு, உப்பாறு, நன்கஞ்சியாறு முதலான துணையாறுகள் இணையும்) ஆன்பொருநை (அமராவதி), வாணி, மணிமுத்தாறு ஆகிய ஆறுகளுடன், காட்டாறுகள் பல ஓடும் பெருநிலப் பரப்பே கொங்கு நாடு. இக் கொங்குநாட்டில் முக்கால் பங்கு நிலங்கள் புன்செய் நிலங்களாகவே இருந்தது உண்மைதான். இருந்தும், வெள்ளையின ஆய்வர்கள் இக் கொங்கு நாட்டைக் காவிரிப் பள்ளத்தாக்குக்கு அப்பால் வைக்கும் நோக்கமோ புரியவில்லை!

'கூறுண்ட அரசுக்' கொள்கையர்கள் முன் வைக்கும் ஆற்றுப் பள்ளத்தாக்கு x சமவெளி என்னும் முரண்பாட்டைப் பற்றிய பாடத்தை, மருதத்திணைக்கும் குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல் ஆகிய பிற நான்கு திணைகளுக்கும் இடையிலான குமுகப் பொருளியல் முரண்பாடு எனத் திருத்தியும் படிக்கலாம்.

தமிழர் அறிந்த வரையில், மாந்த நாகரிகத்தின் வளர்ச்சி, குறிஞ்சி வாழ்வியலில் தொடங்கி முல்லைநிலத்துக்குப் பெயர்ந்தது. இடையில் பாலையாகக் கெட்டுப் பின்னர் மருதத்தில் படர்ந்து, இறுதியில் நெய்தலில் முடிந்தது. முன்னர்க் கடல்கொண்ட குமரிக் கண்டத்தில் பாலைவனம் இருந்ததாயினும், அதைத் தழுவிய பெரும் பாலை வாழ்வியலைப்பற்றிப் பெரிதாகத் தெரியவில்லை. ஆயினும், அரசின் தோற்றுவாயைக் காடும் அக் காடு சார்ந்த வாழ்வியலுமான முல்லை வாழ்க்கையில்தான் பார்க்கின்றோம். இதனால், அரசனைக் குறிக்கும் கோ என்னும் ஆட்சித்தலைவனின் தோற்றத்தை முல்லைத் திணையில்தான் காண முடியும். இவ்வாறு முல்லை வாழ்க்கையில் தோன்றிய அந்தக் 'கோ', படைஉத்தியையும் காவலையும் கருதி, அதற்கு முன்பு தான் இருந்து, வாழ்ந்து, இறங்கி வந்த குறிஞ்சிநிலத்து மலையின் மீதே மீண்டும் ஏறிக் கோட்டை கட்டிக்கொண்டான். போரியல் தேவைகளையும் புவியியலையும் கருதியே இது நடந்தது.

வேந்தனின் உருவகம் ஆகிய இந்திரன் தோன்றிய பின்னர், அந்த இந்திரனை அப்புறப்படுத்திவிட்டுச் சிவன் அவனது இடத்தைப் பிடித்துக்கொண்டான். வயலும் அவ் வயலைச் சார்ந்ததுமான ஆற்றங் கரையுள்ள மருத வாழ்வியலில்தான் அது நடந்தது. குறிஞ்சியிலிருந்து முல்லை, முல்லையிலிருந்து மருதம், மருதத்திலிருந்து நெய்தல் என்னும் திரிவாக்கமே தமிழர்க்குரிய பண்பாட்டு இயங்கியலின் வளர்ச்சித் திசையாகும்.

www.tamilarangam.net



ஆயினும், இந்த இயற்பாடும் ஒரு பாதி உண்மை மட்டுமே யாகும். மருத வாழ்வியலில் குமுக மீத்தத்தின் (social surplus) அளவிலாப் பெருக்கமும், போர்த் தேவைகளால் விளைந்த பொரு ளியல் அழற்சிகளும் படையெடுப்புத் தேவைகளும், அம் மருதநிலத் தவரைக் குறிஞ்சிநிலத்தை நோக்கியோ, முல்லைநிலத்தை நோக்கியோ, நெய்தல்நிலத்தை நோக்கியோ திருப்பின. இந்த எதிர்த்திசை இயக்கமே தமிழரின் பண்பாட்டு வரலாற்றின் மறுபாதியாகும். பகுதிகளின் ஊடே முழுமையையும், முழுமையின் கூறுகளாகப் பகுதிகளையும் பார்க்கும் இயங்கியல் முறையியல், 'கூறுண்ட அரசுக்' கொள்கை யரான வெள்ளைத்தோல் போர்த்த அறிவாளர்க்கு விளங்கவில்லை.

## வளங்கள் வெவ்வேறானவை

மருதத்தின் நெல்வளம் மட்டுமே வளம் ஆகாது. குறிஞ்சியின் மலைவளமும், மலை ஈனும் பண்டங்களும்கூட ஒருவகை வளமே யாகும். முல்லைநிலத்தின் காட்டுவளமும்கூட இன்னொரு வகை யான வளமேயாகும். நெய்தல் நிலத்தின் மீன்வளப் பொருளியல் வளமே கடல்வளமாகும். ஆகவே, ஒற்றை வளத்தை மட்டுமே வைத்துக் கொண்டு எந்த நாடும் அன்றோ இன்றோ தனித்திருக்க முடியாது என்பதால்தான் திணைகள் மயங்கின. திணைகளுக்கு இடையிலான வேற்றுமைகள் எல்லாம் இயற்கை வழிப்பட்டன. இதனை மக்கள் எளிதில் மாற்றியமைத்துவிட முடியாது; ஒன்றைப் பிடித்துக்கொண்டு மற்றதை விட்டுவிட முடியாது. இதனால், இவ் வாழ்க்கைத்திணை கள் விளைவித்த குமுக மீத்தத்தின் அளவுகள் மாறுபடும். இவ்வகை யில், மருத வாழ்வியலில் குவிந்த குமுக மீத்தம் அளவால் முத லிடத்தைப் பெற்றது.

'கூறுண்ட அரசுக்' கொள்கையர் மேலும் என்னென்ன கூறு கின்றனர்? மக்கள் பயிர்த்தொழில் செய்துவந்த நிலையான வாழ் விடங்கள் எல்லாம் முதலில் ஆற்றுப்படுகைகளின் — அஃதாவது, ஆற்றங்கரைப் பண்பாடுகளின் — நடுப்பகுதிகளில் இருந்தனவாம். பின்னர்த் தேவையைக் கருதி, அவை ஆற்றுப்பள்ளத்தாக்குகளின் விளிம்பு வரை படர்ந்தனவாம். ஆற்றுப்புரவைப் போல் நிலையான நீர்ப்பாசனம் கிடைக்காத பகுதிகளில், மக்கள் பருவமழையால் நிரம்பிய ஏரிகளையும் குளங்களையும் சார்ந்த வேளாண் தொழில் நுட்பத்தை வளர்த்துக் கொண்டனராம். இவ்வாறு படர்கையில், அந்த ஆற்றுப் பள்ளத்தாக்குகளுக்கு அப்பால் இருந்த சமவெளிகளில் விளங்கிய குடித்தலைவர்களின் தாக்குதல்களிலிருந்து தம் செல்வ வளங்களையும் ஊர்களையும் காத்துக்கொள்ள அந்த ஆற்றுப்பள்ளத் தாக்கின் விளிம்புகளில் பல கோட்டைகளையும் அரண்களையும் கட்டிக்கொண்டனராம்.[31] இக் 'கூறுண்ட அரசுக்' கொள்கையரால் தமிழரின் வரலாற்று இயங்கியல் இவ்வாறு தலைகீழாகப் புரட்டப் படுகிறது!

www.tamilarangam.net



ஆறுகள் எல்லாம் மலைகளில்தானே தோன்றுகின்றன? பின்னர் அவை, காடுகளினூடே பாய்ந்துதானே மருதநிலத்தின் ஆற்றுப் புரவுக்கு அடிக்காலிடுகின்றன? இந் நிலையில், சுனைகள் மலைகளில்தான் உள்ளன? இதனால், நீரின் பயன்பாட்டு அளவுகள் யாவும் இயற்கை அமைப்பைச் சார்ந்தவை அல்லவா?

குறிஞ்சிநிலத்தின் நீர்த்தேவைகளைத் தழுவியே புனம் உழவும் (shifting cultivation), கொத்துக்காட்டு உழவும் (hoe cultivation) தோன்றின. பயறுகளும், தினையும், ஐவன நெல்லும் முதலான யாவும் அக் குறிஞ்சிநிலத்தில் விளைந்த உணவுப்பயிர்களாகும். இவைதாம் குறிஞ்சி வாழ்வியலின் பொருளியல் பண்பாடாயின. இதைத் தழுவியே காடுகளை அழித்து உண்டாக்கிய கொல்லை உழவும், ஏர்க்காட்டு உழவும் தோன்றின. மருத வாழ்வியலில் தோன்றிய பெருநகரங்களில் ஆண்டைகளுக்கு இடையில் மூண்ட போர்களிலிருந்தும் உயிர் தப்பி, மலைகளிலும் காடுகளிலும் குடிபுகுந்தவர் உண்டு. இவர்கள் பின்னர்க் காடு மலைவாழ் பழங்குடிகளாயினர். இத்தகையோர் தாம் முன்னர்ப் பழகியிருந்த மருதநில வேளாண் தொழில் நுட்பங்களை அக் காடுகளிலும் மலைகளிலும் புகுத்தி உழவு செய்யத் தலைப்பட்ட போதும், அந்த உழவு மருதநிலத்துப் பெரும் வேளாண்மைக்கு ஈடாகவில்லை. மலைக்கும் காட்டுக்கும் ஓடிய அம் மருதநில மக்கள், தம் 'வேளாளர்' பட்டத்தைக் கட்டிக் காத்த தோடு நிறைவுகொள்ள வேண்டிவந்தது.

அரசு என்னும் கட்டுமானத்தின் ஆட்சி எல்லைகள் விரிவடைந்தபோது, திணைகள் மயங்கின. நடுவப்படுத்தப்பட்ட ஆட்சியும் அதிகாரமும் படையும் அரணும் புதிய நிலக்கிழமை வாழ்வியலின்கீழ் இன்றியமையாத் தேவைகளாயின. இத்தகைய நிகழ்வை உலகெங்கும் காணலாம்.

இந் நிலக்கிழமை வாழ்க்கைத்திணையில், சிற்றரசுகள் பேரரசுகளுக்குள் அடக்கப்பட்டன. இவ்வாறு அடக்கப்பட்ட சிற்றரசுகளுக்கும் நிலக்கிழார்களுக்கும்கூடப் படையும் குடையும் வைத்துக் கொள்ளவும், சில சூழல்களில் தனித்தனிக் காசுகளை வெளியிட்டுக் கொள்ளவும், தனியாகத் துணைவரிகளையும் உள்நாட்டு உள்ளூர் வரிகளையும் விதித்துக் கொள்ளவும் வல்ல அளவுக்குத் தன்னாட்சி இருந்தது. இதுவும் ஓர் உலகளாவிய போங்குதான்.

## திறையாண்மையும் நேரடி ஆட்சியும்

நிலக்கிழமையின்கீழ் விளங்கிவந்த நடுவணரசு (பேரரசு), சிற்றரசு உறவைத் திறை என்னும் கட்டணமே தீர்மானித்தது. பேரரசர்களுக்குச் சிற்றரசர்கள் திறை கட்டுவது என்பது அப் பேரரசனின் மேலாண்மையைச் சிற்றரசர்கள் ஏற்று அடி பணிந்து நடக்கவேண்டும் என்னும் அரசியல் பொருளியல் உறவேயாகும். இதனால், அதனைத்

www.tamilarangam.net



திறையாண்மை (Tributorism) எனக் குறிப்பிட்டனர். சிற்றரசுகளை எல்லாம் ஒழித்து விட்டு, அவற்றைத் தனித்தனி மாகாணங்களாக ஆக்கி, நடுவணரசாகிய பேரரசின் பேராளனாக ஓர் ஆளுநனையோ அதிகாரியையோ வைத்து ஆள்வதே காலப்போக்கில் நேரடி ஆட்சி ஆகியது. இந்த இயற்பாடும் உலகளாவியதுதான். ஆகவே, தமிழ்ப் பேரரசுகள் தோற்றுவித்த மண்டிலம் (பெருவளநாடு), வளநாடு, நாடு, கூற்றம் முதலான ஆட்சிக்கூறுகள் யாவும் இது போன்ற நடுவமாக்கப் போக்கையே காட்டுவன.

தமிழகச் சூழலில் இயல்பாய்த் தோன்றிய நிலக்கிழமையை ஐரோப்பிய நிலக்கிழமையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அவ் விரண்டுமே குறிப்பிட்ட சூழல்களில் தனித்தனியாக அரும்பிய நிலக் கிழமையின் இருவேறு இயற்பாடுகள் என்பது விளங்கும்.

இதை மேலையுலக 'முற்போக்கு' ஆய்வர்கள் ஏற்க மறுக்கின் றனர். அவர்களின் அடிமனங்களில் குடிகொண்டுள்ள வெள்ளை நிறவெறி ஓர்மையே இதற்கான ஒளிவான காரணமாகும். ஆசிய விளைப்புமுறை என்னும் மார்க்சின் மூக்கு முழி இல்லாத வரலாற் றியல் கோட்பாடே இத்தகைய ஐரோப்பியக் காழ்ப்புக்கு ஒரு பற்றுக் கோடாகும். நொண்டிக் குதிரைக்குச் சறுக்கியதே சாக்காம்! இது போன்ற ஒரு நொண்டிக் குதிரையே வெள்ளையின 'முற்போக்கர்' இங்கு வந்து கடைவிரிக்கின்ற 'கூறுண்ட அரசுக்' கோட்பாடு!

திறையாண்மையாக இருந்தாலும், நடுவாண்மையாக இருந் தாலும், கருப்பகுதிக்கும் புறப்பகுதிக்கும் இடையிலான முரண்பாடு இருக்கத்தானே செய்யும்? பேரரசுகளுக்கும் சிற்றரசுகளுக்கும், சிற்றரசுகளுக்கும் கிழார்களுக்கும், படையாட்சிகளுக்கும் கிழார் களுக்கும், மருதநிலத் தலைவர்களுக்கும் குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல் ஆகிய வேறு திணைகளின் தலைவர்களுக்கும் இடையில் நிலவிய முரண்பாடு, கருவுக்கும் புறத்திற்கும் (core and periphery) ஆகிய முரண்பாட்டின் தனி வடிவங்களேயாகும். 'ஆசிய விளைப்புமுறைக்' கோட்பாடு, நிலக்கிழமை வாழ்வியலில் இம் மெய்ம்மைகளை இல்லாத தாக்கிவிட முடியாது.

நகர்ப்புற நாகரிகத்தைத் தமிழ் வேளாளர் சாதியினருக்குக் கற்பித் தவரே வந்தேறிப் பிராமணர்தானாம்! இப்படியும் ஒரு போடு போடு கின்றனர் 'கூறுண்ட அரசுக்' கொள்கையர்![32]

## நடுவரசின்றிப் பெருங்கோயிலா?

கோயில் என்னும் கட்டுமானம் நிலையாக வழிபாடு நடக்கும் ஒரு தனி இடமும், கட்டடமும், கட்டுக்கோப்பும், ஒழுகுகளும் இல்லாமல் பெரும்பூசாரியம் இல்லை. பூசாரியத்தின் வடுக வடிவமே பிராமணியம் ஆகும்.

www.tamilarangam.net



கோயிலை நடுவமாகக்கொண்ட வாழ்வியல் முதன்முதலில் அமைந்ததே இத் துணைக்கண்டத்தின் தென்கோடியிலுள்ள சேரலத்தில்தான் என்பது நுணுகி ஆய்ந்தால் விளங்கும். பரசுராமனின் கதையே அதைக் காட்டும். ஆகவே, தென்முனையில் தோன்றிய அப் பிராமணியம் மடங்களைக் கட்டிக்கொண்டு வடக்கே சென்றது. இதனால், கறுப்பு-சிவப்பு என்னும் மேனிநிறக் காழ்ப்பின் அடிப்படையில் வடக்கே தோன்றித் தெற்கே வந்த ஆரியத்திலிருந்து அந்தப் பிராமணியம் வேறுபடும்.

குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல் ஆகிய வாழ்க்கைத் திணைகளுக்கு உரிய சிறுதெய்வ வழிபாடு, மருதநில வாழ்க்கையில் கடவுள் என்னும் பெருந்தெய்வ வழிபாடாக விரிவடைந்தது. கடவுளுக்கு இறையியல் வேண்டும். மெய்யியல் வேண்டும். இத்தனையும் அக் கடவுளோடு கூடப்பிறந்தனவாகும். ஆகவே, பிராமணியமும், பெருங் கோயில் என்னும் அமைப்பும் கட்டுமானமும், மருதநிலத்தில் மலர்ந்த பேரூர்களிலும் நகரங்களிலும் அரும்பியனவாகும்.

இவற்றுடன், கோயில் பரத்தைமை முறையும், அக் கோயிலைச் சார்ந்த ஒட்டுண்ணிச் சாதிகளும் கூடவே வந்து மிகக் கெட்டியாக ஒட்டிக்கொண்டன.

நகர்ப்புறக் கட்டுமானமான அக் கோயிலின் நாயகர்களான பிராமணப் பூசாரிகள், பல்லவர் காலம் முதலே வந்தேறி வடுகப் (கன்னடத் தெலுங்குப்) பூசாரிகளாகவே பெரும்பாலும் இருந்தனர். இது வரலாற்று மெய்ம்மை. கன்னடரும் தெலுங்கரும் வடுகரின் இரு கிளைகள் என்பதைக் கருதி, இவர்களை **வடுகப் பார்ப்பனர்** என்றழைக்கலாம்.

உடல் வருத்தி உழைக்காத அவ் வடுகப் பிராமணரும், அவர்கள் குடிகொண்டிருந்த கோயில்களும், வேளாளர் படியளக்காமல் ஒரு நொடியும் இருந்திருக்க முடியாது. இதனால், பிராமணரும் வேளாளரும் ஒட்டியே வாழ்ந்துவந்தனர்.

காடு வெட்டிக் கொல்லைகளாக்கிப் பின்னர்க் கழனியாக்குவது எல்லாக் காலங்களிலும் எல்லா நாடுகளிலும் நடந்துவந்த இயற்பாடேயாகும். ஆனால், தொண்டைநாடு, கொங்குநாடு ஆகிய காடு அடர்ந்த சமவெளிகளிலும் சீர்மைகளிலும் வளம்மிக்க மருத நிலப் பகுதிகளிலிருந்த அவ் வேளாளரைக் கொண்டு வந்து ஆயிரக் கணக்கில் குடியேற்றிய நிகழ்வுகள், வந்தேறி வடுகர்கள் தமிழ்ச் சோழர்களை விரட்டியடித்துவிட்டுச் சோழர் முடியைச் சூடிக்கொண்டு பொய்ச்சோழரான பிறகே — அஃதாவது, இடைக்காலத்திலேயே — பெருமளவில் நடந்தன. மேலும், வடுக வந்தேறிகளின் இடையறாத மண்பறிப்புகளாலும், சளுக்கிய, ஒய்சள, விசயநகர வடுகப் படையெடுப்புகளினாலும், வடக்கத்திய முசுலிம்களின் படையெடுப்பு

www.tamilarangam.net



களாலும் தோன்றிய ஆட்சிக்குலைவுகளின் போதெல்லாம் நெருக்கப் படவும் அச்சுறுத்தப்படவும் நேர்ந்த அவ் வேளாளர்கள், இடம்விட்டு இடம்பெயர்ந்து சென்றதைக் காட்டும் வரலாற்றுக் குறிப்புகள் நிறையவே உண்டு. இது போன்ற இடப்பெயர்ச்சிகளே, கொங்கு வேளாளர்-வேட்டுவர் பூசலுக்குக் காரணமானது. இந் நிலையில், கோயில் நகரங்களில் அமைந்த பிராமணர்-வேளாளர் உறவையும் பாராமல், அவ் வேளாளரின் நிலங்களை வடுக வந்தேறிகள் பெரு மளவில் பறித்துக்கொண்டனர். தமிழகத்திலுள்ள கோயில்களில் தேவாரமும் திருவாசகமும் ஆழ்வார் பாசுரங்களும் ஓதுவது நின்று, ஓதுவார்களும் வள்ளுவர்களும் ஒதுக்கப்பட்ட நிகழ்வுகளே அதற்குக் கட்டியம் கூறின.

வெள்ளையினக் கண்கொண்டு தமிழகத்தின் வரலாற்றியல் இடிபாடுகளை விளக்க முனையும் 'கூறுண்ட அரசுக்' கொள்கை யருக்கு இப் போக்குகள் எளிதில் புலப்பட வாய்ப்பில்லை.

சேர, சோழ, பாண்டிய, பல்லவப் பேரரசுகளுக்கு இடை யில், மலைவளமும் காட்டுவளமும் மிக்க ஓர் இடைநாடாக (buffer state) கொங்குநாடு இருந்தது என்னவோ உண்மை. இதைப் போன்ற இடைநாடுகள் அன்றும் உண்டு; இன்றும் உண்டு. 'தொண்டை நாட்டிற்கும் சோழநாட்டிற்கும் இடைப்பட்ட நாடு' என்னும் பொருளில் நடுவில்நாடு என்னும் பெயரால் இன்றைய தென்னார்க் காடு மாவட்டம் ஒருகாலத்தில் அழைக்கப்படவில்லையா? இத்தகை யதோர் இடைநாடான கொங்குநாடு, மூவேந்தர்க்குத் திறை கட்டி வந்தது. அதே வேளையில், முடிந்த அளவுக்குத் தன்னாட்சியுடன் விளங்கிய தலைவர்களின் தனிஆட்சியையும் அக் கொங்குநாடு கொண் டிருக்கவில்லையா?

திறையாண்மை என்னும் உறவு காலத்தால் தேய்ந்தபோது, அக் கொங்குநாட்டைத் தத்தம் ஆட்சிவரம்பிற்கு உள்ளடங்கிய மாகாண மாகச் செய்துகொள்ளச் சேர, சோழ, பாண்டியப் பேரரசுகள் முயன்ற ஓர் எதிர்மறைப் போக்கும் இருந்தது. தமிழ்ப் பேரரசுகளுக்கு இடை யிலான இடையறாத போர்கள், அப் பேரரசுகளால் அக் கொங்கு நாடு அவ்வாறு முற்றிலுமாகத் தன்வயமாக்கிக் கொள்ளப்படுகின்ற போக்கை அவ்வப்போது குலைத்தன; தளர்ச்சியான திறையாண்மை உறவு என்னும் அதன் நேர்மாறான நிலைக்கு அவ்வப்போது திரும்பவே செய்தன. இவற்றை எல்லாம் கருத்தில் கொள்ளாமல், ஒருநடுவப் போக்குத் தமிழ்ப் பேரரசுகளில் இல்லவே இல்லையென இவ் வெள்ளையின மண்டைகள் பாடம் படிக்கின்றன.[33] தமிழரின் வரலாற்று இயங்கியலை முறைப்படி விளக்காமல் இது குழப்பம் ஏற்படுத்துகின்றது.

கோயில் என்னும் அமைப்பு, அரசு என்னும் ஆட்சியமைப்பின் துணைக்கூறு ஆகும். அந்த அரசு நடுவப்படுத்தப்படாமல், பெருங்

www.tamilarangam.net



கோயில் என்னும் துணைநிறுவனம் தோன்றியிருக்கவே முடியாது. ஆகவே, கோயில்களுக்கு என்றுமே அரசியல் உண்டு. இக் கோயில் தன்னைச் சுற்றிய ஒரு மடவளாகத்தை அமைத்துக் கொண்டது. இத்தகைய கோயில் மடங்களும், அம் மடங்களுக்குச் சோறிட்ட கோயில் நிலங்களும், இறையிலி முறையும், கோயிலுக்கு நிலக்கொடையான தேவதானங்களும் திருவிடையாட்டங்களும் பள்ளிச்சந்தங்களும் அதையே சுட்டுகின்றன. கோயில் என்னும் கட்டுமானம் விரிந்து வலுப்பெற்ற போக்கையே இவை காட்டுகின்றன. இவ்வாறு கோயில்கள் மடவளாகங்களாகப் பெருகுவது, அரசும் ஆட்சியும் மேன்மேலும் நடுவப்படுத்தப்பட்ட நடுவம்நோக்கிய (centripetal) போக்கையே காட்டுகின்றன. இந் நிலையிலேயே, பெரிய கோயில் திருவிழாக்கள் கண்கவரும் வண்ணம் நாள்கணக்கில் கொண்டாடப்பட்டன. அரசர்கள் நடாத்திய' கொள்ளைகளிலிருந்து 'அறக்கொடை' என்னும் பெயரில் கோயில்களுக்கு அவ்வப்போது பங்குதரப்பட்டன.

இவற்றிற்கும் மேலாக, அக் கோயில்கள் அரசுகளின் கருவூலங்களாகவும், அந்த அரசு மக்களிடமிருந்து தண்டிய இறையையும் வரிகளையும் கொட்டிக் காக்கின்ற வைப்பகங்களாகவும் ஆக்கப்பட்டன. திறையாண்மை வழிவந்த அரசு, மேன்மேலும் நடுவப்படுத்தப்பட்ட போங்கையே இது காட்டுகின்றது. பேரரசுகளுக்கும் சிற்றரசுகளுக்கும், பேரரசுகளுக்கும் வேளிர்களுக்கும், பேரரசுகளுக்கும் படையாட்சிகளுக்கும் (fiefs), பேரரசுகளுக்கும் வன்னிமைகளுக்கும், அரசுகளுக்கும் கிழார்களுக்கும், நாட்டிற்கும் ஊருக்கும் இடையிலான உறவுகள் யாவும் அளவான தன்னாட்சி (limited autonomy) உறவாக இருந்தமையே தமிழகத்தில் விளங்கிய நிலக்கிழமையின் தனிச்சிறப்பாகும். மேற்கத்திய அளவுகோல்களையும் மதிப்பீடுகளையும் வறட்டிய நிலைபாடுகளையும் தழுவிய வெள்ளை நிறக்காழ்ப்புடன் பார்த்தால், அது விளங்காது. மாறாக, அறிவை மயக்கும் 'கூறுண்ட அரசுகளே' தமிழகமெங்கும் பேய்த்தேராகத் தெரியும்!

## அயலார் வணிகம்

உள்ளூர் வணிகர்களை ஊக்குவிக்காமல், அயல்நாட்டுப் பெருவணிகர்களுக்கு மட்டும் பெருந்துணையாக நின்ற வடுகச் சோழர் போன்ற இடைக்காலப் பேரரசர்களின் போக்கை இவ் வெள்ளையின மூளைகள் சுட்டிக்காட்டுகின்றன.[34]

கழகம் (சங்கம்) மருவிய காலத்தில் மளமளவென வடக்கிலிருந்து வந்தேறிய பெருவணிகக் கூட்டங்கள், தமிழக வாழ்வியலில் புடைப்புகளை ஏற்படுத்தின. இத்தகைய வீக்கங்கள், வந்தேறி அருக, புத்த சமய ஊடுருவல்களாக வெளிப்பட்டன. வடக்கத்திய வணிக வகுப்பினுடைய மேட்டிமையையும் பண்பாட்டுக் குலைப்பையும் எதிர்த்த கலகங்கள்தாம் இறைப்பற்றி (பற்றி) இயக்கமாகவும்,

www.tamilarangam.net



வலங்கை-இடங்கைச் சாதிக்கலகங்களாகவும் வெளிப்பட்டன. இவை யாவும் 'கூறுண்ட அரசுக்' கொள்கையைப் பொய்யாக்குகின்றன. தமிழரிடையே எழுந்த பேரரசுகள் கட்டமைத்த விளைப்பு உறவுகள், அகலமாகப் படர்ந்து விரிந்து கிடந்ததையே புலப்படுத்துகின்றன. இந்த உண்மைகளை எல்லாம் அம் மேற்கத்திய மூளைகள் காண மறுக்கின்றன.

## நடுவப்படைகள்

நடுவப்படுத்தப்பட்ட படைகள் தமிழ்ப் பேரரசுகளுக்கு இல்லையாம்! தமிழ்ச் சிற்றரசர்களுக்குத் தனித்தனிப் படைகள் இருந்தனவாம். முறைப்படி பயிற்றுவிக்கப்படாத கட்டுக் கோப்பற்ற வெற்றுக் குடிப்படைகளாகவே அவை இருந்தனவாம்![35] தமிழரசுகள் கட்டியமைத்த படையியல் அமைப்புகளைப் பற்றிய நல்ல ஆய்வை மேற்கொண்டால், தமிழரின் வரலாற்றை இவ்வாறு எல்லாம் திரித்துரைக்கும் 'கூறுண்ட அரசுக்' கோட்பாடு ஆடிக்காற்றில் பறக்கும் பட்டமாய் ஆகிவிடும்!

கோயிலாகிய நிறுவனம் அரசுக் கருவூலமாகவும் இருந்தது என இவர்கள் படிக்கும் பாடமே இவர்களுடைய 'கூறுண்ட அரசுக்' கோட்பாட்டைப் பொய்யாக்கிவிடும். இக் கோயில் கருவூலங்களைக் கொள்ளையரிடமிருந்து காக்கப் பெரும்படைகளைப் பெரிய கோயில் நகரங்களில் நிறுத்தி வைத்திருந்த உண்மை அந்தக் கூற்றை மறுதலிக்கின்றது.

படையாட்சி (fiefdom) முறை தமிழகத்தில் பல்லவர் காலத்தில் தோன்றியிருக்க வேண்டும். மாணிக்கவாசகர் காலத்தில் படையாட்சி முறை இருந்தது.

"பாண்டி நன்னாடுடை யான்படை யாட்சிகள்"[36]

என்னும் குறிப்பு இதை மெய்ப்பிக்கின்றது. தென்னார்க்காடு, தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் மாணிக்கவாசகர் காலத்திலேயே இப் படையாட்சி முறை விளங்கிவந்தது. தானைத் தலைவர்க்கு ஊர்களைக் கொடையாகத் தந்து படையாட்சிகளையும் நாயகங்களையும் வழங்கினர்.

தமிழகத்தில் இருந்த நாடுகளைப் போல் ஈழத்தின் வரலாற்றில் வன்னிமைகள் என்பன அடிப்படை ஆட்சியியல் கூறுகளாக இருந்து வந்தன. யாழ்ப்பாண அரசு தோன்றுவதற்கு முன்னரே அங்கு வன்னிமைகள் விளங்கின. இந்த வன்னிமைகளை ஆண்டுவந்த தலைவர்களை வன்னியனார் அல்லது வன்னிபம் என்றனர். இவர்கள் குறுநில மன்னர்களாவர். (வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் அடங்கிய) அடங்காப்பற்று, திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய வன்னிமைகள் அங்கு இருந்தன. போர்க்சுகீசியரும் ஒல்லாந்து நாட்டினரும் ஆண்டுவந்த

www.tamilarangam.net



காலத்தில் (1505-1796) செட்டிக்குளம், பனங்காமம், மேற்பற்று, முள்ளியவளை, கரிக்கட்டுமூலை, தென்னவன்மரப்படி, கருநாவற் பற்று ஆகிய வன்னியப்பற்றுகள் அடங்காப்பற்றுக்குள் அடங்கியன வாக இருந்தன.

இவ் வன்னிமைகளின் தலைவர்கள் போர்க்காலத்தில் யாழ்ப் பாண அரசருக்குப் படை தந்து உதவியதுடன், அவரது சார்பில் தாங்களே களம் காணவும் செய்தனர். இந்த ஈழத்து வன்னியர்கள் தமிழ்நாட்டுடன் நல்ல உறவாடிவந்தனர். கயிலை வன்னியனாரின் சிதம்பரமட அறக்கொடைப் பட்டயத்தில் (1722) அக் கயிலை வன்னி யனின் பெயரில் திருசிற்றம்பலத்தில் (சிதம்பரத்தில்) உள்ள ஒரு மடத் திற்குக் கொடை வழங்கப்பட்டது.

இவ் வன்னிமைகளுக்கு ஓரளவு தன்னாட்சி இருந்தது. வன்னிமைகளின் தலைவர்களான வன்னியர்கள் தம்தம் தகுதிக்கும் வலிமைக்கும் ஏற்ப குடை, கொடி, கவசம், படை ஆகிய சீர்களைப் பெற்றிருந்தனர். வன்னிமைத் தலைவர்கள் சிற்றரசர்களாக அரசாண்ட துடன், சட்டம் ஒழுங்கையும் மக்களுக்கு இடையிலான பிணக்குகளைத் தீர்த்துவைத்த அறமன்றங்களையும் பேணிவந்தனர். இவர்களுக் கெனத் தனிப்படைகள் இருந்தன. வாரம், தீர்வை, காணிக்கடன், ஆள்வரி முதலான வரிகளையும் இறையையும் தண்டும் உரிமை இவர்களுக்கு இருந்தது. இவர்கள் தேசவழமை முறையைக் காத்தனர். இதனால், வன்னியர்களின் ஆட்சியின் கீழான அதிகாரக் கட்டுக் கோப்பு, முதலியார், உடையார், கண்காணி, பண்டாரப்பிள்ளை, தலையாரி, அடப்பனார், மொத்தகர் ஆகிய அதிகாரிகளிடம் இருந்தன. இவற்றில் முதலியார் பதவியே மிக உயர்ந்த பதவியாகும். படையை முன்னின்று நடத்திய படைத்தலைவனான படைமுதலியே முதலியார் எனப்பட்டார். ஆகவே, பல்லக்கு, வெள்ளைக்குதிரை, வில்லுக்குஞ்சம், ஒட்டுவிளக்கு, பாவாடை, கொடி, நாயனம், தாரை, மேளம் ஆகியன பதவிச் சின்னங்களாகத் தரப்பட்டன.

உடையார் என்பவர்கள் ஊராட்சியைக் கவனித்துவந்தனர். இந்த உடையார் பதவி, முதலியார் பதவிக்குக் கீழானது. மக்களிட மிருந்து இறையையும் வரிகளையும் தண்டவும் தண்டிய பணத்தை ஆளவும் செய்தவர்கள் பண்டாரப்பிள்ளைகள் ஆவர். நிலத்தை அள விடுதல், வரி மதிப்பீடு செய்தல் ஆகியன கண்காணியரின் பணி யாகும்.

இந்தப் பதவியினர் காலப்போக்கில் பதவி உயர்வும் பெற்றனர். இலங்கை நாராயண முதலியார் என்பவர் முள்ளியவளை, மேற்பற்று ஆகிய இரு வன்னிமைகளுக்கும் பொறுப்பாளராகிப் பின்னர் வன்னிய ரானார். வன்னியர் பதவியைப் பெற்ற பின்னரும் இவரை நாராயண முதலியார் என்றே குறிப்பிட்டனர். பதவி உயர்வு பெற்ற முறையைப் பற்றிய இச் செய்தி ஓர் எடுகோளாகக் காட்டப்படுகின்றது.

www.tamilarangam.net



செயதுங்க வீரவராசசிங்கன் என்னும் ஈழமன்னனின் காலத்தில் மதுரைப் பாண்டிய மன்னனின் தூண்டுதலால், வன்னியர்கள் ஈழத்தின் கொங்குநாட்டை ஒத்த அடங்காப்பற்றில் குடியேறியதாக வரலாறு காட்டுகின்றது. ஆங்கிலேயர்கள் இலங்கைத் தீவைக் கைப் பற்றிய நாள் வரை, இவ் வன்னிமை ஆட்சிமுறை ஈழத்தில் நடைபெற்றது.[37]

## முட்டை— தலைப்பிரட்டை— வால்தவளை — தவளை

மேற்சொன்ன பொய்க்கோட்பாடுகளுக்கு எல்லாம் பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் ஆங்கிலேயர் கற்பித்த வந்தேறி வரலாற்றியல் விளக்கங்களே தலையூற்று என்பது வெள்ளிடை மலை. இந்த வழியில் நிற்பதே ஐடன் சவுத்தால் (Aiden Southall), பர்ட்டன் ஸ்டெய்ன் (Burton Stein) ஆகியோர் வடித்த 'கூறுண்ட அரசுகள்' என்னும் விளக்கமாகும்.

அலெக்சாண்டர் டவ், சர் என்றி மெய்ன் முதலானோர் அக்காலக் கிழக்கிந்தியக் குழுமத்தின் ஆட்சிநலன்களுக்காகவென வடித்த வந்தேறி வரலாற்றியல் கோட்பாடுகளைத் தவளை முட்டை என்றால், அம் முட்டையிலிருந்து வந்த தலைப்பிரட்டைதான் மார்க்சின் 'ஆசிய விளைப்புமுறைக்' கோட்பாடு. அதிலிருந்து திரிந்த வால்தவளையே ஆப்பிரிக்க மாதிரிகளை தமிழர் வரலாற்றியல்மீது திணித்த 'ஒருகால்வழி மரபுக்குழுக்கள்' கோட்பாடு. அதையடுத்து வந்த முழுத்தவளையே வெள்ளையின 'முற்போக்கு' இழவுகள் நம்மிடம் வந்து விலைகூறும் 'கூறுண்ட அரசுக்' குழறுபடி.

ஆசிய விளைப்புமுறை, கூறுண்ட அரசுகள் முதலான கோட்பாடுகளை மலையாள, வங்காள, ஆந்திர மார்க்சியர்கள் பெரிதாக மதிக்கவோ மறுக்கவோ முற்படட்டதில்லை. அவர்கள் தத்தம் தேசிய இனப் பண்பாட்டு மரபுகளுடன் பின்னிப் பிணைந்து நின்றமையால், தத்தம் இன வரலாறுகளை அத்தகைய குழப்படிக் கோட்பாடுகள் விரித்த சிலந்திவலைக்குள் சிக்கவிடாமல் மிக விழிப்புடன் பார்த்துக் கொண்டனர்.

ஆனால், தமிழகத்தின் பொதுவுடைமைத் தலைவர்களில் பெரும்பாலோர் தமிழரல்லா வந்தேறிகளாகவும் புதிய பிராமண உள்ளுணர்வு மிக்கோராகவும் இருந்தமையால், இத்தகைய குழப்படிகளை எல்லாம் கொண்டுவந்து தமிழரின் தலைமீது கொட்டி அவர்களின் வரலாற்றையும் பண்பாட்டு அளவைகளையும் வேண்டுமென்றே கொச்சைப்படுத்தி வருகின்றனர்.

எட்மண்ட பர்க் (Edmund Burke) ஓர் உண்மையைச் சொன்னார்:

> "இந்தியாவின்மீது அயலார் மேலாண்மையை ஆங்கிலேயர் திணிக்கவில்லை. அயலாரின் மேலாண்மை அவர்களுக்கு முன்னர் அங்கு ஏற்கெனவே இருந்தது"[38]

www.tamilarangam.net



என்பதே அவ் வுண்மையாகும். தமிழகத்தைப் பொறுத்தவரையில், இது நூற்றுக்கு நூறு உண்மை. வடுக (கன்னட, தெலுங்கு) வந்தேறி களிடம் பதினாறு நூற்றாண்டுகளுக்கு மேலாக அடிமைப்படுத்தப் பட்டுக் கிடக்கும் தமிழரினத்தின் மீதான வடுக முற்றாண்மை அதன் முகட்டை எட்டியது நாயக்க வந்தேறியர் காலத்திலேயே ஆகும். அவ் வடுக மேட்டிமையின் நீட்டிப்பையே தமிழகத்தில் மார்க்சியம் பேசுவோரிடம் காண்கிறோம். தமிழையும் தமிழரையும் தமிழரின் வரலாற்றையும் கெடுப்பதற்கும், திரித்துப் புரட்டி மறைப்பதற்கும், 'ஆசிய விளைப்பு முறை', 'கூறுண்ட அரசுகள்' ஆகிய கருத்துக்கள்ளி களையே வடுக வந்தேறி நலன்கள் தம் கருவிகளாகக் கொண்டுள்ளன.

தமிழரையும் தமிழரின் வரலாற்றையும் கொச்சைப்படுத்தும் இது போன்ற கழிசடைகளுக்குத் தமிழகத்தில் கடைவிரிப்போரைக் காலில் இருப்பதைக் கழற்றிக்கொண்டு தமிழரின் அறிவுலகம் ஓடவோட விரட்டியடிக்கும் நாளும் தொலைவில் இல்லை. இந்தச் சூழலை உருவாக்குவதற்கேற்ற முன்னிலையாகத் தம் வரலாற்றைப் பற்றிய தன்மானச் செருக்குடன் தமிழர்கள் சொந்த வீட்டுக்கணக்குப் போட்டாக வேண்டும்.

இந்த விழிப்புணர்வுடன், வடுக அநாகரிகரின் படையெடுப்பு களால் தமிழரினம் வீழ்ந்த வரலாற்றையும் வரலாற்று அணுகலையும் இனிக் காண்போம்.

## குறிப்புகள்

1-13. Bernard S. Cohen, *African Models and Indian Histories* in *Realm and Region in Traditional India*, ed., Richard G. Fox, Vikas Publishing House Pvt. Ltd., New Delhi, 1977, pp 94-112.

14. Karl Marx, *Theories of Surplus Value*, Vol. IV of *Capital*, Part III, Progress Publishers, Moscow, 1971, pp 399-449.

15. Guna, *Asiatic Mode — A Socio-Cultural Perspective*, Bookwell Publication, Delhi-110009, 1984, p 3.

16. Malcolm Caldwell's *Foreword* to Umber Melotti's *Marx and the Third World*, Macmillan, 1977.

17. குணா, *தமிழ்த் தேசிய இனச் சிக்கல் —உலகநம்பிகளின் இயங் காவியல்*, தமிழக ஆய்வரண், பெங்களூர், 1987, முன்னுரை, ப V.

18-23. Bernard S. Cohen, *African Models and Indian Histories*, pp 90-97.

24. Aidan Southall, *Alur Society: A Study in Process and Types of Domination*, referred by Burton Stein in *Peasant State and Society in Medieval South India*, Oxford University Press, 1980, p 265; Burton Stein, *The State and the Agrarian Order in Medieval South India: A Historigraphical Critique* in *Essays on South India*, ed., Burton Stein, Vikas Publishing House Pvt. Ltd., New

www.tamilarangam.net



Delhi, 1976, pp 64-88; Burton Stein, *The Segmentary State in South Indian History* in *Realm and Region in Traditional India*, ed., Richard Fox, pp 3-51.

25. Christopher John Baker, *An Indian Rural Economy 1880-1955, The Tamilnad Countryside*, Oxford University Press, New Delhi, 1984, pp 34-35.

26-27. *ibid*, pp 25-27.

28. *ibid, Introduction*, pp 8-9.

29. *பாளையப்பட்டுக்களின் வரலாறு, தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை, 1981, ப 59.*

30-35. Christopher John Baker, *An Indian Rural Economy 1880-1955, The Tamilnad Countryside*, pp 29-33 and 93.

36. *மாணிக்கவாசகர், திருவாசகம், திருப்படையாட்சி 5.*

37. *முல்லைமணி, மண்ணின் சுதந்திரம் — முள்ளியவளை வன்னியர்கள், எரிமலை, மே 1997.*

38. Edmund Burke, *Speech on Mr. Fox's East India Bill on Dec 1,1783, The Works of Edmund Burke*, Vol. II, London, Bell, 1894, p 204.

www.tamilarangam.net

# வடுக அநாகரிகர்

வடுகர்கள், ஆறலைத்து (வழிப்பறிக் கொள்ளையிட்டு) வந்த அநாகரிகராவர். கொடிய பார்வையையும் பேயைப் போன்ற தோற்றத்தையும் உடைய இவர்கள் பெரிய வில்லைச் சுமந்து திரிந்தனர். குன்றங்களின்மீது வாழ்ந்துவந்தனர். எருதைக் கொன்று நல்ல கொழுப்புள்ள இறைச்சியை நெருப்பிலிட்டுச் சுட்டுத் தின்றனர். பின்னர், தாகம் தீர்க்கத் தோப்பிக்கள்ளைக் குடித்தனர். உண்டபின் இவ் வடுகர்கள் கையையும் வாயையும் கழுவுவதில்லை. விட்டுவிட்டுக் கூவும் குடுமியுடைய கோட்டானின் குரலுக்கு இடையில், வெண்கடப்ப மரங்களுள்ள சிற்றூர்ப் பாக்கத்தில் இவர்கள் களித்துக் கூத்தாடினர். இவ்வாறெல்லாம் மாமூலனார் அவ் வடுகரைப் படம்பிடித்துக் காட்டுவார்.* கொய்த தழைகளுடன் வைகறையில் பூத்த காட்டுமல்லிகையைச் சூடிப் பகைவர் பிடித்துச்சென்ற ஆநிரைகளை மடக்கிப் போரிட்டுப் பிடித்து வந்து, நாள்பட்ட கள்ளை விடியற்காலையில் ஊற்றிப் பங்கிட்டு, வெள்ளிய நிணச்சோற்றை அவர்கள் உண்டனர்.[$]

இவ் வடுக அநாகரிகர்கள் செந்தமிழர் அல்லர். வேங்கடத்துக்கு அப்பால் வாழ்ந்துவந்த இவர்கள் கொடுந்தமிழ் மொழியினர்.

"......................வேங்கடத்து உம்பர்
மொழிபெயர் தேஎத்தது ஆயினும்...."[3]

என்பதைப் போன்ற மிகத் தெளிவான குறிப்புகளை அகநானூற்றில் காணலாம்.

---

* "இன்சிலை எழிலேறு கெண்டிப் புரைய
நிணம்பொதி விழுத்தடி நெறுப்பின் வைத்துஎடுத்து
அணங்கரு மரபின் பேஎய் போல
விளரூன் தின்ற வேட்கை நீங்கத்
துகளற விளைந்த தோப்பி பருகிக்
குலாஅ வல்வில் கொடுநோக்கு ஆடவர்
புலாஅல் கையர் பூசா வாயர்
ஒராஅ உறுட்டும் குடுமிக் குராலொடு
மராஅஞ் சீறூர் மருங்கில் தூங்கும்
செந்நுதல் யானை வேங்கடத் தஉீஇ"[1]

"கொய்குழை அதிரல் வைகுபுலர் அலரி
சுரிஇரும் பித்தை சுரும்புபடச் சூடி
இகல்முனைத் தரீஇய ஏறுடைப் பெருநிரை
நனைமுதிர் நறவின் நாட்பலி கொடுக்கும்
வால்நிணப் புகவின் வடுகர் தேஎத்து"[2]

www.tamilarangam.net



கல்வியறிவில்லாத இவ் வடுகர்கள், ஓயாமல் தொனதொன வெனப் பேசுவர்.* 'போர்த்தொழில் கற்றவரும், யானைகளுடையவரும், புறப்போர் புரிவதில் வல்லவருமான தொண்டைநாட்டவருக்குச் சொந்தமானதும், கூட்டங்கூட்டமாய் முகில்கள் தவழும் ஏறற்கரிய உச்சியினின்று வீழும் வெள்ளருவிகளை உடையதுமான வேங்கட மலைக்கு அப்பால் உள்ளது இவ் வடுகரின் நாடு.'[$] நெருப்பைக் கக்கித் திரியும் ஞாயிறு, தன் நிழலையே தோண்டி உண்ணும் செல்லற்கரிய இடம் வடுகரின் நாடு. கன்றின் தோலால் செய்த விற்கூடுகளுடன் சினம்மிக்க நாய்களையுமுடைய வடுகர்கள் எறியும் அம்பை எதிர் கொள்ள வேண்டிய அச்சம் மிகுந்தது வடுகர்நாட்டுக்குச் செல்லும் வழி.[@] வடுகரின் நாட்டைப்பற்றி அகநானூறு இவ்வாறெல்லாம் கூறு கின்றது.

இவ் வடுகர்கள் என்றும் வேட்டைநாய்களுடன் காணப்பட்டனர் என்பதை "கதநாய் வடுகர்" எனத் திரும்பத் திரும்ப வரும் இலக்கியக் குறிப்பு காட்டும். இவ் வடுகரேதான், கி. பி. 14ஆம் நூற்றாண்டு முதல் கம்பளத்து (கம்பிளிய) நாயக்கராகத் தென்படுவர். கம்பளித்தேவன் என்பவனால் நிறுவப்பட்ட கம்பளிய நாட்டில் இன்றைய அனந்தபூர், சித்திர துருகம், சிவமுகம், இராய்ச்சூர், தாரவாடு, பெல்லாரி ஆகிய கன்னடத் தெலுங்குப் பகுதிகள் அடங்கியிருந்தன.[7] கம்பளத்து நாயக்கர்கள் வடக்கத்திய முசுலிம்களின் படையெடுப்புகளின் போதும், விசயநகரப் படையெடுப்புகளின் போதும், கூலிப்படைஞராக இருந்தனர்.

ஓரிடத்தில் குடியேற வேண்டுமாயின், வடுகர்கள் என்றுமே ஒரு கதை விடுவர்! வடுக வந்தேறி ஒருவனின் வேட்டைநாய் ஒரு காட்டு முயலைத் துரத்தியதாம். அஞ்சி ஓடிய அம் முயல் ஓரிடத்தில் அந் நாய்க்கு எதிராகத் திரும்பி நாயையே விரட்டியதாம்! அதனால், அது வீரஞ்செறிந்த மண் எனக் குறிப்பறிந்து கொண்ட அவ் வடுகன், இனி அங்கேயே குடியேறுவது என முடிவு செய்தானாம்!

சுந்தரர் காலம் வரையிலும்கூட வடுகரில் பலர் வழிப்பறி செய்துவந்தனர். 'ஆறலைத்து வழிப்பறி செய்துவரும் வடுகர் வாழும் முருகன்பூண்டி என்னும் நகரில் எதற்காகக் கோயில் கொண்டாய்?' என்னும் பொருளில்,

---

* "கல்லா நீண்மொழிக் கதநாய் வடுகர்"[4]

$ "வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர்
இனமழை தவழும் ஏற்றரு நெடுங்கோட்டு
ஓங்குவெள் ளருவி வேங்கடத்து உம்பர்க்"[5]

@ "நிழல்தூன்று உண்ட நிரம்பா நீளிடைக்
கற்றுரிக் குடம்பைக் கதநாய் வடுகர்
விற்சினம் தணிந்த வெருவரு கவலைக்"[6]

www.tamilarangam.net



"கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர் விரவ லாமை சொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண் டாற லைக்குமிடம்
முடுகு நாறிய வடுகர் வாழ்முரு கன்பூண்டி மாநகர்வாய்
இடுகு நுண்ணிடை மங்கை தன்னொடும் எத்துக்
கிங்கிருந் தீர்எம்பி ரானீரே?"[8]

எனச் சுந்தரர் சிவபெருமானை நோக்கிப் பாடியுள்ளது அதையே காட்டும்.

## எல்லையில் தொல்லை!

தம்மை எதிர்த்தவரை எல்லாம் அழித்துத் திறைபெற்று வந்த தமிழ் மூவேந்தர்களுக்குத் தமிழகத்தின் எல்லைகளைக் காப்பது பெரும்பாடாக இருந்தது. வேற்றுமொழி அநாகரிகரான கீழை வடுகர்கள் தமிழகத்தின் வடவெல்லையான வேங்கடத்தையும், மேலைவடுகரான கோசர்கள் அதன் மேற்கு எல்லையையும் ஓயா மல் அலைக்கழித்துவந்தனர்.

"வில்லலைத்து உண்ணும் வல்லாண் வாழ்க்கைத்
தமிழ்கெழு மூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த பன்மலை இறந்தே"[9]

என்னும் அகநானூற்று வரி அதைக் குறிப்பால் உணர்த்தும்.

தமிழகத்தின் வடஎல்லையைக் கூறும் யாப்பிலக்கண நூலை இயற்றிய காக்கைப்பாடினியார் "வடதிசை மருங்கின் வடுகு வரம் பாக"[10] என்று உரைக்கின்றார். இதன்படி, தமிழகத்தின் வடக்கு எல்லையாக இருந்தது வடுகநாடே ஆகும்.

குறும்பு என்பது காட்டரணைக் குறிக்கும். இக் காட்டரணைக் காத்துவந்தவரே குறும்பராவர். தமிழகத்தின் வடவெல்லையில் பல குறும்பர்நாடுகள் இருந்தன. குறும்பரில் பெரும்பாலோர் முல்லை நிலத்து இடையர் தலைவராக இருந்தனர். அசோகனின் கல்வெட்டில் வரும் "ஹிடராசாக்கள்" என்போர் எல்லாம் இடையர்குடி அரசர் களையே — முல்லைநிலத் தலைவர்களையே — குறிக்கும் என்பர்.[11]

மழை இல்லாது பயிர்கள் பட்டுக் கொளுத்தும் வெயிலில் தீய்ந்து கொண்டிருந்தன. 'உலகமே அழியும் ஊழிக்காலமோ?' என அஞ்சி, மக்கள் இடம்பெயரத் தொடங்கிய நிலையில் வாழ்க்கையே கொடி தாக இருந்தது. உயிரினங்கள் எல்லாம் கடும்கோடையின் வெப்பத் தால் மடியத் தொடங்கின. கல்லும் முள்ளுமான ஊர்களில் வாழ்ந்து வந்த குறும்பர்நாட்டு மறவர்கள் எய்த அம்புக்கு இரையாகி, அக் கொடிய சுரத்தில் ஆட்கள் மடிந்து கிடப்பர். அவர்களின் உடம்பி லிருந்து கொட்டிய குருதி பார்ப்பதற்குச் சிவந்த அலரிப்பூ மாலையைச் சூடியதைப்போல் தோன்றும். அவ்வாறு செத்துக் கிடப்போரின் கண் களைக் கொத்திச் சென்று, ஓங்கி வளர்ந்த இலையுதிர்ந்த யா மரத்தின் மேலிருந்த தன் குஞ்சுகளுக்குக் கழுகு ஊட்டும். இது போன்ற கொடிய

www.tamilarangam.net



காட்சிகளையுடைய காடுகளைக் கொண்டதாக அக் குறும்பர்நாடு இருந்தது.[12] இவ்வாறு அடிபட்டுச் செத்துக்கிடந்தோர் வம்ப வடுகராக இருந்திருக்கலாம்.

பாலைத்திணைப் பாடல்களாக வரும் கழக இலக்கியப் பாடல்கள் தலைவன் தன் தலைவியைவிட்டுச் சுட்டெரிக்கும் கொடிய பாலைநிலத்தின் ஊடே பிரிந்து சென்றதைப் பற்றியனவாகும். பாலை நிலத்திலான தலைவனின் பயணத்தைப்பற்றிக் கூறும் பாடல்கள் எல்லாமே தலைவன் பொருள்வேண்டிச் சென்றதைப் பற்றியன அல்ல. இவற்றில் பல வேங்கடமலைக்கு அப்பாலிருந்த கடும் சுரங்களில் வாழ்ந்துவந்த வடுகர் முதலான அநாகரிகரை அடக்கியொடுக்குவதற்காக நடந்த படைச்செலவுகளைப் பற்றியனவாகவும் இருக்க வேண்டும்.

## காவல்நாடுகள்

வடுக அநாகரிகரைக் கீழைவடுகர் என்றும், மேலைவடுகர் என்றும் பிரித்துப் பார்க்க வேண்டும். கீழைவடுகர்கள் தொண்டை நாட்டுக்கு அப்பால் இருந்தனர். வேங்கடத்தை ஆண்டுவந்த புல்லியின் நாட்டை அடுத்திருந்த மக்கள் எளிதில் புகவியலாக் காட்டரணைக் கடந்தே கீழைவடுகர் நாட்டிற்குச் செல்ல வேண்டியிருந்தது. கடிய ஒலியுடைய பம்பையையும் சினமிக்க நாயையுமுடைய வடுகர் வாழும் நெடிய பெருங்குன்றங்களைக் கடந்துதான் வடக்கே செல்ல வேண்டியிருந்தது.*

ஒலிக்கும் வீரக்கழலணிந்த புல்லியின் வேங்கடமலையைச் சார்ந்த செல்லற்கரிய காட்டைக் கடந்து வலிய வில்லில் தொடுக்க வல்ல அம்புகளையுடைய கீழைவடுகர்கள், கள்ளுண்டு மகிழ்ந்து செருக்குடன் ஆரவாரம் செய்யும் வேற்றுமொழி வழங்கும் தேயத்தைத் தமிழர்கள் கடந்துசெல்ல வேண்டியிருந்தது.$

வழிப்போக்கரின் பசியைத் தீர்ப்பதற்காகப் பருத்த தோள்களையும் நீண்ட செவிகளையும் உடைய தாய்மார்கள், புதுக் கொல்லையில் விளைந்த வரகின் தட்டைகள் பொலிமாடுகளால் மிதிக்கப் படுகையில் உதிர்ந்த வரகை எடுத்துக் காயவைத்தனர். பண்ணைக் கீரையின் வெள்ளைநிறப் பழத்திலுள்ள அரிசியைப் போன்றான திரிமரம் தேய்ந்த சுளகுமுறத்தினால் புடைத்த வெள்ளரிசியைக் கொண்டு

---

* "கடுங்குரல் பம்பைக் கதநாய் வடுகர்
நெடும்பெருங் குன்றம் நீந்தி......"[13]

$ "புடையலம் கழற்கால் புல்லி குன்றத்து
நடைஅருங் கானம் விலங்கி நோன்சிலைத்
தொடைஅமை பகழித் துவன்றுநிலை வடுகர்
பிழிஆர் மகிழர் கலிசிறந்து ஆர்க்கும்
மொழிபெயர் தேஎம் இறந்தனர் ஆயினும்"[14]

www.tamilarangam.net



இடையர்ப் பெண்கள் பொங்கிய சோற்றைப் பசும்பாலோடு பங்கிட்டு அளித்தனர். இத்தகைய காட்சிச் சிறப்புடைய புல்லியின் வேங்கட மலையின் உயர்ந்த பாறைக்குன்றுகள் பலவற்றைக் கடந்து தமிழர்கள் வேற்றுநாட்டிற்குச் சென்று வந்தனர். கள்வர் கோமானான அப் புல்லியின் வேங்கடமலையில், பாலைநில மக்களுடன் முல்லை நில மக்களான கோவலரும் வாழ்ந்து வந்தனர்.@

முல்லைநிலத் தெய்வமான மாயோன் அந்தத் திருவேங்கடத்தில் பெரிய கோயில் கொண்டான். புல்லியின் காலத்தில் பொதினி(பழனி) மலையை நெடுவேள் ஆவி ஆண்டுவந்தான்.

பழங்கொல்லைகளான மேட்டு நிலத்தைச் சுற்றியிருந்த காடு களை இப் புல்லியின் நாட்டில் மக்கள் சுட்டெரித்தனர்.# காட்டை அழித்து நாடாக்கிய செய்தியையே இது புலப்படுத்துகின்றது.

வலிய விற்கள் இடையறாது எய்த அம்புகளைப் பகைவரின் மார்பில் பாய்ச்சுகின்ற இளைஞர் பலருடன் சென்று, தான் கொண்டு வந்த யானைத் தந்தங்களையும் கள்ளையும் விற்றுப் பண்டமாற்றாக நெல்லைக் கொண்டுவந்து, தம் நாளோலக்கத்தைச் சிறப்பித்துவந் தவன் வேங்கடமலையின் தலைவனான புல்லி. வீரக்கழல் அணிந்த

---

@ "கோடுயர் பிறங்கற் குன்றுபல நீந்தி
வேறுபுலம் படர்ந்த வினைதரல் உள்ளத்து
ஆறுசெல் வம்பலர் காய்பசி தீரிய
இதைச்சுவற் கலித்த ஈர்இலை நெடுந்தோட்டுக்
கவைக்கதிர் வரகின் கால்தொகு பொங்கழி
கவட்டடிப் பொருத பல்சினை உதிர்வை
அகன்கண் பாறைச் செல்வயின் தெறீ இ
வரியணி பணைத்தோள் வார்செவித் தன்னையர்
பண்ணை வெண்பழத்து அரிசி ஏய்ப்பச்
சுழல்மரம் சொலித்த சுளகுஅலை வெண்காழ்
தொடிமாண் உலக்கை ஊழின் போக்கி
உரல்முகம் காட்டிய சுரைநிறை கொள்ளை
ஆங்கண் இருஞ்சுனை நீரொடு முகவாக்
களிபடு குழிசிக் கல்லடுப்பு ஏற்றி
இணர்ததை கடுக்கை சுண்டிய தாதிற்
குடவர் புழுக்கிய பொங்கவிழ்ப் புன்கம்
மதர்வை நல்லான் பாலொடு பகுக்கும்
நிரைபல குழீ இய நெடுமொழிப் புல்லி
தேன்தூங்கு உயர்வரை நல்நாட்டு உம்பர்
வேங்கடம் இறந்தனர் ஆயினும்....."[15]

# "பொய்யா நல்லிசை மாவண் புல்லி
கவைக்கதிர் வரகின் யாணர் பைந்தாள்
முதைச்சுவல் மூழ்கிய கான்சுடு குரூஉப்புகை
அருவித் துவலையொடு மயங்கும்
பெருவரை அத்தம் இயங்கி யோரே"[16]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருவடியுள்ள அவன், வள்ளன்மை மிக்கவன். மழவரின் நாடாகிய அதிகனின் நாட்டை வென்று, திறை பெற்றவன் அவன். இவ்வாறு உரைக்கும் அகநானூற்றுப் பாடல், அப் புல்லியைக் கள்வர் கோமான் என்கிறது.*

அதே அகநானூறு 'தென்னன்' என்னும் இன்னொரு கள்வர் தலைவனைப் பற்றியும் குறிப்பிடுகின்றது. இத் தென்னனின் மூதூர், எறும்புப்புற்றின் உட்புறத்தைப்போலப் பின்னிக்கிடந்த வழிகளை உடையது. இளம்வீரர்களுக்கு அவன் தலைவனானவன். குறும்பரண்கள் பலவற்றை அழித்துத் தன்னை எதிர்த்தோரை எல்லாம் அழித்தவன் அக் கள்வர் பெருமகன்.$

பாண்டிய அரசின் வீழ்ச்சிக்கு இக் கள்வரே காரணம் எனப் புதிய விளக்கம் தரப்படுகின்றது.[19] இந் நிலையில், பாண்டியநாட்டில் விளங்கிய கள்ளர்குடியினருக்கும் வேங்கடமலையை ஆண்ட புல்லிக்கும் இடையிலான உறவு, ஆய்வுக்குரிய ஒரு கேள்வியாகின்றது.

புலிக்காடே புல்லியின் தலைநகரம் என்பாரும் உண்டு.[20] புல்லிக்கு முன்னால் ஆதனுங்கன்[@] என்னும் குறுநிலமன்னன் வேங்கடமலைக்குத் தலைவனாக இருந்தான்.

---

* "................................................ தாழா அது
உரும்எனச் சிலைக்கும் ஊக்கமொடு பைங்கால்
வரிமாண் நோன்ஞாண் வன்சிலைக் கொளீஇ
அறுநிறத்து அழுத்திய அம்பினர் பலருடன்
அண்ணல் யானை வெண்கோடு கொண்டு
நறவுநொடை நெல்லின் நாள்மகிழ் அயரும்
கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம் பெறினும்
..............................................
முழவுறழ் திணிதோள் நெடுவேள் ஆவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி அன்னநின்"[17]


$ "..............................................தெனாஅது
வெல்போர்க் கவுரியர் நல்நாட்டு உள்ளதை
மண்கொள் புற்றத்து அருப்புஉழை திறப்பின்
ஆகொள் மூதூர்க் கள்வர் பெருமகன்
ஏவல் இளையர் தலைவன் மேவார்
அருங்குறும்பு எறிந்த ஆற்றலொடு பருந்துபடப்
பல்செருக் கடந்த செல்லுறழ் தடக்கைக்
கெடாஅ நல்லிசைத் தென்னன்........"[18]

@ "வேங்கடமலையை ஆண்டுவந்த ஆதன் நுங்கனின் வழிவந்தவர்கள் பிற்காலத்தில் நுங்கன் என்னும் பெயருடன் இன்று தெலுங்குநாட்டில் ஒரு பகுதியில் ஆண்டுவந்தனர். காலப்போக்கில் இவர்கள் தெலுங்கர்களாகவே மாறிவிட்டனர். கி. பி. 13ஆம் நூற்றாண்டில் அனபோதி நாயுடு என்பவுன் தன்னுடைய சிற்றப்பனான பாரி நாயுடுவுக்கும் சிற்றன்னையான நுங்கன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






வரைபடம் 1

www.tamilarangam.net



வடக்கே நல்ல வேலுடனுள்ள பாணன் என்பானின் நாடு இருந்தது. பொட்டல்காடான அவனது வெம்பாலை நிலத்து வழிகள் மிகவும் கொடியன. நெடிய பாலைநிலத்தின் ஊடே கொளுத்தும் வெயிலில் செல்வோரைக் கொல்வதற்காக யானை வழிமேல் விழி வைத்துப் பார்த்தபடி ஒதுங்கியிருக்கும் சோலைகள் உள்ள காட்டகம் அந் நாட்டில் இருந்தது.* இவ்வாறு வரும் அகநானூற்றுப் பாடலில் மாமூலனார் குறிப்பிடும் அதியன் என்பான், வடுகனான மிஞிலியால் கொல்லப்பட்டவன். இதில் வரும் பாணன் என்பான் தமிழகத்தின் வடவெல்லையில் இருந்த காவல்நாட்டுக்குத் தலைவனாக இருந்திருக்கலாம்.

பாணன் என்பவனோடு மற்போர் புரிந்த ஆரியப்பொருநனின் தோள்கள் அப் பாணனின் பிடிக்குள் அகப்பட்டு அவன் இறந்துபோனதைக் கண்டு அவனது நண்பனான கணையன் நாணமுற்றான்.$ இப் பாணன் பாடுநர் வகுப்பினனாக இருந்திருக்கலாம். ஆனால், மாவலி மரபினரான 'வாணர்' என்போர் வடுகராவர்.

## வஞ்சகக் கோசர்
## வாய்மொழிக் கோசராம்!

கோசர் என்போர் மேலைவடுகர் ஆவர். கோவா அருகிலுள்ள இன்றைய கோலாப்பூரில் இவர்களின் தோற்றுவாயைக் காண்பாருண்டு.[23] இரட்டப்பாடி என்னும் நாடுதான் இராட்டிரக்கூடர் எனச்

சானிக்கும் நலமுண்டாக வேண்டிக் கல்லூர்க் கங்காதரேசுரர்க்கு எண்ணெய் ஆட்டும் செக்கைக் கொடையாக அளித்தான் (Nel. Ins. Darsi 33). அவனுடைய தந்தையார் நுங்கதேவ மகாராயர் என்றும், அசனத்தேவரின் மகனின் பெயர் நுங்கராயன் என்றும், கி. பி. 14ஆம் நூற்றாண்டில் அசன தேவமகாராயர் காலத்தில் வெட்டிப்பட்ட கல்வெட்டொன்று கூறுகின்றது. வீரநுங்கன் என்னும் வேந்தன் ஒருவன் கி. பி. 14ஆம் நூற்றாண்டில் குண்டூர் மாவட்டத்திலுள்ள ஒங்கோல் வட்டத்தைச் சேர்ந்த கனுபார்த்திப் பகுதியில் ஆண்டுவந்தான் (Nel. Ins. O55, p 988-90). அன்னவேமன் என்னும் கொண்டவீடு ரெட்டி வேந்தன், தன் உடன்பிறந்தாளும் நல்லன் நுங்கன் என்னும் அரசனின் பட்டத்தரசியுமான வேமசானிக்கு நடுப்பூரான வேமாபுரத்தைப் பிரமதாயமாகச் செப்பேட்டு வழியாக வழங்கினான். (Ep. Ind. Vol III, pp 286-92).[21]

* "...........................................................வடா அது
நல்வேற் பாணன் நன்னாட்டு உள்ளதை
வாட்கண் வானத்து என்றூழ் நீள்இடை
ஆட்கொல் யானை அதர்பார்த்து அல்கும்"[22]

$ "மல்லடு மார்பின் வலியுற வறுத்தி
எதிர்தலைக் கொண்ட ஆரியப் பொருநன்
நிறைத்திரண் முழவுத்தோள் கையகத் தொழிந்த
திறன்வேறு கிடக்கை நோக்கி நற்போர்க்
கணையன் நாணி யாங்கு......."[23]

www.tamilarangam.net



சொல்லிக்கொண்ட இரெட்டிகளின் தாயகமாகும். மேலைவடுகரில் ஒரு பிரிவினரான இவர்களின் தாய்மொழி முதலில் வடுகமாகவே இருந்தது. பழைய பம்பாய் மாகாணத்தின் தென்பகுதியும், நிசாம் அரசின் மேற்குப்பகுதியும் அடங்கிய மேலைச்சளுக்கியநாடே "இரட்டப்பாடி ஏழரை இலக்கம்" எனப்பட்டது.[25] 'ராட்டிர' (Rashtra) என்னும் பாகத(பிராகிருத)ச் சொல்லிலிருந்தே 'ரட்ட' (ratta) என்னும் பெயர்ச்சொல் வந்ததாகச் சிலர் திரித்துப் புரட்டுவர். உள்ளபடியே, 'ரட்ட' என்னும் பெயர், 'இரட்டப்பாடி நாட்டினர்' எனப் பொருள் படும் இரட்டர் என்னும் பெயரின் திரிபேயாகும்.* இந்த இரட்டர்கள் மராட்டியருக்கும் முன்னோர்களாவர். 'இரட்டர்' என்பதே 'மாரட்டர்' என்றானது. இம் மாரட்டரே பின்னாளில் மராட்டியர் அல்லது மகாராட்டிரர் ஆயினர். இதனால், கோசர்களில் வடக்கத் தியக் கிளையினரே மராத்தியர் ஆவர்.

தென்மராட்டியம் என்னும் பெரும் நிலப்பரப்பில் மராத்தி மொழியில் வெட்டப்பட்ட மிகப் பழைய கல்வெட்டு ஒன்றுகூட ஐரோப்பியர்களால் கண்டுபிடிக்கப்படவில்லை. பழைய கல்வெட்டு கள் எனச் சொல்லும் அளவுக்கு வடகருநாடக மாவட்டத்திலுள்ள வனவாசியில் ஒன்று என்றும், மலவல்லியில் இன்னொன்று என்றும் இரண்டு மூன்று பாகத (பிராகிருத) மொழிக் கல்வெட்டுகள் மட்டுமே அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டன. தென்மராட்டியத்தில் கண்டு பிடிக்கப்பட்ட பழைய கல்வெட்டுகள் யாவும் தூய சங்கதத்திலோ (சமற்கிருதத்திலோ) தூய கன்னடத்திலோ வெட்டப்பட்ட கல்வெட்டு களேயாகும். வடுகின் வடிவமாகிய கன்னடமே இப் பகுதிகளில் மிகப் பரவலாக வழங்கிவந்தது என்பதையே இது காட்டும்.$ வடுக

---

* "And Burnell was apparently inclined to look on them as being of Drâvidian origin: for, he gave the word râshtra as a mythological perversion of râtta, which he held to be equivalent to the Kanarese and Telugu raddi or reddi; and the latter word is explained in the dictionaries as denoting 'the caste of aboriginal Telugu farmers,' or as being a title annexed to the proper names of that caste, and also as meaning 'the head man of a village.'[226]

$ "But this term [Maharashtra], meaning literally 'the great country,' does not inherently imply any of the racial and linguistic peculiarities which are now naturally attached to the terms Marâtha or Marâthi, derived from it. In the whole area of the so called Southern Marâtha Country, not a single Marâthi inscription has been discovered, of a greater age than two or three centuries. With the exception that two Prakrit records have been obtained at Banawâsi in North Kanara and 'Malavali' in Mysore and that a few Prâkrit words occur here and there in other records, the inscriptions are all either in pure Sanskrit or pure Kanarese, or in the two langauges combined. This fact speaks of itself, as what the vernacular of the country was in early times. In the present day, the people and the language of the British districts are essentially Kanarese; and the Kanarese people and language have been displaced, to a certain extent,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மொழியின் ஒரு மொழிக்கிளை பெருமளவில் பாகத, சங்கத மொழி மயமாகியதாலேயே பின்னாளில் மராத்தி மொழி வந்தது என்பதையே இது காட்டும்.

இக்காலக் கன்னடருக்கும் தெலுங்கருக்கும் மராத்தியருக்கும் ஆகிய பொதுவான முன்னோரே வடுகர் ஆவர். முரட்டு இனத்தவரான அரை அநாகரிகக் கோசர்கள், பல்வேறு அரசுகளுக்குக் கூலிப் படைஞராகப் பணிபுரிந்துவந்தனர். இவர்களில் சிலர் வணிகமும் செய்துவந்தனராம்.

தங்களைப் பணியில் அமர்த்திக்கொள்பவர்க்கு எதிராக எப்போதும் கலகம் செய்யவோ, அவர்களைக் காட்டிக்கொடுக்கவோ, மாட்டோம் என்று அவர்கள் தந்த வாய்மொழியை வைத்தே பல அரசுகள் இவர்களைக் கூலிப்படைஞராக அமர்த்திக்கொண்டன. இக் கோசர்களை "வாய்மொழிக் கோசர்" என்றனர்.[28] சொன்ன சொல் தட்டாது நம்பிக்கையானவர் என்பதால் 'வாய்மொழிக் கோசர்' எனப் பட்ட இவர்கள், போர் செய்வதில் வல்லவர்கள்.

'வாய்மொழிக் கோசர்' எனப்பட்ட இந்தக் கோசர்கள், காலப் போக்கில், சூழ்ச்சி வழியில் துளுநாட்டைப் பிடித்துத் தம்வயமாக்கிக் கொண்டனர். கூலிப்படைப் பணி செய்யபோன இவர்கள் பிற அரசு களையும்கூட அவ்வாறே அடுத்தடுத்து ஒவ்வொன்றாய்க் கவர்ந்து கொண்டு, புதிய ஆண்டைகளாயினர். இந்தக் கோசர்கள் இரண்டகம் செய்து கைப்பற்றிய நாடுகளைப் பற்றிய கதைகளில் செங்கண் மாத்துவேள் நன்னனின் கதையே ஒரு தனிக்கதை. ஆயினும், கோசரின் வஞ்சகத்தின் பாங்கையும் போங்கையும் விளக்கவல்ல பொதுக் கதை.

## ஓண்ட வந்தோர் ஆளவந்தாராயினர்!

துலாக்கோலைப் போல நடுவுநிலையான பேச்சுடையவன் நன்னன். குறும்பர்களின் காட்டரணகளை அழித்துப் போரில் அவர்களை வென்று தன்னைப் பாடிச் சென்றோர்க்கு எல்லாம் பெரிய அணிமணிகள் முதலான செல்வங்களை எல்லாம் எதையும் பாராது பரிசிலாகக் கொடுத்துவந்தவன் அந் நன்னன். ஏழிற்குன்றமான தன் எல்லையில் அவ்வப்போது அரட்டிவந்த குறும்பரை அந் நன்னன் அடக்கினான் என மாமூலனார் சொல்கின்றார்.

'ஊக்கம் மிக்க நெஞ்சுடன் குறும்பரின் போர்முனையை அழித்து, அவர்களின் அரிய காட்டரணகளையும் அழித்து, அவனைப் பாடிச் சென்றோர்க்கு எல்லாம் விலையுயர்ந்த அணிகள் முதலான

by the Marâthi people and language in the Native States, only because those Sates were established by the aggression of Marâthas from the north, whose local influence proved to be greater than that of the native rulers whom they dispossessed"[27]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செல்வங்களை வழங்கும் நன்னனின் நாட்டிலுள்ள ஏழிற்குன்றத்தில், அழகிய நிறத்துடன் செவ்விய கரிய அடியையுடைய வேங்கைமரத்தின் நெருப்பைப் போன்ற பூக்களை உணவாக உண்டு நிற்கும் ஆண்யானை வரிவரியாயுள்ள தன் நெற்றியில் வைத்துள்ள துதிக்கை, மலையில் ஊர்ந்து செல்லும் பாம்பைப் போலக் காட்சி தரும். தமிழ் அல்லாத மொழி வழங்கும் இத்தகைய நாட்டிலுள்ள சுரத்தினூடே கடந்து சென்றார் என் தலைவர்' எனத் தலைவி சொல்வதாக வரும் மாமூலனாரின் அகநானூற்றுப் பாடலிலேயே நன்னன் குறும்பரை அடக்கிய அச் செய்தி சொல்லப்படுகின்றது.*

தொண்டைமண்டலத்திலிருந்த இருபத்துநான்கு கோட்டங்களில் பல்குன்றக் கோட்டமும் ஒன்று. இப் பகுதியில் குன்றுகள் மிக்கிருந்தமையால் இப் பெயர் வந்தது. 'பல்குன்றக் கோட்டத்துச் சிலைநாட்டுத் திருவேங்கடம்' என்னும் கல்வெட்டுத் தரும் குறிப்பால், தமிழகத்தின் வடவெல்லையான வேங்கடமலை இக் கோட்டத்தில் இருந்தது புலப்படும். (வேங்கடமலையைப் புல்லி ஆண்டுவந்ததாக இன்னொரு அகநானூற்றுப் பாடலில் மாமூலனாரே கூறுவார்).[30] பல்குன்றக்கோட்டத்துச் செங்கணமாத்துவேள் நன்னன் என்னும் வேளிர்தலைவன் இந்தக் கோட்டத்தை ஆண்டுவந்தான். இவனை மலைபடுகடாம் பாடுகின்றது. இந் நன்னனின் தலைநகரம் செங்கண்மா என்னும் நகரமாகும். இது திருவண்ணாமலைக்கு மேற்கே உள்ளது. இக் காலத்தில் அதைச் செங்கணமா என்றும் செங்கமா என்றும் (திருப்பத்தூர் செங்கம்?) குறிப்பிடுவர். இது பல்குன்றக் கோட்டம் சேயாற்றுப் பள்ளத்தாக்கில் உள்ளது. இப் பல்குன்றக் கோட்டத்தில் திருவண்ணாமலை, செங்கம், காப்பலூர், எண்ணாயிரம், மேல்சேவூர், பாராசூர், தச்சூர், மெய்யூர், சிங்கப்பொருநவளம், மிமிலி ஆகிய நாடுகள் அடங்குவன.[31] இவற்றில் மிமிலி என்னும் நாட்டின் பெயர் நன்னனின் வடுகக் கூலிப்படைத் தலைவனாயிருந்த மிஞிலி என்பானின் பெயர்த்திரிபு ஆகும். நன்னனின் பல்குன்றக் கோட்டம் இதுவே என இப் பெயரும் கோடிட்டுக் காட்டும்.

---

* "............................................. ஞெமன்ன்
தெரிகோல் அன்ன செயிர்தீர் செம்மொழி
உலைந்த ஒக்கல் பாடுநர் செலினே
உரன்மலி உள்ளமொடு முனைபாழ் ஆக
அருங்குறும்பு எறிந்த பெருங்கல வெறுக்கை
சூழாது சுரக்கும் நன்னன் நல்நாட்டு
ஏழிற் குன்றத்துக் கவாஅன் கேழ்கொளத்
திருந்துஅரை நிவந்த கருங்கால் வேங்கை
எரிமருள் கவளம் மாந்திக் களிறுதன்
வரிநுதல் வைத்த வலிதேம்பு தடக்கை
கல்லூர் பாம்பின் தோன்றும்
சொல்பெயர் தேஎத்த சுரன்இறந் தோரே"[29]

www.tamilarangam.net



இந் நன்னன், பாழி, பாரம், பிரம்பு, நவிரம், ஏழிற்குன்றம் ஆகிய மலைகளை ஆண்டுவந்தான். வடவார்க்காட்டின் சவ்வாது மலையிலுள்ள மலைத்தொடர்களில் ஒன்றே இப் பாழி மலை.

"பாழி ஒபிளியான திருவாஞ்சேரி"[32]

என்னும் கல்வெட்டு, இப் பாழி செங்கற்பட்டு வட்டத்தில் இருந்ததாகச் சொல்லும். ஏழிற்குன்றத்தையும் நன்னன் ஆண்டுவந்தான். ஏழுநாடுகளைக் கொண்ட வேங்கடம் என்னும் தொண்டை மண்டலக் கோட்டம்தான் ஏழிற்குன்றமாயின், இந் நன்னனின் வடக்கு எல்லையாக வேங்கடம் இருந்தது என்றாகும். வேங்கடக் கோட்டத்தில், திருப்பதி, திருச்சானூர், சந்திரகிரி, திருக்காளத்தி, குடகரை, தொண்டைமான், பொத்தப்பி ஆகிய நாடுகள் இருந்தன.[33]

அடர்ந்த அழகிய பிடரிமயிருடன் விரைந்தோடும் நல்ல குதிரைப் படையையுடைய பிண்டன் முதலான பகையரசரைப் போரிட்டு விரட்டிட வேலேந்தியவன் அந் நன்னன்.[\$] நன்னனின் பாழிப்பறம்பில் அச்சம்தரும் பக்கமலையுண்டு. இதனால் வேளிர் குடி மக்கள் தங்களின் அரிய செல்வங்களையும் அணிகலன்களையும் இப் பாழியில் அமைந்த கோட்டையில் மறைத்து வைத்தனர்.[@] வேளிர்குடியின் இந்த அரிய செல்வங்களைப் பாதுகாப்பதற்கென வாய்மை மிக்கோர் என நம்பப்பட்ட வந்தேறிக் கோசர்களை நன்னன் கூலிப்படையாக அமர்த்தினான். இவ் வந்தேறிக் கூலிப்படைக்கு மிஞிலி என்பவன் தலைவனாக இருந்தான். பேய்க்கூடு முதலான கருவிகளைக் கொண்டு அச் செல்வங்களை அவன் காத்துவந்தான்.

கொங்கர்நாட்டைக் கைப்பற்றுவதற்குத் தன் படைத்தலைவனான அதியனைப் பசும்பூண் பாண்டியன் ஏவினான். முறை கெடாது இயற்றிய பெருஞ்செல்வத்தையும் யானைப் படையையும் உடைய நன்னனின் பாழியில் உள்ள அச்சந்தரும் பேய்த் தெய்வத்திற்கு அதிகனை வென்று பலியூட்டு நடத்துவேன் என 'வாய்மையுள்ள' ஞிமிலி என்னும் கோசர் தலைவன் அப்போது வஞ்சினம் பேசினான். பறவை இனத்தைக் காக்கும் பெரும் புகழும், வெள்ளம் போன்ற பெரும்படையையும் உடைய அதிகனைப் போரில் வென்று, அத் தமிழரசனைக் கொன்ற க்ளிப்பில் 'ஒள்வாள் அமலை' என்னும் வெறிக்கூத்து ஆடிய அவ் வந்தேறி, பேய்க்கு ஊட்டு நிகழ்த்தினான்.[#]

---

* "........................................ பொற்புடை
விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வேந்தர் ஓட்டிய ஏந்துவேள் நன்னன்"[34]

\$ "அணங்குடை வரைப்பிற் பாழி ஆங்கண்
வேண்முது மாக்கள் வியனகர்க் கரந்த
அருங்கல வெறுக்கையின் ......"[35]

@ "முறையின் வழாஅது ஆற்றிப் பெற்ற
கறையடி யானை நன்னன் பாழி

www.tamilarangam.net



இப் போரில் அதியன் மடிந்ததைக் கண்ட கொங்கர் மகிழ்ச்சி ஆர வாரம் செய்தனர்.

வெற்றிநடை போட விரும்பிய அதிகன், அள்ளன் என்பானைப் பகைவனின் நாட்டை வென்றுவருமாறு பணித்தான். அள்ளன் அவ்வாறே வெற்றியை ஈட்டித் தந்தான் என்னும் மகிழ்ச்சியில் ,அவனுக்கு நாட்டைப் பரிசிலாகத் தந்தவன் அந்த அதியன். மிஞிலி யோடு நடந்த சண்டையில் அந்த அதியன் பட்டு வீழ்ந்த பின்னர், அவனது நாட்டில் நல்லிசை மீட்டும் பெரிய கிணைப்பறையும் இசைக் கப்படாது அடங்கியதாம்.*

வந்தேறிக் கோசனான மிஞிலியை ஏவித் தமிழர் தலைவனான அதிகனைக் கொன்ற நன்னன், பின்னர் அவ் வந்தேறி வடுகரின் சூழ்ச்சியாலேயே வீழ்ந்தான்.

நீண்ட வாழ்வுதரும் கனியை நல்கும் என நம்பப்பட்ட ஒரு மாமரத்தை நன்னன் விரும்பி வளர்த்துவந்தான். நெடுநாள் கழித்து அம் மாமரம் ஈன்ற காய் ஒன்று ஆற்றில் விழுந்தது. அதை ஒரு கோசர் பெண் எடுத்து உண்டாள். இதைக் கேட்டு வெகுண்ட நன்னனுக்கு அப் பெண் செய்த குற்றத்திற்குத் தண்டமாக அப் பெண்ணின் எடைக்கு ஈடான ஒரு பொன் பாவையையும் 81 யானை களையும் கோசர்கள் வழங்க முன்வந்தனர். ஆனால், அவற்றை ஏற்க மறுத்த நன்னன், அப் பெண்ணைக் கொன்றுவிட்டான். இதனால், அந் நன்னனைப் பழிவாங்க வந்தேறிக் கோசர்கள் சூழ்ச்சி செய்தனர். நன்னன் ஊரில் இல்லாத நேரம் பார்த்து, அகுதை என்பானின் தந்தையைப் பாடி அவனிடம் ஒரு யானையைப் பரிசிலாகப் பெற்று வந்த பாடினிகளை அந் நன்னனின் மாமரத்தில் அவர்கள் கட்டச் செய்தனர். அந்த யானை அம் மாமரத்தை வேரோடு பிடுங்கிக் கொண்டு ஊருக்குள் புகுந்தது.

இச் செய்தியை வைத்து, 'நன்னனின் மாமரத்தில் யானையைக் கட்டி, அம் மரத்தை வேரோடு பிடுங்கி ஊருக்குள் புகச் செய்த வஞ்சினம் கொண்ட கோசரின் கொடிய சூழ்ச்சியைப் போன்ற சூழ்ச்சியும் சிறிது வேண்டும்' எனப் பரணர் பாடினார்.

---

ஊட்டறு மரபின் அஞ்சுவரு பேஎய்க்
கூட்டெதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி
புள்ளிற்கு ஏமம் ஆகிய பெரும்பெயர்
வெள்ளத் தானை அதிகற் கொன்றுஉவந்து
ஒள்வாள் அமலை ஆடிய ஞாட்பிற்"[36]

* "ஆடுநடைப் பொலிந்த புகற்சியின் நாடுகோள்
அள்ளனைப் பணித்த அதியன் பின்றை
வள்ளுயிர் மாக்கிணை கண்ணவிந் தாங்கு
மலைகவின் அழிந்த கனைகடற்று அருஞ்சுரம்"[37]

www.tamilarangam.net



"..........................................நன்னன்
நறுமா கொன்று நாட்டிற் போக்கிய
ஒன்று மொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே"[38]

என்னும் பாடல் வரிகள் அதைச் செப்புகின்றன.

அப் பாடினிகளை அகுதையின் தந்தையிடம் செல்லுமாறு ஆற்றுப்படுத்தி அவனிடமிருந்து யானையைப் பரிசிலாகப் பெற வைத்ததே அக் கோசர்கள்தானாம். 'இனிமையும் கடுமையும் கள்ளும் உடைய அகுதையின் தந்தையிடமிருந்து வெள்ளிய முனையுடனான சிறுகோலுடைய பாடல்மகளிர் மடப்பமுள்ள பிடியானையைப் பரிசிலாகப் பெறச் செய்த கோசரின் சூழ்ச்சியைப் போல' எனப் பரணர் அதைப்பற்றிச் சொல்வார்.[$]

மேற்காநாட்டுக் கூடல் எனப்படும் கூடன்மங்கலத்தின் வேளிர் குடித் தலைவனாக இருந்த அகுதை என்பானுக்கும் இக் கோசர்கள் கூலிப்படைஞராக இருந்தனர். இவனுடைய ஊர், கடலூர் எனப்படும் கூடலூர். இதையே கூடன்மங்கலம் என்றனர்.

"...................நெய்தல்அம் செறுவின்
வளங்கெழு நன்னாடு........................"[40]

என்னும் அகநானூறு இவனது நாடு நெய்தல்நிலத்தது எனச் சொல்வதை வைத்து இவ்வாறு கூறுவர். அகுதையிடம் பொன் திகிரி ஒன்று இருந்ததாக ஒரு பேச்சு இருந்தது. பொன்திகிரி இருந்தது என்பது பொய் என இந்த அகுதை கொல்லப்பட்ட பிறகுதான் தெரியவந்தது.[41]

தன்னைக் கூலிக்கு அமர்த்திக்கொண்ட நன்னனையே எதிர்த்து அம் மிஞிலி சூழ்ச்சி செய்தான். அம் மிஞிலியின் வடுகப்படைகள் நன்னனின் பாழிக் கோட்டையை முற்றின. இதுதான் வடுகக் கயமை என்பது! மிஞிலியைத் தனித்து எதிர்க்கவியலாத நன்னன், இதனால் ஆஅய் எயினனின் உதவியை நாடினான். அவனும் படையோடு வந்தான். ஆய்க் குடியைச் சேர்ந்த வெளியன் வேண்மான் ஆஅய் எயினன் கடிந்து விரைந்து செல்லும் குதியையுடையவன். இன்றைய கன்னட நாட்டிலுள்ள கபினி (கபிலை) ஆற்றங்கரையிலிருந்த தகட்டூரைத் தலைநகராகக் கொண்ட புன்னாடு (புள்நாடு)[@] அவனுடைய

---

$ "இன்கடுங் கள்ளின் அகுதை தந்தை
வெண்கடைச் சிறுகோல் அகவன் மகளிர்
மடப்பிடிப் பரிசில் மானப்
பிறிதொன்று குறித்தவன் நெடும்புற நிலையே"[39]

@ இதுவே புள்நாடு-10,000. இதைப் புன்னாடு 6,000 என்கிறது நஞ்சன்கூடு கல்வெட்டு (26). புன்னாடு என்னும் நாடு கருநாடகத்தின் மைசூர் மாவட்டத்தின் தென்பகுதியில் உள்ளது. இப் புள்நாட்டின் தலைநகர் மைசூர் மாவட்டத்திலுள்ள எக்கடதேவனகோட்டை வட்டத்திலுள்ள கித்தூர். பிற்கால வடுகர் இதைக் கீர்த்திபுரம் என்றனர். "கித்தூர் ஆத அனந்த கீர்த்திமஹாநகர

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாடாகும். யாழிசை ஒலிக்கும் தெருக்களுள்ள பாழி என்னும் நகரத்தில் நின்று வடுக வஞ்சனைக்கு ஆளான நன்னனைப் பார்த்து 'அஞ்சாதீர்!' என்றான். அவ்வாறு சொன்னது பிழையாமலிருக்க, மிஞிலியோடு பாழிப் பறந்தலையில் சண்டையிட்டான். ஆனால், தனக்கு உதவ வந்த அவனுடன் சேர்ந்து போரிடாது நன்னன் ஒதுங்கினான்.

தான் வென்றால், நன்னனின் பாழியிலுள்ள தெய்வத்திற்குக் கடன் இறுப்பதாக வேண்டிக்கொண்ட வடுக வஞ்சகனான மிஞிலி, ஆஅய் எயினனோடு பொருது அவனைக் கொன்றான்.* பாழிப் பறந்தலைப் போரில் நட்டநடுப்பகலில் மிஞிலியாகிய வடுகக் கூலிப் படைஞனால் ஆஅய் எயினன் கொல்லப்பட்டு வீழ்ந்தபோது, ஞாயிற்றின் கருங்கதிர்கள் அவன் உடலை வருத்தாமல் காக்கும் பொருட்டுப் பறவைகள் எல்லாம் கூடி வானில் பந்தலிட்டு நிழல்செய்தன. பறவை இனத்துத் தலைவனான ஆஅய் எயினனின் இறந்த உடலைக் காண எல்லாப் பறவைகளும் வந்தன. ஆனால், கூகை மட்டும் வரவில்லை. பட்டு வீழ்ந்த நிலையில் அவனைக் காணப் போகவில்லையே என வருந்திய கூகை, கடும்பகலிலேயே பறக்கத் தொடங்கியது.

தனக்கு உதவியாக வந்த ஆஅய் எயினன் களத்தில் தனக்காக மடிந்தான் என்னும் செய்தியைக் கேட்டும், போர்க்களத்திற்கு வராமல் பகலில் வெளிவர அஞ்சுகின்ற ஆந்தையைப் போல் நன்னன் தன் நகரிலேயே ஒளிந்து கிடந்தான். சினம் மிக்கவனும் அச்சந்தரும் போர்த்தொழில் செய்பவனுமான நன்னன், மனமிரங்காமல் தனக்காக மடிந்த ஆஅய் எயினனைக் காணவும் செல்லாமல் மறைத்துக் கொண்டான். ஆஅய் எயினனின் இழப்பால் வருத்தமுற்ற வேளிர்

---

புரதராஜஸ்தானா" என்கிறது அக் கல்வெட்டு. இக் கித்தூரைக் கித்தடியூர் என்று அக் கல்வெட்டு குறிப்பிடும்.[42]

* "கடும்பரிக் குதிரை ஆஅய் எயினன்
நெடுந்தேர் மிஞிலியொடு பொருதுகளம் பட்டெனக்
காணிய செல்லாக் கூகை நாணிக்
கடும்பகல் வழங்கா தாஅங்கு இடும்பை
பெரிதால் அம்ம இவட்கே......"[43]

"..................................................ஒன்னார்
ஓம்பரண கடந்த வீங்குபெருந் தானை
அடுபோர் மிஞிலி செருவிற்கு உடைஇ
முருகுறழ் முன்பொடு பொருதுகளம் சிவப்ப
ஆஅய் எயினன் வீழ்ந்தென......"[44]

"..............................................கொடித்தேர்ப்
பொலம்பூண் நன்னன் புன்னாடு கடிந்தென
யாழிசை மறுகின் பாழி ஆங்கண்
'அஞ்சல்' என்ற ஆஅய் எயினன்
இகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித்
தன்னுயிர் கொடுத்தனன் சொல்லியது அமையாது"[45]

www.tamilarangam.net



மகளிர், பூமாலைகளைப் பிய்த்தெறிந்தவண்ணம் அழுது புலம்பினர். இந் நிலையில், அவ் வடுக வஞ்சகனை முறியடித்து, வேளிர் மகளிரின் துன்பத்தை அகுதை போக்கினான்.[5] இது பரணர் தரும் செய்தி.

நன்னனைச் சூழ்ச்சியால் முறியடித்துக் காட்டுக்குத் துரத்திய மேலைவடுகரான அக் கோசர்கள், அவனது பட்டத்து யானையையும் கொன்றனர். பரணர் பாடும் நன்னன் உதியனும் பாழிமலையை ஆண்டவன். இதனால், முன்னர்ச் சொன்ன நன்னனே இந் நன்னன் உதியனாக இருக்கலாம். இல்லையெனில், நன்னனின் வழிவந்தோனாக அந் நன்னன் உதியன் இருந்திருக்கலாம்.

## கொங்குநாட்டுக் கொண்கானம்

பாரம், ஏழில்நெடுவரை, பாழிச் சிலம்பு ஆகிய மூன்று மலைகளைக் குறிப்பிட்டு, அவை நன்னனுக்குச் சொந்தமானவை என அகநானூற்றின் 152ஆம் பாடலில் பரணர் கூறுவார். ஆனால், நற்றிணையோ, கொண்கான நாடும் ஏழிற்குன்றமும்கூட அந் நன்னனுக்குச் சொந்தமானவை எனச் சொல்லும்.

'நன்னன் கொண்கானநாட்டினன். இவனுக்குச் சொந்தமானது ஏழிற்குன்றம்'.

"........கொண்கான நன்னன் நன்னாட்டு
ஏழிற் குன்றம் பெறினும்..................."[47]

என்னும் பாலைபாடிய பெருங்கடுங்கோவின் நற்றிணை வரிகளில் அச் செய்தி விளங்கும். ஏழில்நெடுவரையும் ஏழிற்குன்றமும் வெவ்வேறானவையாக இருக்க வேண்டும். நெடுவரை என்பது பெருமலையை அல்லது மலைத்தொடரைக் குறிக்கும். குன்றம் என்பது ஒரு தனிக் குன்றைக் குறிக்கும். இதனால், 'ஏழில்நெடுவரை' என்பது வேங்கடத்தையும், 'ஏழிற்குன்றம்' என்பது கொண்கானநாட்டிலிருந்த ஒரு குன்றையும் குறிக்குமெனப் பொருள் கொள்ளலாம்.

---

5 "வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்
அளிஇயல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை
இழையணி யானை இயல்தேர் மிஞிலியொடு
நண்பகல் உற்ற செருவில் புண்கூர்ந்து
ஒள்வாள் மயங்குஅமர் வீழ்ந்தெனப் புள்ஒருங்கு
அங்கண் விசும்பின் விளங்கு ஞாயிற்று
ஒண்கதிர் தெறாமை சிறகரிற் கோலி
நிழல்செய்து உழறல் காணேன் யான்எனப்
படுகளம் காண்டல் செல்லான் சினஞ்சிறந்து
உருவினை நன்னன் அருளான் கரப்பப்
பெருவிதுப் புற்ற பல்வேள் மகளிர்
குரூஉப்பூம் பைந்தார் அருக்கிய பூசல்
வசைவிடக் கடக்கும் வயங்குபெருந் தானை
அகுதை களைதந் தாங்கு........."[44]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சேரலத்திலுள்ள கண்ணூருக்கு வடக்கே 18 கல் தொலைவிலுள்ள ஏழில்மலையே இந் நன்னனின் ஏழிற்குன்றம் என்பாருமுளர்.

நன்னனைப்பற்றி மாமூலனார் பாடிய அகநானூற்றுப் பாடல்கள் மூன்றாகும். இவற்றில் இரண்டு அவனது பாழிநகரையும் அதன் வியலூரை ("பாழி அன்ன கடியுடை வியனகர்"[48]) அல்லது வியனகரைப் ("வயலை வேலி வியலூர்"[49]) பற்றியும் குறிப்பிடுவன. இவர் பாடிய மூன்றாம் பாடல், ஏழிற்குன்றத்தையும், அதற்கு அப்பாலிருந்த "சொல்பெயர் தேயத்"தையும்பற்றிக் குறிப்பிடுகின்றது.[50] பாழி ஊர் என்பதே பாளூர் ஆனது. புறநானூறு குறிப்பிடும் பாளூர் ஆண்ட கொண்கானங்கிழான் என்பது நன்னனையும் அந் நன்னன் வழியினரையுமே குறித்தது.[@]

பாலைபாடிய பெருங்கடுங்கோ குறிப்பிடுகின்ற 'கொண்கானம்'[52] இன்றைய சேலம் இராசிபுரம் வட்டத்தைக் குறிக்கும். இங்குக் கொண்கானமலை உண்டு. சேலம் திருசெங்கோடு வட்டத்தில் கொண்கானபுரம் என்னும் ஊரும் உண்டு.[53] கொண்கானம் என்றால் 'பயனற்ற பாலைநிலம்' எனப் பொருள்படும்.[54] கி. பி. 8ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு கொங்கு நிலப்பரப்பை 24 நாடுகளாக வகுத்தபோது, கொண்கானத்தை இராசிபுரநாடு அல்லது கொண்கானநாடு என்றனர். இன்றைய இராசிபுரம் வட்டம் முழுவதும் சேர, கொல்லிமலை மீதுள்ள 14 நாடுகளும், சேரவரையன்மலை மீதுள்ள முட்டம், மோகம், சேலம் ஆகிய நாடுகளும் அடங்கிய பகுதியே இராசிபுரம் நாடானது.[55]

இந்த இராசிபுரநாட்டின் உள்நாடுகள் பத்து எனக் கல்வெட்டுகள் கூறுகின்றன. அவையாவன:[56]

1. புறமலைநாடு
2. புறந்தரம்பைநாடு
3. வறுப்புக்காநாடு
4. வீரகேரளவளநாடு
5. வலுப்புற்றுநாடு
6. பருள்நாடு
7. வடகடம்பைநாடு
8. தென்கடம்பைநாடு
9. போசளநாடு
10. தகடைநாடு.

இவற்றில், கடம்புநாட்டை வடகடம்பை என்றும் தென்கடம்பை என்றும் பிரித்தாண்டனர். இதனால், பதிற்றுப்பத்தின் நான்காம் பத்தின் பதிகத்தில் வரும் கடம்பின் பெருவாயில் மேற்சொன்ன கடம்புநாட்டில் இருந்திருக்க வேண்டும்.

மேலைக் கடலை ஒட்டிவாழ்ந்துவந்த கடம்பர்கள் வேறாவர். இவர்கள் மிகப் பெரிய கடற்கொள்ளையராக இருந்தனர். தூவக்கல் என்னும் தீவிலிருந்து அவர்கள் கடற்கொள்ளை நடத்தி வந்தனர்.[57]

---

@ "பாழ்ஊர் நெருஞ்சிப் பசலை வான்பூ
ஏர்தரு சுடரின் எதிர்கொண் டாஅங்கு
இலம்படு புலவர் மண்டை விளங்குபுகழ்க்
கொண்பெருங் கானத்துக் கிழவன்"[51]

www.tamilarangam.net



கடம்பர் என்போர் வடுக அநாகரிகர் வழியினர். இந்த அநாகரிகர் எவ்வாறு பெரிய கடற்கொள்ளையராக ஆகினர்? உரோம வரலாற்றில் ஃபிராங்குகள் கடற்கொள்ளையரானதைப் போன்ற ஒரு நிகழ்வால் அவர்கள் கடற்கொள்ளையராக மாறியிருக்கலாம்.

செருமானிய அநாகரிகரான ஃபிராங்குகள் ஒரு புதிய கூட்டரசை உருவாக்கினர். ரைன் ஆற்றின் கழிமுகத்தில் நிலையான குடியிருப்பை அமைத்துக்கொண்ட ஃபிராங்குகள், அங்கிருந்த சாக்சன் இனத்தாரிடமிருந்து கடல்மேல் செல்லும் தொழிலைக் கற்றுக்கொண்டனர்; பின்னர், பெரிய கடற்கொள்ளையராக உருவெடுத்தனர்.[58]

இவ்வாறாயின், துளுநாட்டை வடுகர்கள் கைப்பற்றியபின், அவர்களில் கடம்பர் என்றானோர் அங்கிருந்த தமிழரிடமிருந்தே கடற்செலவு மேற்கொள்ளும் தொழிலைக் கற்றிருக்க வேண்டும். பின்னர்க் கடற்கொள்ளையராகத் திரிந்திருக்கலாம்.

கடம்பரை அடக்கிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் அக்கடம்பரின் காவல்மரமான கடம்பமரத்தை அழித்தானாம்.* ஆனால், நன்னனின் காவல்மரமோ வாகைமரம் ஆகும். இஃது ஆய்வுக்குரியது.

சேலத்திலிருந்து 41 கல் தொலைவில் வெள்ளாற்றுக் கரையின் வடக்கிலுள்ள தலைவாசல் ஒரு சிறிய ஊர். இத் தலைவாசலுக்கு அருகில் ஔவையார்மலை உள்ளது. கல்வரையன்மலையிலுள்ள ஒரு குன்றமே இந்த ஔவையார்மலை. கடலூர் நெடுஞ்சாலை தென்னார்க்காட்டு எல்லையை வெட்டும் இடத்திலிருந்து 3 கல் தொலைவிலுள்ள இவ்வூரை ஔவையாருடன் உறவுபடுத்தும் வரலாற்றுக் கதை உண்டு. ஔவையாரின் பேச்சைக் கேட்டுச் சேர, சோழ, பாண்டியரான மூவேந்தர்களும் இத் தலைவாசலில் கூடித் தத்தம் நாட்டு எல்லைகளை வரையறுத்தனராம். இத் தலைவாசலுக்குத் தெற்கே உள்ள மும்முடி என்னும் ஊரின் பெயர் இச் செய்திக்கு நல்ல வலுச்சேர்க்கின்றது.

கொங்குநாட்டிலிருந்து சேர, சோழ, பாண்டிய நாடுகளுக்குள் புகும் வாயிலாக இந்த இடம் இருந்தமையாலேயே, இதற்குத் தலைவாசல் என்னும் பெயர் வந்தது எனச் சேலம் மாவட்ட அரசேடு *(Madras District Gazetteers, Salem)* தெரிவிக்கின்றது.$

---

* "வலம்படு முரசிற் சேர லாதன்
முந்நீர் ஓட்டிக் கடம்புஅறுத்து இமயத்து
முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து"[59]

$ "Legend connects the spot [Talai-vasal] with the poetess Avvaiyâr, whose name is preserved in Avvaiyâr-malai, the peak of the Kalrâyans which overhangs Âttûr, and it is said to have been founded on her advice by the Chera, Chola, and Pandya Kings, who met here to decide the boundaries of their respective kingdoms. South of Talai-vâsal is the village of Mummudi, and the names

www.tamilarangam.net



களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் காலத்தில் இத் தலை வாசலே 'கடம்பின் பெருவாயில்' என்னும் பெயர் பெற்றிருந்திருக்கும். கொங்குநாட்டிலிருந்து சேர, சோழ, பாண்டிய நாடுகளுக்குள் புகும் பெருவாயில் நன்னனின் கடம்புநாட்டில் இருந்தமையாலேயே இப் பெயர் வந்திருக்க வேண்டும்.

'மேலான வெற்றியை ஈட்டித்தந்த வெற்றிமிகு வாளையுடை யவன் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல். மேற்குப்புறத்தில் பொன் போன்ற வாகைமரமுள்ள பெருந்துறை என்னும் இடத்தில் நடந்த போரில், பொற்பூண் அணிந்த நன்னனை அவன் போர்க்களத் திலேயே மடிந்து வீழச் செய்தான். முன்பு சேரர் இழந்த நாட்டை அவன் மீட்டான்' என்னும் பொருளில் வரும்

"..........................................குடாஅது
இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
பொலம்பூண் நன்னன் பொருகளத்து ஒழிய
வலம்படு கொற்றம் தந்த வாய்வாள்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்த நாடுதந் தன்ன"[61]

என்னும் அகநானூற்று வரிகளில் வாகைப் பெருந்துறைப் போரில் நன்னன் மடிந்த செய்தி வருகிறது. நன்னனுக்குச் சொந்தமான கடம்பின் பெருவாயிலுக்கு மேற்குப்புறம் உள்ள மேல்கரை பூந்துறை நாட்டில் இருக்கும் பெருந்துறையே இந்த வாகைப் பெருந்துறையாக இருக்க வேண்டும். வாகைமரம் நன்னனின் காவல்மரமாகும். கொங்குநாட்டிலடங்கிய 24 நாடுகளில் ஒன்றான பூந்துறைநாட்டின் ஒரு பகுதியே மேல்கரைப் பூந்துறை நாடாகும். காவிரியின் மேற்குக் கரையில் அமைந்த பூந்துறைநாட்டுப் பகுதியே மேல்கரைப் பூந்துறை நாடு.

கொங்குநாட்டில் இன்றைய கோவை, ஈரோடை, சேலம், தரும புரி மாவட்டங்களும், மதுரை மாவட்டத்துப் பழனி வட்டமும், திருச்சி மாவட்டத்துக் கருவூரும், நீலமலை மாவட்டத்துக் குன்றூரும் (குன் னூரும்), தென்னார்க்காடு மாவட்டத்துக் திருக்கோவலூரும், வடவார்க் காடு மாவட்டத்துத் திருப்பத்தூரும், திருவண்ணாமலை மாவட்டத் தலைநகரான திருவண்ணாமலையும் அடங்குவன.[62]

கொங்கு வேளாளரின் பூந்துறைநாட்டுக் காடைக்குல மன்னன் நன்னா உடையார் வழியினர் கழக இலக்கியம் கூறும் அந் நன்னனின் வழிவந்தோராக இருக்கலாம்.

நன்னனைப்பற்றிய அகநானூற்றுப் பாடல்கள் மொத்தம் பதின்மூன்று. இவற்றில் பரணர் பாடியன எட்டு. பரணரின் பாடல்

---

of Mummudi and Talai-vâsal, 'Gateway of the Three Crowns,' are linked together by tradition in memory of that event."[60]

www.tamilarangam.net



ஒன்றில் நன்னனின் பாழியைக் குறிப்பிடுவதுடன், சேரரின் வஞ்சி மாநகரின் அழகையும், இமயத்தில் விற்பொறித்த சேரன் செங்குட்டு வனின் மாட்சியையும்பற்றிக் கூறுவதைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

குடவாயில் கீரத்தனார் பாடிய அகநானூற்றுப் பாடலில் வரும் நன்னன் என்னும் சேரர் படைத்தலைவனும் பாழியை ஆண்ட அதே நன்னனே எனக் கருத அது வழிவகுக்கின்றது. வடுகன் மிஞிலியால் பாழியிலிருந்து விரட்டப்பட்ட நன்னன், தன்னிடம் முன்பே இருந்த கொண்கானப் பகுதிக்குள் குடிபுகுந்த பின்னர், சேரரின் படைத் தலைவர்களில் ஒருவனாக ஆகியிருக்கலாம்.

நன்னனைப் பரணர் பாடிய அகநானூற்றுப் பாடல்களில், சேரன் மாந்தரன் பொறையன் கடுங்கோ, தித்தன் வெளியன், அஞ்சி, ஆஅய் எயினன், நன்னன் உதியன், வல்லம் கிழவோன் ஆகியோரும் வருகின்றனர். பாழி, பாரம், பிரம்பு மலை, ஏழில் நெடுவரை, தித்தனின் அழுந்தூர், வஞ்சி ஆகியனவும்கூடக் குறிப்பிடப்படுகின்றன.

ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுரை, கணையன் ஆகியோ ருடன் சேர்ந்து இந் நன்னன் சோழரோடு பொருதான். இச் சண்டை யில் சோழர் படைத்தலைவனான பழையன் களத்தில் மடிந்தான். காவிரிக்கரையிலிருந்த 'போஓர்' என்னும் ஊருடையவன் இப் பழையன். பழையனின் இறப்பைக் கண்டு நெஞ்சம் பொறாத சோழன் பெரும்பூட்சென்னி, கழுமலம் என்னும் இடத்தில் நடத்திய பெரும் போரில், சேரர் படைமுதலியான கணையன் உட்பட எல்லாப் பகை வரையும் ஒட்டுக்காக வென்றான். தோற்றோரில் நன்னனும் அடங்கு வான்.[63]

பின்னர்த் தன்னுரிமை நாடிச் சேரருக்கு எதிராகவே கிளம்பிய நன்னன், வாகைப் பெருந்துறைப் போரில் சேரன் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலால் கொல்லப்பட்டான்.

## வந்தேறிகள் படையெடுத்தனர்!


வாட்டாற்று எழினியாதனின் நாட்டில் வந்தேறிக் கோசர் வடுகர் கள் கூலிப்படைஞராக உள்ளதைப் பார்க்கிறோம். அக் கோசர்கள் வாட்டாறு என்னும் எழினியாதனின் ஊரில் கள்ளுண்டு மகிழ்ந்து வந்ததைப்பற்றிப் புறநானூறு கூறும்.*

---

* "நனைக்கள்ளின் மனைக்கோசர்
தீந்தேறல் நறவுமகிழ்ந்து
தீங்குரவைக் கொளைத்தாங்குந்து
உள்ளிளோர்க்கு வலியாகுவன்
கேளிலோர்க்குக் கேளாகுவன்
கழுமிய வென்வேல் வேளே!
வளநீர் வாட்டாற்று எழினி யாதன்"[64]

www.tamilarangam.net






வரைபடம் 2

www.tamilarangam.net



'கடலில் குளிக்கின்ற பெண்கள் பறித்துவந்த புலிக் கொன்றைப் பூவையும், கழனி உழவர் பறித்துவந்த குவளைப் பூவையும், முல்லை நிலத்தில் பூத்த முல்லை மலரையும் சேர்த்துப் பூக்கண்ணியைக் கட்டிக் கோசர் இளைஞர் பலர் விளையாடி மகிழ்ந்திருப்பர். அத்தகைய வளமிக்க செல்லூரின் கோமானான ஆதன் எழினி ஆவான்' என்னும் அகநானூற்றில் வரும் கோசர்களை ஆதன் எழினியின் செல்லூரில் பார்க்கின்றோம்.[$]

தகடூரைத் தலைநகராகக்கொண்டு சேலத்தின் வடபகுதியை ஆண்டுவந்த அதியர்கள் தங்களைச் சேரர்குடியினர் என்றே சொல்லிக் கொண்டனர். தென்பாண்டிநாட்டில் திருவதங்கூர் அரசின் மேற்குக் கடற்கரையில் கல்குளம் வட்டத்திலுள்ள பறளியாற்றின் கரையிலிருக்கும் திருவாட்டாறுதான் எழினியாதனின் வாட்டாறு. இதனால், அதியன் வழிவந்த இந்த எழினியாதன், அப்போது சேரரின் படைத் தலைவனாக வாட்டாற்றுக் கோட்டைக்குப் பொறுப்பாக இருந்தான்.[66] இப்படியும் ஒரு கருத்து உண்டு.

இவ்வாறாயின், எழினியாதனின் படைகளில் கூலிப்படைஞராகப் பணி புரிந்துவந்த வந்தேறிக் கோசர்கள், பின்னர் அந்த எழினியாதனுக்கு எதிராகவே திரும்பி, மோரியர் என்னும் வடவரைத் தமிழகத்தின்மீது படையெடுக்கத் தூண்டித் தமிழர்க்குப் பகையாகினர் என்பது புலப்படும்.

நன்னனைச் சூழ்ச்சியால் முறியடித்துக் காட்டுக்குத் துரத்திய அக் கோசர்கள், அந்த நன்னனின் பாழிக்கோட்டையையே நல்ல அரணாகக் கொண்டு, அடுத்துச் சேரனையும் அதியன் மரபினனான எழினியையும் தாக்கத் தொடங்கினர். கோசர்களின் தூண்டுதலால், அக் கோசர்க்கு உதவியாக வந்த வம்ப மோரியர் படைகள், வாட்டாறு என்னும் இடத்தில் எழினியுடன் போரிட்டன. அம் மோரியருடன் செல்லூரில் நடந்த போரில், எழினி பின்னர்க் கொல்லப்பட்டான்.[64]

சோழநாட்டு எல்லையை ஆண்டுவந்த அழுந்தூர்வேள் திதியனையும் அடுத்து அக் கோசர்கள் தாக்கினர்.[65] பாண்டியநாட்டு எல்லையில் ஆண்டுவந்த மோகூர் பழையன் மாறனையும் அதற்கடுத்துத் தாக்கினர்.[66]

---

$ "கடலாடு மகளிர் கொய்த ஞாழலும்
கழனி உழவர் குற்ற குவளையும்
கடிமிளைப் புறவின் பூத்த முல்லையொடு
பல்லிளங் கோசர் கண்ணி அயரும்
மல்லல் யாணர்ச் செல்லிக் கோமான்
எறிவிடத்து உலையாச் செறிசுரை வெள்வேல்
ஆதன் எழினி அருநிறத்து அழுத்திய
பெருங்களிற்று எவ்வம் போல
வருந்துவர்............................"[65]

www.tamilarangam.net



வாளைமீனைக் காலையில் பிடித்துண்டதோடு அடங்காத நீர் நாய், வரால்மீனைப் பிடித்துண்ண எண்ணி முதலையோடு சண்டையிடும் ஊரையுடையோன் அழும்பில் வேள். சினந்தெழும் வடுகரான கோசர்களின் அவைக்களத்தின் நடுவில் நிற்பதையும் மறந்து, இவன் தன் தோழனைக் காப்பதற்காக எழுந்தபோது, 'இவன் அடங்கமாட்டான்' எனக் கருதி அவன்மீது வடுகர்கள் வேல்களை எறிந்தனர். அவனது உடம்பில் தைத்த வேல்கள், மாட்டுவண்டியின் ஆழிக்குடத்தில் செருகிய ஆர்க்கால்களைப் போல் தோன்றின. பட்டு வீழ்ந்த அவனது புண்ணை மகளிர் ஆற்ற முற்பட்டனர். ஆனால், அவனோ சற்று நினைவு வந்தவுடன் மீண்டும் தும்பைப்பூவைக் கண்ணியாகச் சூட முயன்றான்.* இப் புறநானூற்றுப் பாடலில் வரும் அழும்பில், புதுகோட்டை பகுதியில் "இராசராச வளநாட்டுப் பன்றியூர்நாடு அழும்பில்" ஆகும்.[71]

அழும்பில் வேளிரின் நண்பனுடன் சண்டைக்கு வந்த கோசர்கள், அவனுடைய நாட்டை முற்றினர். கோசர் வடுகரால் வீழ்த்தப்பட்டுத் தளைப்பட்ட அந் நண்பன், அவ் வந்தேறி வடுகரின் அவையில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டபோது, அது வந்தேறிப் பகைவரின் அவை என்றும் பாராது, தன் தோழனுக்காக வேல்தாங்கி வீழ்ந்த அழும்பில் வேளின் மறத்தைப்பற்றி அண்டர்நடுங்கல்லினார் பாடுவார். அழும்பில் வேளின் விடுதலை வேட்கையையும், வந்தேறி நாடு கவர்புக்கு எதிராக அவன் காட்டிய எதிர்ப்புணர்ச்சியையும் காட்டும் வரலாற்றுக் குறிப்பே இஃதாகும். இது எந்தப் பகுதியில் நடந்தது என்பது தெரியவில்லை.

சேர, சோழ, பாண்டிய நாடுகளுடன், துளுவநாடும் அருவா நாடும் கொங்குநாடும் சேர்ந்ததே வடுகப் படையெடுப்புகளுக்கு முந்திய தமிழகமாக இருந்தது. இந் நிலையில் மேலைவடுகர்கள் முதன் முதலில் கைப்பற்றிய நாடு துளுநாடு ஆகும். மயில்கள் நிறைந்த துளுநாடு வாய்மை தவறாத இக் கோசரின் நாடு என்னும் பொருளில் வரும்

---

* "ஒண்செங் குரலித் தண்கயம் கலங்கி
வாளை நீர்நாய் நாள்இரை பெறூஉப்
பெறாஅ உறையரா வராஅலின் மயங்கி
மாறுகொள் முதலையொடு ஊழ்மாறு பெயரும்
அழும்பிலன் அடங்கான் தகையும் என்றும்
வலம்புரி கோசர் அவைக்களத் தானும்
மன்றுள் என்பது கெட ....ரனே பாங்கற்கு
ஆர்சூழ் குறட்டின் வேல்நிறத்து இங்க
உயிர்புறப் படாஅ அளவைத் தெறுவரத்
தெற்றிப் பாவை திணிமணல் அயரும்
மென்றோள் மகளிர் நன்று புரப்ப
இமிழ்ப்புற நீண்ட பாசிலைக்
கமழ்பூந் தும்பை நுதலசைத் தோனே!"[70]

www.tamilarangam.net



"மெய்ம்மலி பெரும்பூண் செம்மற் கோசர்
கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாகல் ஆர்க்கைப் பறைக்கண் பீலித்
தோகைக் காவின் துளுநாட் டன்ன
வறுங்கை வம்பலர்த் தாங்கும் பண்பின்
செறிந்த சேரிச் செம்மல் மூதூர்"[72]

என்னும் அகநானூற்று வரிகள், இந்தக் கோசர்கள் துளுநாட்டைக் கைப்பற்றிய நிகழ்வைக் காட்டுவன.[§]

கோசர்கள் வந்தேறிய நியமம் என்னும் குறுநாடு துளுநாட்டிலுள்ள செல்லூருக்குக் கிழக்கில் இருந்தது. இக் கோசரை 'நாலூர்க் கோசர்' என்பர்.[74] இவர்கள் அத் துளுநாட்டில் நான்கு ஊர்களில் குடியேறியதால் இப் பெயர் வந்திருக்கலாம். கோசரை 'நாற்கோசர்' என்னும் மதுரைக் காஞ்சியின் குறிப்புக்கு 'நால்வகைக் கோசர்' என நச்சினார்க்கினியர் பொருள் கூறுவார்.

இந்தக் கோசர்களை 'நான்மொழிக் கோசர்' எனக் கழக இலக்கியங்கள் குறிக்கின்றன. 'வடகலை (வடமொழி), தென்கலை (தமிழ்), வடுகு, கன்னடம்' என்பவற்றேயே மொழிகளெனக் கம்பராமாயணத்தின் பாயிரம் வரிசைப்படுத்தும்.[75] இவற்றில், வடுகு என்பது தெலுங்கையே குறிக்கும். நன்னூல், தொல்காப்பிய உரைகளில் 'கன்னடம், வடுகு, கலிங்கம், தெலுங்கம்' என மொழிகள் நான்கு எனப்படுகிறது.[76] கோசர்களுக்கு இந்த நான்கு மொழிகளும் பேசத் தெரிந்திருந்தமையாலேயே அவர்களுக்கு 'நான்மொழிக் கோசர்' என்னும் பெயர் வந்தது போலும்.

வடுகரின் தெற்குநோக்கிய பெயர்ச்சிகளால் வீழ்ந்த அரசுகள் பல. அவற்றில் ஒன்றே துளுநாடு என்பதை முன்னரே சொன்னோம். அதற்கடுத்து, குடகுநாடும், பின்னர் எருமை நாடும் (மைசூரும்) வடுகர் கைக்கு வந்தன. இவற்றை அடுத்து, கொங்குநாட்டிற்குள்ளும் அவர்கள் ஊடுருவினர்.

வடநாட்டிலுள்ள ஆநிரைகளை நட்டநடு இரவில் கவர்ந்து வர எண்ணிய எருமை என்னும் வடுகர் தலைவன், பகைவரின் போர் முனைகளை எல்லாம் அழித்து, அப் பகைநாட்டு ஆநிரைகளை மந்தை மந்தையாகக் கவர்ந்து, அயிறு ஆறு ஓடும் தன் நாட்டிற்குக் கொண்டு வந்தான் என அகநானூறு கூறும்.

'பொற்பு அணிந்த கொங்கரை விரட்டி அவர்களின் நாடுகள் பலவற்றைப் பசும்பூண் பாண்டியன் கைப்பற்றினான். பொன்மலிந்த

§ மேற்சொன்ன பாடலில் தோகைக்கா என்னும் ஊர் குறிப்பிடப்படுகிறது. அகநானூற்றில் வரும் அந்தத் தோகைக்கா என்னும் ஊரே காலப் போக்கில் தோக்கா என மருவி, பின்னர் சோக்கு (ஜோக்) என்றானதாக ஔவை சு. துரைசாமிப் பிள்ளை கூறுவார்.[73]

www.tamilarangam.net



கூடல்நகர் இதனால் வெற்றிக் களிப்பால் ஆடிய ஆட்டத்திலும் இனிய ஆரவாரத்திலும் மூழ்கியது.... நடமாடவும் அரிய இரவில் வடக்கிலுள்ள ஆநிரைகளைக் கவர்ந்துவரச் சென்ற வடுகர் தலைவன், பகைநாடுகள் பலவற்றை அழித்தான்; வேற்றினத்தவர் பலரை விரட்டி யடித்தான். நீண்ட கூப்பாட்டு ஒலியறிந்து மாற்றானின் ஆநிரைகளை அணைத்துப் பிடித்தான். காளைகளின் தொங்கவிடப் பட்டிருந்த அழகிய அகன்ற மூங்கிற்குழலில் போதும் என்னும் அளவுக்கு உண விட்டுவந்த கோவலரின் தொழுவத்திலுள்ள ஆநிரைகளைக் கவர்ந் தான். கன்றுகளுள்ள மாடுகள் பலவற்றை ஓட்டிவந்தான். ஒப்பிலா வன்தோள்களுள்ள இத்தகைய வடுகர் தலைவனான பெரும்புகழ் எருமை என்பானின் நாட்டிலுள்ள அயிரி ஆற்றைக் கடந்து சென் றுள்ளான் எம் தலைவன்.'*

எருமை என்னும் வடுகன், எருமையூரை (மைசூரை) ஆண்டு வந்ததைப்பற்றி நக்கீரர் இவ்வாறு கூறுகின்றார். அயிரியாறு வடுகநாட் டின் தெற்கு எல்லையாயிருந்தது. கருநாடகத்தின் வடபகுதியும், பெல் லாரி, அனந்தபுர மாவட்டங்களின் பகுதிகளும் சேர்ந்ததே வடுகநாடு.[78] இவ் வடுக நாடுதான் வடுகரின் சொந்தமண்.

வடுகநாடு என்பதன் திரிபே 'படுகநாடு' ஆகும். கன்னடரைத் தெலுங்கர்கள் 'படகவாரு' என்றும் 'படகநாட்டிவாரு' என்றும் அழைப்பர். அயிரி என்னும் ஆறு ஓடும் குடநாடு, அந்தப் படுகநாட் டையே குறிக்கும். துங்கபத்திரை ஆற்றில் கலக்கும் அசிரியாறுதான் அந்த அயிரியாறு.

கி. மு. 4ஆம் நூற்றாண்டின் இறுதிமுதல் கி. மு. 2ஆம் நூற் றாண்டின் தொடக்கம் வரை வடக்கே ஆண்டுவந்த மோரிய அரசனே

* "வாடாப் பூவிற் கொங்கர் ஓட்டி
நாடுபல தந்த பசும்பூண் பாண்டியன்
பொன்மலி நெடுநகர்க் கூடல் ஆடிய
இன்னிசை ஆர்ப்பினும் பெரிதே ஈங்குயான்
சிலநாள் உய்யலென் போன்மெனப் பலநினைந்து
ஆழல் வாழி தோழி வடாஅது
ஆரிருள் நடுநாள் ஏரா ஒய்யப்
பகைமுனை அறுத்துப் பல்லினம் சாஅய்க்
கணம்சால் கோவலர் நெடுவிளிப் பயிர்அறிந்து
இனந்தலைத் தரூஉம் துளங்குஇமில் நல்ஏற்றுத்
தழூஉப்பினர் எறுத்தம் தாழப் பூட்டிய
அம்தூம்பு அகலமைக் கமஞ்செலப் பெய்த
துறுகாழ் வல்சியர் தொழுவறை வௌவிக்
கன்றுடைப் பெருநிரை மன்றுநிறை தரூஉம்
நேரா வன்தோள் வடுகர் பெருமகன்
பேரிசை எருமை நல்நாட்டு உள்ளதை
அயிரியாறு இறந்தனராயினும்.............."[77]

www.tamilarangam.net



அசோகன். அந்த அசோகப் பேரரசனின் தெற்கு எல்லை, மைசூர் எனப்படும் எருமையூர் ஆகுமாம்.

இம் மோரியருக்கு முன்னரே, கங்கை முதல் வடபெண்ணை வரையில் படர்ந்திருந்த ஒரு பேரரசாகக் கலிங்க அரசு இருந்ததாம். இக் கலிங்கப் பேரரசை வீழ்த்திய பின்னரே மோரியர்கள் தெற்கில் மைசூர் வரை படைநடத்தி வர முடிந்தது. இம் மோரியருக்கு முற்பட்ட நந்தரும் சிசுநாகரும் ஆகிய வடக்கத்திய அரசுகள், மைசூர் வரையில் படையெடுத்து வந்ததாகவும் சொல்வர்.[79]

கூலிப்படைஞராகத் தெற்குநோக்கி வந்து எருமையூரான மைசூர் வரை ஊடுருவிய வடுகர்கள், அங்கேயே தங்கிவிட்டனர். இவ்வாறு வந்தேறிய வடுகர்களின் தலைவன் பெயர் எருமை. இந்த எருமையின் பெயரிலேயே எருமையூரும் எருமைநாடும் தோன்றின. எருமையூர் என்பதே சங்கதத்தில் 'மகிஷாசுரனூர்' என்றாகி வழக்கில் 'மைசூர்' என்றானது. வடுகரே எருமைநாட்டை நிறுவியவர்கள் என்பது இதனால் விளங்கும். எருமையூருக்கு மேற்கேயுள்ள குடநாடும்கூட அந்த எருமையின் ஆட்சியின்கீழ் இருந்ததாக மாமூலனார் குறிப்பிடுகின்றார்.[S]

## பங்காளிச் சண்டையில் வந்தேறி வடுகன்!

தலையாலங்கானத்துப் போர் வரலாற்றுச் சிறப்பு மிக்கப் போர். அப் போரில், தன்னை எதிர்த்து வந்த சோழன் கிள்ளி வளவன், சேரன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, திதியன், வாட்டாற்று எழினியாதனின் தந்தையான எழினி, வடுகனான எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் ஆகிய எழுவரையும் பாண்டியன் நெடுஞ்செழியன் ஒட்டுக்காக வென்றான்.[u] சோழநாட்டுத் தஞ்சையிலுள்ள நன்னிலம் வட்டத்திலிருக்கும் தலையாலங்கானத்தில் இப் போர் நடந்தது. தமிழரசர்களுக்கு இடையிலான அகப்பகையால் வந்த போரே இத் தலையாலங்கானத்துப் போராகும்.

தலையாலங்கானத்துப் போரைப் பாடிய புலவர் குடபுலவியனார், "தமிழ்த் தலைமயங்கிய தலையாலங்கானம்" என்பார்.[82]

---

S "நுண்பூண் எருமை குடநாட் டன்ன.."[80]

u "கொய்சுவல் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
ஆலங் கானத்து அகன்தலை சிவப்பச்
சேரல் செம்பியன் சினங்கெழு திதியன்
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி
நார்அரி நறவின் எருமை யூரன்
தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான் இயல்தேர்ப் பொருநன்என்று
எழுவர் நல்வலம் அடங்க....."[81]

www.tamilarangam.net



'தமிழ் அரசர்கள் கைகலந்த தலையாலங்கானம்' என்றே அது பொருள்படும். தமிழ் வேந்தர்களுக்கு இடையில் நடந்த இப் போரில் வடுகனான எருமையூரனும் பங்கெடுத்தான்! தமிழ் முடிவேந்தனுக்கு எதிராக ஒரு வடுகனும் பங்கெடுத்த இந்த அவலம் தமிழரின் வீழ்ச்சிக்குக் கட்டியம் கூறியது. அதுவும், இவ் வடுகன் தமிழகத்தின் எல்லைக்குள் சோணாட்டின் தலைநகர் வரையில் படைநடத்திச் சென்றது, வருந்தத்தக்க செய்தி. தமிழ்ப் பங்காளிகளுக்கு இடையில் நடந்த போரில் பங்கெடுக்க வந்த வடுக வந்தேறியான எருமையூரன், பின்னர் தமிழர் இனத்துக்கே பெரிய எதிரியாகிக் கீழைக் கங்கைக்கரை மோரியர்கள் தமிழகத்தின்மீது படையெடுத்துவர உதவினான். வடுக வந்தேறிகளின் வழிவழிவந்த தீயசூழ்ச்சியைப் பார்த்தீரா?

## மோரியர் படையெடுப்பு

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியனின் காலத்தில் மோகூர் பழையன் மாறன் என்பவன் பாண டியரின் படைத்தலைவனாக இருந்தான். இதற்கு முன்னரே சோழன் கிள்ளிவளவனை முறியடித்து அவனிடமிருந்த யானைகளையும் குதிரைகளையும் கைப்பற்றியவன் இப் பழையன் மாறன். மோகூர் மதுரைக்கு அருகில் உள்ளது.

'மோகூர் பழையனின் அரசவையில் நான்கு மொழிகளில் வல்ல கோசர்கள் செம்மாந்து வீற்றிருந்தனர்.'

"பழையன் மோகூர் அவையகம் விளங்க
நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன"[83]

என்னும் மதுரைக்காஞ்சியின் வரிகள் அதைச் சொல்கின்றன.

'பகைவரை வெல்லவல்ல பலரான இளம்கோசர்கள் தம் சொல் கேட்டுப் பணிந்து ஒழுகும் பெரும் பெயர்பெற்ற பழையன் என்ப வனைப் படைத்தலைவனாகக் கொண்டவன்' தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.

"பொய்யா நல்லிசை நிறுத்த புனைதார்ப்
பெரும்பெயர் மாறன் தலைவ னாகக்
கடந்தடு வாய்வாள் இளம்பல் கோசர்
இயனெறி மரபினின் வாய்மொழி கேட்பப்"[84]

என மதுரைக்காஞ்சி அதைக் கூறும். அப் பழையனின்கீழ் முன்னர் அக் கோசர்கள் கூலிப்படைஞராக இருந்துவந்ததையே இது காட்டும். கூலிப்படைஞராக ஒண்ட வந்த வடுகர்கள், பின்னர் அப் பழைய னையே எதிர்த்துப் படையெடுத்தனர். கடிப்பு என்னும் குறுந்தடியால் முரசறைந்து பகைப்புலத்தைக் கோசர் வடுகர் சிதைத்தபோதும், மோகூர் மன்னன் மட்டும் பணியவில்லை. இதனால்தான், அந்தக் கோசர்க்குத் துணையாக வம்ப மோரியர்கள் மோகூரின்மீது படை யெடுத்து வந்தனர்.[85] பாண்டியநாட்டின் எல்லையில் ஆண்டுவந்த

www.tamilarangam.net



இந்த மோகூர் பழையன் இதனால் அவ் வடுகர் படைகளை முறியடித்து விரட்டினான்.[86]

வெற்றிக்கொடியையும் காற்றைவிட விரைவான தேர்களையும் உடைய கோசர்கள், மிகப் பழைய ஊரிலுள்ள ஓர் அரசமரத்தின் கீழமைந்த ஊர்மன்றத்தில் குறுந்தடிகொண்டு முரசறைந்து, பின்னர் பகைவரின் போர்முனைகளை அழித்தனர். கீழைக் கங்கைக்கரை மோரியரின் கைக்கூலிகளான இக் கோசர்களுக்குப் பிறரெல்லாம் அடிபணிந்தும், மோகூரை ஆண்டுவந்த பழையன் மட்டும் பணிய மறுத்தான்.*

மோரியன் அசோகன் கலிங்கத்தின்மீது கி. மு. 260ஆம் ஆண்டளவில் ஈட்டிய வெற்றியே மோரியர் படைகளைத் தமிழகத்தின் எல்லை வரை கொண்டுவந்த சூழலை ஏற்படுத்தியிருக்க வேண்டும். கலிங்கத்துக் காரவேலன் கி. மு. 155ஆம் ஆண்டளவில் தமிழகத்தின் மீது படையெடுத்து 113 ஆண்டுகளாகச் சேர, சோழ, பாண்டியப் பேரரசுகளுக்கு இடையில் நிலவிவந்த தமிழரின ஒற்றுமையை (திரவிடதேச சங்கவட்டம்) உடைத்தெறிந்ததாகக் கலிங்கத்தின் காரவேலன் வெட்டிய ஹாதிகும்பா கல்வெட்டுக் கூறும் செய்தி[88] உண்மையாயின், அயலாரை(புதியவரை)க் குறிக்கும் 'வம்ப' என்னும் முன்னொட்டுடன் குறிப்பிடப்படும் மோரியரின் படையெடுப்புத் தமிழகத்தின்மீது காரவேலன் நடத்தியதாகச் சொல்லப்படும் படையெடுப்புக்கு முன்னரே நிகழ்ந்திருக்க வேண்டும். ஏனெனில், பாண்டியப் படைத் தலைவனான மோகூர் பழையன் மாறன், சோழநாட்டு எல்லையில் ஆண்டுவந்த திதியன், மோரியருடன் பலமுறை போரிட்ட சேரர் படைத்தலைவனும் குதிரைமலைக் கோமானுமாகிய பிட்டங்கொற்றன் ஆகிய அனைவருமே மோரியரின் படையெடுப்பை முறியடித்துள்ளனர். தமிழரசுகளின் எல்லைக் காவற்படைகளே வம்ப மோரியரின் படைகளை முதலில் முறியடித்தன. தமக்குள் சண்டை சச்சரவு இருப்பினும், தமிழரல்லா மாற்றுநாட்டார் தாக்க வந்தால், தமிழரெல்லாரும் ஒற்றுமையாய் நின்று அந்த மாற்றானை முறியடிக்க வேண்டும் என்னும் இனஓர்மை விளங்கிய காலம் அதுவாகும்.

வம்ப மோரியர் வடக்கேயுள்ள கங்கைக்கரையை ஆண்டு வந்த காலத்தில் துளுவநாட்டைப் பிடித்து ஆண்டுவந்த வடுகரான கோசர்களுக்குத் துணையாகப் படையெடுத்துவந்த அம் மோரியர்

---

* "........................................ வெல்கொடித்
துனைகால் அன்ன புனைதேர்க் கோசர்
தொல்மூ தாலத்து அரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசம் கடிப்பிகுத்து இரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையின் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி உருளிய குறைத்த"[87]

www.tamilarangam.net



படைகளைப் பிட்டங்கொற்றன், மோகூர் பழையன், தித்தன் ஆகிய எல்லைக்காவல்தலைவர்களே முறியடித்துவிட்டதைக் கண்டு வெகுண்ட மோரியர்கள், துளுநாட்டில் கடலெனத் தம் படைகளைக் குவித்தனர். பின்னர், வடுகரின் எருமைநாட்டை (மைசூரை)க் கடந்து, ஆற்றூர்க் கணவாய்ப் பக்கம் மலைகளை வெட்டிப் பாதைகளை அமைத்தும் செப்பனிட்டுக் கொண்டும் தமிழகத்தின்மீது படையெடுத்தனர்.

இந்த அயலார் படையெடுப்பை முறியடிக்கச் சேரரும் பாண்டியரும் தம்கீழ் நிற்க, சோழப் பேரரசன் இளஞ்சேட் சென்னி மோரியருடன் பல முறை சண்டையிட்டு அவர்களை முறியடித்தான். வடக்கத்திய மோரியர்கள் இதனால் புதுப் புதுப் படைகளைக் குவித்தனர். இப் படைகள் பெரும்பாலும் நாடோடி வடுகப்படைகளாகவே இருந்திருக்க வேண்டும். இவ் வம்பர் படைகளை எல்லாம் தமிழர் படைகள் வென்றன. தோற்றோடிய வம்ப மோரியர்கள், துளுநாட்டை நோக்கித் தலைதெறிக்க ஓடினர்.[89]

இது போன்ற வடக்கத்தியப் படையெடுப்புகளுக்கெல்லாம் வேங்கடமலைக்கு அப்பாலிருந்த கொடிய மலைப்பகுதிகளில் வாழ்ந்துவந்த கீழைவடுகர்களும் உறுதுணையாக இருந்தனர். கடைக்கழக(சங்க)க் காலத்திலிருந்து இந்த வடுகர்கள் என்றுமே வடக்கத்தியப் பேரரசுகளுக்கும் படையெடுப்பாளர்களுக்கும் எடுபிடிகளாகவும் கூலிப்படைஞராகவும் இருந்து வந்தனர். மோரியர் படைகளுக்குப் பாட்டை அமைத்துக்கொடுத்து, அவர்களுக்குச் சாரணர்களாகவும் வழிகாட்டிகளாகவும் இருந்தவர்கள் கோசர் எனப்பட்ட கன்னட வடுகரே ஆவர்.

மன்றத்தில் இனிய முரசறையப்பட்டுப் பகைவரின் போர் முனையை அழித்தபோது, மோகூர் பழையன் பணிய மறுக்கவே, அவன்பால் பகையுற்ற குதிரைப்படையுடைய வம்ப மோரியர்களின் தேர்கள் தங்குதடையின்றிச் செல்வதற்காக மலைகளை உடைத்துப் பாதை அமைத்தனர். மோரியருக்குப் பாதை அமைத்தவண்ணம் தெற்குநோக்கி வந்த இவ் வடுகர்கள், எருமைநாடு எனப்பட்ட மைசூர் வரையில் கடைக்கழக(சங்க)க் காலத்திலேயே வந்தேறியவர்களாவர்.

'இளம் மயிலின் தோகையை எடுத்து அதை நீண்ட வாரைக் கொண்டு வலிய வில்லில் கட்டி, அவ் வில்லின் விளிம்பில் நாணைக் கட்டி, அந்த நாணினின்று பெரும் ஒலியுடன் ஏவப்படும் அம்பையுடைய முரண்மிக்க வடுகர்கள், கீழைக் கங்கைக் கரை மோரியர்கள் தெற்கு நோக்கிப் படையெடுத்து வந்தபோது, அம் மோரியர் படைக்கு முன்னால் வழிகாட்டிகளாகத் துணைக்கு வந்தனர். பனிமூடி வானளாவிய மலைகளின் ஊடே அம் மோரியரின் தேர்கள் பெயர்வதற்குத் தடையாக இருந்த பாறைகளை உடைத்து வழி செய்தனர்.' இந்தப் பொருளில் வரும்,

www.tamilarangam.net



"ஒல்கு இயல் மடமயில் ஒழித்த பீலி
வான்போழ் வல்வில் சுற்றி நோன்சிலை
அவ்வார் விளிம்பிற்கு அமைந்த நொவ்வியல்
கனைகுரல் இசைக்கும் விரைசெலல் கடுங்கணை
முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு
விண்ணுற ஓங்கிய பனிஇருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி உருளிய குறைத்த
அறைஇறந்து அவரோ சென்றனர்"[90]

என்னும் வரிகள் அந்த வரலாற்றுச் செய்தியைச் சொல்கின்றன.

'விண்ணளாவும் வகையில் நெடிதுயர்ந்த பெரிய மலைகளினூடே செல்லும் தேர்களையுடைய மோரியரின் பொன்னாலான தேர் ஆழிகள் தடையின்றிச் செல்லும் வகையில் வெட்டி வழியாக்கிய குன்றங்களைக் கடந்து சென்றவராயினும்' என வரும்

"விண்பொரு நெடுவரை இயல்தேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த"[91]

என்னும் அகநானூற்று வரிகளும் அதையே கூறுகின்றன.

வடஇந்தியாவையும் ஆந்திரத்தையும் தமிழர்நாட்டையும் நோக்கி ஆற்றுப்படுத்திய வடுகவழி என்னும் கிழக்குக் கடற்கரைப் பாதையைப்பற்றிக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.[92] ஆகவே, தமிழகத்தை வடவரால் பன்னூறு ஆண்டுகளாக வெல்ல முடியவில்லையெனினும், அவ் வடவரின் ஊடுருவலுக்குப் பாட்டை அமைத்துக் கொடுத்த கைக்கூலி இனம் வடுகர் இனமே என்பது மிகப் பெரிய வரலாற்று உண்மையாகும்.

## புறப்பகை ஓட்டியவன் அகப்பகையால் வீழ்ந்தான்!

தொண்டியைத் தலைநகராகக்கொண்டு ஆண்டுவந்த சேரமான் கோதை மார்பனுக்கும் பாண்டிய மன்னனான பழையன் மாறனுக்கும் இடையில் பகை மூண்டது. இந் நிலையில், சோழன் கிள்ளி வளவன் கூடல்மாநகரை முற்றிப் பழையன் மாறனை வென்று அவனது குதிரைகளையும் யானைகளையும் கவர்ந்தான். இதைக் கண்டு சேரன் மாக்கோதை பேருவகையுற்றான்!*

---

* "..................................நெடுந்தேர்
இழையணி யானைப் பழையன் மாறன்
மாடமலி மறுகின் கூடல் ஆங்கண்
வெள்ளத் தானையொடு வேறுபுலத்து இறுத்த
கிள்ளி வளவன் நல்அமர் சாஅய்க்
கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி
ஏதின் மன்னர் ஊர்கொளக்
கோதை மார்பன் உவகையிற் பெரிதே"[93]

www.tamilarangam.net



'மோகூர் பழையனுக்கு அஞ்சி அறுகை என்பவன் ஓடி ஒளித்துக்கொண்டான். இதனால், மோகூர்மீது படையெடுத்த சேரன் கடல்பிறகோட்டிய செங்குட்டுவன் அவனது அரண்களை அழித்தான். காவல்மிக்க அவனது முரசைக் கைப்பற்றினான். அப்பழையனை அடிமைப்படுத்தினான். அவனுடைய காவல்மரமான வேம்பை அடியோடு வெட்டிச்சாய்த்து, அதைக் கொண்டு ஒரு முரசு செய்வதற்காகச் சிறு சிறு துண்டங்களாக்கி அம் மோகூர் பழையனின் களிறுகளையே கடாக்களாய்ப் பூட்டி அவற்றைக் கொண்டு வஞ்சிநகரத்திற்குக் கொண்டுபோனான்'[$]

தமிழகத்தின் எல்லையைக் காத்த இம் மோகூர் பழையனை இன்னொரு தமிழனான சேரன் ஒருவனே அடிமைப்படுத்தினான்! அகப்பகை என்னும் பொல்லாப் பேய், தமிழரை இவ்வாறு வீழ்த்தியது.

## உறவாடிக் கெடுத்த வந்தேறி!

சேரமான் கோதைக்குப் படைத்தலைவனாக இருந்தவன் பிட்டங்கொற்றன். இவன் குதிரைமலைக்குத் தலைவன். இவனுக்கும் கோசர் என்னும் வடுகர்கள் கூலிப்படைஞராக இருந்தனர்.

'வெற்றிமாலையையுடைய இளைய கோசர்கள் பலர் படைப்பயிற்சி பெறும் களரியில் போர்க்கலையைக் கற்றனர். அக் களரியில் அவர்கள் போர்க்கலை பழகுகையில், முருங்கை மரத்தாலான ஒரு தூணைக் குறியாக வைத்து வேல் எறிந்தனர்.'[@] இவ்வாறு வரும் பட்டினத்துக் காரிக்கண்ணனாரின் பாடல், கோசர்கள் முதலில் பிட்டங்கொற்றனின் படையிலும் கூலிப்படைஞராக இருந்ததைக் காட்டும். இவ்வாறிருந்த அவ் வடுகர்கள் பின்னர் பிட்டங்கொற்றனான தமிழனுக்கு இரண்டகம் செய்துவிட்டு அவனுக்கு எதிராகப் படையெடுத்துவந்த கீழைக்கங்கைக்கரை மோரியர் பக்கம் சேர்ந்து போரிட்டனர்! இதுவும் கோசரின் வடுக 'வாய்மை'யைக் காட்டும்!

திதியனின் படையில் கோசர்கள் பலர் கூலிப்படைஞராக இருந்தனர். அன்னி மிஞிலி என்னும் பெண் தன் தந்தையின் கண்ணைக்

---

$ "நுண்கொடி உழிஞை வெல்போர் அறுகை
சேணன் ஆயினும் கேள்என மொழிந்து
புலம்பெயர்ந்து ஒளித்த களையாப் பூசற்கு
அரண்கள் தாவுநீஇ அணங்குநிகழ்ந் தன்ன
மோகூர் மன்னன் முரசம் கொண்டு
நெடுமொழி பணித்தவன் வேம்பு முதல் தடிந்து
முரசுசெய முரச்சிக் களிறுபல பூட்டி"[94]

@ "இளம்பல் கோசர் விளங்குபடை கன்மார்
இகலினர் எறிந்த அகல்இலை முருக்கின்
பெருமரக் கம்பம் போலப்"[95]

www.tamilarangam.net



கெடுத்துக் குருடாக்கிய கோசரைத் திதியன் அழுந்தூர்வேளைக் கொண்டு கொல்வித்துப் பழிதீர்த்துக் கொண்டாள் எனப் பரணர் கூறுகின்றார்.[96]

இத் திதியன், முதலாம் கரிகாலனின் காலத்தவன். அந்த முதலாம் கரிகாலனின் காலத்திலும் சோழரின் படைத்தலைவனாகவும் அறமன்றத்தலைவனாகவும் இருந்தான். இரண்டாம் கரிகாலனின் தாய் அழுந்தூர்வேளின் மகள் என்பர்.[97] இந்தத் திதியனின் தலைநகர் குறுக்கை. இவனது காவல்மரம் புன்னை. அன்னி என்பவனுடன் திதியன் குறுக்கைப் பறந்தலையில் சண்டையிட்டு மடிந்தான். திதியனின் காவல்மரத்தை அன்னி வெட்டியெறிந்தான்.[98]

மேற்சொன்ன நிகழ்வுகள் ஓர் உண்மையைக் காட்டுவன. கோசர்கள் தமிழகத்தின் எல்லைகளுக்குள் முதன்முதலில் புகுந்தது நேரடிப் படையெடுப்பு வழியாக இல்லை. இவர்கள் கூலிக்குப் படையூழியம் செய்வது என்னும் சாக்கில் வந்தேறியவர்கள். பின்னர், தமிழரசர்களையே தம்வயமாக்கிக்கொண்டு பின்னர் அவரோடு பகைகொண்டிருந்த வேறு தமிழரசர்களைத் தத்தம் சொந்த நாடுகளை விட்டே சூழ்ச்சியால் விரட்டியடித்த நயவஞ்சகர் என்பதே அந்த உண்மையாகும். வந்தேறிகளின் 'வாய்மை' எல்லாம் ஊடுருவல் சூழ்ச்சியே என்பது இதனால் விளங்கும். இத்தகைய ஊடுருவல்களுக்கு அடுத்தே இவ் வடுகரின் படையெடுப்புகள் நிகழ்ந்தன.

## வடுகரை விரட்டினர்!

கொங்குநாட்டிற்குள் புகுந்து காலூன்றிய கோசராகிய மேலை வடுகர்கள், தமிழ் மூவேந்தருக்கு எதிராக இடையறாது குறும்பு செய்துவந்தனர். தமிழகத்தின் வடவெல்லையில் கீழை வடுகர்கள் இடையறாது தொந்தரவு தந்துவந்தனர். இவ்வாறு தமிழகத்தின் மேற்கிலும் வடக்கிலும் ஓயாது குறும்பு செய்துவந்த இவ் வடுக அநாகரிகரைச் சோழர்கள் அவ்வப்போது வெருட்டி ஓட்டிவந்தனர். ஆனாலும், இவ் வடுகரின் குறும்பு ஓய்ந்தபாடில்லை. போதாமைக்கு, பாழி என்னும் போர்உத்திச் சிறப்பு மிக்க கோட்டையரணை இவ் வம்ப வடுகர் தமதாக்கிக்கொண்டனர்.

இதனால், வடுகரை அப் பாழியிலிருந்து வேரறுக்க முடிவு செய்தான் சோழப் பேரரசன். தமிழரையும் தமிழரின் மண்ணுரிமையையும் வந்தேறி வடுகப் படையெடுப்புகளிலிருந்தும் அறலைப்புகளிலிருந்தும் காக்கும் குடிக்கடமையைச் செய்து முடித்திடச் சோழன் செருப்பாழியெறிந்த இளஞ்சேட்சென்னி துணிந்தான். இவனது காலம் கி. மு. 2ஆம் நூற்றாண்டு. கோசர் வடுகர்கள் கைப்பற்றிய செம்பைப்போல் வலிமையான பாழிக் கோட்டையை அழித்து வம்ப வடுகரின் தலைகளை அச் சோழன் சவட்டினான் என இடையன் சேந்தன் கொற்றனார் விளம்புவார்

www.tamilarangam.net



"எழாஅத் திணிதோள் சோழர் பெருமகன்
விளங்குபுகழ் நிறுத்த இடம்பெருஞ் சென்னி
குடிக்கடன் ஆகலின் குறைவினை முடிமார்
செம்புஉறழ் புரிசைப் பாழி நூறி
வம்ப வடுகர் பைந்தலை சவட்டிக்
கொன்ற யானைக் கோட்டில் தோன்றும்"[99]

என அவர் களம்பாடினார். இளஞ்சேட் சென்னி விரட்டியடித்த கலிங்க மன்னன் காரவேலனே என்பர்.[100]

தென்பரதவரின் குறும்புகள் அடங்கவும், வடவடுகரின் வாளால்வந்த கேடுகள் ஒழியவும் செய்து சிறப்புற்றவன் சோழன் செருப்பாழியெறிந்த இளஞ்சேட்சென்னி. இந்தச் சோழனின் தலை நகரின் வெண்சுண்ணாம்பு பூசிய மாடத்தின் முற்றத்தில் இருந்து கொண்டு தன் கிணையை மீட்டி, எஞ்சா மரபினனான அவனது சிறப்பைப்பற்றிப் பாடின ஊன்பொதி பசுங்குடையாரின் பாடலும் இந்தச் செய்தியை உறுதிப்படுத்துகின்றது.*

பரதவர் இரு வகுப்பினராவர். கடலில் இறங்கி மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பி வாழ்ந்த மீனவர்கள் இவர்களில் ஒரு பிரிவினர். இவர்கள் நெய்தல்நில மக்கள். தென்பரதவர் என்பவர் கள் இன்னொரு வகுப்பினர். இவர்கள் பாண்டியநாட்டுக் கடற்கரை யில் வாழ்ந்துவந்த சிற்றரசர்களாவர். இத் தென்பரதவர்க்குத் தலை வனான மத்தி என்பவனைப்பற்றிச் சிறுபாணாற்றுப்படை குறிப் பிடுகின்றது.[102] காவிரியாறு கடலில் கலக்கும் இடத்தில் கழாஅர் என்னும் பரதவரின் குறுநாடு இருந்தது.[103] பரதவர் தலைவனான மத்தி, எழினி என்பானைக் கொன்று அவனது பல்லைப் பிடுங்கிவந்து தன்னுடைய வாயிற்கதவில் பதித்துக்கொண்டானாம். வெண்மணி என்னும் இடத்தில் மத்தி ஒரு புதிய கடல்துறையை அமைத்தான்.[104]

சோழர்க்கும் பாண்டியர்க்கும் தென்பரதவர்கள் பண்டு கப்பலோட்டிகளாகவும் இருந்துவந்துள்ளனர். தோற்ற இக் கடற்படை ஞர்கள் சீர்குலைந்து கடம்பரைப் போல் பின்னர் மிக வலிமையான கடற்கொள்ளையராக மாறியிருக்கலாம். உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட தித்தனின் காலத்தில் மத்தியைத் தலைவனாகக்

---

* "தென்பரதவர் மிடல்சாய
வடவடுகர் வாள்ஒட்டிய
தொடையமை கண்ணித் திருந்துவேல் தடக்கைக்
கடுமா கடைஇய விடுபரி வடிம்பின்
நற்றார்க் கள்ளின் சோழன் கோயில்
புதுப்பிறை யன்ன சுதைசெய் மாடத்துப்
பனிக்கயத் தன்ன நீணகர் நின்றுஎன்
அரிக்கூடு மாக்கிணை இரிய ஒற்றி
எஞ்சா மரபின் வஞ்சி பாட."[101]

www.tamilarangam.net



கொண்ட பரதவர்கள், அவன் ஆட்சிக்குள் அடங்கி ஒடுங்கினர் சோழன் இளஞ்சேட்சென்னியும் இப் பரதவர்களை வென்று அடக்கினான். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மதுரையை ஆண்டபோது, இத் தென்பரதவர் அதே போல் அடக்கப் பட்டனர். இளஞ்சேட் சென்னி வடக்கிலிருந்தும் வந்த வடுகரான ஒட்டர்களின் தாக்குதல்களையும் முறியடித்தான்.

தென்பாண்டிநாட்டின் கடற்கரையிலிருந்து தமிழக அரசுகளை எதிர்த்துக் குறும்பு செய்துவந்த தென்பரதவர்கள், பாண்டியர்க்குப் பகைவராகவும் துணைவராகவும் காலத்திற்கேற்ப இருந்தனர். இப் பரதவர்கள் இடைக்காலப் பாண்டியர் காலத்தில் வலிமை குன்றி, ஒடுங்கினர்.[105]

## அகப்பகை முடிக்க வடபுலம் நாடல்!

கஞ்சங்குல்லையைத் தலையில் கண்ணியாகச் சூடிய வடுகரின் பகைநாடான வேற்படை மிகுந்த கட்டி என்பவனின் நாட்டிற்கு அப்பால், தமிழ் பேசப்படாத நாடுகள் இருந்தன. இதனால், இக் கட்டியின் நாடு வடுகரின் நாட்டை அடுத்து இருந்தது என்பதும், அவன் வடுகரை எதிர்த்து நின்றான் என்பதும் விளங்கும்.[$] இக் கட்டி, பவானி ஆற்றங்கரையில் ஆண்டுவந்தான். பிற்காலத்தில் சேலம் மாவட்டத்துத் தாரைமங்கலக் கோயிலைக் கட்டிய கட்டிமுதலிகள் இவன் வழியினர் அல்லர்.

மெய்வலிமையும் படைவலிமையும் மிக்க பாணனும் கட்டியும் உறையூரை ஆண்டுவந்த தித்தன் வெளியனுடன் மற்போர் புரியாமல் அஞ்சி ஓடினர்.[107] பின்னர், சோழன் பெரும்பூட் சென்னி பங்கேற்ற கழுமலப்போரில், இக் கட்டியும் தோற்கடிக்கப்பட்டான்.[108]

சேரன் செங்குட்டுவனின் தாய், சோழர்குடியினள். ஆகவே சோழன் கிள்ளி வளவன் இவனது மருகனாவான். இந்தக் கிள்ளி வளவன் ஆட்சிகட்டிலேறுவதை ஒன்பது சோழர்குடி இளவரசர்கள் எதிர்த்தனர். சேரன் செங்குட்டுவன் தன் மருகனான கிள்ளிவளவ னுக்குச் சார்பாகப் போரிட்டு அந்த ஒன்பது இளவரசர்களையும் (திருச்சி நகர்ப்பகுதியிலிருந்த பண்டைய உறையூரின் தெற்கு வாயி லின் அருகிலுள்ள) நேரிவாயில் என்னும் இடத்தில் முறியடித்தான்.[109]

சோழன் நலங்கிள்ளிக்குச் சோழ இளவரசனான நெடுங் கிள்ளியே பகையானான். இவர்களுக்கு இடையில் நடந்த காரி யாற்றுப் போர் இன்று திருவள்ளூர்-காளத்திச் சாலையிலுள்ள இராம

---

$ "குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னாட்டு உம்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்"[106]

www.tamilarangam.net



கிரி என்னும் இடத்தில் நடந்தது. இக் காரியாறுதான் இன்று தெலுங்கில் 'காளிந்தி' என்றும், 'காலேறு' என்றும் இரட்டையாறுகளாகப் பெயர் திரிந்துள்ளது. இந்தக் காரியாற்றுப் போரில் நெடுங்கிள்ளிக்குத் துணையாக வடபுலத்து வடுகர் வந்திருக்கக் கூடும் என்பது ஆய்ந்தோர் கருத்து.[110] இம் முதலாம் காரியாற்றுப் போரில் மடிந்த நெடுங்கிள்ளி, காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி ஆனான்.

சேரனும் பாண்டியனும் கிள்ளிவளவனின் (மாவண் கிள்ளியின்) ஆட்சியின் பிற்பகுதியில் தமிழகத்தின் வடவெல்லையிலிருந்த காரியாற்றில் மீண்டும் பொருதனர். இதுவே இரண்டாம் காரியாற்றுப் போராகும். சோழனின் தம்பி இப் போரில் பிற இரு தமிழ் வேந்தர்களையும் முறியடித்தான்.* தமிழகத்தில் சோழரின் கை ஓங்கிவந்ததைக் கெடுப்பதற்கென்றே சேரரும் பாண்டியரும் வடபுல அரசரோடு சேர்ந்து சோழனை அடக்க முயன்றிருக்கலாம் என்பது கா. அப்பாதுரையாரின் துணிபு.[112] இந்த வடபுல அரசர்களின் படையில் நாடோடி அநாகரிக வடுகர் இல்லாமல் இருந்திருக்க முடியாது.

## குலைந்த படை, ஆறலைத்தது!

மழவர் பெருமகன் எனப்பட்ட அதிகமானின் மிகப் பழைய பெருங்குடியான மழவர்குடியிலிருந்தே சேரர்குடியும் அதியர் குடியும் கிளைத்தனவென ஆய்வாளர் கூறுவர்.[§] சேர மன்னனை 'மழவரின் கவசம்' என்னும் பொருளில் "மழவர் மெய்ம்மறை"[114] எனப் பதிற்றுப் பத்து குறிப்பிடுகின்றது. கடையேழு வள்ளல்களில் ஒருவனான ஓரியும் மழவர்குடியினன்.[@]

"மழவும் குழவும் இளமைப் பொருள"[116]

எனத் தொல்காப்பியம் பொருளுரைப்பதால், மழவர் என்றால் இளம் வீரர்' என்று ஆகும். ஓரியையும் அதியமானையும்கூட மழவர்குடியினர் எனக் கடைக்கழக இலக்கியங்கள் கூறுகின்றன. அந்த ஓரியை 'வேட்டுவன்' என்றும், அதியமானை 'அதியர்' குடியினன் என்றும் 'பாணர்'குடியினன் என்றும்கூட அவை குறிப்பிடுகின்றன. குறும்பு

---

* "எஞ்சா மண்ணசை இகலுளம் துரப்ப
வஞ்சியி னிருந்து வஞ்சி சூடி
முறஞ்செவி யானையும் தேரும் மாவும்
மறங்கெழு நெடுவாள் வயவரும் மிடைந்த
தலைத்தார்ச் சேனையொடு மலைத்துத் தலைவந்தோர்
சிலைக்கயல் நெடுங்கொடி செருவேல் தடக்கை
ஆர்புனை தெரியல் இளங்கோன் தன்னால்
காரியாற்றுக் கொண்ட காவல் வெண்குடை
வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி"[111]

§ "வழூவில் வன்கை மழவர் பெரும"[113]

@ "மழவர் பெருமகன் மாவள் ஓரி"[115]

www.tamilarangam.net



என்னும் குறுங்கோட்டையரணைக் காத்து வந்தவராகச் சொல்லப் படும் 'மழவர்' என்னும் பெயரும், படைஞரைக் குறிக்கும் 'மறவர்' என்னும் பெயரும், படைத்தொழில்வழி வந்த பெயர்களாகும்.

இம் மழவர்கள் எப்போதும் சிறந்த குதிரைகளுடன் இருந்தனர் என்பதை "உருவக் குதிரை மழவர்"[117] என்னும் குறிப்பால் விளங்கும். இம் மழவர்குடியுடன் ஆய் அல்லது ஆவிக்குடி பெரும் பகை கொண் டிருந்தது.

எந்த அரசனுக்கும் அடங்காத மழவர்குடியினர் சிலர் வேங்கட மலை வரையில் சுற்றியலைந்தனர். பிறகு இவர்கள் சோழநாட்டில் நிலையாகத் தங்கி வாழத் தலைப்பட்டனர். மழவர்கள் வாழ்ந்துவந்த இடம் மழவர்நாடு எனப்பட்டது. இந்த மழவர்கள் பாடியமைத்துத் தங்கிய இடம் 'மழப்பாடி' என்றானது.

ஆயினும், மழவரும் மறவரும் வெவ்வேறு குடிகளாவர்.

"நுழைநுதி நெடுவேல் குறும்படை மழவர்
முனைஆத் தந்து முரம்பின் வீழ்த்த
வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல்லாண் பதுக்கை கடவுட் பேண்மார்
நடுகற் பீலி சூட்டித் துடிப்படுத்துத்
தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்
போக்குஅருங் கவலைய புலவுநாறு அருஞ்சுரம்"[118]

என்னும் அகநானூற்றுப் பாடல், மழவரும் மறவரும் வெவ்வேறு குடியினர் என்பதைக் காட்டும். வேலேந்திய கோட்டை மறவர்கள் தம் நாட்டில் புகுந்து ஆநிரைகளை மீட்கப் போரிட்டனர். போரில் இறந்துபட்ட மழவர்களுக்கு நடுகல் நட்டுப் பீலி சூடித் தோப்பிக்கள் ளோடு ஆட்டுக்குட்டியையும் பலியிட்டுப் பதுக்கைக் கடவுளைப் பேணியதைப் பற்றிய பாடல் அஃதாகும்.

சிற்றரசர்க்கு வாய்த்த குறும்பை (காட்டரணை) உடையவ ராகவும், வேலினை ஆள்பவராகவும் இங்கு மழவர்கள் காட்டப் படுகின்றனர். மறவர்களோ, வில்லையே தலையாய கருவியாகக் கொண்ட பாலைநில மக்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். இப் பாடலில் தென்பெண்ணையாற்றின் முன்துறையில் இருந்த மலைய மான் திருமுடிக்காரியின் கொடுங்கால் என்னும் ஊரும் குறிப்பிடப் படுகின்றது. மழவர்கள் கோட்டைப் பணியாளர் ஆவர் என்னும் பொருளில் இளையர் என்றும் கூறப்படுகின்றனர். இந்த இளையர் கள் அரசர்க்கு மெய்காவலராகவும் இருந்தவர்களாவர். மழவர்கள் நல்ல குதிரைப்படைஞராகவும் விளங்கினர். சேரரிடமும் ஓரியிடமும் இவர்கள் கூலிப்படைஞராக இருந்தனர்.

மேற்சொன்ன அகநானூற்றுப் பாடலில் வரும் குறும்பு என்னும் சிற்றரணைக் காத்துநின்ற குறும்படையினராகக் கோட்டைக்காவல்

www.tamilarangam.net



புரிந்துவந்த இம் மழவர்கள், களவுத்தொழிலையே தம் தொழிலாகக் கொண்ட பாலைநிலத்து மக்களாயினர்.* இங்குக் குறிப்பிடப்படுவது ஒடுங்காடு என்னும் பாலைநிலமாகும். இதற்கும் அப்பால் குட்டுவனின் நாடு இருந்தது.

'செம்மறியாட்டுக் கிடாயின் கொம்புபோல் சுருண்டு கடை சுரிந்த பிடரியை மறைக்கும் தலைமயிருடன் கண் சிவந்தவராக இருந்த மழவர்கள், தங்களின் வாயிலிருந்து எழும் பகைச்சொல்லைத் தடுப்பதற்காகப் புற்றுமண்ணை வாயில் அடக்கிக் கொள்வர். தீப்பொறி கிளப்பும் வெண்ணெய் கடையும் மத்தையும் கவர்ந்து செல்வர். காலடித் தடங்களை மறைக்கும் செருப்புகள் ஒலிக்க ஆநிரைகள் கட்டப்பட்டுள்ள காவல்மிக்கத் தொழுவங்களிலுள்ள ஆநிரைகளை எல்லாம் கொள்ளையிடுவர்.'$ உப்புவணிகர் விட்டுச்சென்ற கல்அடுப்பில் ஊனைப் புழுக்கி உண்பர்.@ மழவர்களைப் பற்றிய செய்திகள் இவை.

கூட்டமாய்ச் செறிந்த மழவர்கள், தம் தேர்கள் செல்வதற்கேற்ப உடைத்த மலைவழியில் செல்லும் வணிகச் சாத்தர்களின் சோறு பொதிந்த பனையோலைக் குடையைப்பற்றி அகநானூறு கூறுகின்றது.#

சிறந்த கொம்பையும் கரிய காம்பையும் உடைய மரா மரத்தின் வெள்ளையான மெல்லிய பூங்கொத்தைச் சுரிந்து வளைந்த தலைமயிர் பொலியச் சூடி ஆறலைக்கும் தொழிலைத் தவிர பிற தொழில் எதையும் கற்காத மழவர்கள், தம்முடைய சுரத்தில் வரும் வணிகச் சாத்தர்களைப் பார்க்கும் அச்சமூட்டும் பாலைநில வழிகளையுடைய மொழிவேறுபட்ட திசையில் சென்றிருந்த ஒரு தலைவனைப்பற்றி அகநானூறு கூறும்.£ மழவர் வேற்று மொழியினரோ என்னும் ஐயத்தை இப் பாடல் கிளப்பும். ஆனால், அம் மழவரைப் பற்றிய பிற இலக்கியக்

---

* "கடுங்கண் மழவர் களவுஉழவு எழுந்த"[119]

$ "தகர்மருப்பு ஏய்ப்பச் சுற்றுபு சுரிந்த
சுவல்மாய் பித்தைச் செங்கண் மழவர்
வாய்ப்பகை கடியும் மண்ணொடு கடுந்திறல்
தீப்படு சிறுகோல் வில்லொடு பற்றி
நுரைதெரி மத்தம் கொளீஇ நிறைப்புறத்து
அடிப்புதை தொடுதோல் பறைய ஏகிக்
கடிபுலம் கவர்ந்த கன்றுடைக் கொள்ளையர்"[120]

@ "உமண் சாத்து இறந்த ஒழிகல் அடுப்பில்
நோன்சிலை மழவர் ஊன்புழுக்கு அயரும்
சுரன்......................................................"[121]

\# "உறுகண் மழவர் உருள்கீண் டிட்ட
ஆறுசெல் மாக்கள் சோறுபொதி வெண்குடைக்"[122]

£ "........................................ செங்கோல்
கருங்கால் மராஅத்து வாஅல் மெய்இணர்ச்
சுரிந்துவணர் பித்தை பொலியச் சூடிக்

www.tamilarangam.net



குறிப்புகள் யாவும், அவர்கள் வடுகர் வாழ்ந்துவந்த வேங்கடமலைக்கு அப்பாலும் சென்று ஆறலைத்து வந்ததைக் காட்டுவனவாகும்.

கலக்கமூட்டும் போர்முனையுடைய சிற்றூரினர் தலைமேல் கையை வைத்து வருந்தும்படியாக அவர்களின் கொழுத்த மாட்டைத் திருடிச் சென்ற மழவர்கள், கூரிய படைக்கலன்களை ஏந்தியவண்ணம் செருப்புப் பூண்ட அடிகளுடன் சென்று தெள்ளிய சுனைநீரை அருந்த வேண்டியிருந்த கடும் சுரத்தில் வாழ்ந்துவந்தனர்.* சினந்து எழுந்த வரின் வெம்மையான போர் முனையை அழித்த கடும் வேகமுள்ள குதிரைகளையும், கழல் பூண்ட நீண்ட கால்களையும், தறுகண்மையை யும் உடைய அம் மழவர்கள் கொண்டாடும் பூந்தொடை விழாவின் தலைநாளன்று செய்வதைப் போன்று மணல் பரப்பிய அழகிய மனை முற்றத்தைப் பற்றியும் அகநானூறு பாடும்.$

மயில் இறகுகளை மாலையாகத் தொடுத்து அணிபவர்கள் மழவர்கள். பல்வகைப் பூக்களுடைய காட்டின் சுருங்கிய நிழலில், கன்றுள்ள பசுவைக் கொன்று அதன் ஊனை அவர்கள் சுட்டுத் தின்பர்.@ செறிந்த சுரைகளுடன் வெள்ளிய வேல்களையுமுடைய மழவர்களை, வீரர் சிலர் அஞ்சாது தடுத்து நிறுத்தினர்.#

உப்பு வணிகர்களின் பொதிகளைச் சுமந்துசெல்லும் கழுதை களைப் போலக் குறும்பாறைகள் வரிசையாகக் கிடக்கும் ஓர் இடத்தில், பல காலமாகத் தூது சென்று வரும் பார்ப்பான் ஒருவன் மடியில் ஓலைச்சுருளுடன் வருவதை மழவர்கள் பார்த்தனர். பட்டினியால் ஒடுங்கிய விலாவையுடைய அப் பார்ப்பானிடம் பொன் உள்ளது எனத் தவறாகக் கணக்குப் போட்டனர். அதனால், வீணாக அவனை

---

கல்லா மழவர் வில்லிடம் தழீஇ
வருநர் பார்க்கும் வெருவரு கவலை
மொழிபெயர் தேஎத்தர் ஆயினும்''[123]

* "கலங்குமுனைச் சீறூர் கைதலை வைப்பக்
கொழுப்புஆ தின்ற கூர்ம்படை மழவர்
செருப்புடை அடியர் தெண்சுனை மண்டும்
அருஞ்சுரம்..........................................''[124]

$ "........................................ கறுத்தோர்
தெம்முனை சிதைத்த கடும்பரிப் புரவி
வார்கழல் பொலிந்த வன்கண் மழவர்
பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம்''[125]

@ "பல்பூங் கானத்து அல்குநிழல் அசைஇத்
தோகைத் தூவி தொடைத்தார் மழவர்
நாகுஆ வீழ்த்துத் திற்றி தின்ற''[126]

# "செறிசுரை வெள்வேல் மழவர் தாங்கிய
தறுக ணாளர் நல்லிசை நிறுமார்''[127]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவர்கள் கொன்று போட்டனர்.* மழவர்களின் ஆறலைப்பு அவ்வளவு கொடுமையானது.

சேரர்படையில் நல்ல போர்வீரர்களாகவும் குதிரைவீரர்களாகவும் இருந்த அம் மழவர்கள், தங்களுடைய மழவர்புலம் பல்வேறு அரசர்களால் படையெடுக்கப்படவே அவர்தம் அரசு கெட்டும் படை குலைந்தும் போனமையால், வேறு வழியின்றி ஆறலைத்துக் கொள்ளையிடும் நிலைக்குத் தேய்ந்ததையே மேற்போந்த கழக இலக்கியப் பாடல்கள் காட்டுகின்றன. வழிப்பறிக் கொள்ளையராகக் கெட்ட இம் மழவர்கள், சேரநாடு தொடங்கித் தமிழகத்தின் வடவெல்லையான வேங்கடம் வரையிலும் அலைந்து திரிந்து, கொள்ளையிட்டு வாழ்ந்து வந்தனர்.

இவர்களைக் கள்வர் தலைவன் புல்லி அடக்கினான். இறுதியில், சோழநாட்டின் ஒரு பகுதியில் இவர்கள் அமைதியுற்று வாழலாயினர்.[129] இந்தச் செய்தி, அம் மறவர்களின் தெற்கு நோக்கிய பெயர்ச்சியைக் காட்டும்.

## புரையோடிய உட்பூசல்!

கொல்லிக்கூற்றத்தில் இருந்த தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அதியமான் நெடுமான் அஞ்சிக்குக் குதிரைமலையும்கூடச் சொந்தமாக இருந்தது. சேரனை அதிகமானின் முன்னோன் என ஔவையார் கூறுவார்.[130] பெரியாற்றின் கழிமுகத்திற்கும் பாலாயி (Baris) ஆற்றுக்கும் இடையிலான பெருநகரங்களை நிரல்படச் சொல்லும் தாலமி (Ptolemy) குறிப்பிடும் 'கொரயூர்' (Adarima Koreour) என்பது அதியமானின் குதிரையூர் எனப்பட்ட குதிரைமலையே ஆகும்.[131]

சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறையும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் போரிட்டனர். அப்போது, சோழன் தன் அமைச்சரை மலையமானிடம் விடுத்து, அவனைத் தன் பக்கம் போரிடுமாறு சொல்லச் செய்தான். திருமுடிக்காரியும் அவ்வாறே சோழனுக்கு உதவினான்.[132] பின்னர் அக் காரி தன்னுடைய திருக்கோவலூருக்குச் சென்று இனிதே இருந்தான். இக் காரியின் நாட்டில் முள்ளூர்மலை இருந்தது. பின்னர், அதியமான் நெடுமான் அஞ்சி,

---

* "அவணதாகப் பொருள் என்று உமணர்
கணநிரை அன்ன பல்காற் குறும்பொறைத்
தூதொய் பார்ப்பான் மடிவெள் ளோலைப்
படையுடைக் கையர் வருதிறம் நோக்கி
உண்ணா மருங்குல் இன்னோன் கையது
பொன்னா குதலும் உண்டெனக் கொன்னே
தடிந்துஉடன் விழ்த்த கடுங்கண் மழவர்"[128]

www.tamilarangam.net



மலையமான் திருமுடிக்காரியின் திருக்கோவலூரைக் கைப்பற்றி னான்.[$]

இவனிடம் தோற்று ஓடிய காரி, சோழர்க்கும் பாண்டியர்க்கும் துணைநின்றவன். இதனால், அதியன் சேரன் பெருஞ்சேரல் இரும் பொறையின் உதவியை நாடினான். இப் பெருஞ்சேரல் இரும்பொ றைக்கு வல்வில் ஓரி ஆண்டுவந்த கொல்லி மலைமீது ஒரு கண் இருந்தது. இதனை அறிந்து வைத்திருந்த காரி, அந்த ஓரியின் கொல்லி மலையின்மீது படையெடுத்துச் சென்று ஓரியைக் கொன்றான். அவ னுடைய கொல்லிமலையைக் கைப்பற்றி அதைச் சேரன் பெருஞ்சேரல் இரும்பொறையிடம் கொடுத்தான்.[@]

திருமுடிக்காரிக்கு உதவும் வகையில், அப் பெருஞ்சேரல் பின்னர் அதியனின் தலைநகரான தகடூரை முற்றினான். பாண்டியர், சோழர் படைகள் உதவிக்கு வருமெனக் காத்திருந்தான் காரி. காலம் தாழ்ந்தே அப் படைகள் வந்தன. பின்னர் அதியமானை எதிர்த்து ஒரு பெரிய போர் நடந்தது.[#] இப் போரைப்பற்றித் தகடூர் யாத்திரை என்னும் நூல் பாடும்.

அதியன் எழினி என்பான் அப் போரில் புண்பட்டு இறந்தான்.[*] இவன் அதியமான் நெடுமான் அஞ்சியின் மகனான பொகுட்டு எழினி எனக் கருதப்படுகிறது. இச் சாவைக் கண்டு அரண்ட சோழரும் பாண் டியரும் களத்தை விட்டு ஓடிவிட்டனர். அஞ்சியை வென்ற பெருஞ் சேரல் இரும்பொறை, தன்னுடைய படைத்தலைவனான பிட்டங் கொற்றனுக்கு அதியமானிடமிருந்து தான் பறித்த குதிரைமலையையே முற்றூட்டாக வழங்கினான்.[137] இப் பெருஞ்சேரல் இரும்பொறையே சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையாவான்.

பிட்டங்கொற்றன் சேரமான் கோதையின் படைத்தலைவனாக வும் இருந்தான்.[138] இவனுடைய படையில் வடுக வந்தேறிகளான

---

$ "முரண்மிகு கோவலூர் நூறிநின்
அரண்அடு திகிரி ஏந்திய தோளே"[133]

@ "..................................செவ்வேல்
முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலர்க்கு ஈத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி"[134]

# "கொல்லிக் கூற்றத்து நீர்கூர் மீமிசைப்
பல்வேல் தானை அதிக மானோடு
இருபெரு வேந்தரையும் உடனிலை வென்று
முரசும் குடையும் கலனும் கொண்டு
உரைசால் சிறப்பின் அடுகளம் வேட்டுத்"[135]

* "வையகம் புகழ்ந்த வயங்குவினை ஒள்வாள்
பொய்யா எழினி பொருதுகளம் சேர"[136]

www.tamilarangam.net



'இளமையான கோசர்கள் பலர்' ("இளம்பல் கோசர்''[139]) கூலிப்படை ஞராக இருந்தனர். பிட்டங்கொற்றனுக்குப் பிறகு அவனுடைய மக்கள் அக் குதிரைமலையை ஆண்டனர்.

ஆஅய் அண்டிரன் கொங்கர்களை மேற்குநோக்கி ஓடவைத் தான்.[$] கொங்கரின் கூலிப்படைஞராயிருந்த வடுகரையே கொங்கர் என்று இங்குக் குறிக்கலாம். கோசர்களைக் "கொங்கிளம் கோசர்''[141] எனச் சிலப்பதிகாரம் கூறும். கொங்குநாட்டில் அரசர்க்கு மெய்காவ லராக இந்தக் கோசர் வடுகர்கள் இருந்தனர் என்பதை இது காட்டு கின்றது போலும். சிலப்பதிகாரத்தின் காலத்தில் கொங்குநாட்டில் வடுகர்கள் நன்கு காலூன்றிவிட்டதையும் இது காட்டும்.

'வாய்மொழி தவறாக் கோசர்' எனப் பீற்றிக்கொண்ட கோச ராகிய வடுகரையே மோரியன் அசோகனின் கல்வெட்டுகள் 'சத்திய புத்திரர்' எனக் குறிப்பிடுகின்றன. தென்னார்க்காடு மாவட்டத்தின் திருக்கோவிலூருக்கு அருகிலுள்ள சம்பை என்னும் இடத்தில் கண் டெடுக்கப்பட்ட கற்படுகைகளில் காணும் ஒரு கல்வெட்டில்,

'ஸதிய புதோ அதியந் நெடுமாந் அஞ்சி ஈத்த பாளி''[142]

என்றுள்ளது. இக் கல்வெட்டு அசோகனின் காலத்திற்கும் முற்பட்டது. அதிகமான் நெடுமான் அஞ்சியையும்கூட இக் கல்வெட்டு, 'ஸதிய புத்திரன்' என்கிறது. கோசராகிய வடுக வழியினர் அதை வெட்டி யிருக்கலாம். சேரமான் வஞ்சனைப் புறநானூறு "வாய்மொழி வஞ்சன்''[143] எனக் குறிப்பிடுவதால், 'வாய்மொழி' என்னும் தமிழ்ச் சொல்லின் வடமொழியாக்கமே 'ஸத்தியபுதோ' என்பது விளங்கும்.

## வேந்தரும் வேளிரும்

மகள் என்னும் சொல் மகளிர் எனப் பன்மையாதலைப் போல், வேள் என்பது வேளிர் எனப் பன்மையானது.[144]

வேந்தரும் வேளிரும் என்றும் சேர்த்தே சொல்லப்படுவது பண்டைத் தமிழ் வழக்கு. வேந்தர்கள் முடியுடை மன்னர்களாவர். முடியில்லாச் சிற்றரசர்களைப் போன்ற வேளிர்களோ, அவ் வேந்தர் களுக்குக் கப்பம் கட்டிவந்தனர். முறைப்படுத்தப்பட்ட அரசமைப் புடைய நாடுகளையும் வரையறுக்கப்பட்ட மண்டிலங்களையும் நேரடி யாக ஆண்டுவந்தவர்களே வேந்தர் ஆவர். வரையறுக்கப்படாத எல்லைகளில் குறிப்பாக, சேர, சோழ, பாண்டியப் பேரரசுகளின் நேரடி ஆட்சிக்கு அப்பாற்பட்ட எல்லைப்புறங்களில் இருந்த நாடுகளே வேளிர்நாடுகளாகப் பொதுவாக இருந்தன.

ஓரிரு வேளிர் மட்டுமே சேர, சோழ, பாண்டியர் அரசாட்சி களின் கருப்பகுதியை ஒட்டி இருந்தனர். அஃதாவது, தமிழரின் கருப்

$ "..........................................கொங்கர்க்
குடகடல் ஒட்டிய ஞான்றைத்''[140]

www.tamilarangam.net



பண்பாட்டுப் பகுதியிலிருந்து வேறாகி நின்ற தமிழ்ப் பண்பாட்டின் புறத்திட்டுகளே வேளிர் அரசுகளாகின.

இவ்வாறு, சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தரின் ஆட்சியமைப்பின் கருப்பகுதிகளைத் தவிர்த்த புறப்பகுதிகளில் வேளிர்கள் ஆண்டுவந்தனர். மூவேந்தர் கைப்பற்றிய வேற்றுப் புலங்களை ஆளும் பொறுப்பு இந்த வேளிர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனால்தான், "மற்றை மண்டலத்திற்கு அரசராதற்குரிய வேளாளர்" என ஒளியரைப்பற்றி நச்சினார்க்கினியர் கூறுகின்றார்.[145] 'தமிழகம் தவிர்த்த வேறு நாடுகளை ஆள்கின்ற உரிமையுடையவர்கள்' என்பதே இதன் பொருளாகும். எனெனில், ஒளியர் என்னும் பெயர் வேளிரையே குறிக்கும் எனப் பட்டினப்பாலையின் 274ஆம் வரிக்கு எழுதப் பட்ட உரை கூறுகின்றது.[146] இவ்வாறாயின், இவர்கள் எல்லைப்புற ஆளுநர்களாவர்.

இவ் வேளிர்நாடுகளில் சில கொடுந்தமிழ் நாடுகள் என வகைப் படுத்தப்பட்டன.

"தென்பாண்டி குட்டம் குடங்கற்கா வேண்பூழி
பன்றி அருவா அதன்வடக்கு — நன்றாய
சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்"[147]

என்பது கொடுந்தமிழ் நாடுகளைப்பற்றிக் கூறும் நன்னூல் நூற்பா விற்கான மேற்கோள் பாடலாகும். இதனால், தமிழகத்தின் வடக்கே இருந்த வடுகருடன் கலந்த வேளிர்கள் சிலர், காலப்போக்கில் வேற்றி னத்தாராகத் திரிந்து, பின்னர் தாய்த்தமிழகத்தையே தாக்கிய படை யெடுப்பாளராகத் திரிந்தனர்.

தமிழகத்திலிருந்த வேளிர்கள் எழுவர் எனவும், ஐவர் எனவும், பதினான்கு எனவும் சொல்லப்பட்டன. கழக(சங்க) இலக்கியங்களில் பின்வரும் வேளிர்கள் வருகின்றனர்:

| # | பெயர் | நாடு | குடி | தலைநகர் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வேள் ஆவி | பொதினிமலை | ஆவிக்குடி | திருஆவி நன்குடி |
| 2 | வேள் ஆய் அண்டிரன் | பொதியமலை கவிரமலை | ஆய்நாடு | ஆய்குடி |
| 3 | நன்னன் வேள்மான் | பாழி, பரம்பு, பிரம்பு, நவிரம், ஏழிற்குன்றம், கொண்கானம் | | செங்கண்மா |
| 4 | வெளியன் வேண்மான் ஆஅய் எயினன் | புன்னாடு | | |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| 5 | வையாவிக் கோப்பெரும் பேகன் | வையாவிநாடு | ஆவிக்குடி | |
| 6 | மாவேள் எவ்வி | திருவீழிமிழலை | எவ்விக்குடி | திருநீடூர் |
| 7 | வேள் பாரி | பறம்புநாடு | எவ்விக்குடி | |
| 8 | இருங்கோவேள் | சிற்றரையம். பேரரையம் | எவ்விக்குடி | துவரை |
| 9 | மலையமான் திருமுடிக்காரி | மலாடுநாடு (முள்ளூர்) | | கோவலூர் |
| 10 | வல்வில் ஓரி | கொல்லிமலை | வேட்டுவர் (மழவர்குடி) | |
| 11 | கடியநெடுவேட்டுவன் | கோடைமலை | வேட்டுவர் | கடியம் |
| 12 | அதியமான் நெடுமான் அஞ்சி | பெரும்பாலை நாடு | அதியர்குடி (பாணர்குடி /மழவர்குடி) | தகடூர் |
| 13 | வேண்மான் பிடவூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் | பிடவூர் | | |
| 14 | மையூர்க்கிழான் வேள் | மையூர் | | |
| 15 | அழும்பில் வேள் | அழும்பில் | | |
| 16 | அழுந்தூர் வேள் | அழுந்தூர் | | |
| 17 | அகுதை | மேற்கநாடு | | கூடல் |

கடையேழு வள்ளல்கள் எனப்பட்டோர் பாரி, ஆய், எழினி, நள்ளி, மலையன், பேகன், ஓரி ஆவர். (கண்டீரக்கோ நாட்டிலுள்ள தோட்டிமலையை ஆண்டுவந்த வேட்டுவனான கண்டீரக்கோப் பெருநற்கிள்ளியே நள்ளி எனப்பட்டான்.) இவர்களில் பேகன், ஓரி, குமணன், அதியமான், பெருநற்கிள்ளி, கடியநெடுவேட்டுவன் ஆகிய வேளிர்கள் யாவரும் கொங்குநாட்டினர் ஆவர்.

இவ் வேளிர்களுக்குக் 'கிழான்' என்னும் பட்டப்பெயரும் உண்டு.[148] ஆயினும், இவ் வேளிர்க்குக் கீழே தத்தம் ஊர்ப் பெயரைத் தாங்கிய கிழார்கள் இருந்தனர். இக் கிழார்கள் தத்தம் ஊர்ப்பெயரை வைத்தே குறிப்பிடப்படுவதால், அவர்கள் தத்தம் ஊர்களுக்கு உரிமையாளராகவும் இருந்தனர். இவர்களே காணியாட்சி உரிமை யுள்ள காணியாளர் ஆகினர்.

காணியாளரான இக் கிழார்களுக்கு மேல்வாரம் என்னும் உரிமையும், இவர்களிடமிருந்து நிலத்தைப் பாட்டத்திற்கு (வாரத் திற்கு) எடுத்த குடியானவர்களுக்குக் கீழ்வாரம் என்னும் உரிமையும் என வகைப்படுத்தப்பட்டன. இதனால்தான், வேளாளர் என்போர் வேளிரோடு உறவு கொண்டாடினர். வேளான் என்பது வேளாளரில் ஒரு பிரிவையோ, குயவனையோ, குறிக்கும்.

www.tamilarangam.net



வேளிர்கள் அரசகுடும்பத்தவராவர். சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர் மரபு தமிழக வாழ்வியலில் உறுதியாக நிலைத்து விட்டபோது, அதற்கு முன்னர் மன்னராயிருந்த அவ் வேளிர்கள், முடிசூடும் உரிமையை இழந்தனர் என்பது ஒரு கருத்து.[149] முடிசூடும் அந்த முந்தைய உரிமையை அவ் வேளிர்கள் மீட்டெடுக்க முயன்ற போதெல்லாம் மூவேந்தர்கள் அவர்கள் தனியுரிமையுடன் வலிமை மிக்குத் தலையெடுக்க விடாமல் செய்தனர். இதற்கு நேர் எதிர்வினை யாக, மூவேந்தரில் ஒரு வேந்தன் தமிழகம் முழுவதற்கும் தானே தனித் தலைவனாக ஆக முற்பட்ட போதெல்லாம், இவ் வேளிர்கள் எல்லாம் ஒன்று கூடிப் பிற முடிவேந்தருடன் சேர்ந்து அவனை எதிர்த்து அவ் வாறு அவன் தனித்து ஓங்குவதைக் கெடுத்தனர்.[150]

வேந்தர் அல்லராயினும், இவ் வேளிர்கள் மூவேந்தர்களுக்குப் பெண் கொடுக்கும் உரிமையுள்ளவராக இருந்தனர். இதனை 'மகட் கோடல்' என்றனர். வேள்வு என்பது மணவரிசையாகத் தரப்பட்ட பொருளைக் குறித்தது. மணமகனின் வீட்டிலிருந்து மணமகளின் வீட்டுக்கோ, மணமகளின் வீட்டிலிருந்து மணமகனின் வீட்டிற்கோ, (தின்பண்டமாகத்) திருமணப் பரிசை விடுத்ததையே வேள்வெடுத்தல் என்றனர்.[151]

சேரநாட்டில் மருமக்கள் தாயமுறை மேலோங்கி இருந்தமை யால், இளவரசர்கள் எல்லாரும் பொதுவாக இவ் வேளிர்களின் புதல்வ ராகவே இருந்தனர். ஆயினும், வந்தேறி வடுகர்களின் படையெடுப்பி னால் தமிழகம் பன்னூறு ஆண்டுகளாகச் சீர்கெட்டபோது, இவ் வேளிர்கள் எல்லாம் 'சூத்திரர்' என்றே குறிக்கப் பெற்றனர். பிற்காலத் தில், நான்காம் வரணத்தவராக வைத்து இழிவுபடுத்தப்பட்டனர்.

இதற்கு முன்னர், சோழர்களை ஞாயிற்றுக் குலத்தவர் என்றும் திங்கள் குலத்தவர் என்றும் பொய்யாக இட்டுக்கட்டிய பிராமணியம், இந்த வேளிர்களை அழல் (அக்கினிக்) குலத்தவர் என்றும் கற்பித்துச் சொன்னது.

இவ் வேளிர்கள் சில காலங்களில் முடிமன்னரையும்கூட வென்றனர். அகுதை என்னும் வேள், பாண்டியரின் தலைநகரான கூடல்நகரை ஆண்டான். வேளிரால் விரட்டப்பட்ட பாண்டியர் பின்னர் கொற்கைக்குச் சென்று ஆண்டனர்.[152] உறந்தையிலிருந்து ஆண்டுவந்த போரவை கோப்பெருநற்கிள்ளி என்னும் சோழ அரசன் (அவனது தந்தை எனத் தவறாகச் சொல்லப்படும்) தித்தன் என்னும் வேளிரால் விரட்டப்பட்டுத் தொண்டைமண்டல ஆமூருக்குத் தப்பிச் சென்று வாழ்ந்தான். அங்கு மல்லன் ஒருவனுடன் மற்போரிட்டு அவன் வென்றான். பெருங்கோழி நாய்கன் என்னும் வணிகனின் மகளான நக்கண்ணையார் இவன்மீது காதல் கொண்டார்.[153]

இத் தித்தனின் மகனான வெளியனும் சோழரின் தலைநகரான உறந்தையிலிருந்து ஆண்டான்.

www.tamilarangam.net



## ஆந்திரப் பேரரசு

அண்டர் என்னும் குடியினரைப்பற்றிப் பதிற்றுப்பத்தில் வருகின்றது. இவர்கள் முல்லைநிலத்தவர். கழுவுள் என்பவன் இந்த அண்டரின் தலைவனாகச் சொல்லப்படுகிறான்.[154] தமிழகத்தின் வடவெல்லைக்கு வடக்கே இருந்த காமூர் இவனது தலைநகரமாம். தன்மீது படையெடுத்துவந்த பதினான்கு வேளிரையும் இக் கழுவுள், ஒட்டுக்காக வென்றானாம்.[155]

ஆநிரையைக் குறிக்கும் 'மாடு' என்னும் செல்வவளம் மிக்க நாட்டினன் இக் கழுவுள். இவனது படைஞர்கள் ஆநிரை கவர்ந்து வர வேற்றுப்புலங்களின்மீது இடைவிடாது படையெடுத்துவந்தனர். இக் கழுவுள் குடியினரின் ஆநிரை கவர்தலைத் தடுக்க விழைந்த சேரமான், அவனது காமூரைத் தாக்கி அந் நகரையே பாழாக்கினான்.

பாலும் வெண்ணெய்யும் நிரம்பி வழியச் செல்வச் செருக்குடன் வாழ்ந்துவந்த கழுவுளின் குடியினர், இதனால் ஏராளமான செல்வங்களை விட்டுவிட்டுப் பிற நாடுகளுக்குத் தப்பியோடினர்.[156] பதிற்றுப் பத்தில் எட்டாம் பத்தில் பெருஞ்சேரல் இரும்பொறை கழுவுளை வென்ற செய்தியை அரிசில் கிழார் கூறுகின்றார்.* இக் கழுவுளின் நாடு குறும்பர் நாடு.

இளஞ்சேரல் இரும்பொறையைப்பற்றிப் பாடும் பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பத்திலும்கூட இக் கழுவுளைப்பற்றிச் சொல்லப்படுகின்றது. இந்த இளஞ்சேரல் இரும்பொறையின் முன்னோர்கள், கடற்கொள்ளையராக இருந்து அரட்டிவந்த கடம்பரை வென்று, அக் கடம்பரின் காவல்மரமான கடம்பமரத்தை வெட்டியெறிந்தனர். காமூரில் இருந்த வண்ணம் இடையறாது சண்டையிட்டுவந்த கழுவுளைப் புறமுதுகிட்டு ஓடும்படி விரட்டினர். பிற மன்னர்களை அழித்தனர். விரைந்தோடும்

---

* "ஊஎரெரி கவர உருந்தெழுந்து உரைஇப்
போர்சுடு கமழ்புகை மாதிரம் மறைப்ப
மதில்வாய்த். தோன்றல் ஈயாது தம்பழி ஊக்குநர்
குண்டுகண் அகழிய குறுந்தாள் ஞாயில்
ஆரெயில் தோட்டி வௌவினை ஏறொடு
கன்றுடை ஆயம் தரீஇப் புகல்சிறந்து
புலவுவில் இளைஞர் அங்கை விடுப்ப
மத்துக்கயிறு ஆடா வைகற்பொழுது நினையூஉ
ஆன்பயம் வாழ்நர் கழுவுள் தலைமடங்கப்
பதிபாழாக வேறுபுலம் படர்ந்து
விருந்தின் வாழ்க்கையொடு பெருந்திரு அற்றென
அருஞ்சமத்து அருநிலை தாங்கிய புகர்நுதல்
பெருங்களிற்று யானையொடு அருங்கலம் தராஅர்
மெய்பனி கூரா அணங்கெனப் பராவலின்
பலிகொண்டு பெயரும் பாசம் போலத்
திறைகொண்டு பெயர்தி வாழ்கநின் ஊழி!"[157]

www.tamilarangam.net



குதிரைகளையுடைய அண்டரை விரட்டியடித்தனர். நன்னனின் காவல்மரமான வாகைமரத்தை வெட்டியெறிந்தனர். தம் பகைவரின் குருதியில் பிசைந்த சோற்றுக் குவியலை அயிரமலையிலுள்ள கொற்றவைக்குப் படைத்தனர்.[158]

அண்டர்களும் பொதுவர்களும் ஆகிய இடையர்குடியினரைக் குறும்பர் என்றனர். குறும்பு என்னும் சிற்றரணைக் கொண்டவர்களே குறும்பர் என்றோம். 'அண்டர்மகன் குறுவழுதி' என்னும் பெயர் கொண்ட கழகக்காலப் புலவர் பாண்டியனின் சிறப்புப் பெயரைத் தம் பெயராகக் கொண்ட குறுநிலமன்னர் குலத்தவர் ஆவார்.

பெருஞ்சேரல் இரும்பொறையால் காமூரே பாழாக, அவ் வூரை விட்டே வேற்றுநாடுகளுக்கு ஓடினர் அண்டர் என்னும் இடையர்குடியினர். இத்தகைய இடையர்குடியினர் மேற்கே நோக்கிப் பெயர்ந்த பின்னர் உருவாக்கிய ஓர் அரசே கி. மு. மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆந்திரப் பேரரசாக மலர்ந்தது போலும். நல்ல கூலிப்படைஞராக நாடுவிட்டு நாடு செல்லும் நாடோடித் தன்மையுடன் கூடிய அநாகரிக வடுகர்களின் துணையின்றி, அந்த ஆந்திரப் பேரரசு அவ்வளவு பெரிய பேரரசாக ஆகியிருக்க முடியாது.

ஆந்திரர்கள் காட்டு விலங்குகளை வேட்டையாடி வாழ்ந்துவந்த வேட்டுவர்கள் என மனுநூல் கூறும்.[$] இம் மனுநூல், 61 சாதிகளைத் தீண்டப்படாத சாதிகள் எனச் சொல்கின்றது

போர்முனைப்புள்ள தொண்டையர்கள் வேங்கடமலைக்கு உரியவர்கள். இவர்தம் நாட்டிற்கு அப்பால் கொடிய வடுகரின் நாடு இருந்தது. இவ் வேங்கடமலையில் திரையன் என்பானும் ஆண்டு வந்தான். ஒரு தலைமுறைக்குள் அவ் வேங்கடமலையிலிருந்து பெயர்ந்த தொண்டையர்கள் காஞ்சியில் குடியேறினர். தொண்டைமான் இளந்திரையன் காஞ்சியிலிருந்து ஆண்டான். வேங்கடம் முதல் காஞ்சி வரை என விரிவடைந்த தொண்டையரில், பொலம்பூண் திரையன் என்பவன் கடற்கரையில் 'பவத்திரி' என்னும் அழகிய நகரை அமைத்தான்.[@] 'பவத்திரி' என்பது வடசொல்லோ, திசை (தெலுங்கு)ச் சொல்லோ, ஆகும்.

வடக்கிலிருந்து வந்த வடமொழிகளின் தாக்கத்திற்கு ஆட்பட்ட தொண்டையர் தாம் புதிதாக ஆக்கிய நகருக்கே வடமொழிப் பெயரை வைத்தது, வடமொழியின் மேலாண்மை அன்று இருந்தது என்பதைக் காட்டுகின்றது.

காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு ஆண்டுவந்த இளந்திரையனுக்கு நீர்ப்பெயற்று என்னும் நகரும் உண்டு எனப் பெரும்

---

$ "...killing forest animals (that) of Medas, Andhras, Cuñcus, and Madgus."[159]

@ "செல்லா நல்லிசைப் பொலம்பூண் திரையன்
பல்பூங் கானற் பவத்திரி........"[160]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாணாற்றுப்படை கூறுகின்றது.* பவ்வம் என்பது கடல், நீர்க் குமிழி, நுரை என்றெல்லாம் பொருள்படும். ஆகவே, பவத்திரி என்பது இந் நீர்ப்பெயற்று நகரையே குறித்தது. இன்று இவ்வூர், நீர்ப்பெயல் என்று அழைக்கப்படுகின்றது.[161] ஆந்திராவின் கூடூர் மாவட்டத்திலிருக்கும் இரட்டிப்பாளையமே இந்தப் பவத்திரி என்பாரும் உண்டு.[163]

## தெற்குநோக்கிய பெயர்ச்சி

துளுநாட்டு வேளாளரின் துணையுடன் சோழர்கள் தொண்டை மண்டலத்தை வென்றனர் என்னும் கதை உண்டு. கல்லாடனார் வேங்கடமலையின் தலைவன் களவர் கோமான் புல்லி என்கிறார். தொண்டையரும் வேங்கடமலைக்கு உரியவர் எனப்படுகின்றது. இந் நிலையில், இப் புல்லியின் கள்வர்குடியினரால் இத் தொண்டையர்கள் தெற்குநோக்கி விரட்டப்பட்டு, பின்னர் காஞ்சியில் குடியேறி இருக்கலாம் என்னும் கொளுவு இங்குக் கால்கொள்கின்றது. வேங்கட மலையிலிருந்த புல்லிக்காடு என்னும் காட்டுப்பகுதிக்குத் தெற்கே இருந்த ஆர்க்காடு என்னும் கானகமே இத் தொண்டையரின் தாயக மாக இருந்திருக்கலாம் என்பது ஒரு கருத்து.[164]

ஆந்திரப் பேரரசின் தென்கிழக்கு எல்லையில் இருந்த பல்ல வர்கள் வேங்கடத்திற்குத் தெற்கே பரவி, ஆர்க்காடு என்னும் கான கத்திலிருந்த தொண்டையரையும் விரட்டிவிட்டுத் தொண்டை நாட்டுக்குள் புகுந்தனர் என்பர்.[165] 'தொண்டையர்' என்னும் தமிழ்ச் சொல்லின் வடமொழிச் சொல்லே 'பல்லவர்' என்றானது சிலரது கூற்றாகும். இது கேள்விக்குரியது.

வேங்கடமலைக்கு அப்பாலிருந்த ஆந்திரப் பேரரசின் தெற்கு எல்லைப்பகுதிகளில் இருந்த குறும்பர் அரசுகளுக்கும் காஞ்சியி லிருந்து ஆண்ட சிற்றரசர்களுக்கும் இடையில் நல்ல அடித்தாங்கி களாக (buffers) இருந்தவர்களே இக் கள்வர்கள் என்பது ஒரு பாடம். இந்த இடத்திலிருந்து அக் கள்வர்கள் குடிபெயர்க்கப்பட்டு இடம் பெயரலாயினர். வேங்கடமலையிலிருந்து காஞ்சிக்குப் பெயர்ந்த இக் கள்வர்கள், மலையமான் நாட்டுக்கும் அதைச் சார்ந்த பகுதி களுக்கும் பெயர்ந்து, பின்னர்ச் சோழநாட்டில் தங்கியிருந்து, இறுதி யில் பாண்டியநாட்டில் புகுந்தனர் என்பர்.[166]

தமிழகத்தின் தென்மாவட்டங்களில் வாழும் கள்ளர்குடியினரின் வாழ்க்கைமுறை, அவர்கள் தென்பகுதியைச் சேர்ந்தவர் அல்லர் எனக் காட்டும் என்பர்.[167]

---

* "......................................................யவனர்
ஓதிம விளக்கின் உயர்மிசைக் கொண்ட
வைகுறுமீனின் பைபயத் தோன்றும்
நீர்ப்பெயற்று எல்லைப் போகி"[161]

www.tamilarangam.net



தொண்டைமான் என்னும் பெயர், 'தொண்டை+மகன்' எனப் பிரியும். இதனால், புதுக்கோட்டைத் தொண்டைமானின் முன்னோர் கள் தொண்டைநாட்டிலிருந்து வந்தவர்களாம். தகடூரிலிருந்து ஆண்டு வந்த அதியமான் நெடுமான் அஞ்சிக்கும் தொண்டைநாட்டு அரசன் தொண்டைமானுக்கும் இடையில் நிலவிவந்த பகையைப்பற்றிப் புறநானூறு குறிப்பிடும்.[168] அந்தத் தொண்டைமானின் முன்னோர்கள் தெற்குநோக்கிப் பெயர்ந்ததற்கான காரணத்தை இந்தச் செய்தி குறிப் பால் உணர்த்துகின்றது.

கன்னடத்தில் பொதுவாக முதலெழுத்தாக வருகின்ற வ (வகரம்) மட்டுமே ப (பகரம்) ஆகுமேயன்றி, ஒரு சொல்லின் இடையில் வரும் வகரம் பகரமாகாது. கன்னடத்தில் களவு என்னும் சொல் உண்டு. ஆனால், அது 'களபு' எனத் திரித்து ஒலிக்கப்படுவதில்லை. ஆகவே, கள்ளர் என்ற சொல்லே 'களபர்' என்றும் 'களப்பாளர்' என்றோ 'களப்பிரர்' என்றோ ஆகாது. கள்ளரே களப்பாளராயினர் என்பது இதனால் அடிபட்டுப் போகிறது.

வடுகர்கள், வடக்கிலிருந்து வந்த அநாகரிகப் படையெடுப்பாள ராவர். இதையே,

"தென்பரதவர் மிடல்சாய
வடவடுகர் வாள்ஒட்டிய"[169]

எனப் புறநானூறு குறிப்பிடுகின்றது.

"வடபுல மன்னர்கள் வாட........"[170]

எனப் பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதியைப் பற்றிய புறநானூற்று வரியில் வரும் செய்தியில் குறிப்பிடப்படும் வடபுல மன்னர்களில் வடுகர்களும்கூட அடங்குவர்.

மாமூலனார் குறிப்பிடும் வம்ப மோரியரின் படையெடுப்பு, சந்திரகுப்த மோரியனின் காலத்தில் நிகழ்ந்திருக்க வேண்டும். ஏனெனில், இம் மாமூலனார் மோரியருக்கு முந்திய நந்தரின் செல்வ வளத்தைப் பற்றியும் பாடியுள்ளார்.[$]

சந்திரகுப்த மோரியன் கி. மு. 321ஆம் ஆண்டில் ஆட்சி கட்டில் ஏறினான். அஃதாவது, அலெக்சாண்டர் இறந்து ஈராண்டுகளுக்குப் பின்னரே அவன் ஆட்சிக்கு வந்தான்.[172] இந் நிலையில், மோரியரின் துணைகொண்டு தெற்கில் துளுநாடு, குடகு நாடு, எருமைநாடு (மைசூர்) வரையிலும் வடுக அநாகரிக நாடோடிகள் தங்களின் மேலாண்மையை நிலைப்படுத்திக் கொண்டனர். இந்தப் பின்புலத்திலேயே சந்திரகுப்த மோரியன் தன் அரசைத் துறந்து அருகத்துறவியாகித் தன் மாணாக்க ரோடு தென்னகம் வந்திருக்க வேண்டும். பத்திரபாகு என்னும் அருக

---

$ "பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதற் கரந்த நிதியம் கொல்லோ?"[171]

www.tamilarangam.net



முனிவன், உஞ்சைநகரில் பன்னீராண்டுகளுக்கு ஒரு பெரிய பஞ்சம் வருமெனக் கணியம் சொல்லக்கேட்டே, அன்று சந்திரகுப்தன் அந்த அருக முனிவனுடன் தென்னகம் வந்தானாம். அவன் கருநாடகத்தி லிருக்கும் சிரவணபெள்ளக்குளத்தில் பல்லாண்டுகள் வாழ்ந்து, பின்னர் வடக்கிருந்து செத்தானாம்.[173]

## ஒப்பியல் நோக்கு

வடுகர்கள் அரை அநாகரிக நிலையிலிருந்த நாடோடிகள். தமிழ கத்தின் வடவெல்லைக்கு அப்பாலிருந்த இவர்களின் வாழ்விடம், கொடிய மலைகளும் குன்றுகளும் அடுத்துப் பாலைவெளிகளும் காடுகளும் கொண்ட வளமில்லா நிலப்பரப்பாகும். இவர்கள் போர் வெறிமிக்கவர்கள். இதனால், ஆறலைத்துக் களவு செய்தும், கொலை செய்தும் பிழைப்பதுவே இவர்களின் வாழ்வியலாகவும் நெறியாகவும் இருந்தது. ஐரோப்பாவில் பண்டை உரோமானியப் பேரரசை அலைக் கழித்து வந்த செருமானிய அநாகரிகரைப் போன்ற ஒரு வகைப் பங்கையே இவ் வடுகர்கள் விந்திய மலைக்குத் தெற்கிலான பகுதியில் வகித்தனர்.

நடுஆசியாவிலிருந்து கிளம்பிக் கருங்கடலை நோக்கி முன் னேறிக்கொண்டிருந்த மங்கோலிய மெய்யினத்து அவுணர்கள், கீழைக்கோத்தியர் (East Goths) என்னும் செருமானிய அநாகரிகரை அரட்டியும் விரட்டியும் வந்தனர். இந் நிலையில், இக் கீழைக்கோத்தி யர்கள், மேலைக்கோத்தியரை — மேற்கே படர்ந்து வந்த தம் சொந்த அநாகரிக இனத்தவரை — நெருக்கத் தொடங்கினர். இதனால், அம் மேலைக்கோத்தியர்கள், உரோமப் பேரரசனான வாலென்சுவிடம் சென்று மன்றாடி, தான்யூப் ஆற்றைக் கடந்து உரோமானியப் பேரர சின் எல்லைக்குள் புகுந்து, எல்லையோரத்தில் குடியேற இசைவு கேட்டனர். இந்த அநாகரிகக் குறும்பர்களின் எல்லையோர அலைக் கழிப்பால் சலித்துப் போயிருந்த உரோம அரசன், அந்த வேண்டு கோளுக்குச் செவி சாய்த்தான்.

இவ்வாறு தான்யூப் ஆற்றைக் கடந்து உரோம எல்லைக்குள் குடியேறிய மேலைக்கோத்தியரை உரோமானியப் படைஞரும் அதிகாரி களும் அவ்வப்போது துன்புறுத்தவும், அவர்களில் ஏற்றவரை அடிமை களாகக் கொண்டு வருத்தியும் துன்புறுத்தியும் வந்தனர். இந்த நிலையில், அவ்வப்போது வந்த பெரும் பஞ்சங்களும் வறட்சியும் பட்டினியும் இவர்களை வாட்டி வருத்தின. இனியும் பொறுக்கலா காது என அந்தக் கோத்திய அநாகரிகர்கள் உரோமுக்கு எதிராகக் கலகம் செய்தனர். இதனால், உரோமப் பேரரசின் எல்லைக்காவல் சீர்கெட்டு ஆட்சிக்குலைவுக்கு வழிகோலியது. இந்த அநாகரிகர் கலகங் கள் உரோமரால் மிகக் கொடுமையாக அடக்கப்பட்டன. இதற்கு உரோமானியரைப் பழிவாங்க மேலைக்கோத்தியர் காலம் பார்த்துக் கிடந்தனர்.

www.tamilarangam.net



உரோம அரசில் விளங்கிய அடிமைமுறை அறிவுக்கொவ்வாக் கொடிய வடிவம் எடுத்திருந்தது. அகப்பகையாலும் உட்பூசல்களாலும் இடையறாப் போர்களாலும் உரோமரின் நகர்ப்புற வாழ்வியலில் அமைதி குலைந்து ஆட்சிக்குழப்பம் ஏற்பட்ட நிலையில், அலாரிக் என்னும் செருமானிய அநாகரிகர் தலைவனின்கீழ் அந்த அநாகரிகர்கள் உரோம் நகரையே முற்றுகை இட்டனர். உரோம் அந்த அநாகரிகரிடம் வீழ்ந்தது. இதன் விளைவாக, மாபெரும் அரசியல் பொருளியல் குமுகியல் மாற்றங்கள் அடுத்தடுத்து நிகழ்ந்து வரலாற்றையே புரட்டிப் போட்டன. அடிமைமுறைமீது கட்டப்பட்டிருந்த வாழ்வியல் ஒழிந்து நிலக்கிழமை என்னும் புதிய வாழ்வியல் அரும்ப இந்தச் செருமானிய அநாகரிகரின் படையெடுப்பே முதற்காரணமாகவும் வினையூக்கியாகவும் ஆனது.[174]

இச் செருமானிய அநாகரிகர்கள் நிலக்கிழமைக்கு முந்திய ஐரோப்பாவில் ஏற்படுத்திய அடிப்படை மாற்றங்களுக்கு ஈடான ஒரு வினைபாடு — இயற்பாடு — வேங்கடமலைக்கும் விந்தியமலைக்கும் இடையில் — கிழக்குக்கரையிலிருந்து மேற்குக்கரை வரையிலான பரந்த நிலப்பரப்பில் — ஏதோ ஒருவகையில் ஏதோ ஓர் அளவில் — நிகழ்ந்திருக்க வேண்டும். (சதவாகனரின்) ஆந்திரப் பேரரசு தோன்றுவதற்கு முன்பும் பின்பும் வாதாபிச் சளுக்கியரும் கடம்பரும் கலிங்கரும் இரட்டரும் மாரட்டரும் மேலைச்சளுக்கியரும் கீழைச்சளுக்கியரும் ஒய்சளரும் கட்டியமைத்த பேரரசுகள் எழவும் விழவும் இந்த வடுக வந்தேறிகள் மிகப் பெரும் வினையூக்கிகளாக இருந்துவந்துள்ளனர் என்பது வெள்ளிடைமலை. இவ் வடுக அநாகரிகர்கள் கூலிப்படையினராக இருந்துவந்த வரலாற்றாலும், இடப்பெயர்ச்சிகளாலுமே வடுகமொழி இரண்டாகக் கிளைத்து இருநூறு ஆண்டு இடைவெளிக்குள் கன்னடம், தெலுங்கு என்னும் மொழிப்பண்பாடுகள் தோன்றின. அடுத்து மராத்தி என்னும் மூன்றாவது மொழியும் கிளைத்தது. விந்தியத்திற்கும் வேங்கடத்திற்கும் இடையில் முன்னர் வழங்கிவந்த தமிழும் தமிழர் ஆட்சியும் கெடவும் அழியவும் இவ் வடுக அநாகரிகரின் எழுச்சியும் புடைப்பெயர்ச்சியுமே காரணமானது.

ஐரோப்பியச் சூழலில் செருமானிய அநாகரிகரால் வீழ்த்தப்பட்ட உரோமப் பேரரசில் அந்த அநாகரிகர் படையெடுப்பால் நிலக்கிழமை என்னும் புதிய வாழ்வியல் பிறந்தது. இதனால், தீங்கைவிட நன்மையே ஒருவகையில் மிகுந்தது. சீனத்தின் மீது மங்கோலிய அவுணர் (Huns) நடத்திய படையெடுப்பால் சீனவாழ்வியலின் அடிக்கால்களே தளர்ந்து சீனப் பண்பாடு கெட்டழிந்துவிடவுமில்லை. நமக்குத் தெரிந்த பாடங்கள் இவை.

பண்டை உரோமுக்குச் செருமானிய அநாகரிகப் படையெடுப்புகளால் நேர்ந்ததைப் போன்ற ஒரு நிகழ்வு இங்கும் அரங்கேறியது. வேங்கடமலைக்கு அப்பால் இத் துணைக்கண்டம் முழுவதும் அலைந்து

www.tamilarangam.net



திரிந்துவந்த முரட்டுத்தனமான அநாகரிகரான வடுகர்கள், கீழை வடுகர் என்றும், மேலை வடுகர் என்றும் பிரிந்தனர். அவர்களில் கீழைவடுகர்கள், பின்னாளில் தெலுங்கராயினர். கீழைவடுக நாட்டின் வடபகுதியே கலிங்கம். அதனால், அக் கீழைவடுகரில் வடக்கே இருந் தோர் ஒட்டரராயினர். இதனால்தான், "வடவடுகர் கலிங்கநாட்டுத் தெலுங்கர்" எனப் பாவாணர் சொன்னார்.[175] மேலைவடுகரையே கோசர் என்றனர். வடக்கேயிருந்த இரட்டப்பாடிநாட்டுக் கோசரே காலப்போக்கில் மாரட்டர் என்றாகிப் பின்னர் மராத்தியராகக் கிளைத் தனர். விந்தியமலைக்குத் தெற்கே இவ்வாறு கன்னடம். தெலுங்கு, மராத்தி, ஒரியா என்றும், அவ் விந்தியத்திற்கு வடக்கே குசராத்தியாக வும் வடுகமொழி கிளைத்தது. துளுவும் குடகும்கூட வடுகமொழி களாகும்.

வடம்—வடகு—வடுகு—வடுகம் என்னும் போங்கில் வட திசையால் பெயர் பெற்ற மொழியே வடுகு என்பார் பாவாணர்.[176] ஆயினும், வடுகரின் வடுகுமொழி, கொடுந்தமிழே ஆகும்.

"வடுகு கொடுந்தமிழ்நிலை கடந்து மொழி நிலையடைந்தபின்,
வடுகர் (தெலுங்கர்) தமிழுக்கிட்ட பெயர் அருவம் என்பது"[177]

என்னும் பாவாணரின் கருத்து அதை உறுதிப்படுத்தும். இது தமிழகத்தின் வடக்கிலிருந்த அருவாநாட்டையும் அருவா வடதலை நாட்டையும் குறித்து வந்த பெயராகும். தமிழரை அவ் வடுகர்கள், "அருவர்" என்றனர்.

பழைய கன்னடம் தமிழைப் போன்றே இருப்பதைப் போல், பழைய (ஜானு) தெலுங்கும் தமிழைப் போன்றே இருந்த கொடுந் தமிழாகும். பழைய கன்னடத்தில் தமிழின் சிறப்பு எழுத்துகளான ழ, ற, ன வருவதைப் போன்றே, பழைய தெலுங்கிலும் றகரம் உண்டு.

வடுக அநாகரிகர்கள் தமிழர்நாட்டின்மீது படையெடுத்து வந்த போது, அவர்களின் வடுகமொழிக்கு எழுத்தும் இலக்கியமும் இலக் கணமும் இல்லை. செருமானிய அநாகரிகர்கள் தாம் வீழ்த்திய உரோமின் செவ்விய இலத்தீன் மொழியைத் தம்வயமாக்கிக் கொண் டதைப் போன்றே, அவ் வடுக அநாகரிகர்கள் செவ்விய செந்தமிழைத் தம்வயமாக்கிக் கொண்டனர். பின்னாளில், அந்தச் செந்தமிழைச் சிதைக்கவும் குலைக்கவும் திரிக்கவும் செய்து அதன் வழியில் பாகத மொழிகளைத் தழுவி உருவாக்கப்பட்ட சங்கத (சமற்கிரு)தத்தைப் போற்றி வளர்க்கலாயினர்.

## தமிழுக்கும் தமிழருக்கும் என்றும் பகை வடுகரே!

வடுக அநாகரிகர்கள் தமிழகத்தின்மீது நடத்திய படையெடுப்பு களாலும் ஊடுருவல்களாலும் தமிழர் இனத்திற்குப் பெரும் தீமையே விளைந்தது. இத் துணைக்கண்டத்தின் தென்முனையில் – சேரலத்தில்

www.tamilarangam.net



— தோன்றிய பார்ப்பனிய நெறியும் வாழ்வியலும், வந்தேறி வடுக அநாகரிகரால் விளைந்தனவாகும்.

உரோமின்மீது படையெடுத்த செருமானிய கோத்திய அநாகரிகர்கள், தாங்கள் வென்ற உயரிய உரோமானியப் பண்பாட்டிலேயே மூழ்கடிக்கப்பட்டுக் கடலில் கலந்த பெருங்காயம் போலாகி, அந்த உரோமானியப் பண்பாட்டையே தங்களின் பண்பாடாக ஆக்கிக் கொண்டனர். அதேபோல், வடுக அநாகரிகரும் தாங்கள் வென்ற தமிழரின் பண்பாட்டையும் மொழிக்கூறுகளையும் இலக்கணத்தையும் மெய்யியலையும் அறிவையும் அறிவியலையும் தமதாக்கிக் கொண்டனர் என்பதும் மெய்தான். ஆனால், இவர்களின் இத்தகைய தம்வயமாக்கத்தால் பிராமணியம் என்னும் அரக்கத்தனமான நெறியும் கொடிய வாழ்வியலுமே நான்குதலைப் பேயாய் வடிவெடுத்தது. தமிழர்களிடம் விளங்கிய தொழில்வழிச் சாதிகள் (வகுப்புகள்) எல்லாம் பிறவி வரணங்களாகக் கெட்டன. குடிகளும் குக்குலங்களும் கீழோர் மேலோர் என்னும் சாதிகளாகத் திரிந்தன. தமிழை மெல்ல அழிக்கப் புகுந்த செத்துப்பிறந்த குழூஉக்குறியான சங்கதம் (சமற்கிருதம்) வடிவெடுத்தது. கீழைக்கங்கைக்கரை மோரியரிடமிருந்து வடுக வந்தேறிகள் இரவல் வாங்கி வந்த பாகத, அரைமாகதி மொழிகளின் பரவலால் தமிழே கெட்டது; கொடுந்தமிழ் நாடுகள் எல்லாம் மொழி திரிந்த தேயங்களாயின. பின்னர், தமிழுக்கே பெரும் பகையாகிய கன்னடமும் தெலுங்கும் துளுவும், மராத்தியும் — பின்னாளில், மணிப்பவளமான மலையாளமும் — அடுத்தடுத்துத் தனிமொழிகளாயின.

சேரலத்தில் தூய பிராமணராட்சிக்குக் கால்கோளிட்ட பரசுராமன், நருமதை ஆற்றங்கரையினனாம். இந்தச் செய்தி உண்மையாயின், அவன் ஒரு வடுகப் பிராமணன் என்பது உறுதிப்படுகின்றது. பரசுராமன் வடித்த பிராமண்ணியம் மேலை வடுகன் ஒருவனின் கைவண்ணமே என்பது இதனால் விளங்கும். இந்தப் பிராமணியத்தைத் தமிழகத்திற்குள் சுமந்துவந்த எலிகளாகச் சளுக்கியர்வழிக் கன்னடர்களும், பல்லவர்வழித் தெலுங்கு வடுகர்களும் இருந்ததே மெய்யான வரலாறாகும்.

தமிழும் தமிழரும் கெடவும் குன்றவும் அழியவும் இவ் வடுக வந்தேறியமே தனிப்பெரும் காரணம் என்னும் உண்மை இதனால் விளங்கும். வடுகரைப் போல் தமிழுக்கும் தமிழர் இனத்திற்கும் தமிழரின் மண்ணுரிமைக்கும் இறையாண்மைக்கும் மானத்திற்கும் பெருங் கேடு செய்த ஒரு புறஆற்றல் வேறில்லை.

என்ன இருந்தாலும், இந்த வடுகர் வந்தேறியர் என்னும் புறக் காரணம் தனித்து இயங்கியிருக்க முடியாது. தமிழரிடையே விளங்கிய அகமுரண்பாடுகள் ஓயாத பகையாக மாளாத போராகவும் பூசலாகவும்

www.tamilarangam.net



முற்றிக் கெட்டிராத நிலையில், வடுகர் ஊடுருவல்களும் படையெடுப்புகளும் ஆகிய புறக்காரணங்கள் வென்றிருக்க முடியாது. அகக் காரணங்களின் வழியாகத்தானே எந்தப் புறக்காரணமும் வினைப்பட்டிருக்க முடியும்? இதுதானே வரலாற்றின் இயங்கியல்?

## பெண்ணாசையால் வந்த பகை!

ஆநிரைகளைக் கவர்ந்தனர். இதை வஞ்சிப் போர் என்பர். கவரப்பட்ட ஆநிரைகளை மீட்டனர். இதைக் கரந்தைப்போர் என்றனர். பகைநாட்டுக் கோட்டை கொத்தளங்களை முற்றினர். இதை உழிஞைப் போர் என்றனர். முற்றிய கோட்டையைக் காக்கத் தும்பைப் போர் ஆற்றினர். மண்ணாசை மிகவும், புகழாசை மிகவும் வஞ்சிப் போர் ஆற்றினர்; திறை கேட்டனர். திறைகட்ட மறுத்த அரசர்களின்மீது போர் தொடுத்தனர். பாலைநிலத்து மக்கள் வாகைப்போர் நடாத்தினர். இத்தகைய போர் இலக்கணங்களை உலகமெலாம் காண முடிகிறது. இவற்றில் பெரிய புதிரொன்றும் இல்லை.

ஆனால், மாற்று அரசனின் அல்லது வேளிர் தலைவனின் பெண்ணைக் கேட்டுப் போர் ஆற்றியே கெட்ட முடிவேந்தர்களின் அணிவகுப்பே தமிழரிடையே மட்டுமீறிய அளவுக்குச் சென்றது. இத்தகைய அவலத்தைக் கண்டு மனம் வெம்பிய பண்டைத் தமிழ்ப் புலவர்கள் பலராவர். இவர்களில் குறிப்பிடத்தக்கவர் பரணர்.

வேந்தன் ஒருவன் தன் மகளைத் தனக்கு மணம் முடித்துத் தருமாறு இன்னொரு வேந்தனிடம் கேட்பான். அதைக் கேட்டு வெகுண்ட பெண்ணின் தந்தையான வேந்தன் சினந்து உடனே போர் முரசைக் கொட்டுவிப்பான். நாட்டு மக்கள் கலக்கமுறுவர். கொலைப் போரில் இருநாட்டு மறவர்களும் வீணாக மடிவர். தோற்ற வேந்தனின் நாடு கொள்ளையிடப்படும்; அழிக்கப்படும். இதுவே மகட்பாற் காஞ்சி என்னும் துறை.

'மகளை வளர்த்த தாய், கூடவே பகையையும் வளர்த்துவிட்டாளே! இதனால், பண்பும் அறமும் இல்லாதவளாகிவிட்டாளே!'* எனச் சொல்லிக்காட்டி, தமிழரசர்கள் அவ்வப்போது பெண்கேட்டு நடாத்திய படையெடுப்புகளைப் பரணர் மறைமுகமாகக் கண்டித்தார். 'ஒன்று, நாளை நடக்கும் போரில் இவள் தந்தையை வென்று மீள்வேன்; அல்லது அந்தப் போரில் நான் புண்பட்டு மீளமுடியாத உலகம் புகுவேன்!'$ எனப் பெண்கேட்டுப் படையெடுத்தவர், பெரிய

---

* "தகைவளர்த்து எடுத்த நகையொடு
பகைவளர்த்து இருந்தஇப் பண்பில் தாயே"[176]

$ "விளங்குஇழைப் பொலிந்த வேளா மெல்லியல்
சுணங்கணி வனமுலை அவளொடு நாளை
மணம்புகு வைகல் ஆகுதல் ஒன்றோ
ஆரமர் உழக்கிய மறம்கிளர் முன்பின்

www.tamilarangam.net



வஞ்சினம் கூறிப் போரிட்ட அறியாமையைக் கண்டு அவர் உள்ளம் வருந்தினார்.

சேரமான் மாவண்கோவும், பாண்டியன் கானப்பேர் தந்த பெருவழுதியும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒன்றாக ஓரிடத்தில் இருந்தனர். இதை ஔவையார் கண்டார். 'விண் மீன்கள் படர்ந்த நாகம் என்னும் விண்மண்டிலத்தைப் போன்று வளைந்தது நிலவுலகம். இந் நிலவுலகத்தை நானே ஆளவேண்டும் என எண்ணிப் பொருத வேந்தரும் மாண்டனர்'[ஃ] என அம் மூவேந் தரையும் இடித்துரைத்துப் பாடினார்.

இந்தத் தமிழ்நிலம் வேற்றுநாட்டினரான வந்தேறிகளிடம் வீழ்ந்தது. ஒண்ட வந்தவரெல்லாம் தமிழ்மண்ணையும் தமிழரையும் அடிமைப்படுத்தி ஆளாளாயினர் என்பதே இந்தப் பாடலின் ஊடே ஔவையார் தரும் துன்பியல் குறிப்பு.

ஔவையாரின் காலத்தில் தமிழ் வேந்தர்களுக்கு இடையில் நிலவிவந்த ஓயாத போர்களாலும் பூசல்களாலும் தமிழருலகம் அல்ல லுற்றுக் கெட்டபோது, வந்தேறி வடுகர்கள் இத் தமிழர் நிலத்தை மெல்லக் கவ்விவந்தனர். அந்த வரலாற்றைச் சொல்வதாகவே இக் குறிப்பு உள்ளது. 'சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவரும் ஒற்றுமை யாய் நீடுழி வாழ்க! இன்றேல், நீங்கள் வேரோடு ஒழிவது உறுதி. இதனால், இத் தமிழ்மண் வேற்றவரான வந்தேறிகளுக்கு அடிமைப் பட்டுத் தன் மொழி, தலை, பண்பாடு, செல்வம், வணிகம் முதலான எல்லாத் துறைகளிலும் சீரழிந்து விடும்!' என்பதே இப் பாடல் வரி களின் பொருள் எனப் புறநானூற்றுக்கு உரை எழுதிய ஔவை சு. துரைசாமிப் பிள்ளை விளக்குவார்.[181]

## ஓட்டை போட்டனர்!

கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியே கடைக்கழக (சங்க)க் காலப் பாண்டியரில் கடைசிப் பாண்டியன். அதே போல், சோழன் செங்கணான் என்பவனே கடைக் கழக(சங்க)க் காலச் சோழரில் கடைசிச் சோழனாவான். இச் சோழன் செங்கணான்தான் சேரமான் கணைக்கால் இரும்பொறையைக் கழுமலத்தில் வீழ்த்திச் சிறைவைத்தவன். சிறையில் நீர்கேட்ட சேரனைச் சிறைக்காவலர்கள் மதியாமையால், தன்மானம் மிக்க இச் சேரன் நீரும் உணவும் மறுத்து உயிர் துறந்தான்.[182]

---

நீள்இலை எஃகம் மறுத்த உடம்பொடு
வாரா உலகம் புகுதல் ஒன்றெனப்
படைதொட் டனனே....................''[179]

ஃ "நாகத் தன்ன பாகார் மண்டிலம்
தமவே யாயினும் தம்மொடு செல்லா
வேற்றோர் ஆயினும் நோற்றோர்க்கு ஒழியும்''[180]

www.tamilarangam.net



தமிழ் மூவேந்தரிடையே நிலவிய இத்தகைய அகப்பகையே அவர்களின் பேரரசுகள் வீழ்ந்தமைக்கான அடிப்படையான அகக் காரணமாகும். வந்தேறி அநாகரிக வடுகரின் படையெடுப்புகளும் ஊடுருவல்களும் ஆகிய புறக்காரணங்கள் யாவும் அத் தமிழ்ப் பேரரசு களின் வீழ்ச்சிக்கான புறக்காரணங்களாகும். இப் புறக்காரணங்கள் எல்லாம் அகப்பகை என்னும் அகக்காரணத்தின் ஊடேதான் வினைப் பட்டன.

வேங்கடமலைக்கு அப்பால் வடுக அநாகரிகர்கள் விளைவித்த கொந்தளிப்புகளும் குழப்பங்களும் சொல்லி மாளாதவைதான். ஆனால், முடிகெழு தமிழ் மூவேந்தரிடம் இனவொற்றுமை நிலவி வந்த வரையில், அந்த அநாகரிகர்களால் தமிழகத்திற்குள் ஊடுருவ முடியவில்லை. வேங்கடத்திற்கும் குமரிக்கும் இடையிலானதே தமிழர் மண் என எல்லைகள் சுருங்கிய பின்னர், வேங்கடம் உள்ளடங்கிய கிழக்கு மலைத்தொடரில் இருந்த மலையரண்களையும் குறும்பரண் களையும் கொண்ட தமிழகத்தின் வடவெல்லைக்குள் இவ் வடுக அநாக ரிகரால் பெரிய ஓட்டைபோட இயலவில்லை. ஆனால், அகப்பகை யும் ஓயாத பங்காளிப் போர்களும் தமிழகத்தைக் கவ்விய சூழலில், வடுகர்கள் இரண்டு பெரிய ஓட்டைகளைப் போட்டனர். கொள் கையோ நெறியோ அறிவோ இல்லாத இத்தகைய போர்களில் சிக்கிக் கெட்டழிந்த தமிழரசர்களின் அகப்பகையே வந்தேறி வடுகர்கள் தமிழகத்திற்குள் புகுவதற்கு ஏற்ற பெரிய பாட்டையை அமைத்துக் கொடுத்தது.

வேங்கடத்தின் வழியாக ஊடுருவித் தென்னார்க்காடு மாவட் டத்துக் கூடலூர் (கடலூர்) வரையில் வடுகர்களால் கி. மு. மூன் றாம் இரண்டாம் நூற்றாண்டுகளிலேயே ஊடுருவ முடிந்தது. இஃது ஓர் ஓட்டை. துளுநாடு வந்து, குடகுநாட்டைக் கடந்து, எருமை நாட்டை எட்டி அவற்றையெல்லாம் தமதாக்கிக்கொண்ட பின்னர், அந்த நாடுகளையே ஊன்றுதளமாக்கிக்கொண்டு கங்கர்நாட்டிலும் கொங்கு நாட்டிலும் அவ் வடுகர்களால் ஊடுருவ முடிந்தது. இஃது இரண்டாவது பெரிய ஓட்டை. இந்த இரு பெரும் ஓட்டைகளின் ஊடாகத் தமிழகத்திற்குள் ஊடுருவவும் படையெடுக்கவும் செய்த வடுகர்கள், தமிழரின் அடுத்தக் கட்ட வீழ்ச்சிக்குக் கால்கோளிட் டனர்.

## வறட்சியால் வந்த பெயர்ச்சி!

கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் இத் துணைக்கண்டத்தின் தென் பகுதியில் ஒரு பெரிய இடப்பெயர்ச்சியே நடந்துவந்தது. பெரியன் என்பவன் சோழநாட்டின் கடற்கரை ஊரான பொறையாற்றை ஆண்டு வந்தான். அப்போது, தொண்டைமண்டலத்தின் வேங்கடநாட்டில் மிகப் பெரிய வறட்சி ஏற்பட்டது. இதனால், தொண்டைநாட்டின

www.tamilarangam.net



ரான கல்லாடனார் தம் சுற்றம் சூழச் சோழநாட்டுக்கு வந்து பொறையாற்றில் குடியேறினார்.* அத்தகைய வறட்சியினாலும் பஞ்சத்தாலும் தொண்டைநாட்டிலிருந்து காவிரி வளமூட்டிய சோழநாட்டை நோக்கி வந்த மக்கள்பெயர்ச்சியைக் குறிப்பால் உணர்த்துகின்றது இச் செய்தி. வேங்கடநாட்டிலேயே பஞ்சமெனின், அதற்கு வடக்கேயிருந்த கொடிய வடுகர் நாட்டிலும் அத்தகைய பஞ்சம் மிகப் பரவலாக இருந்திருக்க வேண்டும். இத்தகைய வறட்சிகளையும் பஞ்சங்களையும் கருதி, வடுகர்கள் வளமான தமிழ்நிலப்பகுதிகளை நோக்கி அலையலையாகப் பெயர்ந்திருக்க வேண்டும்.

கி. மு. 230ஆம் ஆண்டளவில் வேங்கடமலைக்கு வடக்கே இன்றைய பெல்லாரிக்கு அருகில் (சதவாகனரின்) ஆந்திரப் பேரரசு தோன்றியது.[184] வேங்கடமலையைத் தழுவிச் செல்லும் கிழக்குமலைத் தொடர் முழுவதையும் தமிழகத்தின் வடக்கு எல்லையாகக் கொண்டு சேர, சோழ், பாண்டியர் ஆகிய மூவேந்தரும் அதைக் கண்போல் காத்துவந்தனர். மலைப்பாங்கான கொடிய இந் நிலப்பகுதிக்கு அப்பால் அநாகரிக நிலையில் ஆறலைத்து வாழ்ந்துவந்த வடுகராகிய பாலைநிலத்து மக்கள், தமிழரசுகளை அவ்வப்போது அரட்டியும் அலைக்கழித்தும் வந்தனர். இக் குறும்பர்களின் கொற்றம் தமிழரசர்களிடம் எடுபடாமல் போகவே, இவர்கள் மேற்குநோக்கிப் பெயர்ந்தனர். இவர்களில் சிலர் (சதவாகனரின்) ஆந்திரப் பேரரசின்கீழ்க் கூலிப்படைகளாக அலைந்தனர். பின்னர், அப் பேரரசையே தம்வயமாக்கிக் கொண்டனர்.

இவ் வடுகரின் மேற்குநோக்கிய இடப்பெயர்ச்சியும், சதவாகனப் பேரரசின் மேற்கும் தெற்கும் நோக்கிய விரிவாக்கமும் வேளகம் (இன்றைய பெல்காம்) என்னும் பகுதியில் ஆண்டுவந்த இருங்கோவேள் என்பானது வேளிர்குடியினரைத் தெற்குநோக்கி நெருக்கி இடம் பெயரச் செய்தன. இவனுடைய முன்னோர்கள், விரிந்து பெருத்துவந்த நூற்றுவர் கன்னர் (சதகர்ணி) அரசர்க்கு அஞ்சித் தெற்குநோக்கிப் பெயர்ந்து எருமைநாட்டில் (மைசூரில்) உள்ள துவரை என்னும் இடத்தில் குடியேறினர். ஏழேழு தலைமுறையினராக இருங்கோவேளிர்கள் இப் பகுதியை ஆண்டுவந்தனர்.

## வடுகரான வேளிர்கள்!

நூற்றுவர்கன்னரின் ஆந்திரப் பேரரசை நிறுவிய முன்னோடி அரசர்களின் பெயர்கள் தமிழ்ப்பெயர்களாகவோ, தமிழும் வடமொழியும் கலந்த பெயர்களாகவோ, உள்ளன. நூற்றுவர் கன்னரின் (சதவாகனரின்) அரசை நிறுவியவன் சிமுகன் (கி. மு. 230). இவனுக்கு அடுத்து ஆட்சிகட்டிலேறிய இவன் உடன்பிறந்தானின் பெயர்

---

* "வேங்கட வரைப்பின் வடபுலம் பசித்தென
ஈங்குவந்து இறுத்தஎன் இரும்பேர் ஒக்கல்"[183]

www.tamilarangam.net



கண்ணன் (கி. மு. 207-189). கண்ணன் அல்லது கிருட்டிணன் என்பது கன்னடத்தில் 'கன்னரன்' என வழங்கும். மூன்றாவது வந்தவனே நூற்றுவர் கன்னரன் (முதலாம் சதகர்ணி). இவன் வழிவந்த புலி மெய் என்னும் அரசனின் தமிழ்ப்பெயர் வடமொழியில் 'புலிமாயி' எனத் திரிந்தது. இவனது பெயரைக் கன்னடமொழியில் 'புலிமெய்' என்றனர். 'புலி போன்ற உடல் வலிமையுடையோன்' என்னும் பொருளில் அமைந்த இவனது பெயர் புலிமெய் என்னும் தமிழ்ப் பெயராகும். இப் புலிமெய்யை வென்றதாலேயே இருங்கோவேளுக்குப் புலிக்கடிமால் என்னும் பெயர் வந்ததென ஆய்ந்தோர் கூறுவர்.

நூற்றுவர் கன்னரிடம் தோற்ற இருங்கோவேள், இன்று மைசூருக்கு அருகிலுள்ள துங்கபத்திரா ஆற்றின் கரையில் துவரையில் (துவாரசமுத்திரத்தில்) வந்து குடியேறினான். இவனுடைய காலத்தில் இவனது முன்னோருக்குச் சொந்தமாயிருந்த அரையம் என்னும் மூதூர் அழிந்தது. ஒருகால் வளம் கொழித்த அம் மூதூர், சிற்றரையம், பேரரையம் என்னும் இரு பகுதிகளைக் கொண்டது. 'அரையம்' என்பது பேர்பாதியைக் குறிக்கும் 'அரை' என்னும் சொல்வழி வந்தது. 'இரண்டு அரையங்கள்' சேர்ந்த மூதூர் என்னும் பெயரில் வரும் 'இரண்டு' என்பதற்கு மாறாக 'துவை' அல்லது 'துவம்' என்னும் வடசொல்லைச் சேர்த்து 'துவரையம்' என்றாகிப் பின்னர்த் 'துவரை' எனத் திரிந்தது எனலாம்.* கழாத்தலையார் என்னும் தமிழ்ப் புலவரை இருங்கோவேளின் முன்னோர்கள் இழிவுபடுத்தியதாலேயே சிற்றரையம், பேரரையம் என்றிருந்த 'அரையம்' என்னும் அவனுடைய வேளிர் குடியின் மூதூர் அழிந்தது என்பார் கபிலர்.§ அழிந்த இந்த அரையம் மீண்டும் கட்டுவிக்கப் பெற்றபோதே 'துவரை' என்றாகி இருக்கலாம்.

---

* "நீயே, வடபால் முனிவன் தடவினுள் தோன்றிச்
செம்புபுனைந்து இயற்றிய சேணெடும் புரிசை
உவரா ஈகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே ..........."[185]

§ "வெட்சிக் கானத்து வேட்டுவர் ஆட்டக்
கட்சி காணாக் கடமா நல்லேறு
கடறுமணி கிளரச் சிதறுபொன் மிளிரக்
கடிய கதழும் நெடுவரைப் படப்பை
வென்றி நிலைஇய விழுப்புகழ் ஒன்றி
இருபால் பெயரிய உருகெழு மூதூர்க்
கோடிபல் அடுக்கிய பொருள்நுமக்கு உதவிய
நீடுநிலை அரையத்துக் கேடும் கேள்இனி
நுந்தை தாயம் நிறைவுற எய்திய
ஒலியல் கண்ணிப் புலிகடி மாஅல்
நும்போல் அறிவின் நுமருள் ஒருவன்
புகழ்ந்த செய்யுள் கழாஅத் தலையை
இகழ்ந்ததன் பயனே இயல்தேர் அண்ணல்"[186]

www.tamilarangam.net



இரண்டைக் குறிக்கும் 'த்வி' என்னும் வடசொல்லுக்கு வேர் துமி — துவி எனப் பாவாணர் சொல்வார். குமி என்பது குவி என்றானதைப்போல் துமி என்பதே துவி ஆகும் என்பார். அதே போல், துவர் — துவரை என்றான துவரை என்னும் சொல், 'செம்புருக்கி வார்த்துக் கட்டிய செப்புக்கோட்டை மதில்' என்றும் பொருள்படும்.[187]

"செம்புபுனைந்து இயற்றிய சேணெடும் புரிசை
உவரா ஈகைத் துவரை யாண்டு"[188]

எனக் கூறுவதை வைத்து, துவரை என்னும் பெயர் இருங்கோவேளின் கோட்டை செம்பாலானது என்னும் பொருள்படவே இடப்பட்டிருக்க வேண்டும். இஃது இன்னொரு விளக்கம்.

இந்த இருங்கோவேளிரின் மரபில் வந்தவனே பின்னர் வடக்கு நோக்கிப் பெயர்ந்து வாதாபியில் சளுக்கியர் ஆட்சியை அமைத்த முதலாம் புலிகேசி (கி. பி. 543-66). இருங்கோவேளின் குடிமுதல்வன் புலிகடிமால். இதை

"ஒலியல் கண்ணிப் புலிகடி மாஅல்"[189]

எனப் புறநானூறு குறிப்பிடுகின்றது.

புலிகடிமாலான இருங்கோவேளின் குடியினர் பின்னர்த் துவரை நகரிலிருந்தே விரட்டப்பட்டு, குடகுநாட்டையும் கொங்கு நாட்டையும் கடந்து புதுக்கோட்டைப் பகுதியில் குடியேறினர். இருங் கோவேள் மரபினர் இப்போது பாண்டிய நாட்டிலுள்ள கொற்கையை ஒட்டிய ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர்.[190]

அவியன் என்பான் திருமுனைப்பாடி நாட்டு அவியனூரை ஆண்டுவந்தான். இந்த அவியன் வழிவந்தவர்கள் இடைக்காலத்தில் வேற்றுப்புலத்தவரின் படையெடுப்புகளால் வலிமை இழந்து, பல நூற் றாண்டுக் காலம் தலைமறைவாக வாழ்ந்து வந்தனர். பின்னர் மெல்ல வலிமை பெற்று, தானைத்தலைவர்களாயினர்; அடுத்து, குறுநிலமன்னர் களாயினர். பிற்காலத்தில் இவர்கள் பாண்டியநாட்டுத் திருப்பத்தூர்ப் பகுதியிலுள்ள சூரைக்குடி என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தனர். இவர்களில் சிலர் தங்களை 'விசயாலயதேவர்' என்றும், 'மாவள சக்கரவர்த்தி' என்றும் சொல்லிக் கொண்டனர். ஆயினும், இவர்கள் தம் குடிமுதல்வனான அவியனின் பெயரை மற வாது, அவன் பெயரையும் இட்டுக்கொண்டனர். அவியன் பெரிய நாயனான விசயாலயதேவன், அவியன் மாளய சக்கரவர்த்தி என்பவர் கள் அவர்களாவர்.[191] இதையொத்த நிலைமை, இருங்கோவேளின் பிறங் கடையினருக்கும்கூட ஏற்பட்டிருக்க வேண்டும்.

கோசர் என்னும் வடுகரால் வஞ்சிக்கப்பட்டுக் காட்டுக்கு ஓடிய நன்னன் வழியினரில் ஒரு சிலர் கன்னடநாட்டிற்குள் புக்கு, நன்னிச் சோடர் ஆகவில்லையா? களப்பாளரின் படையெடுப்புக்குப்பின்

www.tamilarangam.net



ஓடியொளிந்த கரிகால் சோழனின் வழியினர், தெலுங்குநாட்டுக்குள் ஓடி ஒளிந்து பின்னர் தெலுங்குச் சோழராகத் திரியவில்லையா? இதைப் போன்றே, இருங்கோவேளின் பிறங்கடையினர் ஓடி ஒளிந்து கன்னடராகவும் தெலுங்கராகவும் திரிந்திருக்க வேண்டும். இவ்வாறு வடுகரோடு ஒன்றி வடுகராகவே ஆகியவர்களோ, அவர்களிடமிருந்து அரசைக் கைப்பற்றித் தாங்கள் இருங்கோவேளின் வழியினரே எனப் போலியாகச் சொல்லிக்கொண்ட வடுகரோதான், பின்னாளில் சளுக்கியப் பேரரசையும் ஒய்சளப் பேரரசையும் நிறுவினர். ஒய்ச ளரைப் பற்றிய கன்னடவழிக் கட்டுக்கதைகள் ஏற்புடையன அல்ல. ஆயினும், சோழர்வழியினர் எனப் பொய்யாக உரிமை பாராட்டிக் கொண்டமையால் இவர்களுக்கு வந்த 'பொய்ச் சோழர்' என்னும் பெயரே 'ஹொய்சளர்' எனத் திரிந்திருக்க வேண்டும். (தமிழிலுள்ள ப கன்னடத்தில் ஹ எனத் திரியும்.)

வடுகவழிவந்த சளுக்கிய வந்தேறிகள் சோழர்குடியில் பெண் எடுத்தும் கொடுத்தும் கலந்து, பின்னர்த் தம்மையே சோழர் எனச் சொல்லிக்கொள்ளவில்லையா? அதேபோல், புலிகடிமால் இருங்கோ வேள் வழியினர் என அதே வடுகவழியினர் பொய்யாக உரிமை கொண்டாடத் தலைப்பட்டிருக்க வேண்டும்.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பிறகு விந்தியமலைக்குத் தெற்கே நிகழ்ந்த அத்துணைத் திரிபுகளுக்கும் வடுக அநாகரிகரின் குறும்புகளே காரணமாகும். இவ் விந்தியமலைக்கு வடக்கே நடந்த தையெல்லாம் விட்டுத்தள்ளினாலும், அதன் தெற்கே தமிழ் கெடவும், தமிழர் ஆட்சி கெடவும், தமிழ்ப் பண்பாட்டின் அகப்புற அலைவீச்சு கள் குறையவும் குறுகவும் இவ் வடுக இனமே முதற்பெரும் காரணமே யன்றி, இத் துணைக்கண்டத்தின் வடமேற்கில் அமைந்த ஆப்கானித் தானத்தில் இருக்கும் கைபர், போலன் கணவாய்களின் வழியாக வந்ததாகச் சொல்லப்படும் 'ஆரிய இனம்' அன்று என்பதை ஆய்வு கள் காட்டுகின்றன.

வடுகர் யார் என இதுவரை ஆராய்ந்தோம். இனி, அவ் வடுக அநாகரிகரின் தாயகம் யாதெனப் பார்ப்போமா?

## குறிப்புகள்

1. அகநானூறு 265:12-21.
2. அகநானூறு 213:4-8
3. அகநானூறு 211:7-8.
4. அகநானூறு 107:11
5. அகநானூறு 213:1-3
6. அகநானூறு 381:6-8.

www.tamilarangam.net



7. K. A. Nilakanta Sastry, *A History of South India, From Prehistoric Times to the Fall of Vijayanagar*, Oxford University Press, 1984, p 234.

8. சுந்தரர், தேவாரம், திருமுருகன்பூண்டி 1

9. அகநானூறு 31:13-15.

10. தொல்காப்பியம்:பொருளதிகாரம் 630 உரை.

11. *Epigraphica Indica*, Vol II, p 471; Rock edict XIII, the Shabazgrahi version, மேற்கோள் டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி, சங்க காலச் சிறப்புப் பெயர்கள், (இலக்கியச் சிறப்புப் பெயர்களும் குடி பற்றிய சிறப்புப் பெயர்களும்), பாரி நிலையம், சென்னை-1, 1980, பக்கம் 341.

12. அகநானூறு 31.

13. நற்றிணை 212:5-6.

14. அகநானூறு 295:13-17.

15. அகநானூறு 393:1-20.

16. அகநானூறு 359:14-20.

17. அகநானூறு 61:5-16.

18. அகநானூறு 342:3-10.

19-20. மொ. அ. துரை அரங்கசாமி, சங்க காலச் சிறப்புப் பெயர்கள், பப 351-52.

21. புறநானூறு: ஔவை சு. துரைசாமிப் பிள்ளை உரை, இரண்டாம் பகுதி, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை, 1951, ப 422.

22. அகநானூறு 325:16-19.

23. அகநானூறு 386:4-8.

24. கா. அப்பாத்துரை, தென்னாட்டுப் போர்க்களங்கள், அலமேலு நிலையம், சென்னை, 1971, பப 41.

25. தி. வை. சதாசிவப் பண்டாரத்தார், கல்வெட்டுகள் கூறும் உண்மைகள், மாணிக்கவாசகர் நூலகம், சென்னை, 1977, 24-25.

26. John Faithful Fleet, *The Dynasties of the Kanarese Districts of the Bombay Presidency from the Earliest Historical Times to the Musalman Conquest of A.D. 1318*, Asian Educational Services, Madras, 1988, [First Published 1894], pp 383-84; *ibid*, p 383 *f*.

27. *ibid*, Introductory, p I.

28. அகநானூறு 205:8-9.

29. அகநானூறு 349:3-14.

30. அகநானூறு 393:18-20.

31. புலவர்கோ தி. நா. அறிவுஒளி, பாலாற்று வளம், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை, 1983; ப 25.

32. *A.R* 26 of 1934-35; மேற்கோள்: புறநானூறு: ஔவை சு. துரைசாமிப் பிள்ளை உரை. இரண்டாம் பகுதி, ப 350.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



33. புலவர்கோ தி. நா. அறிவுஒளி, பாலாற்று வளம், ப 25.
34. நற்றிணை 270:7-9.
35. அகநானூறு 372:3-5.
36. அகநானூறு 142:8-14.
37. அகநானூறு 325:7-10.
38. குறுந்தொகை 73:2-5.
39. குறுந்தொகை 298:5-8.
40. அகநானூறு 113:6-7.
41. புறநானூறு 233
42. Heggadadevanakote 56, *Epigraphia Carnatica,* Vol. IV, *Inscriptions in the Mysore District,* Part II, Introductions, pp 3-4].
43. அகநானூறு 148:7-11.
44. அகநானூறு 181:3-7.
45. அகநானூறு 396:1-6.
46. அகநானூறு 208:5-18.
47. நற்றிணை 391:6-7.
48. அகநானூறு 15:11.
49. அகநானூறு 97:13.
50. அகநானூறு 349:14.
51. புறநானூறு 155:4-7.
52. ந. அ. த. சின்னுசாமி கவுண்டர், கொங்கு வேளாளர் புராண வரலாறு, தமிழன் அச்சகம், 1963, ப 98.
53. *Madras District Gazetteers, Salem,* Vol I, Part II, 1918, p 273.
54. கு. சேதுராமன், கொங்குச்சீமை காணியாளர்கள், வாணி நூலகம், ஈரோடு, 1983, ப 35.
55. ந. அ. த. சின்னுசாமி கவுண்டர், கொங்கு வேளாளர் புராண வரலாறு, ப 95.
56. கு. சேதுராமன், கொங்குச்சீமை காணியாளர்கள், ப 109; ந. அ. த சின்னுசாமி கவுண்டர், கொங்கு வேளாளர் புராண வரலாறு, ப 96.
57. கா. அப்பாத்துரை, தென்னாட்டுப் போர்க்களங்கள், ப 71.
58. W. T. Arnold, *The Roman System of Provincial Administration to the Accession of Constantine the Great,* Oxford, B. H. Blackwell, MCMVI, p 181.
59. அகநானூறு 127:3-5.
60. *Madras District Gazetteers, Salem,* Vol I, Part II, 1918, p 303.
61. அகநானூறு 199:18-23.
62. கு. சேதுராமன், கொங்குச்சீமை காணியாளர்கள், ப 109.
63. அகநானூறு 44:7-14.
64. புறநானூறு 396:7-13.

www.tamilarangam.net



65. அகநானூறு 216:8-15.

66. புறநானூறு: ஔவை சு. துரைசாமிப் பிள்ளை உரை, ப 448.

67-69. கா. அப்பாத்துரை, தென்னாட்டுப் போர்க்களங்கள், ப 41.

70. புறநானூறு 283:1-13.

71. *Pudukkottai State Inscriptions* 458.

72. அகநானூறு 15:2-7.

73 ஞா. தேவநேயன் (பாவாணர்), தமிழர் வரலாறு, ப 239.

74. குறுந்தொகை 15:3; மொ. அ. துரை அரங்கசாமி, சங்க காலச் சிறப்புப் பெயர்கள், ப 277.

75. கம்பராமாயணம், பாயிரம்.

76. நன்னூல் நூற்பா 272, மயிலைநாதர் உரை; தொல்: சொல்:400 உரை.

77. அகநானூறு 253:4-20.

78. மொ. அ. துரை அரங்கசாமி, சங்க காலச் சிறப்புப் பெயர்கள், ப 362.

79. கா. அப்பாத்துரை, தென்னாட்டுப் போர்க்களங்கள், பப 39-40.

80. அகநானூறு 115:5.

81. அகநானூறு 36:13-20.

82. புறநானூறு **19.**

83. மதுரைக்காஞ்சி 508-09.

84. மதுரைக்காஞ்சி 771-74.

85 அகநானூறு 251.

86. கா. அப்பாத்துரை, தென்னாட்டுப் போர்க்களங்கள், ப 41.

87. அகநானூறு 251:6-13.

88. K. A. Nilakanta Sastry, *A History of South India, From Prehistoric Times to the Fall of Vijayanagar*, Oxford University Press, 1984, p 88.

89. கா. அப்பாத்துரை, தென்னாட்டுப் போர்க்களங்கள், ப 43.

90. அகநானூறு 281:4-12.

91. அகநானூறு 69:10-11.

92. கா. அப்பாத்துரை, தென்னாட்டுப் போர்க்களங்கள், பப 40.

93. அகநானூறு 346:18-25.

94. பதிற்றுப்பத்து 44:10-16.

95. புறநானூறு 169:9-11.

96. அகநானூறு 162:6-12.

97. கா. அப்பாத்துரை, தென்னாட்டுப் போர்க்களங்கள், பப 56.

98. அகநானூறு126:16; 45: 9-11; 145:10-13.

99. அகநானூறு 375:10-15.

100. பேராசிரியர் பே. க. வேலாயுதம், ப. சீனிவாசன், சங்ககால மன்னர் வரிசை, பாரதி நூலகம், திருச்சி-19, 1997, ப 21.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



101. புறநானூறு 378:1-9.
102. சிறுபாணாற்றுப்படை 159
103. அகநானூறு 226
104. அகநானூறு 211:12.15
105. புறநானூறு: ஔவை சு. துரைசாமிப் பிள்ளை உரை, இரண்டாம் பகுதி, ப 383.
106. குறுந்தொகை 11:5-7.
107. அகநானூறு 226:13.17.
108. அகநானூறு 44:7.14.
109. பதிற்றுப்பத்து, பதிகம் 5:19-20.
110. கா. அப்பாத்துரை, தென்னாட்டுப் போர்க்களங்கள், பப 95.
111. மணிமேகலை 19:119-27.
112. கா. அப்பாத்துரை, தென்னாட்டுப் போர்க்களங்கள், ப 107.
113. புறநானூறு 90:11; மொ. அ. துரை அரங்கசாமி, சங்க கால்ச் சிறப்புப் பெயர்கள், ப 247.
114. பதிற்றுப்பத்து 21:24.
115. நற்றிணை 52:9.
116. தொல்காப்பியம்: சொல் 311.
117. அகநானூறு 1:2.
118. அகநானூறு 35:4-10.
119. அகநானூறு 91:11.
120. அகநானூறு 101:4-10.
121. அகநானூறு 119:8-10.
122. அகநானூறு 121:11-12.
123. அகநானூறு 127:12-17.
124. அகநானூறு 129:11-14.
125. அகநானூறு 187:5-9.
126. அகநானூறு 249:11-13.
127. அகநானூறு 269:4-5.
128. அகநானூறு 337:5-11.
129 மொ. அ. துரை அரங்கசாமி, சங்க காலச் சிறப்புப் பெயர்கள், பப 256.
130. ஞா. தேவநேயன், தமிழர் வரலாறு, ப 221.
131. மொ. அ. துரை அரங்கசாமி, சங்க காலச் சிறப்புப் பெயர்கள், பப 246.
132. புறநானூறு 125:9-16.
133. புறநானூறு 99:13-14.
134. அகநானூறு 209:11-15.
135. பதிற்றுப்பத்து, பதிகம் 8:3-7.

www.tamilarangam.net



136. புறநானூறு 230:5-6.

137. மொ. அ. துரை அரங்கசாமி, சங்க காலச் சிறப்புப் பெயர்கள், ப 261.

138. புறநானூறு 172:8-10.

139. புறநானூறு 169:9.

140. புறநானூறு 130:5-6.

141. சிலப்பதிகாரம், உரைபெறு கட்டுரை 2.

142. ஐராவதம் மகாதேவன், ஔவையின் எழுத்துகள் இவையே! (மடல்), தமிழ்மணி, தினமணி இணைப்பு, 12.10.1991.

143. புறநானூறு 398:8.

144. மொ. அ. துரை அரங்கசாமி, சங்க காலச் சிறப்புப் பெயர்கள், ப 295.

145. பட்டினப்பாலை: பொ. வே. சோமசுந்தரனார் உரை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை, 1975, ப 66.

146. மொ. அ. துரை அரங்கசாமி, சங்க காலச் சிறப்புப் பெயர்கள், ப 297.

147. நன்னூல் நூற்பா 273 மேற்கோள்.

148-50. மொ. அ. துரை அரங்கசாமி, சங்க காலச் சிறப்புப் பெயர்கள், பப 310, 302-03.

151. M. winslow, *A Comprehensice Tamil and English Dictionary,* தமிழ்-ஆங்கில அகராதி, Asian Educational Services, New Delhi, 1987 [First Published 1862], p 966.

152. மொ. அ. துரை அரங்கசாமி, சங்க காலச் சிறப்புப் பெயர்கள், ப 304.

153. புறநானூறு 80, 83, 85.

154. பதிற்றுப்பத்து 71, 88.

155. அகநானூறு 135:10-14.

156. மொ. அ. துரை அரங்கசாமி, சங்க காலச் சிறப்புப் பெயர்கள், ப 256.

157. பதிற்றுப்பத்து 71:9-24.

158. பதிற்றுப்பத்து 88.

159. *The Ordinance of Manu*, ed., W. Hopkins, Kegan Paui, Trench, Trübner & Co, London, 1891, Lecture x, 48.

160. அகநானூறு 340:6-7.

161. பெரும்பாணாற்றுப்படை 316-19.

162. புலவர்கோ தி. நா. அறிவுஒளி, பாலாற்று வளம், ப 168; மயிலை சீனி வேங்கடசாமி, மகேந்திரவர்மன், திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை, 1978, பப 5 அடிக் குறிப்பு.

163. புலவர்கோ தி. நா. அறிவுஒளி, பாலாற்று வளம், ப 26.

164-67. மொ. அ. துரை அரங்கசாமி, சங்க காலச் சிறப்புப் பெயர்கள், ப 349, 353.

168. புறநானூறு 95.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



169. *புறநானூறு 378:1-2.*

170. *புறநானூறு 52:5.*

171. *அகநானூறு 265:4-6.*

172. R. D. Banerji, *Prehistoric Ancient and Hindu India*, Blackie & Son (India) Ltd., 1950, p 84.

173. K. A. Nilakanta Sastry, *A History of South India, From Prehistoric Times to the Fall of Vijayanagar*, p 83.

174. *குணா, தமிழர் வரலாறு, தமிழக ஆய்வரண், வெங்காலூர், 1995, பப 17-20.*

175. ஞா. தேவநேயன் *(பாவாணர்), தமிழர் வரலாறு, ப 227.*

176. ஞா. தேவநேயன் *(பாவாணர்), வடமொழி வரலாறு, ப 26.*

177. ஞா. தேவநேயன் *(பாவாணர்), தமிழ் வரலாறு, ப 39.*

178. *புறநானூறு 336:11-12.*

179. *புறநானூறு 341:10-16.*

180. *புறநானூறு 367:1-3.*

181. *புறநானூறு: ஔவை சு. துரைசாமிப் பிள்ளை உரை, ப 342.*

182. *புறநானூறு 74.*

183. *புறநானூறு 391:7-8.*

184. R. D. Banerji, *Prehistoric Ancient and Hindu India*, pp 105 and 117.

185. *புறநானூறு 201:8-12.*

186. *புறநானூறு 202:1-13.*

187. ஞா. தேவநேயன் *(பாவாணர்), தமிழர் வரலாறு, பப 77, 151.*

188. *புறநானூறு 201:9-10.*

189. *புறநானூறு 201:15.*

190. *புறநானூறு: ஔவை சு. துரைசாமிப் பிள்ளை உரை, இரண்டாம் பகுதி, பப 5, 7.*

191. *A R* No. 119 of 1908 and *A.R* No. 122 of 1908; மேற்கோள்: *புறநானூறு: ஔவை சு. துரைசாமிப் பிள்ளை உரை, இரண்டாம் பகுதி, ப 398.*

www.tamilarangam.net

# வடுகரின் தாயகம்

இந்தியத் துணைக்கண்டத்தில் இதுவரை கண்டெடுக்கப்பட்ட பழங்கற்காலப் புரையிடங்கள் யாவும் பெரும்பாலும் தென்னிந்தியா விலேயே உள்ளன.[1] கருநாடகத்திலுள்ள தாரவாடு, பெல்காம், பீசாப்பூர், கல்பொறுக்கி (குல்பர்கா), ராய்ச்சூர், பெல்லாரி மாவட்டங்களிலும், அவற்றையொட்டி ஆந்திரத்திலுள்ள மஃக்பூப்நகர், கர்னூல் மாவட்டங்களிலும், நல்லமலைக் குன்றுகளிலும், நளகொண்டா, சித்தூர், நெல்லூர் மாவட்டங்களிலும், அவற்றைத் தொடர்ந்து தமிழகத்தின் கொற்றலையாற்றுப் படுகையும் நகரியாற்றுப் படுகையும் உள்ள செங்கற் பட்டு, வடவார்க்காடு மாவட்டங்களிலும் மட்டுமே அவை யாவும் அடங்குவன. வங்காளத்திலும் பீகாரிலும் ஒரிசாவிலும் பழங்கற்காலக் கருவிகள் மிக அரிதாகவே கிடைக்கின்றன.[2] அங்குக் கிடைத்த ஓரிரு கருவிகளும், பழைய சென்னை மாகாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பழங்கற்காலப் பொருட்களையே ஒத்துள்ளன. வடகருநாடகத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பழங்கற்காலப் புரையிடங்களையும், ஆந்திரத்தில் 50 புரையிடங்களையும் கண்டெடுத்த இந்தி(ய)த் தொல்பொருள் ஆய் வாளர்கள், தமிழகத்தின் சவ்வாதுமலை போன்ற இடங்களில் மண்டிக் கிடக்கும் பழங்கற்காலப் புரையிடங்களை ஆராயாமல், அவற்றை இருட்டடிப்புச் செய்தனர். இதைச் சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.*

நாகரிகம், தெற்கிலிருந்தே வடக்குநோக்கிச் சென்றது என்னும் உண்மை வெளிப்பட்டுவிட்டால், இத் துணைக்கண்டத்து வரலாறே தலைகீழாகப் புரண்டுவிடும் என்னும் குலைநடுக்கமே அதற்கான காரணமாகும். மேலும், தமிழர் கண்ட முந்தை வாழ்வியல் தெற்கே கடல்கொண்ட குமரிக் கண்டத்தில் மூழ்கிப் போனமையால், அத் தமிழரின் தொல்பண்பாட்டுப் புரையிடங்களும் தடயங்களும் இல்லா தொழிந்தன. இதனால், இருப்பதை வைத்து அசைபோட வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

தென்னிந்தியாவில் கி. மு. 2500 வரையில் பழங்கற்கால, இடைக் கற்காலப் பண்பாடுகள் விளங்கிவந்தனவாம். கண்ணன்பெண்ணை$

---

* "It is a matter for regret that in spite of the existence of many old sites in South India, which if properly excavated, would yield a rich crop of harvest, the Archeological Department has been treating them in step-motherly attitude."[3]

$ கிருட்டினை ஆற்றின் இயற்பெயர் கண்ணன்பெண்ணை (Kanhabenâ) ஆறு ஆகும். இக் கண்ணன்பெண்ணை ஆற்றைக் கடந்த காரவேலன், ஆந்திர

www.tamilarangam.net



(கிருட்டினை) ஆற்றின் துணையாறுகளான தொன் ஆற்றுக்கும் பீமா ஆற்றுக்கும் இடையிலான குல்பர்கா மாவட்டத்தின் மேற்கு எல்லைப் பகுதியில் உன்சுகி ஆறு ஓடுகின்றது. அதையொட்டி உன்சுகி-பைச்ச பல் (Hunsgi-Baichbal) பள்ளத்தாக்கு இருக்கிறது. அங்கு அச்சூலிய (Acheulian)[@] பண்பாட்டை ஒத்த பழங்கற்காலப் புரையிடங்கள் பல அருகருகே காணப்படுகின்றன. தாரவாடு மாவட்டத்தையும் பெல்லாரி மாவட்டத்தையும் பிரிக்கும் துங்கபத்திரை ஆற்றின் கரையில் உள்ள இட்காவிலும் (Itga), பெல்லாரி-ராய்ச்சூர் மாவட்ட எல்லையிலுள்ள அம்பாசாகர் (Hampasagar), நீட்டூர் ஆகிய இடங்களிலும் கூழாங்கற் கருவிப் பண்பாட்டுப் (Pebble-tool culture) புரையிடங்கள் அகழ்ந்தெடுக் கப்பட்டுள்ளன. பெல்லாரி மாவட்டத்திலிருக்கும் அங்கூரு (Anguru), கடிகனூர், தாரோஜி (Daroji), பதனஹட்டி (Badana- hatti), குறிகுப்பா (Kurikuppa), பேடர்பெள்ளகல் (Bedarbellagal), ஜோகா (Joga), பழங் குன்றம் (Halagundi), ஹிரேகூருவத்தி (Hirekuruvatti) ஆகிய இடங்களில் அச்சுலியப் பண்பாட்டுப் பழங்கற்காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட் டன. பெல்காமின் (வேளகத்தின்) கட்டபிரபா ஆற்றங்கரையில் இதே போன்ற பழங்கற்காலப் புரையிடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தக் கண்ணன்பெண்ணை ஆற்றுப்பகுதியில் இருந்த பழங்கற்கால மக்கள், உணவு தேடியும் வேட்டையாடியும் வாழ்ந்து வந்தனர்.[5]

கண்ணன்பெண்ணை ஆற்றுக்கும் துங்கபத்திரை ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதியே வடுக அநாகரிகரின் தாயகம் ஆகும். இந்த இடைத்துறை நிலத்திலேயே (doab) வடவர்களும் வடுகவழியினரும் அடுத்தடுத்துப் பல அகழ்வாய்வுகளை மேற்கொள்வது அவர்களுக் குள்ள இயல்பான இனப்பற்றையே காட்டும்.

தென்னிந்தியாவில் இதுவரை கண்டெடுக்கப்பட்டுள்ள 150 புதிய கற்காலப் புரையிடங்களும் பெரும்பாலும் குல்பர்கா, ராய்ச்சூர், பெல்லாரி, கர்னூல், மஃகபூப்நகர் ஆகிய கருநாடக, ஆந்திர மாவட்டங் கள் அடங்கிய பீமா-கண்ணன்-துங்கபத்திரை ஆற்றுப்படுகைகளி லேயே அமைந்துள்ளன.[6]

## இரும்பும் எஃகும்

பிரிட்ஜெட்டும் ரேமாண்ட் ஆல்ச்சினும் (Bridget and Raymond Alchin) தென்னிந்தியாவில் புதிய கற்கால-செப்புக்கால ஊழியை

(சதவாகன)ரின் மூசிகப்பட்டினத்தில் பெரும் கிலியை ஏற்படுத்தினானாம்.

``Dutiye ca vase acitayita Sâtakannim pachima-disam haya-gaja-nara-radha-bahulam damdam pathâpayati kanha-bemnâ gatâya ca senaya vitâsitam M(u)sika-nagaram''

எனக் காரவேலனின் ஹாதிகும்பக் கல்வெட்டு அதைப்பற்றிக் கூறும்.

@ பிரான்சிலுள்ள செயின்ட் அச்சுல் (St. Acheul) என்னும் இடத்தில் 230 ஆயிரம் அல்லது 200 ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் விளங்கிய கற்காலப் பண்பாட்டின் அடிப்படையில் வந்த பெயர்.

www.tamilarangam.net



மூன்று பெருங்கட்டங்களாகப் பகுத்தனர். முதல் கட்டம், கி. மு. 3000க்கும் கி. மு. 2000க்கும் இடைப்பட்டதாம். இந்தக் காலகட்டம் ஆநிரை மேய்க்கும் நாடோடி வாழ்வியலைக் குறிக்கும். இரண்டாவது கட்டம், கி. மு. 2100க்கும் கி. மு. 1700க்கும் இடைப்பட்டதாம். மலைச் சரிவுகளிலும் மலைமுகடுகளிலும் நிலையான வாழ்க்கை அமைந்ததை இது குறிக்கும். இந் நிலையில்தான், செப்பு, வெண்கலக் கருவிகள் வடிக்கப்பட்டன. கி. மு. 1700க்கும் கி. மு. 1200க்கும் இடைப்பட்ட மூன்றாவது கட்டத்தில் செப்பு வாள்களும் கத்திகளும் வடிக்கப்பட்டனவாம்.[7] ஆனால், வளர்ச்சியுற்ற பிறநாடுகளில் 5000 முதல் 6000 ஆண்டுகளுக்கு முன்பே கற்கருவிகளுக்கு மாறாக மாழைக்கருவி (metallic tools) ஆளப்பட்டதாக இவர்களைப் போன்ற ஐரோப்பிய மூளைகள் பாடம் படிக்கின்றன![8]

தமிழகத்தைப் பொறுத்தவரையில், செப்புக்காலம் என்றோ, வெண்கலக்காலம் என்றோ குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு ஒரு தனிக் காலம் இல்லை. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர் பெருங்கற்படைக் கல்லறைகளில் கண்டெடுக்கப்பட்ட கருவிகளை ஆராய்ந்தவர்கள், அங்கு கற்காலத்தின் அறுதிநிலையான நுண் கற்காலம் (Microlithic Age) எடுத்த எடுப்பில் இரும்புக்காலத்துடன் மயங்குவதைத் தெள்ளத் தெளிவாகக் கண்டறிந்தனர். இடைநிலைகள் யாதுமின்றிப் புதிய கற்காலத்திலிருந்து இரும்புக்காலத்திற்குள் தமிழர்கள் நேரடியாகவே அடியெடுத்து வைத்துவிட்டதையே இது காட்டும்.

> "கிரீத்தையும் கிரேக்கத்தையும், பிற ஐரோப்பிய நாடுகளையும் போலவே தென்னிந்தியாவிலும் புதிய கற்காலத்தை அடுத்து இரும்புக் காலம் வந்தது. இரும்பைக் கண்ட புதிய கற்கால முன்னோர்கள், படிக்கற்பாறையைவிட நீடித்து உழைக்கக் கூடியதாகவும் உறுதியானதாகவும் அந்த இரும்பு இருப்பதைக் கண்டனர். இதனால்தான் முந்தைய கற்கால ஊர்ப் புரையிடங்களின்மேல் இரும்புக்காலத்துச் சட்டி பானைகள் கிடக்கின்றன. தம்முடைய நாட்டினத்தார் சிந்துப் பகுதிகளில் செப்புக்கால மக்களாக இருந்தனரெனினும், தென்னிந்தியர்கள் மட்டும் வெண்கலக்காலத்தையோ செப்புக்காலத்தையோ பார்க்கவில்லை. முந்தை இரும்புக் காலத்தைக் கி. மு. 4000 ஆண்டளவில் வைக்க வேண்டும் என்றே அது பொருள்படும்."[#]

---

[#] "The Neolithic Age is succeeded in South India by the Iron Age as in Crete, Greece and many other western countries. The neolithic ancestors have come across iron and they found it more durable and tougher than trappoid rock. Hence the find of Iron Age pottery on the old neolithic village sites. South India did not take to Bronze or Copper Age while their compatriots in the Indus regions were chalcolithic people... This means the early Iron Age must be fixed earlier than the 4th millenium B.C."[9]

www.tamilarangam.net



என வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதரும் கூறுகிறார். இந்தியத் துணைக் கண்டத்தில் கண்டெடுக்கப்பட்ட கற்கால, இரும்புக்காலக் கருவி களை ஆராய்ந்த கோகின் பிரௌன் (J. Coggin Brown) என்பவரும் அவ்வாறே உரைக்கிறார்.§

தென்னிந்தியாவில் இரும்புக்காலம் கி. மு. 4000 ஆண்டளவிலேயே தொடங்கிவிட்டதாக இராமச்சந்திர தீட்சிதர் கூறுகிறார். ஆனால், கி. மு. 1200க்கும் கி. மு. 240க்கும் இடைப்பட்டதே தென்னிந் தியாவின் இரும்புக்காலம் என ஐரோப்பியரும் வடவரும் பாடம் படிப்பர். ஆயினும், கருநாடகத்தின் தென்பறந்தலையில் கண்டெடுக் கப்பட்ட இரும்புக்கருவிகள், இரும்புக்காலம் இத் துணைக்கண்டத்தின் வடக்கிலிருந்தே தெற்குநோக்கி வந்தது என்னும் பொய்க் கோட் பாட்டைச் செல்லாக்காசாக்கிவிட்டது என வடநாட்டு ஆய்வாளரே அடித்துக் கூறுவர்.

"வடஇந்தியாவில் இரும்புத் தொழில்நுட்பம் ஈரான் வழியாக அனதோலியாவிலிருந்து பரவியது என்றால், தென்னிந்தியாவில் அந்த இரும்புத் தொழில்நுட்பம் தனித்தே கண்டுபிடிக்கப் பட்டது என்றே தோன்றுகிறது"*

என டி. பி. சக்கரபர்த்தி என்னும் வங்காள வரலாற்றாசிரியர் மெல்ல அடிப்போடுகின்றார்.

"இரும்பு முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டதும் உருக்கப்பட் டதும் எங்கு என்பதைப்பற்றிச் சொல்வது கடினமானது என் றாலும், அஃது தென்னிந்தியாவிலேயே எங்கோ நிகழ்ந்திருக்க வேண்டும். தென்னிந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே அந்த இரும்பு இந்தியாவின் பிற பகுதிகளுக்குப் பரவியிருக்கக் கூடும்"$

---

§ "Southern India never possessed a Copper or Bronze age culture, and as far as research shows at present, the Neolithic period in the Peninsula passed directly into the Iron Age, so that the numerous bronze objects, many of which are of great beauty, from the cemetries of the South, do not belong to an age characterised by the sole use of that alloy. Needless to say India is not the only country in which an iron culture was not preceded by one of copper or of Bronze."

"We conclude, therefore, that so far as our existing knowledge goes, India as whole had no Bronze Age; that in Southern India the Neolithic period passed directly into the Iron Age; and that in Northern India a Copper Age intervened between the Neolithiic period and the Iron Age."[10]

* "It seems that while in North India iron technology diffused from Anatolia via Iran, in South India it may have been discovered independently."[11]

$ "It is difficult to say where and how iron was discovered and smelted red and smelted but this could very well be some place in South India. It could

www.tamilarangam.net



என ஓ. பி. அகர்வால், அரிநாராயண், ஜி. பி. ஜோஷி ஆகியோரும் கருதுகின்றனர். மராட்டியத்தில் கி. மு. 800ஆம் ஆண்டளவிலேயே இரும்பு புழக்கத்திற்கு வந்தது என்னும் எம். கே. திவாலிக்கர் என்னும் ஆய்வாளர்,

'கருநாடகத்திலிருந்து மகாராட்டிரத்தை இரும்பு சென்றடைய, கிட்டதட்ட இரண்டு நூற்றாண்டுகள் பிடித்திருக்கும்'@

என்றுரைப்பதும் அவ் வழி நிற்கின்றது.

வடக்கத்தியரும் வடுகவழியினரும் மெல்லவும் விழுங்கவும் முடியாமல் கூறும் இவ் வுண்மையைப் பேராசிரியர் கௌலாந்து எப்போதோ அடித்துச் சொல்லிவிட்டார். யப்பானியத் தீவுகளை ஆய்ந்தறிந்த கௌலாந்து, உலகம்புகழ் மாழையராக (metallurgist) இருந்தவர். இரும்பை உருக்கும் முறை, தீவக்குறை (தென்) இந்தியா விலேயே தற்செயலாகக் கண்டறியப்பட்டிருக்க வேண்டும் என்பது அவர் கருத்து. இதைப்பற்றிக் கூறும் இராமசந்திர தீட்சிதர்,

"ஐரோப்பாவின் இரும்புத்தொழிலைவிட மிக மிகத் தொன்மையானது என அறிவில் சிறந்தோரால் கருதப்படும் தீவக்குறை தென்னிந்தியாவிலேயே அந்த நேர்ச்சி (accident) நிகழ்ந்திருக்க வேண்டும். இரும்பை ஆள்வது தென்னிந்தியாவில் பரவலான பின்னரே, பிற நாடுகளுக்கு அது பரவத் தொடங்கியது; பல வகைகளில் தென்னிந்திய நினைவுக் கட்டடங்களையும் கோயில்களையும் ஒத்துள்ள கீரீத்து, கிரேக்கம் ஆகிய நாடுகளில் குறிப்பாக அது பரவியது. கிரீத்தும் கிரேக்கமும் பிற மேலைநாடுகளும் புதிய கற்காலத்திலிருந்து இரும்புக்காலப் பண்பாட்டிற்கு இவ்வாறுதான் மாறிச் சென்றன. குன்றுகளும் மலையரண்களும் போக, அடர்ந்த காடுகளின் விளிம்புகளிலும் கற்கால மாந்தர் தொடக்கத்தில் வாழ்ந்துவந்தனர்... இரும்புக் கனியத்தைக் கண்டுபிடித்த பின்னர்தான், தொல்மாந்தன் காட்டுக்குள் புகுந்து அக் காட்டைத் தன் வாழ்விடமாக ஆக்கிக்கொண்டான் என்று கருதுவதே அறிவுக்குகந்தது. இரும்பின்றி வேறு வகையில் மரங்களை வெட்டிக் காடுகளை அழித்திருக்க முடியாது. இதனால், குன்றுகளில் வாழ்ந்துவந்த மக்கள், காட்டு வாழ்க்கைக்குப் பெயர்ந்து செல்ல வழிவகுத்தது இரும்புப் பண்பாடேயாகும்"#

என விளக்குவார்.

---

also be possible that after the discovery of iron in South India, it spread to other parts of India."[12]

@ "...must have taken about two centuries to reach Maharashtra from Karnataka."[13]

# It was Prof. Gowland, the well-known metallurgist and explorer of the Japanese islands, who expressed the opinion that the smelting of iron may

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெருங்கற்படைக் காலம் இரும்புக் காலத்தைக் குறிப்பது. இரும்பைக் கண்டுபிடித்த பின்னரே, தமிழரின் மலையையும் மலையைச் சார்ந்த இடங்களையும் குறிக்கும் குறிஞ்சி வாழ்விடத்திலிருந்து பெயர்ந்து காடும் காடு சார்ந்த இடமுமான முல்லை வாழ்வியலுக்குச் சென்றனர். ஆகவே, இப் பெருங்கற்படைக் காலம் முல்லை வாழ்வியல் எழுச்சியைக் குறிக்கும். அத்துடன் அன்றைய தொல்குடிகளுக்கு இடையில் இடையறாப் போர்கள் மூண்ட நிலையையும் சுட்டும். ஆநிரையையே மாடு என்னும் செல்வமாகக் கொண்ட ஆயர் வாழ்க்கையையும் காட்டும். மலையரண்களை அமைத்து வாழ்ந்துவந்த குறும்பர்கள் கண்ட தொல்குடி அரையராட்சியின் (tribal oligarchy) எழுச்சியைக் குறிக்கும்.

போரே புதுப் புதுப் பொருள் ஈட்டத்திற்கான நோக்கமாக அமைந்த இந் நிலையில், போர்த்தலைவர்கள் தலையெடுத்தனர். ஓயாத தொல்குலப் போர்களும் ஆயர் வாழ்க்கையையும் ஆணுரிமையை மேலோங்கச் செய்து பெண்ணைத் தாழ்த்தின. இதனால்; பெண்ணுரிமை மெல்ல மங்கி மறைந்து ஆணுரிமை மேலோங்கியது. இந் நிலையில்தான் அடிமை முறை அரும்பியது. போரில் தோற்ற எஞ்சிய குக்குலத்திலிருந்து ஆண்களையும் பெண்களையும் கொன்றொழிப்பதையே வென்ற குலத்தவர் பலர் முதன்முதலில் செய்தனர். சிலர் அவர்களைத் தம் குலத்து மக்களாக ஆக்கிக் கொள்ளவோ, பெண்ணாக இருந்தால் மணந்து கொள்ளவோ செய்தனர்.

இவ் வழக்கங்கள் ஒழிந்து, அவர்களை ஆடுமாடுகளைப்போல் கட்டி மேய்க்க வல்ல படைப்புக்கருவிகளாக ஆக்கிய பெரிய வரலாற்று நிகழ்வு முல்லை வாழ்க்கையிலேயே நிகழ்ந்தது. இதனால், அடிமை முறை என்னும் புதிய விளைப்புமுறை வானளாவ வடிவெடுத்தது. பெரிய ஆநிரை மந்தைகளைப் புரக்கப் பயன்படுத்தப்பட்ட தோற்று போன குக்குலத்து ஆண்களும் பெண்களும், அந்த ஆடுமாடுகளைப் போன்றே வைத்துப் புரக்கப்படும் புதிய வாழ்வியலாக அஃது இருந்தது.

---

have been hit upon by sheer accident. This accident might have happened in peninsular India where according to the best minds the iron industry is much more ancient than in Europe. After the use of iron became familiarin South India, it began to spread in other countries, especially Crete and Greece whose architectural monuments and shrines resemble in several respects those in South India. This is how Crete, Greece and other Western countries passed on also to iron culture from their Neolithic Age. The Stone Age men were primarily living on hills and mountain fastnesses and also on the fringes of rich forests ... Only after the discovery of iron ore, it is reasonable to suppose that primeval man took to the forest and made it his habitat. It is impossible otherwise to fell trees and clear the forests. Therefore, it is only iron culture that permitted the people of the hills to pass on to forest life."[14]

www.tamilarangam.net



## கொல்லுலை தோன்றிய கருப்பகுதி

இந்தியத் துணைக்கண்டத்தில் கண்டெடுக்கப்பட்ட 1400 பெருங் கற்படைகளில் (megalithics) 1116 பெருங்கற்படைகள் தென்னிந்தியா விலேயே உள்ளன. இப் பெருங்கற்படைகள் இரும்புக் காலத்திற்கு உரியவை. தமிழகத்தில் 388, புதுவையில் 3, கருநாடகத்தில் 300, ஆந்திரப் பிரதேசத்தில் 147, கேரளத்தில் 18, மராட்டியத்தில் 90 என அவை விரவிக் கிடக்கின்றன.[15] பெருங்கற்படைக் கல்லறைகளில் 45 வகைகள் இருப்பி னும், கருநாடகத்தில் காணும் பெருங்கற்படைகள் தமிழகத்திலுள்ள பெருங்கற்படைகளையே ஒத்துள்ளன. கருநாடகத்திலுள்ள பெருங்கற் படைக் கல்லறைகள், கோலார் மாவட்டத்திலும், ராய்ச்சூர் மாவட்டத் திலும், குல்பர்கா மாவட்டத்தின் தென்பகுதியிலும் மட்டுமே மிகவும் அடர்த்தியாக உள்ளன. பெங்களூர், மைசூர், சிவமுகம், ஆசன், பெல் லாரி, தாரவாடு மாவட்டங்களில் அவை ஓரளவு அடர்த்தியாகக் காணப்படுகின்றன. அவை இங்கொன்றும் அங்கொன்றுமாக இருப்பது பெல்காம், பீசாப்பூர், வடகன்னடம், தென்கன்னடம், மண்டியா, சித்திரதுருகம், சிக்கமகளூர், தும்க்கூர் ஆகிய மாவட்டங்களில் ஆகும்.

வடுக அநாகரிகரின் தாயகப் பகுதியான கண்ணன்பெண்ணை -துங்கபத்திரை ஆற்றுப்படுகைகளில் காணப்படும் பெருங்கற்படைக் கல்லறைகளும் தாழியடக்கமும், தமிழரிடம் விளங்கிவந்த சவ அடக்க முறையை அப்படியே ஒத்துள்ளன.* இதனால், இப் பெருங்கற்படைப் பண்பாடு, தமிழகத்திலிருந்தே இன்றைய கருநாடகப் பகுதிகளுக்குப் பரவியிருக்க வேண்டும்.

இவை யாவும், தமிழர்கள் பரவி வாழ்ந்த இடங்களைக் காட்டுவன. பொருள்வேண்டி வடுகர்நாட்டுக்கும் அதற்கு அப்பாலும் சென்ற தமிழ்த் தலைமக்களைப் பற்றிய குறிப்புகள் கழக (சங்க) இலக்கியத்தில் வருவதை வைத்து அவ்வாறு கருதலாம்.

கருநாடகத்தில் கிட்டத்தட்ட 710 இரும்புக்காலப் புரையிடங்கள் கண்டெடுக்கப்பட்டன. இவற்றில் 413 இடங்கள் அதன் தென்பறந் தலையில் உள்ளன. துங்கபத்திரை ஆற்றுக்குத் தெற்கேயுள்ள சிவமுகம், சிக்கமகளூர், ஆசன், மைசூர் ஆகிய மாவட்டங்களின் பெரும் பகுதி களும், சித்திரதுருகம், தும்க்கூர், பெங்களூர், மாண்டியம், கோலார் மாவட்டங்கள் முழுவதுமாகவும் அடங்கிய இத் தென்பறந்தலை, கடல் மட்டத்திலிருந்து 900 முதல் 1200 மீட்டர் உயரத்தில் இருப்பதாகும். பெல்காம், தாரவாடு மாவட்டங்களில் பெரும் பகுதியும், பீசாப்பூர், பெல்லாரி, ராய்ச்சூர், குல்பர்கா, பீதர் மாவட்டங்கள் முழுதுமாகவும்

---

* "These graves at Adhichanallur are to be dated in the early Iron Age which succeeded the Neolithic Age in South India. Remarkable parallels are seen in the sites near the village of Annavâsal in the Pudukottai State, in the Palni and Anamala range, Nilgiris, and in the districts of Coimbatore, Salem, North Arcot, South Arcot, Anatapur, Bellary and Kurnool."[16]

www.tamilarangam.net



அடங்கிய பகுதியே வடபறந்தலை. இது கடல்மட்டத்திலிருந்து 450 முதல் 750 மீட்டர் உயரத்திலானது. வடபறந்தலையில், 268 இரும்புக் காலப் புரையிடங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை போக, 17 புரையிடங்கள் மேற்குமலைத்தொடர் மீதான மலைநாட்டிலும், 12 புரையிடங்கள் கரைவழிச் (Karavali) சமவெளியிலும் உள்ளன.[17]

தென்பறந்தலையை மட்டுமே எடுத்துக்கொண்டால், பெங்களூர், கோலார், மைசூர் மாவட்டங்களிலேயே அந்த இரும்புக்காலப் புரையிடங்கள் அடர்ந்து காணப்படுகின்றன. கோலார் மாவட்டத்திலுள்ள மாலூர், பங்காரப்பேட்டை வட்டங்களில் மட்டுமே 81 இரும்புக் காலப் புரையிடங்கள் உள்ளன. மைசூர் மாவட்டத்திலுள்ள இரும்புக் காலப் புரையிடங்களில் 47 இடங்கள், 1956 வரையில் சென்னை மாகாணத்திலிருந்து பின்னர் கருநாடகத்துடன் வலிய இணைக்கப் பட்ட தமிழ்ப்பகுதியான கொள்ளேகாலத்தில் இருப்பவை.[18] இதனால், இரும்புக்காலப் பண்பாடு, கருநாடகத்தின் தென்பகுதியிலிருந்தே துங்க பத்திரை ஆற்றின் வடக்கே படர்ந்தது என்னும் துணிபு மெய்ப்படுகிறது. பெல்லாரி, சிவமுக மாவட்டங்களில் இரும்புக்கனி பெருமளவில் கிடைப்பினும், தமிழகத்தின் சேலம் பகுதியிலிருந்தே இரும்புக் காலப் பண்பாடு கண்ணன்பெண்ணை-துங்கபத்திரை இடைத்துறை நிலத்திற்குப் பரவியிருக்க வேண்டும்.

கருநாடகத்தின் சித்திரதுருக மாவட்டத்திலுள்ள அரிகர் வட்டத்தில் இருக்கும் கொமரனள்ளியில் கிடைத்த இரும்புக் கருவிகளின் காலம் கி. மு. 1200 எனக் கரியம்-14 (C14) காலக் கணிப்பு வழியாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அக் கொமரனள்ளிக்கு 12 கட்டை (கி. மீ.) தொலைவிலுள்ள பள்ளூர் (Hallur) என்னும் இடத்தில் கண்டெடுக்கப்பட்ட இரும்புக்கருவிகளின் காலம் கி. மு. 1000 என்பர். இதை அடுத்த தடக்கனள்ளி இரும்புக் கருவிகளும் அதே காலத்தவையாம். இவற்றுள் கொமரனள்ளி என்பது 'இரும்புக் கொல்லரின் ஊர்' எனப் பொருள்படும் 'கம்மாரனள்ளி' என்பதன் திரிபே எனக் கன்னடரே சொல்கின்றனர்.[19] 'கம்மாரப்பள்ளி' என்னும் தூய தமிழ்ப்பெயரே அவ்வாறு திரிந்துள்ளது.

அக் கம்மாரப்பள்ளி இரும்புக்கருவிகளும்கூடக் கரியத்தின் அளவைக் கூட்டுவது குறைப்பது என்னும் முறையில் இரும்பை உறுதிப் படுத்தவும் நெகிழ்வாக்கவும் செய்த அடுக்குநுட்பத்தின் (Layering Technique) வாயிலாக வடிக்கப்பட்டன.[20] இதனால், இது கி. மு. 1200 முதல் 1000 வரையிலான காலத்திற்குரியதாம். இரும்பை ஆக்கும் உயர்நுட்பம் இந்த அளவுக்கு இத் துணைக்கண்டத்தின் பிற பகுதிகளில் எய்தப்படவில்லை. இந்தத் தொழில்நுட்பத்தை எய்தப் பல நூற்றாண்டுகள் பிடித்திருக்கும்.

சேலம் மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட கொல்லன் உலைகள், அவற்றின் தொன்மையைக் காட்டவல்லன. இக் கொல்லனுலை

www.tamilarangam.net



களின் அமைப்பிலான தொழில்நுட்பத்தையும் எளிமையையும் குறைந்த செலவையும் கண்டு வந்தேறி ஆங்கிலேயரே மலைத்து நின்றனர். உலையில் அடுப்புக்கரியை நிரப்பி உலை மூட்டித் துருத்தியைக் கொண்டு காற்றடித்து அதை நன்கு கனிய வைத்தபின் மீண்டும் அடுப்புக்கரியையும் அதன் அளவில் பாதியளவு இரும்புக்கனியையும் கொட்டி உருக்கியபின், உலையில் திரண்ட இரும்புக்கட்டியை (pig of iron) எடுப்பதே தமிழர் கண்ட தொழில்நுட்பமாகும். இவ்வாறு ஆக்கிய அந்த இரும்புக் கட்டியைக் கைக்கோடரியைக் கொண்டு வெட்டி அதன் தரத்தை அவர்கள் அறிந்தனர்.

கட்டி இரும்பை ஆங்கிலத்தில் pig என்பர். உருக்குமண்ணை அல்லது உருக்குமணலை எடுத்து உலையிலிட்டு உருக்கி இருப்புக் கட்டிகளை ஆக்கியவரையே பிற்காலத்தில் கட்டிப்பறையர் என்றனர்.

உலையில் ஆக்கப்பட்ட இரும்புக்கட்டியை அதன் சூடு ஆறுவதற்குள் சம்மட்டியால் அடித்து அதன் மாசுகளை நீக்கிய பின், அந்த இரும்புக்கட்டியை உலைக்களத்தில் மீண்டும் இட்டு உருக்கினர். கரியம், மணலம் (silica), அலுமினியம் முதலான கசடுகளுடன் வெந்த உலைஇரும்பு இயைபியல் வினைப்பட்டபின், உருகிய இரும்புக் கூழைப் பாளங்களாக வார்த்து, வார்ப்பு (Cast Iron) இரும்பாக ஆக்கினர். அவ் வார்ப்பு இரும்பை அடித்து இருப்புச் சலாகைகளாக (Bar Iron) ஆக்கினர். இவ்வாறு ஆக்கிய தேனிரும்புப் (Wrought Iron) பாளங்களைக் களிமண்ணும் உமியும் கலந்த கொள்கலங்களில் வைத்து உலைக்களத்தில் மீண்டும் இட்டு உருக்கி எஃகு ஆக்கினர். இவ் வகையில் எஃகை ஆக்குவதை ஐரோப்பியர்கள் பற்றுமுறை (Cementation Process) என்றனர்.[21]

இவ்வாறு சேலத்தில் விளைவிக்கப்பட்ட எஃகை ஊட்சு எஃகு (Wootz Steel) என்றனர். 'ஊட்சு' என்னும் சொல், 'உக்கு' என்னும் கன்னடச் சொல்லையே வேராகக் கொண்டது என *Chambers Twentieth Century Dictionary* (1972) காட்டும்.[22] ஆனால், உருக்கு என்னும் தமிழ் வேர்ச்சொல்லிருந்து வந்த பெயரே அஃதாகும்.

சேலத்தில் ஆக்கப்பட்ட இந்த ஊட்சு எஃகை, அராபிய கடல் வாணிபரின் வழியாகச் சிரியா முதலான நடுக்கிழக்கு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்தனர். ஊட்சு எஃகைக் கொண்டே டமாஸ்கஸ் வாள் வடிக்கப்பட்டது. மாசிடோனியாவின் கிரேக்க மாமன்னன் அலெக்சாண்டர், இந்த டமாஸ்கஸ் வாளையே ஆண்டுவந்தானாம்.[23] கிறித்துவ ஊழிக்கு முன்பே இந்த ஊட்சு எஃகைப் பாளம் பாளங்களாக ஏற்றுமதி செய்யுமளவுக்கு உலகளாவி வளர்ந்திருந்த தமிழரின் இரும்பு-எஃகுத் தொழிலும் வாணிபமும் பின்னர் வீழ்ந்து சுவடில்லாமல் மறைந்த காலமும் காரணமும் இதுவரை ஆராயப் பெறவில்லை.

கட்டிப்பறையர் என்னும் தொல்தமிழர் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டிருந்த இந்தத் தொழில், வடுக வந்தேறிகளின் படை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யெடுப்புகளாலேயே சீர்கெட்டுச் சிதைந்திருக்க வேண்டும். ஆங்கிலேயர் காலம் வரையில் இந்தக் கட்டிப்பறையர்கள், தாங்கள் ஆக்கிய வார்ப்பு இரும்பை நாமகிரிப்பேட்டை முதலான பகுதிகளில் இருந்த வந்தேறித் தெலுங்குக் கொல்லர்களுக்கு விற்றுவந்தனர் எனச் சேலம் மாவட்ட அரசேடு காட்டுவது[24] இம் முடிவுக்கு உரம் சேர்க்கிறது.

1843ஆம் ஆண்டளவில் சென்னை மாகாணத்தின் அளத்தல் துறை உதவிநாயகமாயிருந்த (Assistant Surveyor General) கேப்டன் கேம்பெல் போன்றோர் தென்னிந்திய இரும்புத் தொழில் நுட்பத்தை ஆய்ந்து எழுதிய கட்டுரைகளும் குறிப்புகளும் மடல்களும், இரும்பு-எஃகுத் தொழிலில் அன்றைய இங்கிலாந்தையும் விஞ்சி நின்ற தமிழரின் தொழில்நுட்பத்தை அவ் வந்தேறிகள் இங்கு வந்து அறிந்து சென்றதைக் காட்டுகின்றன.[25] அவர்கள் குறிப்பிடும் 'இந்திய' இரும்பில் மிக மட்டமான வகையும்கூட அன்றைய இங்கிலாந்து ஆக்கிய மீவுயர் தரத்திலான இரும்பைப் போன்றே மிக நன்றாக இருந்தது என்பதே அவர்களின் கருத்தாகும்.

அன்று ஆங்கிலேயர் ஆக்கிய இரும்பைவிடத் தென்னிந்திய இரும்பு, தரத்தில் உயர்ந்தது என்பதைக் கோடிட்டுக் காட்டும் கேப்டன் கேம்பெல்,

> "தென்னிந்தியாவின் மிக நல்ல நாட்டு இரும்பு எதுவும் எதிர்கொள்ள முடியாத மேற்போந்த தேர்வு யாதுமில்லை. என்னுடைய சொந்த உலைகளில் நான் ஆக்கிய அத் தென்னிந்திய இரும்பை விரற்கடை தடிப்புக்கூட இல்லாத மெல்லிய ஆணிக் கம்பியாக அடித்து நீட்டிய போதும், அஃது உடையாமல் அந்த அடிகளையெல்லாம் தாங்கிக் கொண்டது; முன்னும் பின்னுமாக ஆறு ஏழு முறை மடக்கிய பின்னரே அஃது உடைந்தது. சவுக்கு நாணை முறுக்குவதைப் போல் முறுக்கியபோது, அதன் இழைகள் சில விடுபடத் தொடங்கிய வரையில், அதில் யாதொரு முறிவும் ஏற்படவில்லை.... இந்திய இரும்பில் எஃகும் இருப்பதை நான் சுட்டிக்காட்டினேன். அது போல், அந்த இரும்பின் தரத்தை மிக எளிய முறையில் ஆய்ந்து தேர முடியும். அந்த இரும்பின் நடுப்பகுதியைப் பழுக்கக் காய்ச்சியபின் அதை நீரில் முக்கியெடுத்தால், அதிலடங்கிய எஃகு மட்டுமே நொறுங்க வல்லதாகுமேயன்றி, அதன் நாரிழைப் பகுதிகள் பாதிக்கப்படுவதில்லை. இத்தகைய ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஒரு விரற்கடை நீளமுள்ள நல்ல இரும்பு எதுவும், அஃது உடைபடும்முன் கனமான சம்மட்டியால் போட்ட பன்னிரு அடிகளையாவது தாங்க வல்லது"*

---

* "There is hardly one of the above tests, which good native iron of Southern Southern India will not bear, and some iron which was produced in my own furnaces, has stood drawing out under the hammer into a fine nail rod not

www.tamilarangam.net



என விளக்கமாகக் கூறுவார். தமிழரிடம் விளங்கிய தொழில்நுட்பத்தின் சிறப்பை இவர் போன்றோரின் ஆய்வுகள் இவ்வாறெல்லாம் புலப்படுத்தின.

இத்தகைய மீவுயர் இரும்பு-எஃகுத் தொழில்நுட்பம், வடுக அநாகரிகரின் கருப்பகுதிக்குங்கூடத் தமிழராலேயே கொண்டு செல்லப்பட்டிருக்க வேண்டும். கொங்குநாட்டின் ஒரு பகுதியாயிருந்து பின்னர் பிரிந்த பழைய மைசூர் மன்னராட்சிப் பகுதிகளில் வடிக்கப்பட்ட கொல்லனுலைகள் எல்லாம் தமிழரால் வடிக்கப்பட்டனவேயாகும்.

தமிழரல்லா ஆய்வாளர்கள் எல்லாம் ஓர் உண்மையைக் காணத் தவறுகின்றனர். இரும்புக்காலப் புரையிடங்கள் மலிந்துள்ள பெங்களூர், கோலார், மைசூர் மாவட்டங்கள் தமிழகத்தின் கொங்கு நாட்டில் இருந்து பிரிந்தவை; இவை யாவும் தமிழகத்தின் சேலத்திற்கு மிக அருகிலானவை என்பதே அவ் வுண்மையாகும்.



சாம்பல்மேடுகள்

## கரிசல்காட்டு வடுகர்


கண்ணன்பெண்ணை-துங்கபத்திரை இடைத்துறைநிலத்தில் ஆடுமாடுகளை அடைத்துவைத்த தொழுவங்களிலிருந்து அள்ளிய சாணத்தையும் புழுக்கையையும் மலை போல் குவித்துப் பின்னர் எரியூட்டியதால் தோன்றிய சாம்பல்மேடுகள் (ash-mounds) பல கண்டு

1/10th inch thick, without splitting, and when kneed backwards and forwards, only broke after six or seven times. When twisted like a hank of whipcord until some of the plies began to draw out, no fracture occurred in any part, and a 1/4 inch in thickness, bore doubling together *cold,* and the angle hammered down close with very little signs of separation between the fibres. As I have shewn that native Indian iron contains steel, the quality can be easily tested by a very simple method, which is merely to bring the middle part of the bar to a red heat, and then immersing it in water. by which all the steely portions will be rendered brittle, without the fibrous portions being affected. An inch bar of good iron thus treated will bear a dozen blows of a heavy sledge hammer before it will break"[26]

www.tamilarangam.net



பிடிக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் 600 முதல் 1000 வரையிலான ஆடு மாடுகளை அடைத்துவைத்திருந்த தொழுவங்களும் பட்டிகளும் இருந்த இடங்களாகும். துங்கபத்திரை ஆற்றுக்கும் வட பெண்ணை ஆற்றுக்கும் இடையிலான இடைத்துறைநிலத்திலும் அத்தகைய சாம்பல்மேடுகள் பல காணப்படுகின்றன (வரைபடம் 3). இச் சாம்பல் மேடுகள், ஆடுமாடுகளைப் பேணிய முல்லை நிலவாழ்க்கைக்கு உரியன. புதிய கற்காலத்திற்கும் இரும்புக் காலத்தைக் குறிக்கும் பெருங்கற்படைக் காலத்திற்கும் உரியனவே அந்தச் சாம்பல் மேடுகள். புதிய கற்காலத்திற்குரிய சாம்பல்மேடுகள், நாடோடி ஆயர் வாழ்க்கைக்கு உரியனவாம். இரும்புக்காலத்திற்குரிய பெருங்கற்படைக் காலச் சாம்பல்மேடுகள், ஓரளவு நிலைத்த ஆயர் வாழ்க்கையையும் தொடக்க நிலைப் பயிர்த்தொழிலையும் காட்டுவனவாகும். கொத்து (போடு) என்னும் பயிர்த்தொழிலாயும், இடம்விட்டு இடம்பெயர்ந்து பயரிரும்




வரைபடம் 3

www.tamilarangam.net



புனம் (shifting cultivation) முறையாயும் அக்கால உழவு இருந்திருக்க வேண்டும்.

வடுகரின் தாயகமான கண்ணன்-துங்கபத்திரை ஆற்றுப்படுகைகளில் உள்ள பெருங்கற்படைக் கல்லறைகளும், அங்கு புதிய கற்காலம் கழிந்தவுடன் நேரடியாகவே இரும்புக்காலம் தொடங்கிவிட்டதையே காட்டுகின்றன. ஆயினும், இவ் வடுகரில் மிகப் பெரும்பாலோர் முல்லைநிலத்து ஆயர்குடியினராயிருந்தும், அவர்கள் இரும்புக்கருவிகளை ஆண்டுவந்தனர். மலைகளில் வாழ்ந்துவந்த குறிஞ்சிநில மக்களாக இருந்த கற்கால மக்கள், இரும்பின் பயனைக் கற்றறிந்து இரும்புக் கருவிகளை ஆளத் தொடங்கிய பின்னரே காடுகளை வெட்டி நாடாக்க முடிந்தது என்னும் கருத்து இங்குத் துல்லியமாக மெய்ப்படுகிறது. இரும்பின் பயனை அறிந்து, காடுகளை வெட்டி முல்லைநில வாழ்வியலை அமைத்துக்கொண்ட வடுகர்கள், வானம் பார்த்து விதைக்கும் சோளம், சாமை, தினை, கேழ்வரகு ஆகிய உணவுப் பயிர்களையே விளைவித்தனரேயன்றி, சிக்கலான நெல் வேளாண்மையைப் பொதுவாகக் கற்றுத் தேரவில்லை. பெல்லாரி மாவட்டத்திலுள்ள தெக்கலக் கோட்டை, தாரவாடு மாவட்டத்தின் தெற்கிலுள்ள பள்ளூர் ஆகிய ஓரிரு இடங்களில் மட்டுமே நெல்லின் எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.[27] ஆயினும், தமிழர் கண்ட மருத வாழ்வியல் இவ் வடுகரிடம் ஏறத்தாழ இல்லை. ஆடுமாடு மேய்ப்பதும், கொத்துக்காட்டு உழவும், (காய்ந்த மண்ணை உழுது விதைத்துவிட்டு மழைக்காகக் காத்திருக்கும் புழுதிவிதைப்பில் ஈடுபட்ட) புழுதிக்காட்டு உழவுமே அவ் வடுகரின் பொருளியல் வாழ்வின் அடிப்படைகளாக இருந்தன. புனம் உழவு, கொத்துக் காட்டு உழவு, புழுதிக்காட்டு உழவு என்னும் அளவுக்கு மட்டுமே இரும்புக்கருவிகளை அவர்கள் ஆண்டுவந்தனர்.

அரசு என்னும் கட்டமைப்பு, பொதுவாக முல்லை வாழ்க்கையிலேயே அரும்பியது. அவ் வடுகர்களும் குறும்பர் அரசுகள் பலவற்றைக் கட்டியமைத்து, இடையறாது போரிட்டுக் கொண்டிருந்தமையால், இரும்புப் படைக்கலன்கள் அவர்களிடம் பரவலாகப் புழக்கத்தில் இருந்தன. கொத்துக்காட்டுப் புழுதிக்காட்டுப் புனம் உழவுடன், போருக்கான படைக்கலன்கள் என்னும் அளவோடு மட்டுமே அவர்கள் இரும்பை ஆண்டுவந்தனர்.

ஆற்று வண்டல்மண் பெருமளவில் இல்லாத நாடு கருநாடகம். இக் கருநாடகத்தின் தென்பறந்தலையிலும், வடபறந்தலையின் தெற்கு எல்லையிலுள்ள தாரவாடு, பெல்லாரி மாவட்டங்களின் தென் பகுதியிலும் செம்மண் பரந்துள்ளது. வெடிய உப்பு (potash), இரும்பு, அலுமினா ஆகியன செறிந்துள்ள இச் செம்மண்ணில், காலகம் (nitrogen), எரியம் (phosphorus), தோட்டமணிச்சத்து (humus) மிகக் குறைந்தே காணப்படுகின்றன. பீதர் மாவட்டம், தாரவாடு, பெல்லாரி மாவட்டங்களின் பகுதிகளைத் தவிர, கருநாடகத்தின் வட

www.tamilarangam.net



பறந்தலை முழுவதும் கரிசல்நிலமாகவே உள்ளது. சுண்ணாம்பு, வாலிம நீறு (magnesia), அலுமினா, வெடியுப்பு ஆகியன இக் கரிசல் மண்ணில் மிகையாக இருப்பினும், எரியமும் காலகமும் மிகக் குறைவாகவே உள்ளன.[28] இதனால், வடுகரின் தாயகமான கண்ணன் பெண்ணை-துங்கபத்திரை இடைநிலத்தில் தோன்றிய இரும்புப் பண்பாடு, நெல் வெள்ளாமையைப் பெரிய அளவுக்கு மேற்கொள்ளும் வாய்ப்பை நல்கவில்லை. அவ் வடுகரின் வாழ்க்கை முல்லை, பாலை வாழ்க்கையாக மட்டுமே இருக்க நேரிட்டது.

பருத்தி விளைச்சலுக்கு உகந்த கரிசல்மண், வெயிலில் காய்ந்தால் வாடி உதிர்வதும், மழை ஈரத்தில் பிசுபிசுவென ஆவதும் ஆகிய தன்மைகளைக் கொண்டது. பருவமழை ஓய்ந்தவுடன், அக் கரிசல் நிலம் ஆழமாக வெடிப்புறும். இதனால், கொத்து உழவோ ஏர் உழவோ செய்யத் தேவையில்லை. வடகருநாடகத்தை ஒட்டி விரியும் மகாராட்டிரத்தில் கரிசல்மண் அதே போன்று பெருமளவில் உள்ளதால், அக் கரிசல்நிலத்தை மரக்கலப்பைக் கொண்டு உழுவதில் பயனில்லை. கோடையில் அக் கரிசல்நிலம் பாளம்பாளமாக வெடிப்புறுவது, இயற்கையே அந் நிலத்தை உழுவதைப் போன்றிருக்கும். இதனால் தான், சோளம் பயிரிடுவதற்காக மகாராட்டிரத்தின் கரிசல் நிலங்களை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் உழுவர்.[29]

ஏர் ஓட்டியபின் மண்ணைப் பொடிப்பொடியாக்கிய புன்செய் நிலைத்தையே புழுதிக்காடு என்றனர். அந்தப் புன்செய் நிலத்தை மூன்றாவது அல்லது இறுதி முறையாக உழுவதையே புழுதி யெடுத்தல் என்றனர். வறண்டு கிடக்கையில், நிலத்தை உழுது விதைத்துவிட்டு, விதைத்த பயிர்வித்துக்களை மழை வரும் வரை புழுதியில் விட்டுவைப்பதையே புழுதி விதைப்பு என்றனர். தென் மாவட்டங்களில் கண்மாய்ப் பாசன நிலங்களில் வடமேற்குப் பருவ மழை தொடங்கும் முன்னர், வயலை நன்கு உழுது புழுதி எடுத்த பின்னர் நெல்லை நேரடியாக விதைத்தபின், மழை நீரை நம்பி வளரும் பயிர், பின்னர் கண்மாயில் தண்ணீர் பெருகியவுடன் நீர்ப் பாசனம் பெற்றது. புழுதியைப் பூழ்தி என்பது இலக்கிய வழக்கு. பூழி என்பது 'தூள்' என்றும் 'குழை சேறு' என்றும் பொருள்படும். புழுதி விதைப்பு செய்யப்பட்டு வந்த நாடே பூழிநாடு என்னும் கொடுந்தமிழ்நாடு. இப் பூழிநாட்டை ஆண்ட சேரர்குடியினரைப் பூழியர் என்றனர். இப் புழுதி உழவு பாண்டிய நாட்டிலும் விளங்கி வந்தமையால், பாண்டிய அரசனுக்குப் பூழிவேந்தன் என்னும் பெயரும் உண்டு.


இதனால்தான் வடுகரின் தாயகப் பகுதியில் மருத வாழ்வியலுக் குரிய நெல் வேளாண்மை அக் காலத்தில் அவ் வடுகரால் மேற் கொள்ளப்படவில்லை. மோரியர் காலத்திற்குப் பின்னரே தக்காண மேட்டுநிலமான அவ் வடுகரின் தாயகத்தில் வேளாண்மை பரவ

www.tamilarangam.net



லானது.[30] அசோகனின் காலம் வரையில் கருநாடகத்தில் ஏர்க் கலப்பை அறிமுகமாகவில்லை என்பதை அகழ்வாராய்ச்சிகள் காட்டு கின்றன.[31]

கருநாடகம், ஆந்திரம், மகாராட்டிரம், கோவா, குசராத் பகுதிகள் ஆகியவற்றுள் மகாராட்டிரத்தின் விதர்பா பகுதியில்தான் ஆந்திர(சதவாகன)க் குடியிருப்புகள் அடர்ந்து காணப்படுகின்றன. பெருங்கற்படைசச் சின்னங்கள் கருநாடகத்தில் இங்கொன்றும் அங்





வரைபடம் 4

www.tamilarangam.net



கொன்றுமாக விரவிக் கிடப்பதைப் போலன்றி அவ் விதர்பா பகுதியில் அவை மிகுதியாகக் காணப்படுகின்றன. செம்பு, இரும்புப் படைக் கலங்களும் உழவுக்கருவிகளும் கருநாடகத்தில் இருப்பதைவிட விதர்பாவின் பெருந்தலைக்கற்படைகளில் கூடுதலாக இருப்பதுடன், குதிரை எலும்புகள், குதிரைக் கடிவாளங்கள் ஆகியன அந்தப் பெருங் கற்படைகளில் காணப்படுகின்றன. இந்தப் பகுதியே மேலை வடுகரான கோசரின் இருப்பிடமாகச் செறிந்து விளங்கிவந்தது என்பதையே அவை காட்டுகின்றன.[32]

கரிசல்மண் மிகுந்த பகுதி என்பதாலேயே கருநாடகம் என்னும் பெயர் வந்தது. தமிழகத்திற்குள் ஊடுருவிய வடுகர்கள் கரிசல் மண்ணைத் தேடிச் சென்று கருங்காடு மண்டிய ஊர்களிலேயே குடியேறினர். இதனால்தான், தமிழ்நாட்டுத் தெலுங்கு வடுகருக்குக் கருங்காட்டுக்காரர் என்னும் பெயர் வந்தது.




வரைபடம் 5
*சதவாகனரின் காசுகள் கிடைத்த இடங்கள்*

www.tamilarangam.net



குறும்பு என்பது காட்டரணைக் குறிக்கும்; பாலைநிலத்து ஊரையும் குறிக்கும்; குறுநிலமன்னரையும் குறிக்கும். குறும்பொறை என்பது முல்லைநிலத்தையும் குறிக்கும். குறுகலர் என்பது பகைவரைக் குறிக்கும். வேங்கடத்துக்கு அப்பால் அத்தகைய குறும்பர் நாடுகள் பல இருந்தன. இதனால், குறும்பரான வடுகர்கள் முல்லை நில மக்களாகவும் பாலைநில மக்களாகவுமே பெரும்பாலும் இருந்தனர். இவர்கள் முரட்டுக்குணம் மிக்க அநாகரிகப் பழங்குடியினர் என்பதனால், அரசுகளும் பேரரசுகளும் இவர்களைக் கூலிப்படைஞராக அமர்த்திக் கொண்டன. இத் துணைக்கண்டத்தின் கிழக்கில் சோணை ஆற்றங்கரையில் தோன்றிய மோரியப் பேரரசு, இவ் வடுக அநாகரிகரைக் கூலிப்படைஞராகப் பெருமளவில் பயன்படுத்திக் கொண்டது. மோரியரின் ஆட்சி, தக்காண நிலமேடையில் கால் கொள்ளவும் பரவவும் வழிவகுத்தது, இவ் வடுக அநாகரிகரே ஆவர்.

கருநாடகத்தில் மோரியனான அசோகனின் 16 கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சித்திரதுருக மாவட்டத்திலுள்ள பிரமகிரி, சித்தாபுரம், ஜாதிங்கராமேசுவரம், பெல்லாரி மாவட்டத்திலுள்ள உடைகுளம் (Udegollam), ராய்ச்சூர் மாவட்டத்திலுள்ள நீட்டூர், கொப்பல் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. ஆந்திரத்தில் ராஜுலா மண்டகிரி, எர்ரகுடி, அமராவதி ஆகிய இடங்களிலும் அவை உள்ளன.[27] விந்தியமலைக்குத் தெற்கே உள்ள அசோகனின் கல்வெட்டுகள் பெரும்பாலும் வடுகரின் தாயகப் பகுதியிலேயே கிடக்கின்றன. (வரைபடம் 4) வடுகர் வழியாகவே மோரியர் ஆட்சி, தக்காண நில மேடையில் கால்கொண்டதையே இது காட்டும்.

வடுக அநாகரிகரில் பெரும் பகுதியினர், நாடோடி ஆயர்களாகவும் பின்னர் கூலிப்படைஞராகவும் இத் துணைக்கண்டத்தின் நடுப்பகுதியில் அலைந்து திரிந்தனர். மோரியப் பேரரசு கி. மு. 230ஆம் ஆண்டளவில் வீழ்ந்தபின், அந்தக் கூலிப்படைஞராயிருந்த வடுகர்கள் இன்றைய பெல்லாரிக்கு அருகில் ஒரு வடுகப் பேரரசை (ஆந்திர அல்லது சதவாகனப் பேரரசை) நிறுவியபோது அவ் வடுகரிடம் நிகழ்ந்த படைவழிப் பெயர்ச்சிகள், அவ் வடுகரின் வல்லாண்மையைப் பரவலாக்கின. ஆயினும், அவர்களால் சேர, சோழ, பாண்டிய நாடுகளை மட்டும் நேரடியாக வெல்ல முடியவில்லை. சோழமண்டலக் கரையிலமைந்த கரையோர ஆந்திரம் முழுவதும், சோழர்களின் ஆளுகைக்கு நெடுங்காலம் ஆட்பட்டிருந்தமையால், அங்கு அவ் வடுக (ஆந்திர)ப் பேரரசின் கொற்றம் இல்லை. இவ்வடுகரின் பரவலை வடுக அல்லது சதவாகனர் காசுகள் கிடைத்த இடங்கள் காட்டவல்லன. (வரைபடம் 5)[33]

www.tamilarangam.net



## குறிப்புகள்

1-2. J. Coggin Brown, *Prehistoric Antiquities of India Preserved in the Indian Museum at Calcutta, ed., Sir John Marshal, Cosmos Publications, New Delhi, 1981 [First Published 1917], pp 3 and 67.*

3. V. R. Ramachandra Dikshitar, *Origin and Spread of the Tamils*, the South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Ltd, Madras, 1971, pp 20-21.

4. *EI* Vol XX, p 79 quoted by Dr. Gopalachari, *Early History of the Andhra Country*, University of Madras, 1976, p 41*f*.

5-7. Saki, *Making History, Karnataka's People and their Past*, Vol I, *Stone Age to Merchantalism*, Vimukthi Prakashana, Bangalore, 1998, pp 28,30 and 32.

8. J. Coggin Brown, *Prehistoric Antiquities of India Preserved in the Indian Museum at Calcutta*, p 13.

9. V. R. Ramachandra Dikshitar, *Origin and Spread of the Tamils*, p 23.

10. J. Coggin Brown, *Prehistoric Antiquities in the of India Preserved in the Indian Museum at Calcutta*, pp 8-9 and 11-12.

11-13. Saki, *Making History, Karnataka's People and their Past*, Vol I, *Stone Age to Merchantalism*, p 44.

14. V. R. Ramachandra Dikshitar, *Prehistoric South India*, Cosmos Publications, New Delhi, 1981 (First Edition 1951), pp 96-97.

15. Saki, *Making History, Karnataka's People and their Past*, Vol I, *Stone Age to Merchantalism*, p 49.

16. V. R. Ramachandra Dikshitar, *Origin and Spread of the Tamils*, p 21.

17-20. Saki, *Making History, Karnataka's People and their Past*, Vol I, *Stone Age to Merchantalism*, pp 41 and 44.

21-23. Guna, *Salem Steel and the Tamil Nation*, Aayvarann, Bangalore, 1981.

24. *Madras District Gazetteers, Salem*, Vol I, Part II, Madras, 1918, p 236.

25-26. Dharampal, *Indian Science and Technology in the Eighteenth Century, Some Contemporary European Accounts*, Academy of Gandhian Studies, Hyderabad, 1983, p 306.

27-28. Saki, *Making History, Karnataka's People and theirPast*, Vol I, *Stone Age to Merchantalism*, pp 39 and 13-14.

29. M. K. Dhavalikar, *Early Farming Communities of Karnataka and Maharashtra — Contacts and Correlations* in *Archaelogy of Karnataka*, ed., A. V. Narasimha Murthy, Prasaranga, University of Mysore, 1978, p 26.

30. D. D. Kosambi, *An Introduction to the Study of Indian History*, Popular Prakashan, Bombay, 1975, p 240.

31-33. Saki, *Making History,Karnataka's People and their Past*, Vol I, *Stone Age to Merchantalism*, pp 101,39 and 99-100.

www.tamilarangam.net

# அவிழ்க்கப்படும் புதிர்கள்!

வேங்கடமலையை ஆண்டுவந்த புல்லியைப்பற்றி முந்தைய பகுதியில் பார்த்தோம். இவனைக் 'கள்வர் கோமான்' என அகநானூறு குறிப்பிடும். மழவர் தலைவனான அதிகனை இப் புல்லி வென்றான். நல்ல குதிரைவீரராக இருந்த மழவர்களும் பின்னர் ஆறலைத்து வழிப் பறி செய்வதையே தம் தொழிலாகக் கொண்டனர். சிற்றரசனாயிருந்த புல்லி ஏன் 'கள்வர் கோமான்' ஆனான்? வீரம் செறிந்த மழவர்கள் எப்படி வழிப்பறிக் கொள்ளையராயினர்? உரோம வரலாற்றைப் புரட்டினால், முன்னுக்குப்பின் முரணான அந் நிலைகளைப் புரிந்து கொள்ள உதவும் நல்ல கொளுவுகள் கிடைக்கின்றன.

## பண்ணையடிமை

பண்டை உரோமப் பேரரசு, அடிமையுடைமையை அடியொற்றியது. அடிமைகளின் உழைப்பின்மீது அது வானளாவ எழுந்து நின்றது. இந்த அடிமை வாழ்வியலின் ஈவிரக்கமற்ற சுரண்டலையும், மாந்தநேயமற்ற கொடிய ஒடுக்கல்களையும் தாங்க முடியாத உரோம அடிமைகள், அவ்வப்போது சிறிய பெரிய கலகங்களைச் செய்தனர். இதனால், அந்த அடிமைகளை முன்னர் போல் மாக்களாக நடத்த முடியாது என்பதை அறிந்த உரோம அரசு, பழைய அடிமை முறைக்கு மாறாக — ஓரளவு தளர்ச்சியான பண்ணையடிமை முறையை — ஒரு புதிய விளைப்பு உறவை வடித்தெடுத்தது. அடிமையுடைமை வாழ்வியல் கெட்டு நிலக்கிழமை என்னும் இன்னொரு வாழ்க்கைத் திணை உருவாவதற்கு முன்னால், அன்றிருந்த விளைப்புறவில் இப் பண்ணையடிமை முறை ஓர் இடைக்கால ஏற்பாடாகவே இருந்தது. பண்டை உரோமர்கள், அப் பண்ணையடிமையைக் 'கொலனசு' அல்லது 'வில்லெய்ன்' (colonus or villein) என்றழைத்தனர்.[1]

பழைய அடிமைக்கும் இப் புதிய பண்ணையடிமைக்கும் இடையிலான வேற்றுமைகள் என்ன?

அடிமையுடைமைக் கால உரோமானிய அடிமையால் முறைப்படி — சட்டப்படி — திருமணம் செய்துகொள்ள முடியாது. இழந்த சொத்தை அவனால் மீண்டும் பெறவே முடியாது. ஆனால், பண்ணையடிமையோ, முறைப்படி — சட்டப்படி — திருமணம் செய்துகொள்ள முடியும். இப் பண்ணையடிமைக்குச் சொத்து வைத்துக்கொள்ளவோ — சொத்தை வாங்கவோ விற்கவோ—உரிமை இருந்தது. மணம் செய்து கொள்ள வேண்டுமாயின், அப் பண்ணையடிமை தன் ஆண்டைக்கு

www.tamilarangam.net



ஒரு குறிப்பிட்ட தொகையைக் கட்ட வேண்டும். பண்ணையாரால் தன் பண்ணையடிமைகளைத் தான் விரும்பியவாறு தண்டிக்க முடியும். அப் பண்ணையடிமைக்குக் கசையடி தரவோ, அவனைச் சிறையி லடைக்கவோ முடிந்தது. 'மண் அடிமைகள்' என்னும் பொருளில் கோடெக்ஸ் தியோடோசியானசின் (Codex Theodosianus கி. பி. 409) அரசுச்சட்டம் அப் பண்ணையடிமைகளை servi terrae எனக் குறிப் பிட்டது. பிரிக்கவொண்ணா வகையில் இப் பண்ணையடிமை நிலத் துடன் பிணைக்கப்பட்டிருந்தான். நிலத்திற்கும் பண்ணையடிமைக்கும் இடையிலான உறவை யாருமே பிரித்துவிட முடியாது. படையில் சேர்ந்து போர்வீரனாயினும், அப் பண்ணையடிமையால் அந் நிலத்தி லிருந்து அறுபட முடியாது. தன் பண்ணையை ஒருவர் விற்க நினைத் தால், அந் நிலத்தை நம்பி வாழும் பண்ணையடிமைகள் இல்லாமல் அதை விற்க முடியாது. நிலத்தையோ, அதன் பண்ணையடிமை யையோ, தனித்தனியாக விற்க முடியாது. ஒவ்வொரு பண்ணையடி மையும் ஆண்டுக்கு இவ்வளவு எனப் பண்ணையாருக்குக் குடிக்கூலி (rent) கட்டி வந்தான். இந்தக் குடிக்கூலியின் அளவை எந்த ஆண் டையும் தான்தோன்றித்தனமாக உயர்த்தவோ மாற்றவோ முடியாது.[2]

பண்ணையார்கள் இறை (நிலவரி) கட்டினர். அரசனுக்கு இறையைக் கட்டாத எல்லாரும் தலைவரி (poll-tax) கட்டினர். புரவ லர்கள் (Patrons) எனப்பட்ட ஆண்டைகளிடமிருந்து பெற்ற துண்டு நிலத்திற்காகக் குடிக்கூலி (பாட்டம்) கட்டிய குடியானவர்கள் (villeins or coloni), தலைவரியுடன்கூடத் தவசம் (உணவுக்கூலம்), பாற்கட்டி (cheese), ஆடுமாடுகள் ஆகியவற்றின்மீதும் — அக்கம் பக்கத்துப் பட்டணங்களில் கொண்டுபோய் விற்ற பண்டங்களின் மீதும் — விதிக் கப்பட்ட பிற வரிகளையும் கட்ட வேண்டியிருந்தது. பண்ணையடி மைகளின் உழைப்பைப் பண்ணையார்கள் மிகக் கொடுமையாகப் பிழிந்தெடுத்தனர். பண்ணையடிமைகளின் சார்பில் பண்ணையார் களே அரசுக்குத் தலவரி கட்ட வேண்டி இருந்தமையால், பண்ணை யடிமைகளைப் பண்ணையார்கள் மேன்மேலும் ஒட்டச் சுரண்டினர்.[3]

பண்ணையடிமை எனப்பட்டவனே நிலக்கிழமையின்கீழ்க் குடியானவன் (tenant) ஆனான். பிற்காலக் குடியானவனின் முன் னோடியே அந்தப் பண்ணையடிமை.

பண்டை உரோமில் இருந்த 'கொலனசு' என்னும் பண்ணை யடிமைக்கு ஈடான பண்ணையடிமை தமிழர் வரலாற்றில் இருந்ததற் கான கொளுவு தமிழ்க் கழக (சங்க) இலக்கியங்களில் உண்டா? உண்டு. புலையர் என்போர் அத்தகைய பண்ணையடிமைகள்தாமே?

## புலையரும் வேளாளரும்

பண்டை உரோம வரலாற்றில் இரண்டு வகையான பண்ணை யடிமைகள் உண்டு. நடுவணரசின் நேரடி ஆட்சியின்கீழ் ஒரு மாகாண

www.tamilarangam.net



மாக இல்லாத எல்லைப்புற நாட்டைத் தமிழர்கள் அடங்காப்பற்று என்றனர். அதைப் போன்ற அடங்காப்பற்றின்மீது அவ்வப்போது படையெடுத்து உரோமப் பேரரசையே அரட்டிவந்த செருமானிய அநாகரிகர்மேல் போர் தொடுத்து விரட்டிய உரோமப் பேரரசர்கள், அந்த அநாகரிகரில் சிலரைப் பிடித்துவந்து உரோமின் எல்லைகளுக் குள் பண்ணையடிமைகளாகக் (கொலனசுகளாகக்) குடியேற்றினர். உரோமப் பேரரசன் இரண்டாம் கிளாடியசு (கி. பி. 268-70), எண்ணரிய கோத்திய (செருமானிய) அநாகரிகரைப் பிடித்துவந்து பண்ணையடிமை களாக்கினான்.[4]

பெரும்பண்ணைகளின் எண்ணிக்கை இதனால் மளமளவெனப் பெருகியது. உரிமைபெற்ற தனிஉழவர்கள் (free peasants) பலர் இதனால் பிழைப்பு இழந்தனர். செருமானிய அநாகரிகரைப் பிடித்து வந்து உரோமப் பேரரசுக்குள் குடியேற்றியதால் வந்த குழப்பங்களாலும் நெருக்கடிகளாலும் வாழ்விழந்த தனிஉழவர்கள் சிலர் படைஞராயினர். வேறு சிலர், மக்கள்தொகை ஏற்கெனவே மிதமிஞ்சிப் பெருத்திருந்த நகர்ப்புறங்களில் குடியேறத் தொடங்கினர். எஞ்சியவர்கள், வேறு வழியின்றித் தாங்களாகவே முன்வந்து தங்களின் உரிமையை இழந்து, பெரிய பண்ணையார்களிடம் பண்ணையடிமைகளாகினர். 'மூல உரிமையாளர்' என்னும் பொருளில் இவர்கள் originarii என்று அழைக் கப்பட்டனர்.[5] 'மூலஉரிமையாளர்' என்னும் தனிஉழவர்கள் உரோமில் இருந்த பண்ணையடிமைகளில் ஒரு பகுதியினராயின், செருமானிய அநாகரிகர்கள் இன்னொரு பகுதியினராவர்.

கி. பி. இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளில் உரோமப் பேரரசிற்குள் அடங்கிய உழவர்குடியினரின் வாழ்க்கை பெரிய நரக மானது. இத்தாலியின் கன்னிநிலங்களில் எட்டில் ஒரு பங்கு உழுது விதைக்கப்படாமல் தரிசாகவே கிடந்தது. உரோமப் பேரரசர்களுக்குச் சொந்தமான அடைநிலங்கள் (domain lands) பிற மாநிலங்களிலும் பெருமளவில் இருந்தன. சிசிலியில் தோட்டம் துரவுகளும், எசுப்பானி யாவில் கனிச்சுரங்கங்களும், (முந்தைய யூகாசுலாவியாவில் ஆத்ரிக் கடலின் வடகிழக்குக் கரையில் உள்ள) டால்மேஷியாவில் பெரிய மேய்ச்சல் நிலங்களும் உரோமப் பேரரசரின் தனிச்சொத்துகளாக இருந்தன. இவற்றையெல்லாம் எண்ணரிய அடிமைகள் உழுது விளை வித்து வந்தனர். ஆப்பிரிக்காவிலிருந்த உரோமானியக் குடியேற்றங் களில் பேர் பாதி, ஆறே ஆறு கிழார்களுக்குச் சொந்தமாக இருந்தது.[6]

பண்டை உரோமில் நடந்த நிகழ்வுகளுக்கு ஈடான ஒரு போங்கு தமிழகத்திலும் நேர்ந்திருக்குமோ என்பதே கேள்வி. இதற்கு 'இல்லை' என்றும், 'ஆம்' என்றும் விடையிறுக்கலாம். அநாகரிகரைக் குடியேற்றிய தால் வந்த பண்ணையடிமைகள் தமிழகத்தில் இருந்ததைப் பற்றிய குறிப்புகள் யாதும் கிடைத்தில. பண்டைத் தமிழகத்திலிருந்த 'புலையர்' என்னும் பண்ணையடிமைகள், வடுக அநாகரிகர் அல்லர். அவர்கள்

www.tamilarangam.net



யாவரும் தூய தமிழரில் தொல்குடியினராவர். இவ் வடுகரில் சிலர் புலையராக ஆக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் மிகச் சிறிய பங்கினராகவே இருந்திருக்க வேண்டும். தனிஉழவரைத் தமிழகத்தில் வேளாளர் என்றனர். இவ் வேளாளரைப் புலையர்கள் ஓரம் கட்டியதால் பண்டைத் தமிழர் வாழ்வியலில் பெரிய நெருக்கடி தோன்றியது எனக் காட்டவல்ல குறிப்புகளும் இல்லை.

## கள்ளர்குடிகள்

ஆனால், இப் புலையர்களும், வறுமையுண்ட வேளாளர்களும் சேர்ந்து ஒருகால் அடங்காப்பற்றாக இருந்த தொண்டை மண்டலத்தில் சேர, சோழ, பாண்டிய நடுவ்ணரசுகளுக்கு எதிராகக் கலகம் செய்ததைக் குறிப்பறிய முடிகின்றது. அவர்கள் கள்ளர் கூட்டங்களாகத் திரிந்தனர் என்பதும் மெய்ப்படுகிறது. அத்தகைய கள்ளர் தலைவர்களில் ஒருவனே கள்வர் கோமான் புல்லி. கலைக்கப்பட்ட அல்லது குலைக்கப்பட்ட படைஞரான மழவர்கள் பின்னர் வழிப்பறிக் கொள்ளையராகத் திரிந்த இயற்பாடும்கூட அவ் வழி நிற்கின்றது.

இத்தகைய கள்வர் கூட்டங்கள் ஏன் தோன்றின? எப்படித் தோன்றின? இக் கேள்விகளுக்கான விடை காண, பண்டை உரோம வரலாற்றை ஒப்பிட்டு அலசுவோம்.

ஆரேலியனும்' (Auralian கி. பி. 270-75) டாசிட்டசும் (Tacitus) ஆண்ட காலத்திற்கு இடையில், உரோம நிலப்பரப்பு முழுவதுமே அநாகரிகப் படையெடுப்பாளரிடம் வீழ்ந்துவிட்டதைப் போல் தோன்றியது. இந் நிலையில், புரோபசு (Probus கி. பி. 276) அந்த அநாகரிகரைத் தாக்கி வீழ்த்தி விரட்டினான். இது நிகழ்ந்து ஓய்வதற்குள், புரோக்குலியசு, போனோசசு என்னும் இரண்டு படைத்தலைவர்கள், உரோமப் பேரரசனை எதிர்த்துக் கலகம் செய்தனர். இவர்களைப் புரோபசு முறியடித்தான். இந்தப் புரோபசு மடிந்தவுடன், செருமானிய அநாகரிகர்கள் உரோமை மீண்டும் தாக்கத் தொடங்கினர். இதே நேரத்தில், பகாடே (Bagaude) என்னும் கள்வர்குடியினர் காலியாவிற்குள்* (Gaul or Gallia) புகுந்தனர்.[7]


உரோமப் பேரரசின் அடங்காப்பற்றாக இருந்த நாடே காலிய நாடு. இந்தக் காலிய நாட்டிலிருந்த தனிஉழவர்களின் வாழ்க்கைத் தரம், அங்கிருந்த பண்ணையடிமைகளின் வாழ்க்கைத் தரத்திலிருந்து பெரிதாக ஒன்றும் வேறுபடவில்லை. காலிய நாட்டில் கலகக்காரராகத் திரிந்து கொண்டிருந்த பண்ணையடிமைகள் — அடிமையுடைமை முறையின் எச்சங்களாகச் சுருங்கி நின்ற தனி உழவர்களைச் சேர்த்துக் கொண்டு — உரோம ஆண்டைகளின் கொடுமைகளை எதிர்த்துக் கிளர்ந்தனர்.[8]

---

* இக்காலப் பிரான்சு நாட்டிற்கு வழங்கிவந்த பழைய இலத்தின் பெயரே காலியா ஆகும்.

www.tamilarangam.net





வரைபடம் 6
உரோமப் பேரரசு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந் நிலையில், அப் பண்ணையடிமைகள் பல்வேறு கொள்ளைக் கூட்டங்களாகத் திரண்டனர். நாட்டுப்புறங்களில் அவர்கள் ஆங் காங்கே சூறையாடினர்; ஆறலைத்து வாழத் தலைப்பட்டனர். இக் கள்ளர் கூட்டங்களைக் கெல்திய மொழியில் 'பகாடே' (Bagaude) என்றனர். இந்தக் கள்வர் கூட்டங்களும், அவற்றின் வலுவும் வேகமும், காலியா, எசுப்பானியா ஆகிய மாகாணங்களில் மளமள வெனப் பெருகின. ஒரு கட்டத்தில், பேரூர்கள், பட்டணங்கள் ஆகியவற்றின் கதவங்களை மக்களே முன்வந்து இவர்களுக்குத் திறந்து விட்டனர். இக் கள்வர்கள் தமக்கென இரண்டு பேரரசர்களையும்கூட அமர்த்திக் கொண்டனர்.[9]

இந் நிகழ்வுகள் யாவும், வேங்கடத்தை ஆண்ட கள்வர் கோமான் புல்லியின் நிலையை விளங்கிக்கொள்ள உதவும் மிக நல்ல கொளுவு களாகும்.

## வெறிச்சோடிய ஊர்களில்...

மாக்சிமியன் பேரரசனானபோது, இக் கள்வர் கும்பல்களை ஒடுக்கும் பணி அவனிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனை அவன் விரைந்தும் எளிதாகவும் செய்து முடித்தான். கள்வரான பண்ணை யடிமைகளை அவர்களின் வாழ்விடங்களிலிருந்தே அவன் விரட்டி யடித்தான். இவ்வாறு விரட்டியடித்தமையால், எல்லைப்புற நாடு களில் மக்களே இல்லாதொழிந்தனர். அப் பகுதிகள் வெறிச்சோடிப் போயின. இப் பகுதிகளில் மக்களை மீண்டும் குடியேற்ற வேண்டிய தேவை, பேரரசிற்கு இன்றியமையாததானது. இந் நிலையில், தான் முறியடித்து அடக்கிய செருமானிய அநாகரிகரைப் பெரும் எண்ணிக் கைகளில் கொண்டு வந்து, மக்களே இல்லாதொழிந்த எல்லைப்புற ஊர்களில் அம் மாக்சிமியன் குடியேற்றினான். ஃபிராங்குகள் எனப் பட்ட மேலைச் செருமானிய அநாகரிகரை வென்றடக்கிய உரோமப் பேரரசன் கான்ஸ்டான்டியசும் (Constantius), செருமானிய அநாகரி கரைப் பிடித்துவந்து வடகாலியாவில் — குறிப்பாக, அமியன்ஸ், டிராய்ஸ் (Amiens and Troyes) ஆகிய மாவட்டங்களில் — பெருமளவில் குடியேற்றினான். இதனால், காலியா பெருமளவு செருமானியமய மானது. இக் கள்வர் கும்பல்கள் ஒடுக்கப்பட்டன. ஆயினும், அக் கள்ளர் கூட்டங்கள் தோன்றுவதற்கான காரணம் மட்டும் அகற்றப்பட வில்லை.[10]

அக் கள்வர் கும்பல்களை மாக்சிமியன் அடக்கியொடுக்கி விரட்டியடித்தவுடன், பர்குண்டியர், ஆலமன்னியர், ஹெருலி, சாவி யோன்கள் (Burgundians, Alemanni, Heruli and Chavions) முதலான அநாகரிகப் பழங்குடிகள் காலியாவிற்குள் மளமளவென மந்தை மந்தையாய் வந்து புகுந்தனர். கி. பி. 287-88ஆம் ஆண்டுகளுக்கு இடை யில், அந்த அநாகரிகரைக் காலியாவில் முறியடித்து அவர்களை

www.tamilarangam.net



ரைன் ஆறு வரையில் விரட்டிச் சென்ற மாக்சிமியன், செருமனிக்குள்ளேயே புகுந்தான்.[11]

மேற்போந்த உரோம வரலாற்று நிகழ்வுகளை வைத்துப் பார்க்கையில், ஏறத்தாழ இதையொத்த ஒரு போக்கு, புல்லி ஆண்ட வேங்கடமலைப் பகுதியில் நடந்ததைப் பற்றிய கொளுவு கிடைக்கும். இவ் வேங்கடமலையிலிருந்து இடம்பெயர்ந்த புல்லியின் கள்வர் குடியினர், மலையமான் நாட்டுக்குப் போய், அங்கிருந்து சோழநாடு சென்று, இறுதியாகப் பாண்டியநாட்டில் குடியேறியதைப்பற்றி இந்நூலின் முந்தைய பகுதியில் சொல்லப்பட்டதை இங்கு நினைவில் கொள்க.* அதே போல், யாருக்கும் அடங்காமல் வேங்கடமலைப் பகுதியில் ஆறலைத்து வாழ்ந்து வந்த மழவர்களில் ஒரு பகுதியினரும் அங்கிருந்து ஒரு பேரரசனால் விரட்டியடிக்கப்பட்டிருக்க வேண்டும். வழிப்பறிக் கொள்ளையராகத் திரிந்த மழவர்களும்கூட வேங்கட மலைப் பகுதியிலிருந்து பெயர்ந்து பின்னாளில் சோழநாட்டிற்குள் புகுந்து, அங்கு நிலையாக வாழத் தலைப்பட்டதையும் காண்க.

உரோம வரலாற்றில் வரும் 'பகாடே' என்னும் கள்வர் குடியினரை அவர்களின் வாழ்விடங்களிலிருந்து விரட்டியடித்ததைப் போல், புல்லியின் கள்வர்குடியையோ மழவர்களையோ வேங்கடத்திலிருந்து விரட்டியடித்த தமிழ்ப் பேரரசன் யாரெனத் தெரியவில்லை. உரோமப் பேரரசன் மாக்சிமியன் செய்ததைப் போல், தமிழ் மூவேந்தரில் யாரும் வடுக அநாகரிகரைப் பிடித்து வந்து பண்ணையடிமைகளாக்கி உள்நாட்டில் குடியேற்றியதைப் போன்ற நிகழ்வுகள் தமிழர் வரலாற்றில் தென்படவில்லை.

## அடங்காப்பற்றை அறியாத வெள்ளைமூளை!

உரோமுக்கு முற்றாக அடங்கி அதன் மாநிலமல்லா அடங்காப்பற்றாக இருந்தவற்றுள், காலியநாடே தலையானது. கால்லியெனசு (Gallienus கி. பி. 253-68) என்னும் உரோமப் பேரரசனால் காலியநாட்டைச் சரிவரக் கட்டியாள முடியவில்லை. இதனால், உரோம் அந்நாட்டை இழந்தது. உரோமப் பேரரசிடமிருந்து ஏறத்தாழ அறுபட்ட நிலையில் கி. பி. 260 முதல் 270 வரையில் காலியா இருந்தது. அதற்கெனத் தனிப் பேரரசனும் இருந்தான். திரீவ்சிலிருந்து ஆண்ட அக் காலியப் பேரரசன், உரோமின் எல்லைகளைக் காத்துவந்தான்.[12]

சேர, சோழ, பாண்டியப் பேரரசுகளைப் பொறுத்தவரையில், தொண்டைநாடும் கொங்குநாடும் — பொதுவாக — அடங்காப்பற்றுகளாகவே இருந்தன.

---

* ஆங்கிலேய வந்தேறிகளை எதிர்த்துப் போரிட்ட புலித்தேவனின் (பூலித்தேவனின்) பெயர், புல்லி என்னும் பெயரின் திரிபாவெனப் பார்க்க வேண்டும்.

www.tamilarangam.net



உரோமானியப் பேரரசர்கள், தங்களின் தானைத்தலைவர்களை வைத்தே எல்லைப்புற நாடுகளை ஆண்டுவந்தனர். அதைப் போன்றே, கொங்குநாடு, தொண்டைநாடு ஆகிய தமிழகத்தின் எல்லைப்புற நாடுகளும், படைத்தலைவர்களை ஆளுநர்களாகக் கொண்டே ஆளப்பட்டு வந்திருந்திருக்க வேண்டும். தங்களின் நேரடி ஆட்சிக்குள்ளடங்கிய பகுதிகளையும், மண்டலங்களாக வகுத்துத் தத்தம் ஆளுநர்களைக் கொண்டே அவர்கள் ஆண்டனர். செங்கண்மாத்துவேள் நன்னன், சேரர் படைத்தலைவனாகவும் இருந்தமையால், அவன் சேரரின் ஆளுநனாகவே இருந்திருக்க வேண்டும். அதியன், சேரர்குடியினன். இவனது மழவர்கள், சேரர் படையில் படைஞராயிருந்தனர். இதனால், அதியர்களும் சேரரின் ஆளுநராகவே இருந்தனர் எனலாம்.

ஆளுநர்கள் சில சூழல்களில் பேரரசனையே விஞ்சும் அளவுக்கு வலிமை பெற்றுத் தனியாட்சி புரியவோ — நடுவணரசையே பிடிக்கவோ — பார்த்தனர். அந்தச் சூழலில், ஆளுநர்களின் கொற்றங்களை அடக்கவும் கட்டுப்படுத்தவும் உரோமப் பேரரசர்கள் முயன்றனர். மாகாணங்களுக்குப் பொறுப்பாயிருந்த எந்த ஆளுநனும், பொதுவியல், படையியல் அதிகாரங்களை ஒரே போழ்து ஒட்டுக்காகப் பெற்றிடாமல் உரோமானியப் பேரரசன் காலியெனசு (Gallienus) கண்ணும் கருத்துமாக இருந்ததை இங்குக் குறிப்பிடலாம்.[13] ஆளுநர்கள் பேரரசனுக்கு எதிராகக் கலகம் செய்யாமல் பார்த்துக்கொள்ளும் தற்காப்பு மனப்பான்மையால் வந்த போக்கே அஃதாகும். இது போன்ற நிகழ்வுகளைத் தமிழகத்தின் அடங்காப்பற்றுகளாயிருந்த தொண்டை நாடும் கொங்குநாடும்கூடக் கண்டிருக்க வேண்டும்.

கொங்குநாட்டைப் பெரிதாகச் சுட்டிக்காட்டிச் சேர, சோழ, பாண்டியப் பேரரசர்கள் நடுவப்படுத்தப்பட்ட அரசுகளாக இருக்கவில்லை என்றும் — அவை யாவும் 'கூறுண்ட அரசுகளே' (Segmented States) என்றும் — சொல்லிக் குழப்பும் மேலை ஆய்வாளர்களை அறிவோம். பண்டை உரோமின் காலியாவைப் போன்றே கொங்குநாடும்கூட ஓர் அடங்காப்பற்றாக இருந்தது என்னும் உண்மையை அவ் வெள்ளைமூளைகளால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. 'நடுவம் நாடும் போக்கு', 'நடுவம் விலகும் போக்கு' ஆகிய எதிரும் புதிருமான எதிர்மறைப் போக்குகளும் தமிழ்ப் பேரரசுகளில் மிகத் தெளிவாக இருந்தன. கொங்குநாடும், பல்லவ வந்தேறிகளுக்கு முந்தைய தொண்டைநாடும் சேர, சோழ, பாண்டியப் பேரரசுகளால் தத்தம் படைஆளுநரைக் கொண்டே பெரும்பாலும் ஆளப்பட்டுவந்த மெய்ம்மை அதனால் புலப்படும்.

## இடைநிலை

அடிமை முறைக்கும், (குடியானவரை அடிப்படைக் கூறாகக் கொண்ட) குடிமை முறைக்கும் (tenancy) இடைப்பட்ட வடிவமே

www.tamilarangam.net



பண்ணையடிமை முறையாகும். இப் பண்ணையடிமை முறை ஏன் தோன்றியது? அஃது எவ்வாறு தோன்றியது? உரோம வரலாற்றைக் கொண்டு அதற்கான விளக்கத்தைத் தேடலாம்.

உரோமப் பேரரசின் எல்லைப் புறங்களிலிருந்த அநாகரிகப் பழங்குடிகள் கி. பி. 3ஆம் நூற்றாண்டில் அப் பேரரசிற்குப் பெரிய தலைவலியாயினர். ஆலமன்னி (Alemanni) என்னும் செருமானியப் பழங்குடிகள், இத்தாலியின் வடகிழக்கு மூலையில் நெருக்கிக்கொண்டிருந்தனர். இன்னொரு செருமானியப் பழங்குடியான கோத்தியர்கள் (Goths), கிரேக்கத்தில் ஊடுருவிப் படர்ந்ததோடு, சின்ன ஆசியாவின் மேற்குக் கரையோரத்தையும் சூறையாடிவந்தனர். ரைன் ஆற்றங்கரையிலும் தான்யூப் ஆற்றங்கரையிலும் ஸூவி (Suevi), ஆலமன்னி, மார்க்கோமன்னி (Marcomanni), கார்ப்பி (Carpi) ஆகிய அநாகரிகப் பழங்குடிகள் அலைக்கழித்துவந்தனர். இந் நிலையில், உரோமப் பேரரசர்கள் எதிர்கொண்ட பெரும் பணிகள் இரண்டு. உரோமப் பேரரசின் எல்லைகளை அநாகரிகப் படையெடுப்புகளிலிருந்து காப்பது என்பது ஒன்று. இதுவே தலையாய பணி. எல்லைக்காப்புப் பணிகளில் ஈடுபட்டுவந்த தானைத்தலைவர்கள் தங்களைத் தாங்கள் மெல்ல வலுப்படுத்திக் கொண்டு நடுவணரசுக்கு எதிராகக் கலகம் செய்யாமல் பார்த்துக்கொள்வது இரண்டாவது பெரிய பணி.[14]

கி. பி. 268ஆம் ஆண்டில் உரோமப் பேரரசனான கிளாடியசு (Claudius), நாய்சசு (Naissus) என்னும் இடத்தில் கோத்தியருடன் பொருது, செருமானிய அநாகரிகரை முறியடித்தான். இதற்காகக் 'கோத்திக்கஸ்' (Gothicus) என்னும் பட்டத்தையும் பெற்றான்.[15]

எல்லைக்காப்புப் பணியில் ஈடுபட்டிருந்த உரோமப் படைகள், அடிக்கடி தறிகெட்டுப் போயின. எல்லைப்புறங்களை அலைக்கழித்து வந்த அநாகரிகப் பழங்குடிகளின்மீது அவை சொல்லொணாக் கொடுமைகளை இழைத்தன. இப் படைவெறியாட்டுகளைக் கட்டுக்குள் கொண்டுவருவது, உரோம நடுவணரசுக்குப் பெரும்பாடாகியது. படைஞரின் வரம்புமீறல்களும் அட்டூழியங்களும் பேரரசின் எல்லைக் காவலை வலுப்படுத்துவதற்கு மாறாக, அதன் புறக்காவலுக்கு ஊறு செய்தன; பெரிய குழப்பங்களையும் அமைதியின்மையையுமே விளைவித்தன.[16]

படைக்கொடுங்கோன்மையை வளரவிடாமல் தடுக்கும் நோக்கத்தில்தான், டாசிட்டசு உரோமின் பேரரசனாக ஆக்கப்பட்டான். ஆனால், எட்டு மாதங்கள் மட்டுமே ஆண்ட அவனைப் படைத்தலைமை கொன்றுவிட்டது. மீண்டும் படையின் கையே ஓங்கியது. இதனால், புரோபசு உரோமப் பேரரசனானான்.[17]

கி. பி. 275-76 ஆம் ஆண்டுகளில், காலிய நாட்டிற்குள் புகுந்த ஃபிராங்குகள் என்னும் மேலைச்செருமானிய அநாகரிகர்கள், உரோமப் பட்டணங்கள் பலவற்றைத் தாக்கித் தீ மூட்டி அழித்தனர். இதனால்,

www.tamilarangam.net



வெகுண்ட புரோபசு, அந்த அநாகரிகரை மிகக் கடுமையாகத் தாக்கி விரட்டியடித்தான்.[18]

இவ்வாறு செருமானிய அநாகரிகரை அவ்வப்போது தாக்கி விரட்டியடித்தபோது, அந்த அநாகரிகர் சிலரை உரோமானியப் படைகள் தளைப்படுத்த நேர்ந்தது. அவ்வாறு பிடிபட்ட அநாகரிகரை என்ன செய்வது என்பதே அவர்களுக்கு ஒரு கேள்வியானது. இந் நிலையில், உரோமப் பேரரசின் கருப்பகுதிகளிலிருந்த அடிமைகள், உரோம ஆண்டைகளின் ஈவிரக்கமற்ற கொடுமைகளை எதிர்த்துக் கிளர்ந்து ஆங்காங்கே அவ்வப்போது கலகம் செய்தனர். இதனால், உரோம அடிமைமுறை ஆட்டம் கண்டது. நிலக்கிழமை என்னும் புதிய விளைப்பு உறவுகளின் புத்தம் புது வேர்கள் பற்றிப் படரத் தொடங்கியதால், பழைய அடிமையுடைமையின் பாழடைந்த கட்டுமானங்களை அவை வெடிப்புறவும் பெயர்க்கவும் செய்துவந்தன. மாக்கள் தரத்திலான அடிமைமுறைக்கு மாற்றாக அதைவிடச் சற்று மென்மையான அடிமை முறையை வடித்தெடுக்க வேண்டிய தேவை ஆண்டைகளுக்கும் அரசுக்கும் இன்றியமையாததானது. இது போன்ற நிலையில்தான், கோடெக்ஸ் தியோடோசியானசின் அரசுச்சட்டம் வந்தது.[19]

நிலத்தில் பணிபுரிய ஆட்கள் வேண்டுமாயின், அரசு அதிகாரி களுக்கு (praefectus praetorio) விண்ணப்பிக்கலாம் எனக் கோடெக்ஸ் தியோடோசியானஸ் யாத்த உரோம அரசுச்சட்டம் அறிவித்தது. ஆனால், அத்தகைய பணியாட்களை அடிமைகளாக நடத்தக் கூடாது என்றும்; அவர்களைப் பண்ணையடிமைகளாக (coloni) மட்டுமே நடத்த வேண்டும் என்றும் அச் சட்டம் விதித்தது. அநாகரிகரை எதிர்த்து நடந்த போர்களின்போது, உரோமப் பேரரசர்கள் அந்த அநாகரிகரை அடிமைகளாகப் பிடித்துவந்தனர். ஆனால், முன்னர் போல் அந்த அநாகரிகரை முற்றடிமைகளாக நடத்தக் கூடாது என்பதே அவர்களின் நிலைபாடு.[20]

நாற்றுகளை நாற்றங்காலிலிருந்து பிடுங்கிக் கழனிகளில் நடுவதைப் போல், பிடித்துவந்த அநாகரிகரை மிகத் தொலைவான இடங்களுக்குக் கொண்டு சென்று அங்குப் பண்ணையடிமைகளாகக் குடியேற்றுவது பெருமளவில் நடந்தது. ஆல்பைன் மலைப்பகுதிகளில் வாழ்ந்துவந்த டிரையம்பிளினி (Triumplini) என்னும் அநாகரிகப் பழங்குடியினரை அடிமைப்படுத்தி, இத்தாலிக்குக் கொண்டுபோய் அகஸ்டஸ் சீசர் அவர்களை முதன்முதலில் பண்ணையடிமைகளாக அமர்த்தினான். இந் நிகழ்வுக்குப் பிறகே, அநாகரிகரைப் பண்ணையடிமைகளாக்குவது பரவலானது. எல்லைகளில் தொல்லைகள் தந்து வந்த அநாகரிகரை ஒடுக்குவதற்கென்றே இவ் வழக்கம் பிறந்தது. ஆரெலியசும்கூட, எண்ணரிய அநாகரிகப் பழங்குடிகளை உரோம நிலப்பரப்பிற்குள் பண்ணையடிமைகளாக்கினான். இதனால், பழைய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடிமையுடைமை வாழ்வியலில் விளங்கிய தனிஉழவர்கள் (free peasants) வேகமாகக் குறைந்தனர்; பின்னர் மெல்ல இல்லாதொழிந்தனர்.[21] பழைய அடிமையுடைமை முறை சிதைந்தது; நிலக்கிழமை என்னும் புதிய விளைப்புமுறை துளிர்த்தது.

## இல்லை அந் நிலை!

இதையொத்த ஒரு நிகழ்வு தமிழர் வரலாற்றிலும்கூட நேர்ந்திருக்குமோ என்பது ஒரு பெரிய கேள்வி. ஆனால், உரோமில் நடந்ததைப் போல் அநாகரிகரை அடிமைகளாகப் பிடித்துவந்து தமிழகத்தில் பண்ணையடிமைகளாகக் குடியமர்த்தவில்லை. வேங்கடத்திற்கு அப்பால் படைநடத்தித் தமிழகத்தின் வடக்கெல்லையில் தொல்லை தந்துவந்த வடுக அநாகரிகரை வென்றடக்கிய மூன்றாம் கரிகாலன் மட்டும் அவ்வாறு அடக்கிய வடுக அநாகரிகரைப் பண்ணையடிமைகளாக ஆக்கியிருக்கலாம். வேங்கடத்திற்கு அப்பால் அக் கரிகாலன் நிறுவிய பொத்தப்பிநாடு போன்ற வடுகர் பகுதிகளில் அவன் காடு வெட்டி நாடாக்கி நெல் வேளாண்மையைக் கற்பித்தான் என்னும் வரலாற்றுச் செய்தி, அதை மெய்ப்பிக்கின்றது.[22] ஆனால், அந் நிகழ்வு வேங்கடத்துக்கு அப்பால் நடந்தது.

ஆனால், வடுக அநாகரிகர்கள் அடிமைகளாகப் பிடித்துவரப் பட்டுத் தமிழகத்திற்குள் பண்ணையடிமைகளாக ஆக்கப்படவில்லை. செங்கண்மாத்துவேள் நன்னனின் நாட்டில் அவ் வடுகர்கள் கூலிப் படைஞராக மட்டுமே இருந்ததைக் காணலாம். வாட்டாற்று எழினியாதனின் செல்லூரில் பெண்கள் கட்டித் தந்த பூக்கண்ணியைச் சூடி ஆடி மகிழ்ந்து நின்ற வடுகக் கோசரை மட்டுமே காணும் நாம், அவர்கள் கூலிப்படைஞராக மட்டுமே இருப்பதைக் காண முடியுமே யன்றி, பண்ணையடிமைகளாக அவர்களைப் பார்க்க முடியவில்லை. மோகூர்ப் பழையனின் அரசவையில் அவ் வந்தேறி வடுக அநாகரிகர் செம்மாந்து வீற்றிருந்ததாக மதுரைக்காஞ்சி கூறுகையில், அவ் வடுகர்கள் பண்ணையடிமைகளாக இருந்தமைக்கான அறிகுறி இல்லை. சேரர் படைத்தலைவனான பிட்டங்கொற்றனின் நாட்டில் இவ் வடுக அநாகரிகர் யாரும் பண்ணையடிமைகளாக இல்லை. பெரிய களரியில் படைப் பயிற்சி பெற்றுவந்த கூலிப்படைஞராகவே அவர்கள் இருந்தனர். உரோமில் நடந்ததைப் போல் வடுக அநாகரிகரை அடிமைகளாகப் பிடித்துவந்த தமிழ் வேந்தர்கள் அவர்களைப் பண்ணையடிமைகளாக ஆக்கவில்லையென இவற்றை வைத்தே கூறத் துணிந்தோம். அவ்வாறு செய்திருந்தாலும், அது பெரிய அளவில் இருந்திருக்காது.

## மூவேந்தர் கூட்டணி

சேர, சோழ, பாண்டியப் பேரரசர்களுக்கு இடையில் ஓயாத பூசல்களும் போர்களும் இருக்கத்தான் செய்தன. ஆனால், கழக (சங்க)க்

www.tamilarangam.net



காலத்திலும் அவர்களுக்கு இடையிலான பகை எவ்வளவு ஆழமான தாக இருந்தது என்பது ஆய்வுக்குரியது. இம் மூவேந்தரில் ஒருவனின் கை அவ்வக் காலத்தில் ஓங்கி நின்றதெனினும், அவர்களுக்கு இடையில் ஓர் தமிழரினக் கூட்டணி இருக்கத்தான் செய்தது. இத் தமிழ் மூவேந்தர்களுக்கு இடையில் ஒரு வலுவான கூட்டணி இருந்ததாகவும், அதைக் கலிங்கத்து வடுகன் காரவேலன் உடைத்தெறிந்ததாகவும், அவன் வெட்டிய ஹாதிகும்பா கல்வெட்டு கூறுவது அதற்குச் சான்றாகும்.[23] தமிழ் மூவேந்தர்க்கு இடையிலான கூட்டணியை, உரோமப் பேரரசில் இருந்த ஒன்றுக்கு மேற்பட்ட பேரரசர்களைப் பற்றிய வரலாற்றுடன் ஒப்பிட்டு ஆய்வது நல்லது.

டையோக்லெஷியனுக்கு (Diocletian கி. பி. 284-305) முன்னால், உரோமுக்கு ஆரெலியஸ், வேருஸ் (M. Aurelius and Verus) ஆகிய இரண்டு பேரரசர்கள் மட்டுமே இருந்தனர்.[24] டையோக்லெஷியன் உரோமப் பேரரசனானவுடன், செருமானிய அநாகரிகரைத் தான்யூப் ஆற்றுக்கு அப்பால் வரை விரட்டியடித்தான். பின்னர், மாக்சிமியன் (Maximian) என்பவனுடன் அவன் (கி. பி. 268) ஆட்சியைப் பகிர்ந்து கொண்டான். பேரரசின் மேற்குப் பகுதியை மாக்சிமியனுக்குத் தந்துவிட்டு, அதன் கிழக்கு மாகாணங்களை டையோக்லெஷியன் தானே வைத்துக்கொண்டான். நீண்டு பரந்திருந்த எல்லைகளைக் காக்க வேண்டியிருந்த படையியல் நோக்கமேதான், உரோமப் பேரரசை இவ்வாறு இரு கூறாக்கியது. டையோக்லெஷியன், மாக்சிமியன் ஆகிய இருவருமே இல்லைரிய நாட்டவராக இருந்தமையால், அவர்களுக்கு இடையில் நல்ல இணக்கமும் புரிதலும் நிலவின.[25] கி. பி. 282ஆம் ஆண்டில் உரோமப் பேரரசன் மாக்சிமியன், காலியா, பிரித்தானியா, எசுப்பானியா ஆகியவை போக, இத்தாலிக்கும் ஆப்பிரிக்காவுக்கும் கூட, ஆட்சியாளனானான். டையோக்லெஷியனோ, உரோமப் பேரரசின் கிழக்குப் பகுதியிலிருந்து ரேஃழியா (Rhatia) வரையில் பொறுப்பாளனாக இருந்தான்.[26]

கி. பி. 293ஆம் ஆண்டில், உரோமப் பேரரசு திருத்தியமைக்கப் பட்டது. உரோமப் பேரரசிற்கு இப்போது நான்கு பேரரசர்கள் இருந்தனர். உரோம எல்லைகளைக் காப்பதற்காக ஓயாது போரிட வேண்டி இருந்தமையால், கான்ஸ்டான்டியஸ், காலெரியஸ் ஆகிய இரண்டு புதிய பேரரசர்கள் (Caesars) அமர்த்தப்பட்டனர். இவர்களில், காலெரியசு வெறித்தனமான கிறித்துவ எதிரியாகவும் அரம்பனாகவும் இருந்தான். பிரித்தானியாவை மீட்கும் பொறுப்பு, பேரரசன் கான்ஸ்டான்டியசிடம் தரப்பட்டது.

மீப்பெரும் அடிவாங்கி முடங்கிக் கிடந்த ஃபிராங்குகள், அக் கான்ஸ்டான்டியசின் காலத்தில் மீண்டும் தலையெடுத்தனர். ஆலமன்னி அநாகரிகருக்குச் சவஅடி தரப்பட்டது. எகிப்து, லிபியா, திரேசு உள்ளிட்ட கிழக்கு மாகாணங்கள் யாவும் டையோக்லெஷி

www.tamilarangam.net



யனின் ஆளுகைக்குட்பட்டன. மேற்கு இல்லைரியம், மாசிடோனியா, கிரேக்கம், கிரீத்து உள்ளிட்ட பன்னோனியாவும் மோசியாவும் காலெரியசுக்குக் கிடைத்தன. இத்தாலி, ஆப்பிரிக்கா, எசுப்பானியா ஆகிய பகுதிகள், மாக்சிமியனின் ஆட்சிக்குரியதாயின. காலியாவும் பிரித்தானியாவும் கான்ஸ்டன்டியசின் கைக்கு வந்தன. உரோம் வெளியிட்ட காசுகளில், நான்கு பேரரசர்களின் பெயர்களும் இருந்தன. ஆயினும், ஒட்டுமொத்த அதிகாரம் டையோக்லெஷியனிடமே இருந்து வந்தது. போர் தொடுக்கவும் அமைதி உடன்பாடு காணவும் வல்ல அதிகாரங்கள் உரோமின் நான்கு பேரரசர்களுக்கும் இருந்தபோதிலும், தம் ஆளுகையின்கீழ் இல்லாத பகுதிகளுக்கும்கூட அந்த டையோக் லெஷியனால் சில நேரங்களில் ஆணை விடுக்க முடிந்தது. டையோக் லெஷியன் ஒரு முற்றதிகாரப் பேரரசனாக (absolute monarch) இருந் தான்.[27]

உரோமில் இருந்ததைப் போன்று, ஒரே பேரரசிற்கு இரண்டு அல்லது நான்கு பேரரசர்கள் தமிழகத்தில் இருக்கவில்லை. ஆயி னும், தமிழ் மூவேந்தர்களுக்கு இடையில் அவ்வப்போது பண்டை உரோமில் இருந்ததைப் போன்ற ஒற்றுமையும் முரண்பாடுகளும் இருக்கவே செய்தன. இத் தமிழ் மூவேந்தர் கூட்டணிக்கு யார் த்லை வன் என்பதே போட்டிக்குக் காரணமாகி, அவ்வப்போது போர்களாக வும் வெளிப்பட்டன என்றே சொல்ல வேண்டும்.

## அகப்பகையால் அடங்கினர்

பண்டைச் சீனத்திலோ, பண்டை உரோமிலோ, அநாகரிகரின் தொல்லைகளும் படையெடுப்புகளும் அந்த அநாகரிகர்க்கு இடையில் காலப்போக்கில் தோன்றிய உட்பூசல்களாலேயே முடிவுக்கு வந்தன.

சீனாவை அரட்டி அலைக்கழித்துவந்த அவுணர் (ஜியாங்னு/ Huns or Xiongnu) என்னும் அநாகரிகர்கள் கி. மு. 54ஆம் ஆண்டில் வடக்கு அவுணர் என்றும், தெற்கு அவுணர் என்றும் இரண்டாகப் பிளவுண்டனர். தென்அவுணரின் துணையுடன், மேலை ஹான் (Western Han) பேரரசு வடஅவுணரைத் தோற்கடித்தது. இதனால், தென்அவுணர்களின் தலைவன் வடஅவுணர்களின் பகுதிகளை எளிதில் பிடித்துக்கொள்ள முடிந்தது. அடுத்த நாற்பதாண்டுகளுக்கு அந்த அவுணரால் அச் சீனப் பேரரசுக்குத் தொல்லை ஏதும் இல்லை.[28] கீழை ஹான் பேரரசின் காலத்தில் — கி. பி. 88ஆம் ஆண்டில் — அந்த அவுண அநாகரிகர்க்கு இடையில் இன்னொரு பெரிய பிளவு ஏற் பட்டது. முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்ட நிலையில், வடஅவுணரில் சிலர் மேற்கு நோக்கி இடம்பெயர்ந்தனர். எஞ்சியோர், சீனப் படை களிடம் அடிபணிந்தனர்.[29] இவ்வாறு அடிபணிந்த அவுணர்களின் வாழ்க்கையைப் பேரவலம் கவ்வியது. ஹான் படைகள் பிடித்து வந்த அவுண அநாகரிகர்கள், பண்ணையடிமைகளாக ஆக்கப்பட்டனர்.

www.tamilarangam.net



இந்தப் போக்கு அப் பேரரசிலிருந்த வெய் அரசுக்குள் பெரிதாக இருந்தது. மேலை ஜின் (Western Jin) பேரரசில், இந்த அவுண அநாக ரிகரில் பெரும்பாலோர் ஹான் தேசியஇனப் பண்ணையார்களிடம் பண்ணையடிமைகளாகினர்.[30]

உரோமப் பேரரசன் டையோக்லெஷியன் ஐரோப்பாவிற்குத் திரும்பிப் பன்னோனியா, ரேஷியா ஆகிய மாகாணங்களிலிருந்து செரு மானிய அநாகரிகரை விரட்டிய நிலையில், செருமானிய அநாக ரிகர்க்கு இடையிலும் உட்பூசல்கள் வெடித்தன. கோத்தியர், புர்குண டியரை அழித்தனர். ஆலமன்னிகளும் பிற பழங்குடிகளை எதிர்த்து வேலேந்தினர். கோத்தியரில் ஒரு பிரிவினரான தெர்விங்கீயர் (Thervingii), வாண்டல்களுக்கு (Vandals) எதிராக வாளை உருவினர். செருமானிய அநாகரிகர்க்கு இடையிலான உட்பூசல்களுக்குப் பிறகு, கோத்திய அநாகரிகருடன் போரிட வேண்டிய தேவை உரோமப் பேரரசுக்கு கி. பி. 323 வரையில் இருக்கவில்லை. இதனால், டையோக் லெஷியன் ஆற அமர சிறியாமீது படையெடுக்க முடிந்தது.[31] அச் செருமானிய அநாகரிகர்கள் பெருமளவுக்கு உரோமானியமயமான தும்கூட அவர்கள் அவ்வாறு அடங்க ஒரு காரணமானது.

பண்டைச் சீனத்திலும் உரோமிலும் அநாகரிகரால் விளைந்த மாற்றங்களைப் போன்றே, தமிழகத்திலும் ஏறத்தாழ நடந்தது. கி. பி. 250க்கும் 550க்கும் இடையில் களப்பாளர் என்னும் கொடிய மேலை வடுகர்கள் தமிழகத்தைத் தாக்கி மூன்று நூற்றாண்டுகளுக்குச் சூறையாடினர். ஆயினும், இக் களப்பாளரின் வந்தேறி ஆட்சி, தென் பெண்ணையாற்றுக்குத் தெற்கில் மட்டுமே இருந்ததே யன்றி, அது தொண்டைமண்டலம் வரை படரவில்லை.[32] கொங்குநாட்டைப் போன்றே தமிழகத்தின் இன்னோர் அடங்காப்பற்றாக இருந்த தொண்டைநாட்டைக் கீழைவடுகரான பல்லவர்கள் கைப்பற்றினர். களப்பாள வந்தேறிகளிடம் அடிமைப்பட்டுக் கிடந்த பாண்டிய நாட்டைப் பாண்டியன் கடுங்கோன் மீட்டபோது, பல்லவன் சிம்மவிட்டுணு அக் களப்பாளரிடமிருந்து சோழநாட்டைக் கைப்பற் றியதாகப் பள்ளன்கோயில் செப்பேடுகளும் வேலூர்பாளையம் செப்பேடுகளும் கூறுகின்றன.[33] முதலாம் நரசிம்மவன்மன், இரண்டாம் நந்திவர்மன் ஆகிய பிற்காலப் பல்லவரின் காலத்தில் இந்தக் களப் பாளர்கள் பல்லவரால் தோற்கடிக்கப்பட்டனர். மேலை வடுக வழிச் சளுக்கியரான முதலாம் விக்கிரமாதித்தன், விசயாதித்தன் ஆகி யோரும் களப்பாளரை வென்றடக்கினர்.[34] களப்பாளரின் கொற்றமும் அட்டூழியமும் தமிழகத்தில் அடங்குவதற்குக் கீழைவடுகரான பல்ல வர்கள் பெருங்காரணமாயினர்.

வடுக அநாகரிகர்களுக்கு இடையில் தோன்றிய உட்பகையும் சண்டைகளுமே களப்பாள வடுகரின் வீழ்ச்சிக்கும் மறைவுக்கும் காரணமாயின.

www.tamilarangam.net



## புரையோடிய வந்தேறிகள்!

தமிழகத்தின் கருப்பகுதி வரையிலான ஆழ்ந்த வடுக ஊடுருவல்கள் எவ்வாறு தொடங்கின? பண்டைச் சீனத்தில் மேலை ஜின் ஆட்சியின்போது நிகழ்ந்தனவற்றைப் போன்று இங்கும் நடந் திருக்குமோ?

ஊடீ (Wu Di A. D. 266-90)* என்னும் மேலை ஜின் வேந்தனின் காலத்தில், அவுணர், ஜியென்பெய், ஜீ, டீ, சியாங் (Xiongnu, Xienbei, Jie, Ji and Qiang) முதலான அநாகரிகப் பழங்குடிகள் சீனத்தின் எல்லைப்புறங்களிலிருந்து வந்து அதன் உட்பகுதிகளில் ஆழமாக ஊடுருவினர்.[35] அரண்மனைச் சூழ்ச்சிகளும் சதிகளும் மிகுந்திருந்த சூழலுக்கு ஈடுதர எண்ணிய பேரரசன் ஊடீ, ஆட்சிப் பொறுப்புகளில் அரச குடும்பத்தினரைப் பெருமளவில் அமர்த்தினால், அரண்மனைச் சூழ்ச்சிகளை ஒழித்துக்கட்ட முடியும் என நம்பினான். இதனால், அரச குடும்பத்திலிருந்து 27 பேரைத் தேர்ந்தெடுத்து, இளவரசர் என் னும் பட்டத்துடன் அவர்களை ஆளுநராக அமர்த்தினான். அவர் களுக்கெனத் தனித்தனி நாடுகளை ஒதுக்கினான். தனித்தனிப் படை களையும்கூட அமைத்துத் தந்தான். இத்தகைய மாற்றங்கள், பின் னால் மிகப் பெரிய அதிகாரப் போட்டிக்கு வழிவகுக்கும் என அவன் கனவிலும் நினைக்கவில்லை. இதனால் எழுந்த இடையறாப் போட்டி களையும் போர்களையும் கருதி, கி. பி. 291க்கும் 306க்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றிய குழப்பங்களைச் சீன வரலாற்றில் எட்டு இள வரசர் குழப்பங்கள் (Disturbances of the Eight Princes) என்பர். இக் குழப்பங்களால், பொருளியல் சீர்குலைந்தது. வீடு வாசலிழந்த மக்கள் நூறாயிரக் கணக்கில் இடம்பெயர்ந்து வாடலாயினர். மேலை ஜின் அரசு, செயலற்று முடங்கியது.[36]

இடம்பெயர்ந்த சீனரல்லா அநாகரிகப் பழங்குடிகளும், ஏதிலி களும் மேலை ஜின் ஆட்சிக்கு எதிராக அடுத்தடுத்துப் பல கலகங் களைச் செய்தனர். இவ்வாறு இடம்பெயர்ந்தோர் எல்லாம் தத்தம் சொந்த ஊர்களுக்கும் பட்டணங்களுக்கும் திரும்ப வேண்டும் என்று கி. பி. 301ஆம் ஆண்டில் அரசு விடுத்த ஆணை, நிலைமையை இன்னும் கெடுத்தது. வந்தேறிகள் எல்லாம் நாடு நகரங்களை ஆங்காங்கே பிடித்துக் கொண்டு புத்தம் புது அரசுகளையும் ஆட்சிகளையும் அமைக்கலாயினர். லியூ யுவான் (Liu Yuan கி. பி. ?–310) என்னும் அவுணர் தலைவனின்கீழ்க் கிளர்ந்தெழுந்த அவுணர்கள், லுவோயாங், சங்கண் (Luoyang and Changan) ஆகிய நகரங்களைக் கைப்பற்றினர். மேலை ஜின் பேரரசரான ஹுவாய் டி, மிங் டி (Huai Di and Ming Di) என்னும் இருவரையும் பிடித்து, அம் மேலை ஜின் ஆட்சியை ஒழித்தனர். முந்தை ழாவோ (former Zhao) என்னும் அரசை அந்த

* சீன வரலாற்றில் ஊடீ (Wu Di) என்னும் பெயருடைய பேரரசர்கள் ஐவராவர்.

www.tamilarangam.net



அவுணர்கள் நிறுவினர். அவுணர் அநாகரிகரும், டீ இனத்தவரும் கி. பி. 304ஆம் ஆண்டில் அமைத்த இரு அரசுகளுக்குப் பிறகு, இன்னும் நான்கு புதிய அரசுகள் முளைத்தன. ஃபெய்ஷுய் (Feishui) சண்டைக்குப் பின்னர் மேலும் பத்து அரசுகள் தோன்றின.[37] கி. பி. 304 முதல் 409 வரையிலான காலப்பகுதியில் சீனத்தில் இவ்வாறு பதினாறு அரசுகள் அரும்பின. அவற்றில் மூன்று, அவுண அநாகரிகர் அமைத்தவையாகும்.[38]

இந்தச் சீன நிகழ்வுகளை ஓரளவாவது ஒத்த வரலாற்றுப் போங்குகளேதான் களப்பாள வடுகரையும் பல்லவ வடுகரையும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழகத்தின் கருப்பகுதிகள் வரை ஆழமாகப் படையெடுக்கவும் ஊடுருவவும் ஆட்சியமைக்கவும் வழிவகுத்திருக்க வேண்டும்.

## பாட்டனுக்குப் பாடம் சொல்லும் பெயரன்!

சீனருக்கும் உரோமருக்கும் எழுதப்பட்ட பண்டை வரலாறுகள் உள்ளன. ஆனால், தமிழர்க்கு அவ்வாறு துல்லியமாக எழுதப்பெற்ற வரலாறு இல்லை. இருந்த வரலாற்றையும் பிராமணியமும், வடுக ஆரியமும் பொய்க்குள் ஆழப் புதைத்துவிட்டன. இந் நிலையில், இழந்த வரலாற்றை மீட்பதென்பதே பெரிய பாடாகும். புறநானூற்றில் வரும் பக்குடுக்கை நன்கணியாரின் பாடல் (194) போன்ற சின்னஞ்சிறு தடயங்களை வைத்தே தமிழ் ஆய்வர்கள் தமிழரின் வரலாற்றைப் புத்தமைக்க வேண்டியுள்ளது. இத்தகைய முயற்சிகள் தலையை உருட்டும் களரிப் பயிற்சிகளாகும்.

வடுக அநாகரிகரால் தமிழர் இனத்திற்கு நேர்ந்த வீழ்ச்சியைப் பற்றிய வரலாற்றை இந்த அவலநிலையில் இருந்தவண்ணம் எழுத வேண்டியுள்ளது. பண்டைச் சீன வரலாற்றிலிருந்தோ, பண்டை உரோம வரலாற்றிலிருந்தோ, எடுத்த கூறுகளை ஒப்பியல் நோக்கில் அலசி ஆய்ந்து அவற்றின் அடிப்படையில் முன்வைக்கப்படும் துணிபுகளை முற்றும் முடிவான விளக்கங்கள் எனச் சொல்லிவிட முடியாது. வேற்று நாகரிகங்களுக்கும் தமிழ் நாகரிகத்திற்கும் இடையில் காணும் பொதுவான கூறுகளை — பொதுத்தன்மையை — மிகையாகச் சார்ந்து உள்ளதே ஒப்பியல் ஆய்வு. ஆனால், வெவ்வேறு மக்களின் வரலாற்றுப் போங்குகள் ஒன்று மற்றொன்றிலிருந்து துல்லியமாக வேறுபடுகின்றன. இவ்வாறு வேறுபடுவதைக் காட்டும் கூறுகளே — தனித்தன்மைகளே — அந்தந்த மக்களின் வரலாறுகளில் காணும் சிறப்பு அமைதிகளாகும். பண்டைத் தமிழரின் தனித்தன்மை தெளிவாக எழுதி வைக்கப்படாமையாலும் — பிராமணியமும் வந்தேறிகளும் அதைத் திரித்துப் புரட்டி உள்ளமையாலும் — அத் தனித்தன்மையை வெளிக்கொணர்வது என்பதே ஒரு பெரும்

www.tamilarangam.net



போராட்டமாகும். தமிழரின் பண்டை வரலாற்றைப் புத்தமைக்கும் நோக்கில் இங்கு ஒப்பியல் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட சீன, உரோமானிய வரலாற்றுக் கூறுகள் யாவும், இதனால் தமிழரின் வரலாற்றை மீட்க உதவும் கொளுவுகளாக மட்டுமே இருக்கவியலும்.

அநாகரிகரின் படையெடுப்புகள் கி. பி. மூன்றாம் நூற்றாண்டில்தான் பண்டைய உரோமுக்குப் பெரிய அச்சுறுத்தல்களாயின. ஆனால், தமிழகத்தின்மீது வடுக அநாகரிகர் நடத்திய தாக்குதல்களோ, கி. மு. மூன்றாம் நூற்றாண்டிற்குரியன. இதனால், பேரனின் வரலாற்றை வைத்தே பாட்டனின் வரலாற்றை எழுத வேண்டிய பெரும் துன்பியல் நிலையில் பண்டைத் தமிழர் வரலாறு உள்ளது. கிறித்துவ ஊழி பிறப்பதற்கு முன்பே, பண்டைத் தமிழகம் உரோமருடன் மிக நெருங்கிய உறவுகளைக் கொண்டிருந்தது. உரோமானியப் பயணிகளும் வணிகர்களும் படைஞர்களும் தமிழகத்திற்கு வந்து சென்றனர். இதனால், தமிழகத்தில் விளங்கிய விளைப்பு உறவுகளும், ஆட்சியியல் அமைப்புகளும், அரசியல் கட்டுமானங்களும் உரோம ஆட்சியாளர்க்குப் நல்ல பாடங்களைப் புகட்டியிருக்க வேண்டும். இவ் வரலாற்றியல் மெய்ம்மையை வைத்தே பண்டைத் தமிழகத்திலும் பண்டை உரோமிலும் நிகழ்ந்த வாழ்வியல் மாற்றங்களுக்கு இடையில் காணும் ஒற்றுமை வேற்றுமைகளை அலச வேண்டும்.

பண்டைச் சீனத்திற்கு அவுண அநாகரிகரிடமிருந்து வந்த படையெடுப்புகள் கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே பெரிதாக இருந்தன. தமிழகத்தோடு ஒப்பிடுகையில் சீனத்தின்மீது நடந்த அவுணர் படையெடுப்புகள் ஏறத்தாழ அதே காலத்தவை.

## தொல்காப்பிய காலம்

பண்டைச் சீன வரலாற்றில் இளவேனில்-இலையுதிர்கால ஆண்டுக்குறிப்புகள் காலம் (The Spring and Autumn Annals Period: 722-481 B. C.), போரிடும் அரசுகளின் காலம் (The Period of Warring States: 403-221 B. C.) என்னும் இருபெரும் காலவூழிகள் உண்டு.

இவற்றில், போரிடும் அரசுகளின் காலம், தமிழரின் புறநானூற்றுக் காலத்தை ஒத்தது. ஆனால், அதற்கும் முந்தைய இளவேனில்-இலையுதிர்கால ஆண்டுக்குறிப்புகள் காலம் என்னும் காலவூழியோ, தமிழரின் தொல்காப்பியக் காலத்தை ஓரளவு ஒத்துள்ளது.

சீனத்தின் இளவேனில்-இலையுதிர்கால ஆண்டுக்குறிப்புகள் காலத்தில் ஷாங், மேலை ஜவ் (Shang and Western Zhou) அரசகுடி ஆட்சிகளின்போது நடந்த அரசியல் நிகழ்வுகள் எல்லாம் மூங்கில் பற்றைகளின் மீதும் பட்டுத்துணியின் மீதும் எழுதிவைக்கப்பட்டன. அதை வரலாற்றுநூல் (*Book of History* or *Sheng Shu*) என்றனர்.

www.tamilarangam.net



உள்ளபடியே, கி. மு. 841ஆம் ஆண்டு முதலே சீனத்தின் வரலாற்றை ஐவ் அரசகுடியினர் அவ்வாறு எழுதிவைக்கலாயினர்.[39] கலிப்பா நூல் (*Book of Odes* or *Shijing*) என்னும் நூல் மேலை ஜவ் அரசகுடிக் காலத்தில் எழுதப்பட்டது. இத் தொகைநூல்களே அச் சீனத்தில் பின்னர் எழுந்த மெய்யியல் விளக்கங்களுக்கும் அரசியல் கருத்தியல்களுக்கும் இலக்கியங்களுக்கும் அடியூற்றாக இருந்தன. இளவேனில்–இலையுதிர் கால ஆண்டுக்குறிப்புகள் (*Spring and Autumn Annals*) என்னும் தொகைநூலைத் தொகுத்தவர் கன்ஃபூசியசு (கி. மு. 551–479) ஆவார். கலிப்பாநூல், மாற்றநூல் (*Book of Change*), இசைநூல் (*Book of Music*) ஆகியவற்றைத் திருத்தித் தொகுத்து வெளியிட்டவரும் கன்ஃபூசியசே ஆவார்.[40]

அடுத்து வந்த போரிடும் அரசுகளின் காலத்தில் மோகியம் (Mohism), யின்-யாங் இயங்கியலைத் தழுவி லாவோ ட்சி (Lao Zi) வடித்த தாவோயியம் (Taoism) முதலான சீரிய மெய்யியல் பள்ளிகள் பூத்துக் குலுங்க வழிவகுத்தது அந்த இளவேனில்-இலையுதிர்கால ஆண்டுக்குறிப்புகள் காலத்திய கன்ஃபூசியசின் அறிவுப்பணியேயாகும்.

செம்மறியாட்டையோ வெள்ளாட்டையோ குறிப்பதற்காக ஆளப்பட்ட மூடு, கடமா முதலான சொல் வழக்குகளும், ஆண் குதிரையைக் குறிக்கும் சேவல் என்னும் சொல்லாட்சியும் தொல்காப்பியத்திற்கே உரியவை. அச் சொல்லாட்சிகள் மூன்றாம் கழக இலக்கியங்களில் இல்லாமையை வைத்து அத் தொல்காப்பியம் கடைக் கழக இலக்கியங்களைவிடச் சில நூற்றாண்டுகளுக்கு முந்தியது எனத் துல்லியமாக விளக்குவர்.[41] இதனால், தொல்காப்பியக் காலம், கி. மு. ஏழாம் நூற்றாண்டு. இத் தொல்காப்பியக் காலத்தில் அடிமைக் கிழாரியம் மேலோங்கி இருந்தது. காப்பியங்கள் எழுந்த காலம் இக் காலமாகும். நாள்காட்டிகளும், இலக்கண நூல்களும், அணு அறிவியலும், அணுவியத்தைத் தழுவிய மெய்யியலும், மருத்துவமும் பிறந்த காலம் இதுவாகும். வானியலையும் கணியத்தையும் கற்பித்த ஐந்திரம் என்னும் தொகைநூல் நான்மறை (மூலமறை) என்றாக்கப்பட்ட காலம் இதுவாகும். வானியல் விளக்கங்களை உருவகக் கதைகளாக்கித் தொன்மங்களாகப் படைத்த புலத்தியனைப் போன்ற வள்ளுவக் கணியர்கள் — மாமுனிவர்கள் — வாழ்ந்துவந்த காலம் தொல்காப்பியக் காலமாகும். மறைக்கப்பட்ட ஐந்திரத்தையே மூன்று நான்கு நூற்றாண்டுகளுக்குப் பிறகு வந்த புறநானூற்றுக் காலத்தில் சங்கதம் என்னும் செயற்கை மொழியில் திருடி எழுதிக் கொண்டு, வடுகப் பிராமணியம் அதற்கு 'இருக்குவேதம்' என்னும் பெயரிட்டது. வடுக அநாகரிகரின் தெற்கு நோக்கியபெயர்ச்சி தொடங்கிய காலம் தொல்காப்பியக் காலம் எனலாம்.

இதனால், பிராமணியம் கருக்கொண்டதும், முதல் சமயமாகவும் தனி வாழ்வியலாகவும் சேரலத்தின் தென்கோடியில் அஃது உருக்

www.tamilarangam.net



கொண்டதும் இக் காலத்திலேயே நிகழ்ந்திருக்க வேண்டும். இக் காலத்திலேயே வடுகப் பிராமணியம், 'ஆரியம்' என்னும் பேய் வடிவத்தை எடுத்தது.

பண்டைச் சீன வரலாற்றின் போங்கிலும், பண்டைத் தமிழர் வரலாற்றின் இயங்கியலிலும் காணும் ஒற்றுமைக் கூறுகள், வியக்கத் தக்கன. ஒன்றையொன்று விளங்கிக்கொள்ள உதவும் அரிய கொளுவுகளைத் தருவன.

ஆனால், கி. மு. 841ஆம் ஆண்டு முதலே சீனர்கள் தம் வரலாற்றைத் தொகுத்தெழுதத் தொடங்கியதைப் போன்று பண்டைத் தமிழர்கள் செய்தனரா எனத் தெரியவில்லை. பத்துச் சேர அரசரைப் பற்றிப் பாடுகின்ற **பதிற்றுப்பத்து**, கரிகாலனைப்பற்றிப் பாடும் **பட்டினப்பாலை**, தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப்பற்றிப் பாடும் **மதுரைக் காஞ்சி** முதலான நூல்களில் வரலாறும் உண்டு என்பது மெய்தான். ஆனாலும், மன்னர்களின் — மக்களின் — துல்லியமான வரலாறு எனச் சொல்லுமளவுக்கு — சீனத்தில் வரலாற்றுநூல் முறைப்படி பதியப்பட்டது போல் — குறைந்தது, சிங்களர் தம் வரலாற்றை **மகாவம்சம்** என்னும் பெயரில் பதித்துவந்ததைப் போல் — தமிழரும் செய்தனராவெனத் தெரியவில்லை. கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் தமிழரின் முந்தைய வரலாறு மீட்க முடியா வகையில் மறைந்துவிட்டது. கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் தமிழகத்தைக் கொள்ளைநோய் போல் வந்து தாக்கி அழித்துப் பேயாடிய களப்பாளர் என்னும் கன்னட வடுகர் படையெடுப்பு முதல், தமிழகம் அடுத்தடுத்து வடுக இனத்தவராலும், பிற வந்தேறிகளாலும் தாக்கப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டது. ஏறத்தாழப் பதினேழு நூற்றாண்டுகளாகத் தமிழரினம் தளைப்பட்டுக் கிடக்கும் நிலையில் — சீனர்க்கு உள்ளதைப் போன்ற எழுதப்பட்ட வரலாறு தமிழர்க்கு இருந்ததா இல்லையா என்பதை எப்படித் தெரிந்து கொள்வது?

## தெற்கிலிருந்து வடக்கு நோக்கி...

கிறித்து பிறப்பதற்கு முன்னர் இத் துணைக்கண்டத்திலிருந்த வல்லரசுகள் ஐந்து. அவற்றில், மகதம் மட்டும் கீழைக்கங்கைக் கரையில் அதன் வடகிழக்கில் இருந்தது. மீதி நான்கு பேரரசுகளும் தெற்கே இருந்தவை.

இவ் வுண்மை ஒருபுறம் இருக்க, தமிழகத்தின் வடக்கே தோன்றிய அரசுகள் யாவும் தெற்கேயிருந்து சென்றோரின் வழிவந்தோர் அமைத்தவையாகும்.

ஆந்திரப் (சதவாகன) பேரரசு வடுகரால் தோற்றுவிக்கப்பட்டது. கலிங்கம் வடுகரில் ஒரு பிரிவினரால் நிறுவப்பட்டது. கலிங்கத்தை ஆண்ட கீழ்க்கங்கர் (சோழகங்கர்) என்னும் அரச குடி, சோழர் வழிவந்த

www.tamilarangam.net



தாகும். முதலாம் இராசராசன் என்னும் சோழகங்கனின் மகனான அனந்தவர்மன், வடுகச்சோழர் வழியை நிறுவிய முதலாம் குலோத்துங்க சோழனின் மகளை மணந்தான். இந்த அனந்தவர்மனே பூரி சகநாதர் கோயிலைக் கட்டியவன். சூட்டுகள், இக்சுவாக்குகள், சாலங்காயனர் ஆகியோரும் வடுகராவர்.

சளுக்கியரும்கூட வடுகராவர். குசராத்தை ஆண்ட சோளங்கிகளும் அவர்களின் வழிவந்தவர்கள். இரட்டரும் வடுகரே ஆவர். துவரையை ஆண்ட ஒய்சளரும் வடுகராவர். ஒய்சளரின் முதல் தலைநகரம் வேளூர் (பேளூர்). துவரையின் இன்றைய பெயரான ஹளேபீடு என்பது 'பழவீடு' என்பதன் திரிபாகும். வனவாசியைத் தலைநகராகக் கொண்ட குந்தளநாட்டை ஆண்டு வந்த கடம்பரும் வடுகரே. ஓரங்கல்லைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட காகதீயர்கள், தங்களைச் சோழவழியினர் எனப் பெருமையுடன் சொல்லிக்கொண்டனர்.[42]

சில வரலாற்றாசிரியர்கள், மகத அரசையே 'திராவிட' (தமிழிய) அரசு எனக் கூறுவர்.[43] இராமாயணத்தின் கதைத்தலைவனான கோசல நாட்டு இராமனைச் சோழர்குடியினன் எனப் பாவாணர் சொல்வார்.

மத்தியப் பிரதேசத்தில் ஆண்ட வாகாடர்கள், ஆந்திர வழியினர்.[44] இதனால், இவர்களும் வடுகராவர். உஞ்சையைத் தலைநகராகக் கொண்டு மாளவத்தை ஆண்ட களச்சூரிகள் (kalachuris) அல்லது செதிக்கள் என்போர் தென்னிந்தியாவிலிருந்து சென்று வடக்கே ஒரு தனியரசை அமைத்தவர்கள்.[45] மிதிலையில் ஒரு புதிய அரசை அமைத்த நானையதேவன் என்பவன் கருநாடகத்தவன். 'கருநாடகத்தவன்' என்றால், வடுகன் என்றே ஆகும்.[46] தென்னிந்தியாவிலிருந்து கூலிப்படைத்தலைவனாகச் சென்று கிழக்கு வங்கத்தில் குடியேறிய விசயசேனன் என்பவனே வங்கத்தின் 'சேனர்' அரசகுடியை நிறுவியவனாவான். இச் சேனர்களைக் கருநாடகத்தவர் என்பர்.[47] தேவகிரியைத் (இக்கால தௌலதாபாதைத்) தலைநகராகக் கொண்டு ஆண்ட யாதவர் குடியினரின் பிறப்பிடம் வேளகம் (இன்றைய பெல்காம் மாவட்டம்) ஆகும். இதனால், அவர்களும் வடுகராவர்.[48]

இசுலாமியரின் வருகைக்குமுன் வடஇந்தியாவில் தோன்றிய அரசகுடிகளில் பெரும்பாலானவை இவ்வாறு சோழர் வழியிலும் வடுகர் வழியிலும் வந்தனவாகவே இருந்தன. ஒரு சில மட்டுமே சித்தியர், சகர், அவுணர் ஆகியோரின் வழிவந்தனவாகச் சொல்லப்படுகின்றன. கி. மு. 125ஆம் ஆண்டளவில் பாக்டீரியாவில் நிலையாக வாழத் தலைப்பட்டு, அங்கு ஐந்து பிரிவுகளாகக் கிளைத்த யூச்சி (Yeuh-chi) என்னும் மங்கோலிய அநாகரிகப் பழங்குடியினரின் வழிவந்த குசாணர் அரசகுடியில் தோன்றிப் பெரும் சிறப்புற்றவனே கனிஷ்கன்.[49] இவன் கி. பி. 78ஆம் ஆண்டில் ஆட்சிக்குவந்தான். சித்தியரும், சகரும் தட்சசீலம், மதுரா, மேற்கு இந்தியா ஆகிய பகுதிகளில் ஆண்டனர். சித்தியரிடமிருந்து மகதத்தைக் குப்தர்கள் (319-468 A.D.) மீட்டன

www.tamilarangam.net



ராம். வடமேற்கிலுள்ள இராசபுத்திரர் என்போர் கூர்ச்சரர் என்னும் பழங்குடியினருக்கும் மங்கோலிய அவுணர்களுக்கும் இடையில் ஏற்பட்ட அரத்தக் கலப்பால் தோன்றியவராவர். கூறப்படும் 'திராவிட' (தமிழிய)க் குடிகளின் அரத்தக் கலப்பும் அவர்களிடம் உண்டு.[50]

வடஇந்தியாவில் அமைந்த அரசுகளில் பெரும்பாலானவை தென்னிந்தியக் குடியினரால் (குறிப்பாக, வடுக அநாகரிகரால்) தோற்று விக்கப்பட்டவை என்னும் பெரிய உண்மை இதுவரை மறைக்கப்படக் காரணம் என்ன? ஐரோப்பியர் கடைவிரித்த ஆரியர்-திராவிடர் என்னும் புதிய பார்ப்பனியக் கருத்தியலைக் குலைத்து அதை முற்றாக ஒழித்துக் கட்டிவிடும் என்பதே அதற்கான காரணமாகும். நாகரிகமும் அரசுக்ளும் அரசியலும் தெற்கிலிருந்தே வடக்குநோக்கிப் படர்ந்தன என்னும் பாவாணர் கண்ட வரலாற்றியலே இங்கு மெய்ப்படுகின்றது.

## குறிப்புகள்

1-21. W.T.Arnold, *The Roman System of Provincial Administration to the Accession of Constantine the Great,* Oxford, B. H. Blackwell, MCMVI, pp 172-81.

22. P.T. Srinivas Iyengar, *History of the Tamils, From the Earliest Times to 600 A. D.,* Asian Educational Services, New Delhi, 1982, pp 346-47.

23. K. A. Nilakanta Sastri, *A History of South India,* Oxford University Press, Madras, 1984, p 88.

24-27. W.T. Arnold, *The Roman System of Provincial Administration to the Accession of Constantine the Great,* pp 174-75 and 186-87.

28-29. *An Outline History of China,*ed., Bai Shouyi, Foreign Languages Press, Beijing, 1982, pp 145-45 and 155.

30. Jian Bozan, Shao Xunzheng and Hu Hua, *A Concise History of China,* Foreign Languages Pess, Beijing, 1981, pp 136-37.

31. W. T.Arnold, *The Roman System of Provincial Administration to the Accession of Constantine the Great,* pp 182-83.

32-34. *டாக்டர் சுவாமிநாதன், பல்லவர் கால வரலாறு,* மோகன் பதிப்பகம், சென்னை5, 1981, 1981, பப 190-94.

35-40. *An Outline History of China,* ed., Bai Shouyi, pp 180-81, 189 and 66-67.

41. T. V. Mahalingam, *Early South Indian Paleography,*University of Madras, 1974, pp 116-17.

42. *Hyderabad Archaeological Series,* Vol XIII, No. 13

43. R.D. Banerji, *Prehistoric Ancient and Hindu India,* Blackie & Son (India) Ltd., 1950, p 30.

44. K. A. Nilakanta Sastry, *A History of South India — From Prehistoric Times to theFall of Vijayanagar,* Oxford University Press, 1984, p 108.

45-50. R.D. Banerji, *Prehistoric Ancient and Hindu India,* pp 252, 256-57, 264, 266, 283,125-28 and 230.

www.tamilarangam.net

# ஆரியர் யார்?

இறையாண்மையுடன் தன்னாட்சி நடத்திவந்த இனங்களின் வீழ்ச்சிகளுக்கு எல்லாம் புறத்தேயிருந்து வந்த படையெடுப்புகளே பெருங்காரணங்களாகும். அந்தந்த இனத்திற்குள் முற்றிய அகப் பகையே அயலின மக்களின் அல்லது அரசுகளின் படையெடுப்பு களுக்கான முன்னிலையாகப் பல சூழல்களில் இருந்திருக்கலாம். ஆனால், அத்தகைய அகப்பகை முற்றியிராத தொல்குடியினர் மீதும், புறத்தேயிருந்து வந்த அயலினங்கள் பெருந்தாக்குதல்களைத் தொடுத்து அடிமைப்படுத்தியதுண்டு. அமெரிக்கக் கண்டங்களில் நல்ல நாகரிக எழுச்சிகளுடன் வாழ்ந்துவந்த செவ்விந்திய இனங்களின் மீதும் — ஆப்பிரிக்க இனங்களின் மீதும் — எங்கோ இருந்து கடல்கடந்து வந்த எசுபானியர், போர்ச்சுக்கீசியர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் போன்ற ஐரோப்பிய வந்தேறிகள் நடத்திய படையெடுப்புகள் இவ் வழி நிற் கின்றன.

மூத்தகுடியினரான தமிழரைப் பொறுத்தவரையில், அகப்பகை முற்றா நிலையிலும் முற்றிய நிலையிலுமான இருவகைச் சூழல்களிலுமே அயலார் தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன. தமிழரினத்தின்மீது நடந்த இத்தகைய தாக்குதல்கள் இன்னின்ன எனக் களஆய்வுகளின் அடிப் படையில் ஆய்ந்து தேராமலேயே, ஆப்கானித்தானத்துக் கைபர், போலன் கணவாய்களின் வழியாக வந்த 'ஆரியப்' படையெடுப்புகளே பொதுவில் 'திராவிடரின்' வீழ்ச்சிக்கான காரணம் என ஆங்கிலேயர் போன்ற ஐரோப்பியர்கள் இட்டுக்கட்டினர். இந்தப் பொய்க்கதையை நம்பித் தமிழர்கள் கெட்டழிந்தனர். ஆங்கில ஆளவந்தார்களில் சிலர் பரப்பிய ஆரிய எதிர்ப்புக் கருத்தியலை அடியொற்றிக் கன்னடரும் தெலுங்கருமான வடுகர்கள் தங்களின் வடுகநலன்களைப் பேணிக்காக்க முற்பட்டனர். தமிழகத்தில் அவர்கள் கட்டிய ஒட்டுண்ணித் திராவிட இயக்கம், தமிழ்த் தேசிய ஓர்மையின் இயற்கை வளர்ச்சியையே முடமாக்கித் தமிழர்நாட்டையே வந்தேறிகளின் பெரிய வேட்டைக் காடாக ஆக்கிவைத்துள்ளது. இன்னின்னார் தமிழர்மீது தொடுத்த படையெடுப்புகள்தாம் தமிழரினத்தின் வீழ்ச்சிக்கும் தாழ்ச்சிக்கும் காரணங்கள் என இனம்காட்டும் துடிப்பால் வந்த ஆய்வுகள்தாம், "ஆரியர் யார்?" என்னும் கேள்விக்கு விடைகாணத் தூண்டின.

ஆரியர் என்போர் கைபர், போலன் கணவாய் வழியாக வந் தேறிய ஈரானிய, மங்கோலிய, கிரேக்க வந்தேறிகள் அல்லர் என்பது

www.tamilarangam.net



தமிழர்மீது நடந்த படையெடுப்புகளை ஆய்ந்தால் புலப்படும். சூத்திரர்' என ஒருகால் சொல்லப்பெற்ற மகதநாட்டவரும், அவர்களுக்குக் கூலிப்படைஞராக இருந்த வடுகர் என்னும் நாடோடி அநாகரிகருமே தங்களை 'ஆரியர்' எனச் சொல்லிக்கொண்டனர் என்னும் உண்மை விளங்கும். தமிழர்நாட்டின்மீது நடந்த ஆரியப் படையெடுப்புகள் எல்லாம் பெரும்பாலும் வடுகப் படையெடுப்புகளாகவே இருந்தன. இத் துணைக்கண்டத்தின் தென்கோடியான சேரலத்தில் பரசுராமன் என்னும் வடுகனால் தோற்றுவிக்கப்பட்ட பிராமணியம் என்னும் மாந்தநேயமில்லா வாழ்க்கை நெறியையும் சாதி ஒழுகலாற்றையும் தமிழரிடையே பரப்பியும் திணித்தும் சாதியால் அவர்களைக் கொந்திக் கூறாடியவர்கள் யார் எனத் தேடினால், தமிழகத்தின் எல்லைப்புறங்களைப் பன்னூறு ஆண்டுகளாக அலைக்கழித்து, மெல்ல ஊடுருவி, பின்னர் தமிழர் இனத்தையே அடிமைப்படுத்திய அநாகரிக வடுக வந்தேறிகளே அவர்கள் என்பது விளங்கும்.

## தமிழகத்தின்மீது நடந்த படையெடுப்புகள்

இந்த வரலாற்றியலின் அடிப்படையில், வேங்கடம் முதல் குமரி வரை எனத் தமிழரின் எல்லைகள் குன்றிய பின்னர்த் தமிழர் மீது நடந்த பெரிய படையெடுப்புகள் நிரல்படுத்தப்படுகின்றன. தமிழரினத்தை வீழ்த்தி அடிமைப்படுத்தியவர்கள், வடமேற்கிலுள்ள ஆப்கானித்தானத்திலிருக்கும் கைபர், போலன் கணவாய் வழியாக வந்தவரா அல்லது தமிழகத்தின் செங்கண்மாக் கணவாய் போன்றவற்றின் வழியாகவும், வேங்கடத்து வழியாகவும் வந்த வடுகரா என்னும் கேள்விக்கு அறுதி விடை காணவே தமிழகத்தின்மீது நடந்த பெரிய படையெடுப்புகள் எல்லாம் அடியில் பட்டியலிடப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| 1. | கோசர் (வடுகர்) படையெடுப்பு | துளுநாட்டைப் பிடித்துத் தம்வயமாக்கிக் கொண்ட கோசர் என்னும் மேலை வடுகர், பல்குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னனை அவனது நாட்டிலிருந்தே விரட்டி, ஆட்சியைப் பிடித்தனர். |
| 2. | மோரியர் படையெடுப்பு | கோசர்க்குத் துணையாக வந்த வம்ப மோரியர்கள், தமிழகத்தின்மீது படையெடுத்தனர். மோகூர்ப் பழையன் மாறன் இம் மோரியரை முறியடித்து விரட்டித் தமிழ்மண் காத்தான். |
| 3. | மோரியர் படையெடுப்பு | வாட்டாறு, செல்லூர் முதலான இடங்களில் அதியன் மரபினன் எழினியை வம்ப மோரியர்கள் தாக்கினர். செல்லூர் |

10

www.tamilarangam.net



| | |
|---|---|
| | என்னும் இடத்தில் நடந்த போரில் எழினி மடிந்தான். |
| 4. வடுகர் படையெடுப்பு | செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி (கி. மு. 2ஆம் நூற்றாண்டு), வடுகரின் படையெடுப்பை முறியடித்து, அவர்கள் நன்னனிடமிருந்து கைப்பற்றிய பாழிக் கோட்டையிலிருந்து விரட்டினான். |
| 5. கலிங்கன் காரவேலன் படையெடுப்பு | ஆட்சிக்கட்டிலேறிய பதின்மூன்றாவது ஆண்டில் (கி. மு. 170), கலிங்க அரசன் காரவேலன் பாண்டியநாட்டின்மீது படையெடுத்தானாம். இது மெய்யாயின், வட ஆரியரான ஒட்டரநாட்டு வடுகரின் படையெடுப்பாகவே அஃது இருந்திருக்க வேண்டும். |
| 6. வடுகர் (ஆரியர்) படையெடுப்பு | பாவைக் கொட்டிலார் பாடிய அகநானூற்றுப் பாடலில் வரும் முதல் வல்லத்துப் போரில், ஆரியரான வடுகரைச் சோழன் தோற்கடித்தான். இச் சோழனின் பெயர் தெரியவில்லை. |
| 7. வடுகர் (ஆரியர்) படையெடுப்பு | ஆரியர் எனச் சொல்லிக்கொண்ட வடுகரை மலையமான் திருமுடிக்காரி, முள்ளூரில் முறியடித்து விரட்டினான். |
| 8. களப்பாளர் (வடுகக் கன்னடர்) படையெடுப்பு | கி. பி. 250க்கும் 550க்கும் இடையில் களப்பாளர் (கலியரசர்) என்னும் வடுகர்கள் தமிழர்நாட்டை 300 ஆண்டுகள் சூறையாடினர்; தமிழரசுகளை ஒழித்தனர். இவர்களால் தமிழகத்தில் சோழர்கள் ஏறத்தாழ முற்றாய் ஒழிந்தனர். அந்தச் சோழரின் ஒரு கிளையினரே தெலுங்குச் சோழராக இராயலசீமையில் எஞ்சி நின்றனர். இக் களப்பாளரின் காலமே தமிழரைக் கவ்விய இருண்டகாலத்தின் தொடக்கமாகும். |
| 9. பல்லவர் படையெடுப்பு | முற்காலப் பல்லவன் சிவகந்தவர்மன் (345-55) தொண்டைநாட்டின்மீது படையெடுத்தான்; காஞ்சியைக் கைப்பற்றிக் கொண்டான். |
| 10. (வாதாபி) சளுக்கியப் படையெடுப்பு | இரண்டாம் புலிகேசி, மகேந்திரவர்ம பல்லவனோடு (590-630) காஞ்சி அருகிலிருந்த புள்ளலூரில் போரிட்டான். பல்லவரின் |

www.tamilarangam.net



தலைநகர் காக்கப்பட்டாலும், வடமாவட்டங்களை அந்தப் பல்லவன் சளுக்கியரிடம் இழந்தான்.

| | |
|---|---|
| 11. (வாதாபி) சளுக்கியப் படையெடுப்பு | இரண்டாம் புலிகேசியின் படையெடுப்பை எதிர்த்துப் பரியளம், மணிமங்கலம், சூரமங்கலம் முதலான இடங்களில் போரிட்ட பல்லவன் முதலாம் நரசிம்ம வர்மன் (630-68) அச் சளுக்கியனைத் தோற்கடித்தான். |
| 12. பல்லவர் படையெடுப்பு | சளுக்கியநாட்டின்மீது முதலாம் நரசிம்ம வர்மன் படையெடுத்திருந்த நேரத்தில் (642) பல்லவரின் எல்லைப்பகுதிகளைப் பாண்டியர்கள் மீட்டனர். இதனால், பல்லவன் அப் பாண்டியரைத் தாக்கித் தெற்கு நோக்கிப் பின்வாங்கச் செய்தான். |
| 13. (வாதாபி) சளுக்கியப் படையெடுப்புகள் | பல்லவன் முதலாம் பரமேசுவரன் (669-90) ஆட்சிக்குவந்த முதல் ஆண்டிலேயே சளுக்கியன் முதலாம் விக்கிரமாதித்தன் (654-81), தமிழகத்தைத் தாக்கிக் காஞ்சியைக் கைப்பற்றினான். அடுத்த நான்கு ஆண்டுகள், அச் சளுக்கியன் தொண்டைநாட்டைச் சூறையாடினான். பின்னர், சோழநாட்டில் புகுந்தான். பாண்டியன் நின்றசீர் நெடுமாறன் (கூன் பாண்டியன்), சோழனின் துணையுடன் (675) போரிட்டு முதலாம் விக்கிரமாதித்தனை நெல்வேலியில் தோற்கடித்தான். உறையூருக்கு அருகிலுள்ள பெருவளநல்லூரில் பல்லவனுடன் பொருதிய (675) சளுக்கியன், அப் பல்லவனிடம் தோற்றான். |
| 14. (வாதாபி) சளுக்கியர் படையெடுப்பு | இரண்டாம் பரமேசுவரனின் (728-31) காலத்தில், சளுக்கிய இளவரசன் இரண்டாம் விக்கிரமாதித்தன் (733-45), கங்கருடன் வந்து காஞ்சியைத் தாக்கினான். விளந்தையில் நடந்த போரில் இரண்டாம் பரமேசுவரன் கங்கனால் கொல்லப்பட்டான். |
| 15. பல்லவர் படையெடுப்பு | நந்திபுரத்திற்கு வழிபட வந்த பல்லவன் இரண்டாம் நந்திவர்மனைப் (731-96) பாண்டியன் முதலாம் இராசசிம்மனின் (730-65) தலைமையில் அணிதிரண்ட தமிழர் படை |

www.tamilarangam.net



கள் முற்றின. இதனால், பல்லவப் படைகளுக்கும் பாண்டியர் படைகளுக்கும் இடையில் நெடுவயல், குறுமடை, மன்னிக்குறிச்சி, பூவலூர், கொடும்பாளூர், குழும்பூர், நென்மிலி, மண்ணைக்குறிச்சி, பெண்ணாடகம், சங்கரமண்ணை, கரூர், சூதவதனம், நிம்பவதனம், குரும்பூர், சூரவழுந்தூர் ஆகிய இடங்களில் பெரும் போர்கள் நடந்தன.

16. (வாதாபி) சளுக்கியப் படையெடுப்பு — பல்லவன் இரண்டாம் நந்திவர்மனின் தலைநகர் காஞ்சியைச் (740) சளுக்கியன் இரண்டாம் விக்கிரமாதித்தன் கைப்பற்றினான். ஆயினும், பழமையான அந்த நகரை அழிக்கவில்லை. வாதாபியை நரசிம்மவன்ம பல்லவன் பிடித்ததற்குப் பழிவாங்கும் முகமாகவே காஞ்சியை அவன் பிடித்தான். பின்னர், அக் காஞ்சியைவிட்டு வெளியேறிய அவன், பல்லவனையும் பாண்டியனையும் ஓயாமல் மோதச் செய்துவந்தான்.

17. (வாதாபி) சளுக்கியர் படையெடுப்பு — தன் இறுதிக்காலத்தில், இரண்டாம் விக்கிரமாதித்தன் தன் மகன் இரண்டாம் கீர்த்திவர்மனைத் (745-55) தொண்டைமண்டலத்தின்மீது படையெடுக்க வைத்தான். பின்னர்ப் பாண்டியன் முதலாம் மாறவர்மன் இராசசிம்மனைக் கீர்த்திவர்மன் (750) தாக்கினான். வெண்பைப் போரில் சளுக்கியரையும் கங்கரையும் இப் பாண்டியன் தோற்கடித்தான்.

18. இரட்டர் (இராட்டிரக்கூடர்) படையெடுப்பு — இரட்டன் தந்திதுருகன் தொண்டைமண்டலத்தின்மீது படையெடுத்துக் காஞ்சியைப் (752-56) பிடித்து வைத்திருந்தான். பின்னர், இரண்டாம் நந்திவர்மனுக்குத் (731-96) தன் மகளைக் கட்டிவைத்தான்.

19. பல்லவர் படையெடுப்பு — பாண்டியன் பராந்தகன் நெடுஞ்சடையன் (765-790), பல்லவன் இரண்டாம் நந்திவர்மனைக் காவிரித் தென்கரையிலான பெண்ணாடகத்தில் (~767) தோற்கடித்தான்.

20. இரட்டர் படையெடுப்பு — இரட்டன் மூன்றாம் கோவிந்தன், (792-814) பல்லவன் தந்திவர்மனைத் (796-846) தோற்கடித்துக் (803-04) காஞ்சியைப் பிடித்தான்.

www.tamilarangam.net



21. தெலுங்குச் சோழர் படையெடுப்பு — பல்லவன் தந்திவர்மனுக்குப்பின், பொத்தப்பிக் குடும்பத்துத் தெலுங்குச் சோழனான சிகந்தன் வந்து தொண்டைமண்டலத்தைப் பிடித்தான். பாண்டியன் சடையன் மாறனுக்கு (சீமாற சீவல்லபன் 835-62) இவன் தனது மகளை மணம் முடித்தான்.

22. பல்லவர் படையெடுப்பு — பல்லவனின் வடதிசைப் படையெடுப்பின் போது வந்து தாக்கிய பாண்டியன் சடையன் மாறனைப் பல்லவன் மூன்றாம் நந்திவர்மன் தெள்ளாற்றில் (854) முறியடித்தான். பின்னர், பாண்டியனின் படைகளைப் பின்தொடர்ந்து, பழையாறு, வெறியலூர், வெள்ளாறு, நள்ளாறு, கடம்பூர் ஆகிய இடங்களில் தோற்கடித்தான். பாண்டியரின் எழுச்சியைக் கண்டு பதறிய அப் பல்லவன், நிருபதுங்கன் தலைமையில் சோழரையும் கங்கரையும் கலிங்கரையும் மகதரையும் திரட்டினான். அந் நிருபதுங்கன் பாண்டிய நாட்டைத் தாக்கிக் குடமூக்கில் (859) போரிட்டான். பல்லவன் மூன்றாம் நந்திவர்மனைப் பாண்டியன் தோற்கடித்தான். இப் பாண்டியன் தன் இளைய மகனுக்குப் பட்டம்கட்ட விரும்பியதால் அவனுடைய நாட்டில் பெரிய அரசியல் குழப்பங்கள் தோன்றி, அயலார் படையெடுப்புக்கு வழி வகுத்தன.

23. பல்லவர்-சிங்களர் படையெடுப்பு — சிங்களன் இரண்டாம் சேனனின் படைகளுடன் பல்லவன் நிருபதுங்கன் (865-96) பாண்டியநாட்டைத் தாக்கினான். அரசிலாற்றில் நடைபெற்ற போரில், பாண்டியன் சடையன், மாறன் கொல்லப்பட்டான். பாண்டியர்நாடு கொள்ளையிடப்பட்டது. இரண்டாம் வரகுண பாண்டியனை (862-80) வடுக் வந்தேறிகள் ஆட்சியில் அமர்த்தினர். பாண்டியநாடு பல்லவரிடம் அடிமைப்பட்டது.

24. பல்லவர் படையெடுப்பு — பல்லவன் நிருபதுங்கனுக்கும் அவனது மாற்றாந்தாய் மகனான அபராசித்தனுக்கும் இடையில் எழுந்த அதிகாரப் போட்டியால் சண்டை மூண்டது. நிருபதுங்கன் இரண்

www.tamilarangam.net



டாம் வரகுண பாண்டியனோடும், அபராசித்தன் முதலாம் ஆதித்த சோழனோடும் (871-907) என ஈரணியாய்த் திருப்புறம்பியத்தில் (879) போரிட்டனர். நிருபதுங்கனும் வரகுணனும் தோற்றனர்.

25. இரட்டர் படையெடுப்பு

முதலாம் ஆதித்தச் சோழனுக்கும் இரட்டன் இரண்டாம் கிருட்டிணனின் மகளுக்கும் பிறந்தவனே கன்னரத் தேவன். ஆதித்தன் மடிந்தபின் முதலாம் பராந்தகனுக்கு (907-55) முடிசூட்டினர். தன் பேரன் கன்னரத்தேவனுக்கு முடிசூட்டாமையால் சினந்த இரட்டன் இரண்டாம் கிருட்டினன், சோழர்நாட்டைத் தாக்கி, முற்காட்டுப் (910) போரில் சோழனை வென்றான்; பாணனின் திருவல்லத்தையும் (910-11) பிடித்தான்.

26. இரட்டர் படையெடுப்பு

இரட்டன் மூன்றாம் கிருட்டிணன் (939-66) தனது கொழுந்தனான கங்கநாட்டுப் பூதங்கனுடன் கூடிச் சோழன்மீது படையெடுத்துத் (949) தக்கோலத்தில் தாக்கினான். பராந்தக சோழனின் மருமகன் இரட்டன் நான்காம் கோவிந்தனுக்குச் சோழன் புகலிடம் தந்ததே இப் படையெடுப்புக்கான காரணம். பாணனும் வைதும்பனும் இரட்டனுக்கு உதவினர். போரில் வென்ற இரட்டன், 'கச்சியும் தஞ்சையும் கொண்ட கன்னட தேவன்' என்னும் பட்டம் சூட்டிக் கொண்டான்; இராமேசுவரத்தில் வெற்றித் தூண் நாட்டினான்.

தொண்டைநாட்டில் எங்கெனும் கன்னடப் படைகள்அலைந்து திரிந்தன. தமிழகம் இரட்டருக்கு அடிமைப்பட்டது. இந்த இரட்டன், நேரடியாக ஆளாமல், தெலுங்கு வைதும்பன் விக்கிரமாதித்தனையும் அவன் வழியினரையும் வைத்தே தமிழர்நாட்டை ஆண்டான். பராந்தக சோழனின் மகன் கண்டராதித்த சோழன் இறந்தபின் (957), சோழப் பேரரசு ஒரு சிற்றரசாகக் குறுகியது. இரட்டன் மூன்றாம் கிருட்டினன் தொண்டைமண்டலத்தைத் தன்னிடமே தொடர்ந்து வைத்திருந்தான். சுந்தரசோழன்

www.tamilarangam.net



| | |
|---|---|
| | (956-73) மறைவுக்குப் பின் ஆண்ட உத்தம சோழன் (970-85) காலத்தில், இரட்டரிடம் அடிமைப்பட்டிருந்த சோழநாட்டின் பெரும் பகுதி மீட்கப்பட்டது. |
| 27. (கலியாணபுரச்) சளுக்கியர் படையெடுப்பு | கீழைச்சளுக்கியன் இரண்டாம் தைலன் (973-97), உத்தமசோழனைத் (980) தோற் கடித்தான். |
| 28. கீழைச்சளுக்கியர் படையெடுப்பு | சளுக்கியன் இரண்டாம் வீமனின் பெயர னும் வேங்கைநாட்டை ஆண்டுவந்தவனு மான தெலுங்குச் சோழன் சடைய சோட வீமன் (973-1000) தொண்டைமண்டலத்தைத் தாக்கினான். பின்னர், முதலாம் இராசராச னுடன் (985-1014) பொருதித் தோற்றான். |
| 29. (கலியாணபுரச்) சளுக்கியர் படையெடுப்பு | கலியாணபுரத்துச் சளுக்கியன் முதலாம் சோமேசுவரன் (1042-68) சோழநாட்டின் மீது படையெடுத்துக் காஞ்சியை முட்டி னான். |
| 30. (கலியாணபுரச்) சளுக்கியர் படையெடுப்பு | சளுக்கிய இளவரசன் ஆறாம் விக்கிரமா தித்தன் (1076-1126) காஞ்சிமீது படையெடுத் தான். கங்கைகொண்டசோழபுரத்தில் அதி ராசேந்திரனைச் சோழரின் அரியணை யில் ஏற்றினான். |
| 31. கீழைச்சளுக்கியர் படையெடுப்பு | வடுகவழிக் கீழைச்சளுக்கியன் இரண்டாம் இராசேந்திரன் சோழநாட்டைக் கைப்பற்றி, முதலாம் குலோத்துங்கன் (1070-1120) என் னும் பெயரில் முடிசூடிக் கொண்டான். இவனது அரசவழியினரைச் சளுக்கியச் சோழர்கள் என்றனர். ஆனால், வடுகச் சோழர்கள் என்றழைப்பதே இவர்களுக்கு மிகவும் பொருந்தும். |
| 32. ஒய்சளர் படையெடுப்பு | ஒய்சளன் பிட்டிகன் (விஷ்ணுவர்தன் 1110-52), கங்கநாட்டுக்குச் சோழரின் ஆளுநனா யிருந்த அதிகமானைத் தோற்கடித்துக் (1116) கங்கநாட்டைக் கைப்பற்றினான். பின்னர், காஞ்சியைத் தாக்கியதாகவும், மதுரையைச் சூறையாடியதாகவும் இராமேசுவரம் வரை ஊடுருவியதாகவும் சொல்லப்படுகிறது. |
| 33. சிங்களர் படையெடுப்பு | சடையவர்மன் குலசேகர பாண்டியனுக் கும் சடையவர்மன் பராக்கிரம பாண்டி |

www.tamilarangam.net



யனுக்கும் இடையில் (1166) உள்நாட்டுப் போர் மூண்டது. பராக்கிரம பாண்டியன், இலங்கை அரசன் முதலாம் பராக்கிரம பாகுவைத் (1153-86) தன் உதவிக்கு அழைத்தான். இலங்காபுரன் என்னும் படைத் தலைவனின்கீழ் அச் சிங்களன் ஒரு படையை விடுத்தான். குலசேகரனோ, அதற்குள் ஆட்சியைக் கைப்பற்றினான். பராக்கிரம பாண்டியன் கொல்லப்பட்டான். இராமேசுவரம், குந்துகாலம், கீழைமங்கலம், மேலைமங்கலம், தொண்டி, கருத்தங்குடி, திருவேகம்பம் முதலான ஊர்களை அந்தச் சிங்களர்கள் பறித்தனர். மதுரையைப் பிடித்த சிங்களர் படை, பாண்டியநாட்டில் சொல்லொணா அட்டூழியங்களைச் செய்தது; ஊர்கள் பலவற்றை எரித்தது. பராக்கிரம பாண்டியனின் மகனான வீரபாண்டியனைப் பெயருக்கு மட்டுமே அரசனாக அமர்த்திவிட்டுப் பச்சையான படையாட்சியையே நடத்தியது.

| | |
|---|---|
| 34. தெலுங்குச் சோழர் படையெடுப்பு | தெலுங்குச் சோழனான நல்லசித்தரசன் (1192-93) காஞ்சியைப் பிடித்தான். மூன்றாம் குலோத்துங்கன் (1178-1216), இவனை (1196) விரட்டியடித்தான். |
| 35. ஒய்சளர் படையெடுப்பு | சோழநாட்டின் தென்பகுதியைப் பிடித்த வாணகோவரையனையும், சேந்தமங்கலத்தை ஆண்டுவந்த பல்லவன் கோப்பெருஞ்சிங்கனையும் உறத்திப் போரில் (1221) தோற்கடித்த ஒய்சளன் வீரநரசிம்மன், தமிழகத்திற்குள் அடித்த பெருங்கொள்ளையுடன் நாடு மீண்டான். |
| 36. கலிங்கத்துச் சோழகங்கர் படையெடுப்பு | கலிங்கநாட்டுச் சோழகங்கன் மூன்றாம் இராசராசனுக்குப் பிறகு ஆட்சிக்குவந்த மூன்றாம் அனங்க வீமனின் (1211-38) படை, காஞ்சி முதல் திருவரங்கம் வரையில் ஊடுருவியது. கலிங்க ஒட்டர்கள் சோழநாட்டில் (1223) ஊடுருவி, திருவரங்கத்தில் குழப்பங்கள் விளைவித்தனர். பின்னர், சுந்தர பாண்டியனைத் (1225) தூக்கியெறிந்தனர். |

www.tamilarangam.net



37. ஒய்சளர் படையெடுப்பு

காகதியரையும் அவர்களின் சிற்றரசர்களாக நெல்லூரை ஆண்ட தெலுங்குச் சோழர்களையும் விரட்டிச் சென்ற ஒய்சளர்கள், காஞ்சியைக் கைப்பற்றினர்.

38. ஒய்சளர் படையெடுப்புகள்

சோழநாட்டின்மீது படையெடுத்த முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன், (1216-38) சோழன் மூன்றாம் இராசராசனை (1216-60) அவனுடைய நாட்டை விட்டு விரட்டிவிட்டான். அச் சோழனைத் தெள்ளாற்றில் (1231) மடக்கிப் பிடித்த காடவன் கோப்பெருஞ்சிங்கன், சேந்தமங்கலத்தில் அவனைச் சிறை வைத்தான். முடியிழந்த அந்தச் சோழனை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதற்காக ஒய்சளன் இரண்டாம் நரசிம்மன் (1220-38), பாண்டியரிடமிருந்த சேலம், தென்னார்க்காடுப் பகுதிகளைத் தாக்கியபின், திருவரங்கத்தை நோக்கிச் சென்றான். பெரம்பலூர்ப் போரில் கோப்பெருஞ்சிங்கனின் நாட்டைக் கைப்பற்றியபின், தொழுதூர் வழியாகச் சிதம்பரத்திற்குச் சென்று, பாண்டியனுக்குத் துணையாக வந்த சிங்களன் பராக்கிரம பாகுவை முறியடித்தான். கடிலம் ஆற்றுக்குத் தெற்கிலுள்ள பகுதிகளை எல்லாம் சூறையாடிக்கொண்டே சேந்தன்மங்கலம் போய்ச் சோழனை மீட்டு, அவனை மீண்டும் அரியணை ஏற்றினான். பின்னர், காவிரிக் கரையிலிருந்த மகேந்திரமங்கலத்தில் (1232) மாறவர்மன் சுந்தர பாண்டியனைத் தோற்கடித்தான். ஒய்சளன் இரண்டாம் நரசிம்மனின் மகன் சோமேசுவரன் (1233-67), ஒய்சளநாட்டு ஆட்சியைத் தனது அமைச்சர்களிடம் ஒப்படைத்துவிட்டுத் தமிழ்நாட்டிற்குள் தன்னை வலுப்படுத்திக் கொள்ள முயன்றான். மூன்றாம் இராசராசனின் மகனான மூன்றாம் இராசேந்திரன் (1246-79) பாண்டியநாட்டின்மேல் படையெடுத்த போது, ஒய்சளன் சோமேசுவரன் பாண்டியன் பக்கம் மாறி, அம் மூன்றாம் இராசேந்திரனையே தோற்கடித்தான். சோழநாடு, ஒய்சளரால் (1249) சூறையாடப்பட்டது.

www.tamilarangam.net



| | |
|---|---|
| 39. காகதியர் படையெடுப்பு | காகதியன் கணபதி காஞ்சியைக் (1250) கைப்பற்றினான். முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் (1251-53), ஒய்சளன் சோமேசுவரனுடன் போரிட்டு, அவனைக் கொன்றான்; பின்னர், காகதீயரைக் காஞ்சி யிலிருந்து விரட்டினான். |
| 40. தெலுங்குச் சோழர் படையெடுப்பு | சம்புவராயன், காடவராயன் ஆகியோ ருடன் முரண்பட்டு நின்ற நெல்லூர்த் தெலுங்குச் சோழன் திக்கன், மூன்றாம் இராசேந்திரனை வலுப்படுத்தினான். ஒய்ச ளன் சோமேசுவரனுடன் தான் போரிட்ட தற்குக் கைம்மாறாகக் காஞ்சியை அவனே வைத்துக் கொண்டான். சோமேசுவர னுக்குப்பின், அவன் மக்களான மூன்றாம் நரசிம்மனுக்கும் (1254 -92) இராமநாதனுக் கும் (1254-95) இடையில் ஒய்சளநாடு பிரித்துத் தரப்பட்டது. இதனால், ஒய்சள வந்தேறிகள் பிடித்த தமிழ்ப்பகுதிகள் இராம நாதனுக்குக் கிடைத்தன. |
| 41. மாலிக்காஃபூர் (கில்ஜி) படையெடுப்பு | மாறவர்மன் குலசேகர பாண்டியனின் (1268-1310) மக்களான வீரபாண்டியனுக்கும் சுந்தரபாண்டினுக்கும் (1310-20) இடையில் நிலவிய அரசுரிமைப் பூசலால் குழப்பம் நிலவிய பாண்டியநாட்டின்மீது மாலிக்கா ஃபூர் (1310-11) படையெடுத்தான். |
| 42. கேரளர் படையெடுப்பு | சுந்தர பாண்டியனின் பக்கமிருந்த திரு வதங்கூர் மன்னன் இரவிவர்மன், பின்னர் வீரபாண்டியனோடு சேர்ந்துகொண்டு பாண்டியநாட்டின்மீது (1312) படையெடுத் தான்; காஞ்சியையும் (1313) பிடித்தான். |
| 43. குசுருகான் (கில்ஜி) படையெடுப்பு | வீரதவளப்பட்டினத்துப் போரில் (1318) தோற்ற வீரபாண்டியனின் அழைப்பை ஏற்றுப் பாண்டியநாட்டின்மீது குசுருகான் படையெடுத்து வந்தபோது, கரந்தடி முறை யில் பாண்டியன் அவனுக்கு ஆட்டம் காட் டினான். இதனால் அந்தப் படையெடுப்பு தோல்வியில் முடிந்தது. |
| 44. உலுக்கான் (துக்ளக்) படையெடுப்பு | முகமது-பின்-துக்ளக் என்னும் பெயரில் பின்னர் தில்லி சுல்தானாகிய உலுக்கா னின் படைத்தலைவன் மஜீர் அபுரிஜா |

www.tamilarangam.net



பாண்டியநாட்டின்மீது படையெடுத்து வந்து (1323) மதுரையைக் கைப்பற்றினான். பாண்டியன் பராக்கிரமதேவனைத் தளைப் படுத்தி அவனைத் தில்லிக்குக் கொண்டு சென்றான். மதுரையில் 1336 முதல் 1377 வரையில் சுல்தான்களின் ஆட்சி நடந்தது. தமிழகத்தில் துக்ளக்கின் ஆளுநனாயிருந்த ஜலாலுதீன் ஹசன் ஷா, தில்லி சுல்தானைச் சார்ந்தவரை எல்லாம் கொன்றுவிட்டு (1333–34), மதுரையைத் தானே ஆளத் தொடங்கி னான்.

**45. ஓரங்கல் + ஒய்சளர் படையெடுப்பு**

ஓரங்கல் காப்பைய நாயக்கனும் ஒய்சளன் மூன்றாம் பல்லாளனும் சேர்ந்து வந்து தொண்டைமண்டலத்தில் வடக்கத்திய முசுலிம் ஆட்சியை ஒழித்து, சம்புவராயர் களை ஆளவிட்டனர். திருவண்ணாமலை யைத் தன் மூலதளமாகக் கொண்ட (1340) மூன்றாம் பல்லாளன், திருச்சி, புதுகை, இராமநாதபுரம் வழியாக இராமேச்சுரம் வரையிலும் பல வல்லரண்களைக் கட்டி னான்.

**46. விசயநகரப் (சங்கமர்) படையெடுப்பு**

விசயநகர வல்லரசை நிறுவியவரில் ஒருவ னான முதலாம் புக்கனின் (1344–77) காலத் திலேயே மைசூர், சேலம், தென்னார்க்காடு ஆகியவற்றில் சில பகுதிகள் ‘முள்வாயில்’ அரசு என்னும் பெயரில் விசயநகர வடுகர் களால் ஆளப்பட்டு வந்தது. அவனது மக னான குமார கம்பணன் மதுரை சுல்தான் ஆட்சியை ஒழித்தான். சம்புவராயர்களை அடிமைப்படுத்திய இவ் வடுகன், பின்னர் அவர்களை மதுரை சுல்தான்களுக்கு எதி ராகத் திருப்பினான். இந்தக் கம்பணனின் அரசி சங்கதமொழியில் எழுதிய மதுரா விஜயம் என்னும் நூல், ‘முசுலிம் எதிர்ப்பு’ என்னும் சாக்கிலும் வந்தேறி வடுகர்கள் தமிழரை அடிமைப்படுத்தி ஆண்டதைக் காட்டும்.

**47. விசயநகர (சங்கமர்) ஈழப் படையெடுப்பு**

விசயநகர ஆளுநனாகத் தமிழகத்தில் படை யாட்சி நடத்திய தண்டநாயகன் இலக் கண்ணன், தன் விசயநகர வடுகப் பேரர

www.tamilarangam.net



| | |
|---|---|
| | சினை விரிவாக்க வேண்டிச் சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் (1422- 63) என்னும் கொத்தடிமையை ஈழநாட்டின்மீது படை யெடுக்க வைத்தான். |
| 48. விசயநகரப் (சங்கமர்) படையெடுப்பு | விசயநகர வடுகன் மல்லிக்கார்ச்சுனன் (1447-65) தமிழகத்தைப் பெயரளவுக்குத் தான் ஆண்டுவந்தான். ஆனால், திருமலைத் தேவன் என்னும் சாளுவ திம்மனோ, திருச்சி தஞ்சை, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் தனிக்காட்டாட்சி' நடத்திவந்தான். |
| 49. விசயநகரப் (சந்திரகிரி) படையெடுப்பு | விசயநகர வல்லரசுக்கு எதிராகத் தமிழ கத்தில் எழுந்த கலகங்களை எல்லாம் விசயநகர ஆளுநனாயிருந்தபோது (1456-85) சாளுவ நரசிம்மன் ஒடுக்கினான். |
| 50. ஒட்டர் படையெடுப்பு | கலிங்க்ன் கபிலேசுவர கஜபதி நெல்லூர் உதயகிரியையும் காஞ்சியையும் திருச்சி யையும் (1463) தாக்கிக் கொள்ளையிட்டான். |
| 51. பாமினிப் படையெடுப்பு | பாமினி அரசனான மூன்றாம் முகமது (1463-82), காஞ்சி வரை வந்து கொள்ளை யிட்டான். விசயநகரச் சாளுவ நரசிம்ம னின் துளுவப் படைத்தலைவன் ஈசுவரன் காஞ்சியை முற்றி, சுல்தான் ஆங்குக் கொள்ளையடித்து வைத்திருந்த பொருள் களை அள்ளிக்கொண்டு போனான். |
| 52. விசயநகரப் (துளுவர்) படையெடுப்பு | துளுவ ஈசுவரனின் மகன் நரசநாயக்கன் திருச்சி, தஞ்சை ஆளுநனாயிருந்த கோனேரி ராசனின் கொடுங்கோலாட்சியை எதிர்த்துத் திருவரங்கத்து வைணவர்களைக் காத்தா னாம். பின்னர், குமரி வரையிலும் படை யெடுத்துச் (1496) சென்று சேர சோழ பாண் டிய நாடுகளை விசயநகர வடுக ஆட்சிக்கு அடிமைப்படுத்தினான். |
| 53. விசயநகரப் (துளுவர்) படையெடுப்பு | கிருட்டிணதேவராயர் காலத்தில் (1509-29) தொண்டைநாடும் சோழநாடும் விடுதலை நாடிக் கிளர்ந்தெழுந்தன. ஓர் இலக்கம் விசயநகர வடுகப் படைகள் தமிழகத்தின் மீது ஏவப்பட்டன. அந்தப் படைகள், வேலூரைக் கைப்பற்றின. (நெல்லூர் முதல் கொள்ளிடம் வரையிலான) செஞ்சிப் |

www.tamilarangam.net



பகுதி, தஞ்சைப் பகுதி, மதுரைப் பகுதி எனத் தமிழகம் மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. செஞ்சி மண்டலத்திற்குத் துப்பர்க்கிக் கிருட்டிணப்ப நாயக்கனும், தஞ்சை மண்டலத்திற்கு விசயராகவ நாயக்கனும், மதுரை மண்டலத்திற்கு வெங்கடப்ப நாயக்கனும் ஆளுநர்களாக அமர்த்தப் பெற்றனர்.

54. விசயநகரப் (துளுவர்) படையெடுப்பு

விசயநகர வல்லாட்சியின்கீழ் சோழரும் பாண்டியரும் வெறும் சிற்றரசர்களாயினர். ஆயினும், பழைய உரிமைகளின் எச்சங்கள் அவர்களிடம் இருக்கத்தான் செய்தன. தங்களுக்குள் ஓயாது பூசலிடுகின்ற உரிமை அவற்றுள் ஒன்றாகும். இத்தகைய உரிமை எந்த வந்தேறிக்கும் வலிமைதானே சேர்க்கும்? இதனால்தான், சோழன் வீரசேகரனுக்கு எதிராயிருந்த சந்திரசேகர பாண்டியனுக்கு உதவ எண்ணிய விசயநகர வல்லரசன் கிருட்டிணதேவராயன், நாகம நாயக்கனைத் தமிழகத்திற்கு அனுப்பினான். அந்தச் சோழனை முறியடித்த நாகமன், பாண்டியநாட்டைக் கைப்பற்றினான். பிடித்த பாண்டியநாட்டைச் சந்திரசேகர பாண்டியனிடம் ஒப்படைக்காமல், அந்த நாகம நாயக்கன் (1529) அதைத் தானே ஆளத் தொடங்கினான்.

55. விசயநகரப் (துளுவர்) படையெடுப்பு

நாகம நாயக்கனின் மகனான விசுவநாத நாயக்கன் (1533), பாண்டியநாட்டிற்கு ஆளுநன் ஆனான். (மதுரை நாயக்கர் ஆட்சியை இவன்தான் அமைத்தான் என்பதற்கான சான்றுகள் இல்லை என்பது சிலரது கூற்று.)

56. விசயநகரப் (துளுவர்) படையெடுப்பு

சோழநாட்டின் ஆளுநனான வீரநரசிம்மனை (செவ்வப்பனை) அடக்குவதற்காகத் தமிழகம் வந்த விசயநகரப் பேரரசன் அச்சுதராயன் (1530-42), காஞ்சியில் எடைக்கு எடையாகத் தங்கம் பெற்றபின், திருவரங்கம் வரையிலும் படைசெலுத்தினான். வேணாட்டு மன்னன் திருவடி உதய மார்த்தாண்டன் இந் நிலையில் பாண்டிய நாட்டைப் பிடித்துக் கொண்டான். சடைய

www.tamilarangam.net



வர்மன் சீவல்லப பாண்டியனுக்கு (1534-43) அவன் நாட்டை மீட்டுத்தந்த அச்சுத ராயன், அப் பாண்டிய மன்னனின் மகளை மணந்தான்.

57. விசயநகரப் (அரவீடு) படையெடுப்பு

கிருட்டிணதேவராயனின் மருமகனான இராமராயன் (1542-65) சின்ன திம்மனைச் சோழநாட்டின்மீது ஏவினான். புவனகிரிக் கோட்டையை அவன் முற்றினான். காவிரியைக் கடந்து நாகூர்த் துறைமுகம் வரை சென்றான். தஞ்சையையும் புதுக்கோட்டையையும்கூடக் கைப்பற்றித் திறை பெற்றான். ஆட்சி இழந்திருந்த பாண்டியனை மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர்த்தினான். குமரியில் 'வெற்றிக்கம்பம்' நாட்டினான்.

58. விசயநகரப (அரவீடு) படையெடுப்பு

கயத்தாற்றையும் தூத்துக்குடியையும் ஒரு சேர ஆண்டுவந்த பட்டம் பெருமாளின் தலைமையின்கீழ், விசயநகர வந்தேறியத்தை எதிர்ப்பதற்குப் பாண்டியரில் சிலர் (1545-46) கிளர்ந்தனர். தென்பாண்டித் தமிழரின் இத் தேசிய எழுச்சியை அடக்குவதற்காக, இரண்டகன் அரியநாயக முதலியாரை விசுவநாத நாயக்கன் ஏவினான். ஆனால், அவனை அத் தமிழர் கூட்டணி தோற்கடித்தது. இதனால், இராமராயன் சின்னதிம்மனைத் தமிழகத்தின்மீது படையெடுக்க வைத்தான்.

சோழநாட்டுப் புவனகிரிக் கோட்டையைப் பிடித்த இவன், தஞ்சை, புதுக்கோட்டைப் பகுதிகளைக் கைப்பற்றியதுடன், கயத்தாற்றுப் பட்டம் பெருமாளைத் தோற்கடித்தான். பாளையப் பதவிகளைக் காட்டிப் பின்னர் அவர்களை விலைக்கு வாங்கினான்.

59. விசயநகரப் (அரவீடு) படையெடுப்பு

தமிழகத்தின்மீது படையெடுத்த வடுகன் இராமராயன், சென்னைச் சாந்தோம் கிறித்துவத் திருக்கோயிலைத் (1558) திடீரெனத் தாக்கினான். அங்கிருந்த கிறித்துவர்களை அரட்டி மிரட்டி ஓர் இலக்கம் வராகன் பொன்னை அவர்களிடமிருந்து கவர்ந்து சென்றான்.

www.tamilarangam.net



| | |
|---|---|
| 60. விசயநகரப் (அரவீடு) படையெடுப்பு | விசயநகரப் பேரரசன் முதலாம் சீரங்கனின் இளவல் இரண்டாம் வெங்கடன் (1586-1614), வேலூர் நாயக்கன் லிங்கனைத் தோற்கடித்து வேலூர்க் கோட்டையைப் பிடித்தான். உத்தரமேரூர்ப் போர் (1601), மின்னல் போர் (1603), வேலூர்ப் போர் (1603), செங்கற்பட்டுப் போர், திருச்சிப் போர், மதுரைப் போர், செஞ்சிப் போர் (1608), தோப்பூர்ப் போர் (1617) பாளையங்கோட்டைப் போர் (1617) என விசயநகர வல்லரசியத்திற்காக வேலுகோடி மரபினன் எச்சம நாயுடு போர்கள் பலவற்றை நடாத்தித் தமிழர்நாட்டில் வெறியாடினான். வடுகன் இரண்டாம் வேங்கடன், தொண்டை நாட்டையும் சோழ நாட்டையும் சூறையாடினான்; மதுரையில் கொள்ளையும் கொலையும் நடத்தி அம் முதுநகரைத் தீக்கிரையாக்கினான்! பின்னர் அவ் வேலூரையே தன் வடுக அரசிற்குத் தலைநகராக ஆக்கிக்கொண்டான். |
| 61. போர்ச்சுக்கீசியர் படையெடுப்பு | புல்லிக்காட்டில் கோட்டை கொத்தளத்துடன் விளங்கிய டச்சு வணிகப்படைகளைப் போர்ச்சுக்கீசிய வணிகப்படைகள் (1612) தாக்கிச் சூறையாடின. |
| 62. மைசூர்ப் படையெடுப்பு | முதலாம் சாமராச உடையாரின் (1578-1617) படைத்தலைவனாகிய நந்திராசன், திண்டுக்கல்மீது (1625) படையெடுத்தான். |
| 63. பீசாப்பூர்ப் படையெடுப்பு | ரந்துலாகான் (1641) தலைமையில் வந்த பீசாப்பூர்ப் படைகளுடன் சேர்ந்து விசயநகரப் பேரரசன் மூன்றாம் சீரங்கன் வேலூரின்மீது படையெடுத்தான். அவ் வேலூர் அப்போது அரவீட்டு விசயநகர அரசன் மூன்றாம் வெங்கடனுடைய தலைநகராயிருந்தது. |
| 64. கோல்கொண்டாப் படையெடுப்பு | சென்னையையும் பூந்தண்மலியையும் ஒருசேர ஆண்டுவந்த தாமெர்லா வெங்கடனால் கீழ்க்கரையோரமாக வந்த கோல்கொண்டாப் படைகளைத் (1642) தடுத்து நிறுத்த முடியவில்லை. |
| 65. பீசாப்பூர்ப் படையெடுப்பு | விசயநகரப் பேரரசன் மூன்றாம் வெங்கடன் (1630-41), சித்தூர்க் காட்டிற்குள் ஒளிந்திருந்த |

www.tamilarangam.net



போது மடிந்ததை அறிந்த மூன்றாம் சீரங்கன் (1642-49), தன்னைத் தானே விசயநகர அரசனாக்கிக் கொண்டான். நாயக்க வந்தேறிகளிடமிருந்து பீசாப்பூர் சுல்தானுக்குத் திறை பெற்றுத் தந்துவந்தவன் இவனேயாவான். பீசாப்பூரின் முசுத்தாஃபா கான் (1644) செஞ்சியைத் தாண்டிச் சேலம் வரை வந்தான். விரிஞ்சிபுரம் போரில் (1646) சீரங்கன் தோற்றான். முசுத்தாஃபா கான் பின்னர் வேலூரை முற்றினான்.

66. கோல்கொண்டாப் படையெடுப்பு

மீர் ஜம்லா தலைமையில் பழவேர்க்காடு வரை வந்த கோல்கொண்டாப் படைகள், அங்கிருந்த டச்சுக்காரரால் தோற்கடிக்கப்பட்டன; அடுத்து, வேலூரை (1647) முற்றின. மராத்திய வந்தேறி ஷாஜியின் தலைமையிலான பீசாப்பூர்ப் படைகளும் அம் முற்றுகையில் பங்குபெற்றன. மீர் ஜம்லா, அடுத்துச் செஞ்சியை (1648-49) முற்றினான்.

67. பீசாப்பூர்ப் படையெடுப்பு

செஞ்சி, திருவண்ணாமலைக் கோட்டைகள் (1649) பீசாப்பூரின் படைகளால் கைப்பற்றப்பட்டன. செஞ்சியிலிருந்த பொன்னும் மணியும் பிறவும் கொள்ளையிடப்பட்டன. மூன்றாம் சீரங்கன் தஞ்சையில் புகலிடம் கண்டான். செஞ்சியைப் போல் தஞ்சையும் (1649) பீசாப்பூரிடம் பணிந்தது. இதனால், 1652 ஆண்டில் வடக்கத்திய முசலிம்கள் தமிழகத்தை முற்றாகக் கைப்பற்றினர்.

68. மைசூர்ப் படையெடுப்பு

மதுரைத் திருமலை நாயக்கன் (1625-59) நோயுற்றுப் படுத்த படுக்கையாகக் கிடந்த போது, மைசூர் அரசன் முதலாம் கண்டீரநரசன் மதுரையைத் தாக்கினான். இவனுடைய படைத்தலைவன் ஹம்பையா, தமிழ்நாட்டைக் (1656) கொள்ளயிட்டு எரியூட்டினான். மூக்கை அறுப்பதற்கெனச் செய்யப்பட்ட ஒரு கருவியைக் கொண்டு, ஆண், பெண், குழந்தை, குட்டி எனப் பாராமல் வழியில் கண்டவரை எல்லாம் தமிழகத்தில் மூக்கரிந்து, மூட்டை மூட்டையாக அவற்றை மைசூருக்கு அனுப்பி வைத்தான். இதையே

www.tamilarangam.net



| | |
|---|---|
| | மூக்கறுத்தான் படையெடுப்பு (1656-59) என்றனர். திருமலை நாயக்கனும் தன் படைகளை மைசூருக்குள் ஏவித் தன் பங்குக்கு அவ்வாறே மூக்கரிந்து மதுரைக்கு விடுக்கச் செய்தான். |
| 69. டச்சுப் படையெடுப்பு | டச்சு வணிகப் படைகள் தூத்துக்குடியையும் (1658), நாகப்பட்டினத்தையும் (1659) போர்ச்சுக்கீசியரிடமிருந்து பறித்தெடுத்தன. |
| 70. பீசாப்பூர்ப் படையெடுப்பு | திருமலை நாயக்கனின் மகனான இரண்டாம் முத்துபுரப்ப நாயக்கனின் (1659) காலத்தில், பீசாப்பூர் அரசன் தமிழக நாயக்கர்களை அடக்கச் சொல்லித் தம் படைத் தலைவர்களை ஏவினான். அவர்கள் தஞ்சையைக் கைப்பற்றினர். வல்லமும் மன்னார்கோயிலும் அவர்களால் கைப்பற்றப் பட்டன. |
| 71. பீசாப்பூர்ப் படையெடுப்பு | பீசாப்பூர்ப் படைத்தலைவன் வானாமியான், தமிழகத்தின்மீது (1663) படையெடுத்தான். சொக்கநாத நாயக்கன் (1659-82), பெரிய தொகையைத் தந்து அவனைத் திருப்பி அனுப்பினான். |
| 72. மதுரை நாயக்கர் படையெடுப்பு | திருமலைச் சேதுபதிமீது படையெடுத்த சொக்கநாத நாயக்கன் (1665) திருப்பத்தூர் புதுகை, மானாமதுரை, காளையார்கோயில் ஆகிய இடங்களில் கோட்டைகளைக் கட்டினான். |
| 73. மைசூர்ப் படையெடுப்பு | மைசூர்மீது படையெடுத்துத் தோற்ற (1667) சொக்கநாத நாயக்கன், சேலம், கோவைப் பகுதிகளை மைசூர் வடுகரிடம் இழந்தான். ஈரோட்டுப் போருக்குப் (1672) பின்னர், ஈரோடு, தாராபுரம் முதலான பகுதிகள், மைசூர் இளவரசன் சிக்கதேவராயனுக்குக் கிடைத்தன. |
| 74. பிரெஞ்சுப் படையெடுப்பு | கோல்கொண்டா வந்தேறியரிடம் அடிமையுண்டிருந்த மயிலார்ப்பூரைப் (1672) பிரெஞ்சுக்காரர் முற்றி, அதனைக் கைப்பற்றிக் கொண்டனர். |
| 75. மதுரை நாயக்கர் படையெடுப்பு | சொக்கநாத நாயக்கன் தஞ்சை (நாயக்கன்) மீது (1673) படையெடுத்தான். |

11

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | |
|---|---|
| 76. பிரெஞ்சுப் படையெடுப்பு | பெரம்பலூருக்கு அருகிலான வாலிகண்ட புரத்தை ஆண்டுவந்த பீசாப்பூர் ஆளுநன் ஷேர்க்கானிடமிருந்து பிரெஞ்சுக்காரர்கள் கொடையாகப் பெற்ற புதுச்சேரி, டச்சுக் காரரிடம் (1673) விழுந்தது. ஆனால், பிரெஞ்சுக்காரர்கள் அந் நகரை மீட்டனர். |
| 77. பீசாப்பூர்ப் (மராட்டியர்) படையெடுப்பு | பீசாப்பூர்ப் படைத்தலைவனான மராத்தியன் ஏக்கோஜி (வெங்கோஜி) தஞ்சையைத் தாக்கித் (1674) தமிழர்நாட்டில் மராத்திய வந்தேறி ஆட்சிக்குக் கால்கோளிட்டான். மராத்தி வந்தேறியான சிவாஜியின் மாற்றாந்தாய் மகன் இவனாவான். |
| | கொடுங்கோலனான வெங்கோஜி, தமிழர் மீது கொடிய வரிகளைச் சுமத்தியும், தமிழகத்தின் திருக்கோயில்களைச் சூறையாடியும் பொருள் குவித்தான். 1674லிருந்து 1855 வரை தஞ்சையில் சிற்றரசராகவே அம் மராத்தியர் ஆண்டுவந்தனர். |
| 78. பிரெஞ்சுப் படையெடுப்பு | சென்னை சாந்தோமை (1672) முற்றிட்ட பிரெஞ்சுப் படைகள், பின்னர் அதை (1674) இழந்தன. |
| 79. கோல்கொண்டாப் (மராத்தியர்) படையெடுப்பு | கோல்கொண்டாவின் படைத்தலைவன் சிவாஜி, செஞ்சியைக் (1677) கைப்பற்றி அங்கு 1677 முதல் 1698 வரை மராத்திய வந்தேறிகள் தமிழரை அடிமைப்படுத்தியும் சுரண்டியும் ஆள வழிவகுத்தான். |
| | வேலூரையும் புவனகிரியையும் (1677) பிடித்த பின்னர், அவன் கொள்ளிடம் வரையில் சென்றான். |
| 80. கோல்கொண்டாப் படையெடுப்பு | கோல்கொண்டாவின் படைத்தலைவன் ருஸ்தம் கான் (1687) திருச்சியைக் கைப்பற்றி, வடுக நாயக்கனின் அரியணையில் ஈராண்டுகள் அமர்ந்திருந்தான். |
| 81. முகலாயர் படையெடுப்பு | காஞ்சியும் பூந்தண்மலியும் முகலாயரின்கீழ் வந்தன. வந்தவாசிப் போரில் (1689) மராத்தியப் படைகளை முகலாயர்கள் முறியடித்தனர். இதனால், தில்லிக்குத் திறை கட்டத் (1694) தஞ்சை அரசு ஒப்பியது. |

www.tamilarangam.net



| | |
|---|---|
| 82. கேரளர் படையெடுப்பு | கேரளன் இரவி வர்மன், மதுரை வடுகச்சி மங்கம்மாமீது படையெடுத்து (1697) வென்றான். |
| 83. முகலாயர் படையெடுப்பு | சுல்ஃபிகர்கான் தலைமையில் ஔரங்கசீப் ஏவிய முகலாயர் படை, 1690 முதல் 1698 வரை செஞ்சியை முற்றியிருந்தது. தாவூத்கான் பன்னியின்கீழ் ஔரங்கசீப் விடுத்த புதிய படைகள் (1698) செஞ்சிலை ஒருவாறு பிடித்தன. |
| 84. மைசூர்ப் படையெடுப்பு | 1696க்குள் சேலம், கோவை அடங்கிய காவிரிக் கரை வரையில் மைசூர் ஆட்சி படர்ந்தது. மைசூர் மன்னன் பின்னர்த் திருச்சியைத் தாக்குவதற்குப் படைவிடுத்தான். இந் நிலையில், மராத்தியர்கள் மைசூரைத் தாக்கியதால், தமிழர் மண்ணை அவன் மேலும் பிடிப்பது தடைப்பட்டது. |
| 85. மதுரை நாயக்கர் படையெடுப்பு | தஞ்சைமீது படையெடுக்கச் சொல்லித் தானைத்தலைவன் நரசப்பனை மதுரையின் வடுக அரசி மங்கம்மாள் (1700) ஏவினாள். |
| 86. மதுரை நாயக்கர் படையெடுப்பு | இராமநாதபுர மறவர் தலைவன் கிழவன் சேதுபதி (1698), மதுரையை முற்றித் தோற்றான். தஞ்சை மராத்தியர் படை உதவியுடன் மதுரை அரசி மங்கம்மாவின் வடுகப் படைத்தலைவன் நரசப்பையன் சேதுபதி நாட்டின்மீது படையெடுத்து (1702) உயிரிழந்தான். தஞ்சை மராத்தியன் வெங்கோஜியையும் (1709) வென்ற சேதுபதி, அறந்தாங்கியை மீட்டான். |
| 87. ஐதராபாத் படையெடுப்பு | முதல் நிசாமான நிசாம் உல்முல்க், 'கருநாடக' நவாபின்மீது (1721) படையெடுத்து வந்து, பெரும் திறை கொண்டு மீண்டான். |
| 88. மராத்தியர் படையெடுப்பு | கிழவன் சேதுபதியின் மகனான பவானி சங்கரனை உறையூரில் (1729) தளைப்படுத்திய மராத்தியப் படைகள், அவனைத் தஞ்சைக்குக் கொண்டு சென்றன. |
| 89. ஆர்க்காட்டுப் படையெடுப்பு | திருச்சியைப் பிடித்த சந்தாத்சாகிப், திண்டுக்கல்லையும் கைப்பற்றினான். பின்னர் மதுரையையும் (1736) பிடித்தான். |

www.tamilarangam.net



| | |
|---|---|
| 90. பிரெஞ்சுப் படையெடுப்பு | பிரெஞ்சு வணிகப்படைகள் காரைக்காலைப் (1739) பிடித்தன. |
| 91. மராத்தியர் படையெடுப்பு | ரகோஜி பான்ஸ்லே என்னும் மராத்திப் படைத்தலைவன் தமிழகத்திற்குள் புக்கு (1740), ஆர்க்காட்டையும் அதன் சுற்றுப் புறங்களையும் கைப்பற்றினான். அவனது மராத்தியப் படைகள் கொள்ளை கொலைகளை நடத்திப் பேயாடியதால், தமிழகமே கண்ணீரிலும் செந்நீரிலும் தோய்ந்தது. ரகோஜியால் கொல்லப்பட்ட கருநாடக நவாப் தோஸ்து அலியின் மகன் சஃப்தர் அலி, அம் மராட்டியருக்கு ஒரு கோடி பணம் கொடுத்து அமைதியை விலைக்கு வாங்கினான். |
| 92. ஐதராபாத் படையெடுப்பு | ஐதரபாத் நிசாம், திருச்சியின்மீது (1743) படையெடுத்து, அந் நகரை மராத்தியரிடமிருந்து கைப்பற்றினான். |
| 93 பிரெஞ்சுப் படையெடுப்பு | பிரெஞ்சுக் கப்பல்களை ஆங்கிலேயர்கள் அவ்வப்போது தாக்கியதால் சீற்றமுற்ற பிரெஞ்சுக்காரர்கள், ஒரு பெரிய கடற்படையுடன் வந்து ஆங்கிலேயரிடமிருந்த சென்னையை (1746) முற்றினர். 'கருநாடக' நவாபு அன்வருத்தீன் (1743-49) சென்னை முற்றுகையை முறியடிக்க விடுத்த படைகள் தோற்றன. இதையடுத்து, பிரெஞ்சு ஆளுநனாகிய டூப்ளே, கூடலூரில் ஆங்கிலேயர் கட்டியிருந்த தாவீதுக் கோட்டையை முற்றித் தோற்றான். சென்னை மீண்டும் ஆங்கிலேயருக்குக் கிடைத்தது. |
| 94. பிரெஞ்சுப் படையெடுப்பு | டூப்ளே, சந்தாசாகிப்புடனும் முசாஃபர் ஜங்குடனும் சேர்ந்து ஆம்பூர்ப் போரில் (1749)'கருநாடக' நவாப் அன்வருதீன்கானைக் கொன்றனர். நவாபின் மகன் முகமதலி திருச்சிக்கு ஓட்டம்பிடிக்கவே, பிரெஞ்சுப் படைகளும் அவனைப் பின் தொடர்ந்தன. திருச்சியை ஓராண்டுக் காலம் டூப்ளே முற்றினான். |
| 95. பிரெஞ்சுப் படையெடுப்பு | கடிலம் ஆற்றங்கரையிலுள்ள திருவாதியைத் (சூலை-ஆகத்து 1750) தாக்கின. முகமது |

www.tamilarangam.net



| | |
|---|---|
| | அலிக்கு உதவ வந்த ஆங்கிலப் படைகள் பிரெஞ்சுப் படைகளால் முறியடிக்கப்பட்டன. பிரெஞ்சுப் படைகள் (செப்-திசம்பர் 1750) செஞ்சிக் கோட்டையைக் கைப்பற்றின. |
| 96. ஆங்கிலேயர் படையெடுப்பு | இராபர்ட் கிளைவின் தலைமையின்கீழ் வங்கத்திலிருந்து வந்த ஆங்கிலப் படைகள் திருச்சி முற்றுகையிலிருந்து சந்தா சாகிபைத் திசைதிருப்ப வேண்டி ஆர்க்காட்டை (1751) முற்றின. இப் போரில் கிளைவ் தோற்றான். ஆனால், ஆரணியிலும் காவிரிப்பாக்கத்திலும் (1752) பின்னர் நடந்த போர்களில் பிரெஞ்சுப் படைகள் தோற்றன. |
| 97. பிரெஞ்சுப் படையெடுப்பு | பிரெஞ்சுக்காரர்கள், கடல்வழியாகவே வந்து சென்னையை (1758) முற்றினர். |
| 98. ஆங்கிலேயர் படையெடுப்பு | பிரெஞ்சுக்காரரிடம் இருந்த செஞ்சிக் கோட்டையை (1761) ஆங்கிலேயப் படைகள் கைப்பற்றின. |
| 99. நவாபு + ஆங்கிலேயர் படையெடுப்பு | கருநாடக நவாபு முகமதலிக்கும் ஆங்கிலேயருக்கும் இடையிலான 1762-63 ஒப்பந்தத்திற்குப் பிறகு, கருநாடக நவாபு ஆங்கிலேயருடன் சேர்ந்து தஞ்சைமீது படையெடுத்தான். தஞ்சை மராத்திய அரசு, நவாபின் ஆளுகையின்கீழ் வந்தது. ஆயினும், தஞ்சை மராத்தியரின் அரசுரிமையைப் பின்னர் ஆங்கிலேயர்கள் மீட்டனர்; சரஃபோஜியைத் தஞ்சையின் அரசனாக்கினர். |
| 100. ஐதரலி படையெடுப்பு | செங்கண்மாக் கணவாயின் வழியாகத் தமிழகத்திற்குள் புகுந்து ஆங்கிலேயர்களைத் தாக்கத் துணிந்த ஐதரலி, கருமலை (கிருட்டினகிரி)க் கோட்டையைக் (ஆகத்து 1767) கைப்பற்றினான். அவனால் ஆம்பூரைக் கைப்பற்ற முடியவில்லை. சென்னை சாந்தோம் (1768) வரையிலும் அவன் படையெடுத்தான். |
| 101. ஐதரலி படையெடுப்பு | ஐதரலியும் திப்பு சுல்தானும் நடத்திய படையெடுப்புகளால் (1780-82), தமிழகம் மிகக் கொடுமையாகச் சூறையாடப்பட்டது. பெண்டு பிள்ளை எனப் பாராமல், கண்ணில் பட்டவரெல்லாம் படுகொலை செய் |

www.tamilarangam.net



யப்பட்டனர். வழி நெடுகிலும் இருந்த ஊர்களெல்லாம் தீக்கிரையாக்கப்பட்டன. வீடு வாசல் இழந்த தமிழ் மக்கள், காடுகளிலும் மலைகளிலும் அடைக்கலம் புகுந்தனர். ஆம்பூர், ஆரணி, திமிரி, திருப்பத்தூர், கருங்குழி முதலான இடங்களைப் பிடித்தபின், ஐதரலி ஆர்க்காட்டைப் பிடித்தான். தன் மகன் திப்புவை ஆர்க்காட்டு நவாபு ஆக்கினான். பின்னர், செஞ்சியைத் தாக்கினான். திருச்சியையும் (1781) முற்றினான். சிதம்பரத்திலும் பறங்கிப்பேட்டையிலும் ஆங்கிலேயர்களிடம் தோற்றான். சோளிங்கர் போருக்குப் பின்னர் (1781), வேலூர் ஆங்கிலேயர் வயமானது. ஐதர், கூடலூரரையும் (1782) பிடித்தான். கரூர், அரவங்குறிச்சி, திண்டுக்கல், நாகப்பட்டினம் ஆகிய இடங்களையும், ஈழத்தின் திருகோணமலையையும் ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர். பாலைக்காட்டையும் கோவையையும் (1783) கூட அவர்கள் பிடித்தனர்.

| | |
|---|---|
| 102. திப்பு சுல்தான் படையெடுப்பு | சத்தியமங்கலம் போரில், திப்பு (1783-99) ஆங்கிலேயரைத் தோற்கடித்தான். |
| 103. நவாபு + ஆங்கிலேயர் படையெடுப்பு | இரண்டாம் மைசூர்ப் போர் (1780-84) மூண்டபின், ஆங்கிலேயருடன் 'கருநாடக' நவாபு செய்துகொண்ட 1781 ஒப்பந்தத்தின் கீழ் நவாபின் நாட்டிற்குள் வரி தண்டும் உரிமையை ஆங்கிலேயர் பெற்றனர். மூன்றாவது மைசூர்ப் போரின் முடிவில் அந் நவாபுக்கும் ஆங்கிலேயருக்கும் ஏற்பட்ட 1792 ஒப்பந்தத்தின்கீழ், நவாபின் உரிமைகளை எல்லாம் ஆங்கிலேயர்கள் பறித்துக்கொண்டனர். சரஃபோஜியுடன் ஆங்கிலேயர் செய்து கொண்ட 1799 ஒப்பந்தம், அத் தஞ்சை அரசனின் உரிமைகளை எல்லாம் முற்றாகப் பறித்துக்கொண்டது. 1799இல் தஞ்சையும், 1801இல் 'கருநாடக' நவாபின் நாடும், இவ்வாறு ஆங்கிலேயரின் கைக்கு வந்தன. |
| 104. ஆங்கிலேயர் படையெடுப்பு | 'கருநாடக' நவாபிடமிருந்து வரி தண்டும் உரிமையையே பறித்துக்கொண்ட ஆங்கிலே |

www.tamilarangam.net



யர்களை எதிர்த்துக் கொள்ளைக்கார வடுக (கன்னடத் தெலுங்கு)ப் பாளையக்காரர்கள் சிலர் வரி கட்டாமல் தவிர்த்தனர். தமிழ்ப் பாளையக்காரர்கள் சிலர், அந்தப் புதிய வந்தேறிகளுக்கு வரிகட்ட மறுத்துப் போரிட்டனர். நெற்கட்டுஞ்செவ்வலின் பூலித்தேவனும் (1750-60), சிவகங்கை வேலு நாச்சியாரின் நம்பிக்கைக்குரிய சின்ன மருதுவும் பெரிய மருதுவும் (1772-81) அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களின் எழுச்சிகள் எல்லாம் ஆங்கிலேயரால் அடக்கப்பட்டதற்குப் பாளையக்காரர்கள் என்னும் பெயரில் மக்கள்மீது பச்சை வழிப்பறிகளை நடத்திவந்த வடுக வந்தேறிகளின் காட்டிக் கொடுப்புகளே பெரும் காரணங்களாகும்.

பன்னூறு ஆண்டுகளாக வடுக வந்தேறிகளிடம் அடிமைப்பட்டிருந்த தமிழர்நாடு, கடல்கடந்து வந்த ஆங்கிலேய வந்தேறிகளின் அடிமைநாடானது. ஆங்கிலேயர் 1947ஆம் ஆண்டில் இத் துணைக் கண்டத்தைவிட்டு வெளியேறியபின், வழிவழிவந்த தமிழரின் தாயகம் 'இந்தி'யருக்கு அடிமைப்பட்டது.

இந் நிலையில், ஆப்கானித்தானிலுள்ள கைபர், போலன் கணவாய் வழியாக வந்த படையெடுப்பு என ஒரு படையெடுப்பை யாவது காட்ட முடியுமா?


கடந்த 2,400 ஆண்டுகளில் தமிழகத்தின்மீது குறைந்தது 100 படையெடுப்புகள் நடந்தனவெனின், சராசரி 24 ஆண்டுகளுக்கு ஒரு படையெடுப்பு என்னும் மேனிக்குத் அத் தமிழகம் படையெடுப்புகள் பலவற்றிற்கு ஆளாகிவந்துள்ளது விளங்கும். இது போன்ற வந்தேறிப் படையெடுப்புகளால் விளைந்த நீண்ட அடிமைத்தனமே, தம் மண்ணையும் மண்ணுரிமையையும் மறந்து வந்தேறிகளின் எடுப்பார் கைப்பிள்ளைகளாக — அடிப்படையில் இனவுணர்வும் அற்றவராய்த் — தமிழகத் தமிழர்கள் இருப்பதற்கான உளத்தியல் காரணமாகும்.

## தெற்கிலேயே முதல் பேரரசுகள்!

மிகப் பெரிய வரலாற்று உண்மை ஒன்றை வந்தேறிகள் திறம்பட மறைத்துள்ளனர். இத் துணைக்கண்டத்தில் முதன்முதலில் தோன்றிய பேரரசுகள் பாண்டியப் பேரரசும் சேரப் பேரரசும் — அவற்றை அடுத்துவந்த சோழப் பேரரசும் — என்னும் உண்மையே அஃதாகும். இந்த மூன்றுமே தெற்கில் தோன்றியவை. இவற்றையடுத்து நான்காவதாகத் தோன்றிய மகதப் பேரரசே வடகிழக்கில் தோன்றிய

www.tamilarangam.net






வரைபடம் 7

முதல் பேரரசாகும். இந்த உண்மையை ஏற்றுக்கொள்வதாயின், இத் துணைக்கண்டத்து வரலாற்றைத் தெற்கிலிருந்தே தொடங்க வேண்டும். நாகரிகம் என்பது இங்குத் தெற்கிலிருந்தே வடக்கு நோக்கிச் சென்றது என்னும் உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டி யிருக்கும். இதனாலேயே இவ்வளவு பெரிய வரலாற்றுப் புரட்டல் அரங்கேற்றப்பட்டுள்ளது. இத்தகைய வரலாற்றுப் புரட்டலுக்கான பொய்ச் சான்றே ஆரிய-திராவிடக் கருத்தியல்.

பீகாரின் பாட்னா மாவட்டத்திலிருந்த இராசகிருகத்தைத் தலை நகராகக் கொண்டு எழுந்த மகத அரசு, பின்னர் கங்கையும் சோணை (Son) ஆறும் கூடும் இடத்தில் அமைந்த பாடலிபுரத்தில் ஒரு பேரர

www.tamilarangam.net



சானது.* தமிழகத்திற்கு ஏறத்தாழ வடகிழக்கிலுள்ள அப் பகுதியில் தோன்றிய மோரியப் பேரரசு கி. மு. 230ஆம் ஆண்டளவில் வீழ்ந்த பின் — அதே காலத்தில் — கருநாடகத்திலுள்ள பெல்லாரிக்கு அருகில் ஆந்திரப் (சாதவாகன) பேரரசு தோன்றியது.[3] இந்தத் துணைக்கண்டத்தில் தோன்றிய ஐந்தாவது பெரிய பேரரசே, அவ் வடுகப் பேரரசாகும்.

விந்தியமலைக்குத் தெற்கே விளங்கிய அரசுகளைப்பற்றிக் கூறுகையில், ஆந்திரர், புண்டரர், சோழர், பாண்டியர், கேரளர் ஆகியோரின் அரசுகளைப்பற்றி வால்மீகி இராமாயணத்தின் கிட்கிந்தை காண்டத்தில் குறிப்பிடப்படுகின்றது.[§] முசிறிப்பட்டினத்தை முரசீப் பட்டணம் என வால்மீகி இராமாயணத்தின் கிட்கிந்தைக் காண்டம் குறிப்பிடும்.[5] வால்மீகி இராமாயணம், ஆந்திரப் பேரரசுக்கும் பின்னரே எழுதப்பெற்றது என்பதைக் காட்டுவதுடன், சேர, சோழ, பாண்டியப் பேரரசுகளின் தொன்மையையும்கூட இது சுட்டுகின்றது. பாண்டியரின் தலைநகரான கவாடபுரத்தின் முத்துப் பதித்த பொற் கதவங்களைப் பற்றியும் இராமாயணம் குறிப்பிடுகின்றது.[#] அந்தப் பாண்டியப் பேரரசின் மீமிகத் தொன்மை இதனால் விளங்கும்.

கிறித்துவின் பிறப்பிற்கு முன்னால், வட இந்தியாவில் பின்வரும் அரசுகள் இருந்தனவாம்:[7]

| # | பெயர் | இருந்த இடம் |
|---|---|---|
| 1. | அங்கம் | பீகாரிலும் ஒரிசாவிலும் உள்ள பாகல்பூர், முங்கேர் மாவட்டங்கள்; |
| 2. | மகதம் | பீகாரிலுள்ள பாட்னா, கயா மாவட்டங்கள்; |
| 3. | வஜ்ஜி | வடபீகாரின் முசாஃபர்பூர், சரண், சம்பரண் மாவட்டங்கள்; |
| 4. | காசி | கிழக்கு உத்தரப் பிரதேசத்திலுள்ள வாரணவாசி காசிபூர், மிர்சாபூர் மாவட்டங்கள்; |
| 5. | கோசலம் | உத்தரப் பிரதேசத்தின் லக்னோ, ஃபைசாபாத் மாவட்டங்கள்; |
| 6. | மல்லம் | கிழக்கு உத்தரப் பிரதேசத்தின் கோரக்பூர் மாவட்டம்; |

* "வெண்கோட் டியானை சோணை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்"[2]

§ "Tathaiv Àndhrâmsca pundrâmsca colân pândyân sa keralân"[4]

\# "tato hemamayam divyam muktâ,mani vibhûsitam |
yuk kavâtam pândyânâm gatâdraksyata vânarâh ||"[6]

www.tamilarangam.net



7. வம்சம் — கிழக்கு உத்தரப் பிரதேசத்தின் அலகாபாத், (வத்சம்) பண்டா மாவட்டங்கள்;

8. செட்டீ — தெற்கு உத்தரப் பிரதேசத்திலுள்ள கான்பூர், உனாவோ மாவட்டங்கள்;

9. பாஞ்சாலம் — வடஉத்தரப் பிரதேசத்தின் ரோகில்கண்ட்;

10. குரு — மேற்கு உத்தரப் பிரதேசத்தின் அலிகார், மீரத், தில்லி, தானேசுவர் மாவட்டங்கள்;

11. மச்சம் — கிழக்கு இராசத்தானத்தின் ரேவாரி, குர்காவோங் மாவட்டங்களும், முன்னாள் ஆள்வார், செயப்பூர் மன்னராட்சிகளின் பகுதிகளும்;

12. சூரசேனம் — மேற்கு உத்தரப் பிரதேசத்தின் மதுரா மாவட்டமும் முன்னாள் பரத்பூர் மன்னராட்சிப் பகுதியும், முன்னாள் செய்ப்பூர் மன்னராட்சிப் பகுதியின் வடபகுதியும்;

13. ஆசுமகம் — கோதாவரி ஆற்றின் தோற்றுவாய்க்கு அருகில் உள்ளது;

14. அவந்தி — மாளவம் (மேற்கு மத்தியப் பிரதேசம்);

15. காந்தாரம் — பாக்கித்தானின் பெசாவரைச் சுற்றியுள்ள பகுதிகள் வரையிலான முன்னாள் வடமேற்கு எல்லை மாவட்டங்கள்;

16. காம்போசம் — ஆப்கானத்திலுள்ள காபுல், ஜலாலாபாத் மாவட்டங்கள்.

மேற்போந்த தமிழகத்தின் நேர்வடக்கில் இருந்த வடக்கத்திய அரசுகள் கோசலம், செட்டீ, பாஞ்சாலம், குரு, மத்சியம், சூரசேனம், அவந்தி, காந்தாரம், காம்போசம் ஆகியனவாகும். மராட்டியத்தி லுள்ள கோதாவரி ஆற்றின் தோற்றுவாய்க்கு அருகிலிருந்தது ஆசுமகம். பிற ஆறு நாடுகளும் தமிழகத்தின் வடகிழக்கில் அமைந்தவை. இவ் வடஇந்திய அரசுகளில் மகதம் மட்டுமே சேர, சோழ, பாண்டியப் பேரரசுகளுக்கு நிகரான நான்காவது பெரும் பேரரசாக எழுச்சி யுற்றது. இத் துணைக் கண்டத்தில் முதன்முதலில் தோன்றிய பெரிய பேரரசுகள் சேர, சோழ, பாண்டியப் பேரரசுகள்தான் என்ற உண்மை யையும், பேரரசுப் பொருளியலும் அரசியலும் தெற்கிலிருந்தே வடக்கு நோக்கிப் பெயர்ந்தன வென்னும் உண்மையையும் பிராமணியக் கருத் தியலும், ஆரிய-திராவிட வரலாற்றுக் குழப்படியும் வேண்டுமென்றே மறைத்துவந்துள்ளதை இதுவும் காட்டும்.

தமிழகத்திற்கு நேர்வடக்கில் இத் துணைக்கண்டத்தில் முதன் முதலில் தோன்றிய பேரரசு, குஷாணர் (யூச்சி) பேரரசேயாகும். இப்

www.tamilarangam.net



பேரரசு கி. பி. 78ஆம் ஆண்டில்தான் கனிஷ்கனின் வழியாகத் தோன்றியது. வடகிழக்கிலுள்ள பாடலிபுரத்தில் எழுந்த மகதப் பேரரசு, கி. மு. 4ஆம் நூற்றாண்டின் இறுதியில்தான் தோன்றியது. தமிழகத்தின் நேர்வடக்கே, கி. பி. 78ஆம் ஆண்டுக்கு முன்னர் யாதொரு பேரரசும் இருக்கவில்லை என்னும் பேருண்மை இதனால் மறைக்கப்பட்டு வருகின்றது.

இத் துணைக்கண்டத்தில் நாகரிகமும் பண்பாடும் தெற்கிலிருந்தே வடக்குநோக்கிப் படர்ந்தன. பாவாணரின் இவ் வரலாற்றியல் தனித்தமிழர்க்கு விளங்குமாயின், ஆரிய வடுகர் வழியிலான பழைய பிராமணியமும், திராவிட வடுகர் வழியிலான புதிய பிராமணியமும் இடுப்பில் ஒட்டிக் கொண்டிருக்கும் துண்டும் அவிழப் பிறந்த மேனியாய் அலறியடித்துக்கொண்டு ஓடும் நிலை வராமலா போகும்?

## பிராமணியத்திற்குப் புறம்பான ஆரியம்!

பிராமண மறைகளில் இம் மகத அரசு எப்போதுமே மிக இளக்காரமாகக் குறிக்கப்பட்டுவந்தது. மகதர்கள் 'பிராமண நெறிகளுக்கு அப்பாற்பட்டவர்கள்' (vrâtyas) எனக் குறிப்பிடப்பட்டனர். மகதப் பிராமணரும்கூட மிகவும் இழிவானவராகவே கருதப்பட்டனர். மகதநாட்டின் முற்கால அரசகுடியினரை 'அசுரர்' என்றே மாபாரதம் குறிப்பிடுகின்றது.[8]

மகதநாட்டை ஆண்டுவந்த நந்தர்கள், பிராமணரின் பகையிலிருந்து தப்பிக்கக் கருதித் தம் தலைநகரை இராசகிருகத்திலிருந்து பாடலிபுரத்திற்கு மாற்றினர் எனப் பிராமணத் தொன்மங்கள் கூறுகின்றன.[9] நந்த அரசன் மகாபத்ம நந்தன் ஒரு சூத்திரப் பெண்ணுக்குப் பிறந்தவன் எனத் தொன்மங்கள் கூறுகையில், அவன் ஓர் அம்பட்டனுக்கு ஆடலணங்கு ஒருத்தியின் வழியாகப் பிறந்தவன் என அருகச் சமய இலக்கியம் கூறுகின்றது. மா அலெக்சாண்டரின் காலத்தில் வாழ்ந்த மகாபத்ம நந்தன், ஓர் அரசியின் கள்ளக்காதலனாயிருந்த ஓர் அம்பட்டனுக்குப் பிறந்தவன் என்னும் இன்னொரு கதையும் உண்டு.[10] இம் மகாபத்ம நந்தன், சத்திரியரை எல்லாம் ஒழித்துக்கட்டிவிடவே, அவனுக்குப்பின் மகதநாட்டை ஆண்டோர் எல்லாம் சூத்திரர் என வைக்கப்பட்டனராம்.*

நந்தர்களின் ஆட்சியைச் சந்திரகுப்த மோரியன் தூக்கியெறிந்து மோரியப் பேரரசை உருவாக்கினான். இவனுக்கு அமைச்சனாயிருந்த பிராமணன் சாணக்கியனுக்குப் பிறகே அம் மோரியர்கள் தங்களை

---

* "Sarva ksattrântakonrpah tatah prabhrti râjâno bhavisyah **sudra** yonayah ekarât sa mahâpadma ekacchatrah"[11]

www.tamilarangam.net



'ஆரியர்' எனச் சொல்லிக்கொண்டனர். 'அரையர்' என்னும் தூய தமிழ்ச் சொல்லே 'ஆரியர்' எனத் திரிந்தது. வங்காளத்தில் இன்னும் வழங்கும் 'ராய்' என்னும் பெயரொட்டும் இதற்குச் சான்று கூறும்.

தமிழரோடு தொடர்புகொண்ட பிறகே வடமொழியர்க்கு ஆரியர் என்னும் பெயர் வந்தது என்பார் பாவாணர். "ஆரியர் என்னும் சொற்கு மூலம் தமிழிலேயே ஆய்ந்து காணல் வேண்டும்"[12] என்பது அவரது துணிபு.

> "பார்ப்பான், அந்தணன், ஐயன் என்னும் தூய தமிழ்ப் பெயர்களை ஆரியர் எங்ஙனம் மேற்கொண்டனரோ, அங்ஙனமே ஆரியன் என்னும் பெயரையும் தென்சொல் என்று தெரிந்தோ தெரியாமலோ மேற்கொண்டிருத்தல் வேண்டும்"[13]

என்பதும் பாவாணரின் நிலைபாடு.

ஐய—ஐயா—ஐயிர—ஆரியா எனப் புத்த மத அருகரும் ஆசான்களும் முனிவர்களும் கன்னித்துறவியரும் அழைக்கப்பட்டனர். அல்லூர், அமராவதி, நாகார்ச்சுனக்கொண்டா பகுதிகளில் புத்த சங்கத்து உறுப்பினரெல்லாம் 'ஐயிர' அல்லது 'ஐர' என்றே குறிப்பிடப் பட்டுள்ளனர்.[14] 'ஐய' (Ayya) என்னும் பாகதச் சொல்லே 'ஆர்ய' (Arya) என்னும் சங்கதச் சொல்லானது.[15] ஐயர் அல்லது அரையர் என்பதே 'ஆரியர்' எனத் திரிந்துள்ளதை இவை காட்டும்.

இவை யாவும், பிராமணியமும் ஆரியமும் வெவ்வேறானவை என்பதையும், அவ்விரண்டும் எதிரும் புதிருமானவை என்பதையும் காட்டுவன.

தமிழ்ப் பிராமணனான சாணக்கியனைத் தன் அமைச்சனாகக் கொண்டிருந்த சந்திரகுப்த மோரியன், அருக சமயத்தவனாகவே வாழ்ந்து அருகத் துறவியாகித் தெற்கே வந்து வடக்கிருந்து மடிந்தான். இந்தச் சாணக்கியன் காஞ்சியைச் சேர்ந்த பிராமணனே ஆவான்.[16] இவனுக்குத் தமிழன் என்னும் பெயரின் திரிபான 'திரமிளா' என்னும் பெயரும் உண்டு. இராமானுசரும் தான் இயற்றிய 'சிறீபாடியம்' என்னும் நூலில் குறிப்பிடும் திரமிளாச்சாரியர் என்பவன் சாணக்கியனே ஆவான் என்பர்.[17]

## வடுகரும் ஆரியரே!

சந்திரகுப்த மோரியனின் பேரனான அசோகன், முதலில் அருக சமயத்தவனாக இருந்தான்.[18] கலிங்கப் போருக்குப் பிறகு, அவன் ஒரு வெறிபிடித்த பௌத்தனானான். இதனால், இவன் பிராமணியத்தைக் கடுமையாக எதிர்த்து நின்ற காலமும் உண்டு. இவன்மீது பிராமணரும் அருகரும் பெரும் கசப்புக் கொண்டிருந்தனர். தன்னுடைய அரசு முழுவதையும் புத்தமதப் பரப்பலில் ஈடுபடுத்திய இவனது புத்த சமயப்பற்றை வைத்து, இவனை இசுலாமைப் பரப்புவதில் வெறித்தனம் காட்டிய முகலாயன் ஔரங்கசீப்புக்கு ஒப்பிடவும்கூடச்

www.tamilarangam.net



செய்வர்.[19] அசோகனும் இறுதியில் புத்தமதத் துறவியானான். ஆயினும், இந்த அசோகனின் ஆட்சித்துறை அதிகார வகுப்பினரிலான தலையாய ஆளுநர்களைக் குமரர் என்றும், ஆரியப்புத்திரர் என்றும் அழைத்தனர்.[20]

கி. மு. 270க்குப் பிறகு ஆட்சிக்கு வந்த அசோகன், கி. மு. 231ஆம் ஆண்டளவில் ஒரு புத்த துறவியாக இறந்த பின்னரே, தெற்கில் பெல்லாரிக்கு அருகில் ஆந்திரப் (சாதவாகன) பேரரசு தோன்றியது. இதற்கிடையில், கி. மு. 183ஆம் ஆண்டில் ஆட்சிக் கட்டிலேறிய காரவேலனுக்குப் பிறகே, கலிங்கம் இன்னொரு பேரரசானது.[21] கலிங்கரை அல்லது ஒட்டரைத் 'திராவிடர்' என்றே வரலாற்றாசிரியர்கள் குறித்தனர்.

இக் காரவேலனின் பேரரசு இன்றைய ஒரிசா மாநிலம் முழுவதையும், ஆந்திரத்தில் வடசர்க்கார் மாவட்டங்கள் எனப்பட்டனவற்றையும், மேற்கு வங்காளத்தின் மிட்னாப்பூர் மாவட்டத்தையும் உள்ளடக்கியதாக இருந்தது. பொதுவாக, மாநதிக்கும் கோதாவரி ஆற்றுக்கும் உரிய கழிமுகங்களுக்கு இடையில் கிழக்குத் தொடர்ச்சி மலைக்குத் தெற்கே இக் கலிங்கப் பேரரசு விளங்கியது. கலிங்கரான ஒட்டரும்கூட வடுகரேயாவர்.

தமிழகத்தின்மீது நடந்த முதல் மோரியர் படையெடுப்பு, சந்திரகுப்த மோரியனின் மகனான பிந்துசாரனின் (கி. மு. 301-273) காலத்தில் நிகழ்ந்தது என்பது பாவாணரின் கருத்து.[22] ஆந்திரப் (சாதவாகன) பேரரசை அமைத்த பின்னர், மோரியருக்குக் கூலிப்படைஞராக இருந்த வடுகரும்கூடத் தங்களை 'ஆரியர்' என்றும், 'பிராமணர்' என்றும் சொல்லிக்கொண்டனர். இவ் வடுகர்கள் தங்களைப் 'பிராமணர்' எனக் கூறிக் கொண்டதற்கான நேரடியான கல்வெட்டுச் சான்றுகளும் கூட உண்டு.[23]

பிற்கால ஆந்திர (சாதவாகன) அரசனான கௌதமபுத்திர சதகர்ணி தன்னைத் 'தன்னேரில்லாப் பிராமணன்' என்றும், 'தம்முடைய அரசகுடிக்குச் 'சத்திரியர்கள்' என்றுமே பகைவராவர்' எனவும் கூறிக்கொண்டான்.[24] ஆயினும், வரலாற்றாசிரியர்கள் மட்டும் இவர்களைத் 'திராவிடர்' என்றே அன்றும் என்றும் கூறிவந்துள்ளனர்.[25]

இக்கால பெல்காம், தாரவாடு மாவட்டங்களில் வனவாசியைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட கடம்பர்களும் தங்களைப் 'பிராமணர்' என்றும், 'மானவிய கோத்திரத்தார்' என்றும் கூறிக் கொண்டனர்.[26] அதே போல், பல்லவர்கள் தங்களைப் பாரதுவாசக் கோத்திரத்தார் எனச் சொல்லிக்கொண்டனர்.[27]

பிராமணியம் என்னும் வாழ்வியலையும் அரசமைப்பையும் சேரலத்தில் முதன்முதலில் உருவாக்கிய பரசுராமனின் கதையை இந்த வரலாற்றுச் செய்திகளோடு ஒப்பிட்டு ஆராயலாம்.

www.tamilarangam.net



அப் பரசுராமன் சத்திரியருக்கு என்றும் பகையானவன். இதனால், அவன் 24 தலைமுறை அரசர்களைக் கருவறுக்கப் போவதாக வஞ்சினம் பேசினான். அதனால், காந்தன் என்னும் சோழனைக் கொல்வதற்கென்றே அந்தப் பரசுராமன், சோழரின் புகார் நகருக்கு வந்தான். இதையறிந்த அச் சோழன், தன் காதற்கணிகையின் மகனாகிய சுகந்தன் என்பவனிடம் ஆட்சியை ஒப்படைத்து, 'அகத்திய முனிவன் என்னை நாடு திரும்பக் கட்டளை இடும் வரையில், நீ இந்த ஆட்சிப்பொறுப்பைத் தாங்கு!' எனக் கூறிவிட்டுச் சென்றான்.

"மன்மருங் கறுத்த மழுவாள் நெடியோன்
தன்முன் தோன்றல் தகாதொளி நீயெனக்
கன்னி யேவலின் காந்த மன்னவன்
இந்நகர் காப்போர் யாரென நினைஇ
நாவலம் தண்பொழில் நண்ணார் நடுக்குறக்
காவற் கணிகை தனக்காங் காதலன்
இகழ்ந்தோர் காயினும் எஞ்சுதல் இல்லோன்
சுகந்த னாமெனக் காதலிற் கூஉய்
அரசா ளுரிமை நின்பால் இன்மையின்
பரசு ராமனின் பால்வந் தணுகான்
அமர முனிவன் அகத்தியன் தனாது
துயர்நீங்கு கிளவியின் யான்தோன் றளவும்
சுகந்தன் காத்தல் காகந்தி என்றே
இயைந்த நாமம் இப்பதிக் கிட்டீங்கு
உள்வரிக் கொண்டவ் வுரவோன் பெயர்நாள்"[28]

என்னும் மணிமேகலையில் வரிகள் சொல்லும் கதை அஃதாகும். தன்னைப் பிராமணர் எனக் கூறிக்கொண்ட பரசுராமனும், ஆந்திரப் (சாதவாகன) பேரரசர்களும் பகை காட்டிய 'சத்திரியர்' என்போர், தமிழரசர்களே அல்லாமல் பிறர் அல்லர் என்பது இதனால் புலப்படும்.

பரசுராமனுக்கும் ஆந்திர (சாதவாகன) அரசகுடியினருக்கும் இடையிலான இந்த ஒற்றுமை, அவர்கள் வெறித்தனமாக வெளிப் படுத்திய சத்திரிய எதிர்ப்பும், தங்களையே பிராமணர் எனச் சொல்லிக் கொண்டதுமே ஆகும். இவ் வழியிலும், பிராமணிய வாழ்வியலையும் ஆட்சியமைப்பையும் இத் துணைக்கண்டத்தில் முதன்முதலில் வடித்த பரசுராமன் ஒரு வடுக வந்தேறியே என்னும் உண்மை மெய்ப்படும்.

தெலுங்கு இனத்திலுள்ள இருபெரும் தீண்டப்படாச் சாதிகளில் ஒன்றான மாடிகர்கள், தங்களை மாதாங்கி என்னும் பெண் தெய்வத் தின் பிள்ளைகள் எனச் சொல்லிக்கொள்வர். தன் தாயான எல்லம் மாவைக் (பிராமணியமயமான ரேணுகாவைக்) கொல்வதற்காகப் பரசு ராமன் வெறிபிடித்து அலைந்தான். எல்லம்மாவிற்கு மாதாங்கி அடைக்கலம் தந்தாள். இதனால் வெகுண்ட பரசுராமன், மாதாங்கி யின் மூக்கை அரிந்துவிட்டான். எல்லம்மாவோ, அம் மாதாங்கியின்

www.tamilarangam.net



மூக்கை உடனே சரிபடுத்திவிட்டாள். அது முதல், எல்லம்மாவைத் தங்களின் குலதெய்வமாக மாடிகர்கள் வழிபடத் தொடங்கினர். இது மாடிகர் சொல்லும் குலக்கதை.[29]

பரசுராமனின் தந்தையான சமதக்கினி என்னும் முனிவன், தன் பாழிக்குள் எல்லம்மா(ரேணுகா)வின் தலையையும் மாதாங்கியின் தலையையும் துண்டித்துவிட்டான். அவர்களுக்கு மீண்டும் உயிர் தருமாறு பரசுராமன் அவனை வேண்டினான். அந்த வேண்டுதலுக்குப்பின், அப் பரசுராமன் மாதாங்கியின் தலையை எல்லம்மாவின் உடலிலும், எல்லம்மாவின் தலையை மாதாங்கியின் உடம்பிலும் என மாற்றிப் பொருத்திவிட்டான். இஃது இன்னொரு கதை.[30]. வடுகரான மாடிகரின் மூதாதையான மாதாங்கியின் மகளே எல்லம்மா என்பர். வடுக வழியினரான மாடிகர்கள், தமிழ்ப் புலையரிடமிருந்தும் கன்னடரான ஒலையரிடமிருந்தும் வேறானவர்கள்.

இத்தகைய கதைகள் யாவும் பரசுராமன் வடுகனே என்பதைக் குறிப்பால் உணர்த்த வல்லன.

ஒருபுறம் — கங்கைக்கரைப் பேரரசுகளுக்கும் ஆந்திர அல்லது கலிங்கப் பேரரசுகளுக்கும் இடையில் போரும் பூசலும் நிலவின. மறுபுறம் — கங்கைக்கரைப் பேரரசுகளுக்கும் தமிழ்ப் பேரரசுகளுக்கும் இடையிலும் போட்டியும் பூசலும் இருந்தன. முகமதியர் ஆட்சி தில்லியில் அமையும் முன்பு வடநாட்டுக்கும் தென்னாட்டிற்கும் இடையில் நிலவிய பெரிய முரண்பாடுகள் இவ்விரு முரண்பாடுகளேயாகும்.

> "இதில் தொடக்க காலத்தில் ஆந்திரப் பேரரசும் — அதன்பின் ஆந்திர, கங்கைப் பேரரசுகளும் — ஆரிய அரசுகள் என்று கூறப்பட்டிருத்தல் கூடும். இங்கே ஆரியம் என்ற சொல் இன அடிப்படையான உணர்ச்சி காட்டும் சொல் அன்று. நாட்டடிப்படையாகவும் திசையடிப்படையாகவும் வழங்கிய சொல்லேயாகும். புத்தர் காலங்களில், கங்கை நாட்டினரே தம்மை மிகப் பெருமையுடன் ஆரியர் என்று கூறிக்கொண்டனர்"[31]

எனக் கா. அப்பாத்துரையார் கூறுவார். புத்தரை 'ஆரியர்' என்றும் 'ஆரியபுத்திரர்' என்றும் வடமொழி நூல்கள் கூறுகின்றன. இதனால்,

> "கழக(சங்க)க் காலத்திலேயே தமிழகம் ஆரியவண்ணமாகத் தொடங்கியதற்கு அசோகனும் புத்த சமண சைன சமயங்களின் இனிப்பான தலைமீடுகளுமே காரணம் ஆயின எனலாம்"[32]

என்றும் அவர் கூறுவார். ஆரியர் என்போர் இத் துணைக்கண்டத்தின் வடமேற்கிலுள்ள கைபர், போலன் கணவாய்களின் வழியாக வந்தவர்கள் என்னும் பாடத்தை மறுக்கின்ற இத்தகைய ஓர் அரிய விளக்கத்தைத் திராவிட இயக்கத்தின் பெரிய அறிவாளரில் ஒருவரான அப்பாத்துரையாரே வெளிப்படுத்திய இந்தச் செய்தி, தமிழரிடம் ஏன் பரவலாகச் சொல்லப்படவில்லை என்பதே ஒரு பெரிய புதிராகும்.

www.tamilarangam.net



ஆந்திரப் (சாதவாகன) பேரரசின் வீழ்ச்சிக்கும் சிதைவுக்கும் பிறகு, அதன் இடிபாடுகளின்மீது வடமேற்கில் ஆபிரர்களும் திரைகூடர்களும், பீராரில் வாகாடர்களும், கீழைத் தக்காணத்தில் இட்சுவாகுகளும் சாலங்காயனர்களும் விஷ்ணுகுண்டிகளும், தெற்குத் தக்காணத்தில் சூட்டுகள் (Chutus), கடம்பர்கள், கங்கர்கள், பல்லவர்கள் முதலான அரசகுடியினரும் காளான்களைப் போல் முளைத்தனர். இவர்களில் பெரும்பாலோர் வடுகரே ஆவர். ஆந்திராவின் குண்டூர்ப் பகுதியை ஆண்டுவந்த இட்சுவாகுகளை 'ஆந்திரபிரித்தியர்' எனக் குறிப்பிட்டதை வைத்து, அவர்கள் வடுகர் என்பது மெய்ப்படும்.[33]

பல்லவர்கள் தங்களைப் பாரதுவாசக் கோத்திரத்துப் பிராமணர் எனச் சொல்லிக்கொண்டனர். இரண்டாம் சிம்மவர்மனின் (கி. பி. 435-65) காலத்திய பள்ளன்கோயில் செப்பேடுகள் மட்டும் இப் பல்லவரைப் 'பிரம சத்திரியர்' எனக் குறிக்கின்றன. பல்லவரைப் 'பல்லவ சத்திரியர்' என்று கடம்பன் மயூரவர்மன் கூறியதாகத் தாளகுண்டாக் கல்வெட்டுக் கூறுகிறது.

பல்லவராகிய கீழை வடுகரின் வந்தேறி ஆட்சியின்போது சிற்றரசர்களாகக் குன்றிய சோழர்கள், தெலுங்கர்நாட்டில் தெலுங்குச் சோழர்களாயினர். இவர்களைக் கண்டுதான் சீனப் பயணி யுவாங் சுவாங் 'சோழநாடு காஞ்சிக்கு வடக்கே உள்ளது' என எழுதினான்.[34]

இன்றைய எலூரை (வேங்கியை)த் தலைநகராகக் கொண்டு வேங்கைநாட்டைக் கி. மு. 6ஆம் நூற்றாண்டில் சகராச கந்தர்வச் சோழன் என்னும் தெலுங்குச் சோழன் ஆண்டுவந்தான். இவன் காலத்தில் (இன்று எலூரு எனப்படும் வேங்கிக்குக் கிழக்கே கடற்கரைக்கு அருகிலுள்ள அமலாபுரம் என்னும்) அமலாவதிப் பட்டணத்தைத் தலைநகராகக்கொண்டு விகடன் என்னும் வடுகன் ஆண்டான்.

வடுகன் விகடன், அந்தத் தெலுங்குச் சோழனிடம் பெண் கேட்டுத் தூது விடுத்தான். அதைக் கேட்டு வெகுண்ட அச் சோழன், 'ஆரிய குலத்தான் சூரிய குலத்தில் பெண் கேட்பதா?' எனச் சினந்துரைத்தான். இதனால், இவ் விகடன் அச் சோழனின் மனைவியான விமலையைக் கடத்திச் சென்று சிறைவைத்தான். அந்தச் சோழன் வலங்கைச் சா்ன்றோர் படையினரை நாடவே, அவர்கள் அவ் விகடன் மீது போர் தொடுத்து அவனது தலைநகரைத் தீக்கிரையாக்கினர். சோழனின் மனைவியை மீட்டெடுத்தனர். இதனால், அச் சோழனின் மகளிர் எழுவரையும் அந்த வலங்கைச் சான்றோர் எழுநூற்றுவர் படையின் தலைமக்கள் எழுவர் மணந்தனர்.[35]

வலங்கைச் சுவடி நூலில் வரும் இக் கதையில் கூறப்படும் விகடன், வாகாட அரசனாக இருக்கலாம் என்பது ஆய்ந்தோர் கருத்து.[36] இவ் வடுக அரசனை 'ஆரியகுலத்தான்' என அந்தச் சுவடி

www.tamilarangam.net



குறிப்பிடுவதை வைத்தும், மோரியரைப் போன்றே வடுகரும் தங்களை ஆரியர் எனச் சொல்லிக்கொண்ட உண்மை விளங்கும்.

> "ஆரியப் படை என்றது ஆந்திரப் பேரரசின் (கி. மு. 567-கி. பி. 220) வடுகப் படையை. வடநாட்டில் அல்லது வடக்கில் உள்ள வரை யெல்லாம் ஆரியரென்னும் வழக்கு இடைக்காலத்தில் எழுந்துவிட்டது. 'ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு' என்னும் பழமொழியில், ஆரியக் கூத்தென்றது வடுகரின் கழைக்கூத்தையே"[37]

என்பது பாவாணரின் ஆழ்ந்த விளக்கமாகும். [ஆந்திரப் (சாதவாகன) பேரரசின் காலத்தை மட்டும் கி. மு. 230 எனத் திருத்திக் கொள்ளலாம்.]

'வெற்றி வேல்களையும், மழைபோல் பொழியும் அம்புகளையும், முகிலைப் போன்ற கேடயங்களையும் உடைய சேரனின் வில் வீரர்கள் திரண்ட அரண்களையுடைய வல்லத்தின் புறத்தேயுள்ள காவற்காட்டை வந்தடைந்த ஆரியர் படைகளைப்போல' எனப் பொருள்படும்

> "..................................வென்வேல்
> மாரி யம்பின் மழைத்தோற் சோழர்
> வில்லீண்டு குறும்பின் வல்லத்துப் புறமிளை
> ஆரியர் படையின் உடைக..............."[38]

என்னும் பாவைக் கொட்டிலாரின் மருதத்திணைப் பாடல், தஞ்சைக்கு அருகிலுள்ள வல்லம் என்னும் இடத்தில் நடந்த ஒரு போரில், ஆரியரின் படையைச் சோழ அரசன் ஒருவன் முறியடித்து விரட்டியதாகக் கூறும். இவ் வல்லத்துப் போரில் முறியடிக்கப்பட்ட ஆரியர் என்போரும் வடுகராகவே இருந்திருக்க வேண்டும்.

இதேபோல், 'ஆரியர் நெருங்கிப் போரிட்ட புகழ்மிக்க முள்ளூர்ப் போர்க்களத்தில், பலர் சூழ உருவிய ஒளிரும் வாளுடன் சென்ற மலையமான் திருமுடிக்காரியின் வேற்படைக்கு அஞ்சி ஆரியப்படை அரண்டு ஓடியது' என்பதை

> "ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப்
> பலருடன் கழித்த ஒள்வாள் மலையனது
> ஒருவேற்கு ஓடி யாங்கு.."[39]

என நற்றிணை குறிப்பிடும். தென்பெண்ணையாற்றின் கரையிலுள்ள முள்ளூர் வரையில் ஊடுருவிய ஆரியர் படை, மலையமான் திருமுடிக் காரியால் முறியடிக்கப்பட்டது. வடுகரே இப் பாட்டில் வரும் ஆரியராக இருந்திருக்க வேண்டும். ஆனால்,

> "ஆரியர் அலறத் தாக்கிப் பேர்இசைத்
> தொன்றுமுதிர் வடவரை வணங்குவில் பொறித்து
> வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்
> வஞ்சி அன்ன............."[40]

www.tamilarangam.net



என்னும் அகநானூற்று வரிகள், இமயத்தில் வில்பொறித்த இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பற்றியவை என்பதால், இவற்றில் கூறப்படும் ஆரியர் என்போர் மகதநாட்டவரைக் குறிக்கும்.

'ஆரியரின் பொன் போன்ற இமயமலையை ஒத்த' என வரும்

"..................................ஆரியர்

பொன்படு நெடுவரை புரையும் ......"[41]

என்னும் அகநானூற்றுப் பாடல் வரிகளில் வரும் ஆரியர்கள், மகதநாட்டுக்கு அப்பால் வடக்கிலிருந்த இமயத்தைக் குறிப்பதால், அம் மகதநாட்டவரையே குறிக்கும்.

வடுக ஆரியரை மகதநாட்டு ஆரியரிடமிருந்து பிரித்துக் காட்டவே, பின்னவரை வடஆரியர் எனச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.* ஆயினும், தமிழரைப் பொறுத்தவரையில், 'வடபுலம்' என்பது வடுகரின் நாடுகளையும் உள்ளடக்கியது.

கி. மு. 230ஆம் ஆண்டளவில் தோன்றிய ஆந்திரப் (சாதவாகன) பேரரசு, தக்காண மேட்டுநிலம் முழுவதும் போக, வடக்கே மகதம் வரையில் பரவியிருந்தது. கல்வெட்டுகளின் அடிப்படையில் பார்த்தால், அந்த ஆந்திரப் பேரரசு கி. பி. 220ஆம் ஆண்டில் ஒழிந்தது. ஆந்திரப் (சாதவாகன) பேரரசில் அரண் சூழ்ந்த முப்பது நகரங்கள் இருந்ததாகவும், ஆந்திரர் படையில் 100,000 காலாட்படைஞரும், 2,000 குதிரைப்படைஞரும், 1,000 யானைப்படைஞரும் இருந்ததாகவும், பிளினி கூறுவார்.[43]

சாதவாகனரை 'ஆந்திரர்' என்றும் 'ஆந்திரபிரித்தியர்' என்றும் (Andhrabhrityas) என்றும் அழைத்தனர். 'ஆந்திரபிரித்தியர்' என்றால் 'ஆந்திரப் பணியாட்கள்' (Andhra servants) எனப் பொருள்படுமாம். இந்தப் பெயரைக் கொண்டு, இச் சாதவாகனர்கள் தங்களுக்கெனத் தனிப் பேரரசை அமைப்பதற்கு முன்பு மோரியர் ஆட்சியில் பணியாளராக இருந்தனர் என்பது உறுதிப்படும்.[44]

ஆந்திரம், கலிங்கம், மகதம் ஆகிய மூன்று பேரரசுகளே 'முக்கலிங்கம்' எனப்பட்டன. இதனால், ஆரியக் கொள்கை முளைக்கவும் பரவவும் செய்ததில் வடுகர்க்குப் பெரிய பங்கு உண்டு. இந்த ஆரியக் கொள்கையைத் தமிழகத்திற்குள் ஏந்தி வந்தது வடுக வந்தேறிகளின் படையெடுப்புகளே என்பது இதனால் உறுதிப்படுகின்றது.

'கோடன்' என்னும் குயவன் தமிழைப் பழித்து ஆரிய மொழியைப் போற்றிப் புகழ்ந்ததைக் கண்டு நக்கீரர் சினங்கொண்டார். அதனால், 'இழவு வருக' வென அவனை அவர் சாவித்தார். அந்தக் குயவன் சட்டெனச் செத்து வீழ்ந்தான். பின்னர் சினம் ஆறிய அவர்,

* "வடஆரியர் படைகடந்து
தென்தமிழ்நாடு ஒருங்குகாணப்"[42]

www.tamilarangam.net



அவனுக்கு மீண்டும் உயிர் தந்தார். இதன் வாயிலாக, வாழவும் சாகவும் செய்யவல்ல தெய்வ ஆற்றல் தமிழுக்கு உண்டென்பதை அவர் மெய்ப்பித்தார். தமிழ்மொழியைப் போற்றிக் கற்குமாறு அவனை மாற்றினார். இவ்வாறு ஒரு கதை உண்டு.[45] அவ்வாறு தமிழைப் பழித்தவனின் பெயரைக் 'குயக்கொண்டான்' என்றும் கூறுவர்.

நக்கீரரால் பாடப்பெற்றவர் கபிலர். பத்துப்பாட்டுக்களில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டை இக் கபிலர் பாடினார். தமிழைப் பழித்த ஆரியவரசன் பிரகத்தனுக்குத் தமிழின் உயர்வையும் சிறப்பையும்பற்றி விளக்கவே கபிலர் குறிஞ்சிப்பாட்டைப் பாடினார். இப் பிரகத்தன் தமிழகத்தின்மீது படையெடுத்தவனாவான். இதனால், நக்கீரரைப் பற்றிய மேற்கூறிய கதையில் வரும் குயக்கொண்டான் இந்த ஆரிய அரசன் பிரகத்தனாகவே இருந்திருக்க வேண்டும். ஆரியன் எனச் சொல்லிக் கொண்ட இவன் ஒரு வடுகனாகவே இருந்திருக்க வேண்டும்.

இவை மட்டுமா?

'தொம்பர்' என்னும் வடுகக் கழைக்கூத்தாடிகளையும்கூட 'ஆரியர்' என்றே அழைத்துவந்ததையும் காண்க. இதனை,

"..............................ஆரியர்
கயிறாடு பறையில்.........."[46]

எனக் குறுந்தொகை குறிக்கும். யானைகளைப் பழக்குவதில் கைதேர்ந்த வடுகர் சிலர், அத் தொழிலை நம்பியும் தமிழகத்திற்குள் வந்தேறினர். இவர்களும் தங்களை 'ஆரியர்' என்றே சொல்லிக்கொண்டனர்.[$]

மோரியர்களும் வடுகருமே 'ஆரியர்' என்போர் அல்லாது, ஆப்கானித்தானத்திலுள்ள கைபர், போலன் கணவாய்களின் வழியாக வந்தவரென இட்டுக்கட்டிக் கூறப்படும் வேறு யாரும் அல்லர் என்பதையே இதுவரை கண்ட ஆய்வுகள் காட்டுகின்றன.

தங்களை 'ஆரியர்' எனச் சொல்லிக்கொண்ட வடுகர்கள், 'தாம் தீம்' என ஆரியக்கூத்தாடியது அந்த நாள். அவர் வழிக் கன்னடரும் தெலுங்கரும், திராவிடக் கருத்தியல் என்னும் 'ஆரிய எதிர்ப்புக்' கொள்கையை நட்டுத் தமிழர் நெஞ்சங்களை ஒரு கள்ளிக்காடாக ஆக்கியுள்ளதோ இந்த நாள்! இதனால், இவ் வடுகரின் பஞ்சோந்தித் தனமே ஒரு பெரிய புதிராகும். வந்தேறி வடுகர்கள், தமிழரின் தலைகளில் எவ்வாறெல்லாம் மிளகாய் அரைத்துள்ளனர் பார்த்தீர்களா?!

## தமிழரும் வடுகரும்
## சண்டையிட்ட பாரதப் போர்!

தமிழர்க்கும் வடுகர்க்கும் இடையில் மூண்ட இனப்போரே மாபாரதப் போர் எனக் கருதுவதற்கான நல்ல கொளுவுகள் உள்ளன.

---

"....................ஆரியர்
பிடிபயின்று தரூஉம் பெருங்களிறுபோலத்"[47]

www.tamilarangam.net



மாபாரதக் கதையில் வரும் பாண்டவரையும் பாண்டியரையும் மு. இராகவையங்கார் போன்றோர் இணைத்தே காட்டிவந்துள்ளனர். சிங்களர்கள், பாண்டியரைப் 'பாண்டு' என்றே அழைத்துவந்தனர். சிங்களரின் *மகாவம்சம்*, விக்கிரம பாண்டியனை 'விக்கிரம பாண்டு' என்றே குறிப்பிடும்.[48] பாண்டிய அரசைக் கைப்பற்றித் தன் படைத்தலைவனான இலங்காபுரனின் வாயிலாகப் படையாட்சி நடத்திய சிங்கள அரசன் பராக்கிரமபாகு, 'பாண்டு விசயன்' என்னும் பட்டத்தைச் சூட்டிக் கொண்டதுடன், 'பாண்டு விசயம்' என்னும் ஊரையும் அமைத்தான்.[49] இந்தப் பின்னணியிலேயே பாண்டுவுக்கும் பாண்டியனுக்கும் இடையிலான தொடர்பை அலச வேண்டும். ஆனால், 'பாண்டு' என்னும் பெயரே 'பாண்டியன்' என்னும் கூற்று, ஒரு தலைகீழ்ப் பாடமாகும். 'பண்டு' என்னும் தமிழ்ச்சொல்லிலிருந்தே 'பாண்டியன்' என்னும் பெயர் வந்தது என்பது கால்டுவெல் ஐயரின் கருத்து.[50] ஆனால்,

பள் — பண்டு — பண்டி — பாண்டி = எருது, காளை
பாண்டி — பாண்டில் = காளையன், வயவன் (வீரன்)

எனப் பாண்டியன் என்னும் சொல்லுக்குப் பாவாணர் வேர் காட்டுவார்.[51]

இப் பாண்டியர்கள் ஐந்து கிளைக்குடிகளாகப் பிரிந்திருந்தனர். சேரர் அரசர்குடியில் பொறையர், சேரல் என்னும் இரு பெரும் பிரிவுகள் இருந்ததைப் போன்றே, பாண்டியர், கவுரியர், மாறர், வழுதியர், செழியர் என்னும் ஐம்பெரும் கிளைகளைக் கொண்டதே பாண்டியர் குடியாகும். இதனால், இப் பாண்டியரைப் பஞ்சவர் என்றனர்.[$] அதியர்கோன் 'அதிகன்' எனவும், உதியர்கோன் 'உதியன்' எனவும் அழைக்கப்படுவதைப் போல் பஞ்சவர்கோன் என்பவன் 'பஞ்சவன்' ஆனான்.

அப்பளம் என்பது மலையாளத்தில் அப்படம் — பப்படம் என்றானதைப் போல,

ஐந்து — அஞ்சு — பஞ்சு — பஞ்ச்சு — பஞ்ச்சன் — பஞ்சமன்
ஒ. நோ: அஞ்சமன் — பஞ்சமன் (பாண்டியன்)

அஞ்சவன்—பஞ்சவன் = ஐஞ்சிற்றரசரைக் கொண்டு ஆண்ட பாண்டியன் ஆனது. இது பாவாணர் சொல்லும் சொல்லியல் விளக்கமாகும்.[56]

---

$ "இளையது ஆயினும் கிளைஅரா எறியும்
அருநரை உருமின் பொருநரைப் பொறாஅச்
செருமாண் பஞ்சவர் ஏறே நீயே!"[52]

"பணிவில் உயர்சிறப்பின் பஞ்சவன் கூடல்"[53]

"பழியொடு படராப் பஞ்சவ..."[54]

"வானவர்கோன் ஆரம் வயங்கியதோள் பஞ்சவன்தன்
மீன் கொடிபாடும் பாடலே பாடல்"[55]

www.tamilarangam.net



'கவவு + உரியர்'[i] எனக் 'கவுரியர்'[ii] என்னும் சொல்லைப் பிரித்தால், 'தழுவுவதற்கு உரியவர்' எனப் பொருளாகும். மாறுபட்டவர் என்னும் பொருளிலோ, குற்றம் செய்தாரை ஒறுப்பவன் என்னும் பொருளிலோ, 'மாறன்' என்னும் பெயர் பாண்டியர்க்கு வந்தது.[61] 'வழுத்து' என்றால் 'புகழ்' என்றாகும். 'புகழத்தக்கவன்' என்னும் பொருளில் 'வழுதி' என்னும் பெயர் வந்தது. 'செழுமை' என்னும் சொல் அடிப்படையில் 'செல்வவளம் மிக்கவன்' என்னும் பொருளில் 'செழியன்' என்னும் பெயர் வந்தது.[62]

வியாசரின் பாரதம்,

"அவன் (அருச்சுனன்) ஓர் ஆண்டு முழுவதும் அதற்குமேல் ஒரு மாதமும் காட்டில் வாழ்ந்து 'தீர்த்த யாத்திரை' செய்தபின், நாக கன்னிகையையும் பாண்டியனின் மகளையும் அடைந்து, அவர்களுடன் வாழ்ந்துவந்தான்"[63]

எனக் குறிப்பிடும். ஐவரான பாண்டவரில் ஒருவனான அருச்சுனனின் பெயரை மருதன் எனப் பாவாணர் தமிழ்ப்படுத்துவார்.[64] ஒருகால் பாண்டியரின் தலைநகராயிருந்த மணவூரை மணலூர் எனத் திரித்து அதை வேண்டுமென்றே பாண்டியனின் தலைநகரான 'சிக்காதாபுரி' என வடமொழியாளர்கள் மொழி பெயர்த்துள்ளதைப் பாவாணர் அம்பலப்படுத்துவார்.[65] அருச்சுனன் பாண்டியனின் மகளை மணக்கும் முன்பே, அவனது மாமனுக்குப் பாண்டியன் என்னும் பெயர் இருந்ததையும் அவர் சுட்டிக்காட்டுவார்.[66]

பாண்டியர்க்கும் பாண்டவர்க்கும் இடையிலான ஒற்றுமைகளில் ஒன்று, அவர்கள் இருவருமே திங்கள்குலத்தவர் எனச் சொல்லப்படுவதேயாகும்.

"பாரதத்திற் சொல்லப்படும் திங்கள் மரபாகிய பரதகுலம் பழம் பாண்டியக் கிளையும், இராமாயணத்திற் சொல்லப்படும் கதிரவக் குலம் (சூரிய வமிசம்) பழம் சோழக் கிளையும் ஆகும்"[67]

என்பது பாவாணரின் கருத்து. இதையடுத்து,

"இராமன் சோழர்குடியைச் சேர்ந்தவ னென்றும், வடநாட்டுத் திரவிடனென்றும், ஆரிய இனத்தானல்லனென்றும், அறிதல் வேண்டும்"[68]

எனப் பாவாணர் கூறுவதையும் கருத்தில்கொள்ள வேண்டியுள்ளது.

---

[i] "கவவு அகத்திடுமே"[57]

[ii] "..............................தெனாஅது
வெல்போர்க் கவுரியர் நன்னாட்டு..."[58]

"நேமியுய்த்த நேஎ நெஞ்சின்
தவிரா ஈகைக் கவுரியர் மருக!"[59]

"வென்வேற் கவுரியர் தொல்முது கோடி
முழங்குஇரும் பௌவம் இரங்கும் முன்துறை

www.tamilarangam.net



"பகவற் கீதை கண்ணபிரானாற் சொல்லப்பட்டதன்று; பத்துத் தோற்றரவு வகுப்பும் அத்துவைதம் என்னும் இரண்டன்மைக் கொள்கையும் தோன்றிய பின்னரே, ஒருவரால் இயற்றப்பட்டு மேன்மேலும் விரிவாக்கப்பட்டு வந்திருத்தல் வேண்டும்"[69]

எனப் பாவாணர் மேலும் கூறுவார்.

இவை யாவும் பாரதப் போரில் பங்கெடுத்த பாண்டவருக்கும் கௌரவருக்கும் படையினருக்கு அளிக்கப்படும் பெருஞ்சோறு அளித்த பெருஞ்சோற்று உதியன் சேரலாதனைப்பற்றிப் புறநானூற்றில் வருகின்ற செய்தியைத் தழுவி எழுந்த கருத்துகளாகும்.

'அசையும் தலையாட்டத்தை அணிந்த குதிரைகளையுடைய பாண்டவர்மேல் சினங்கொண்டு நாட்டையே கைப்பற்றிய கவுரவராகிய நூற்றுவர் பொருது அழிந்தபோது, பெருஞ்சோறாகிய உணவைப் பெருமளவில் மட்டின்றிக் கொடுத்தவனே!' எனப் பொருள் படும்

"அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத்து ஒழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!"[70]

என்னும் புறநானூற்றுப் பாடல் வரிகள் அச் செய்தியைச் சொல்கின்றன.

'பஞ்சவர்' எனப்பட்ட பாண்டியரின் ஐம்பெரும் கிளையினரை ஐவர் எனக் குறிப்பதுடன், அவர்களை நிலம், நீர், விசும்பு, வளி, தீ ஆகிய ஐம்பூதங்களுடனும் இப் பாடல் ஒப்புமைப்படுத்துகின்றது; பொறுமை, சூழ்ச்சி, வலிமை,(பகை அழிக்கும் ஆற்றலான) தெறல், கொடைமை ஆகிய ஐந்து பண்புகளுடனும் உவமைப்படுத்துகின்றது.

இதே செய்தியை,

"ஓர்ஐவர் ஈரைம் பதின்மர் உடன்றெழுந்த
போரில் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன்"[71]

எனச் சிலப்பதிகாரம் உரைக்கின்றது.

இந்தப் பாடல்களில் வருகின்ற ஈரைம்பதின்மரான நூற்றுவர்கள், சிலப்பதிகாரத்தில் வரும் நூற்றுவர் கன்னரைக் குறிப்பதாயின், அஃது ஆந்திரப் (சாதவாகன) பேரரசனாயிருந்த முதலாம் சிறீ சதகர்ணியைக் குறிக்காதோ எனத் தயங்கித் தயங்கி அடிப்போடுவாரும் உண்டு.

---

வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
பல்வீழ் ஆரம்..."[68]

www.tamilarangam.net



கி. மு. 230ஆம் ஆண்டளவில் சிமுகன் என்பவன் ஆந்திரப் (சாதவாகன) பேரரசை நிறுவியதாகத் தொன்மங்கள் கூறுகின்றன.[72] கடைசி மோரியர் அல்லது முற்காலச் சுங்க அரசகுடியினரின் காலத்திற்கும் கி. மு. இரண்டாம் நூற்றாண்டிற்கும் உரியதெனப் பியூலரால் (Bühler) கருதப்படும் இரண்டாம் கன்னரன் (கி. மு. 207-கி. மு. 189) என்னும் ஆந்திரப் (சாதவாகன) பேரரசனால் நாசிக்கில் வெட்டப்பட்ட கல்வெட்டொன்று இதை உறுதிப்படுத்துகின்றது.[73] கண்ணன் என்னும் தூய தமிழ்ப் பெயரே கன்னடத்தில் 'கன்னரன்' என்றும், சங்கதத்தில் 'கிருஷ்ணன்' என்றும் வழங்கும். அக் கண்ணனின் (கன்னரனின்) மருகனின் பெயர் சிறீசதகர்ணி.[74] இச் சதகர்ணி அக் கண்ணனை அடுத்து ஆட்சிக்கு வந்தான். இவனைத் 'தக்காணத்தின் பெருங்கோ' எனக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.[75] சதகர்ணி என்னும் பெயரே தமிழில் 'நூற்றுவர் கன்னர்' எனப்பட்டது. இதனால், கண்ணனின் மருகனே நூற்றுவர் தலைவனான துரியோதனன் என்னும் பாரதக் கதையின் கூற்று, இச் செய்தியுடன் பொருந்துகிறது.

இந் நூற்றுவர் கன்னருக்கு அவரது அம்மானான கண்ணனே (கன்னரனே) எதிராகத் திரும்பிப் பாண்டியரின் பக்கம் சேர்ந்திருந்தால்தானே, அவன் அப் பாண்டியரை நூற்றுவர் கன்னருடன் மோத வைத்திருக்க முடியும்? அத்தகைய போர், அந் நூற்றுவர் கன்னரின் தலைமையிலான ஆந்திரருக்கும் (சதவாகனருக்கும்) பாண்டியருக்கும் இடையில் மூண்டதைப் பற்றிய குறிப்பு யாதும் இதுவரை கிடைத்தில.

மாபாரதக் கண்ணன் இடையர் குலத்தவன். நூற்றுவர் கன்னரின் அம்மானான கண்ணனும் (கன்னரனும்) இடையர் குலத்தவனாகவே இருந்திருக்க வேண்டும்.

இடையர்க்கு வழங்கிய பெயர்களில் ஒன்று 'அண்டர்' என்பதாகும்.[76] 'அண்டர்' என்றால் 'வானோர்', 'பகைவர்' என்றும் பொருள்படும். பதிற்றுப்பத்தில் வரும் அண்டர்கள் முல்லைநில மக்கள்; இதனால், அவர்கள் இடையர்கள்; குறும்பர்கள். அண்டர்கள் வடுக இடையர்களாக இருந்திருக்க வேண்டும். இவர்கள் தமிழகத்தின் வடவெல்லையின் வடக்கே இருந்தவராய், தமிழரசர்களுக்கு ஓயாமல் தொந்தரவு கொடுத்துவந்தவர்கள். குறும்பரின் தொல்லை பொறுக்க மாட்டாத பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர மன்னன், பிற நாடுகளுக்குச் சிதறி ஓடும்படி இந்த அண்டரை அடி அடியென அடித்து விரட்டினான்.[77] இவ்வாறு விரட்டியடிக்கப்பட்ட அண்டர்களான வடுக இடையர்கள், மோரியரின் கூலிப்படைஞராக இருந்தனர்; பின்னர் தோன்றிய அண்டிரர் அரசே ஆந்திரப் (சாதவாகன) பேரரசானது போலும். இந்த ஆந்திர அரசின் இரண்டாவது அரசனாகிய கண்ணனும் (கன்னரனும்), மாபாரதக் கண்ணனும் இடையர்கள் என்னும் அளவிலும் ஒத்துப்போகின்றனர். ஆயினும், வடுகக் கண்ணனும் மாபாரதக் கண்ணனும் ஒத்திராத நிலைகளும் உண்டு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெருஞ்சோற்று உதியன் சேரல் பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் இடையில் பதினெட்டு நாட்கள் நடந்த போரில் நேரடியாகவே பெருஞ் சோறு இட்டதாகப் புறநானூற்றின் இரண்டாவது பாடல் கூறு கின்றது. ஆனால்,

"மறப்படைக் குதிரை மாறா மைந்தின்
துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை..."[78]

என்னும் மாமூலனாரின் அகநானூற்றுப் பாடல் வரிகளுக்கு, 'அப் பாரதப் போரில் மடிந்த முன்னோர்க்கு ஆண்டுதோறும் செய்யும் நினைவுக்கடனாகவே அவன் பெருஞ்சோறு இட்டான்' எனச் சிலர் பொருள் கொள்வர்.[79]

ஆயினும், 'வீரம் பொருந்திய குதிரைப்படையுடனும் புறமுதுகு காட்டாத வலிமையுடனும் நல்ல புகழுடன் விளங்கிவந்த துறக்க மடைந்த தம் முதியோரின் நினைவாகச் செலுத்தும் பலியாக உதியன் சேரலாதன் அவர்களுக்குப் பெருஞ்சோறு படைத்த காலத்தில்...' என் பதே அவ் வரிகளுக்கான உண்மைப் பொருளாகும்.

"நாரதனை மூவுலகு மூலாவி (திரிலோக சஞ்சாரி) என்றது
சேர சோழ பாண்டிய நாடுகள் பற்றியே"[80]

என்பது பாவாணரின் கருத்தாகும். ஆயினும், சேர, சோழ, பாண்டிய ராகிய தமிழ் மூவேந்தர்க்கு இன்ன முனிவர் வழியில் பிறந்தவன் என வடுகர் கூறும் முனிவர் கோத்திரம் இல்லை. குடிவழியை மட்டுமே அறிந்தவர்கள் அவர்களாவர்.

மோரியரின் ஆட்சியின் தொடக்கக் கால நிகழ்வையும், அம் மோரியர்க்கு முந்தைய நந்தரின் பெருஞ்செல்வத்தையும் பற்றிப் பாடும் வரலாற்றுப் பார்வை மிக்க மாமூலனாரின் இப் பாடல், பாரதப் போரில் சண்டையிட்ட இரு சாரார்க்கும் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் சோறிட்டான் என்றே பொருள்படும்.

கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான் என்னும் சேர அரசன் பாடிய அகநானூற்றுப் பாடல், 'பல்லான் குன்று என்னும் மலைக் குன்றின் நிழலில், நல்ல ஆநிரை மந்தைகளையுடைய குழுமூர் என் னும் இடத்தில் பெருஞ்சோறிட்டபோது இருந்த உதியன் சேரலா தனின் அடுக்களையைப் போல அருவி ஆரவாரித்து இறங்கிய பெரிய பக்கமலையைப்'பற்றிக் குறிப்பிடுகின்றது.

"பல்லான் குன்றில் படுநிழற் சேர்ந்த
நல்ஆன் பரப்பின் குழுமூர் ஆங்கண்
கொடைக்கடன் என்ற கோடா நெஞ்சின்
உதியன் அட்டில் போல ஒலியெழுந்து
அருவி ஆர்க்கும் பெருவரைச் சிலம்பின்"[81]

www.tamilarangam.net



என்பதே அதன் வரிகளாகும். இவருக்கும் நூற்றுவருக்கும் இடையில் நடந்த சண்டையில் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் பெருஞ் சோறிட்ட இடம் குழுமூர் என இப் பாடல் கூறும். இக் குழுமூர் இன்றைய கோயம்புத்தூரையே குறிக்குமென்பது பிராமணக் காழ்ப்பை அழுத்தமாகவே காட்டும் பி. தி. சீனிவாச ஐயங்காரின் கூற்று.[82]

இரண்டாம் நந்திவர்மனின் (கி. பி. 710-775) படைத்தலைவ னான உதயசந்திரனை நெடுவயல் முதல் குழும்பூர் வரையிலான ஏழு ஊர்களில் பாண்டியனின் படைகள் முறியடித்ததாக வேள்விக் குடிச் செப்பேடு கூறும். இந்த ஏழு ஊர்களும் இற்றைய தமிழகத்தின் எல்லைக்குள்தான் இருந்தனவாம்.* பாண்டவருக்கும் கௌரவருக்கும் இடையில் நடந்த சண்டை நடந்த குழுமூரும் வேள்விக்குடிச் செப் பேடு கூறும் குழும்பூரும் ஒன்றேயாயின், அச் சண்டை தமிழகத்தின் எல்லைக்குள்தான் நிகழ்ந்திருக்க வேண்டும்.

பாரதம் பாடிய பெருந்தேவனார் என்னும் கழக(சங்க)க் காலப் புலவர், நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, புற நானூறு, ஆகிய நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர். இவர் பாரதப் போரைப்பற்றிப் பாடியவர் என்பதை இவருடைய பெயரே காட்டும். பாரதப் போரைப்பற்றிய இவரது பாடலோ நூலோ கிடைத்திருக்குமாயின், மாபாரதக் கதையைப்பற்றி இன்று வழங்கும் செய்திகளிலான திருத்தல்களும் புரட்டல்களும் அடிபட்டுப்போய், உண்மை விளங்கியிருக்கும்.

இப் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனைச் சிலப்பதிகாரக் காலத்துச் சேரன் செங்குட்டுவனின் பாட்டன் எனக் கருதுவாருண்டு.[84] ஆனால், அவன் கருவூரேறிய ஒள்வாள் கோப்பெருஞ் சேரல் இரும் பொறையை அடுத்து ஆண்டானெனப் பிறர் காட்டுவர்.[85]

இச் சேரலாதனின் மகனே இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் எனப் பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்திற்குரிய பதிகம் கூறும். இவனது இளவலே பதிற்றுப்பத்தின் மூன்றாவது பத்துப்பாடும் பல்யானைச் செல்கெழு குட்டுவன். ஐம்பத்தெட்டு ஆண்டுகள் ஆட்சி புரிந்த அந்த இமயவரம்பனுக்குக் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல், கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன், ஆடுகோட்பாட்டுச் சேர லாதன் ஆகிய மூன்று மக்கள் இருந்தனர் என்பதைப் பதிற்றுப்பத்து ஐயமறக் காட்டும். கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்மீது கபிலர் காலத்தவரான பரணர் பாடியதுதான் பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்து.

இவ்வாறிருக்கையில், கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் இமயம் சென்று கல் கொணர்ந்து கண்ணகிக்குக் கோயில் எழுப்பிய சேரன்

---

* "செழும்புரவிப் பல்லவனைக்
குழும்பூரில் தேசுஅழிய
எண்இறந்த மால்களிறும்
இவுளிகளும் பல்கவர்ந்தும்""

www.tamilarangam.net



செங்குட்டுவனே பெருஞ்சோற்று உதியன் சேரலாதனின் பெயரான கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் எனச் சொல்வது பெரிய கால மயக்கமும் பிழையும் ஆகும். இடைக்காலச் சோழர்கள் சிலருக்கும் கூடக் கரிகாலன் என்னும் பெயர் இருந்தது. வேங்கியிலிருந்து வந்து சோழர் அரியணையையே கைப்பற்றிய முதற் குலோத்துங்கனான (கி. பி. 1070-1120) சளுக்கியவழி வடுகனுக்கும்கூடக் கரிகாலன் என்னும் பெயர் இருந்தது! கி. பி. 1051 முதல் 1063 வரையில் ஆண்ட இயல் சோழனுக்கும் (மனுநீதிச் சோழன் என்னும் இரண்டாம் இராசேந்திர னுக்கும்) கரிகாலன் என்னும் பெயர் விளங்கியது. இரண்டாம் இராச ராசனுக்கும் (கி. பி. 1146-73) கரிகாலன் என்னும் பெயருண்டு.[86] இத னால் இவர்களில் ஒருவனே கல்லணை கட்டிய கரிகாலன் என்னும் திருமாவளவன் எனச் சொல்ல முடியுமோ? அது போன்றே, கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்குரிய சேரன் செங்குட்டுவனைப் பெருஞ் சோற்று உதியன் சேரலாதனின் பெயரன் எனச் சொல்வதும் கூடப் பொருந்தாது.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கையில், தமிழரான பாண்டியர்க்கும், நூற்றுவர் கன்னர் தலைமையிலான வடுகர்க்கும் இடையில் நிகழ்ந்த பெரிய இனப்போரே பாரதப் போர் என்னும் கொளுவு வலுவாகவே கால்கொள்கின்றது. இந்தப் போர், பல்லான் குன்றத்துக்கு அடுத்த குழுமூரில் நடந்துள்ளது.

இச் செய்தி உண்மையாயின், பாரதப் போரைப் பற்றிய வரலாறு, பின்னால் வடுக வந்தேறிகளால் கண்டபடி திரித்துப் புரட்டி இட்டுக்கட்டப்பட்டிருக்க வேண்டும். தமிழரான பாண்டியர்க் கும் வடுகரான நூற்றுவர் கன்னருக்கும் இடையிலான போரே மாபாரதப் போர் என்பது மெய்ப்படுமாயின், வடுகப் பிராமணியம் திரித்துப் புரட்டியுள்ள வரலாற்றுக் குழப்படி ஓயும். இத் துணைக் கண்டத்து வரலாற்றையே அது புரட்டிப் போடும்.

இப்போது விளங்குகிறதா 'ஆரியர் யார் என்று'? இரண்டு நூற் றாண்டுகளாக ஆய்வாளர்களின் மண்டையைக் குடைந்து கொண் டிருந்த 'ஆரியர் யார்?' என்னும் கேள்வியும் புதிரும் இப்போது விடுவிக்கப்படவில்லையா? இதனால், அடித்துச் சொல்வோம்: "திராவிடர்தாம் ஆரியர்; ஆரியர்தாம் திராவிடர்; திராவிடர் அல்லாது வேறு ஆரியர் இல்லை!" வடுக இனம் வானளாவி எடுத்த இரண்டு பொய்த்தேர்கள்தான் — பொய்த் தோற்றங்கள்தான் — 'ஆரியர்', 'திராவிடர்' என்னும் கோலங்கள்! 'ஆரியத்' தவளைக்கும் 'திராவிட' எலிக்கும் இடையிலான இந்தக் கூடா உறவைக் கருதி, ஆரியத்திற்கும் திராவிடத்திற்கும் சேர்த்தே கல்லறை கட்ட வேண்டும். அப்போது தான், தமிழ்த் தேசியம் வானோங்கி வளரும்.

இவ் வரலாற்று மெய்ம்மைகளை எல்லாம் விளங்கிக்கொள் ளவோ — விளங்கிக்கொள்ள மறுக்கவோ — செய்து, செல்லாக் காசாகிப்

www.tamilarangam.net



போன திராவிடக் கருத்தியலுக்கு மண்டை கொடுத்து முட்டுத்தாங்குவதில் முரட்டுத்தனமாக அடம்பிடிப்பவர் எல்லாரும், அறிவில் கூழ் முட்டைகளாகவும், வந்தேறிகளுக்குப் பாய் விரிக்கின்ற கொத்தடிமைகளாகவும் பிழைப்புத்தேடிகளாகவும், முல்லைமாறிகளாகவுமே இருந்து கெட்டழியப் போவது உறுதி.

அக்கிரகாரம் என்னும் பிராமணக் குமுகப் பொருளியல் கட்டுமானத்தை ஆக்கிய வடுகர்கள், அதைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்து தமிழர் வாழ்வியலின்மீது திணித்துக் கெடுத்த கதையை இனிக் காண்போம்.

## குறிப்புகள்

1. *இதற்கான குறிப்புகள் நூல்கள்:*
*அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை;*

R. D. Banerji, *Prehistoric Ancient and Hindu India*, Blackie & Son (India) Ltd, 1950;

*கா. அப்பாத்துரை, தென்னாட்டுப் போர்க்களங்கள், அலமேலு நிலையம், சென்னை, 1971;*

K. A. Nilakanta Sastry, *A History of South India— From Prehistoric Times to the Fall of Vijayanagar*, Oxford University Press, 1984;

K. A. Nilakanta Sastri, *The Côlas*, Univerity of Madras, Madras, *1984*.

*டாக்டர் கே. கே. பிள்ளை, தமிழக வரலாறு — மக்களும் பண்பாடும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1977.*

*டாக்டர் ஏ. சுவாமிநாதன், பல்லவர் கால வரலாறு, மோகன் பதிப்பகம், சென்னை-5, 1981.*

N. Subrahmanian, *History of Tamilnadu (to A. D. 1336)*, Ennes Publications, udumalaipettai, 1990.

2. *குறுந்தொகை 75:3-4.*
3. R.D.Banerji, *Prehistoric Ancient and Hindu India*, p 117.

4-5. *Vâlmîki Râmâyana*, Kisk. Kând. 41.2 and 42.13 quoted by P. T. Srinivas Iyengar, *History of the Tamils, From the Earliest Times to 600 AD.*, Asian Educational Services, New Delhi, 1982, p 52-53.

6. *Vâlmîki Râmâyana*, quoted by P. T. Srinivas Iyengar, *History of the Tamils*, p 53

7. R. D. Banerji, *Prehistoric Ancient and Hindu India*, p 67.
8. R. D. Banerji, *Prehistoric Ancient and Hindu India*, p 68.
9. R. D. Banerji, *Prehistoric Ancient and Hindu India*, p 71.

www.tamilarangam.net



10. R. D. Banerji, *Prehistoric Ancient and Hindu India*, p 72.

11. Pargiter, *Dynasties of the Kali Age*, quoted by P.T. Srinivas Iyengar, *History of the Tamils*, p 140.

12. ஞா. தேவநேயன் (பாவாணர்), *தமிழர் வரலாறு*, நேசமணி பதிப்பகம், காட்டுப்பாடி விரிவு (வ. ஆ), 1972, பக்கம் 203.

13. ஞா. தேவநேயன் (பாவாணர்), *தமிழர் வரலாறு*, ப 204.

14. Dr. K. Gopalachar, *Early History of the Andhra Country*, University of Madras, 1976, pp 124*ff*.

15. *ibid*, p 203.

16-17. Turnour, *Mahâwanso*, p 21; *J.A.S. B.* v2 (Faulkes, *J.R.A.S.*, 1885, p 209) quoted by P. T. Srinivas Iyengar, *History of the Tamils*, p 325-26.

18. T.V.Mahalingam, *Early South Indian Palaeography*, University of Madras, 1974, p 167.

19 R. D. Banerji, *Prehistoric Ancient and Hindu India*, p 92

20. R. D. Banerji, *Prehistoric Ancient and Hindu India*, p 96

21 R. D. Banerji, *Prehistoric Ancient and Hindu India*, p 114.

22. ஞா. தேவநேயன் (பாவாணர்), *தமிழர் வரலாறு*, ப 226.

23-25.R. D. Banerji, *Prehistoric Ancient and Hindu India*, pp 117-18.

26-27 K. A. Nilakanta Sastry, *A History of South India —From Prehistoric Times to the Fall of Vijayanagar*, p p 110 and 101.

28. *மணிமேகலை* 22:25-39.

29. Syed Siraj Ul Hassan, *Castes and Tribes of HFH the Nizam's Dominions*, Asian Educational Services, New Delhi, (First Published 1920), 1989, pp 418-19.

30. Edgar Thurston & K. Rangachari, *Castes and Tribes of Southern India*, Vol IV, Asian Educational Services, Madras, 1987 (First Published 1909), pp 301-03.

31. கா. அப்பாத்துரை, *தென்னாட்டுப் போர்க்களங்கள்*, பப 45.

32. கா. அப்பாத்துரை, *தென்னாட்டுப் போர்க்களங்கள்*, பப 43.

33. K. A. Nilakanta Sastry, *A History of South India — From Prehistoric Times to the Fall of Vijayanagar*, p 100.

34. டாக்டர் ஆ தசரதன், *வலங்கைச் சான்றோரும் சோழரும் (தமிழ்க் கதைப்பாடல் சுவடிகளில் வரலாற்றாய்வு)*, தமிழ் ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையம், சென்னை-41, 1996, ப 44.

35. டாக்டர் ஆ தசரதன், *வலங்கைச் சான்றோரும் சோழரும்*, ப 44.

36. டாக்டர் ஆ தசரதன், *வலங்கைச் சான்றோரும் சோழரும்*, ப 45.

37. ஞா. தேவநேயன் (பாவாணர்), *தமிழர் வரலாறு*, ப 231.

38. *அகநானூறு* 336:19-22.

39. *நற்றிணை* 170:6-8.

40. *அகநானூறு* 396:16-19.

www.tamilarangam.net



41. அகநானூறு 398:18-19.

42. சிலப்பதிகாரம் 23:24:14-15.

43. V. A. Smith, *Early History of India*, quoted by P. T. Srinivas Iyengar, *History of the Tamils*, p 324.

44. K. A. Nilakanta Sastry, *A History of South India — From Prehistoric Times to the Fall of Vijayanagar*, p 92.

45. டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி, சங்க காலச் சிறப்புப் பெயர்கள், ப 372.

46. குறுந்தொகை 7:3-4.

47. அகநானூறு 276:9-10.

48. கா. அப்பாத்துரை, தென்னாட்டுப் போர்க்களங்கள், ப 228.

49. கா. அப்பாத்துரை, தென்னாட்டுப் போர்க்களங்கள், ப 256.

50. டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி, சங்க காலச் சிறப்புப் பெயர்கள், (இலக்கியச் சிறப்புப் பெயர்களும் குடிபற்றிய சிறப்புப் பெயர்களும்), பாரி நிலையம், சென்னை, 1980, பக்கம் 212.

51. ஞா. தேவநேயன் (பாவாணர்), வடமொழி வரலாறு, நேசமணி பதிப்பகம், காட்டுப்பாடி விரிவு (வ. ஆ), 1967, ப 203.

52. புறநானூறு 58:6-8.

53. பரிபாடல், திரட்டு 2.:46.

54. சிலப்பதிகாரம் 20:32.

55. சிலப்பதிகாரம் 29: வள்ளைப்பாட்டு 8-9.

56. ஞா. தேவநேயன் (பாவாணர்), வடமொழி வரலாறு, ப 289; தமிழ் வரலாறு, நேசமணி பதிப்பகம், காட்டுப்பாடி விரிவு (வ.ஆ.), 1967, ப 57.

57. தொல்காப்பியம்: சொல்லதிகாரம் 367.

58. அகநானூறு 342:4-5.

59. புறநானூறு 3:4-5.

60. அகநானூறு 70:13-16.

61. டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி, சங்க காலச் சிறப்புப் பெயர்கள், ப 222.

62. டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி, சங்க காலச் சிறப்புப் பெயர்கள், ப 222.

63. இராமாயணம், ஆதிபர்வம், அம்சாவதருண பர்வம், படலம் 64 பற்றி மு. இராகவையங்கார், மேற்கோள்: டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி, சங்க காலச் சிறப்புப் பெயர்கள், ப 214.

64-65. ஞா. தேவநேயன் (பாவாணர்), தமிழர் வரலாறு, ப 200.

66. ஞா. தேவநேயன் (பாவாணர்), தமிழ் வரலாறு, ப 43.

67. ஞா. தேவநேயன் (பாவாணர்), தமிழ் வரலாறு, ப 41.

68. ஞா. தேவநேயன் (பாவாணர்), தமிழர் வரலாறு, பப 203-04.

69. ஞா. தேவநேயன் (பாவாணர்), தமிழர் வரலாறு, ப 201.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



70. *புறநானூறு 2:13-16.*

71. *சிலப்பதிகாரம் 29: ஊசல்வரி 6-8.*

72. K. A. Nilakanta Sastry, *A History of South India—From Prehistoric Times to the Fall of Vijayanagar*, p 93.

73. K. A. Nilakanta Sastry, *A History of South India—From Prehistoric Times to the Fall of Vijayanagar*, p 93.

74. R.D. Banerji, *Prehistoric Ancient and Hindu India*, p 117.

75. K. A. Nilakanta Sastry, *A History of South India—From Prehistoric Times to the Fall of Vijayanagar*, p 94.

76. *ஞா. தேவநேயன் (பாவாணர்), தமிழர் வரலாறு, ப 282.*

77. *பதிற்றுப்பத்து 71:9-24)*

78. *அகநானூறு 233:6-9.*

79. P. T. Srinivas Iyengar, *History of the Tamils from the Earliest Times to 600 AD*, Asian Educational Services, New Delhi, 1982, p 493.

80. *ஞா. தேவநேயன் (பாவாணர்), தமிழ் வரலாறு, ப 42.*

81. *அகநானூறு 168:4-8.*

82. P. T. Srinivas Iyengar, *History of the Tamils*, p 493.

83. *பாண்டியன் நெடுஞ்சடையன் பராந்தகனின் வேள்விக்குடிச் செப்பேடுகள்: T. V. சதாசிவ பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை, 1977, சேர்க்கை பப 3-4.*

84. *டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி, சங்க காலச் சிறப்புப் பெயர்கள், ப 218.*

85. *வெ. சு. சுப்பிரமணியாச்சாரியார், கரிகாலர் மூவர், ஔவை நூலகம், சென்னை-1, 1958, ப 79.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அகரகாரப் பொருளியல்

அகரம் என்பது மருதநிலத்து ஊர். வடுகப் பிராமணரைக் கொண்டுவந்து தமிழர்நாட்டின் வளமான மருத நல்லூர்களைக் கொடையாக அளித்து அவ் வூர்களில் அவர்களைக் குடியமர்த்தியதை அகரமேற்றல் என்றனர்.[1]

முற்காலப் பல்லவர்கள், சங்கதத்திற்கு முன்னர் விளங்கிய பாகதமொழியையே ஆண்டுவந்தனர். அதனால், பிரமதேயத்தைப் பம்மதேயம் (Bamhadeyam) என்று பாகத (பிராகிருத) மொழியிலேயே அவர்கள் குறிப்பிட்டனர். ஆந்திரத்தின் மயிதவோலு, கொண்டமுடிச் செப்பேடுகள் அதைக் காட்டுகின்றன.*

அகரகாரம் என்ற சொல்வழக்கு நாயக்கர் காலத்தில்தான் பரவலானது.[3] பிராமணர் குடியிருப்பைக் குறிக்கும் 'அகரம்' என்னும் தூய தமிழ்ச்சொல்லே பிற்காலச் சோழர் காலத்தில் பரவலாக ஆளப் பட்டது. அகரம், நல்லூர்,[4] பிரமதேயம், சதுர்வேதிமங்கலம் ஆகிய பெயர்களே பிராமணரின் குடியிருப்பைக் குறிக்கப் பல்லவர் காலம் முதல் ஆளப்பட்டுவந்தன. நான்கு வேதங்களைக் கற்ற பிராமணர்கள் வாழ்ந்தவிடம் சதுர்வேதிமங்கலம். வடுகப் பார்ப்பனராகிய பிராம ணர்க்கும் தமிழ்ப் பார்ப்பாருக்கும் இடையிலான வேற்றுமை தெரி யாத நாட்டுப்புற மக்களின் வழக்கில் அது பார்ப்பாரப்பட்டி அல்லது பார்ப்பார்க்குறிச்சி என்றே வழங்கிவந்தது. பட்டிக்காட்டுப் பேதை மக்களுக்கு, வடுகப் பிராமணருக்கும் தமிழ்ப் பார்ப்பாரான வள்ளுவக் கணியருக்கும் இடையிலான வேற்றுமை தெரியவில்லை. அதனால், வடுக வந்தேறிப் பிராமணரையும்கூடப் 'பார்ப்பார்' என்றும் 'ஐயர்' என்றும் அழைக்கலாயினர். பிராமணரின் அகரமும்கூட அக்கால நாட்டுப்புற வழக்கில் 'பார்ப்பாரப்பட்டி' அல்லது 'பார்ப்பார்க்குறிச்சி' ஆனது.

எளிதில் விளங்க வேண்டும் என்பதற்காக 'அகரகாரம்' என்னும் சொல்லே இந் நூலில் ஆளப்படுகிறது.

கி. பி. 4ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் கருநாடகத்திலிருந்த கங்கநாட்டிலும் கடம்பர் நாட்டிலும் முற்கால நிலக்கிழமை (Earlier Feudalism) தோன்றி, கி. பி. 8ஆம் நூற்றாண்டு வரை நீடித்ததாம்.

---

* "etasa casa gâmasa Pâmtûrasa bammhadeya kâtuna parihâre vitarâma"

"Pâtûram ba(m)mhadeyam katuna etha nibhamdhâpehi"

எனக் கொண்டமுடிச் செப்பேடுகள் கூறுகின்றன.[2]

www.tamilarangam.net



இக்கால வடுகப் "புரட்சிகள்" விடும் கதை அது.[6] கருநாடகத்திற்கு வேண்டுமானால், அந்தக் கதை பொருந்தலாம். ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையில், தொல்காப்பியர் காலத்திலேயே நிலக்கிழமை வாழ்வியல் தோன்றிவிட்டது. தமிழரிடம் ஏற்கெனவே விளங்கிவந்த நிலக்கிழமைக் கட்டுமானங்களின்மீது அநாகரிகராய்ப் படையெடுத்து வந்த வடுக வந்தேறிகள் தாம் ஏந்திவந்த வடுகப் பிராமணியத்தைத் திணித்தனர். வடுகப் பார்ப்பனரே, 'பிராமணர்' என்பதால், அவ் வடுகப் பிராமணரைப் பெருமளவில் இறக்குமதி செய்து, தமிழகத்து நாட்டுப்புறங்களில் அவர்களைக் குடியமர்த்தியதால் தோன்றிய புதிய சூழலில்தான் அகரகாரப் பொருளியல் வடிவெடுத்தது. வடுகப் படையெடுப்புகளால் வந்த அடிமை வாழ்க்கைக்குரிய புதிய நெறிகளும் பண்பாட்டுக் கூறுகளும் அகரகார வாழ்வியலுக்குக் கால்கோளிட்டன.

## காமாலைக் கண்

தமிழ்ப் பார்ப்பார்க்கு நிலக்கொடை வழங்குகின்ற வழக்கம் பதிற்றுப்பத்து கூறும் சேரர் காலத்திலேயே தோன்றிவிட்டது. ஆயினும், களப்பாள வந்தேறிகள் தமிழகத்தைக் கவ்வி மேவி நின்ற இருண்ட காலத்தின் விளிம்பில்தான், வடுகப் பிராமணரைப் பெருமளவில் இறக்குமதி செய்து, தமிழரிடமிருந்து பறித்த காணிகளை அவ் வந்தேறிகளுக்கு நிலக்கொடையாக அளிக்கும் வழக்கம் பெரிதாகவும் விரிவாகவும் ஆனது.

கழகக்காலப் பாண்டியனான பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, நற்கொற்றன் என்னும் தமிழ்ப் பார்ப்பனனுக்குத் தந்த நிலக்கொடையை[7] அருக(சைன)ராகிய கன்னடக் களப்பாளர்கள் பறித்துக் கொண்டதாகச் சொல்லிக் குருட்டுத்தனமான பிராமண எதிர்ப்புக் கோணத்தில் திராவிடக் கருத்தியலார் அதை உச்சிமேல் வைத்துப் போற்றுவர். இஃது ஒரு பெரிய சூழ்ச்சிப்பொறியாகும். நிலக்கொடையை இழந்தவன் ஒரு தமிழ்ப் பார்ப்பான். பறித்தவர்களோ, வந்தேறி வடுகப் படையெடுப்பாளர்கள்.

தான் வென்ற நாட்டைப் பிடித்தாளும் நோக்கமில்லாத எந்தவொரு படையெடுப்பாளனும், பிடித்த நாட்டைக் கொள்ளையடிப்பதையே குறியாகக் கொண்டு அந் நாட்டிலுள்ள ஊர்களையும் காணிகளையும் கழனிகளையும் நகரங்களையும் அழித்துச் சூறையாடிப் பேயாடுவான். அதன் வழியாக, மிகப் பெரிய பொருளியல் இழப்பை ஏற்படுத்துவான். ஆனால், மாற்றான் நாட்டைப் பிடித்து ஆள முற்படும் எவனும், பிடித்த நாட்டிலுள்ள வளமான கழனிகளையும் தோட்டம் துரவுகளையும் ஊர்களையும் கைப்பற்றிக் கொண்டு, அவற்றின் சொந்தக்காரரான மண்ணின் மைந்தரை அவர்தம் சொந்த நிலபுலங்களிலிருந்தே விரட்டியடிப்பான்; அவர்களின் உடைமைகளையெல்லாம் வலியப் பறித்துக் கொள்வான். தான் நடத்திய படை

www.tamilarangam.net



யெடுப்பின்போது நல்ல படைவீரம் காட்டியவர்க்கும் படைத் தலைவர் களுக்கும் தம் உற்றார் உறவினர்க்கும், தான் பிடித்த நாட்டின் மண்ணையும் பொருளையும் பங்கிட்டு அளிப்பான். நாடுபறி போரில் இஃது எங்கெணும் நடக்கும் உலகளாவிய ஓர் ஊழ்பாடுதான். 'ஆண்டை' என்றோ 'குடி' என்றோ பிடிபட்ட நாட்டினரை அவர்கள் அப்போது வேறுபடுத்திப் பார்த்திருக்க முடியாது.

இந் நிலையில், பிராமண எதிர்ப்பு என்னும் கோணத்தில் நற்கொற்றனின் காணிக்கொடையை அக் களப்பாளர்கள் பறித்தனர் என்று கூறுவதைவிட, அவனிடமிருந்த நிலம் நல்ல வளமானது என்னும் காரணத்தாலேயே அதைக் கைப்பற்றியிருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு.

## கன்னடன் பெற்றெடுத்த அகரகாரம்!

பாணர்களும் கங்கர்களுமான வடுகரால் தமிழரிடமிருந்து முதன்முதலில் கவரப்பட்ட தமிழ்ப்பகுதியே இன்றைய கருநாடகத்தின் கோலார் மாவட்டம். கொங்குநாட்டின் மேற்குப் பகுதியான பழைய மைசூர் வட்டகையைக் கைப்பற்றிய வடுகர்களில் ஒரு குடியினர், தங்களையும் 'கொங்கர்' என்றே கூறிக்கொண்டனர். பின்னர், 'கொங்கர்' என்னும் தமிழ்ப்பெயரை மெல்லக் 'கங்கர்' எனத் திரித்துச் சங்கதப்படுத்தினர். 'கொங்குணி', 'கொங்கணிவர்மன்' முதலான பெயர்களைக் கங்க அரசர்கள் கொண்டிருந்ததே அதை மெய்ப்பிக்கும். தமிழகத்திலிருக்கும் கொங்கூர் என்னும் தாராபுரமே கங்கரின் முதல் தலைநகரமாக இருந்தது.[8] பின்னர்க் குவலாளபுரம் என்னும் கோலாருக்கு அது மாற்றப்பட்டு, அடுத்து மைசூருக்கு அருகிலுள்ள தழைக்காட்டிற்கு இடம் பெயர்ந்தது.

கி. பி. 4ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றிய கங்கர் ஆட்சி, கி. பி. 999 வரையில் நீடித்தது.* கழக (சங்க)த் தமிழிலக்கியத்தில் வரும் கங்கன் என்னும் குறுநிலமன்னனின் வழிவந்தவர்களாகவும் இக் கங்கர்கள் இருந்திருக்கலாம்.

கோலார் மாவட்டத்தின் முள்வாயில் வட்டத்து முடியனூர்ச் செப்பேடு (கி. பி. 338) அம் மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட[10] கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் காலத்தால் முந்தியது. பாலாறு-தென்பெண்ணை ஆற்றிடைத்துறையிலான தமிழகத்தின் எல்லைப் பகுதியைப் பாணர்கள் ஆண்டுவந்தனர். பாணர் ஏழுரை இலக்கம் என்பது அவர்களின் நாட்டின் பெயர். இதில் ஆந்திர(சதவாகன)ரின் ஆட்சியிலடங்கியிருந்த ஆந்திரமண்டலத்திலிருந்த 12,000 ஊர்களும் கூட அடங்கியிருந்ததாக அக் கல்வெட்டு கூறுகிறது. பாணமண்டலம்

* இந்திய வரலாற்றிலேயே ஏறத்தாழ 6½ நூற்றாண்டுகளென மிக நெடுங் காலம் நீடித்த அரசக்குடி கங்கர்குடியே என்பர்.[9]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



7½ இலக்கம், ஆந்திர மண்டலம்-12,000 ஆகிய பகுதிகளைப் பாணர் குடியினர் ஆண்டுவந்ததாக வதுவல்லப மல்லதேவ நந்திவர்மனின் செப்பேடு கூறும். இந்த ஆந்திரப் பகுதியையே வடுக வழி-12,000 என்பர்.[11] இவ் வடுகவழியையே மயிதவோலு செப்பேடுகள் 'அந்த பாத' எனப் பாகதமொழியில்தான் குறிப்பிடுகின்றன.[12] அதைத்தான் 'ஆந்திரபாத' என்று உதயேந்திரம் செப்பேடுகள் சங்கதத்தில் குறிப்பிடுகின்றன.[13] இந்த வடுகவழியே உலக இடைகழி என்றும் கூறப்பட்டது.

"விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக இடைகழி அறைவாய் நிலைஇய
மலர்வாய் மண்டிலம்..."[14]

என்னும் புறநானூற்றுப் பாடல் வரிகள் அதற்கு நல்ல சான்று கூறுகின்றன.

## அண்டர் பாதை, பாணப்பாடி!

ஆந்திரநாட்டில் பல்லவர்கள் ஆண்ட பகுதியையும்கூடப் பாகதமொழியில் அந்தாபத (Amdhapata) என்றனர்.[15] 'அண்டர் பாதை' என்பதன் திரிபாக அஃது இருந்திருக்கலாம். பதிற்றுப்பத்தில் வரும்'அண்டர்'[16] என்னும் வடுகக்குடியின் பெயரே பின்னர் 'அந்தா' எனப் பாகதத்தில் திரிந்து, அடுத்து 'ஆந்திரர்' எனச் சங்கதத்தில் மருவியது என்பதே பொருந்தும்.

பாணர்கள்* ஆந்திர (சதவாகன) வல்லரசின்கீழ் குறுநிலமன்னர்களாயிருந்தனர்.[18] ஆந்திரத்திலிருக்கும் இந்துப்புர வட்டத்திலிருந்த பருளிநாட்டில் (இன்றைய பார்கியில்) இருந்த பாணர் என்னும் வடுகர்கள், கி. பி. 450ஆம் ஆண்டளவில் தமிழகத்திற்குள் புகுந்து பாணராட்டிரத்தை அமைத்தனர்.[19] முந்தைய தென்னார்க்காடு மாவட்டத்தின் மேற்குப் பகுதியே பாணராட்டிரம் எனப்பட்டது. 1956ஆம் ஆண்டில் தமிழகம் இழந்த சித்தூர் மாவட்டத்தின் மேற்குப் பகுதியும், வடவார்க்காட்டு மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியும், கருநாடகத்திலுள்ள கோலார் வட்டத்தின் கிழக்குப் பகுதியும், சேலம் மாவட்டத்தின் சில பகுதிகளும் உள்ளடங்கிய நிலப்பரப்பே பெரும் பாணப்பாடி. வடுகவழி மேற்கு என்றும், வடுகவழி பன்னீராயிரம் என்றும் அழைக்கப்பட்டது இந்தப் பெரும்பாணப்பாடியேயாகும். வடவார்க்காட்டு மாவட்டத்திலிருக்கும் காட்டுப்பாடியை அடுத்துள்ள வல்லம் என்னும் ஊரே அந்தப் பாணர்களின் தலைநகரமாகும்.[20]

---

* கருப்புத்துணியில் காளைச் சின்னம் பொறிக்கப்பட்ட கொடி அந்தப் பாணரின் கொடியென கி. பி. 961ஆம் ஆண்டுக் கன்னடக் கல்வெட்டு கூறுகின்றது.[17]

www.tamilarangam.net



## கொங்கக் கங்கர்; வடுகப் பாணர்

வடுகவழியாகவே வடுக வந்தேறிகள் அன்று தமிழகத்தின் மீது படையெடுக்கவும் ஊடுருவவும் செய்தனர். கொங்கு நாட்டின் ஒரு பகுதியைப் பிடித்த வடுகர்கள் தங்களையும்கூடக் 'கொங்கர்' எனக் கூறிக்கொண்டு காலப்போக்கில் 'கங்கர்' என்றானதைப் போன்றே, பாணர்நாட்டைப் பிடித்த வடுகர்கள் தங்களையும் பாணர் எனக் கூறிக்கொண்டனர். காலப்போக்கில் 'பா'வன்னாவை அடிவயிற்றிலிருந்து ஒலித்துப் பாணர் அல்லது பாணராசர் (Banas or Banarasas) ஆயினர்; அடுத்து 'வாணாதிராயர்' ஆயினர். தங்களை மாவலி வழியினரெனச் சொல்லிக்கொண்டனர்.

படைவீரத்திற்கும் படைத்தொழிலுக்கும்கூடப் பெரும்பாலும் நிலக்கொடை வழியாகவே கைமாறு செய்யப்பட்டது. பூசாரிப் பணி முதல் பரத்தைப்பணி வரையிலான அத்தனை பணிகளுக்கும் நிலக்கொடை வழியாகவே அரசனும் நிலக்கிழாரும் கைமாறு செய்தனர். போரில் பெரும்வீரம் காட்டியவர்க்கு மாராயம் என்னும் சிறப்பு செய்யப்பட்டது. பெரும்பாலும் நிலக்கொடையாகவே அம் மாராயம் வழங்கப்பட்டது. ஆனால், போரில் மடிந்த உழையருக்கு வாள்வாய்த்துக் கவிழ்தல் என்னும் சடங்கு செய்தனர். மாண்ட வீரனின் குடும்பத்துக்குக் காணி வழங்கப்பட்டது. நடுகல்லும் நடப் பட்டது.

"வருதார் தாங்கல் வாள்வாய்த்துக் கவிழ்தலென்று
இருவகைப் பட்ட பிள்ளை நிலையும்"[21]

எனத் தொல்காப்பியம் கூறும். 'தன்மேல் வரும் பகைவனின் கொடிப் படையை எதிர்த்து நிற்பது, தன் வாள் வலிமையால் பகைவரை வீழ்த்தித் தானும் வீழ்ந்துபடுவது ஆகிய இரண்டு பாகுபாடுகளை யுடைய போரில்...' என அவ் வரிகள் பொருள்படும்.

வாய்த்தல் என்பதற்கு 'சேர்தல்', 'நன்கமைதல்' எனப் பொருள் உண்டு. 'வாய்த்துவிட' என்பது வெல்வதையும் சிறப்பதையும் குறிக்கும். 'வாய்த்த' என்பது நிறைவேற்றத்தையும் விழுமத்தையும்கூடக் குறிக்கும். தலைகீழாதல், தலையிறங்குதல், குனிதல், நிலைகுலைதல், அழிதல் என்பன 'கவிழ்தல்' என்னும் சொல்லுக்கான பொருள்களாகும். 'கவிழ்ச்சி', 'கவிழ்வு' என்பனவும்கூடத் தலைகீழாக வைப்பதையே குறிக்கும்.

## வாள்வாய்க் கவிழ்ப்பு

போரில் மடிந்தவனின் வாளைக் கவிழ்த்து வழிபடுவதே 'வாள்வாய்த்துக் கவிழ்ப்பு' ஆகும். தொல்காப்பியம் தரும் குறிப்பால், தமிழரிடம் மிகத் தொன்மையிலிருந்தே வழக்கத்திலிருந்த வீரவழிபாட்டின் ஒரு கூறே அஃதாகும். இந்த வாள்வாய்க் கவிழ்ப்பே 'வாள் கவிழ்ப்பு' எனத் திரிந்து, பின்னர்க் கன்னடத்தில் 'பாள்களச்சு'

www.tamilarangam.net



(Balgalachu) என்றானது.[22] 'பாள்கழச்சு' என்றால் 'வாளைக் கழுவுதல்' என்று பொருள். வாள்வாய்க் கவிழ்ப்பு நிலக்கொடையைக் கல்நாட்டு என்றும் கங்கநாட்டில் வழங்கினர். தொல்காப்பியம் கூறும் வாள்வாய்க் கவிழ்தல் என்னும் மிகத் தொன்மையான வீர வணக்கச் சடங்கே 'பாள்கழச்சு' (Bâlagalachu) எனத் திரிந்து இடைக் காலம் வரையில் கன்னடக் கல்வெட்டுகளில் வருவதனால், அது வடுகர் தமிழரிடமிருந்து கற்ற வழக்கமே என்பது உறுதி.

இந்த வாள்வாய்க் கவிழ்ப்பைப் 'பெள்ளம்பரவி' என்றும் கோலார் மாவட்டத்துக் கல்வெட்டுகள் கூறுகின்றன. கோலார் மாவட்டத்திலுள்ள நுக்கனள்ளி என்னும் ஊரில் கண்டெடுக்கப்பட்ட நடுகல்லின்மீது கி. பி. 890ஆம் ஆண்டளவில் வெட்டப்பட்ட ஒரு கல்வெட்டில் "பெள்ளம்பரவி மா பாளகழ்ச்சு ஆகெ கொட்டது"* எனச் சொல்லப்படுகிறது.

மாவலி குலத்துப் பாண அரசன் மகாஜா என்பவனுடன் போரிடுகையில் அப் பாண அரசனின் படைகள் புலிக்குறிச்சியில் இருந்தன. நாக குத்தரசனை நெற்குன்ற நாட்டைத் தாக்கும்படி அங்கிருந்தே அவன் ஏவினான். அந் நாக குத்தரசன் அவ்வாறே தாக்கினான். வாளை உருவியவண்ணம் தன் குதிரையைத் திருப்பி எதிரிப்படைமீது பாய்ந்து பகைவர் பலரைக் கொன்று போட்ட அவன், பின்னர் தானும் மடிந்தான். இவ்வாறு வீரமரணம் அடைந்தமையால், அவனுடைய வாளை எடுத்துக் கழுவி வாள்வாய் கவிழ்த்தனர். அஃதாவது, வாளை நட்டு வழிபட்டனர். பினனர், அவனுடைய பிறங்கடையினர்க்கு வெள்ளம்பரவி என்னும் இறைநீக்கிய நிலக் கொடையை அளித்தனர். இதுவே அக் கன்னடக் கல்வெட்டுக் கூறும் செய்தி.

இக் கல்வெட்டில் வரும் நெக்குந்திநாடு என்பது நெற்குன்ற நாட்டையும், புலிக்குறுக்கி என்பது புலிக்குறிச்சியையும், குத்தரசன் என்பது குற்றரசனையும், 'பெள்ளம்பரவி' என்பது 'வெள்ளம்பரவி' என்னும் தமிழ்ச்சொல்லையும் குறிக்கும் என்பது தெளிவு. 'வெள்ளம் பரவி' என்னும் தமிழ்ச்சொல்லே கன்னடத்தில் 'பெள்ளம்பரவி' எனத் திரிந்துள்ளது. 'வெள்ளம்' என்பது நீரைக் குறிக்கும். 'பரவுதல்' என்பதற்குப் போற்றுதல், புகழ்தல், வணங்குதல் என்றெல்லாம் பொருள் உண்டு.

கி. பி. 780ஆம் ஆண்டுக்குரிய கோலார் மாவட்டத்துச் சீனி வாசபுர வட்டத்துக் கன்னடக் கல்வெட்டு, குளநெல்லூரைப் பிரபு மேரு என்னும் படைத்தலைவன் இறைநீக்கிப் 'பாள்கழச்சு'வாகத் தந்த தாகக் கூறுகிறது.[24]

---

* "Bellamparavi mâ bâlagalchu-âge kottadu", meaning "whereupon. washing his sword, they granted Bellamparavi for him..."[23]

www.tamilarangam.net



பெருமானடிகள் என்னும் கங்க அரசன் கங்கவாடி-6000 நாட்டைக் குவலாளபுரத்திலிருந்து ஆண்டுவந்தபோது, அவனது நாடு பல்லவர் குலத்து நுளம்ப[5] அரசனின் ஆளுகையின் கீழிருந்தது. பொம்பல்லம் உடையார் என்னும் வெங்கன், பாண அரசனோடு பொருது வீழ்ந்தான். இதனால், நுளம்ப அரசனின் இசைவைப் பெற்ற பெருமானடிகள் என்னும் அந்தக் கங்க அரசன், சூறூரை 'வாள்வாய்க் கழிப்பு' (பாளகழச்சு) நிலக்கொடையாகத் தந்தான். கோலார் மாவட்டத்திலுள்ள மடவளாகம் என்னும் ஊரிலுள்ள மூலேச்சரர் கோயில் குளத்துக்கு அருகிலுள்ள கி. பி. 890ஆம் ஆண்டையொட்டிய கன்னடக் கல்வெட்டு அதைக் கூறுகிறது.[26]

## மண்பறிப்பு மாராயம்

மேற்போந்த கல்வெட்டுகளில் வரும் ஊர்ப்பெயர்கள் எல்லாம் தமிழ்ப்பெயர்களாகவும் தமிழ்ப்பெயர்களின் திரிபுகளாகவும் இருப்பதால், கொங்குநாட்டின்மீது படையெடுத்து அதைப் பிடித்த அநாகரிக வடுகப் படையெடுப்பாளர்கள், தம்முடைய மண்கவர்புப் போரில் பங்கெடுத்தவர்களுக்கு அப் பகுதியில் தாம் பிடித்த தமிழர் நிலங்களைத் தம்மொடு வந்த வடுகப் படைஞர்க்கு மாராயமாகவும் 'வாள்வாய்த்துக் கவிழ்ப்பு' நிலக்கொடையாகவும் தந்து வடுகமயமாக்கினர் என்பது விளங்கும். படையூழியம் செய்ததற்காக உம்பளி அல்லது உம்பளிக்கை என்னும் இறையிலி காணிக்கொடையை அவ் வடுகர்கள் வழங்கினர்.

படைஞர்க்குத் தந்த கொடைநிலத்தையும் முற்றூட்டையும்* குறித்த 'உம்பளம்' அல்லது 'உப்பளம்' என்பதன் திரிபுதான் 'உம்பளி' என்னும் சொல்லாகும். உம்பள நிலக்கொடை, ஒரு முற்றூட்டு ஆகும். 'உம்பளம்' என்பது 'உப்பளம்' எனப் பொருள்படும். 'உம்பளம்' என்பதன் திரிபே 'சம்பளம்'. தொடக்கத்தில் உப்புதான் பொதுப்பண்ட மாற்றுச் செலாவணியாயிருந்ததை வைத்தே 'உம்பளம்' என்னும் சொல் தோன்றியது. ஆந்திர (சதவாகன) வல்லரசில், உப்புத் தொழில் அரசின் முற்றுடைமையாக இருந்ததைக் காண்க.[28]

இந்தப் பின்புலத்தை வைத்தே பிரமதேயம் அல்லது அகரகாரம் என்னும் சுரண்டல் கட்டமைப்பினுடைய தோற்றுவாயைக் காண வேண்டும். அக்கிரகார வாழ்வியல் கருக்கொண்டு உருத்தரித்துப் பிறப்பெடுத்த இடமே கருநாடகம்தான். கருநாடகத்திலிருந்த கடம்பர் நாட்டிலும் கங்கர்நாட்டிலும் பாணர்நாட்டிலும் கி. பி. 4ஆம் நூற்


---

5 கருநாடகத்தின் துமக்கூரும், சித்திரதுருகத்தின் பகுதிகளும், ஆந்திரத்திலிருக்கும் அனந்தபுர மாவட்டத்தின் பகுதியும் சேர்ந்து நுளம்பநாடாக இருந்தது.[25]

* முற்றூட்டைக் குறிக்கும் 'சர்வ்மானியம், என்னும் சங்கத (சமற்கிருத)ச் சொல், விசயநகர வந்தேறிகளின் காலத்தில்தான் பரவலானது.[27]

www.tamilarangam.net






வரைபடம் 8

றாண்டிற்கும் கி. பி. 7ஆம் நூற்றாண்டிற்கும் இடையில்தான் பிரம தேயங்கள் தோன்றின. அப் பிரமதேயங்கள் தொடக்கத்தில் தனிப் பிராமணருக்கு முற்றூட்டாகத் தரப்பட்டன.

கி. பி. 4ஆம் நூற்றாண்டில் கடம்பர்நாட்டை ஆண்டுவந்த மயூரசர்மனால் (~கி. பி. 325) கருநாடகத்தின் சிவமுக மாவட்டத்தி லுள்ள தாளகுண்டா என்னும் இடத்தில்தான் முதன் முதலாக ஓர் அகரகாரம் தோற்றுவிக்கப்பட்டது.[29] தன்னை ஒரு பிராமணன் எனச்

www.tamilarangam.net



சொல்லிக்கொண்ட கடம்ப* அரசன் மயூரவர்மன், காஞ்சிபுரத்துப் பிராமணர் அவனை ஒரு பிராமணன் என ஏற்றுக்கொள்ள மறுத்ததால் வெகுண்டே தன்னை ஒரு சத்திரியனாக அறிவித்துக் கொண்டானாம்.[30] கி. பி. 325ஆம் ஆண்டில் அம் மயூரவர்மனால் வடக்கிலிருந்து கடம்பநாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டு 'பிரமபோகங்கள்' வழங்கப்பட்ட பிராமணர்கள், உத்தரப் பிரதேசத்தின் பரெய்லி மாவட்டத்திலுள்ள அகிச்சத்திரம் (Ahichchatra) என்னும் ஊரைச் சேர்ந்தவர்களாம்.[31] கருநாடகத்தின் கரைவழியைச் சேர்ந்த துளுவப் பிராமணரும், மலைநாட்டுப் பிராமணரும் உத்தரப்பிரதேசத்திலிருக்கும் அகிச்சத்திரமே தங்களின் பிறந்தகம் என்பர். கங்கைக்கரையிலான அகிச்சத்திரத்திற்குக் கிழக்கேயுள்ள அயோத்தியே அவர்களின் இரண்டாவது தாயகமாம்.[32] அவ்விரு வடக்கத்திய நகரங்களுமே, திருப்பயணத்தலங்களாயிருந்தன.

## புலையர் தேயமே பொம்மர் தேயம்!

குடகும் எருமையூரும் (மைசூரும்), சேலம், கோவை மாவட்டங்களும் அடங்கியதே முற்காலக் கொங்குநாடு. 'குடகக் கொங்கரும்'[33] எனச் சிலப்பதிகாரம் கூறுவதைக் கொண்டு அதை அறியலாம். பின்னர் அது குடகொங்கு என்றும் குணகொங்கு என்றும் பிரிந்தது. அடுத்து, வடகொங்கு என்றும் தென்கொங்கு என்றும் பிரிக்கப்பட்டது. எருமையூர்நாட்டின் கிழக்குப்பகுதியே வடகொங்கு. இந்த வடகொங்கு நாடே கங்கர்நாடாகத் திரிந்தது.[34]

கங்கநாட்டிலிருந்த தொல்தமிழ்க்குடியினரான புலையர்கள் மெல்லக் கன்னடமயமாகி ஒலையர் (Holeyas) ஆயினர். தமிழ்ப் பண்பாட்டின் விளிம்பான பழைய மைசூர்ப் பகுதியிலும் கருநாடகத்தின் மலைநாட்டிலும் இந்த ஒலையர்கள் மிகப் பரவலாகக் காணப்படுகின்றனர். புலையரின் நாட்டைப் பிடித்த கடம்ப வடுகன் மயூரவர்மன், அத் தொல்குடி மக்களை அவர்தம் சொந்த மண்ணிலிருந்தே வேரறுத்து விரட்டினான். தான் பிடித்த அப் புலையர் மண்ணில் வடுகப் பிராமணரைக் கொண்டுவந்து குடியேற்றி 'பிரமதேயம்' என்னும் புதிய அமைப்பையும் வாழ்வியலையும் உருவாக்கினான். இவ் வரலாற்றுச் செய்தியைக் குறிப்பால் உணர்த்தும் மரபுக் கதைகள் உண்டு. அவற்றில் சிலவற்றை இனிக் காண்க!.

மழுவைக் கடலில் எறிந்ததால் வந்த நிலப்பரப்பைப் பரசுராமன் நாகர்களுக்கும் மச்சப் (Miachi) பிராமணருக்கும் அளித்தான். போலிப் பிராமணரான அவர்களை மீனவர்களும் ஒலையர்களும் ஓடவோட விரட்டியடித்தனர். கடம்ப அரசன் மயூரவர்மன் அந் நாட்டில் துளுவப் பிராமணரைக் குடியேற்றிய நாள் வரையில், அந் நிலத்தை ஒலையர்களும் மீனவர்களுமே ஆண்டுவந்தனர். துளுவப் பிராமணரின் குலவரலாறு இவ்வாறு கூறுகின்றது.[35]

---

* கடம்பரின் தலைநகரம் துளுநாட்டிலுள்ள வன்வாசி.

www.tamilarangam.net



குறவர் (கொறகர்) தலைவன் ஒருவன் மயூரவர்மனை அவனது நாட்டிலிருந்து விரட்டியடித்தான். மயூரவர்மனின் மாப்பிள்ளையான கோகரணத்து லோகாதிகன் அக் குறவர் தலைவனை விரட்டியடித்து, பின்னர் அகிச்சத்திரத்திலிருந்த வடக்கத்திய பிராமணரை வரவழைத்து, அவர்களை 32 ஊர்களில் குடியேற்றினான். இதுவும் ஒரு மரபுக்கதை.[36]

## அப்பன் தடுத்தான், மகன் கெடுத்தான்!

பரசுராமனால் பிராமணராக்கப்பட்டோரை விரட்டியடித்த ஒலையரிடமும் மீனவரிடமும் இருந்த நாட்டை மீட்க, மயூரவர்மன் போர் தொடுத்தான். பின்னர் அகிச்சத்திரத்திலிருந்த பிராமணர் பலரை வரவழைத்து அந் நாட்டில் குடியேற்றினான். இம் மயூரவர்மனையும் அவன் குடியேற்றிய பிராமணரையும், நந்தன் என்னும் ஒலையர் தலைவன் விரட்டியடித்தான். இந் நந்தனுக்கும் கோயில் தேவடியாள் ஒருத்திக்கும் பிறந்த சந்திரசயனன் என்பவனோ, தன் தந்தைக்கு நேர்மாறாகப் பிராமணரின் பச்சை அடிவருடியானான். தன் தந்தை விரட்டியடித்த பிராமணரை மீண்டும் அழைத்துவந்து, நாட்டின் ஆட்சியையும் அதிகாரத்தையும் அவர்களிடமே அவன் ஒப்படைத்தான் என்பது இன்னொரு கதை.[37]

அந்தச் சந்திரசயனன், ஒலைய மன்னனே அல்லன் என்றும், அவன் மயூரவர்மனின் வழிவந்தவன் என்றும், ஒலையரை வென்றவன் என்றும் இன்னொரு கதை சொல்கிறது.[38]

மேற்போந்த கதைகள் யாவும், தொல்தமிழரான புலையரை வடுகரான கடம்பர்கள் வீழ்த்தி, அவர்தம் மண்ணைப் பறித்த வரலாற்றைப் பற்றியனவாகும்.

கி. பி. 9ஆம் நூற்றாண்டுவரையில் தனியரசு நடத்திவந்த பாணர்களும்கூடக் கி. பி. 4ஆம் நூற்றாண்டிலேயே வடுகப் பிராமணர்களுக்குப் பிரமதேயங்களை உருவாக்கினர். ஆவணியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த பாண அரசன் நந்திவர்மனின் மகன் விசயாதித்த தேவனின் வழியில் வந்த வதுவல்லப மல்லதேவ நந்திவர்மன், கி . பி. 338ஆம் ஆண்டளவில் புதல்நாட்டு முடியனூர் என்னும் ஊரை 25 வடுகப் பிராமணர்க்குப் பிரமதேயமாக வழங்கினான்.[39]

பாணர்களும், கங்கர்களும் கடம்பர்களும் வடுகரே என்பதைக் கோலார் மாவட்டத்துக் கல்வெட்டுகள் காட்டுகின்றன.

## நுணமங்கலம் செப்பேடு

கோலார் மாவட்டத்தின் மாலூர் வட்டத்திலுள்ள நுணமங்கலம் செப்பேடு, ஒரு பாழடைந்த அருகனின் கோயிலில் கண்டெடுக்கப்பட்டது. இது கி. பி. 370ஆம் ஆண்டளவில் எழுதப்பட்ட சங்கதச்

www.tamilarangam.net



செப்பேடு. கொங்கணிவர்மனுடைய மகனே 'தத்தக சூத்திர'த்தை எழுதிய மாதவவர்மன். இவனது மகன் அரிவர்மன். அவனுக்கு மகனாகப் பிறந்தவனே குருக்களையும் மாடுகளையும் பிராமணர்களை யும் தொழுவதில் பெரும் ஈடுபாடு கொண்டு நாரணன் திருப்பாதம் பற்றி நின்ற விஷ்ணுகோபன். விஷ்ணுகோபனுடைய மகனான மாதவ வர்மன், காணிக்கைகள் பல்லாயிரம் தந்து வேள்வி பல நடத்தினான். பிராமணர்க்கு அறக்கொடை தந்தான்.[40] கோலார் மாவட்டத்தின் முள்வாயில் வட்டத்திலுள்ள ஆவணியில் இருக்கும் சத்ருக்னேசுவரன் கோயிலின் நிலவறையில் கி. பி. 360ஆம் ஆண்டளவில் வெட்டப்பட்ட கல்வெட்டும் அதே செய்தியைக் கூறுகின்றது.[41] விஷ்ணுகோபனின் மகனான மாதவனின் மகன்தான் அவிநீதன் என்னும் கொங்குணி. இக் கொங்குணி, கிருஷ்ணவர்மன் என்னும் கடம்பகுல மன்னனின் மருகனாவான். கி. பி. 903ஆம் ஆண்டிற்குரிய கோலார் மாவட்டத்துச் செப்பேடு இந்தச் செய்தியைக் கூறுகிறது.[42] வடுகராகிய கடம்பருக்கும் கங்கருக்கும் இருந்த கொள்வினை கொடுப்பினையை மட்டும் காட்டுவதோடன்றி, அகரகாரப் பொருளியலை வடிப்பதில் அவர் களுக்கு இருந்த ஈடுபாட்டையும் காட்டுகின்றது.

## பால்மடிக் கல்வெட்டு

கி. பி. 450ஆம் ஆண்டில் பல்லவரை வென்ற காகுஸ்த வர்மன் (காகுஸ்த பட்டர்) என்னும் கடம்ப அரசனால் பால்மடி (Palmadi/ Halmadi) கல்வெட்டு வெட்டப்பட்டது. இந்தக் கல்வெட்டே கன்ன டத்தில் வெட்டப்பட்ட முதல் கல்வெட்டாம். நன்செய் நிலத்தில் விளையும் நெல்லில், பத்தில் ஒரு பங்கை இறைநீக்கிப் பிராமணர்க்குத் தந்துவிட வேண்டும் என அந்தக் கல்வெட்டுக் கூறுகின்றது.[43] இவ்வாறு, பிரமதேயங்கள் (அகரகாரங்கள்) என்னும் புதிய அரசியல்-பொரு ளியல்-பண்பாட்டுக் கட்டுமானங்கள் முதன்முதலில் கருநாடகத் திலேயே தோன்றின.

கடம்பர் காலத்துப் பிராமண அகரங்களில் பெள்ளிகாமி அகரம் பேர்போனது. இதற்கடுத்து, தாளகுண்ட அகரகாரம் பெரும் சிறப்புற் றிருந்தது. பெள்ளிகாமி, குப்பத்தூர், பண்டலபுரம் ஆகிய இடங்களில் கடம்பர் காலத்திலிருந்த மடவளாகங்கள் பெரும் புகழ்பெற்றவை.[44]

கருநாடகத்திற்குப் பிறகே அகரகாரங்கள் வடஇந்தியாவில் தோன்றின. குப்தர் காலத்தின்போது மேற்கு வங்கத்தில் கி. பி. 5ஆம் நூற்றாண்டிலும், கிழக்கு வங்கத்தில் கி. பி. 6ஆம் நூற்றாண்டிலும், ஒரிசாவிலும் குசராத்திலும் கி. பி. 7ஆம் நூற்றாண்டிலும்தான் அகர காரங்கள் தோன்றலாயின.[45]

## நிலக்கொடை ம(ௗ)டமை

கி. பி. 6ஆம் நூற்றாண்டு முதல், சளுக்கியரால் அத்தகைய பிரம தேயங்கள் கருநாடகம் முழுவதும் விரவின. பிராமணரின் மனம்

www.tamilarangam.net



நிறைவுற வேண்டி, சளுக்கிய அரசன் முதலாம் புலிகேசி ஒவ்வொரு பொங்கல் (சங்கராந்தி) பண்டிகையின் போதும் பெரும் நிலக்கொடைகளை வழங்கியனான். குதிரை வேள்வி நடத்திய அந்தப் புலிகேசி, 13,000 ஊர்களைப் பிராமணர்க்குக் காணிக்கையாகத் தந்தான்.[46] இரண்டாம் புலிகேசியும் பிராமணர்க்குப் பல ஊர்களைப் பிரமதேயங்களாக வழங்கினான்.

சில்லறைக் காரணங்களுக்கெல்லாம் பிராமணர்க்கு நிலக் கொடை வழங்கப்பட்டது. அரண்மனையில் நடந்த சின்னஞ் சிறு சடங்குகளையும் வேள்விகளையும் நடத்திய போதும், போர் தொடுப்பதற்கு முன்னரும், அப் போரில் வெற்றி ஈட்டிய பின்னரும் எனக் கண்ட நேரங்களிலெல்லாம் பிராமணர்க்கு நிலக்கொடைகளை வழங்கலாயினர்.

குறுநிலமன்னர்களும் ஆளுநர்களும் நிலக்கிழார்களும் படையாட்சிகளும்கூட, முடியரசரைப் போன்றே பிராமணர்க்கு நிலக் கொடைகளைத் தந்து மகிழ்ந்தனர். அரசனுக்குத் தெரிந்தோ தெரியாமலோ நிலக்கொடைகள் வழங்கப்பட்டன. இரட்டர் (இராட்டிரக்கூட்ர்) நாட்டில் மூன்று வகையான நிலக்கிழார்கள் இருந்தனர். அவர்கள் (1) மன்னனைக் கேளாமலேயே நிலத்தையும் ஊரையும் விற்கவோ வாங்கவோ செய்யும் உரிமை பெற்றவர்கள், (2) அரசனுக்குத் தெரியாமல் அவற்றை வாங்கவோ விற்கவோ அதிகாரம் இல்லாதவர்கள், (3) தனி நிலக்கிழார்களுக்குச் சொந்தமாயிருந்த காணிகளையும் நேரடியாக மன்னனே கொடையாக அளிக்கும் அளவுக்கு அதிகாரம் குன்றிய நிலக்கிழார்கள் என அந் நிலக்கிழார்கள் மூவகைப்பட்டனர். இரட்டர்நாட்டில் உட்கிழமை (subinfeudation) முறை மிகப் பரவலாக இருந்ததே இப் போக்குகளுக்கான காரணமாகும்.[47]

கி. பி. 12ஆம் நூற்றாண்டில் கருநாடகத்தில் மொத்தம் 135 பிராமண அகரகாரங்கள் இருந்ததாக ஒரு கணக்குக் கூறும். இவற்றில் 78 அகரகாரங்கள் சிவமுகம், தாரவாடு, பெள்காம், பீசாப்பூர் மாவட்டங்களில் மட்டுமே அடங்குவன.[48] தாரவாடு, பீசாப்பூர், சிவமுகம், பீதர், பெள்காம் மாவட்டங்களில் 11ஆம் நூற்றாண்டில் மொத்தம் 96 அகரகாரங்கள் இருந்ததாக இன்னொரு கணக்குக் காட்டும்.[49]


கருநாடகத்தில் விரவிக் கிடந்த பிராமண அகரங்களையும், தமிழகத்தில் படர்ந்திருந்த பிராமண அகரங்களையும் காட்டும் படங்கள் (1-2), அகரகாரங்கள் தோன்றிய கருநாடகத்திலேயே அவை மிகவும் அடர்த்தியாக இருந்ததைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றன.[50]

## நெல்லரிசிப் பண்பாடு

மேம்பட்ட நகர்ப்புற நாகரிகங்களைப் படைவழியில் வீழ்த்திய அநாகரிகரெல்லாம் தாம் வீழ்த்திய நாகரிகங்களாலேயே வீழ்த்தப்

www.tamilarangam.net






வரைபடம் 9

கருநாடகத்தில் விரவியிருந்த பிராமண அகரங்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






வரைபடம் 10

*பதின்மூன்றாம் நூற்றாண்டில் தமிழகத்தில் விரவியிருந்த பிராமண அகரங்கள்*

www.tamilarangam.net



பட்டு அந் நாகரிகங்கள் கட்டமைத்திருந்த மேனிலைப் பண்பாடு களில் மூழ்கடிக்கப்பட்டு அப் பண்பாடுகளால் உட்செரித்துக் கொள் ளப்பட்டதுதானே வரலாறு? அவ்வகையில், நெல்லரிசிப் பண்பாட் டிற்கு வடுகர் கண்ட பிராமண அகரங்கள் (பிரமதேயங்கள்) இரை யாகின. வடுகரின் தாயகப்பகுதியில் நெல் வேளாண்மை மிக அருக லாகவே இருந்தது. வடுகர்நாட்டின் அன்றைய கரிசல் மண்ணியல் அமைப்பால் அந் நிலை விளங்கியது. கேழ்வரகு, சோளம், கம்பு, சாமை, தினை ஆகியனவே அக் கால வடுகரின் அடிப்படை உணவுப் பயிர்களாயிருந்தன. அவ் வடுக அநாகரிகர்கள் தமிழர்நாட்டைப் பிடித்து அடிமைப்படுத்திப் பிராமண அகரங்களை அமைத்து ஆளத் தொடங்கிய நிலையில், அவர்களுடன் வந்த வடுகப் பிராமணர்கள் நெல்லரிசிச் சோற்றையே தம் அடிப்படை உணவாகக் கொண்டனர். கருநாடகத்தில் அடர்த்தியாக விரவிய அகரகாரங்களில் இருந்த வடுகப் பிராமணரையும்கூட அரிசிச் சோறுண்ணும் பழக்கம் தொற்றிக் கொண்டது. இதனால், வடுகப் பிராமணரின் உணவுப் பழக்கத்தில் மிகப் பெரும் மாற்றம் நிகழ்ந்தது. கன்னடநாட்டிலிருந்த அகரகா ரங்களெல்லாம் நெல்லரிசியை இறக்குமதி செய்யத் தொடங்கின. மெல்ல நெல் வெள்ளாண்மையையும் சிறு அளவில் மேற்கொண்டன. வடுகப் பிராமணர்கள் இவ்வாறுதான் சோற்றுப் பண்பாட்டுக்கு ஆட்பட்டனர்.

## தமிழை ஒழித்த வடுகவெறி!

அசோகனுக்குப் பிறகு கருநாடகத்தின் பெல்லாரிக்கு அருகில் தோன்றிய ஆந்திர (சதவாகன) அரசர்கள், பாகதமொழியையே ஆண்டு வந்தனர். ஆந்திர(சதவாகன)ப் பேரரசின் பிந்தைய நாட்களில்தான் சங்கதத்திலும் கல்வெட்டு வெட்டும் வழக்கம் தென்னிந்தியாவில் தோன்றியது.

கி. மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 4ஆம் நூற்றாண்டு வரையிலான கருநாடகத்துக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் பாகத (பிராகிருத) மொழியிலேயே உள்ளன. கி. பி. 3ஆம் நூற்றாண்டில்தான் சங்கதமொழி வந்து பாகத (பிராகிருத) மொழியில் கல்வெட்டுகளை எழுதும் முந்தைய வழக்கத்தை ஒழித்தது.[51] கி. பி. 4ஆம் நூற்றாண்டில் கடம்பநாட்டில் பாகதமொழியில் எழுதுவதைவிட்டுச் சங்கதத்தில் எழுதத் தொடங்கினர்.[52]

லெவி ரைஸ் தொகுத்த கோலார் மாவட்டக் கல்வெட்டு களிலும் செப்பேடுகளிலும்[53] வரும் மாவலி வழியினர் என்னும் பாண அரசரின் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் எண்ணிக்கையில் 26 ஆகும். இவற்றில் கி. பி. 338ஆம் ஆண்டிற்குரிய முள்வாயில்-157 செப்பேடு தான் இம் மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளிலெல் லாம் மிகப் பழமையானது. இச் செப்பேடு, சங்கதமொழியில் உள்ளது.

www.tamilarangam.net



ஆனால், கி. பி. 900ஆம் ஆண்டிற்குப்பின் வந்த கல்வெட்டுகளும் செப்பேடுகளும் கன்னடத்தில் உள்ளன.

அதே போல், கங்கர்கள் இந்த மாவட்டத்தில் வெட்டிய கல் வெட்டுகளும் செப்பேடுகளும் எண்ணிக்கையில் 70. இவற்றில், மிகப் பழமையானதெனப்படும் கி. பி. 360ஆம் ஆண்டிற்குரிய முள்வாயில்-263 என்னும் கல்வெட்டு, சங்கத மொழியிலானது. கி. பி. 370ஆம் ஆண்டிற்குரிய மாலூர்-73, கி. பி. 425ஆம் ஆண்டளவில் எழுதப்பட்ட மாலூர்-72 ஆகிய செப்பேடுகளும்கூட சங்கத மொழியில் உள்ளன. கி. பி. 12ஆம் நூற்றாண்டிற்குமுன் வெட்டப்பட்ட கங்கர்களின் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் மொத்தம் 31 ஆகும். இவற்றில் 26, கன்னடமொழியிலானவை. கன்னடத்திலும் சங்கதத்திலுமாக இருப்பது ஒன்று. சங்கதமொழியிலானவை நான்கு. ஆனால், கி. பி. 12ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு வெட்டப்பட்ட கங்கரின் கோலார் மாவட்டத்துக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் தமிழிலானவை.

கோலார் மாவட்டத்தில் கிடைத்த கடம்பரின் 4 கல்வெட்டு களிலும் செப்பேடுகளிலும் ஒன்றேயொன்று மட்டுமே சங்கதத்தி லும் கன்னடத்திலும் ஆனது. பிற மூன்றும் சங்கதத்தில் மட்டுமே உள்ளவை. வடுகரானதால், கடம்பர்கள் சங்கதமொழிக்கே முதலிடம் தந்தனர்.

பாணர், கங்கர், கடம்பர் ஆகியோர் கோலார் மாவட்டத்தில் வெட்டிய கல்வெட்டுகளும் செப்பேடுகளும் முதலில் சங்கத மொழி யிலேயே இருந்தனவென்னும் உண்மை, அச் சங்கதத்தை அம் மாவட்டத்திற்குள்ளும், அடுத்துள்ள தமிழகத்திற்குள்ளும் பரவலாக ஆளத் தொடங்கியவர்கள் இவ் வடுக வந்தேறிகளே என்பதைக் காட்டும்.

### கன்னட வடுகனும்
### சிங்கள வடுகனும்

இவற்றில் பாணர்கள் எழுதிய முள்வாயில்-157 என்னும் செப் பேட்டில் (கி. பி. 338) வதுவல்லப மல்லதேவ நந்திவர்மன் என்னும் பாண அரசன் ஆவணியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த தாகச் சொல்லப்படுகிறது. இந்தப் பாண அரசன், நால்வரண முறையைத் தழுவியே ஆண்டான் என்றும் அச் செப்பேடு கூறுகிறது. பாரதுவாசக் கோத்திரத்துச் சிரீருத்திர பட்ட சர்மா, கௌசிகக் கோத் திரத்துத் திரிலோச்சன பட்ட சர்மா, கௌண்டல்ய கோத்திரத்துத் திரிவிக்கிரம பட்ட சர்மா, காசியப்ப கோத்திரத்து நாராயண பட்ட சர்மா முதலான 25 பிராமணர்க்குப் புதல்நாட்டைச் சேர்ந்த முடியனூர் என்னும் ஊரைப் பிரமதேயமாக வழங்கியதைப்பற்றிக் கூறும் செப்பேடு அது. முடியனூர் என்னும் தூயதமிழ்ப் பெயரைக் கொண்டிருந்த ஊரை இந்தச் செப்பேடு, 'சூடாகிராமம்' எனச் சங்கதத்துக்குப் பெயர்மாற்றிக் குறிப்பிடுகிறது. தமிழருக்குச் சொந்த மாயிருந்த ஓர் ஊரை வடுக அநாகரிகர் கைப்பற்றியவுடன், அதன்

www.tamilarangam.net



பழைய பெயர் மறைக்கப்பட்டுச் சங்கதப் பெயர் சூட்டப் பெற்றதையே அது காட்டும்.[54]

ஒரு நாட்டை வந்தேறிகள் மெல்லக் கவரும் நிலையிலோ, அந் நாட்டின்மீது படையெடுத்து அதைப் பிடித்து ஆள முற்படுகையிலோ, ஊர்களின் இயற்பெயர்கள் மாற்றப்பட்டு வந்தேறிகளின் மொழியில் புதிய பெயர்கள் சூட்டப்படுவது உலகளவில் காணும் இயற்பாடு. தமிழீழநாட்டில் மெல்லக் குடியேறி வரும் சிங்களரும் அதைத்தான் செய்துவருகின்றனர். சிங்கள இனமும்கூட வடுகரின் கிளையினமே என்பது ஒருபுறம் இருக்கட்டும். ஆனால், அச் சிங்களருடன் இத் துறையில் போட்டிபோட வல்லவர்கள், கன்னட வடுகர் மட்டுமே என்பதைக் கருத்தில் கொள்ளத்தான் வேண்டும். தெலுங்கு வடுகரா வது ஊர்களின் தமிழ்ப்பெயர்களை அவ்வளவு அரக்கப் பறக்க மாற்ற வில்லை. ஆனால், தமிழ் ஊர்ப்பெயர்களை உடனே கன்னடப்படுத்து வதோ, சங்கதப்படுத்துவதோ, கன்னட வடுகரின் பிறவிக்குணமாகும்.

கோலார் மாவட்டத்தின் பழங்கல்வெட்டுகளும் செப்பேடுகளும் கன்னடத்தில் பரவலாகவும் சங்கதத்தில் ஒன்றிரண்டுமாக இருப் பினும், அக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் குறிப்பிடும் ஊர்ப் பெயர்கள் பொதுவாகத் தமிழ்ப் பெயர்களாகவே இருப்பதையும், அத் தமிழ்ப் பெயர்கள் மெல்லக் கன்னடமாகவோ, சங்கதமாகவோ மாற்றப்பட்ட வெறித்தனத்தையும் கண்கூடாகக் காணலாம்.

### கோலார் மாவட்டத்தின் கல்வெட்டுகளும் செப்பேடுகளும்[55]

| ஆண்டு (கி.பி.) 1 | கல்வெட்டு /செப்பேடு 2 | எண் 3 | மொழி 4 | மூலப்பெயர் 5 | திரிந்த பெயர் 6 |
|---|---|---|---|---|---|
| | | | பாணர் | | |
| 338 | முள்வாயில் | 157 | சங்கதம் | முடியனூர் புதல்நாடு | சூடாகிராமா Hodali vishaya |
| 890 | பௌரிங் பேட்டை | 13 | கன்னடம் | இளநகர்நாடு பொன்குன்ற நாடு கொயாத்தூர் தாயூர் பால்படு தாமரைக்கட்டு | எளநகர பொன்குண்டா தாமரகட்டெ |
| 890 | பௌரிங் பேட்டை | 48 | கன்னடம் | பொன்குன்றம் | பொன்குண்டா |
| ~770 | பௌரிங் பேட்டை | 86 | கன்னடம் | தேக்கல் | |
| ~780 | சீனிவாசபுரம் | 5 | கன்னடம் | மனசூர் குளநெல்லூர் | |

www.tamilarangam.net



| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| ~800 | சிந்தாமணி | 109 | கன்னடம் | குளத்தூர் | கொளத்தூர் |
| ~860 | முள்வாயில் | 265 | கன்னடம் | கொங்கு(நாடு) வேகூர் | Gongu |
| ~890 | கோலார் | 200 | கன்னடம் | நெற்குன்றநாடன் புலிக்குறிச்சி | நெக்குந்திநாடன் புலிக்குறிக்கி |
| ~900 | முள்வாயில் | 243 | கன்னடம் | குன்றத்தூர் புலிநாடு | குண்டத்தூர் |
| ~890 | முள்வாயில் | 244 | கன்னடம் | குன்றத்தூர் | குண்டத்தூர் |
| 900 | சீனிவாசபுரம் | 40 | கன்னடம் | புலிக்குறிச்சி | புலிக்குறுக்கி |
| 961 | முள்வாயில் | 126 | கன்னடம் | விதிரூர் | பிதிரூர் |
| | | | **கங்கர்** | | |
| ~370 | மாலூர் | 73 | சங்கதம் | பெரும்புழல் முதுகொத்தூர் | Perbolal முதுகொத்தூரவிசய |
| ~425 | மாலூர் | 72 | சங்கதம் | உரனூர் வெண்ணெல்கழனி | |
| ~750 | கோலார் | 229-30 | கன்னடம் | புத்தூர் | |
| 753 | கோலார் | 6 | கன்னடம் | கடம்பூர் | |
| ~753 | கோலார் | 11 | கன்னடம் | கடத்தூர் கடம்பூர் புலிக்குறிச்சி | புலிக்குறுக்கி |
| ~760 | கோலார் | 7 | கன்னடம் | கூடலூர் கடம்பூர் விடத்தூர் | |
| 762 | கௌரிவீடனூர் | 47 | சங்கதம் | ஆலத்தூர் பறுவி பெண்ணகரம் இளங்கூடலூர் மறியாச்சிக் கூடலூர் தோளூர் | எளங்கூடலூர் Mariyâchi Gûdalûr |
| ~770 | சீனிவாசபுரம் | 57 | கன்னடம் | பண்ணைநாடு வளத்தூர் | பண்ணெநாடு பௌத்தூர் |
| ~800 | கோலார் | 231 | கன்னடம் | புத்தூர் நல்லாத்தூர் | |
| ~890 | கோலார் | 79 | கன்னடம் | பொன்புலம் | பொம்பல்லம் |
| ~970 | பௌரிங் பேட்டை | 47 | கன்னடம் | பொன்குன்றம் | பொக்குண்டா |

www.tamilarangam.net



கடம்பர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ~890 | முள்வாயில் | 38&50 | சங்கதம் | இளநகரம் | எளநகரா |
| 757 | கோலார் | 63 | சங்கதம் | சிறுவள்ளி | கிறுவள்ளி |
| | | | | தாமரைமுகம் | தாமரமுகெ |
| | | | | அறத்துறை ஆறு | அறதொறெ நதி |

## பொன்குன்றமே பௌரிங்பேட்டை!

பொன்குன்றம் என்னும் தமிழ்ப்பெயர்தான் கன்னடத்தில் "பொன்குண்டா" எனத் திரிந்தது. கி. பி. 1300ஆம் ஆண்டளவில் வெட்டப்பட்ட பௌரிங்பேட்டை-54 என்னும் கல்வெட்டு அந்த ஊரைப் பொற்குன்றம் என்றே குறிப்பிடுவது அதைக் காட்டும்.[56] இவை போக, இக் கன்னடக் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் தமிழுக் கேயுரிய சிறப்பு ழகரமும் சிறப்பு றகரமும்கூட ஆளப்பட்டுள்ளன.

வடுக அநாகரிகரான பாணரும் கங்கரும் இன்றைய பழைய மைசூர்ப் பகுதியைக் கைப்பற்றியபின், அத் தமிழ்ப் பகுதியை வடுக மயமாக்கினர் என்னும் வரலாற்று உண்மை மேற்போந்த குறிப்பு களால் விளங்கும்.

கோலார் மாவட்டத்து முடியனூரைச் 'சூடாகிராமம்' எனப் பெயர் மாற்றி வடுகப் பிராமணர்க்கு அதைப் பிரமதேய நிலக்கொடை யாக வழங்கிய வடுக வந்தேறிகளாலேயே அக்கிரகார (பிரமதேய)ப் பொருளியல் தமிழகத்திற்குள் புகுத்தப்பட்டது.

கி. பி. 8ஆம் நூற்றாண்டு முதல் 11ஆம் நூற்றாண்டு வரை கருநாடகத்திலுள்ள கோலார் மாவட்டத்தை ஆண்ட பல்லவர்களும், அந்தப் பல்லவரின் வழியினரெனச் சொல்லிக்கொண்ட நுளம்பர் களும் காடுவெட்டிகளும் இப் பகுதியில் வெட்டிய கல்வெட்டுகளும் செப்பேடுகளும் கன்னடமொழியிலேயே பெரும்பாலும் உள்ளன. பல்லவர் காலக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் மொத்தம் 77. இவற்றில் 1 சங்கதமொழியிலும், 3 சங்கதத்திலும் கன்னடத்திலும், 3 தமிழிலும், எஞ்சிய 72 கன்னடத்திலும் உள்ளன. காடுவெட்டிப் பல்லவர்கள் வெட்டிய மொத்தம் 11 கல்வெட்டுகளிலும் செப்பேடு களில், 6 கன்னடத்திலும், 4 தமிழிலும், 1 சங்கதத்திலும் உள்ளன. கோலார் மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட வைதும்பர் என்னும் வடுகரின் கல்வெட்டுகள் மொத்தம் 6. இவற்றில் 2 தமிழிலும், 4 கன் னடத்திலும் உள்ளன. இரட்டரின் கல்வெட்டென ஒன்றேயொன்று கண்ணே கண்ணென இம் மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அது கன்னடத்திலானது. இடைக்கால வடுகச் சோழர்கள் கோலார் மாவட்டத்தில் வெட்டிய கல்வெட்டுகளும் செப்பேடுகளும் மொத்தம் 109. இவற்றில் 22 கல்வெட்டுகள் கன்னடத்திலானவை. கி. பி. 1000 ஆண்டளவில் இராசராச மும்முடிச் சோழன் வெளியிட்ட 3 கல் வெட்டுகளும், 1100ஆம் ஆண்டளவில் குலோத்துங்கன் வெட்டிய ஒரு

14

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கல்வெட்டும் கன்னடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.[57] தமிழகத் தைப் பிடித்தாண்ட சளுக்கியச் சோழர் என்னும் வடுகச் சோழர்க்குக் கன்னடத்தின்மீது இருந்த தீராப்பற்றையே அவை காட்டுகின்றன. இதற்கு நேர்மாறாக, கன்னடரான ஒய்சளர்கள் கோலார் மாவட் டத்தில் வெட்டிய மொத்தம் 78 கல் வெட்டுகளிலும் செப்பேடுகளி லும், 8 மட்டுமே கன்னடத்திலானவை என்பது வியப்பூட்டும்.

சங்கதத்தில் கல்வெட்டுகளையும் செப்பேடுகளையும் எழுதும் வழக்கம் கல்யாணபுரச் சளுக்கியர் காலத்தில் மெல்லக் குறைந்து, கன்னடத்தை ஆள்வது பரவலானது.

## போற்றிய புலவரும், தாழ்த்திய வடுகரும்

பல்லவ வடுக அரசர்கள் தமிழ்மொழியைத் தொடக்கத்தில் புறக்கணித்தனர். பாகதம் (பிராகிருதம்), சங்கதம் ஆகிய மொழிகளை மட்டுமே போற்றினர். செங்கை மாவட்டத்தின் ஆனையூர் (கி. பி. 999), எண்ணாயிரம், புதுவைக்கு அருகிலான திரிபுவனி (கி. பி. 1048), நெல்லைநாட்டு முக்கூடல் (கி. பி. 1067), திருவாடுதுறை (கி. பி. 1121), தென்னார்க்காடு மாவட்டத்தில் பெருவேளூர், திருவொற்றியூர் (கி. பி. 1213), தஞ்சையில் திருவிடைக்கழி (கி. பி. 1229) ஆகிய இடங் களில் பிராமண மாணாக்கர்கள் தம் மறைகளை இலவயமாகக் கற்பதற் கெனத் தனிக் கல்விக்கூடங்கள் இருந்தன.[58] ஆனால், தமிழைக் கற்பிக் கும் பள்ளிகளை மட்டும் அவர்கள் அவ்வாறு நிறுவவில்லை.

இவர்களின் அரசவைகளில் பாரவி, தண்டி முதலான சங்கதப் புலவர்களே போற்றப்பட்டனர்.* முற்காலப் பல்லவர்கள் தமிழ்ப் புலவர்களைப் போற்றவில்லை. இனவுணர்வு அற்ற தமிழ்ப் புலவர் களோ, களப்பாளர், பல்லவர் காலத்திலேயே அவ் வடுக வந்தேறி களை வானளாவ ஏற்றிப் போற்றிப் பாடும் அளவுக்குத் தரம் தாழ்ந் தனர்.

தமிழும் சங்கதமும் வடமொழிகளும் கலந்த மணிப்பவள நடை, பல்லவ வடுகர் காலத்தில்தான் தோன்றியது.

வளைந்த கோடுகளாலான மிகப் பழைய தமிழ் எழுத்தே வட் டெழுத்து. சிலப்பதிகாரத்தில் வரும் கண்ணெழுத்து என்பது வட் டெழுத்தே என்பது ஆய்ந்தோரின் துணிபு. கி. பி. 8ஆம் நூற்றாண்டு முதல் 11ஆம் நூற்றாண்டு வரையிலும்கூடப் பாண்டியநாட்டிலும் சேரநாட்டிலும் வட்டெழுத்து ஆளப்பட்டது. இவ் வட்டெழுத்து களைத் தழுவியே தெலுங்கு வடுகரான பல்லவர்கள் கி. பி. 7ஆம் நூற்றாண்டில் கிரந்த எழுத்துகளை அமைத்தனர். பாகத, சங்கத

---

* பளவு, விலசு, மிலயு கடுந்தையா, சுடுத்தரம்பு என்னும் தெலுங்குச் சிறப்புப் பெயர்கள் முதல் மகேந்திரவர்மனுக்கு உண்டு.[59]

www.tamilarangam.net



(சமற்கிருத) ஒலிப்புகளுக்கேற்ற வருக்க எழுத்துகளையும் சேர்த்து அமைக்கப்பட்டனவே அந்தக் கிரந்த எழுத்துகள். வடுகச் சோழர்கள் சோழநாட்டைக் கைப்பற்றிய பின்னர், அந்த நாட்டில் வழங்கிவந்த வட்டெழுத்தை ஒழித்து, வடுக வந்தேறிகள் பல்லவநாட்டில் ஆக்கிய கிரந்த எழுத்துகளையே ஆளுமாறு செய்தவன் முதல் இராசராசனே ஆவான். திருநெல்வேலி மாவட்டத்துத் திருக்குற்றாலத்தில் கிடைத்த இரண்டு கல்வெட்டுகளைக்கொண்டு அதனை அறியலாம்.[60]

## மூவகை எழுத்துகள்

கிரந்த எழுத்து தமிழகத்தில் தோன்றியது. நாகரி எழுத்து வடஇந்தியாவில் பிறந்தது. பாகத (பிராகிருத) மொழிக்களுக்காக வென்றே பிராமி எழுத்துகள் உருவாக்கப்பட்டன. பின்னர், அதே பிராமி எழுத்துகளைச் சங்கதத்திற்கும் (சமற்கிருதத்திற்கும்) பிற மொழிகளுக்கும்கூட ஆளத் தொடங்கினர்.[61] கி. பி. 7ஆம் நூற்றாண் டில் கிரந்த எழுத்து தோன்றிய பிறகு தமிழகத்தில் வெட்டப்பட்ட கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் மூவகையான எழுத்துகள் ஆளப் பட்டன. அவை:[62]

1. தமிழ்க் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் அமைந்த சங்கத மொழிப் பகுதியை எழுதுவதற்காக ஆளப்பட்டுவந்த கிரந்த எழுத்துகள்.

2. பல்லவர் காலம் தொடங்கி வடுகச் சோழர் காலம் வரை யில், தமிழ் எழுத்துகளையும் சங்கத ஒலியெழுத்துகளையும் கலந்து தொண்டைமண்டலத்தில் எழுதப்பட்டுவந்த புதிய வரி வடிவமான கிரந்தத் தமிழ் எழுத்துகள்.

3. கி. பி. 11ஆம் நூற்றாண்டில் பாண்டியநாடு வடுகச் சோழ ருக்கு அடிமைப்படும் வரையில், அப் பாண்டியநாட்டிலும் அதை யொட்டிய பகுதிகளிலும் ஆளப்பட்ட வட்டெழுத்துகள்.

முற்றிலும் சங்கதத்திலான பல்லவர் செப்பேடுகளில் பெரும் பாலானவை ஆந்திரப் பகுதியிலேயே கிடைத்தவையாகும்.

தமிழிலான ஆட்சியியல் சொற்களையெல்லாம் அகற்றிவிட்டுப் பாகதம் (பிராகிருதம்), சங்கதம் ஆகிய மொழிகளிலான பெயர்ச் சொற் களைப் புகுத்தப் பார்த்த முற்காலப் பல்லவ வடுகரின் முயற்சி தமிழகத்தில் தோல்வியில் முடிந்தது. அதனால், தமிழரிடையே ஏற் கெனவே வழக்கிலிருந்த ஆட்சியியல் சொற்களுக்குக் காலப்போக்கில் அவர்கள் மீள வேண்டியிருந்தது.

இரண்டாம் நந்திவர்மனின் ஆட்சிக்காலத்திலிருந்தே பல்லவ அரசர்கள் தம்முடைய கல்வெட்டுகளையும் செப்பேடுகளையும் தமிழில் எழுதத் தொடங்கியதோடு, தம் ஆட்சியாண்டையும் அவற் றில் பதியலாயினர்.

www.tamilarangam.net



## தமிழிசையைத் தம்வயமாக்கிய வடுகர்

பல்லவர் கால நடுகற்களெல்லாம் வட்டெழுத்தில் எழுதப் பட்டவை.[63] வட்டெழுத்துக் கல்வெட்டுகளில் வடுகப் பல்லவ மன்னர் களின் பெயர்கள் தூய தமிழிலேயே உள்ளன. சிம்ம விட்டுணுவைச் 'சிங்க விண்ணப்பருமர்' என்றும், நரசிம்மவர்மனை 'நரைசிங்கபருமர்' அல்லது 'நரசிங்கபன்மர்' என்றும், மகேந்திரவர்மனை 'மயிந்திரபர்', 'மயேந்திர பருமர்', 'மசீந்திர பருமர்' என்றும், பரமேசுவரவர்மனைப் 'பரமேச்வரபருமர்' என்றும் தான் அவை குறிப்பிடுகின்றன.[64] மக்கள் வழக்கில் வட்டெழுத்திலான தமிழே பரவலாக ஆளப்பட்டுவந்த உண்மையையே அவை யாவும் காட்டுகின்றன.

வடுக அநாகரிகர்கள் தமிழகத்தின்மீது படையெடுத்துச் சேர, சோழ, பாண்டிய அரசர்களை வேரறுத்த பின்னர், தமிழ்ப் பண் பாட்டில் மூச்சுத் திணறும் அளவுக்கு மூழ்கி அதைத் தம்வயமாக்கிக் கொண்டது ஒருபுறமெனின், அத் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளை யெல்லாம் பெயரளவில் வடுகமயமாக்குவதில் வெறித்தனமாயிருந் தனர். இவ் வடுக அநாகரிகர்கள் தமிழரிடமிருந்து கற்றுப் பெயர் திரித்து உருமறைத்து முழுமையாகத் திருடித் தமதாக்கிக் கொண் டவற்றுள், தமிழ் இசையே முதன்மையானதாகும். தமிழ் ஆண்டுக் கணக்கையும் திருடிக்கொண்டு, தமிழ் ஆண்டுப் பெயர்கள் அறுபதின் மூலப்பெயர்களைத் தமிழரின் பிறங்கடையினரே கண்டுபிடிக்க முடியாதவாறு சங்கதப் பெயர்களாக மாற்றி மறைத்தது அவற்றில் இன்னொன்றாகும்.

இத்தகைய அறிவுத் திருட்டுகள் பல்லவ வடுகரின் காலத் திலேயே — குறிப்பாக, மகேந்திரவர்மனின் காலத்தில் — மிக முனைப் புடன் தொடங்கிவிட்டது. ஏழிசையை உலகிற்கே தந்த தமிழ்ப் பாண னின் சிறப்பை மறைத்ததுடன், குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் ஆகிய ஏழிசைப் பெயர்களின் குறியெழுத்து களான ச, ரி, க, ம, ப, த, நி என்பன சங்கத மூலத்தில் தோன்றி யதைப் போன்ற மயக்கத்தையும் அந்த வடுகத் திருட்டு ஏற்படுத்தியது. தமிழிசையின் மூலநிலையைத் — தாய்நிலையைத் — திட்டமிட்டு மறைத்தது. செம்பாலைப் பண்ணை 'அரிகாம்போதி' என்றும், பாலைப்பண்ணைச் 'சங்கராபரணம்' என்றும், குறிஞ்சிப்பண்ணை 'நடபைரவி' என்றும், கோடிப்பாலையைக் 'கரகரபிரியா' என்றும் தமிழ்ப்பண்களை யெல்லாம் சங்கதப் பெயர்களால் திட்டமிட்டு மறைத்ததால்[65] வந்த திருட்டு இசையே புரட்டு வடுகர் கற்பித்த 'கருநாடக இசை' என்பது காலம் தாழ்த்தியாவது இன்று உலகிற்குப் புலப்படத் தொடங்கியுள்ளது.

கி. பி. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குடுமியான்மலை சங்கதக் கல்வெட்டுக் கூறும் இசை மரபு, தமிழரிடமிருந்து திருடிச் சங்கதத்தில் எழுதப்பட்டிருப்பினும், அதில் வரும் இசை நுட்பங்கள் யாவும்

www.tamilarangam.net



தமிழிசை மரபில் அமைந்தவைதான் என்னும் இசையறிஞர்களின் முடிபு, 'கருநாடக இசை' என்னும் வடுக இசை ஒரு திருட்டு இசையே என்பதை ஐயந்திரிபற மெய்ப்பிக்கின்றது.

## மண்ணைப் பறித்த பல்லவ வடுகன்!

இதுவரை 300க்கும் குறைந்த பல்லவர் காலக் கல்வெட்டுகள் மட்டுமே கிடைத்துள்ளன. இவற்றுள் பழமை வாய்ந்தது ஆந்திரத்தில் நல்லமலை (மஞ்சிக்கல்லு) என்னுமிடத்தில் கிடைத்த பிற்காலப் பிராமி எழுத்தமைதியிலான பாகத (பிராகிருத) மொழிக் கல்வெட்டேயாகும்.[66] முற்காலப் பல்லவர்களின் பாகத, சங்கத மொழிகளிலான நிலக்கொடைகளெல்லாம் கிருட்டினை ஆற்றுக்குத் தெற்கிலுள்ள குண்டூர், நெல்லூர், பெல்லாரி மாவட்டங்களில் காணப்படுகின்றன. கருநாடகத்தின் பெல்லாரி மாவட்டமும், ஆந்திராவின் கடப்பை மாவட்டமும்தான் பல்லவரின் தாயகம் என்பதையே அவை மெய்ப்பிக்கின்றன.[67]

சோழநாட்டைப் பிடித்த வடுகர்கள் தம்மைச் சோழர் எனச் சொல்லிக்கொண்டதைப் போலும், பாண்டியநாட்டு வடுகப் பாளையக்காரர் சிலர் தங்களைப் பாண்டியர் எனக் கூறிக் கொண்டதைப் போலும், தொண்டைநாட்டைப் பிடித்த வடுகர்கள் தங்களைத் தொண்டையர் எனப் போலியாகச் சொல்லிக் கொண்டனர்.

சேர, சோழ பாண்டியநாடுகளாகிய தமிழகத்தின் கருப்பகுதிகளைவிட, அவற்றின் அடங்காப்பற்றுகளாயிருந்த தொண்டைநாட்டிலும் கொங்குநாட்டிலுமே நடுகற்கள் மிகையாகக் காணப்படுகின்றன. இந் நடுகற்கள் பெரும்பாலும் கங்கநாடாகிய வடகொங்கு நாட்டையும் நுளம்பநாட்டையும் ஒட்டிய வடவார்க்காடு, சேலம், தகடூர் மாவட்டங்களிலேயே உள்ளன. ஆயினும், தமிழகத்திலுள்ள நடுகற்களின் எண்ணிக்கை, கருநாடகத்திலோ ஆந்திரத்திலோ மகாராட்டிரத்திலோ கிடைத்த அளவுக்கு இல்லை. கி. பி. 5-6ஆம் நூற்றாண்டுகளில் பெருமளவில் நடப்பட்ட இந் நடுகற்கள், கி. பி. 12ஆம் நூற்றாண்டில் மெல்லக் குறைந்துவிட்டன. கருநாடகமே நடுகற்களின் கருப்பகுதியாக இருப்பதால், தமிழர்நாட்டின்மீது வடுகப் படையெடுப்புகளும் ஊடுருவல்களும் பெருமளவில் நடந்ததற்கான தடயங்களாக அவை உள்ளன.[68] குடிஉழையர் (tenant retainers) என்னும் ஏவலருக்கே நடுகற்கள் பெரும்பாலும் நடப்பட்டன. படைத்தலைவர்களுக்கோ நிலவுடையார்க்கோ நடுகற்கள் பொதுவாக நடப்படவில்லை. உள்ளூர் நிலக்கிழார் மட்டத்தில் கொத்தடிமைகளாக இருந்தவரே உழையர் அல்லது வேலைக்காரர் அல்லது அடியான்கள் எனப்பட்டனர். ஊர்ப்படைகளில் இருந்தவண்ணம் மாற்றாரின் ஆநிரை கவர்வதிலும் ('தொறு கொள்வதிலும்') காப்பதிலும் மீட்பதிலும் வீரம் காட்டி மறைந்தவர்க்கே நடுகல் நடப்பட்டது. சிற்றரசர்

www.tamilarangam.net



களுக்கும், குறுநில மன்னர்களுக்கும் இடையில் மூண்ட சண்டைகளில் மடிந்தவர்களாகவும் அவ் வுழையர்கள் இருந்தனர். முடிமன்னர்களுக்கு இடையில் நடந்த போர்களில் மாண்டவர்க்குப் பொதுவாக நடுகல் நடப்படவில்லை.[69]

தொடக்கத்தில் சின்னஞ்சிறு தாக்குதல்களாயிருந்த — 'தொறுகொள்' வெட்சிப்போர் வடிவிலான — வடுகரின் ஊடுருவல்கள், சேர சோழ பாண்டிய அரசுகள் அடங்கிய தமிழகத்தின் கருப்பகுதிக்கு அப்பால் அப் பேரரசுகளின் அடங்காப்பற்றுகளாயிருந்த கொங்கு நாட்டிலும் தொண்டைநாட்டிலுமே நடந்தன. அதனை மெய்ப்பிக்கும் சான்றுகளாகவே தமிழகத்தில் நடுகற்கள் விரவியுள்ள பாங்கு உள்ளது. தமிழகத்தில் கிடைத்துள்ள பல்லவர் காலத்துக் கல்வெட்டுகளைக் காட்டும் அட்டவணை அதைக் காட்டும்:

### தமிழகத்தில் பல்லவர் காலக் கல்வெட்டுகள்[70]

| எண் | அரசன் | காலம் கி.பி. | மொத்தக் கல்வெட்டுகள் | கிடைத்த மாவட்டம் | அவற்றில் நடுகற்களின் எண்ணிக்கை | எழுத்தமைதி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | சிம்மவிட்டுணு | 555-90 | 8 | தருமபுரி | 6 } 8 | வ |
| | | | | திருவண்ணாமலை | 2 | |
| 2 | முதல் மகேந்திரவர்மன் | 590-630 | 31 | செங்கை | 3 | கி/ச |
| | | | | வடவார்க்காடு | 12 | |
| | | | | தென்னார்க்காடு | 2 | த 1 |
| | | | | திருச்சி | 5 | |
| | | | | தருமபுரி | 9 | |
| 3 | முதல் நரசிம்மவர்மன் | 630-70 | 9 | வ. ஆ. | 6 | வ |
| | | | | செங்கை | 1 | |
| | | | | தருமபுரி | 1 | வ |
| 4 | இரண்டாம் மகேந்திரவர்மன் | 668-70 | 6 | தருமபுரி | 1 | வ |
| | | | | வ. ஆ. | 1 | வ |
| 5 | முதல் பரமேசுவரவர்மன் | 670-700 | 6 | தருமபுரி | 2 | வ |
| | | | | வ. ஆ. | 2 | வ |
| | | | | சேலம் | 1 | வ |
| | | | | செங்கை | 1 | த |
| 6 | இரண்டாம் நரசிம்மவர்மன் (இராசசிம்மன்) | 695-728 | 24* >>30** | செங்கை | 16 | கி/ச |
| | | | | வ. ஆ. | 5 | தே 1 |
| | | | | தெ. ஆ. | 2 | |
| | | | | தருமபுரி | 1 | வ |
| 7 | மூன்றாம் மகேந்திரவர்மன் | 720-28 | 3 | செங்கை | 3 | கி/ச |
| 8 | இரண்டாம் பரமேசுவரவர்மன் | 728-31 | 1 | தெ. ஆ. | 1 | த |

www.tamilarangam.net



| 1 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|
| 9 இரண்டாம் நந்திவர்மன் | 731-96 | 18 | செங்கை | 6 | |
| | | | வ. ஆ. | 1 | |
| | | | திருவண். | 11 | வ 1 |
| | | | திருச்சி | 1 | த 1 |
| 10 தந்திவர்மன் | 796-847 | 17 | செங்கை | 8 | |
| | | | வ. ஆ. | 3 | த/வ 1 |
| | | | திருச்சி | 3 | |
| | | | சித்தூர் | 1 | |
| | | | தெ. ஆ. | 2 | |
| 11 மூன்றாம் நந்தி வர்மன் | 846-69 | 36 | செங்கை | 6 | |
| | | | வ. ஆ. | 3 | |
| | | | தெ. ஆ. | 13 | |
| | | | தஞ்சை | 8 | |
| | | | திருச்சி | 6 | த 1 |
| 12 நிருபதுங்கன் | 865-99 | 47 | செங்கை | 22 | வ 1 |
| | | | வ. ஆ. | 2 | த |
| | | | திருவண். | 12 | |
| | | | தெ. ஆ. | 2 | |
| | | | தஞ்சை | 7 | |
| | | | திருச்சி | 4 | |
| 13 அபராசிதன் | 885-903 | 18 | செங்கை | 18 | த |
| 14 கம்பவர்மன் | 870-912 | 45 | செங்கை | 26 | |
| | | | வ. ஆ. | 17 | கி/ச |
| | | | தெ. ஆ. | 1 | த |
| | | | நெல்லூர் | 1 | |
| 15 வைரமேகன் | | 4 | செங்கை | 1 | த |
| | | | வ. ஆ. | 2 | |
| | | | தெ. ஆ. | 1 | |
| 16 அபிமானசித்தி | | 1 | செங்கை | 1 | த |
| 17 சத்தி | | 4 | வ. ஆ. | 1 | |
| 18 சந்திராதித்தன் | | 1 | தெ. ஆ. | 1 | |
| 19 கலிநாரி | | 1 | (திருநாம நல்லூர்) | 1 | கி/ச |

வ=தமிழ் வட்டெழுத்து; த=தமிழ்; கி=கிரந்தம்; ச=சங்கதம்; தே=தேவநாகரி.
* முழுமையானவை ** மொத்தம்

தகடூர் (தருமபுரி) மாவட்டத்தில் தமிழ் வட்டெழுத்திலுள்ள பல்லவர் கால நடுகற்களில் கங்க வடுகர்க்கு உழையராயிருந்தோரின் மக்களும் மடிந்துள்ளனர். அத் தகடூர் (தருமபுரி) மாவட்டத்தில் கிடைத்துள்ள பல்லவர் கால நடுகற்கள் சிலவற்றின் அட்டவணை அதைக் காட்டும். காவிதி வடுகன், பூங்குடி வடுகன் போன்ற தமிழ்ப்பெயர்களைப் பூண்ட வடுகர்களின் பெயர்களும் அவற்றில் வருவதைக்

www.tamilarangam.net



காணலாம். இதனால், அந் நடுகற்கள் யாருக்காக நடப்பட்டதோ அவர்களில் பலர் தமிழ்ப்பெயர்களைப் பூண்ட வடுகராகவே இருந்திருக்க வேண்டும். சண்டையில் மடிந்த வடுகர்களுக்காக நடப்பட்ட நடுகற்களும்கூடத் தமிழ் வட்டெழுத்திலேயே எழுதப்பட்டுள்ளன. வடுகரின் மொழி கொடுந்தமிழே ஆகும். பாகதம் போல் தமிழினின்று முற்றாகத் திரிந்துவிட்ட மொழியாக அன்றைய வடுகுமொழி இல்லை. தமிழகத்திற்குள் ஊடுருவிய வடுகர்கள், தமிழ் வட்டெழுத்தை ஆள்வதில் அதனால் பெரிய தடை ஏதும் இருக்கவில்லை. இது போக, பதினெட்டாம் நூற்றாண்டில் கடல்கடந்து வந்த ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரருமான ஐரோப்பிய வந்தேறிகள் தமிழரிடமிருந்தே தத்தம் கூலிப்படைகளைக் கட்டியமைத்ததைப் போல், அக்காலத்து வடுக வந்தேறிகளும்கூடத் தமிழரிடையேயிருந்து சின்னஞ்சிறு கூலிப்படைகளைக் கட்டியிருக்கலாம்.

### பல்லவர் கால நடுகற்கள்[71]

### தகடூர் (தருமபுரி) மாவட்டம்

| எண் | ஊர் | அரசன் | காலம் கி. பி | மடிந்தவர் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | தின்னஹள்ளி (அரூர்) | சிம்மவிட்டுணு | 6ஆம் நூற்றாண்டு | கங்க அரசனின் மக்கள் பல்லவன் சிம்மவிட்டுணுவுடன் சேர்ந்து போரிட்டபோது அவனது அடியானான யடியம் பாற்றரைசர் மகனான நந்தி கட்டியார் மாண்டான். |
| 2 | பாப்பம்பாடி (அரூர்) | சிம்மவிட்டுணு | 6ஆம் நூற்றாண்டு | கங்க அரசனின்மீது படையெடுத்து வந்தவரோடு சண்டையிட்டு வாணபெருமரை சரு என்பான் மடிந்தான். |
| 3 | கானம்பட்டி (ஊற்றங்கரை) | சிம்மவிட்டுணு | 6ஆம் நூற்றாண்டு | வதிசெலாவன் என்னும் பெயருடையான் ஆநிரை கவர்கையில் செத்தான் |
| 4 | நாதியானூர் (ஊற்றங்கரை) | சிம்மவிட்டுணு | 6ஆம் நூற்றாண்டு | புறமலைநாட்டின் மொக்கல் பாடியினர் ஆநிரை கவர்ந்த போது, களாப்புறையை ஆளும் மைந்தைகள் மகனான சதியார் மடிந்தான். |
| 5 | புலியானூர் (ஊற்றங்கரை) | சிம்மவிட்டுணு | 6ஆம் நூற்றாண்டு | வேணாட்டிலுள்ள சிறுபாழ் என்னும் பகுதியை ஆண்டு வந்த பாலாசிரியனின் மகன் சிறுப்படுவானாரு கருங்காலிப் பாடியில் ஆநிரை கவர்கையில் மாண்டான். |

www.tamilarangam.net



| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| 6 | கதிரம்பட்டி (அரூர்) | முதல் மகேந்திர வர்மன் | கி.பி. 597 | காரிமங்கலத்தில் ஆநிரையைக் கவர்ந்த புரவர் பெற்றாண்டான் கோம்புளிகன் என்பானின் மகன் ஏறன் மடிந்தான். |
| 7 | மொண்டுகுழி (அரூர்) | முதல் மகேந்திர வர்மன் | கி.பி. 604 | கடிகாவினஞ்சியின் மகனான பொற்கோவினாரு என்பவன் வீரவாண்ணரைசரின் மகனாகிய பொன்மாதனான் என்பானுடன் சண்டையிட்டு மடிந்தான். |
| 8 | மொண்டுகுழி (அரூர்) | முதல் மகேந்திர வர்மன் | கி.பி. 605 | கொற்றமங்கலத்துப் பொற்கோவனாரின் அடியான் தேருணி சாத்தன் என்பான் நரிபள்ளிக்குச் சென்று பொன்மாதனாருடன் பொருது மாண்டான். |
| 9 | நடுப்பட்டி (ஊற்றங்கரை) | முதல் மகேந்திர வர்மன் | 6ஆம் நூற்றாண்டு | மேல்வேண்ணாட்டுக் குப்பையூரில் காவிதி வடுகன் என்பவன் ஆநிரை மீட்கப் போய் சண்டையிட்டு, அச் சண்டையில் மடிந்தான். |
| 10 | நடுப்பட்டி (ஊற்றங்கரை) | முதல் மகேந்திர வர்மன் | கி. பி. 609 | மீவேண்ணாட்டிலுள்ள கிப்பை என்னும் ஊரை ஆண்டுவந்த வணிகன் ஊர்கொள்ளும் போது, கிணங்கன் என்பான் இறந்தான். |
| 11 | புலியானூர் (தகடூர்) | முதல் மகேந்திர வர்மன் | 6ஆம் நூற்றாண்டு | மீவேண்ணாட்டுக் கட்டையூரில் ஆநிரை கவரும்போது சிறுபாழ் பகுதியை ஆண்டு வந்த பாலாசிரியனின் மகன் வீரவர் என்பான் மாண்டான். |
| 12 | புலியானூர் (ஊற்றங்கரை) | முதல் மகேந்திர வர்மன் (சிம்மவர்மன்) | 6ஆம் நூற்றாண்டு | வேண்ணாட்டிலுள்ள சிறுபாழ் என்னும் பகுதியினை ஆண்டு வந்த பாலாசிரியனின் மகன் மாறன் ஆநிரை கவர்கையில் மடிந்தான். |
| 13 | போத்தன் கோட்டை (ஊற்றங்கரை) | முதல் மகேந்திர வர்மன் | 7ஆம் நூற்றாண்டு | கோவூர்நாட்டிலுள்ள கீழ்வழிப் பள்ளகூர் நஞ்சுணியார் என்பானின் மகன் கொற்றாடை ஆநிரை மீட்கையில் மாண்டான். |
| 14 | பூதநத்தம் (அரூர்) | முதல் நரசிம்ம வர்மன் | கி. பி. 640 | மீகொன்றைநாட்டு அரசனின் அடியானான முதியப்போவனார், ஆநிரை கவரும் போது மடிந்தான். |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| 15 | கூக்கடப்பட்டி (அரூர்) | ஈச்சுவரபருமன் | 7ஆம் நூற்றாண்டு | கந்தவாண்ணதி அரசன் என்பான் மேற்குக் கங்கருடன் போரிட்டபோது, அவனது அடியானாகிய நாவிண்ண தீரனாரின் மகன் சாத்தன் மடிந்தான். |
| 16 | கூக்கடப்பட்டி (அரூர்) | ஈச்சுவரபருமன் | 7ஆம் நூற்றாண்டு | அதே சண்டையில் பராம தாயார் மகன் கண்ணமாறனும் செத்தான். |
| 17 | கதிரம்பட்டி (அரூர்) | மகேந்திர வர்மன் | 8-9 நூற்றாண்டு(?) | குளவர் என்பானின் மக்கள் இருவர் காரிமங்கலத்தில் ஆநிரையைக் கவரும்போது மாண்டனர். |
| 18 | சின்னக்கவுண்டன்பட்டி (நவலை) (அரூர்) | ? | 9ஆம் நூற்றாண்டு | இந்தரையன் என்பான் வடவல்லூரை அழித்திட்டபோது பூங்குடி வடுகன் அவனை எதிர்த்துச் சண்டையிட்டு மடிந்தான். |

அடைப்புக்குள்ளிருப்பவை வட்டங்களின் பெயர்கள்

படையெடுப்புகளின்போது, வடுகப் படைத்தலைவர்கள் வகிக்கும் பங்கு மிகப் பெரியது. தமிழர்நாட்டைக் கவ்வியவுடன் அவ் வடுகர் அமைத்த அரசியல் கட்டுமானம் அதனால் படையாட்சி (fiefdom) வடிவிலான ஆட்சியமைப்பாகவே இருந்தது. போர்க் காலப் பொருளியலுக்கு அஃது இயல்பானது. பிடித்த தமிழகத்தை அவ் வடுகர்கள் சில மண்டலங்களாகப் பிரித்து, வன்படை கொண்டு தம்முடைய வந்தேறிச் சுரண்டலாட்சியை நிறுவி நிலைப்படுத்தினர். ஆயினும், தமிழர் வடித்த 'நாடு' போன்ற அடிப்படை ஆட்சியியல் கூறுகள், ஊர்ப் பொருளியல், அரசு உறுப்புகள் ஆகிய தொன்மையான கட்டமைப்புகளை அவர்கள் மாற்றத் துணியவில்லை. தமிழரை வென்ற வடுக அநாகரிகர்கள், அத் தமிழரின் ஆட்சியியல் பண்பாட்டையே தமதாகத் தன்வயமாக்கிக் கொண்டனர். ஒரு சிறிய படையைக் கொண்டு இவ்வளவு பெரிய துணைக்கண்டத்தைப் பிடித்த ஆங்கிலேயர்க்கு, அதை நேரடியாகக் கட்டியாள வல்ல ஆள்வலிமை இல்லாததால், உள்ளூர் ஆண்டைகளிடமே பேரம் பேசிக்கொண்டு இங்கிருந்த பழைய அரசியல் குமுகக் கட்டுமானங்களை ஒழிக்காமல் உள்ளது உள்ளவாறே அலுங்காமல் குலுங்காமல் வைத்து ஆளத்தொடங்கியதை இங்கு நினைவு கூர்க! பதினெட்டாம் நூற்றாண்டின் கதையே இதுவாயின், 1400 ஆண்டுகளுக்கு முன்னர் இந் நிலை அடிப்படையில் வேறானதாக இருந்திருக்குமோ? பிடித்த தமிழகத்தைப் பிழிந்தெடுக்கவும், மேன்மேலும் சுரண்டிக் கொழுக்க

www.tamilarangam.net



வும் ஏற்கெனவே விளங்கிவந்த ஊர்ப் பொருளியலையும் அரசுக் கட்டு மானங்களையும் வடுக வந்தேறிகளும் தொடக்கத்தில் அப்படியே பயன்படுத்திக் கொண்டிருக்க வேண்டும்தானே?

## படையெடுப்புகளின் வழியாக நிலப்பறிப்புகள்!

படையெடுப்புகளின் வழியாகப் பிடித்த தமிழர்நிலத்தைப் படை வழியில் படைகொண்டே ஆள வேண்டிய கட்டாய நிலையிலிருந்த கீழைவடுகராகிய பல்லவர்கள், தமிழகத்தில் புதிய படையாட்சி முறையைத் தோற்றுவித்தனர். அரசுக்கும் பிராமண அகரங்களுக்கும் இடையில் இந்தப் படையாட்சி முறை ஓர் இடைப்பட்ட ஆட்சிக் கட்டுமானமாக இருந்தது.

ஒரு நாட்டின்மீது படையெடுத்து அதைப் பிடித்த எந்தப் படை யெடுப்பாளனும், தான் கைப்பற்றிய அந் நாட்டிலுள்ள நிலபுலங் களை எல்லாம் பறித்து (Usurpation), "கண்ணுக்கு எட்டிய வரை யுள்ள இந் நிலம் முழுவதும், இதோ உன் நிலம்!" எனத் தம்மொடு வந்த படைஞருக்கும் தம் குலத்தாருக்கும் குடியினருக்கும் முதலில் மாராயம் (benefices) வழங்கத்தான் செய்வான். உலகளாவிய அள விலும் இது போல்தான் நடந்தது. பிடித்த அந் நாட்டில் தாம் நிலை பெற்றுக் குதிர வேண்டி, பிடித்த நாட்டினரில் சிலரைக் கைக்குள் போட்டுக்கொண்டு, தம்மவர் எடுத்ததும் பிடித்ததும் போக எஞ்சிய நிலப்பரப்பில் காடும் கல்லும் கரடும் மலிந்த சில பகுதிகளை அக் கைக்கூலிகளுக்குப் பின்னர் அளித்திருக்கத்தானே வேண்டும்? தங் களின் வந்தேறி நலன்களுக்கு உகந்த அடிமைப் படையாட்சிகளாக — அடிமைப் பேராளராக — இருக்குமாறு அவர்களைப் பணித்த நிகழ்வும் நடந்திருக்கத்தானே வேண்டும்?

## முல்லைமாறி அரியநாயக முதலி

கி. பி. 13ஆம் நூற்றாண்டில் தமிழகத்தின்மீது படையெடுத்து வந்த விசயநகரத்து வடுகர்கள், பாண்டியநாட்டைக் கைப்பற்றிக் கொண்டு, தமிழரில் முல்லைமாறிகளில் ஒருவனான அரியநாயக முதலியாரைக் கொண்டே தொன்று தொட்டுத் தமிழரிடம் விளங்கி வந்த 'நாடு' முறையை ஒழித்துப் பாளையப்பட்டு என்னும் வந்தேறிப் படைவழி ஆட்சியமைப்பை உருவாக்கவில்லையா? கன்னடரும் தெலுங்கருமான வடுகரையே பெரும்பாலான பாளையக்காரர்களாக ஆக்கிவிட்டு, எஞ்சிய உதவாக்கரைப் பகுதிகளை மட்டும்தானே தமிழ ரில் மறவர்களுக்கும் கள்ளர்களுக்கும் நாயக்க வந்தேறிகள் கொடுத் தனர்? இதை யொத்த ஒரு நிகழ்வின் விளைவே, பல்லவர் காலத்துப் படையாட்சி முறையாகும். ஆகவே, இப் படையாட்சிகள் பெரும் பாலும் வந்தேறி வடுகருக்கே தரப்பட்டிருக்க வேண்டும். தமிழரில் படையாட்சி பெற்றவர்கள், விரல்விட்டு எண்ணக்கூடிய மிகச் சில ராகவே இருந்திருக்க வேண்டும். இந்த வரலாற்றை அறியாத மயக்கத்

www.tamilarangam.net



தால்தான், தமிழரில் படையாட்சி சாதியினர் சிலர், தங்களைப் பல்லவர் வழிவந்தவரெனத் தவறாக எண்ணவும் கூறிக்கொள்ளவும் செய்கின்றனர்!

வந்த வடுக வந்தேறிப் படைகள், அப்போது எண்ணிக்கையில் இலக்கக் கணக்கில் இருந்திருக்க முடியாது. பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் தமிழகத்தையும் இத் துணைக்கண்டத்தையும் பிடித்த ஆங்கிலேயரின் எண்ணிக்கையே சில ஆயிரங்கள் என்று தானே இருந்தது? தமிழரிடமிருந்து அவ் வடுகர்கள் பறித்த நிலங்கள் போக, எஞ்சிய தமிழ் நிலப்பரப்பு இன்னும் பெரிதாகவே இருந்தது. இந் நிலையில், பிடித்த பெருநிலத்தைக் கட்டியாள வேண்டுமன்றோ? அவ்வாறு கட்டியாள வேண்டுமாயின், குமுக அமைதி (social peace) வேண்டும்தானே? அக் குமுக அமைதியை எந்த விலை கொடுத்தாயினும் பெற்றே ஆக வேண்டியிருந்த நிலையில், தமிழரின் நிலங்களைப் படைவழியில் பறித்தெடுக்கும் வன்முறைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டிய தேவை பெரிதானது.

## காணியாட்சியும் வந்தேறிப் பொருளியலும்

அவ் வடுகர்கள் இன்னும் கவ்வாத தமிழகத்தின் பகுதிகளில் தொன்றுதொட்டு வந்த நிலக்கிழமையின் தமிழ் வடிவமான காணி யாட்சி முறை மிக வலுவாகவே இருந்தது. எண்ணிக்கையில் குறைவானவராயிருந்த வடுக வந்தேறிகள், வலியப் பறித்த தமிழர் நிலங்களில் நேரடியாகத் தாங்களே இறங்கி வெள்ளாண்மை செய்ய இயலாது என்னும் நிலை வேறு பெரிய நெருடலாயிருந்தது. யாரிடமிருந்து மண்ணைப் பறித்தனரோ அந்தத் தமிழரையே — அவர்தம் சொந்த நிலங்களிலேயே — குடியானவர்களாகவும் பண்ணையடிமைகளாகவும் கொத்தடிமைகளாகவும் அமர்த்திப் படைவழியில் ஒரு வந்தேறிப் பொருளியலைக் கட்டியமைக்க வேண்டியிருந்தது.

தமிழர் வடித்தெடுத்த ஊராட்சி முறையை வடுக அநாகரிகர்கள் அப்படியே தம்வயமாக்கிக் கொண்டனர். தமிழ் மூவேந்தரின் நேரடி ஆட்சிக்கு அப்பாற்பட்ட அடங்காப்பற்றுகளாக இருந்த கொங்குநாட்டிலும் தொண்டைநாட்டிலும் ஊர்த்தலைவர்களை ஊராளிகள் என்றனர்.[72] 'ஊராளி' என்னும் பெயரே வடுக வந்தேறிகளால் 'காவுண்டன்' என்றும், 'கௌண்டன்' என்றும் வடுகமொழியில் வழங்கப்பட்டது. இந்த ஊர்த்தலைவர்கள் ஆற்றிய ஊர்ப்பணிக்காகவும், படைஞர்கள் ஆற்றிய படைப்பணிகளுக்காகவும் இறை நீக்கிய உம்பளம் (கன்னடத்தில் 'உம்பளி') என்னும் வழிவழி வந்த நிலக்கொடை வழங்கப்பட்டது.

இந் நிலையில், ஊர்களிலிருந்து நெல்லாகவோ பிற கூலங்களாகவோ வலிய வருவாய் (revenue) திரட்டிய வடுக ஆளவந்தார்

www.tamilarangam.net



கள், தம் பங்கு போக ஒரு பெரிய பங்கைத் தமக்கு மேலேயுள்ள அதிகாரிகளுக்கு விடுக்க வேண்டியிருந்தது. அந்த வருவாய் மேன் மேலும் குவிவதை வைத்து வந்தேறி ஆட்சியைப் பேணுவதே, அவ் வடுகரின் போர்வழி ஆட்சியியல் பணியானது. நிலவருவாய் தண்டு வதே அவ் வடுகர் கண்ட வந்தேறிப் பொருளியலின் உயிர்வினை யானது.

## வடுக நிலக்கிழமை

படையெடுத்துப் பிடித்த ஒரு நாட்டை ஓர் அடங்காப்பற்றாக வைத்தும், படைத்தலைவன் ஒருவனை அதன் ஆளுநனாக அமர்த் தியும்தானே அவ் வடுகரும் ஆள வேண்டியிருந்திருக்கும்? வடுக அரசக்குடியிலிருந்து வந்த அத்தகைய ஆளுநர்களின்கீழ் தமிழர்நிலம் பல்லவராலும் படைவழியிலேயே ஆளப்பட்டது. தமிழரிடமிருந்து பறித்தெடுக்கப்பட்ட நிலங்களெல்லாம் வடுக ஆளவந்தாரின்கீழ் வடுக ரின் பண்ணைகளாயின. இந்த ஆளவந்தார்கள், வடுக மன்னனுக்குத் திறை கட்டிவந்தனர்.

இனப்பிழிந்தெடுப்பையும் சுரண்டலையும் வற்றாத பேரூற்றாக நிலைப்படுத்திக் கொள்ளும் நோக்கில் — அந்தப் பல்லவ வந்தேறிகள் கருநாடகத்திலிருந்து இறக்குமதி செய்த அகரகாரப் பொருளியலைக் கொண்டு வந்து புகுத்தித் தமிழகத்தில் அன்றிருந்த அடிப்படைப் பொருளியல் கட்டுமானங்களில் மீப்பெரும் மாற்றங்களை அடுத்து விளைவித்தனர். அகரகார முறை என்பதே ஓர் இரவலும் வடுகப் புகுத்தலும் ஆகும். இதனால், அகரகார நிலக்கிழமையை வடுக நிலக் கிழமை என்றோ அடிமை நிலக்கிழமை என்றோ அழைக்கலாம்.

படையெடுத்து வென்ற தமிழகத்தில் நிலையாகவும் அமைதி யாகவும் ஒரு வந்தேறி வாழ்வியலை அமைக்க முயன்ற வடுகர்கள், வன்முறை வழியில் நிலப்பறிப்புச் செய்வது எதிர்விளைவுகளையே தோற்றுவிக்கும் என்னும் பட்டறிவைப் பாடமாக்கிக் கொண்டனர். மேலும், தமிழர் உருவாக்கிய காணியாட்சி முறை மிக வலுவா யிருந்தது. தமிழர் கண்ட அந்தக் காணியாட்சி முறையை வேரறுக்கும் நோக்கத்துடனேயே பல்லவ வந்தேறிகள் இறையிலி முறையைப் புகுத்தினர். பிராமண அகரங்களையும் தேவதானங்களையும் திரு விடையாட்டங்களையும் பள்ளிச்சந்தங்களையும் தோற்றுவித்தனர். வடுகப் பிராமணர்களுக்கும் கோயில்களுக்கும் மடங்களுக்கும் தமிழ ரிடமிருந்து பறித்த நிலங்களையே கொடையாக வழங்கி அவற்றை இறை தவிர்த்த இறையிலி நிலங்களாக்குவது என்னும் கொடிய உத்தியை அவர்கள் வகுத்தனர். தமிழரை ஏமாற்றி அந்தத் தமிழ ரிடம் எஞ்சியிருந்த நிலபுலங்களையும்கூடக் கைப்பற்றவேதான் கோயிலுக்கும் மடங்களுக்கும் நிலங்களை இறையிலியாக்கி எழுதி வைக்கின்ற வழக்கம் உருவாக்கப்பட்டது. வடுக வந்தேறிகளுக்குத்

www.tamilarangam.net



தோள்கொடுத்த மிகப் பெரும் சூழ்ச்சிப்பொறியே அந்த இறையிலி முறையாகும்.

இவை போக, அருச்சனாபோகம், பட்டவிரித்தி ஆகிய விரித்திகளும்கூட அவற்றின் கொசுறுகளாகத் தோற்றுவிக்கப்பட்டன. குயவன், வண்ணான், கோயில் பணியினனான கணக்கன், கோயில் தேவடியாள் ஆகியோருக்கும் காணிகள் வழங்கப்பட்டன.

## வந்தேறியரை வாழவைத்த இறையிலி!

இதனால், பிராமண அகரங்களும் பிரமதேயங்களும் சதுர்வேதி மங்கலங்களும் அரசனுக்கும் குடிகளுக்கும் இடையிலான இடைத்தர அதிகார நடுவங்களாகப் பூதமாய் வடிவெடுத்தன. காணிக்கொடை பெற்ற வடுகப் பிராமணர்கள், ஆளவந்தார்க்குப் படையூழியம் செய்ய வேண்டும் என்னும் கடப்பாடு இல்லை. நிலத்தின்மீது அவர்களுக்கிருந்த கிழமை(உரிமை)யை எந்தக் கொம்பனாலும் பறித்துவிட முடியாது. வடுகப் படையெடுப்பாளராக வந்து தமிழ்மண்ணைக் கவர்ந்த பல்லவர்கள், இதனாலேயே இறையிலி முறை என்னும் புதிய விளைப்புறவைப் புகுத்தினர். நிலக்கொடையாக அளிக்கப்பட்ட நிலங்களையும் ஊர்களையும் எளிதில் விற்கவோ வாங்கவோ ஒற்றி வைக்கவோ வல்ல உரிமை பிராமணக் காணியாளர்க்கு இருந்தது. அதனால், நிலத்தை எளிதில் விற்று அயற்படுத்த (alienate) முடிந்தது.

பிராமணருக்கு நிலக்கொடை வழங்கும் வழக்கம் கடைக்கழக(சங்க)க் காலத்திலேயே தொடங்கிவிட்டதெனினும், மேலை வடுகரான களப்பாளரின் சூறையாடல்களுக்குப் பின்னர் வந்த கீழை வடுகரான பல்லவரின் காலத்தில்தான் வந்தேறி வடுகப் பிராமணியம் ஓர் அமைப்பியல் வடிவத்தைப் பெற்றது.

பிராமணருக்கு முற்றுடைமையாக்கப்பட்ட பிராமண அகரங்களையும் (அக்கிரகாரங்களையும்) பிரமதேயங்களையும் சதுர்வேதி மங்கலங்களையும் அமைத்த இயற்பாடு, தெலுங்கரும் கீழை வடுகருமான பல்லவரின் படையெடுப்புக்குப் பின்பே தமிழகத்தின் தொண்டைநாட்டில் புகுத்தப்பட்டது. தொடக்ககாலப் பல்லவர்களுக்கு, முடிசூட்டல் போன்ற பணிகளை வள்ளுவரும் உவச்சருமே செய்துவந்தனர். முற்காலப் பல்லவரின் ஆட்சிக் காலத் தொடக்கத்தில் அவ்வாறிருந்தது. அருகராயிருந்த பல்லவர்களும்கூட வடுக (ஆரிய)ப் பிராமணியத்தின் ஊர்திகளாகவும் தொண்டரடிப்பொடியராகவும் இருந்தனர். நிலைமை இதனால் தலைகீழானது. முன்னர் பூசாரித் தொழில் செய்துவந்த வடுகப் பிராமணர்கள் வந்தேறி வடுகரால் பெரிய காணியாளராக்கப்பட்டனர். இதனால், பிராமண அகரங்கள் தமிழகத்தில் பெருகின. இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தனிப் பிராமணர்க்கு நிலத்தை முற்றூட்டாக வழங்கிய பழைய வழக்கம் போய், வடுகப் பிராமணக் கும்பல்களுக்குக் காணியாட்சிகளாக ஊர்

www.tamilarangam.net



ஊராகத் தரப்பட்டன. இதனால் எழுந்த புதிய விளைப்புறவுகள், அக்காலத்திய நிலக்கிழமையில் ஓர் இயல்பு மாற்றத்தை விளை வித்தன. வந்தேறிக் கீழை வடுகரின் நாடுகவர்புக்குப் பின்னர் ஓர் அடிமைப் பொருளியலாய்க் கெட்ட சூழலில், நிலக்கிழமை கொண்ட புத்தம் புதுக்கோலம் அது. பழைய நிலக்கிழமை, தமிழரிடம் இயல் பாகவே அரும்பிய நிலக்கிழமை. இப் புதிய நிலக்கிழமையோ, வடுக ரின்கீழ் அடிமையுண்ட தமிழகத்தில், தமிழ் நிலக்கிழமைக்கு நேர்ந்த ஒரு நேர்ச்சியால் வந்த பிறழ்ச்சியாகும். வடுகரால் தமிழகத்திற்குள் புகுத்தப்பட்ட அகரகார முறை, நடுவண் அதிகாரமான அரசனுக்கும் மண்ணின் மைந்தரான தமிழ் வேளாண்குடிக்கும் இடையில் வழி வழியாய் விளங்கிவந்த கொப்பூழ் உறவுகளை அறுத்துப்போட்டது.

இதுவரை கிடைத்துள்ள பல்லவச் செப்பேடுகளில், 20 செப் பேடுகள் பிராமணர்க்குப் பிரமதேயமாக வழங்கப்பட்ட நிலக்கொடை களைப் பற்றியனவாகும். இரண்டு செப்பேடுகள் அருகர்க்குப் பள்ளிச் சந்தமாக அளிக்கப்பட்ட நிலத்தைப் பற்றியன. இன்னும் இரண்டு செப்பேடுகள், சிவன் கோயிலுக்குத் தேவதானமாக வழங்கப்பட்ட நிலக்கொடைகளைப் பற்றியனவாகும். திருமால் கோயில்களுக்குத் திருவிடையாட்டமாக வழங்கிய நிலக்கொடைகளைப்பற்றி இரண்டு செப்பேடுகளும், வாகூரில் (பாகூரில்) இருந்த பிராமணக் கல்விக்கூடத் திற்கு வழங்கப்பட்ட கல்விக் கொடையைப்பற்றி ஒரு செப்பேடும் உள்ளன.[73]

### பல்லவர் காலச் செப்பேடுகள்[74]

| எண் | அரசன் | செப்பேடு | வெளியிட்ட இடம் | மொழி |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | சிம்மவர்மன் | நல்லமலை (மஞ்சிக்கல்லு) | | பா/பி |
| 2 | சிவகந்தவர்மன் (இளவரசன்) | மயிதவோலு | காஞ்சி | பா/பி |
| | | ஹிரஹதள்ளி | காஞ்சி | பா/பி |
| | | குணபடியம் (குண்டூர் மாவட்டம்) | குணபடிதேயம் | பா/பி |
| 3 | மூன்றாம் கந்தவர்மன் | ஓங்கோடு | | |
| 4 | இரண்டாம் சிம்மவர்மன் | வேசந்தா<br>நெடுங்கராயம்<br>உருவப்பள்ளி | | |
| 5 | மூன்றாம் சிம்மவர்மன் | தர்சி<br>சிக்கமகளூர்<br>பிகிரா<br>மங்களூர்<br>விழவெட்டி<br>ஓங்கோடு | | |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| 6 | சிம்மவர்மன் | பள்ளன்கோயில் | | ச/த. |
| 7 | முதல் பரமேசுவரன் | கூரம் | | ச/த |
| | | உன்னகுரவயம் | | ச |
| 8 | இரண்டாம் நரசிம்ம வர்மன் (இராசசிம்மன்) | ரேயூரு | | ச |
| 9 | இரண்டாம் நந்திவர்மன் | காசக்குடி | | ச/த |
| | | புள்ளூர் | | |
| | | தண்டன்தோட்டம் | | ச/த |
| | | கொற்றங்குடி | | ச/த. |
| | | உதயேந்திரம் | | ச |
| | | பட்டத்தாள்மங்கலம் | | |
| 10 | மூன்றாம் நந்திவர்மன் | வேலூர்ப்பாளையம் | | ச/த |
| 11 | கந்த சிசியன் | இராயக்கோட்டை | | ச/த |
| 12 | நிருபதுங்கவர்மன் | வாகூர் | | |
| 13 | அபராசிதவர்மன் | வேலஞ்சேரி | | |
| 14 | பிற்காலப் பல்லவர்கள் | சூரா | | |
| | | சேந்தனூர் | | |
| | | ஒசக்கோட்டை | | |

பா=பாகதம் (பிராகிருதம்); பி=பிராமி எழுத்து; ச=சங்கதம்; கி=கிரந்த எழுத்து; த=தமிழ்

பிராமண அகரத்தை அமைத்த பாங்குக்கு ஒரு தனித்தன்மையும் பொதுத்தன்மையும் உண்டு. அதற்கான எடுத்துக்காட்டுகள் உண்டு. இரண்டாம் நந்திவர்மன் (கி. பி. 731-96) தன்னுடைய இரண்டாவது ஆண்டில் பிரமயுவராசனின் விண்ணப்பத்தை ஏற்று, ஊற்றுக்காட்டுக் கோட்டத்திலிருந்த கொடுகொள்ளி என்னும் ஊரை ஒரு பிரமதேய மாக்கினான். அக் கொடுகொள்ளியில் ஏற்கெனவே காராண்மை யாளராயிருந்தோரை யெல்லாம் நீக்கிவிட்டு, கோரசர்மன் என்னும் வடுகப் பிராமணனை அவன் ஆணத்தி*யாக்கினான். தேவதானப் பிரமதேயமாயிருந்த அவ்வூரைக் குடிநீங்கிக் காராண்மையாக்கி, பூனி என்னும் ஊரைச் சேர்ந்த செட்டிரெங்க சோமாசி என்னும் வடுகப் பிராமணனுக்குப் பிரமதேயமாக அளித்தான். அந்த ஊரிலிருந்த நன்செய், புன்செய் நிலங்களிலிருந்து வரும் பயன்களைத் துய்ப்பதோடு, சேயாற்றிலிருந்தும் வெஃகா ஆற்றிலிருந்தும் திரையனேரியிலிருந்தும் கால்வாய்களை வெட்டிக்கொள்ளவும் உரிமை வழங்கினான். அவ் வாறு வெட்டப்படும் கால்வாய்களுக்குக் கொள்கலமும் புழுதிபாடும் அப் பிராமணன் பெறலாம். கோரசர்மனும் அவனது பிறங்கடையின ரும், மனையும் மனைப்படப்பும் பிறவும் அமைத்துக்கொள்ளலாம்.

* Executor

www.tamilarangam.net



மாட மாளிகைகளைக் கட்டிக்கொள்ளலாம். அந்த ஊரினர் அரசனுக்குக் கட்டிவந்த செக்கு, தறி, உல்லியக்கூலி, பிராமணராசக்காணம், சக்காணம், கல்லால்காணம், செங்கொடிக்காணம், கண்ணிட்டுக் காணம், கதிர்க்காணம், விசக்காணம், குசக்காணம், அரிகொழி, நெய் விலை, புட்டகவிலை, பட்டினக்காணம், இறாமை, நாயாடிகள், தூதுவர், கணிகாரத்திகள், புதுக்குதிரை, பண்ணுப் பாலெடுப்பார், புல், நல்லா, நல்லெருது, நாட்டுவகை, படாங்கழி, கையாள், நெடும்புறை, பனம் பாக்கு, காணத்தண்டம், அதிகரணத் தண்டம், பத்தூர்ச்சாற்று, உழையவயப்பள்ளிவத்து, குவளைநடுவரி, குவளைக்காணம், கமுகு, தெங்கு, பழமையான மரங்கள் ஆகிய வரிகளையும் பணிகளையும் பயன்களையும் அவ் வடுகப் பிராமணனும் அவன் வழிவந்தோரும் துய்த்து வரலாம். ஏற்கெனவேயிருந்த ஒரு தேவதானப் பிரமதேயத்தைக் குடிநீங்கிக் காராண்மையாக்கி, பின்னர் அதை ஒரு பிரமதேயமாக ஆக்கிய கோலம் இஃதாகும்.[75] 'கணிகாரத்திகள்' என்போர் ஆடல்மகளிரான கோயில் தேவடியாள்களாவர். பிராமண அகரத்திற்கும் கோயில் தேவடியாள்களுக்கும் இடையில் நிலவிய நெருங்கிய உறவு இதனால் விளங்கும்.

பல்லவன் இரண்டாம் நந்திவர்மனின் காலத்தில் வேகவதி ஆற்றுக்கு அருகிலுள்ள வில்வலநகரத்தை உதயச்சந்திரன் என்னும் குறுநிலமன்னன் ஆண்டுவந்தான். இவனுடைய வேண்டுகோளுக்கு இணங்கியே, பாலாற்றங்கரையில் உதயச்சந்திரமங்கலம் என்னும் பிரமதேயம் அமைக்கப்பட்டதென உதயேந்திரம் செப்பேடுகள் கூறுகின்றன.[76]

இரண்டாம் நந்திவர்மனின் 33வது ஆட்சியாண்டில் வெளியிடப் பட்ட திருவண்ணாமலை மாவட்டத்துப் போளூர் வட்டத்திலுள்ள புள்ளூர்ச் செப்பேடுகள், அந்த உதயச்சந்திரனின் மகனான இளவரசன் அவனிச்சந்திரன், பல்குன்றக்கோட்டத்திலுள்ள நெல்லி, புள்ளூர், தக்கார், குடியூர் ஆகிய நான்கு ஊர்களை நயதீரமங்கலம் என்னும் பெயரில் பிரமதேயமாக்கியதைப்பற்றிக் கூறுகின்றன.[77]

மங்கல நாடாள்வான் என்பானின் விண்ணப்பத்திற்கேற்ப, இரண்டாம் நந்திவர்மனின் 61வது ஆண்டில் ஆலம்பாக்கநாட்டு நல்லூழான் ஆணத்தியாகச் சோழநாட்டுத் தென்கரை ஆர்வலக்கூற்றத்துக் கொற்றங்குடியை 16 பிராமணர்க்குப் பிரமதேயமாகத் தந்ததைப் பற்றிப் பட்டத்தாள்மங்கலம் செப்பேடுகள் கூறுகின்றன.[78]

மூன்றாம் நந்திவர்மன் செங்கை மாவட்டத்துத் திருக்காட்டுப் பள்ளியிலுள்ள சிவன் கோயிலுக்கு அவ்வூரையே தேவதானமாக்கினான். தஞ்சை மாவட்டத்திலுள்ள திருநாகேசுவரத்தைக் குமரமார்த் தாண்டபுரம் எனப் பெயரிட்டு அதைக் கோயிலுக்கு இறையிலியாக்கினான். திருச்சி அருகிலுள்ள திருக்கற்குடியைப் பிராமணர்களுக்குப் பிரமதேயமாக்கினான். வடவார்க்காட்டுக் காவிரிப்பாக்கத்திற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவனிநாராயணச் சதுர்வேதிமங்கலம் எனப் பெயரிட்டு அதையும் ஒரு பிரமதேயமாக்கினான்.[79]

## மண்ணை இழந்த தமிழர் மதிப்பையும் இழந்தனர்!

தமிழகத்தில் பண்டுதொட்டு விளங்கிவந்த காணியாட்சி முறையை ஒத்த ஒரு வடிவமைப்பே பிரமதேயங்களுக்கும் இருந்தது. அந்தப் பிராமண அகரங்களுக்கு அப்பால், வழிவழிவந்த தமிழ்க் காணியாளரும், வந்தேறிய வடுகக் காணியாளரும் இருந்தனர். அகரகார நிலக்கிழமைக்கு முன்னர் விளங்கிய தமிழ்க் காணியாட்சியின்கீழ், பங்காளிகளால் நிலத்தை எளிதில் அயற்படுத்த முடியாது.

தமிழ் நிலக்கிழார்களிடமிருந்த அரசியல் அதிகாரங்களெல்லாம், மெல்ல வடுக வந்தேறிப் பிராமணரின் கைக்கு வந்தன. பிராமண நிலக்கிழார்க்குக் கொடையாக அளிக்கப்பட்ட காணிகளிலும் கழனிகளிலும் ஊர்களிலும் பண்ணைநிலங்களிலும் தோட்டத் துரவுகளிலும் இருந்த உழவர்களையும் பண்ணையடிமைகளையும்கூடத் தாம் விரும்பியபடி வேற்றிடத்திற்கு இடம்பெயர முடியாமல் முடக்கி வைக்கும் அதிகாரம் அகரகாரத்துப் பட்டர்களுக்கு இருந்தது. இதனால், அரசு அதிகாரிகளுக்கோ அரசனின் அதிகாரத்திற்கோ நேரடியாக ஆட்படாமல், ஏறத்தாழத் தனித்து நிறுத்தி அப் பிரமதேயங்களைத் தன்னுரிமையுடன் நிலைநிறுத்த முடிந்தது.

தமிழரிடமிருந்து பறித்தெடுத்த ஊர்களையும், பொன்னையும் பொருளையும், ஆட்சி உரிமையையும் வடுகப் பிராமணர்க்கும் புதிதாக நிறுவப்பட்ட கோயில்களுக்கும் அரசர்களும் அரசியரும் நிலக்கிழார்களும் தனியாட்களும் வணிகக் குழுக்களும் வாரி வாரி வழங்கியதால், பழைய தமிழ் நிலக்கிழார்கள் செல்வாக்கு இழந்து ஒடுங்கினர். மண்ணைப் பறித்த வடுக வந்தேறிகள் தமிழரின் வளமான ஊர்க்குடியிருப்புகளையும் பறித்துக்கொண்டு, அம் மண்ணின் மைந்தரை ஊருக்கு ஒதுக்குப்புறமாக அமைக்கப்பட்ட சேரிகளுக்குத் தள்ளினர். இந்தப் போக்குப் பல்லவர் காலத்திலேயே பரவலானது.

## தமிழனுக்கு வடுகன் இட்ட பெயரே 'கொத்தடிமை'!

கொத்தடிமை என்பவன் 'வழிவழிவந்த பண்ணையடிமை'யைக் குறிக்கும். மூலக்குடி என்றும் அது பொருள்படும். 'Slave of the original stock' என்றே அதற்கு ஆங்கிலத்தில் பொருளுரைப்பர். கொத்தடிமை குடியடிமை என்பதற்கு `a slave in a branch of the original stock' என்றும் பொருளுண்டு. 'மூலக்குடியின் ஒரு கிளையைச் சேர்ந்த அடிமை' என்றே அதற்குத் தமிழில் பொருள்கொள்ள வேண்டும். 'வடுக வந்தேறிப் படையெடுப்புகளுக்குப்பின் அடிமைப்படுத்

www.tamilarangam.net



தப்பட்ட மூலக்குடிகள்' என்பதே கொத்தடிமை என்னும் சொல்லுக் குரிய உண்மையான பொருளாகும். ஒன்றுக்கு மேற்பட்ட ஏமான்(எச மானர்)களுக்கு ஓர் அடிமை, பணிசெய்ய நேர்ந்தபோது, 'பொதுவான அடிமை' என்னும் பொருளில் அவனைக் **கொத்துணி** என்றனர். இக் கொத்துணி அடிமைமீது ஒன்றுக்கு மேற்பட்ட ஏமான்களுக்கு இருந்த அதிகார உரிமையையே கொத்துணிப்பங்கு என்றனர். இதைக் கொத்துவழிப்பங்கு என்றும் சொல்வர்.[80]

கொத்தடிமையைப் பண்ணையாள் என்றும் அழைத்தனர். 'பண்ணை வைக்க' என்றால் 'கூலிக்காரரைக் கட்டமைத்தல்' என் றாகும். ஒரு பண்ணையில் கூலிவேலை செய்வதையே 'பண்ணைக் கிருத்தல்' என்றனர். உழவர்கூலிகளுக்கு வழங்கப்பட்ட தவசமும் வைக்கோலும் அடங்கிய சுமைக்கட்டைப் 'பண்ணைச் சுமை' என்றனர். கழனிக்கு எருவிடும் பணியைச் செய்துவந்த பறையர் தலைவனைப் **பண்ணைக்காரன்** என்றனர்.[81] துளுநாட்டில் இவர்களை **மூலப் புலையர்** (Mulada Holeyas) என்றழைத்து வந்ததாகப் பிரான்சிஸ் புக்கானன் கூறுவார்.[82] இவர்களைக் **கொத்தடிமைக் குடியானவர்** (bonded tenants) என்றும் குறிப்பிடுவர். தமிழகத்தின் ஆவணங்களில் வரும் **உழுபறையர்** என்பவர்கள் அத்தகைய கொத்தடிமைக் குடியான வர்களாக இருந்திருக்கலாம்.

கொத்தடிமை என்னும் சொல்லின் பொருளும் விளக்கமும் கூறும் வரலாறுதான் என்ன? வடுக அநாகரிகர்கள் தமிழரின் நாட்டைப் பிடித்த பின்னர், அத் தமிழகத்தின் உழவர்குடியினரில் பெரும்பாலோரை — குறிப்பாகத் தமிழரில் மூலக்குடியினரை — அவர்தம் சொந்த மண்ணிலேயே கொத்தடிமைகளாக்கினர் என்பது தானே அவ் வரலாறு? இது பல்லவ வடுகரின் படையெடுப்புக்குப் பின்னரே நடந்தது.

## ஆளோலை அடிமைகள்

கழக(சங்க)க் காலத்திலேயே தமிழகத்தில் அடிமை முறையும், குடிமை (tenancy) முறையும் இருந்தன. ஆயினும், அகரகார நிலக் கிழமைப் பொருளியல் வந்தேறிய பின்னர், இக் குடிமை முறையில் மாற்றங்கள் நிகழத்தான் செய்தன. வந்தேறி வடுகர் புகுத்திய இறை யிலி முறை வந்த பின்னர், குடியானவர்களும் தனி உழவர்களும் இறை யுடன்கூடப் புதுப் புது வரிச்சுமைகளைத் தாங்க வேண்டியிருந்தது. பிரமதேயங்களிலும் கோயில்பற்றுகளிலும் மடப்பற்றுகளிலும் இந்தச் சுமைகள் கூடுதலாகவே இருந்தன. இதனால், குடியானவரும் தனியுழ வருமான தமிழர் பலர், தாங்களாகவே முன்வந்து ஆளோலை என்னும் அடிமை முறியை எழுதிக் கொடுத்துவிட்டுக் கொத்தடிமை களாயினர். அதே போல், கோயில்களுக்கும் மடங்களுக்கும்கூடக் குடியானவரும் தனியுழவருமாகிய பலர், ஆளோலை வழியாகத் தங்களையே விற்றுக் கொண்டு அடிமைகளாயினர்.

www.tamilarangam.net



தாங்களாகவே முன்வந்து இவ்வாறு அடிமைப்பட்ட தனி உழவர்களை மூலஉரிமையாளர் என்னும் பொருளில் originarii எனப் பண்டை உரோமில் அழைத்தனர்.[83] பிரான்சிஸ் புக்கனன் கருநாடகத்திலிருக்கும் மலைநாட்டிலும் கரைவழியிலும் (Karavali) கண்ட 'மூலஜெனிதாரரு' என்னும் மூலக்குடிகள்,[84] அவர்களையே நினைவுபடுத்தும். ஆளோலை எழுதிக்கொடுத்து விட்டு அடிமைகளாகிய இந் நிகழ்வு, வந்தேறி வடுகர் புகுத்திய வடுகப் பிராமண நிலக்கிழமையின் கீழும் பெரிய அளவில் நடந்திருக்க வேண்டும். ஒரே நிலக்கிழார் குடும்பத்திற்கு ஒருவரை வழிவழியாக நிலையாக அடிமைப்படுத்திய மனை ஒக்கல் (Mane Okkal) முறையைக் கி. பி. 6ஆம் நூற்றாண்டில் கன்னடநாட்டில் வடுகர்கள் உருவாக்கியதைப்[85] போல், திடற்பறையர் என்னும் கொத்தடிமைகள் தமிழகத்தில் உருவாக்கப்பட்டனர். ஊரையோ ஊர்களையோ கொடையாகப் பெற்ற இடங்களில்தான் இத் திடற்பறையர் முறை புகுத்தப்பட்டிருக்க வேண்டும். திடல் என்பது தரிசு நிலத்தைக் (wasteland) குறிக்கும். தரிசு நிலத்தைக் குறிக்கும் இந்தத் திடற்பறையர்கள், ஆங்கிலேயரின் வருகை வரை நீடித்தனர். கி. பி. 1720ஆம் ஆண்டில் சென்னைத் தொண்டையார்பேட்டையில் ஒரு காணியை விற்றதற்கான ஓர் ஆவணத்தில்,

> "....என் பங்கு பத்தில் ஒன்றில் மூன்றில் ஒன்று மனை, மண், நிலம், புலம், நீர், கொல்லை, தோப்பு, துரவு, கிணறு, காணிப் பேறு, காணிமானியம், செக்கு, முட்டை, தறிக்கடமை, பறைச் சேரி, திடற்பறையர், பி(பு)ழக்கடை மற்றும் உண்டான எப்பேர்ப் பட்ட சகல சுதந்திரமும் என் பங்கில்..."[86]

என்று சொல்லப்பட்டுள்ளது. திடற்பறையரைக் காணியோடு சேர்த்து விற்கும் கொடிய வழக்கத்தின் இலக்கணம் இதனால் விளங்கும். இந்தக் கொத்தடிமை முறை பல்லவர் காலத்தில் தலையெடுத்து, வடுகச் சோழர், நாயக்க வடுகர் ஆட்சிக்காலங்களில் விழுதுவிட்டுப் படர்ந்து நின்றது.

தாங்கள் அடிமையுண்டிருந்த ஊரைவிட்டு இக் கொத்தடிமைகளால் இடம்பெயர முடியாது. ஒரு பங்காளி தம் பங்கு நிலத்தை விற்கவோ ஒற்றிவைக்கவோ முயன்றபோது, அந் நிலத்தில் பணிபுரிந்து வந்த பண்ணையடிமைகளையும்கூட அந் நிலத்தோடு சேர்த்து விற்கவோ ஒற்றி வைக்கவோ செய்தனர். இதனால், அக் கொத்தடிமைகளை நிலத்திலிருந்து அப்புறப்படுத்தவே முடியாது.

## வடுகர் கொணர்ந்ததே மனுநூல்!

இந் நிலையில், தமிழர்களைப் பிரித்தாளவும் அடக்கியாளவும் அவ் வடுக வந்தேறிகளுக்குக் கைகொடுத்தது வடுகப் (அஃதாவது, ஆரியப்) பிராமணியம் ஆக்கிய சாதி- வர்ண நெறி.

www.tamilarangam.net



கி. பி. 6ஆம் நூற்றாண்டில் கன்னடப் பிராமணரால் எழுதப் பட்டுச் சளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசியின் அரசவையில் அரங்கேற்றப்பட்ட மனுநூல் தமிழர்நாட்டிற்குள் இறக்குமதி செய்யப் பட்டு, அதைத் தழுவிய பிராமணிய வாழ்வியல் நெறியே ஆட்சிக் கோட்பாடானது. 'மானவ குலம்', 'மானவ தர்மம்' என மனுநூலில் வரும் சொல்லாட்சிகள் எல்லாம் சளுக்கியரின் மெய்ச்சீர்த்திகளில் வருவன என்பதைக் கொண்டும், 'மானவதரும சாத்திரம்' என்னும் மனுநூல் கன்னட வடுகரின் படைப்பு என ஐயந்திரிபறக் கூறலாம்.

தொழில்வழிச் சாதிகளாயிருந்தவை பின்னர் பிறப்புவழிச் சாதி களாகக் காஞ்சியை நடுவமாக வைத்தே உருவானது என்பதைப் பல் வேறு சாதியினரிடமுள்ள ஓலைச்சுவடிகளைக் கொண்டு அறியலாம்.[87] பல்லவர் காலத்தில் முளைத்த பிறப்புவழிச் சாதிகள், வடுகச் சோழ னான முதல் இராசராச சோழனின் காலத்தில் குதிர்ந்தன.

பிராமணியச் சாதி முறை பல்லவர் காலத்தில் தமிழகத்திற் குள் புகுந்தது. வடுகச் சோழர் காலத்தில் சாதிகள் பெருகி, வலங்கை, இடங்கை எனப் பகுக்கப்பட்டன. கி. பி. 10ஆம் நூற்றாண்டில் தோன்றிய வலங்கை-இடங்கைப் பூசல், மூன்றாம் இராசராசனின் (கி. பி. 1250) காலம் வரை தொடர்ந்தது.

பல்லவன் மகேந்திரவர்மன் (590-630), "சாதி வரண ஒழுக லாறுகளைப் பற்றிய திருவிதியின்படி ஒழுகச் செய்வதில் மிகக் கண்டிப்பாக இருந்தான்" என முதல் பரமேசுவரனின் கூரம் பட்டயம் கூறுகிறது.* இரண்டாம் நந்திவர்மன் (731-96) "தரும சாத்திர முறைப் படி நடக்காத மக்களை அழித்து, அவர்களின் நிலங்களைக் கைப்பற்றி இறையிலியாக்கிப் பிராமணர்க்கு அளித்தான்" என உதயேந்திரம் பட்டயம் கூறுகிறது.[89] குதிரைவேள்வி (அசுவமேதம்) போன்ற வேள்விகளையும், பொன் (இரணிய) கருப்பம், துலைநிறை (துலாபாரச்) சடங்குகளையும் பல்லவர்கள் செய்துவந்தனர்.

வரணமுறையைப் பேணுவது, பிராமணர்களுக்கும் கோயில்களுக் கும் காணிக்கொடைகள் வழங்குவது, பாகத சங்கத மொழிகளைப் புரப்பது, வடுகப் (அஃதாவது, ஆரியப்) பண்பாட்டைத் தமிழகத்தில் பரப்புவது முதலானவற்றையே பல்லவ வடுகர்கள் தங்களின் வெறித்தனமான கடப்பாடுகளாகக் கொண்டிருந்தனர். பிராமணியத் தைத் தமிழகத்தில் புகுத்திய பல்லவ வடுகர்கள், அதை உச்சிமேல் வைத்துப் போற்றினர் என்பதையே இவை யாவும் காட்டுகின்றன.

## ஆளுநர்களே அரசராயினர்!

நிலக்கிழமைக்குள்ளேயே உட்கிழமை (subinfeudation) என்னும் இயற்பாடு எழுந்ததன் விளைவாகத்தான் சிற்றரசக்குடிகள் தோன்ற லாயின. நிலக்கிழார்கள் சிலர் தனி அரசர்களானதும் உண்டு.

* "...who thoroughly enforced the sacred law of the castes and the orders:..."[88]

www.tamilarangam.net



வடுகர் நிறுவிய ஆளுநர் பதவி வழிவழியாக அவர்தம் பிறங்கடையினருக்குக் கிடைத்தது. அவ்வாறு வழிவழியாய் வந்த வந்தேறி ஆளவந்தார் குடும்பங்கள் சில, காலப்போக்கில் தனித் தனி அரசக் குடியாகின. அவற்றின் வழியாக வந்த சிலர், தமக்குத்தாமே அரசன் பட்டத்தைச் சூட்டிக்கொண்டனர். இவர்களைச் சிற்றரசக்குடியினர் (minor dynasties) என்பர். விசயநகரப் பேரரசிற்கு நாயக்கர் என்னும் ஆளுநர்கள் இருந்தனர். அவ் விசயநகர வல்லரசின் ஆளுநனாகத் தமிழகத்தை ஆளவந்த நாயக்கன் ஒருவனின் வழிவந்தோரே பின்னர் 'நாயக்கர்' என்னும் அரசக்குடியாகத் தனித்து ஆண்டதை நினைவில் கொள்க. கருநாடகத்தின் வாதாபிச் சளுக்கியர், கல்யாணபுரிச் சளுக்கியர், இரட்டர், குருபர் (Seunas), ஒய்சளர் ஆகிய அனைவரும் ஒரு காலத்தில் இத்தகைய ஆளுநர்களாயிருந்து மெல்ல மெல்லத் தனித் தனி அரசக் குடியினராகிப் பின்னர் தத்தம் சொந்த நடுவணரசுகளையே வீழ்த்தவும் பிடிக்கவும் செய்ததும் அப் போக்கைச் சுட்டும்.

மேலை(கல்யாணபுரி)ச் சளுக்கியர் காலத்தின் தொடக்கத்தில் நிலக்கிழாரின் தலைநகரத்திற்கு நில்வீடு என்னும் தமிழ்ப்பெயர் வழங்கியது. மாற்றாரை ஒடுக்கி, சட்டம் ஒழுங்கைப் பேணி வந்ததுடன், ஓய்வுநேரங்களில் கலை, இலக்கியம், கல்வி ஆகிய துறைகளில் அந் நிலக்கிழார்களும் படைஆளுநர்களும் ஆர்வம் காட்டிவந்தனர். தமக்கெனத் தனித்தனி ஆட்சியுறுப்புகளையும் அமைச்சர்களையும் ஆட்சியதிகாரிகளையும் ஊழியர்களையும் கொண்டிருந்த வடுக ஆளுநர்களின் அவைகளும்கூட, அவர்தம் வடுகப் பேரரசனின் அவைக்களத்தின் கரிப்படிகளைப் (carbon copies) போன்றே இருந்தன. சிற்றரசர்கள் பேரரசனுக்கு ஆண்டுதோறும் திறை (கப்பம்) கட்டி வந்ததைப் போன்றே இந்த ஆளுநர்களும் திறை செலுத்திவந்தனர். பேரரசன் போர்மேல் சென்றால் அவனுக்குப் படைவிடுத்துத் துணைநிற்க வேண்டியது அவர்களின் கடமையாகும். புதிய வரிகளை விதிக்கவும், கட்டிவந்த வரியைக் கூட்டவும் வல்ல அதிகாரம் படைத்தவர்களாக அவர்கள் விளங்கினர். பேரரசனுடனும் அரசக் குடியினருடனும் கொள்வினை கொடுப்பினை உறவு கொண்டவராகவும் இருந்தனர். இந்த ஆளுநர்களோ சிற்றரசர்களோ வலிமையுற்ற நேர்மேனிக்கு, வடுகப் பேரரசனின் வலிமை குறைந்தது.

## ஆட்சிமுறை

வடுகரின் ஆட்சியிலிருந்த அரசு அதிகாரிகளின் எண்ணிக்கையோ மிகக் குறைவு. மேலும், அந்த அதிகாரிகள் நிலக்கிழார்களாகவும் இருந்தனர்; அல்லது நிலக்கிழார்களாக ஆக்கப்பட்டனர். இந் நிலக்கிழார் அதிகாரிகளாலும் அரசக்குடியினராலுமே உள்ளூர் ஆட்சி நடைபெற்றுவந்தது. போதாமைக்குத் தமிழரின் நாட்டில் ஒரு பெரும் பகுதியைப் பிடித்தாகிவிட்டது. பிடித்த நாட்டில் குமுக அமைதியை நிலைநிறுத்திக் கட்டியாள வேண்டிவந்தது. இந்தச் சூழலில்,

www.tamilarangam.net



படையதிகாரிகளான ஆளுநர் வகுப்பினர் காலப்போக்கில் மெல்லக் குறைந்து, பொதுஅதிகாரவகுப்பினர் (civil officials) கூடினர்.

உள்படுகருமத்தலைவர் (Private Secretary),[90] வாயில்கேட்போர் (Secretary), கீழ்வாயில்கேட்போர் (Under-Secretary), நிலங்களை அளந்த நிலைக்களத்தார்,[91] குற்றவியல் நடுவர் (அதிகரணம்) முதலானோர் பல்லவர் கால அரசு அதிகாரிகளாவர். வடுகச் சோழர் காலத்தில் அந்த வாயில்கேட்போரையே திருவாய்க்கேள்வி என்றனர். முற்காலப் பல்லவர்கள், வாயில்கேட்போனையே 'இரகசியகிருத்தன்' என்றனர். விடேல் விடுகு என்பது 'விடை+வெல்+விடுகு' எனப் பிரிந்து, 'வெற்றியிற் சிறந்த போத்து (நந்தி) முத்திரையோடு விடுக்கப் பட்ட ஆணை' எனப் பொருள்படுமாம்.[92] மன்னர் திருமுகத்தை (ஆணையை) நாட்டார்கள் பொதுமக்களுக்கு அறிவித்த அறிவிக்கையை அறையோலை என்றனர். நிலத்தின் எல்லைகளெல்லாம் நிலைக்களத்தார் முன்னிலையிலேயே வரையறுக்கப்பட்டதாகக் கல்வெட்டுகள் கூறுவதால், நிலத்தை உரிமைப்படுத்திய பதிவாளரே அந்த நிலைக்களத்தார் என்பர். தமிழரின் நிலபுலங்களையெல்லாம் வலியப் பிடுங்கிக் கொண்டபின், அவற்றைப் பிற வந்தேறி வடுகர்களுக்குப் பிரித்துத் தந்து நிலைப்படுத்தியவராகவே இந் நிலைக்களத்தார் இருந்திருக்க வேண்டும். வரியைத் தண்டி அரசின் கருவூலத்தில் சேர்த்தவர்கள் திணைக்களத்தார் எனப்பட்டனர்.

பல்லவர் காலத்தில் கோட்டம், நாடு, ஊர் என்னும் நிலப் பிரிவுகள் இருந்தன. தொண்டைநாட்டில் 24 கோட்டங்கள் இருந்தன. மாகாண ஆட்சிப்பொறுப்பு இளவரசர்களிடம் தரப்பட்டது. பல்லவர் காலத்திலும், நாடு என்பதே அடிப்படை ஆட்சியியல் அலகாக இருந்தது. அந் நாட்டின்கீழ் தனியூர்களும் பிரமதேயங்களும் இருந்தன. ஊரவையினரைப் பெருமக்கள் என்றனர். ஊராட்சியில் பல வாரியங்கள் இருந்தன. ஏரிகளைப் பழுதுபார்க்க ஊரவையார் தலைமையில் விடப்பட்ட நிலம் ஏரிப்பட்டி எனப்பட்டது. ஏரிகளைக் காக்க ஏரிவாரியம் இருந்தது. ஆளும்கணத்தார் என்போர் கோயில்களை மேற்பார்வையிட்டுவந்தனர்.

சிற்றூர் வழக்குமன்றத்தைக் கரணம் என்றனர். அறங்கூறு அவையத்தின் முன்னால் ஆவணத்திலுள்ளவற்றை எல்லாரும் கேட்கும் வண்ணம் உரக்கப் படித்துவந்தவனைக் கரணத்தான் என்றனர். பெருநகரங்களிலிருந்த வழக்குமன்றம் அதிகரணம் எனப்பட்டது. வழக்கைத் தொடுத்தவர்கள் மன்றாடிகள் ஆயினர். பார்த்தவர் உரைக்கும் சான்று, அயலார்க்காட்சி எனப்பட்டது.

## சாரிசாரியாக வந்தேறிகள்!

வடுக வந்தேறிகள் அலையலையாய் ஓயாமல் தமிழகத்திற்கு வந்து குடியேறியதால், காணிப் பற்றாக்குறை ஏற்பட்டது. இது போன்ற

www.tamilarangam.net



சூழலில், காடுகளைப் பெருமளவில் அழித்துக் கொல்லைகளாகவும் கழனிகளாகவும் செய்யத் தலைப்பட்ட பல்லவ வடுகர்க்குக் காடு வெட்டிகள் என்னும் பெயர் வந்தது. இது போக, பயிரிடப்படாது முள்ளும் புதரும் மணலும் மண்டிய நிலங்களை அரக்கப் பறக்கத் திருத்த வேண்டிய தேவையும் எழுந்தது. திருத்தப்பட்ட நிலத்தை *வயக்கல்*[93] என்றனர். பயிர் செய்ய இயலாத இடம் **பாழ்** எனப் பட்டது.[94] இதனால், ஆற்றுநீர்ப் பாசனம் இல்லாத ஊர்களில் பல்லவ வந்தேறிகள் புதிய ஏரிகளை வெட்டுவிக்கவும் புதுப்பிக்கவும் செய் தனர். மானாப்பூண்டியிலுள்ள நிச்சவினீதமங்கலத்துத் திரையனேரி, அணியூரன் ஒற்றியூர்ப் பிராட்டி என்பவளால் வெட்டப்பட்டது. தென் னார்க்காட்டு மகேந்திரவாடியிலுள்ள மகேந்திரத் தடாகத்தை மகேந் திரவர்மன் வெட்டியிருக்கலாம். வாலி ஏரி, வாலி வடுகன் தோற்று வித்தது. அதே மாவட்டத்தின் தண்டலத்திலுள்ள ஏரியைப் பல்லவ மாராயன் சீர்ப்படுத்தி மதகு அமைத்தான். ஏரிகளையும் கால்வாய் களையும் பேணுவதற்கென்றே இருந்த பிரமதேய ஏரிவாரியத்தின் பணி, இந் நிலையில் கூடுதல் சிறப்பைப் பெற்றது.

வந்தேறி நிலக்கிழமை, நாட்டுப்புறங்களில்தான் குடிகொண் டிருந்தது. நாட்டுப்புறமே விளைப்பாற்றலின் களமாக இருந்தது. வேளாண்மையே அந் நிலக்கிழமையின் அடிப்படை.

> “உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர்”[95]

என்பதே நிலக்கிழமையின் மெய்யியல் விளக்கம். நிலக்கிழமை வாழ் வியலின்கீழ், நிலத்திலிருந்தும் அந் நிலத்தில் இடப்பட்ட முதலீட்டி லிருந்தும் உழைப்பிலிருந்தும்தான் குமுகச் செல்வம் பிறந்தது. நிலத்தின் வழியாகப் பெறப்படாத பிற செல்வங்கள் யாவும், அந் நிலத்துடன் அவை கொண்டிருந்த உறவை வைத்தே சிறப்புற்றன.

உழவர்குடிகளுக்குச் சொந்தமான நிலம் **பயல்** எனப்பட்டது. அரசனுக்குச் சொந்தமான நிலம் **அடைநிலம்** ஆகும். மண்டலங் களின் ஆளுநர்களாக அமர்த்தம் பெற்றவர்களுக்கும் காணிக்கொடை களே கைமாறாகத் தரப்பட்டன. மடங்களுக்கும் பிரமதேயங்களுக்கும் அப்பாற்பட்டுத் தொன்றுதொட்டு வந்த **காணியாட்சி** நிலக்கிழமை யைப் பேணிவந்த தமிழ் நிலக்கிழார்களும் மறுபக்கம் இருந்தனர். பேர ரசனின் அடைநிலங்கள், சிற்றரசர்களின் அடைநிலங்கள், படையாட்சி களின் நிலங்கள், காணியாட்சிகள், மடங்கள், பிரமதேயங்கள், விரித்தி கள் என்றிருந்த நிலவுடைமைகள் எல்லாவற்றையும் உள்ளடக்கி வான ளாவ மிக்குயர்ந்து நின்றது வடுகப் பிராமணிய நிலக்கிழமை.

## கட்டுக்குலையாத காணியாட்சி

தமிழரின் மண்ணைக் கவர்ந்த பல்லவ வடுகர்கள், மண்ணின் மைந்தரான தமிழரில் பெரும்பாலோரைக் குடியானவர்களாகத் தாழ்த்

www.tamilarangam.net



தினர். உழவடை (குடிவார) முறையில் உழுகுடி என்போரே நிலத்தில் இறங்கி உழுது விளைவித்த குடியானவராயிருந்தனர்.

பெருங்குடிமக்கள் என்னும் காணியாளரும், கீழ்க்குடிகளும் உழுகுடிகளும் ஆகிய குடியானவரும் பண்ணையடிமையும் உழவடையும் (குடிவாரமும்) இன்றி, நிலக்கிழமை இல்லை. நிலத்தை உழவடைக்கு (வாரத்திற்கு) எடுத்து உழுதுண்டு வந்தவர் குடியானவர். ஒரு குடியுடன்படிக்கையின்கீழ் இவ்வளவு காலத்திற்கு ஒரு நிலத்தை உழுது விதைத்து அறுத்து வெள்ளாமையில் ஒரு பங்கைத் துய்ப்பதுடன், பிற பங்குகளை நிலக்கிழாருக்கும் அரசனுக்கும் ஊர்த் தொழிலாளர்க்கும் தரும் ஒப்பந்தக் காலத்தையே உழவடை (tenancy) என்றனர். வெள்ளாமையில் ஒரு குறிப்பிட்ட பங்குக்கு என இன்னொருவர்க்குத் தன் நிலத்தைப் பயிரிட விடுவதே உழவடை (உழவடைத்தல்) ஆகும். காணியின் மீதிருந்த குடியுரிமையே அந்த உழவடை. இடத்திற்கு இடம், காலத்திற்குக் காலம் என இந்த உழவடை வேறுபட்டது.

உழவடைக்கு விட்ட நிலத்தை அடைப்பு என்பது பாண்டிய நாட்டு வழக்கு. அதனால், நிலத்தை உழவடைக்கு (வாரத்திற்கு) எடுத்தவரை அடைப்பர் (tenant) என்றனர்.

> "....குடிவிடை நின்ற சிதுங்கப் பல்லவரையர் அடைப்பில் ஆயிர
> வற்கும் கருமாணிக்கப் பல்லவரைய ரடைப்பில் ஆயிரவற்கு
> வாகையறை நாயன் உள்ளிட்டார் வசம் நியொகப்படி...."[96]

என்று மாறவர்மன் விக்கிரம பாண்டியன் காலத்துத் திருநெல்வேலி மாவட்டத்தின் கல்லிடைக்குறிச்சிக் கல்வெட்டுக் கூறுவதைக் காண்க.

அவிப்புலம் முதலான மூன்று புலங்களிலிருந்து கோயிலுக்கு வந்த விளைச்சலையே 'சாமிபோகம்' என்றனர்.[97] கோயில் நெல்லை அளந்து களஞ்சியத்தில் சேர்க்கும் அலுவலர் காணிக் காரளவு எனப்பட்டார்.

## கூரம் செப்பேடு கூறுவதென்ன ?

முற்காலப் பல்லவர் காலத்தில் தமிழரின் நிலபுலங்களை வலியக் கைப்பற்றி அவற்றை வந்தேறி வடுகர்களுக்குப் பங்கிட்டு அளித்த போக்குக்கு நேர்மாறாக, அத் தமிழரிடமிருந்த பல பத்துக் குழி நிலங்களை விலைகொடுத்து வாங்கி அவற்றை வடுகப் பிராமணர்களுக்குக் கொடையாகத் தந்த போக்கைப் பல்லவன் முதல் பரமேசுவரனின் காலத்தில் காண்கிறோம். தமிழரிடம் விளங்கிவந்த காணியாட்சி முறை இன்னும் வலுவாகவே இருந்தமையே காணியை அவ்வாறு விலைகொடுத்து வாங்கித் தம்வயமாக்கியபின் அதைப் பிரமதேயமாக்கிய போக்குக்குக் காரணமாகும்.

ஊற்றுக்காட்டுக்கோட்டத்தின் நீர்வேளூர் நாட்டிலிருந்த கூரம், ஞம்மனம்பாக்கம் ... ஆகிய ஊர்களில் 1200 குழி நிலத்தைப் பொன் கொடுத்து விலைக்கு வாங்கிய பல்லவ அரசன் முதல் பரமேசுவர

www.tamilarangam.net



வர்மன் (669-90), அத்துடன் ஒடு சுட ஒரு நிலத்தையும், தலைப்பாட கத்தில் சூளைமேட்டுப்பட்டியும் ஊருக்குள் மண்டபமும் அமைந்த நிலத்தையும் வாங்கி, விச்சாவிநீனித பல்லவப்பரமேச்சுரகரம் என்னும் கோயிலைக் கட்டினான். பின்னர், ஏரியொன்றைத் தோண்டினான். கோயில் வழிபாடு நடத்துநர்க்கு மனையும் மனைத்தோட்டங்களையும் ஒதுக்கியது போக, எஞ்சிய நிலத்தைக் கோயில் சடங்குகளை நடத்தி வந்த செலவை ஈடுகட்டும் வகையில் பயிரிட்டுக் கொள்ளுமாறு ஈந்தான். இவ்வாறு தந்தவை போக, மணவிற்கோட்டத்திலிருந்த பன்மா நாட்டுப் பரமேச்சுரமங்கலத்தில் எஞ்சிய நிலங்களை 25 பங்குகளாகப் பிரித்தான். இவற்றில் கூரத்துக் கோயில் வழிபாட்டிற்கும், கோயிலைப் பழுதுபார்ப்பதற்கும், ஊர் மண்டபத்திற்கு வேண்டிய நீருக்காகவும் விறகுக்காகவும், பாரதம் படிப்பதற்காகவும் 5 பங்குகளை ஒதுக்கினான். எஞ்சிய 20 பங்குகளை 20 வடுகப் பிராமணர்க்குப் பிரமதேயமாக வழங்கினான். இந்தப் பிரமதேயத்திலிருந்த மனைகளும் மனைப்படப்பு களும் ஊராட்சியும் செக்கும் நெசவுத்தறியும் தவசமும் (உணவுக்கூல மும்) தரகுப்பணமும் கத்திக்காணமும் ஆகியவற்றால் வரும் பயன் களை எல்லாம் 25 பங்குகளாகப் பிரித்து நுகரச் செய்தான். பாலாற்றி லிருந்து வெட்டப்பட்ட பெரும்பிடுகு வாய்க்கால் பக்கமுள்ள புழுதி பாடும் (புன்செய் நிலமும்) பிறவும் பரமேச்சுரமங்கலத்துக்கு உரியதாக்கி னான். பரமேச்சுரவர்மனின் கூரம் செப்பேடு இவ்வாறு கூறுகிறது. இந் நிலக்கொடையால், அனந்த சிவாச்சாரியன், புல்லசர்மன் முதலான வடுகப் பிராமணர்கள் பயன்பெற்றனர்.[98]

## பழைய வடுகரை வஞ்சித்த புதிய வடுகர்!

முக்கண்ட காடுவெட்டி என்னும் வடுகன், கி. பி. 808ஆம் ஆண்டில் பெருங்கண்டூர் என்னும் ஊரை 52 பிராமணர்க்குரிய பிரம தேயமாக்கினான். இரும்புரோலு என்னும் ஊரைச் சேர்ந்த தெலுங்கு வேளமர்கள் சிலர், தெலுங்கர்நாட்டில் கொள்ளை நோய் வந்துற்றதால் ஊரைவிட்டே வெளியேறினர். ஓர் உள்ளூர்க் கலவரத்தினால் ஊரை விட்டு வெளியேறிய சாகலிகோடூரு என்னும் ஊரைச் சேர்ந்த தெலுங் கரும், இரும்புரோலு ஊரைச் சேர்ந்தவர்களும் பெருங்கண்டூருக்கு வந்தனர். இவர்கள் வந்து பார்த்தபோது ஊரே வெறிச்சோடிக் கிடந் தது. இதனால், இரும்புரோலு ஊரினரும் சாகலிகோடூரு ஊரினரும் அவ் வூரில் எளிதில் குடியேற முடிந்தது. நெடுநாள் கழித்துத் தம் ஊருக்குத் திரும்பிய பிராமணர்கள், புதிதாக வந்த தெலுங்கர்கள் தங்க ளின் ஊரையே பிடித்துக் கொண்டு, அவ் வூரின் பெயரையே 'கோடூரு' எனப் பெயர்மாற்றிவிட்டு அங்கு வெள்ளாமை செய்துவருவதைக் கண் ணுற்றனர். புதிய வந்தேறிகள், அப் பழைய வந்தேறிகளிடம் ஊரையும் காணிகளையும் ஒப்படைக்கவோ, உழவடை (குடிவாரம்) கட்டவோ மறுத்தனர். இதனால், அந்தப் பிராமணர்கள், மன்மசித்தி என்னும்

www.tamilarangam.net



அரச அதிகாரியிடம் சென்று முறையிட்டனர். அவ் வழக்கை உசாவிய அவன், அவ் வூரும் நிலமும் பிராமணர்க்கே சொந்தமெனத் தீர்ப்பளித்தான்.[99] இவ்வாறெல்லாம் கூடத் தமிழரின் ஊர்களும் நிலங்களும் வந்தேறி வடுகரின் கைக்கு மாறின.

கோயில் நிலத்தையோ, பிரமதேயத்தின் பங்குகளையோ விலைக்கு விற்கவோ ஒற்றி அடகு வைக்கவோ கூடாது என்னும் தடையிருந்தும், அதையும் மீறி விற்கவோ ஒற்றிவைக்கவோ செய்த நிகழ்வுகள் பல உண்டு. கருமாரச்சேரியிலிருந்த கோயில் நிலத்தின் ஒரு பகுதியைத் திருவல்லிக்கேணிக் குலங்கிழார் கோயில் அதிகாரிகள் கி. பி. 789ஆம் ஆண்டில் ஒற்றிவைத்ததை அதற்கான சான்றாகக் கொள்ளலாம்.[100]

## தண்டி பட்ட பாடும், பஞ்சவாரமும்

சோழநாட்டின்மீது படையெடுத்த பல்லவன் சிம்மவிட்டுணு (கி. பி. 557-90) அந்த நாட்டையும்கூட இணைத்துக் கொண்டான் என வேலூர்ப்பாளையம் செப்பேடு கூறுகிறது. அன்றைய போர்க்காலப் பொருளியலால் சோழநாட்டிலும் பாண்டியநாட்டிலும் பெரும் பொருளியல் நெருக்கடிகளும் பஞ்சங்களும் குழப்பங்களும் தலைவிரித்தாடின. அக்காலச் சூழலை சிலர் ஏட்டில் குறித்து வைத்தனர்..

> "சோழ, பாண்டிய நாடுகள் எதிரிகளின் கொடுமைகளால் சீரழிந்தன; களஞ்சியங்கள் வெறுமையாயின; தோட்டங்களும் மரங்களும் சீர்கெட்டன; சாலைகள் பழுதாயின; தண்டி, உண்ண உணவின்றி நாடு முழுவதும் சுற்றியலைந்தான்; பல்லவப் பேரரசு தத்தளித்தது; அவைப்புலவரும் கற்றறிந்தோரும் நாடு முழுவதும் அலைந்து திரிந்தனர்"[101]

என அவந்திசுந்தரி கதா என்னும் நூலை இயற்றிய இராசசிம்மனின் (இரண்டாம் நரசிம்மனின்) அவைப்புலவனான தண்டி எழுதினான்.

அப்பரும் திருஞானசம்பந்தரும் திருவீழிமிழலைப் பெருமானை வேண்டிக் காசு பெற்று, அடியார்களின் வறுமையைப் போக்கினர் எனப் பெரியபுராணம் கூறும். மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் வந்துற்ற பஞ்சத்தின்போது, கோட்புலி நாயனாரின் நெல்லை அவருடைய உறவினர்களே உண்டுவிட்டதாகக் கோட்புலி நாயனார் புராணம் கூறும்.[102]

பஞ்சவாரியம் பஞ்சக்காலத் துயர்தணிப்புப் பணியை மேற்கொண்டது. பஞ்சத்தைச் சமாளிப்பதற்காக ஒதுக்கப்பட்ட நெல்லைப் பஞ்சவாரம் என்றனர். இந்தப் பஞ்சவாரியத்தைப் பாண்டியநாட்டில் புரக்காவல் அல்லது புரவு என்றனர்.[103] மூன்றாம் நந்திவர்மனின் காலத்தில் பஞ்சவாரம் பெருமளவில் வழங்கப்பட்டது.

www.tamilarangam.net



முதல் பரமேசுவரன் (கி. பி. 669-90) திருச்சிக்கு அருகிலுள்ள பெருவளநல்லூரில் சளுக்கியரை வெற்றிகண்டதாகப் பல்லவர் காலப் பட்டயங்கள் கூறுவதும், குடந்தைக்கு அருகிலுள்ள நாதன் கோயிலி லுள்ள (நந்திபுரம்) கோட்டையில் இரண்டாம் நந்திவர்மன் (கி. பி. 731-96) தங்கியிருந்தபோது பாண்டியன் பராங்குச மாறவர்மன் அக் கோட்டையை முற்றுகையிட்டான் என்னும் செய்தியும் போன்ற யாவும் சோழநாடு பல்லவ வடுகரிடம் அடிமைப்பட்டிருந்ததைக் காட்டுவன. மூன்றாம் நந்திவர்மனை (கி. பி. 846-69) "காவிரி வளநாடா !"[104] என் றும், "பொன்னி நன்னாட்டு மன்னன்"[105] என்றும், "காவிரி வள நாடு ஆள்வோனே !"[106] என்றும் நந்திக்கலம்பகம் பாடுவதை வைத்துச் சோழநாடு அப்போது பல்லவரிடம் அடிமைப்பட்டுக் கிடந்த ஒரு மெய்ம்மை விளங்கும்.

## கல்வெட்டுகளும் செப்பேடுகளும்

பல்லவர் காலத்தில் தொண்டைநாட்டில் கன்னடப் பிராமண ரின் ஊடுருவலும்கூடப் பெரிதாய் இருந்தது. ஐத்தி சர்மன், ஐங்க சர்மன், இளைய ஐத்தி சர்மன் ஆகிய கன்னடப் பிராமணர்கள் திருவல்லிக்கேணிக் குலங்கிழார் கோயில் அதிகாரிகளாக இருந்ததே அதைக் காட்டும்.[107]

கன்னடப் பிராமணர் போக, தெலுங்குப் பிராமணர்களும் மள மளவெனத் தமிழகத்திற்குள் வந்தேறினர். ஆந்திராவிலிருந்து வந்த வடுகப் பிராமணர்கள், தமிழகத்தில் பெருமளவில் குடியேறினர் எனக் காசக்குடிப் பட்டயம் கூறுகிறது.[108] சோழநாட்டின் காவிரியாற்றுக் கரையில் அவர்களைக் குடியேற்றிய பல்லவர்கள், அவர்களுக்கெல் லாம் பெரிய பெரிய நிலக்கொடைகளையும் தந்தனர்.

சோழநாட்டுத் தென்கரை நறையூர்நாட்டுத் தண்டன்தோட் டத்துச்* செப்பேடுகள், பல்லவன் நந்திவிக்கிரமபருமனின் (மூன்றாம் நந்திவர்மனின்) வேலூர்ப்பாளையம் செப்பேடுகளுக்கு 52 ஆண்டுகள் பிந்தியன.[109]

அத் தண்டன்தோட்டத்துச் செப்பேடுகள் பிராமணர்க்குத் தந்த நிலக்கொடைகளைப்பற்றிக் கூறுவன.[110] பல்லவ மன்னனின் இசைவு பெற்று 308 பிராமணர்க்குப் பிரமதேயக் கொடை அளித்த தயாமுகன் என்பான் அவ் வூருக்குத் தயாமுகமங்கலம் எனப் பெயரிட்டான். இவர்களில் 136 பேர் தெலுங்குப் பிராமணர் கடைப்பிடித்துவந்த ஆவத்தம்ப சூத்திரத்தின்படி ஒழுகியவர்கள் என்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இந் நிலக்கொடையைப் பெற்ற 213 பிராம ணர்களின் ஊர்ப்பெயர்களும்கூடக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு சில ஊர்ப்பெயர்கள் மட்டும் அழிந்துள்ளன. இப் பிராமணர் சிலர்,

---

* தஞ்சை மாவட்டத்தில் குடந்தைக்கு அருகிலுள்ளது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தணுக்கில், காரம்பிச்சேடு, இழக்கந்தோறு, இருங்கண்டி, நம்பூர், கரஞ்சை, (இக்காலக் குண்டூர் மாவட்டத்தின் Kaza) பிணுக்கிப்பற்று, வேல்பற்று (அல்லது முடப்பற்று), நூத்திலாப்பற்று, பொன்னம்பற்று ஆகிய ஆந்திரப் பகுதியிலிருந்த ஊர்களிலிருந்து வந்தவர்களாவர். வேறு சிலர், குமிழூர், காட்டுக்குறி, மணற்கால், மந்திரம், பறியலூர், பாடகம், பாற்குலம், ஈய்க்காட்டுக்கோயில், சிறுபழுவூர், புலியூர் (மிழலை நாடு), அருவாகூர், தாமநல்லூர் (அருவாநாடு) முதலான தமிழ் ஊர் களிலிருந்து வந்தவர்களாவர். இத் தெலுங்குப் பிராமணரில் பெரும் பாலோர், இச் செப்பேட்டை எழுதுவதற்கு முன்னரே தமிழ்நாட் டிற்கு வந்தேறியிருக்க வேண்டும். கி. பி. 9ஆம் நூற்றாண்டின் முற்பகுதி யிலேயே சோழநாட்டின் கருப்பகுதியில் தெலுங்குப் பிராமணர் பெரு மளவில் வந்தேறியிருந்தனர் என்பதையும் ஆய்ந்தோர் சுட்டிக்காட்டு வர். கி. பி. 7ஆம் நூற்றாண்டு திருச்சிக் கல்வெட்டுகளில் பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் தெலுங்கு பிருடைகள் (Birudas) உள்ள தையும், அவர்கள் நினைவு கூர்வர். இச் செப்பேட்டில் வரும் ஊர் களில் பெரும்பாலானவை இன்று மாலிய(வைணவ)ப் பிராமணரின் ஊர்களாக இருப்பதையும் சுட்டுவர்.[111]

மணற்கால் என்ற ஊரில் பிறந்தவரே மணற்கால் நம்பி என்னும் மாலிய சமயக்குரவர் (ஆச்சாரியார்).

இதனால், நல்கூர் எனப்பட்ட அவ் வூர் அதுவரை கட்டி வந்த செக்கு, தறி, உலவியக்கூலி (உல்லியக்கூலி), கண்ணாலக் காணம், ஊரெட்டு, தட்டுக்காயம், குசக்காணம், ஈழம்பூட்சி, இடைப்பூட்சி, கூலம், தரகுப்பாட்டம், திருமுகக் காணம், உப்புக் கோச்செய்கை, நல்லா, நல்லெருது, வட்டிநாழி, கடையடைக்காய், புதாநாழி ஆகிய வரிகளையும் வருவாய்களையும் இவ்வூர்ப் பிராமணர் வாங்கித் துய்க்கலாம். மாடமாளிகை எடுக்கவும், தூரவு கிணறு வெட்டவும், காவு தெங்கு நடவும், பெரும் செக்கை அமைக்கவும் அவர்களுக்கு உரிமை உண்டு. இவ்வூர் எல்லையிலுள்ள தென்னை, பனை மரங் களின்மீது ஏறி ஈழவர்கள் கள் எடுக்கக் கூடாது என்னும் கட்டுப்பாடு இருந்தது.[112]

## வரியோ வரி, வடுக வரி!

நீருக்குக் கட்டிய நீர்வரி, கிணறு தோண்ட முனைந்தோர் கட்டிய உல்லியக்கூலி, (ஆறு குருவி அல்லது 48 படி நெல்லை விற்றால், ஒரு படி அரசனுக்குக் கட்டிய) வட்டிநாழி, (புதிதாய் விளைந்ததை விற்கையில் 4 நாழிக்கு ஒரு நாழியெனக்) கட்டிய புதாநாழி, (ஓர் இடத்தைக் கடந்து செல்வதற்குத் தந்த) ஊடுபோக்கு, (உப்பு விளை விக்கும் உரிமத்திற்காகக் கட்டிய) உப்புக் கோச்செய்கை, (அதிகாரி களின் பயணவண்டிகளை இழுத்துச் செல்லக் காளைமாடுகளைத் தருவது என்னும்) நல்லெருது, மீனவர் கட்டிய பட்டினச்சேரி, (கள் இறக்கிய ஈழவர் கட்டிய) ஈழம்பூட்சி, இடையர் கட்டிய இடைப்பூட்சி,

www.tamilarangam.net



குயவர் கட்டிய குசக்காணம், தட்டார் கட்டிய தட்டுக்காயம், (குற்ற மிழைத்தோர் கட்டிய தண்டத்தொகையை அரசக்கருவூலத்தில் சேர்ப் பித்துவந்த வியனன் என்பானின் பணிக்காக வாங்கிய) விசக்காணம், வண்ணார் மீதான பாறைக்காணம், (தற்காலிகக் கூடாரம் அமைத் தோர் கட்டிய) புட்டகம், (ஓடக்காரரிடம் வாங்கிய) பட்டினக்கானம், நெய்யப்பட்ட துணி மீதான தறிக்கூறை, பிரமதேயமல்லா ஊர்களில் செக்கு ஆட்டிவந்தோர் கட்டிய செக்கு, தரகர் கட்டிய தரகு, நூல் நூற்போர் கட்டிய பாடாம்கழி, கத்தி வடித்துத் தந்த கொல்லர் கட்டிய கத்திக்காணம், நெடும்பறை அடித்தோர் கட்டிய நெடும்பறை, நெய் மீதான நெய்விலை, எல்சோறு, வழக்குமன்றங்களில் கிடைத்த தண்டத் தொகையான மன்றுபாடு, அரச ஆணையைக் கொண்டுவந்து தருவ தற்கான திருமுகவோலை, நாட்டு ஆட்சிக்குச் சிற்றூர்கள் கட்டிவந்த நாட்டுவகை, பன்னிரு ஆண்டுகளுக்கு ஒரு முறை வாங்கப்பட்ட பன் னிரண்டைக்கறை, வீரத்துக்ககாணம், ஆத்துக்காணம், ஊராட்சிச் சாதிப்பொன், பரிக்காணம், உறிக்காணம் முதலானவை யெல்லாம் பல்லவ வடுகர்கள் தண்டிவந்த வரிகளாகும்.[113]

## இடைக்காலச் சோழர்கள் கன்னடரே!

சேர, சோழ, பாண்டிய அரசக்குடிகளை வடுக அநாகரிகரான களப்பாளரின் படையெடுப்புகள் வேரறுத்த பின்னர், தமிழ்ச் சோழர் குடி முகவரி இல்லாமல் போனது. இச் சோழர் குடியில் வந்த சிலர், அருவாவடதலைநாட்டுக்கு மேலேயிருந்த தெலுங்குநாட்டுக்குத் தப்பிச் சென்று, கடப்பை, கர்னூல் மாவட்டங்களில் ரேநாடு-7000 என்னும் பகுதியை ஆண்டுவந்தனர். இவர்கள் தங்களைக் கரிகாலச் சோழனின் வழியினர் என்றும், உறையூரே தங்களின் மூலவிடம் என்றும் கூறிக்கொண்டனர்.* இந்த ரேநாட்டுச் சோழரைக் கண்ட சீனப் பயணியான யுவான் சுவாங், கி. பி. 639-40ஆம் ஆண்டளவில் அமராவதி, காஞ்சி முதலான இடங்களுக்கு வந்தபோது வழியில் சோழநாட்டைக் கண்டதாகத் தவறாக எழுதிவைத்தான்.[114]

தெலுங்குச் சோழர்கள் பல்லவர்களுக்கும் சளுக்கியர்களுக்கும் அடங்கி ஆண்டதுடன், அவர்களோடு மணவினை உறவுகளையும் வைத்துக்கொண்டனர். இவர்களது கொடியும், சோழரின் புலிக்கொடி யாக இல்லை. தன் வாலை வளையம் போல் சுருட்டிக் கொண்டுள்ள பிடரியுடைய அரிமாவை ஒத்த உருவம் இவர்களின் கொடியில் இருந்தது. வடுகரான விஷ்ணுகுண்டரின் கொடியைப் போன்று அஃது இருந்தது. கன்னடரும் தெலுங்கருமான வடுகர்நாடுகளிலுள்ள குறுநில மன்னர்களைப் போன்றே இந்தத் தெலுங்குச் சோழரும் கூடத் தங்களைக் காசியப கோத்திரத்தினர் எனக் கூறிக்கொண்டனர்.[115]

---

* தெலுங்குப்பொத்தப்பிச் சோழர்கள் தமிழிலும் கல்வெட்டை எழுதினர்.

www.tamilarangam.net



இவர்கள் மளமளவென வடுகமயமாகவும் பிராமணமயமாகவும் ஆனதை அது காட்டும்.

சோழரில் வேறு சிலர் வலிவிழந்து பொலிவிழந்து உறையூரையும் பழையாறையையும் ஒட்டிய காவிரிக்கரையில் கி. பி. 300 முதல் 885 வரையில் சிற்றரசர்களாய்க் குன்றி நின்றனர். உறையூரிலிருந்து ஆண்ட புகழ்ச்சோழன் என்னும் சோழனை அறுபத்து மூன்று நாயன் மார்களில் ஒருவனாகப் பெரியபுராணம் கூறுகிறது. இவனது காலம் கி. பி. 500க்கும் முற்பட்டது.[116] சோழன் செங்கணான் என்னும் கோச் செங்கட்சோழனைப்பற்றித் தேவாரமும் அத் தேவாரத்திற்கு முற்பட்ட தமிழிலக்கியங்களும் குறிப்பிடுகின்றன. இக் கோச் செங்கட்சோழன், 70 சிவன் கோயில்களைக் கட்டியதாகத் திருமங்கை ஆழ்வார் கூறு வார்.[§] இக் கோச் செங்கட்சோழன், பல்லவன் சிம்மவிட்டுணுவின் (கி. பி. 557-90) காலத்தவனாம்.[118] சிம்மவிட்டுணு சோழன் ஒருவனை வெற்றிகண்டதாகக் காசக்குடிச் செப்பேடு கூறுகின்றது. அச் சோழன் கோச் செங்கட்சோழனாகவே இருக்க வேண்டும். இக் கோச் செங் கட்சோழனுக்குப் பிறகு, மூன்றாம் கிள்ளிவளவன் என்னும் சோழன் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து ஆண்டான்.[119] கூன்பாண்டியன் நெடு மாறனின் (கி. பி. 642-90) பட்டத்தரசியான மங்கையர்க்கரசியின் தந்தையான மணிமுடிச் சோழனைப்பற்றிச் சேக்கிழார் குறிப்பிடுகின் றார். பல்லவன் மகேந்திரனுக்குக் கீழடங்கி ஆண்ட சோழ மன்னன் இவனாவான்.[120]

மேற்போந்த தமிழ்ச் சோழர்குடியினர் வழிவந்தவனே தான் என விசயாலயன் என்னும் வந்தேறி வடுகனும் கூறிக்கொண்டான்.

## பிராமணர் இல்லாத நாடா ?!

இடைக்காலச் சோழர்களிடம் அவர்களின் முன்னோரைப்பற்றி வழங்கிவந்த தொன்மக் கதை ஒன்றுண்டு.

சோழரின் முன்னோன் ஒருவன் மான் உருவிலிருந்த ஓர் அரக் கனை விரட்டிச் சென்று காவிரிக் கரையில் அவனைக் கொன்றான். குளித்தவுடன் பிராமணர்க்குக் கொடையளிப்பது மன்னர்களின் வழக்கம்தானே? அதனால், பக்கத்திலிருந்த காவிரி ஆற்றில் குளித்த பின், பரிசில் அளிப்பதற்கு அங்கு பிராமணர் யாராவது தென்படு கின்றனராவென அவன் இங்கு மங்கும் தேடினான். ஆனால், அங்கு பிராமணர் யாருமே இல்லை! "பிராமணர் இல்லாமல் ஒரு நாடா?" என்று வியந்த அவன், அதனால் ஆரியநாட்டிலிருந்து மிகச் சிறந்த பிராமணர் சிலரை அழைத்துவந்து அக் காவிரிக்கரையில் அவர் களைக் குடியேற்றினான். அங்கிருந்த காடுகளை அழித்து நாடாக்கி,

§ "இருக்கிலங்கு திருமொழிவாய் எண்தோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபது செய்து உலகமாண்ட
திருக்குலத்து வளச்சோழன் ........."[117]

www.tamilarangam.net



கமுகுத் தோப்புகளையும் பழத்தோட்டங்களையும் உருவாக்கி அப் பிராமணர் குடியேறிய நாட்டை அவன் வளப்படுத்தினான். வீர ராசேந்திர சோழனின் (கி. பி.1063-69) வரலாற்றைக் கூறும் அவனது அரசவைப் புலவர், இக் கதையைக் கூறுவார். இடைக்காலச் சோழரின் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் இதே கதையைக் காணலாம்.[121]

இந்தக் கதையில் வரும் சோழன் யாரெனத் தெரியவில்லை. ஆனால், அவன் ஒரு வடுகனாகவே இருந்திருக்க வேண்டும். அவனே 'ஆரியர்நாடு' எனப்பட்ட வடுகப்புலத்திலிருந்து வடுகப் பிராமணர் பலரைத் தமிழகத்திற்குக் கொண்டுவந்து குடியேற்றிக் காவிரிக்கரையில் ஓர் அகரகாரத்தை (பிரமதேயத்தை) முதன்முதலில் அமைத்திருக்கவும் வேண்டும். கொங்குநாடு, தொண்டைநாடு ஆகிய இரு அடங்காப் பற்றுகளின் ஊடேதான் தமிழர் நாட்டின் கருப்பகுதிகளுக்குள் வடுகச் சோழர்கள் ஊடுருவினர் என்பதையே இஃது உறுதிப்படுத்துகிறது.

இடைக்காலச் சோழரின் முதல்வனான விசயாலய சோழனே (கி. பி. 850-71) அவ் வடுகச் சோழனாக இருக்கலாம். பல்லவர்கீழ்ச் சிற்றரசராயிருந்த முத்தரையர்களிடமிருந்து கி. பி. 848ஆம் ஆண்டில் அவ் விசயாலயன் தஞ்சையைக் கைப்பற்றினான். சோழநாட்டின் தென்பகுதியை வடுகன் விசயாலயன் முத்தரையரிடமிருந்து கைப்பற்றியது தமிழர் வரலாற்றில் ஒரு பெரும் திருப்புமுனையானது.[122] இவன் ஒரு வடுக வந்தேறியாயினும், தொன்மையான தமிழ் முடிவேந்தரான சோழரின் முடியையும் கொடியையும் கொற்றத்தையும் பறித்து வைத்துக்கொண்டு, தன்னைச் சோழ வழியினனெனப் பீற்றிக்கொண்டான். திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் கன்னியாகுமரிக் கல்வெட்டும் பெருநற்கிள்ளி, செங்கணான் முதலான கழக(சங்க)க் காலச் சோழர் வழிவந்தவனே விசயாலயன் எனப் பொய்யுரைக்கச் செய்து வரலாற்றையே புரட்டினான்.* தருக்குள்ள கழகக் காலப் புலவர்கள் மறைந்து, கூழுக்கும் குரலெடுத்துப் பாடும் புலவர்கள் வடுக வந்தேறி ஆட்சிக் காலத்தில் பெருத்த நிலையில், ஒட்டக் கூத்தரின் மூன்று உலாக்களும், சயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணியும் அப் பொய்யை மெய்யாக்கப் பார்த்தன.[124] வீரராசேந்திரன், இரண்டாம் இராசாதிராசன் (கி. பி. 1163-79) ஆகிய வடுகச் சோழரும்கூடக் 'கரிகாலச் சோழன்' என்னும் பட்டத்தைச் சூட்டிக்கொள்ளவில்லையா?

## திருப்புறம்பியத் திருப்பம்

பாண்டியருக்கும் வடுகரான பல்லவருக்கும் இடையில் கி. பி. 879ஆம் ஆண்டில் திருப்புறம்பியத்தில் நடந்த மிகப் பெரிய போரில்

* "In his race which was resplendent with the fame of Kôkkilli Chôla and Karikâla, *(and)* which was the birth-place of Kôchchenkan and other noble kings, was born the glorious *(and)* victorious Vijayâlaya, whose foot-stool was worshipped by the best of kings.[123]

www.tamilarangam.net



விசயாலய சோழனின் மகனான முதல் ஆதித்த சோழன் (கி. பி. 871 -907) கங்கருடன் சேர்ந்து பல்லவருக்காகப் போரிட்டுப் பாண்டியனைத் தோற்கடித்தான். தென்னிந்திய வரலாற்றில் அக்கால் இன்னொரு திருப்பத்தை ஏற்படுத்திய போர், இத் திருப்புறம்பியப் போரே யாகும்.[125]

என்ன அந்தத் திருப்பம்? சோழன் வழிவந்தவர் எனக் கூறிக் கொண்ட வடுகன், பாண்டியர் ஆட்சியை வேரறுத்த ஒரு வரலாற்று நிகழ்வுதான் அத் திருப்பம். இப் போருக்குப்பின், வரகுண பாண்டியன் இறந்தான். திருப்புறம்பியப் போரில் தோல்வியைத் தழுவிய பாண்டியரால் நெடுநாள் தலையெடுக்க முடியவில்லை. பாண்டியரை எதிர்த்து வடுகச் சோழர் நடத்திய நெடும்போர் விசயாலயன் காலத்திலேயே தொடங்கிவிட்டது.

## வடுக மனு வழியில் வந்த 'சோழர்கள்'!

முதல் ஆதித்தனின் பட்டத்து அரசி, வல்லவரையான் என்ற இரட்டர் (இராட்டிரக்கூட) அரசனான இரண்டாம் கன்னரனின் (இரண்டாம் கிருட்டினனின்) மகளாவாள். அதனால், அவள் ஒரு வடுகச்சி. அவனுடைய இன்னோர் அரசி, பல்லவ இளவரசியான காடுபட்டிகள் என்பவளின் மகளாவாள். அதனால், அவளும் ஒரு வடுகச்சிதான். முதல் ஆதித்தனின் மகனே, முதல் பராந்தகன். அவனுடைய இன்னொரு மகனின் பெயர் கன்னர தேவன். 'கன்னரன்' என்பது கிருஷ்ணன் என்பதன் கன்னட வடிவமாகும். இக் கன்னர தேவன், இரட்டர் இளவரசி இளங்கோன் பிச்சியின் மகனாவான். அதனால், அவனும் ஒரு வடுகனாவான். இது போன்ற செய்திகள் யாவும் ஆதித்த சோழனின் வடுக உறவுகளைக் காட்டுவன.

ஆதித்த சோழனின் மகனான முதல் பராந்தகன், பொற் (இரணிய) கருப்பம், துலைநிறை (துலாபாரம்) முதலான சடங்குகளை நடத்திப் பிரமதேயங்கள் பலவற்றை உருவாக்கினான். பச்சைப் பிராமண அடிவருடியாயிருந்தான்.

முதல் பராந்தகனுக்கு 11 மனைவியர்க்கு மேலிருந்தனர். இவனது மனைவிகளில் ஒருத்தியான கோக்கிழான் அடிகளுக்குப் பிறந்தவனே அவனது மூத்த மகனான இராசாதித்தன். பராந்தகனுக்கும் சேர நாட்டு இளவரசிக்கும் பிறந்தவனே அரிந்திகை அல்லது அரிஞ்சயன். அரிஞ்சயனுக்கு வீமன் குந்தவை, கோதைப் பிராட்டி, கல்யாணி முதலான மனைவியர் இருந்தனர். இவர்களில் குந்தவை என்பாள் தெலுங்கு வடுகச்சியான வைதும்ப இளவரசியாவாள். இவ் வைதும்ப இளவரசிக்குப் பிறந்தவனே சுந்தரசோழன் எனப்பட்ட இரண்டாம் பராந்தகன். அரிஞ்சயனின் இளைய மகனான முதல் இராசராசனின் தாய், மலையமான் குடியில் பிறந்த வானமாதேவி. முதல் பராந்த

16

www.tamilarangam.net



கனின் இரண்டாவது மகனாகிய கண்டராதித்தனின் மகனே உத்தம சோழன். இந்த உத்தம சோழனின் மனைவி, உரத்தான் சொரபை யார் (ஓரட்டணண்) என்னும் கன்னடத்தி ஆவாள்.

சாதிநெறியைத் தமிழகத்தில் நிலைப்படுத்திய கன்னட வழி யினன் என்பதால்தான் இரண்டாம் பராந்தகனான சுந்தர சோழனைக் கலி வழியிலிருந்து உலகை மீட்ட 'இரண்டாம் மனு' எனப் போற் றினர்.[126]

உத்தம சோழனுக்குப்பின் சோழர் அரசுக்கட்டிலேறிய முதல் இராசராசனின் தமக்கையின் பெயர், குந்தவை என்னும் சளுக்கியப் பெயர். முதல் இராசராசன் தன் மகளுக்கும் குந்தவை எனப் பெயரிட் டான். இந்தக் குந்தவையை வேங்கியை ஆண்டுவந்த கீழைச்சளுக்கிய வடுகனான விக்கிரமாதித்தனுக்கு மணம் முடித்தான்.

முதல் இராசேந்திரனின் மனைவியர்கள் வானவன்மாதேவி, முக்கோக்கிழான், பஞ்சவன் மாதேவி, வீரமாதேவி ஆவர். இவர் களில் வானவன் மாதேவி, சேரநாட்டவள். முதல் இராசேந்திரன், தன் மகளான அம்மங்கையை வேங்கியை ஆண்டுவந்த கீழைச்சளுக் கியன் இராசராசனுக்கு மணம் முடித்தான். இவ் விருவருக்கும் பிறந்த வனே பின்னால் முதல் குலோத்துங்கனான இரண்டாம் இராசேந் திரன் என்னும் கீழைச்சளுக்கிய இளவரசன். இக் குலோத்துங்கன், இரண்டாம் இராசேந்திர சோழனின் மகளான மதுராந்தகியை மணந் தான். முதல் குலோத்துங்கனின் காலம் தொட்டு வந்த இடைக்காலச் சோழர்களைச் சளுக்கிய சோழர் என்பர்.[127] இக் குலோத்துங்கனின் காலம் முதல், சோழ நாடு கன்னடரான சளுக்கியரிடம் முற்றாக அடிமைப்பட்டது.

## ஆசான் காணியும் வேதப்பள்ளியும்

முதல் இராசராசனின் குருக்கள், (வங்கத்தின் ஒரு பகுதியான) இலாடம், காசி, காசுமீரம் ஆகிய நாடுகளிலிருந்து வந்தவர்களாவர். முதல் இராசேந்திரன் தன்னுடைய குருவான சர்வசிவ பண்டிதருக்கும் வடநாடுகளிலிருந்த அவனது மாணவருக்கும் ஆண்டுதோறும் 2,000 கலம் நெல்லை ஆசான்காணியாக (ஆசாரிய போகமாக) தொடர்ந்து தந்துவந்தான்.[128] பிராமண ஆசிரியர்கள் பதின்மருக்கும், பிராமண மாணவர்கள் 300 பேருக்கும் எண்ணாயிரம் என்னும் இடத்தில் ஒரு வேதப்பள்ளியைக் கட்டித் தந்தான்.[129]

மூன்றாம் குலோத்துங்கனுக்கு அரசகுருவாக இருந்தவன் விலாட நாட்டுப் பிராமணன் ஆவான். பிராமண மாணாக்கருக்குப் பாணி ணியத்தைக் கற்பிப்பதற்கென்றே வியாகரணதான வியாக்கியான மண்டபத்தை அக் குலோத்துங்கன் அமைத்தான். அதற்காக 60 வேலி நிலத்தைக் கொடையளித்துக் குலோத்துங்கன் காவனூர் என்னும் பிரம தேயத்தை உருவாக்கினான்.[130]

www.tamilarangam.net



திருவியலூரில் சோழமார்த்தாண்ட சதுர்வேதிமங்கலத்துப் பிராமணர்களுக்கு இராசராசன் எடைக்கு எடை பொன் வழங்கினான். இவனுடைய பட்டத்தரசி, பொற்கருப்பைக் (இரணிய கர்ப்பக்) கொடை அளித்தாள்.[13]

களப்பாளர் என்னும் வடுக அநாகரிகர்கள் தமிழகத்தின்மீது படையெடுத்துச் சேர, சோழ, பாண்டிய நாடுகளை அடிமைப்படுத்தித் தொன்று தொட்டு வந்த அந்தத் தமிழ் மூவேந்தர் ஆட்சிகளை ஒழித்தனர். இந்தக் களப்பாளர்களால் சோழர் ஆட்சியும் கொற்றமும் ஒழிக்கப்பட்டது. ஆயினும், பாண்டியர் மட்டும் ஒருவகையில் தப்பிப் பிழைத்தனர். ஆனால், விசயாலய சோழனின் வழிவந்த வடுகச் சோழர்கள், தமிழரிடம் எஞ்சியிருந்த பாண்டியநாட்டின்மீது அடுத்தடுத்துப் படையெடுத்து அப் பாண்டியரின் ஆட்சியை அலைக்கழித்தனர்.

## பாண்டியனின் மணிமுடி

ஆட்சிக்கு வந்த மூன்றாண்டுகளுக்குள் முதல் பராந்தகன் (907-55) பாண்டியநாட்டின்மீது படையெடுத்தான். அந் நாட்டை வென்று, மதுரை கொண்டான் என்னும் பட்டத்தைச் சூட்டிக் கொண்டான். இந்தப் போரில் தோற்ற பாண்டியனுக்கு உதவ ஐந்தாம் காசபன் என்னும் சிங்கள அரசன் தன் படைகளை விடுத்தான். இவ்விரு நாட்டுப் படைகளும் வெள்ளூரில் வடுகச் சோழரால் முறியடிக்கப் பட்டன. பாண்டியனுக்கு உதவுவதற்கென இலங்கைப் படைகள் மீண்டும் வந்தன. கொள்ளை நோயால் பலர் இறக்கவே, அந்த இலங்கைப் படைகள் திருப்பி அழைத்துக்கொள்ளப்பட்டன. போரில் தோற்ற இராசசிம்ம பாண்டியன், தன் முன்னோர் அணிந்துவந்த மணிமுடியையும் செங்கோலையும் இந்திரன் ஆரம் என்னும் மணி மாலையையும் எடுத்துக்கொண்டு இலங்கைக்குத் தப்பிச் சென்றான். அவற்றை யெல்லாம் சிங்கள அரசனிடம் பாதுகாப்பாக வைத்துவிட்டு, தன் பாட்டியின் நாடான சேரநாட்டிற்குச் சென்று ஒளிந்து வாழ்ந்து வந்தான்.

பாண்டியநாட்டை அடிமைப்படுத்தியதைக் குறிக்கும் வகையில் மதுரையில் முடிசூட்டிக்கொள்ளத் திட்டமிட்ட வடுகச் சோழனான பராந்தகன், பாண்டியரின் மணிமுடியையும் செங்கோலையும் மணி மாலையையும் சூடிக்கொள்ள வேண்டி அவற்றைத் தேடினான். அவை யாவும் சிங்கள அரசனிடம் பாதுகாப்பாக இருப்பதை அறிந்த அப் பராந்தகன், இலங்கைமீது படையெடுத்துச் சென்று சிங்கள மன்னனை முறியடித்தான். ஆனால், பாண்டியன் தன்னிடம் கொடுத்து வைத்திருந்த மணிமுடியையும் செங்கோலையும் மணிமாலையையும் எடுத்துக் கொண்டு அந்தச் சிங்களன் இலங்கைத்தீவின் தென்கீழ்த் திசையிலுள்ள உருகுணைக்குச் சென்று ஒளிந்துகொண்டான். இதனால், அவ் வடுகச் சோழனுக்குப் பாண்டியரின் முடியும் செங்கோலும் கிடைக்கவில்லை.

www.tamilarangam.net



கி. பி. 919ஆம் ஆண்டில் முதல் பராந்தகனால் கைப்பற்ற முடியாது போன பாண்டியரின் அம் முடியையும் செங்கோலையும் மணிமாலையையும் கண்டெடுத்துக் கொணர்வதற்கென்றே கி. பி. 1017ஆம் ஆண்டில் அவனுடைய பேரனுக்குப் பேரனான முதல் இராசேந்திரன் இலங்கைமீது படையெடுத்தான். பாண்டியரின் முடியையும் கோலையும் மணிமாலையையும் கைப்பற்றிக் கொண்டுவந்தான். இதைப்பற்றிக் கூறும் இராசேந்திர சோழனின் மெய்க்கீர்த்தி,

"பொருகடல் ஈழத் தரசர்தம் முடியும்
ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும்
முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த
சுந்தர முடியும் இந்திரன் ஆரமும்
..........................................................
..............................................மாப்
பொரு தண்டாற் கொண்ட கோப்பர
கேசரி பன்ம ரான உடையார் ஸ்ரீ
ராஜேந்திர சோழதேவர்க்கு..."[132]

எனக் கூறுகின்றது.

பாட்டனுக்குப் பாட்டனால் முடியாததை முதல் இராசேந்திர சோழன் முடித்துக் காட்டிய இந்தச் செயல், பாண்டியர் குடியை அழித்தொழித்து அவர்களின் கொற்ற வரலாற்றின் வழிவழி அடையாளங்களான முடியையும் செங்கோலையும் மணிமாலையையும் கவர்வதில், வடுகச் சோழர்கள் காட்டிய மட்டற்ற வெறியையே புலப்படுத்தும்.

## சோழர் முடியை நாடிய களப்பாளன்!

களந்தைக் கோன் எனப்பட்ட களப்பாள அரசனே பெரிய புராணத்தில் வரும் கூற்றுவ நாயனார். சோழரின் முடியைத் தனக்குச் சூட்டுமாறு தில்லைப் பார்ப்பனரை அக் களப்பாள வடுகன் பணித்தபோது, "தொன்றுதொட்டு வந்த சோழர்குடியின் முடியை ஒரு வந்தேறிக்குச் சூட்ட மாட்டோம்!" என அத் தமிழ்ப் பார்ப்பனர் மறுத்துவிட்டனர். அவ்வாறு மறுத்ததால் தங்களுக்குத் தொல்லை வருமென அஞ்சி, பின்னர் அவர்கள் சேரநாட்டிற்கு ஓடிவிட்டனர்.[133]

பிற்காலத்தில் வந்தேறி நாயக்கர்கள் தங்களைப் பாண்டியரின் தொடர்ச்சியாகவே நினைக்கவில்லையா? அதனால்தான், பாண்டியரின் மீன் சின்னமே வடுகன் விசுவநாத நாயக்கனின் அரசச் சின்னமானது.[134] வந்தவனெல்லாம் தன்னைப் 'பாண்டியன்' என்றும், 'சோழன்' என்றும், 'சேரன்' என்றும் சொல்லிக்கொண்டு செந்தமிழ் நாட்டை ஆளத் தொடங்கிய கோலத்தைத் தானே இந்தச் செய்திகள் காட்டுகின்றன? அநாகரிகப் படையெடுப்பாளர்கள் வாகை சூடிய நாடுகளிலெல்லாம், இவ்வாறுதானே நடந்தது?

www.tamilarangam.net



விசயாலயன் தொட்டு வரும் இடைக்காலச் சோழர்கள் எல்லாம் 'சோழர்' என்னும் பொய்க்கோலம் பூண்ட வடுக வந்தேறிகளே என்பதை மேற்போந்த வரலாற்று மெய்ம்மைகள் ஐயந்திரிபற மெய்ப்பிக்கின்றன. ஆயினும், வந்த அநாகரிக வடுகனெல்லாம் தன்னை ஒரு 'சோழன்' என்றும் 'பாண்டியன்' என்றும் கூறிக் கொண்டு தமிழ் மண்ணை அடிமைப்படுத்தி அடக்கியொடுக்கி ஆண்டதைப் போன்ற அவலத்திற்கும் புரட்டலுக்கும் உலகில் வேறெந்த இனமும் ஆளாகியிருக்குமோ என்பதே நம் முன் நிற்கும் பெரிய கேள்வி. சென்ற நூற்றாண்டில் ஒரு தறிகெட்ட பாளையக்காரனாக வழிப்பறிக் கொள்ளையடித்துக் கொண்டிருந்த கட்டபொம்மு என்னும் பச்சைத் தெலுங்கனை நம் காலத்திலேயே சிலர் 'வீரபாண்டிய'னாக ஆக்கவில்லையா?

## வந்தேறி வடுகச் சோழரின்கீழ் விளங்கிய நிலவுறவுகள்

பண்டைத் தமிழர் கண்ட காணியுறவுகள் (நிலவுறவுகள்) மிகவும் நுட்பமானவை. ஆனால், வடுக வந்தேறிகளின் படையெடுப்புகளுக்கும் நாடுகவர்புக்கும் பிறகு, அவ் வுறவுகளில் ஓர் இயல்பு மாற்றம் நிகழ்ந்தது. தமிழருக்குச் சொந்தமாயிருந்த காணிகளும் கழனிகளும் தோட்டந்துரவுகளும் வடுக வந்தேறிகளால் கைப்பற்றப்பட்டன. வந்தேறி வடுகர்கள் கருநாடகத்திலிருந்து இறக்குமதி செய்த பிரமதேயம் என்னும் கட்டுமானமும் — அதற்கேயுரிய உள்ளாட்சி அதிகாரக் குவிப்பும் — தமிழகத்தில் அதுவரை நிலவி வந்த விளைப்புறவுகளில் அடிப்படை மாற்றங்களை விளைவித்தன. மொத்தப் பேரூர்களையும் சிற்றூர்களையும் எடுத்துக்கொண்டால், பிராமண அகரங்களின் எண்ணிக்கை சிறிதேயாகும். ஆயினும், அவற்றின் தன்னாட்சி அதிகாரங்களும், அரசனோடும் அதிகார வகுப்போடும் அவற்றிற்கிருந்த கொப்பூழ் உறவுகளும் மிக மிக நெருக்கமானவை; வலிமையானவை; நகமும் சதையும் போல் பிரிக்க முடியாதவை. அப்படியிருந்தும், பழைய கட்டுமானங்களும் சொல்லாட்சிகளும் மரபுகளும் வரலாற்று எச்சங்களாக நின்று அடிமட்டத்திலான விளைப்புறவுகளில் நீடிக்கவே செய்தன.

உடம்பின்மீது அணியப்பட்டதே உடைமை எனப்பட்டு, பின்னர் சொத்தைக் குறிக்கும் சொல்லானது. தொடக்கத்தில் அதன் பொருள், Belonging என்னும் ஆங்கிலச்சொல்லுக்கு ஈடாயிருந்தது.[135] எனினும், அது தனிச்சொத்தைக் (Private Property) குறிக்கும் சொல்லமைதியாகத் தமிழில் என்றோ ஏற்றமும் மாற்றமும் பெற்றுவிட்டது.

### கழனி முதல் கானல் வரை

பழந்தமிழர்கள் நிலத்தைப் பாகுபடுத்திய முறை மிக நுட்பமானது. வைத்துப் போற்றப்படும் நிலத்திற்குப் பெயர் வயல்; நெல்

www.tamilarangam.net



லடிக்கும் நெற்களத்துடன் கூடிய நிலமே *கழனி*; களமர் போன்ற அடிமைகளைக் கொண்டு உழுவிக்கப்பட்ட பள்ளநிலம் தான் **பண்ணை**; நீரைப் பாய்ச்சிச் சேறாகக் குழப்பி உழுத நிலத்திற்குப் பெயர் *செறு*; நெல்லும் தினைகளும் சாமையும் விளைந்த நிலமே *செய்*; மிகவும் பழமை வாய்ந்த பயிர்நிலத்திற்குப் பெயர்தான் *முதை*; ஒரு புதிய கொல்லைக்குப் பெயர் *இதை*; ஆற்றுப் புரவும் ஏரிப்புரவும் கொண்ட நன்கு உழப்பட்ட நீர்நிலமே *நன்செய்*; கிணற்றுப்புரவுக்கு ஆட்பட்ட அல்லது வானம் பார்த்த நிலமே *புன்செய்*; மிக மிகப் பழமையான நீர்நிலமே *பழனம்*; காடுகளை வெட்டித் தீயிட்டுக் கொளுத்தியதால் வந்த முல்லைநிலத்துப் புன்செய் நிலமே *கொல்லை*; குன்றங்களின்மீது ஒரே கொல்லையில் திரும்பத் திரும்பப் பயிரிடாமல், இடம் விட்டு இடம் மாறிப் பயிரிடப்பட்ட (Shifting Cultivation) நிலமே *புனம்*; காய்ந்த நிலத்தை உழுது புழுதியாக்கி விதைத்தபின், அவ் வித்துக்கள் முளைக்க மழைக்காகக் காத்திருந்த நிலத்திற்குப் பெயர் *புழுதிக்காடு*; மழையை நம்பிக் கிடக்கும் நிலமே *வானாவாரி*; பயன்பாட்டில் இல்லாத அரசு நிலத்திற்குப் பெயர் *புறம்போக்கு*; பயிரிடப்படாது கிடக்கும் புல் முளைத்த நிலமே *தரிசு*; செம்மண் நிலத்திற்குப் பெயர் *சிவல்*; களிமண் நிலம்தான் *கரிசல்*; மேட்டு நிலம்தான் *சுவல்*; தாழ்வான நிலமே *அவல்*; முள்செடிகளாலோ முள்ளாலோ வேலியிடப்பட்ட நிலத்திற்குப் பெயர் *வேலி*; மிளகாய் போன்ற செடிகள் விளைந்த நிலமே *தோட்டம்*; தென்னை, மா போன்ற மரங்கள் விளைந்த நிலத்திற்குப் பெயர் *தோப்பு*; முல்லை நிலத்திலும் குறிஞ்சிநிலத்திலும் உள்ள அடர்ந்த மரப்பகுதிதான் *காடு*; மிக மிக அடர்த்தியான காட்டிற்குப் பெயர் *அடவி*; அடர்ந்த மரங் களையுடைய இயற்கைத் தோட்டமே *சோலை*; பாதுகாக்கப்பட்ட சோலைக்குப் பெயர், *கா*; கடற்கரை அருகிலுள்ள சோலைதான் *கானல்*; மக்கள் வாழாத காட்டுக்குப் பெயர் *வனம்*;[136] பயிரிடத் தக்க அல்லது பயிரிடப்பட்ட நிலத்தின் பெயர், *விலை*.

## வெள்ளாளரும் காராளரானர்!

உழுவித்து உண்டுவந்த வேளாளனை *வெள்ளாளன்* என்பது வடுக அநாகரிகரின் படையெடுப்புகளுக்கு முந்தைய தமிழர் வழக்க மாகும். *வெள்ளாளர், காராளர்* என்னும் வேற்றுமை, வடுக அநாக ரிகரின் படையெடுப்புகளுக்கு முன்னர் தமிழரிடம் விளங்கிவந்த காணியுறவுகளாகும். உழுதுண்டு வந்த வேளாளனைக் *காராளன்* என்றனர். இவர்களை முறையே *வெண்களமன்* என்றும் *கருங் களமன்* என்றும் கூறுவர். சேலம் சேரவரையன் மலையிலுள்ள மலையாளிகளில் ஒரு பிரிவினர் தங்களைக் 'காராளர்' எனச் சொல்லிக் கொள்வர்.[137] வடுக அநாகரிகரிடம் தங்களின் காணிகளைப் பறி கொடுத்த தமிழ் வெள்ளாளர்கள், அவ் வடுக வந்தேறியர் காலத்தில் **காராண்மையாளர்** என்னும் பெயரைப் பெற்றனர். அத்தொடு,

www.tamilarangam.net



பெயரளவில் பெருங்குடிமக்கள் எனப்பட்டனர். அவர்களில் சிலர், கீழ்க்குடிகள் என்றும் ஆயினர். முந்தைய காராளரோ, உழுகுடி என்னும் புதுப் பெயருடன் தரம் தாழ்ந்தனர்.

இந் நிலையில், வடுகச் சோழர் காலத்தில் நிலவிய காணியுறவு களின் அடுக்கின் உச்சியில் அரசன் வீற்றிருந்தான். அந்த அரசனுக்கு அடுத்துப் பிரமதேயங்களின் வடுகப் பிராமணப் பெருங்குடிமக்களும் (சபையாரும்), வெள்ளாளரின் உடைமைகளாயிருந்த ஊர்களின் காராண்மையாளரும் (occupancy holders) இருந்தனர். இடைத்தரகர் யாருமின்றி அரசனுக்கு நேரடியாகவே இறையையும் வரிகளையும் காணிக்கடனாகச் செலுத்திவந்த வெள்ளான்வகை ஊரிலிருந்த பெருங்குடிமக்களைக் காராண்மையாளர் அல்லது காணியாளர் என்றனர். காணியாளருக்குத் தத்தம் காணிகளின்மீது காராண்மை அல்லது காணியுரிமை (cultivating right) இருந்தது. பெருங்குடிமக்க ளிடமிருந்த நிலங்களைப் பெருங்குடிப்பற்று என்றனர். காணிக் கடனைக் கட்டியது போக, ஒரு நிலத்தின் முழுப் பயனையும் நுகரும் உரிமையுடையோராக அந்தக் காராண்மையாளர்கள் இருந்தனர். ஓர் ஊரில் சொந்தமாக நிலம் வைத்திருந்தோனை உடையான் என்றனர். ஊரிலிருந்த குடும்பங்களின் பெரியோர்களைக் கிழவர் என்றனர். இவர்கள் தாம் ஊரவையினரான ஊரார் ஆவர்.

பெருங்குடிமக்களுக்குக் கீழே, அவர்களிடமிருந்து காணிகளைக் குடிக்கூலிக்கு எடுத்திருந்த கீழ்க்குடிகள் (கீழ்க்குடிகளிலார் அல்லது கீழ்க்காராண்மை உடைய குடிகள்) இருந்தனர். இக் கீழ்க்குடிகளுக் கும் கீழே, நிலத்தில் நேரடியாக இறங்கி உழுது விளைவித்த உழுகுடி கள் (உழுகுடிமக்கள் அல்லது உழுதான்குடிகள் அல்லது குடிமகன் கள்) இருந்தனர். பிற்காலத்தில் இவர்களை உழுகுடி வெள்ளாளர் என்றனர். காணியுரிமை கொண்ட பெருங்குடிமக்களுக்குக் கீழ்க் குடிமக்கள் கட்டிய வெள்ளாண்மைப் பங்கை மேலாட்சி அல்லது மீயாட்சி அல்லது மேல்வாரம் என்றனர். மேலாட்சியை (மேல்வாரத் தை)ச் சங்கதத்தில் 'போகம்' என்றனர். காராண்மையாளரின் காணி களைக் குடிக்கூலிக்கு எடுத்து உழுதுண்டுவந்தவர்களுக்கு வெள்ளாண் மையில் கிடைத்த பங்கைக் கீழாட்சி அல்லது கீழ்வாரம் என்றனர்.[138]

காணியுரிமை என்பது கால்வழி உரிமை (hereditary right). இஃது ஒரு முற்றுடைமை. காணியுரிமை என்னும் சொல்லுக்கு ஈடாக 'மிராசு' என்னும் பாரசிகச் சொல்லை ஆங்கிலேயர் காலத்தில் ஆண்டனர். உழவுக்காணி என்னும்போது மட்டும் அஃது உழுதுண்ணும் அல்லது உழுவித்துண்ணும் உரிமை எனப் பொருள்பட்டது. இக் காணியில் நன்செய், புன்செய், ஊர் நத்தம், குளம், புலைச்சேரி ஆகியனவெல் லாம் அடங்கின.

கீழ்க்குடிகள், உழுகுடிகள், கொத்தடிமைகள் ஆகியோர்மீது மிக மிக அழுத்தமாகக் குந்திக்கொண்டிருந்த சுரண்டல் உறவுகளும்

www.tamilarangam.net



அடிமைத்தனமும் சாதி ஒடுக்கலும் அவர்களை அவ் வூரை விட்டே பெயர்ந்து போக ஒண்ணாமல் செய்வதில் அகரகாரப் பெருங்குடிமக் களும், கோயில் மடவளாக அதிகாரிகளும்பெரும் கண்ணாயிருந் தனர். இந்த அகரகாரப் பொருளியலை அடிப்படையாக வைத்தே, வந்தேறி வடுகரின் அரசுகளிலும் ஆட்சிகளிலும் விளங்கிய வாரம், குத்தகை ஆகிய உழவடை முறைகள் கட்டுக்கோப்பாக வடிக்கப் பட்டன.

## குடிநீக்காக் காராண்மையும், குடிநீக்கிய காராண்மையும்

ஒரு காணியை விற்கவோ, பிறருக்கு எழுதிவைக்கவோ செய்த போது, அந்த நிலத்தின் காராண்மையாளர் அந் நிலத்தில் கீழ்க்குடி களாகவோ உழுகுடிகளாகவோ இருந்தவர்களிடம் இவ்வளவு மேலாட்சியும் (மேல்வாரமும்) குடிமையும் வரிகளும் கட்ட வேண்டும் என்றிருந்த பழைய குடியுடன்படிக்கையை நீக்கியோ, நீக்காமலோ, அந் நிலத்தை விற்கும் வழக்கம் பல்லவர் காலத்திலேயே இருந்தது.

ஒரு காணியில் உழுதுண்டுவந்த கீழ்க்குடிகளுடனும் உழுகுடி களுடனும் செய்துகொண்ட பழைய குடியுடன்படிக்கை இனிச் செல் லாது என நீக்கிவிட்டு, அந் நிலத்தை வாங்கவோ கொடையாகப் பெறவோ கையகப்படுத்தவோ செய்தவருடன் அக் கீழ்க்குடிகளும் உழுகுடிகளும் புதிதாகக் குடியுடன்படிக்கையைச் செய்துகொள்ள வழிவகுத்த நிலவுடைமை மாற்றத்தைக் குடிநீக்கிக் காராண்மை என்றனர். விற்கப்படவோ கொடையாகத் தரப்படவோ கையகப் படுத்தவோ நேர்ந்த ஒரு நிலத்திலுள்ள கீழ்க்குடிகளும் உழுகுடிகளும் முந்தைய காராண்மையாளருடன் செய்துகொண்ட பழைய குடி யுடன்படிக்கையை நீக்காமலும் கைவிடாமலும் புதிய காராண்மை யாளர் அதனை அப்படியே நீட்டித்ததைத்தான் குடிநீக்காக் காராண்மை என்றனர்.[139]

குடிநீக்கிக் காராண்மையின்கீழ், புதிய குடியுடன்படிக்கையில் இன்னின்ன மாற்றங்கள் வேண்டுமென முன்மொழியும் உரிமை, நிலத்தை வாங்கிய புதிய காராண்மையாளருக்கு இருந்தது.[140] அந்த மாற்றங்களை ஏற்பதும் ஏற்காததும் பழைய காராண்மையாளரின் விருப்பு வெறுப்பைப் பொறுத்தது. குடிநீங்காக் காராண்மை மாற்றத் தின்கீழ், காணி கைமாறியபோது இருந்த மீயாட்சி (மேல்வாரம்), குடிமை, வரிகள் ஆகியவற்றிலான அளவுகளே தொடர்ந்து நீடிக்க வேண்டுமேயன்றி, அவற்றை மாற்றக் கூடாது.

குடிநீங்காக் காராண்மை என்னும் கீழ்க்காராண்மையின் கீழ், அளவை மாற்றாது ஒரே அளவிலேயே தொடர்ந்து காணிக் கடனைச் செலுத்திவந்த வழக்கமும் இருந்தது. அதை வாடாக் கடன் (நிலை இறை) என்றனர்.[141]

www.tamilarangam.net



## கடமையும் குடிமையும்

பெருங்குடிமக்கள் என்றோ, மேல்குடி என்றோ அழைக்கப்பட்ட காராண்மையாளரோ — ஒரு நிலத்தைக் கொடையாகப் பெற்றவரோ — அரசனுக்குக் கட்ட வேண்டிய கட்டணமே கடமை எனப்பட்டது. ஒரு நிலத்தின்மீது காணியுரிமை கொண்டிருந்ததால் கட்ட வேண்டியிருந்த காணிக்கடன் அஃதாகும். அரசனுக்குக் கட்ட வேண்டிய இறை தவிர, நெல்லாகவோ காசாகவோ ஊழியப்பணி வழியாகவோ நாட்டுக்கும் ஊருக்கும் செலுத்த வேண்டிய காணிக்கடன்கள் இருந்தன. இறையுடன்கூட, நாட்டு ஆட்சிக்குக் கட்ட வேண்டிய நாடாட்சி, ஊராட்சிக்குக் கட்ட வேண்டிய சிற்றாயம் அல்லது சில்வரி போன்ற கட்டணங்களும் பணிகளும் பிற வரிகளும் சேர்ந்து ஒட்டுக்காகக் காணிக்கடன் எனப்பட்டது. நாட்டுச்செலவுக்காக நாட்டார் என்னும் நாட்டு அவையினரால் தண்டப்பட்ட நாடாட்சி என்னும் வரி, புன்செய் நிலப்பகுதிகளிலேயே பெரும்பாலும் வாங்கப்பட்டது. ஊரவையாரிடம் ஊருக்கெனக் கட்டிவந்த வரியை ஊரிடுவரிப்பாடு அல்லது ஊராட்சி என்றனர்.

காணியுரிமையுள்ள பெருங்குடிமக்கள் அரசனுக்குச் செலுத்தி வந்த இறைதான் ‘கடமை’ என்றாயின், அம் மேல்குடியினரிடமிருந்து நிலத்தை எடுத்து உழுதுண்டுவந்த உழுகுடிமக்களும் நில்லாக்குடிகளும் (tenants-at-will) அரசனுக்கோ அவனது பணியாளருக்கோ நாட்டிற்கோ ஊருக்கோ கோயிலுக்கோ ஆற்றி வந்த கட்டாயப் பணியே குடிமை ஆகும். இந்தக் குடிமையைக் காசாகவோ நெல்லாகவோ கட்டிவந்தனர்.[142]

ஆறு, ஏரிக்கரைகளை எழுப்புவதும் அவற்றைச் செப்பனிடலும் பேணலும் (காவிரிக்கரையில், ‘செய்கரை’ என்னும் பொருள்பட இதைக் குலை என்றனர்); ஆறுகளுக்குக் குறுக்கே குறுஅணைகளான குரம்புகளைக் கட்டி ஆற்றுநீரைக் கால்வாய்களில் மடைதிருப்புதல்; ஆற்றில் புதுப்புனல் வரும் முன்னர் வண்டல் அடையைத் தூர்வாருவதும், ஆற்றுப்பெருக்கின்போது வயற்கால்களை வெட்டுவதும் ஆகிய செந்நீர் வெட்டி முதலான பணிகள் குடிமைக்குள் அடங்குவன. இவற்றுடன், அரசனும் அவனது பரிவாரங்களும் வரும்போது செய்ய வேண்டிய பணி விடையாகிய திருவெழுச்சிக்கடமை, அரண்மனைக் காவலுக்கு ஊருக்கு இவ்வளவு பேர் என அனுப்பப்பட்ட பணியான திருக்கொற்றவாசல் அல்லது திருவாசல்போந்த குடிமை ஆகியனவும்கூடக் குடிமையின்கீழ் வருவன.[143] தேவதான ஊர்களில், அரசனுக்கு மாறாக அந்தப் பணி ஊர்த்தெய்வத்திற்கு ஆற்றப்பட்டது.[144]

கீழ்க்குடிகளும் உழுகுடிகளும் மட்டுமே சுமக்க வேண்டிய இயல்பால் வேறுபட்ட எதிர்பாராத பணிகளையே குடிமை என்றனர். ஊருக்கும் நாட்டுக்கும் பொதுவாகக் காலத்தால் வந்துற்ற பணியும் செலவுமே குடிமை எனப்பட்டது.[145]

www.tamilarangam.net



காணியாளனே கீழ்க்குடியாகவோ உழுகுடியாகவோ இருந்த நிலையில், இக் குடிமை அவனால் கட்டப்பட்டது. கீழ்க்குடிக் காராண் மையாளர்களோ நில்லாக்குடிகளோ உழுகுடிமக்களின் சார்பாக அக் குடிமைப் பணத்தைக் கட்டிவந்ததும் உண்டு.[146] "பிராமணரிடமிருந்தும் வெள்ளாளரிடமிருந்தும் குடிமைப்பணம் எதையும் வாங்கக் கூடாது."[147] என்னும் மன்னார்குடிக் கல்வெட்டு, அக் குடிமையைப் பெருங்குடிமக்களிடமிருந்து தண்டவில்லை என்பதைக் காட்டும். குடிமை, (பொதுவாகக் காசாகவே வாங்கப்பட்ட) அந்தராயம் போன்ற சில்லிறைகள், நாட்டாரும் ஊராரும் கூடி முடிவெடுத்த பிற தீர்வை கள் ஆகிய அனைத்தையும் கீழ்க்குடிமக்களும் உழுகுடிமக்களுமே செலுத்த வேண்டியிருந்தது.

காவலில் போந்த குடிமை, காவீந்த குடிமை, கொற்றவாசலில் போந்த குடிமை (திருக்கொற்றவாசலால் போந்த குடிமை), வாயில் போந்த குடிமை (வாசலில் போந்த குடிமை), கோயில் வாசலால் போந்த குடிமை (திருவாசல் குடிமை, திருவாசலால் வந்த குடிமை, திருவாசலில் போந்த குடிமை), திருவெழுச்சிக் குடிமை, வாரக்குடிமை முதலான குடிமைகள் சோழநாட்டில் வழக்கிலிருந்தன.

## பற்றுகள்

ஊருக்குள் குடியிராது வேற்றூரில் வாழ்ந்துகொண்டு ஒரு நிலத்தை உழவடைக்கு எடுத்து நில்லாக்குடியினராக உழுதுண்டோர் எல்லாம் புறக்குடிகள் ஆயினர். இவர்களுக்கு உழவடையாக விடப் பட்ட காணியைப் புறப்பற்று என்றனர். இப் புறக்குடிகள் எல்லாம் புறவரி என்னும் தனிவரியைக் கட்ட வேண்டியிருந்தது.

பிறங்கடை (வாரிசு) இல்லாது மாண்டவரின் நிலத்தையும், கடமை கட்டாமல் ஓடி ஒளிந்தவரின் காணியையும் ஊரவையே எடுத்து விற்கவோ அதன் சொந்தக்காரனின் நெருங்கிய உறவின னுக்கு அதை மாற்றி எழுதவோ செய்தது. ஆண் மகவு இல்லாதவனின் காணி, பெண்மகவுக்கும் — அதன் வாயிலாக அவனது மாப்பிள்ளைக் கும் — சில சூழ்நிலைகளில் மாண்டவனின் உறவினனுக்கும் — பெண் வழியிலேயே அளிக்கப்பட்டதுமுண்டு.

> "அறுதிபண்ணுகிற இடத்துப் பொலியூட்டு பெண்வழியும் வரும் என்று ஸ்ரீமகேஸ்வரர் நிச்சயித்தமையில்"[148]

என வரும் கி. பி. 1166ஆம் ஆண்டு திருக்களர் கல்வெட்டு அதைக் காட்டும்.

நிலவுடைமைகளும் காணிப்பற்றுகளும் பல்வகைப்பட்டன. அரசனுக்கோ சிற்றரசனுக்கோ சொந்தமாயிருந்த நிலங்கள்தாம் அடை நிலங்கள். நாடாள்வாரைப் போன்ற ஆண்டைகளுக்கு வழங்கப்பட்ட நிலங்களைக் காணிப்பற்று (சீவிதம்) என்றனர். பிராமணரல்லாத வேளான்குடியினரின் காணிகளையே ஊர்க்காணிகள் என்றனர்.

www.tamilarangam.net



சிவன் கோயிலுக்கு இறையிலியாக விடப்பட்ட காணியே தேவ தானம். மால் கோயிலுக்கான இறையிலி நிலமே திருவிடையாட்டம். அருக(சைன)ரின் பள்ளிகளுக்குக் கொடையாகத் தரப்பட்டதே பள்ளிச்சந்தம். படைஞர்க்குச் சொந்தமான காணிதான் படைப் பற்று. அரசனோ ஆள்வானோ அழைக்கையில் படைப்பணி செய்ய வேண்டும் என்னும் கடப்பாட்டை உடையவர்க்கே படைப்பற்று தரப் பட்டது. கோயில் நிலத்தின் காராண்மையாளரைக் கோயில்பற்று டையார் என்றனர்.

அரசனுக்கு நேரடியாகக் காணிக்கடன் கட்ட வேண்டியிருந்த முழுக் காராண்மையுரிமை கொண்ட பிராமணரல்லாக் காணியாள ரின் நிலமே வெள்ளான்வகைக் காணியாகும். இதற்கான காணிக் கடனை நாடு அல்லது ஊர் வழியாகவோ, குறிப்பிட்ட ஒருவரின் வழியாகவோ செலுத்த வேண்டியிருந்தது.

## பல்லவன் கொணர்ந்த பிரமதேயம்

மன்னர்கள் கொடையாக அளிக்க, பிராமணர்கள் மட்டுமே நிலவுடையார்களாயிருந்த ஊர்கள்தாம் பிரமதேயங்கள். பிரமதேய அல்லது தேவதான ஊராரே முதல் காராண்மையாளராக — காணிக் கொடை பெற்றவராக — இருக்கையில், அவர்களுக்கும் கீழே கீழ்க் குடிகளிலார்கள் அல்லது கீழ்க்காராண்மையாளர்கள் இருந்தனர். நேரடியாக நிலத்தை உழுது விளைவித்துவந்த உழுகுடிமக்கள் அல்லது உழுதான்குடிகள் என்னும் நில்லாக்குடிகள் (tenants-at-will) அவர் களுக்கும் அடியில் இருந்தனர்.

பல்லவர் காலத்தில் தோன்றிய பிரமதேயங்கள், இடைக்காலச் சோழர் காலத்தில் மளமளவெனப் பல்கிப் பெருகின. ஆயினும், பிரம தேயங்கள் அல்லாத வெள்ளான்வகை ஊர்களே பெரும்பான்மை யானவையும் தொன்மையானவையுமாய் இருந்தன. அந்தப் பிரம தேயங்களின் இயல்புகளைப் பின்வருமாறு நிரல்படுத்துவர்:[149]

1. பிரமதேயத்தில் குடியிருந்தோரெல்லாம் மேட்டுக்குடிப் பிராமணராயிருந்தனர். குறிப்பிட்ட அளவுக்கு நிலச்சொத்து வைத்திருந்த பிராமணர்கள் மட்டுமே பிரமதேய ஊரவையின் உறுப்பினராக முடிந்தது.

2. பிரமதேய ஊர்களுக்கும் இடைக்காலச் சோழ மன்னர்களுக் கும் இடையில் மிக நெருங்கிய கொப்பூழ் உறவு இருந்தது.

3. பழைய தஞ்சை, திருச்சி, தென்னார்க்காடு அடங்கிய சோழ மண்டலத்திலும், பழைய வடவார்க்காடு, செங்கை, சித்தூர், நெல்லூர் ஆகிய மாவட்டங்கள் அடங்கிய செயங்கொண்ட சோழமண்டலத்திலும், ஒவ்வொரு நாட்டிலும் ஒன்றுக்கு மேற்பட்ட பிரமதேயங்கள் இருந்தன.

www.tamilarangam.net



4. பிரமதேய ஊர்களெல்லாம் அரசின் உள்ளாட்சி அமைப்பில் முகாமையான பங்கை வகித்தன.

பழைய தஞ்சை, திருச்சி மாவட்டங்கள் அடங்கிய சோழ மண்டலத்திலிருந்த வளநாடுகளில் வடுகச் சோழர் காலத்தில் விளங்கிய நாடுகளிலிருந்த பிரமதேய்ங்களின் எண்ணிக்கையைக் கண்டறிந்த யப்பானிய ஆய்வர்கள், அவற்றைப் பின்வருமாறு தொகுத்து வெளியிட்டுள்ளனர்.[150]

| எண் | வளநாடு | நாடு | பிரமதேயங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | அருண்மொழித்தேவ வளநாடு | அளநாடு | 2 |
| | | ஆர்வல கூற்றம் | 2 |
| | | இடையளநாடு | 2 |
| | | இங்கநாடு | 2 |
| | | மங்கலநாடு | 1 |
| | | நென்மலிநாடு | 4 |
| | | புலியூர்நாடு | 0 |
| | | புறங்கரம்பைநாடு | 10 |
| | | தக்களூர்நாடு | 1 |
| | | வலிவலக்கூற்றம் | 0 |
| | | வண்டாழை வேலூர்க் கூற்றம் | 3 |
| | | ? | 11 |
| 2. | சத்திரிய சிகாமணி வளநாடு | அளநாடு | 3 |
| | | இங்கநாடு | 1 |
| | | மருகல்நாடு | 4 |
| | | பனையூர்நாடு | 1 |
| | | முழையூர்நாடு | 1 |
| | | பட்டினக்கூற்றம் | 9 |
| | | சேற்றூர்க்கூற்றம் | 3 |
| | | தேவூர்நாடு | 1 |
| | | திருநறையூர்நாடு | 5 |
| | | திருவானூர்க்கூற்றம் | 1 |
| | | வேளாநாடு | 1 |
| | | ? | 8 |
| 3. | தென்கரை (கேரளாந்தக) நாடு | சூரலூர்க்கூற்றம் | 1 |
| | | தட்டைக்களநாடு | 1 |
| | | உறையூர்க்கூற்றம் | 7 |
| | | ? | 2 |
| 4. | நித்தவிநோத வளநாடு | ஆலூர்க்கூற்றம் | 4 |
| | | கந்தாரநாடு | 1 |
| | | கரம்பைநாடு | 1 |
| | | கிழார்க்கூற்றம் | 3 |
| | | முடிச்சோழநாடு | 2 |
| | | நல்லூர்நாடு | 2 |

www.tamilarangam.net



| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| | | பாம்புணிக்கூற்றம் | 1 |
| | | பொயிற்கூற்றம் | 0 |
| | | வெண்ணிக்கூற்றம் | 4 |
| | | வீரசோழவளநாடு | 0 |
| | | ? | 2 |
| 5. | பாண்டிய குலாசனி வளநாடு | ஆர்க்காட்டுக்கூற்றம் | 1 |
| | | எயில்நாடு | 1 |
| | | எரிய(எறியூர்)நாடு | 0 |
| | | இடையாற்றுநாடு | 3 |
| | | கிளியூர் நாடு | 0 |
| | | கீழ்ச்செங்கிளிநாடு | 0 |
| | | கீழ்ச்சூடிநாடு | 0 |
| | | மீசெங்கிளிநாடு | 1 |
| | | மீய்பொழிநாடு | 0 |
| | | பனங்காடுநாடு | 0 |
| | | தஞ்சாவூர்க்கூற்றம் | 0 |
| | | புன்றிற்கூற்றம் | 1 |
| | | புறக்கிளியூர்நாடு | 1 |
| | | சுண்டைமூலைநாடு | 1 |
| | | வடகவிரநாடு | 0 |
| | | வடசிறுவாய்நாடு | 1 |
| | | விளாநாடு | 3 |
| | | ? | 4 |
| 6. | தென்கரை (இராசராச) வளநாடு | ஏமப்பேர்க் கூற்றம் | 0 |
| | | கீழ்வேங்கைநாடு | 1 |
| | | குன்றிற்கூற்றம் | 0 |
| | | பன்றியூர்நாடு | 0 |
| | | பொயிற்கூற்றம் | 0 |
| | | புலிவலக்கூற்றம் | 0 |
| | | புன்றிற்கூற்றம் | 0 |
| | | சென்னமங்கலக்கூற்றம் | 1 |
| | | வரகூர்நாடு | 0 |
| | | ? | 4 |
| 7. | இராசேந்திரசிம்ம வளநாடு | அடிகைமங்கைநாடு | 1 |
| | | அண்டாட்டுக்கூற்றம் | 3 |
| | | இன்னம்பர்நாடு | 6 |
| | | கார்நாடு | 1 |
| | | கொண்டநாடு | 1 |
| | | குறுக்கைநாடு | 4 |
| | | மண்ணிநாடு | 6 |
| | | மிறைகூற்றம் | 2 |
| | | மிழலைநாடு* | 1 |
| | | நல்லாற்றூர்நாடு | 2 |
| | | நாங்கூர்நாடு | 3 |

* மிழலை நாடும் மிழலைக்கூற்றமும் அடுத்தடுத்து இருந்த இருவேறு நாடுகளாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| | | நெலுவூர்நாடு | 1 |
| | | பிடவூர்நாடு | 1 |
| | | பொய்கைநாடு | 2 |
| | | திருக்கழுமலநாடு | 3 |
| | | திருவாலிநாடு | 2 |
| | | திருவிந்தளூர்நாடு | 3 |
| | | உத்துங்கதுங்க வளநாடு (வடகரைகுன்றக்கூற்றம்) | 0 |
| | | வெண்ணெய்யூர்நாடு | 5 |
| | | வினத்தூர்நாடு | 1 |
| | | ? | 11 |
| 8. | இராசசூரிய வளநாடு | களாரக்கூற்றம் | 1 |
| | | மீமலை | 2 |
| | | பாச்சிற்கூற்றம் | 1 |
| | | மீப்பலாறு | 0 |
| | | கீழ்ப்பலாறு | 2 |
| | | செம்புறை கண்டம் | 1 |
| | | வடவழிநாடு | 0 |
| | | வெங்கோன்குடிகண்டம் | 0 |
| | | ? | 1 |
| 9. | உய்யக்கொண்டான் வளநாடு | ஆக்கூர்நாடு | 3 |
| | | அம்பர்நாடு | 5 |
| | | குறும்பூர்நாடு | 6 |
| | | மருகல்நாடு | 1 |
| | | பாம்பூர்நாடு | 4 |
| | | திரைமூர்நாடு | 2 |
| | | திருநறையூர்நாடு | 1 |
| | | திருவழுந்தூர்நாடு | 4 |
| | | வெண்ணாடு | 6 |
| | | விளைநாடு | 4 |
| | | ? | 4 |

தொண்டநாடு, நடுவில்நாடு, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளில் கிடைத்த செப்பேடுகளையும் கல்வெட்டுகளையும் வைத்து, அப் பிரம தேயங்களின் எண்ணிக்கையை பின்வருமாறு பட்டியலிட்டுள்ளனர்.[151]

| மாவட்டம் 1 | வட்டம் 2 | எண்ணிக்கை 3 |
|---|---|---|
| வடவார்க்காடு | அரக்கோணம் | 8 |
| | ஆரணி | 0 |
| | செய்யாறு | 6 |
| | குடியாத்தம் | 6 |
| | போளூர் | 0 |
| | திருப்பத்தூர் | 1 |
| | திருவண்ணாமலை | 1 |
| | வேலூர் | 1 |

www.tamilarangam.net



| 1 | 2 | 3 |
| --- | --- | --- |
| | வாலாசாப்பேட்டை | 3 |
| | வந்தவாசி | 3 |
| | மொத்தம் | 29 |
| செங்கற்பட்டு | செங்கற்பட்டு | 6 |
| | காஞ்சிபுரம் | 16 |
| | மதுராந்தகம் | 5 |
| | பொன்னேரி | 2 |
| | சைதாப்பேட்டை | 14 |
| | திருவள்ளூர் | 4 |
| | மொத்தம் | 47 |
| சித்தூர் | சந்திரகிரி | 1 |
| | சித்தூர் | 1 |
| | புங்கனூர் | 3 |
| | புத்தூர் | 0 |
| | திருத்தணி | 4 |
| | மொத்தம் | 9 |
| நெல்லூர் | கூடூர் | 0 |
| | போளூர் | 1 |
| தென்னார்க்காடு | சிதம்பரம் | 6 |
| | கடலூர் | 3 |
| | கள்ளக்குறிச்சி | 0 |
| | திண்டிவனம் | 4 |
| | திருக்கோயிலூர் | 11 |
| | விழுப்புரம் | 4 |
| | விருத்தாச்சலம் | 4 |
| | மொத்தம் | 32 |
| தஞ்சாவூர் | அறந்தாங்கி | 0 |
| | குடந்தை | 25 |
| | மன்னார்குடி | 6 |
| | மயிலாடுதுறை | 24 |
| | நன்னிலம் | 6 |
| | நாகப்பட்டினம் | 4 |
| | பாபநாசம் | 9 |
| | பட்டுக்கோட்டை | 4 |
| | சீர்காழி | 5 |
| | தஞ்சாவூர் | 10 |
| | திருத்துறைப்பூண்டி | 2 |
| | மொத்தம் | 95 |

தமிழகத்தைப் பொறுத்த வரையில், பல்லவர் வழியாக வடுக வந்தேறிகள் முதன்முதலில் நிலைகொண்டு ஆளத்தொடங்கிய (சித்தூர், செங்கற்பட்டு, வடவார்க்காடு, தென்னார்க்காட்டிலிருந்த சிதம்பரம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய) தொண்டைமண்டலமாகிய அடங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காப்பற்றில்தான் பிராமண அகரம் முதன்முதலில் புகுத்தப்பட்டது.[152] தமிழ்ப் பண்பாட்டின் கருப்பகுதியிலடங்கிய சோழநாட்டில் வடுகச் சோழர் காலத்தில் பிராமண அகரங்களின் எண்ணிக்கை மளமளவெனப் பெருகின. ஆயினும், தொண்டைமண்டலத்திலிருந்த அகரங்களைவிட சோழமண்டலத்து அகரங்களின் எண்ணிக்கை சற்றுக் கூடுதலானது.

## அகரமும் கோயிலும்

முதல் இராசராசனின் காலத்தில் சோழமண்டலத்திலிருந்த ஒவ்வொரு நாட்டிலும் சராசரி இரண்டு மூன்று பிரமதேயங்கள் இருந்ததை மேற்போந்த அட்டவணைகள் காட்டும்.

அரசக்கட்டளைகளின்படி அமைக்கப்பட்டமையால், அப்பிரமதேயங்களுக்கு அரசப் பாதுகாப்புத் தரப்பட்டது. அகரத்துப் பிராமணர்களுக்கும் அரசனுக்கும் இடையில் மிக நெருக்கமான உறவு நிலவியது. அரசனால் விடுக்கப்பட்ட நடுவணரசு அதிகாரிகளின் முன்னிலையில், பிரமதேய ஊரவைகளின் முடிவுகள் எடுக்கப்பட்டதுண்டு.[153]

தஞ்சைக் கோயிலில் கருவூலப் பண்டாரங்களாகவும் கணக்கர்களாகவும் காவலராகவும் பிற பணியாளராகவும் பணிபுரிய ஆட்களை விடுக்குமாறு பிராமண அகரங்களின் ஊரவையாருக்கு முதல் இராசராசன் விடுத்த ஆணை, அவ் வடுகச் சோழர்க்கும் அகரகாரத்திற்கும் இடையில் விளங்கிய அரத்த உறவைக் காட்டும்.[154]

அகரகாரத்துப் பிராமணர்க்குச் சொந்தமான நிலப்பங்குகளைச் சூத்திரர்களுக்கு விற்கவோ ஒற்றிவைக்கவோ கூடாது என்னும் தடையிருந்தது. அவ்வாறு விற்கவோ ஒற்றிவைக்கவோ செய்யும் பிராமணனின் பங்கு பறிக்கப்பட்டு, அவன் சாதிக்கட்டுச் செய்யப்படுவான் என்னும் கடுமையான விதி இருந்தது.[155]

ஒவ்வோர் ஊரிலும், ஊரவை இருந்தது. ஊரவை உறுப்பினர்களை ஊரார் என்றனர். நிலச்சொத்துள்ள காணியாளரே ஊரவையின் உறுப்பினராயிருந்தனர். பிராமண அகரங்களில் அதைச் 'சபை' அல்லது 'மகாசபை' என்றனர். வெள்ளாண்மை, பாசனம் முதலானவற்றை ஊரவையே மேற்பார்வையிட்டது. பிராமண மந்திரங்களிலும் — குறைந்தது ஒரு பிராமண தரும சாத்திரத்திலும் — புலமை பெற்றவராக அகர ஊரவையின் உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்பது விதி. வடுகப் பிராமண நெறிகள் பிறர்மீது திணிக்கப்பட்டன. பிராமணர்கள் நிலத்தில் இறங்கிப் பயிர்த்தொழில் செய்யவில்லை.

நாட்டு ஆட்சியென்பது நாட்டு அவையிடம் இருந்தது. நிலவருவாயை முடிவுசெய்தல் (நாடுவகைசெய்தல்), அந் நாட்டவையின் பொறுப்பாயிருந்தது. நாட்டு அவையில், பிரமதேயங்களின் பேராள

www.tamilarangam.net



ராயிருந்த வந்தேறிப் பிராமணரின் கை ஓங்கி இருந்தது. பிராமண அகரங்களே வடுகச் சோழரின் ஆட்சியியல் கட்டுமானத்தின் கருக்களாக இருந்தன. பிரமதேய ஊர்கள் எண்ணிக்கையில் சிறியனவாயினும், அப் பிரமதேய ஊர்களைக் கொடையாகப் பெற்ற பிராமணர்கள் அந்த ஊர்களிலிருந்த பிராமணரல்லாதாரின்மீது மேலாண்மை செலுத்தி வந்தனர்.

ஊரவை ஒருபுறமும் நடுவணரசு மறுபுறமுமென இரு வகை மேற்பார்வையும் கட்டுப்பாடும் கொண்ட தேவதான நிலங்கள், கோயில் அதிகாரிகளால் நிறுவகிக்கப்பட்டுவந்தன. கோயில் பணிகளுக்காகத் தரப்பட்ட கைமாறாகவோ, கோயில் பயன்பாட்டுக்கு வேண்டிய பொருள்களைப் பெறவோ அத் தேவதான அதிகாரிகள் — ஊரவையின் இசைவோடு — கோயில் பணியாளர்க்குக் காணிப்பற்று (சீவிதம்) என்னும் காணியுரிமையை வழங்கினர். சில நேரங்களில், ஊரவையே அக் காணிகளை வழங்கியது. இதுபோன்ற காணிகளிலிருந்து கோயிலுக்குக் கிடைத்த உழவடையை(குடிவாரத்தை)யும்கூடக் காணிக்கடன் என்றனர். உழவடைக்கு விடப்படாத கோயில் நிலங்களைக் கோயில் கன்மிகள் என்றழைக்கப்பட்ட கோயில் அதிகாரிகள் நேரடியாக நிறுவகித்தனர்.

கோயிலையும் பிரமதேயத்தையும் இணைத்து வழங்கிய காணிக் கொடைகளைத் தேவதான பிரமதேயம் என்றனர். திருவிடையாட்டம். திருநாமத்துக்காணி ஆகியவற்றிலிருந்து தேவதானம் வேறுபட்டது. ஒரு நிலக்கிழாருக்குத் தன் நிலங்களின்மீது முற்றுரிமை இருந்ததைப்போல், திருவிடையாட்டத்திற்கும் திருநாமத்துக் காணிக்கும்கூட முற்றுரிமை இருந்தது. முற்றிலும் தனிச்சொத்துகளாயிருந்த காணிகளை நிலக்கிழார்களிடமிருந்தோ காணியாளரிடமிருந்தோ விலைக்கு வாங்கிக் காணியுரிமைகளையும் பேறுகளையும் கடமைகளையும் நன்கு வரையறுத்து முறையான கொடைகளாக வழங்கப்பட்டனவே திருவிடையாட்டமும் திருநாமத்துக்காணியும் ஆகும். யாருக்கும் ஒதுக்கப்பட்டிராத ஊர்ப்பொதுநிலத்தைக் கொடையாக அளித்தும்கூடச் சில நேரங்களில் திருவிடையாட்டத்தையோ திருநாமத்துக்காணியையோ உருவாக்கினர்.[156]

பல்லவர் காலத்தில் ஊட்டுப்புரைத் தேவதானம் என்னும் தேவதானமும் இருந்தது. பல்லவன் மூன்றாம் நந்திவர்மனின் (கி. பி. 846-69) ஆறாவது ஆட்சியாண்டில் சன்னக்குறி யக்ஞ பட்டன் என்னும் கன்னடப் பிராமணனால் கட்டப்பட்ட கோயிலுக்குப் புழற் கோட்டத்தின் ஞாயிறுநாட்டுத் திருக்காட்டுப்பள்ளி ஊட்டுப்புரை தேவதானமாக ஆக்கப்பட்டது[157] அதற்கான ஓர் எடுத்துக்காட்டாகும்.

ஐயன்பாத்தி, மடப்புறம், அகப்பற்று, பட்டவிரித்தி, காணிப்பற்று (போகம்) என்னும் பெயரில் கோயில் நிலங்களை உழவடைக்கு விட்டனர்.

17

www.tamilarangam.net



## இறை நீக்கியும், அரசனின் பங்கு குறையவில்லையே!

பயிரிடப்படாது கிடந்த நிலத்தைத் திருத்தியபோதும், அந் நிலத்தை ஒருவர் ஆட்கொண்டபோதும், அந் நிலத்திலிருந்து காணிக் கடனைப் பெறும் அதிகாரம் அரசனுக்கு இருந்தது. காணிக்கடனைக் குறைக்கவோ தவிர்க்கவோ அரசனுக்கு உரிமை இருந்தது. கடமையைத் தண்டி அரசனுக்குச் செலுத்த வேண்டிய முழுப் பொறுப்பையும் ஊரும் நாடும் ஏற்றுக்கொண்டன. கோயில் பணிகளுக்காகவோ பிற வகை அறச்செயல்களுக்காகவோ கொடையாளி ஒருவரால் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு நிலத்தையோ தொகையையோ (வைப்புமுதலையோ) வைத்து — அதிலிருந்து வந்த விளைச்சலையோ வட்டியையோ கொண்டு—கோயில்களும் மடங்களும் கட்ட வேண்டியிருந்த இறையை அரசனுக்குச் செலுத்தும் பொறுப்பையும் ஊரவை ஏற்றுக் கொண்டது. இறையைக் கட்டுவதற்காக ஒருவர் மூலப்பொருளாக இட்ட ஒரு தொகையை இறைக்காவலாக வைத்த காசு என்றனர். (அரசனுக்கு நேரடியாகக் கட்டிய கற்பூரவிலை போக) கொடையாளி ஒருவன் முதல்பணமாக இட்ட வைப்புத்தொகையிலிருந்து வந்த வட்டிப்பணத்தை வைத்தும்கூடக் கோயிலோ பிரமதேயமோ கட்ட வேண்டியிருந்த காணிக்கடனைக் கட்டினர். காசு வடிவில் ஒரு தொகையை முதல் பணமாக வைத்துக் காணிக்கடனைக் கட்டுகின்ற உரிமையைப் பெறும் **முறைக்குக் கற்பூரவிலை என்று** பெயர். இக் கற்பூரவிலையும் **இறைகாவலும் வெவ்வேறானவை.**[158]

தமிழரின் காணிகளைப் பறித்தெடுத்தோ, விலைகொடுத்துக் கையகப்படுத்தியோ பிராமணர்க்கு வழங்கிய நிலக்கொடைகளே (land grants) பிரமதேயங்கள். வகைசெய்யப்பட்ட (assessed) மொத்த வேளாண் நிலங்களில் ஒரு பகுதியாகவே தேவதான அல்லது பிரமதேய நிலங்கள் இருப்பினும், அவற்றிற்கு இறைநீக்கியதால் அரசனுக்குக் வர வேண்டிய வருவாயில் இழப்பு எதுவும் ஏற்படாவண்ணம் வடுக வந்தேறிகள் இறையிலி முறையை மிக நுட்பமாக வடித்தனர்.[159]

காணிகளின்மீது காராண்மையுரிமை இருந்த வணிகர்கள் வாழ்ந்துவந்த பேரூர்களே நகரங்கள் எனப்பட்டன. நகரத்தின் ஆட்சியவையை நகரங்களிலார் என்றனர். காணிக்கடன் முழுவதையோ ஒரு பகுதியையோ ஒரு நாடாள்வானுக்கோ ஆளுநனுக்கோ காணிப் பற்றாக (சீவிதமாக) வழங்கினர். போர்க்காலத்தில் அரசனுக்குப் படை யூழியம் செய்ய வேண்டும் என்னும் கடப்பாடுடைய காணியாளரைக் கொண்ட ஊரையே படைப்பற்று என்றனர்.

## தீண்டாச்சேரி

(பிரமதேயமாயினும் கோயில் ஊராயினும்) ஓர் ஊருக்குள்ளேயே இறைநீங்கிய நிலங்கள் சில இருந்தன. ஊரார் குடியிருந்த இருக்கை

www.tamilarangam.net



(ஊர்நத்தம்), குளம், ஊடறுத்துப்போன வாய்க்கால்கள், அம்மன் கோயில், சுடுகாடு, பறைச்சேரி, உழப்பறையர்சேரி, பறைக்குளக்குழி, ஈழச்சேரி (தீண்டாச்சேரி), கம்மாளச்சேரி, வண்ணாரச்சேரி, வெள் ளாளன் சுடுகாடு, பறைச்சுடுகாடு முதலியவற்றை இறைநீங்கிய நிலங் களாகக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இவை யாவும் காணிக்கட னுக்காக அளத்தலுக்கு ஆளாகாத நிலங்களாகும். இந் நிலங்கள், எல்லா இடங்களிலும் ஒன்றே போல் இருக்கவில்லை. இவற்றில் வரும் 'தீண்டாச்சேரி' என்பது கள்ளிறக்கும் தொழிலைச் செய்துவந்த வரும், வடுக வந்தேறிகளால் தீண்டாத சாதியராக்கப்பட்டவருமான ஈழவர்கள் வாழ்ந்துவந்த ஈழச்சேரியையே குறிக்கும். பறைச்சேரியைப் பற்றிக் குறிப்பிடும் சோழர் கல்வெட்டுகள் இரண்டு. தென்னிந்தியக் கல்வெட்டுகள் எனப்படும் தொகுப்பின் இரண்டாம் பகுதி இரண் டாம் பிரிவில் வரும் 4வது 5வது கல்வெட்டுகளில் மட்டுமே அவற்றைப் பற்றிய குறிப்புகள் உண்டு.* கீழ்க்குடிகளும் உழுகுடிகளும் குடியிருந்த

* "...பறைச்சேரியும் குளங்களும் ஓடைகளும் இறையிலி நீங்குநிலம்..."

"...ஊரிருக்கையும் குளமும் ஸ்ரீகோயில்களும் சுடுகாடும் பறைச்சேரியும் நாட்டா... நிலமும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் புறவூர்க்குப் போன வாய்க் காலாலும் இறையிலி நிலம்..."

"...ஊரிருக்கையுங் குளங்களும் ஸ்ரீகோயில்களும் ஈழச்சேரியும் ...க இறை யிலி நீங்குநிலம்."

"...ஊரிருக்கையும் குளமும் ஸ்ரீகோயில்களும் சுடுகாடும் ஈழச்சேரியும் கம்மாணச்சேரியும் பறைச்சேரியும் வண்ணாரச்சேரியும் பறைக்குளக் குழியும்..."

"...ஊர்நத்தமும் குளங்களும் புலத்தில் குளங்களும் தீண்டாச்சேரியும் பறைச்சேரியும் சுடுகாடும் ஆகி இறையிலி நிலம்..."

"...ஊரிருக்கையும் ஸ்ரீகோயில்களாலும் திருமுற்றங்களாலும் திருநந்த வனங்களாலும் பறைச்சேரியாலும் சுடுகாடும் ஆக இறையிலி நீங்குநிலம்..."

"....ஊர்நத்தமும்.... வாய்க்கால்களும் பறைச்சேரியும் கம்மாணச்சேரியும் சுடுகாடும் உள்ளிட்டு இறையிலி நிலங்களும்..."

"...ஈழச்சேரியும் பறைச்சேரியும் வெள்ளான் சுடுகாடும் பறைச்சுடுகாடும் கற்கிடையும் ஆக இறையிலி நீங்கு நிலம்..."

"...கோயிலும் திருமுற்றமும் இவ்வூர் மகாதேவர் ஸ்ரீகோயிலும் திருமுற்ற மும் இத் தேவர் திருமஞ்சனக்குளத்தாலும் பறைச்சேரியாலும் வெள்ளான் சுடுகாட்டாலும் பறைச்சுடுகாட்டாலும் ஆக இறையிலிநீங்கு நிலம்..."

"...பிடாரிக் கோயிலும் திருமுற்றமும் ஊருணிக்குளமும் கரையும் ஐயன் கோயிலும் திருமுற்றமும் கொட்டகாரமும் வெள்ளாளன் சுடுகாடும் பறைச் சுடுகாடும் பறைச்சேரியும் ஈழச்சேரியும் ஆக இறையிலி நீங்கு நிலம்..."

"....ஊர்நத்தமும் ஈழச்சேரியும் கொட்டகாரமும் பறைச்சேரியுமாக இறை யில் நீங்கு நிலம்..."

".... ஊரிருக்கையும் இவ்வூர்க் குளமும் கம்மாணச்சேரியும் இவ்வூர்ப் பறைச்சேரியும் இவ்வூர் அகையாறும் ஆக இறையிலி நீங்குந் நிலம்..."

www.tamilarangam.net



பகுதியே குடியிருக்கை. நீர்ப்பாசனத்திற்கான பெரும் மதகைத் திறக்கவும் மூடவும் செய்தோர் குடியிருந்த பகுதிக்குப் பெயர், தலைவாய்ச் சேரி. கோயில் பணியாளர் குடியிருந்த பகுதியே தளிச்சேரி.

வடுகப் பிராமணர்கள் மண்ணில் இறங்கி உழைக்கவில்லையெனினும், அகரகாரத்தின் நிலங்களில் அந்த அகரகாரத்தில் குடி

---

"...ஊர்நத்தமும் குடியிருக்கையும் பறைச்சேரியும் இவ்வூரை ஊடறுத்துப் போய்ப் புறவூர்க்குப் பாயும் வாய்க்கால் கண்ணன் வாய்க்கால் நீரோடு காலாலும் இவ்வூர் ஊர்க்களத்தாலும் இவ்வூர்க் குளமும் கரையும் இவ்வூர் மாதேவர் ஸ்ரீகோயிலும் திருமுற்றமும் இத் தேவர் திருமஞ்சனக்குளமும் ஆக இறையிலி நீங்குநிலம்..."

"....ஊர்நத்தமும் குடியிருக்கையும் ஊருணிக்குளமும் கன்று மேயப் பாழாகக் கிடந்த நிலமும் கண்மாணச்சேரிக் குடியிருக்கையும் பிடாரி கோயிலும் திருமுற்றமும் வெள்ளான் சுடுகாட்டுக்குப் போம் வழியும் வெள்ளான் சுடுகாடும் பறைச்சுடுகாடும் களமாய்க் கிடந்த நிலமும் ஐயன் கோயிலும் திருமுற்றமும் உழப்பறையரிருக்கும் கீழைச்சேரியும் பெருவ...கரையும் உழப்பறையர் இருக்கும் மேலைப்பறைச் சேரியும் இவ்வூர் நிலத்தாறெயூடறுத்துப்போன நாட்டார் வாய்க்காலும் ஆக இறை நீங்கு நிலம்..."

"..... ஊரிருக்கையும் ஊர்க்களமும் இவ் வூர்க்காளர் பிடாரியார் ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும் பிடாரியாரிது தெங்குமரம் நின்ற நந்தவனமும் இவ்வூரை ஊடறுத்துப்புறவூர்களுக்கு நீர் பாயும் வாய்க்கால்களாலும் ஈழச் சேரியும் வெள்ளான் சுடுகாடும் பறைச்சுடுகாடும் பறைச்சேரியும் ஆக இறையிலி நீங்கு நிலம்..."

"...இவ்வூர் நத்தமும் களமும் வெள்ளான் சுடுகாடும் பிடாரி திருவாலுடையான் ஸ்ரீகோயிலும் திருமுற்றமும் காடுகாள் கோயிலும் திருமுற்றமும் ஈழச்சேரியும் கம்மாணச்சேரியும் பறைச்சேரியும் பறையர் சுடுகாடும் ஆக இறையிலி நீங்கு நிலன்..."

".... ஊரிருக்கையும் கொட்டகாரமும் மாதேவர் இருந்த திடலும் கண்ணன் வாய் நின்றும் இவ்வூர் நிலத்தாறே குறங்கறுத்துப் புறவூர்க்கு நீர் பாயும் வாய்க்காலும் வெள்ளான் சுடுகாடும் கம்மாணச் சேரியும் பறைச்சேரியும் பறைச்சுடுகாடும் ஆக இறையிலி நீங்குநிலம்..."

"... இவ்வூர் நத்தம் குடியிருக்கையும் கிணறும் தொட்டியும் வெள்ளான் சுடுகாடும் கொட்டகாரங்களும் தலைவாய்ச்சேரியும் ஈழச்சேரியும் கம்மாணச் சேரியும் பறைச்சேரியும் பறைச் சுடுகாடும் இ.... ஆக இறையிலி நீங்கு நிலம்..."

"...இவ்வூர் இருக்கையும் குளங்களும் கரைகளும் திருக்கோயிலும் ஐயன் கோயிலும் பறைச்சேரியும் சுடுகாடும் சிறுமன்னி யூரேரியில் நீர் கொத்துப் பள்ளவாயாகக் கிடந்த நிலமும் ஆக இறையிலி நீங்கு நிலன்..."

"...ஊர்நத்தமும் குளமும் ஸ்ரீகோயிலும் தீண்டாச்சேரியும் ஆக இறையிலி நீங்கு நிலன்..."

"...இவ்வூரிருக்கையும் பறைச்சேரியும் கம்மாணச்சேரியும் ஊரின் நடுவுப் பட்ட குளமும் புலத்திற் குளமும் கரையும் இவ்வூர்த் திருவடிகள் ஸ்ரீகோயிலும் நந்தவனமும் பாண்டவாய்க்குலையும் இவ்வூர்ப் புகழ்... ஸ்ரீகோயிலும் திருமுற்றமும் தளிச்சேரியும் சுடுகாடும் ஆக இறையிலி நீங்கு நிலன்..."[10]

www.tamilarangam.net



யிருந்த பிராமணர்கள் ஒவ்வொருவருக்கும் காணிப்பங்கு இருந்தது. அகரகாரங்களுக்கும் கோயில்களுக்கும் மடங்களுக்கும் சொந்தமா யிருந்த பொதுச்சொத்துகள், தனியுடைமை முறையுடன் எந்த வகை யிலும் முரண்படவில்லை. கோயில் அல்லது மடவளாகம் என்னும் நிறுவனச் சொத்து, அந் நிறுவனத்தின் தனிச்சொத்தாயிருந்தது.[161]

## விரித்திகள்

பிராமண அகரங்களுக்கு வழங்கப்பட்ட புதிய காணிக்கொடை களை விரித்திகள் என்றனர். விரித்திகள் பல்வகைப்பட்டன. பள்ளி ஆசிரியருக்கோ, கோயில்களில் புராணங்களைப் படித்தவர்க்கோ விடப் பட்ட காணிதான் பட்டவிரித்தி.

தோணி ஓட்டுதல், ஊர் நீர்நிலைகளைத் தூர் எடுத்தலும் பழுது பார்த்தலும் ஆகிய பணிகளுக்கு ஆகும் செலவை எதிர்கொள்வதற் காகவென்றே ஒதுக்கப்பட்ட காணியே ஏரிப்பட்டி. சத்திரங்களைப் பேணவும் பொது இடங்களில் நீர் வழங்கவும் தரப்பட்ட காணியே அம்பலப்புறம். உணவிட்ட ஊட்டுப்புரையைத் தாங்கிநின்ற ஊர் அல்லது நிலம்தான் சாலைபோகம் (சாலாபோகம்). நடனக்காரிக்குச் சொந்தமான நிலம் நாட்டியத்தார் நிலம். ஊர் அல்லது கோயில் அம்பலத்துக்குரிய நிலம்தான் அம்பலச்செய். கணியர்க்குத் தரப் பட்ட காணியே கணியார்செய் அல்லது கணிமுற்றூட்டு. மருத்து வர்க்கு விடப்பட்ட காணிக்குப் பெயர் மருத்துவப்பேறு. தச்சர்க்கு விடப்பட்டது தச்சுக்காணி. தட்டாருக்குத் தந்தது தட்டாரக்காணி. கல்தச்சர், குயவர், வண்ணார் ஆகியோருக்கும் காணி (போகம், சீவிதம்) வழங்கினர். கோயில் கணக்கருக்கும் கோயில் தேவடியாள்களுக்கும் கூடக் காணிப்பற்றுகள் வழங்கப்பட்டன.

## வடுகருக்குக் கூலியின்றி உழைத்தனரே!

செயல்வினைகளைத் தமிழர்கள் மிக நுட்பமாக வகுத்திருந்தனர். ஒருவர் தன்னைத் தானே புரந்துகொள்வதற்காகச் செய்தது வேலை; செய்ய எடுத்த ஒரு வினையே அலுவல்; சொந்த ஆள் வினைக்குப் பெயர் கருமம்; கட்டாயம் செய்யவேண்டிய பணியே கடமை; நலன்கருதிச் செய்யப்படுவது கடப்பாடு அல்லது வேளாண்மை; ஓராள் தன் வாணாள்முழுவதும் செய்யும் கட்டாயப் பணியே ஊழியம்; பொதுப்பணிக்குப் பெயர், தொண்டு; அடிமை உழைப்புத் தான் தொழும்பு; கட்டளையிடப்பட்ட வேலைக்குப் பெயர் பணி; சமய, மதத்தலைவர்க்குச் செய்யும் பணியே பணிவிடை; தன்னார்வ வினைக்குப் பெயர் புரிவு; செய்ய வேண்டிய தனிப்பட்ட செயலுக்குப் பெயர் சோலி; கூலியை எதிர்பாராது செய்யும் பணியே வெட்டி; கூலி தரப்படாமல் கட்டாயமாக வாங்கப்படும் பணிக்குப் பெயர் அமஞ்சி என்றெல்லாம் அவற்றைப்பற்றிப் பாவாணர் மிக நுட்பமாக விளக்குவார்.[162]

www.tamilarangam.net



அமஞ்சி, ஆள்அமஞ்சி முதலான கூலியில்லாப் பணிகள், தமிழகத்தின் வடமாவட்டங்களடங்கிய செயங்கொண்ட சோழமண்டத்தில் மட்டுமே பரவலாக இருந்தன. இவற்றில், வடுகச் சோழர் ஆட்சிக் காலத்தில் ஆள்அமஞ்சி மெல்லக் கூடிவந்ததையும், அமஞ்சிமுறை மெல்லக் குறைந்துவந்ததையும் காணலாம்.[163] நீர் அமஞ்சி அல்லது செந்நீர் அமஞ்சி என்பதும் அமஞ்சி வகைப்பட்டது.

தமிழ் நிலக்கிழமையின்கீழ் வெட்டி (corvée labour) என்னும் கூலியில்லா வேலை ஏற்கெனவே இருந்திருக்க வேண்டும். ஊர்க்குளங்களைத் தூரெடுத்தல், உடைப்பெடுத்த ஏரி குளங்களை அடைத்து ஊரையும் பயிரையும் காத்தல், ஊருக்குப் பாதை போடல் அல்லது இருக்கும் பாதைகளைச் செப்பனிடல் ஆகிய பணிகள் யாவும் நெருக்கடிக் காலங்களில் ஊரே ஒட்டுக்காகவோ, வீட்டுக்கு ஓராள் என்னும் மேனிக்கோ செய்ய வேண்டியிருந்த பொதுப்பணியாகவோ அவ் வெட்டி வேலை தோன்றியிருக்க வேண்டும். ஏரிகுளங்களிலிருந்து முறை வைத்து நீர் விடவும், ஊர்காவல் பணியைச் செய்யவும் ஒவ்வொரு ஊருக்கும் பொதுப்பணியாளர் தேவைப்பட்டபோது, வெட்டிமைத் தொழில் தோன்றியது.

காணிவெட்டி, குலைவெட்டி, குரப்புவெட்டி, பன்மைப் பண்டவெட்டி, செந்நீர் வெட்டி (செய்நீர்வெட்டி), புறவெட்டி, வெள்ளான் வெட்டி, வெட்டியாள், வெட்டிமுதல், வெட்டிப்புடவை, வெட்டித் துண்டம், வெட்டிவரி, வெட்டியாள் செலவு (வெட்டி வினியோகம்) என வெட்டி பல்வகைப்பட்டது.[164]

வடுக வந்தேறிகளின் படையெடுப்புகளுக்குப் பிறகு தமிழகம் முற்றாக அடிமைப்பட்டபோது, இலவயமான பணிக்கொடையும் பொதுப்பணியுமான 'வெட்டிப்' பணியின் உள்ளீடும் இயல்பும் மாறின. ஆகவே, அவ் வெட்டி, கூலியில்லாக் கட்டாய ஊழியமானது. வெட்டி என்னும் பெயரில் தமிழ்க் குடியானவரையும் கொத்தடிமைகளையும் கம்மாளரையும் ஒரு கூலியும் தராமல் வடுக வந்தேறிகள் வலிய வேலை வாங்கும் கொடிய உழைப்புச் சுரண்டலாக அது வடிவெடுத்தது.

ஏரிகளையும் குளங்களையும் கண்மாய்களையும் சீரமைப்பது என்னும் பொதுப்பணி நோக்கம் போய், வந்தேறிப் படைகளும் அதிகாரிகளும் ஓர் ஊரின் வழியாகச் செல்லும்போதோ — அவ்வூரில் தங்கியபோதோ — அவர்களுக்குக் கூலியின்றி வலிய வேலை செய்ய வேண்டிய வல்லந்தமாக அவ் வெட்டி உழைப்பு உருக்கெட்டது. பிரமதேயங்களுக்கும் கோயில்களுக்கும், (குறிப்பாகத் திருவிழாக் காலங்களில்) இவ் வெட்டி வேலை வலிய வாங்கப்பட்டது.

கூலியில்லாப் பணியான செந்நீர்வெட்டி வடுகச் சோழர் காலத்தில் பரவலாயிருந்து பின்னர் மெல்ல மறையத் தொடங்கியது. வடுகச் சோழர் காலம் முழுதும் அவ் வெட்டிப்பணி விளங்கிடினும், அது காலப்போக்கில் பாதியானது.

www.tamilarangam.net



ஒரு நிலம் இறையிலியானவுடன், கூலியில்லாமல் செய்ய வேண்டிய வெட்டியும், கூலியில்லாப் பொதுப்பணியான அமஞ்சியும் இறையும் ஒழிந்தன. அந் நிலத்திலுள்ள குடியானவர்கள் அவற்றை இனிச் செய்ய வேண்டியதில்லை என்றாயிற்று.*

முதல் குலோத்துங்கனின் காலத்திற்குப் பின்னரே பாட்ட முறை சோழமண்டலத்திலும் செயங்கொண்ட சோழமண்டலத்திலும் தோன்றியது போலும். ஏரிமீன்பாட்டம், கீழிறைப்பாட்டம், மீகாற்பாட்டம், மீன்பாட்டம், பாசிப்பாட்டம், தட்டார்ப்பாட்டம், உலைப்பாட்டம் எனப் பாட்டங்கள் பல வகைப்படும். பாண்டியநாட்டில், ஏரிமீன்பாட்டம், ஒழுக்கு நீர்ப்பாட்டம். ஒழுக்குநீர் மீன்பாட்டம், ஒழுக்குமீன்பாட்டம், தட்டார்ப்பாட்டம், தட்டளிப்பாட்டம், தட்டொலிப்பாட்டம், வெட்டிப்பாட்டம், மௌனப்பாட்டம், வெட்டித்தேவை ஆகிய பாட்டங்கள் இருந்தன.[166]

பயணம் மேற்கொண்ட அரச அலுவலர்க்கு உணவு, உறையுள், போக்குவரத்து ஏந்துகள் ஆகியவற்றால் வந்த செலவுகளைத் தாங்குவதற்காக எல்சோறு என்னும் வரியைக் கட்ட வேண்டியிருந்தது. இந்த வரியைச் சோறுமாட்டு என்றும் சொல்லிவந்தனர். புன்செய் நிலப்பகுதியில் எல்சோறு இடும் வழக்கம் இல்லை. வடுகச் சோழரின் தொடக்கக் காலத்திலும் இடைக்காலத்திலும் தஞ்சைப் பகுதியில் அளிக்கப்பட்ட எல்சோறு கல்வெட்டுகளில் வருகிறது. பின்னர், 12ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அது மறைந்துவிட்டது. திருச்சிப் பகுதியிலிருந்த நன்செய் நெற்கழனிகளில் அது 11ஆம் நூற்றாண்டிலேயே மறைந்துவிட்டது. ஆனால், செயங்கொண்ட சோழமண்டலத்திலும் புதுக்கோட்டைப் பகுதியிலும் அது வடுகச் சோழரின் பிற்காலம் வரை நீடித்தது.[167]

கூலி ஏதுமின்றித் தொடர்ச்சியாகச் செய்ய வேண்டியிருந்த பணியைக் குறிக்கும் பெயரே முட்டாஆள். இது மிக அருகலாகவே இருந்தது. முட்டாஆள் என்னும் அப் பணி (வரி) புதுக்கோட்டைக் கல்வெட்டுகளில்தான் பெரும்பாலும் குறிப்பிடப்படுகிறது.[168] இக் கல்வெட்டுகளெல்லாம் 13ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் வெட்டப்பட்டவை.

## வடுகனுக்குத் துணைபோன வேளான்!

தஞ்சை மாவட்டத்துக் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் அடிக்கடி வரும் பெயர்ச்சொற்கள் சிலவற்றைக் கணிப்பியிலிட்டுத் தொகுத்த யப்பானிய ஆய்வர்கள் அவற்றைப் பின்வருமாறு பட்டியலிட்டுள்ளனர்:[169]

* "குடியிலார் வெட்டியும் அமஞ்சியும் இறையும் எப்பேர்ப்பட்டதும் கொள்ளப்பெறாதார் ஆகவும்..."[165]

www.tamilarangam.net



| பெயர் | அலை வெண் (frequency) | பல்லவ வடுகர் காலம் | வடுகச்சோழர் காலம் முற் பகுதி | வடுகச்சோழர் காலம் பிற் பகுதி | பிற்காலப் பாண்டியர் காலம் | விசயநகர வடுகர் காலம் | நாயக்க வடுகர் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| அகரம் | 15 | | 1 | 6 | 6 | 1 | 1 |
| பிரமதேயம் | 193 | 3 | 167 | 20 | 3 | | |
| தேவதானப் பிரமதேயம் | 35 | | 34 | | 1 | | |
| தேவதானம் | 127 | | 113 | 11 | 3 | | |
| பெருந்தேவ தானம் | 27 | | 27 | | | | |
| நத்தம் | 19 | | 5 | 7 | 3 | 4 | |
| திடல் | 17 | | 16 | | 1 | | |
| பிராமணர் | 39 | 1 | 31 | 6 | 1 | | |
| செட்டி | 10 | | 10 | | | | |
| வெள்ளாளர் | 14 | | 10 | 4 | | | |
| வியாபாரி | 31 | | 24 | 7 | | | |
| மகாசபை | 29 | | 22 | 7 | | | |
| நகரத்தார் | 40 | | 35 | 4 | 1 | | |
| நாட்டார் | 16 | 1 | 3 | 4 | 5 | 3 | |
| பெருங்குடி மகாசபையார் | 16 | | 12 | 4 | | | |
| பெருங்குறி பெருமக்கள் | 17 | | 15 | 2 | | | |
| சபையார் | 181 | 3 | 165 | 8 | 5 | | |
| ஊரார் | 36 | | 24 | 8 | 4 | | |
| எச்சோறு | 16 | | 16 | | | | |
| குடிமை | 21 | | 2 | 10 | 9 | | |
| கடமை | 34 | | 5 | 15 | 12 | 2 | |
| வெட்டி | 23 | | 17 | 2 | 4 | | |

மேற்போந்த அட்டவணையின்படி, பிரமதேயம் என்னும் பெயர் தஞ்சை மாவட்டத்தில் மொத்தம் 229 (193+35) முறை வருகிறது. அவற்றில் பல்லவர் காலத்துத் தஞ்சைக் கல்வெட்டுகளில், பிரமதேயம் என்ற பெயர் 3 முறை மட்டுமே வருகிறது. சோழர் காலத்தில் மொத்தம் 221 (167+20+34) முறை வருகிறது. வடுகச் சோழர்க்கு அடிமைப்பட்ட பிற்காலப் பாண்டியரின் கல்வெட்டுகளில் அப் பெயர் 4 (3+1) முறை வருகிறது. அதே போன்று, தேவதானத்தைப்

www.tamilarangam.net



பற்றிய குறிப்பு, தஞ்சை மாவட்டக் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் 189 (35+127+27) முறை வருகிறது. பல்லவர் காலத் தஞ்சைக் கல்வெட்டுகளில் தேவதானத்தைப் பற்றிய குறிப்பு ஒரு கல்வெட்டிலும்கூட இல்லை. ஆனால், வடுகச் சோழர் காலத்தில் மட்டும் அது 185 (34+113 +11+27) முறையும், பிற்காலப் பாண்டியர் காலத்தில் 4(1+3) முறையும் வருகிறது.

அவ்வாறே, தஞ்சை மாவட்டக் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் வருகின்ற 'மகாசபை', 'பெருங்குடி' மகாசபையார், 'பெருங்குடிமக்கள்' ஆகிய பெயர்கள், அம் மாவட்டத்துப் பல்லவர் காலக் கல்வெட்டுகளில் இல்லை. பிரமதேயத்தின் ஊர் அவையைக் குறித்த 'சபையார்' என்னும் பெயர் பல்லவர் காலத்துத் தஞ்சை மாவட்டத்துக் கல்வெட்டுகளில் 3 முறை மட்டுமே வருகிறது. ஊரவையைக் குறிக்கும் 'ஊர்ச்சபை' என்னும் சங்கத(சமற்கிருத)ச் சொல், வடுகச் சோழர் காலத்தில்தான் வழக்கத்தில் வந்த சொல்லாகும்.

வெள்ளாளரைப் பற்றிய குறிப்பு தஞ்சை மாவட்டக் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் 14 முறை வருகிறது. பல்லவர் காலக் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் அப் பெயர் ஒரு சாதிப்பெயராக ஒரு முறைகூட வரவில்லை. சோழநாட்டில் வெள்ளாளரைப் பிறப்பு வழியிலான தனிச் சாதியாக்கியது வடுகச் சோழரின் வந்தேறி ஆட்சியின்போதுதான் என்பது இவற்றால் விளங்கவில்லையா?

பல்லவர் காலத்துத் தஞ்சை மாவட்டத்துக் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் எல்சோறு (எச்சோறு) பற்றிய குறிப்பே இல்லை. முற்காலச் சோழர்களின் கல்வெட்டுகளில் மட்டுமே அது 16 முறை வருகிறது. அதே போல், வெட்டி என்னும் கூலியில்லாப் பணியைப் பற்றிய குறிப்பு அம் மாவட்டத்தில் கிடைத்த பல்லவர் காலக் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் இல்லை. ஆனால், முற்காலச் சோழர்களின் கல்வெட்டுகளிலும் செப்பெடுகளிலும் 17 முறையும், பிற்காலச் சோழர் காலத்தில் 2 முறையும், பிற்காலப் பாண்டியர் காலத்தில் 4 முறையும் அது வருகிறது. இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன? வடுகர்கள் சோழநாட்டைக் கைப்பற்றித் தமிழரை — குறிப்பாகத் தொல்தமிழரை — அடிமைப்படுத்தி, அவர்களிடமிருந்து கூலியில்லா உழைப்பைக் கறந்தபோதுதான் எல்சோறு முறை உருவானது என்பதையே அவை யாவும் காட்டுகின்றன.

வெள்ளாளர் சாதியைச் சேர்ந்த மூவேந்த வேளான்களில் மூன்றில் ஒரு பங்கினர்க்கு உடையான் என்னும் பட்டமும் இருந்தது.[170] இம் மூவேந்த வேளான்கள், புரவுவரித் திணைக்களம் என்னும் வருவாய்த்துறையுடன் தொடர்புடையவர்களாயிருந்தனர். ஆனால், பிராமண அதிகாரிகளான பிரமராயன்களோ, படைத்தலைவர்களாயிருந்தனர். வடுகச் சோழர் ஆட்சி, பிராமணர்களுக்குப் படைத்தலைவர் பதவியைத் தந்து அவர்களைச் சிறப்பித்தது.

www.tamilarangam.net



வடுகச் சோழர் காலத்து நிலக்கிழமைப் பட்டங்களைப்பற்றி ஆய்ந்த யப்பானிய ஆய்வர்கள், வெள்ளாளச் சாதியரான மூவேந்த வேளான்களில் 288 பேருக்கு அரசனின் பெயர்களே பட்டங்களாக வழங்கப்பட்டிருக்கையில், பிராமணரான பிரமராயன்களில் 83 பேருக்கு மட்டுமே அவ்வாறு அரசனின் பெயர்களே பட்டங்களாக உள்ளதைக் கோடிட்டுக்காட்டுவர். வடுகச் சோழர் வழியாக.வடுகப் பிராமணியம் தமிழர்நாட்டில் குதிர்ந்த பின்னரும்கூட, அரசப் பதவி களில் மூவேந்த வேளான்களுக்கே கூடுதலான பங்கு தரப்பட்டு வந்துள்ள கண்கூடான உண்மை இதனால் விளங்கும்.[171] உடையான் என்னும் பட்டமும்கூட, பெரும்பாலும் மூவேந்த வேளான்களுக்கே (118 பேர்) தரப்பட்டன. ஒரே ஒரு பிரமராயனுக்கு மட்டுமே 'உடை யான்' பட்டம் இருந்தது. அதிகாரி (78), பெருந்தரம் (3), கண்டன் (3), நாயகம் (12), கரணம் (6), புரவுவரி (37), சிரீகாரியம் (9), திருவாய்க் கேள்வி (3), ஓலை (39), வரிப்பொத்தகம் (2), கூறு (4), முகவெட்டி (5), கருமம் ஆராயும் (12), நகரம் (13), ஊர் (4) ஆகிய பதவிகள் பெரும் பாலும் மூவேந்த வேளான்களுக்கே தரப்பட்டன.* வடுகச் சோழரின் வந்தேறி ஆட்சியின்கீழ் வெள்ளாளச் சாதியரான மூவேந்த வேளான் கள் வகித்த பங்கு மிகப் பெரும் பங்கு என்பது இதனால் விளங்கும். பிரமராயன்களில் மிகச் சிலரே அதிகாரி (4), பெருந்தரம் (2), கண்காணி (1), நாயகம் (4), கரணம் (1), சிரீகாரியம் (1), ஓலை (8), சேனாபதி (6), தண்டநாயகம் (1), வரிப்பொத்தகம் (1), பள்ளித்தொங்கல் (2), சிவ பிராமணன் (1) ஆகிய பதவிகளை வகித்துவந்தனர்.[172]

அரையன், மாராயன் என்று முடிந்த வடுகச் சோழர் கால நிலக்கிழமைப் பட்டங்கள் 70 ஆகும். அவற்றில், பிரம, கங்க, இலாட, காடவ, களப்பாள, கருநாடக, கடம்ப, கலிங்க, கேரள, சிங்கள, மாளவ, சளுக்கி, நுளம்ப, பல்லவ, கிடார, நந்திவர்ம, நந்திராய, பால, தெலுங்க, வைதும்ப, நிசாட, வேசாலி, பங்கள, யாதவ எனத் தொடங்கிய பட்டங்கள் யாவும் பெரும்பாலும் வந்தேறிகளுக்கு மட் டுமே தரப்பட்டுவந்த நிலக்கிழமைப் பட்டங்களாகும். இதனால், வடுகச் சோழர் காலத்தில் ஆட்சிப்பதவிகளில் வந்தேறிகளின் பிடிப்பு மிக மிக வலிமையுடன் இருந்தது விளங்கும்.[173]

## ஊருக்குள் கட்டிவைத்த களப்பேறு

இறையும் வரியும் இவ்வளவு கட்ட வேண்டும் என மதிப்பிட ஊர் முழுவதும் ஒட்டுக்காக ஒரு வருவாய் அலகாக எடுத்துக்கொள் ளப்பட்டது. இறையையும் வரிகளையும் தனிஉழவரும் குடியான வரும் கம்மாளரும் பிறரும் தனித்தனியாகவே கட்ட வேண்டியிருந்தது. காணியாளரின் பறிக்கவொண்ணா உரிமையாக (கிழமையாக)

* அடைப்புக்குள் இருக்கும் எண்கள், அவர்களின் மொத்த எண்ணிக் கையைக் குறிப்பன.

www.tamilarangam.net



நிலச்சொத்து இருந்தது. இதனால், தனியுடைமை முறை தமிழகத்தில் தரம்பட நெறிப்படுத்தப்பட்டிருந்தது.

ஆற்றுவெள்ளத்தால் பாழாகி மணல் மண்டிப்போய் முள்ளும் புதரும் முளைத்துப் பயிரிடப்படாது கிடந்த நிலங்களைத் திருத்தி யமைத்துப் பயிர் விளையும் நிலங்களாக்கப்பட்ட காணிகள்; ஊருக்குப் பொதுவான நிலங்கள், பிறங்கடை (வாரிசு) இன்மையால் அரசுக்குச் சொந்தமாக்கப்பட்ட அல்லது பறிக்கப்பட்ட நிலங்கள்; காணியாளர் கள் பயிரிடாது கைவிட்ட நிலங்கள் ஆகியவற்றிலிருந்து ஊர்ப் பணி மக்களுக்குக் காணிகள் வழங்கப்பட்டன. அவ்வாறு வழங்கிய நிலங் களிலிருந்து கிடைத்த கூடுதல் வருவாயைக் கொண்டு அரசனுக்குக் கட்ட வேண்டிய காணிக்கடன்களை ஊராரால் அடைக்க முடிந்தது.

நீர்ப்பகிர்வு, பாதைச் செப்பனிடல், ஊர்க்காவல், துணி வெளுப்பு முதலான பொதுப்பணிகளுக்கு என ஊரவையால் அமர்த்தம் பெற்ற ஊர்த்தொழிலாளர்கள், நிலக்கிழமை முறை தோன் றியபோதே தோன்றியிருக்க வேண்டும். வடுகக் களப்பாளர் படை யெடுப்புக்குப்பின் முன்னூறு ஆண்டுக் காலம் நீடித்த அரசியல் குழப்ப மும் ஆட்சிக்கேடும், ஊர்ப் பொருளியலைச் சிதைத்தன. இதனால் வந்த பஞ்சங்களைக் கருதியும், பிழைப்புத் தேடியும், ஊர்த்தொழிலா ளர்கள் ஊரைவிட்டே பெயர்வது பெருமளவில் நடந்திருக்கும். இது போன்ற இடப்பெயர்ச்சிகளைத் தடுக்க வேண்டிய கட்டாயம் அன்றைய வந்தேறிப் படையாட்சிகளுக்கு இன்றியமையாததானது. குமுக அமைதியை மீட்டெடுப்பதே அந்த வடுக வந்தேறிகளுக்குப் பெரும்பாடாக இருந்திருக்கும். ஊரின் குடிமக்கள் ஆகிய தொழிலா ளர்க்கு வெள்ளாண்மையில் பங்கு வழங்கும் மேரை அல்லது கள வாசம் என்னும் கூலிமுறை இந்தச் சூழலிலேயே தோன்றியது. நெற் களத்தில் அடித்துக் குவித்த நெல்லை அளந்து மதிப்பிடுவதைக் களமதி (களமதிப்பு#) என்றனர். மதத்துறவி, ஊர் வண்ணான், அம்பட்டன் முதலானோர்க்கு நெற்களத்தில் தந்த பங்கைக் களப்பேறு என்றனர்.

மேரையை 'மேரா' எனத் தெலுங்கில் வழங்குவதால், இந்தச் சொல் தெலுங்குச் சொல்லாக இருந்திருக்குமோ என்பதை ஆராய வேண்டும். இந்தக் களவாசத்தைக் கன்னடத்தில் 'ஆய' அல்லது 'ஆயக்கார' முறை என்றனர்.[174] சம்பளத்தையும் வருமானத்தையும் குறிப் பதே ஆயம் என்னும் தூயதமிழ்ச் சொல். ஒரு நாட்டிலோ, கூற்றத் திலோ அடங்கிய மொத்த வேளாண்மை நிலத்தையே ஆயக்கட்டு என்றனர். களப்பேற்று முறையைத் 'ஆயக்கார' முறை என்று சொல் லும் வழக்கு விசயநகர வந்தேறிகளின் காலத்தில் வந்தது.

களப்பாளரின் படையெடுப்பால் வந்த ஆட்சிக்குலைவால், கம்மாளர்கள் தாங்கள் ஆக்கிய பொருட்களைப் பட்டணங்களுக்குக் கொண்டு சென்று விற்கும் வாய்ப்பை இழந்தனர். தத்தம் சொந்த ஊர்களுக்குள் முடங்கிக் கிடக்க வேண்டிய சூழலில், வெள்ளாண்மை

www.tamilarangam.net



யிலிருந்து அவர்களுக்கு நெல்லாகக் கூலியளக்கும் களவாரி (மேரை) முறை தோன்றியது.

களத்துமேட்டில் அடித்துக் குவிக்கப்பட்ட நெல்லிலிருந்து முதலில் சாமிக்கும் (கோயிலுக்கும்) பூசாரிக்கும் பிராமணருக்கும், கணியனுக்கும் (வள்ளுவனுக்கும்), அம்பட்டனுக்கும், குயவனுக்கும், தச்சனும் கொல்லனுமான கம்மாளர்க்கும், வண்ணானுக்கும், கள நெல் அளப்பானுக்கும், ஊராளிக்கும் (ஊர்த்தலைவனுக்கும்) கணக்குப் பிள்ளைக்கும் படியளக்கப்பட்டது. பின்னர், எஞ்சிய களநெல்லை மீண்டும் அளந்து, தோட்டி அல்லது தலையாரிக்கும் நீர்க்கட்டிக்கும் வழங்கப்பட்டது.

கி. பி. 11ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சோழநாட்டில் வண்ணானுக்கு 100 கலம் கொண்ட ஒரு பங்கு, கூலியாக அளக்கப் பட்டது. அம்பட்டனுக்கு அது 50 கலம் அல்லது ½ பங்காக இருந்தது. பெருந்தச்சனுக்கு 150 கலம் (1½ பங்கு) என்றும், வெறும் தச்சனுக்கு 75 கலம் (¾ பங்கு) என்றும் நெல் அளக்கப்பட்டது.[175]

பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குரிய நாமக்கல் மாவட்டத்து மோனூர் நல்ல புள்ளியம்மன் பள்ளேசலில் வரும் பண்ணையார் ஆண்டையான பண்ணாடியிடம் அவருடைய பணியாளரான குடும்பனார் வெள்ளாண்மையிலிருந்து யார் யாருக்கு எவ்வளவு நெல் அளந்து தரப்பட்டது எனக் கணக்குக் காட்டுவார். அவர் இவ்வாறு தான் நெல் அளந்தாராம்:[176]

| | பொதிகள் |
|---|---|
| கடவுளர்க்கு அளந்தது | |
| 1. விக்கினேசுரர் | 16 |
| 2. உக்கிர நரசிம்மர் (சென்னராயர் என்னும் கன்னடர் கடவுள்) | 100 |
| 3. பாம்பலங்காரர் | 300 |
| 4. தெய்வானை பங்கில் உறையும் வடிவேலர் | 500 |
| 5. திருச்செங்கோடு ஈசர் | 500 |
| 6. பனிமலைக் காவலர் நல்லையன் | 7 |
| 7. சிற்றம்பலர் | 100 |
| 8. நல்ல புள்ளியம்மன் | 100 |
| புலவர்க்கு அளந்தது | |
| 9. தமிழ் உரைக்கும் அஞ்சு படிக்காரர் | 500 |
| 10. இந்தத் தமிழை உரைக்கும் முத்துப் புலவன் | 800 |

www.tamilarangam.net



| | | |
|---|---|---|
| 11. | கந்தபட்டன் | 100 |
| | பிற செலவுகள் | |
| 12. | சத்திரச் செலவு, மனைவாரச் செலவு | 700 |
| 13. | அணைக்கட்டு, கரைக்கட்டு ஆள்படிக் கூலி | 500 |

மேற்போந்த கணக்கு, மேலாட்சி(மேல்வார)க் கணக்காக மட்டுமே இருந்திருக்க வேண்டும். பள்ளர்(மள்ளர்)க்குச் சொந்தமாயிருந்த பண்ணைகளில், கோயில்களுக்கு அளந்ததைவிடத் தமிழ்ப் புலவர்க்கே கூடுதலாக நெல் அளக்கப்பட்டது. கந்த பட்டன் என்னும் தமிழ்ப் பார்ப்பான் புலவர்களில் ஒருவனாக இருந்தததால், அவனுக்கும்கூடப் படியளக்கப்பட்டது. வடுகச் சோழர் உள்ளிட்ட வந்தேறிகளின் ஆட்சிக்காலங்களில் பன்னூறு ஆண்டுகளாக இடையறாது தொடர்ந்த இம் மீயாட்சி முறை, ஏறத்தாழ அப்படியே இருந்துவந்துள்ளதையே இது காட்டுகிறது.

ஊர்க் கைவினைஞர்க்கும்கூட ஊர்ப்பொதுநிலத்தில் பங்கு இருந்தது. இந்தப் பங்குகள், உழையர்க்கு (retainers) வழங்கிவந்தவற்றைப் போன்றவை. ஊருக்குள்ளேயே கட்டுண்டு கிடக்கவும், வேலை வரும்போது மட்டும் கிடைத்த வேலையைச் செய்யவும் உகந்த வகையில், ஒவ்வொரு பணிக்குமெனத் தனித்தனி உடன்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டியிருந்தது.

மொத்த வெள்ளாண்மையில் 50 விழுக்காட்டை மேல்வாரமாகக் கட்டப்பட்டதாகச் சிதம்பரம் கல்வெட்டொன்று கூறுகிறது.[177] இராசாதிராசன் காலத்தில் நன்செய்ப் பயிர்களுக்கு பங்கு என்றும், புன்செய்ப் பயிர்களுக்குப் பங்கு என்றும் மீயாட்சி (மேல்வாரம்) தண்டப்பட்டது.[178]

## இருந்ததைத்தானே கெடுத்தான்?

வடுகச் சோழரின் நிலஅளவை முறை மிகவும் சிக்கலானது. நிலஆவணங்கள் விரிவாகவும் சிக்கலானவையாகவும் இருந்தன. காராண்மையுரிமையையும் நுகர்வையும் பதிந்த பொத்தகத்தை ஒழுகு என்றனர். உழவடைக் காலம், காணிக்கடன் கட்ட வேண்டிய காராண்மையாளரின் பெயர் முதலானவற்றைக் காட்டும் நிலத்தீர்வைப் பதிப்புப் பொத்தகத்தை வரி அல்லது வரிபொத்தகம் என்றனர். குடியுரிமைக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவும் உடனுக்குடன் பதியப்பட்டன. நிலவரிப் பதிவு பொத்தகத்தை எழுதிவந்தவரை வரியிலார் என்றனர். முழுக் காணிக்கடனைக் கட்ட வேண்டிய நிலங்களைப் பதிந்த பொத்தகமாகப் புரவு என்னும் பொத்தகம் இருந்திருக்கலாம். காணிகளின் வெவ்வேறு தரங்களையும் தீர்வைகளையும்

www.tamilarangam.net



பதிந்த பொத்தகத்தைத் தரப்பொத்தகம் என்றனர். வகைசெய்யப் படாத நிலங்கள் தரமிலி எனப்பட்டன. ஏரிநீர்ப்பரப்பும் பயிரிட முடியாத நிலங்களும் தரமிலி வகைப்பட்டன.[179]

காணிகளை இவ்வாறு வகைசெய்யும் வழக்கத்தை வடுகச் சோழர்தான் உருவாக்கினர் எனச் சொல்வது பொருந்தாது. பண்டைத் தமிழரிடம் ஏற்கெனவே விளங்கிவந்த காணியுறவுகளையும் கணக்கு முறைகளையும் தம்வயமாக்கிக் கொண்ட வடுக அநாகரிகரான பல்லவர்களும் இடைக்காலச் சோழர்களும் அவற்றைத் தத்தம் வந்தேறிப் பொருளியல் சுரண்டல் நலன்களுக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொண்டனர். வடுகச் சோழரின் ஆட்சிக்காலம் நெடுகவும், வருவாய்த்துறை, கருவூலத்துறை முதலான துறைகளில் மூவேந்த வேளான் என்னும் வெள்ளாளர்களே பெரும்பாலான அதிகாரிகளாக இருந்து வந்ததே அதை மெய்ப்பிக்கும். ஆங்கிலேயர் கால வருவாய்த்துறை ஆட்சியும் கூடத் தமிழரிடம் வழிவழியாய் வந்த நிலஅளத்தலையும் நிலத்தீர்வைக் கட்டுமானங்களையும் கருத்தாக்கங்களையும் தம்வயமாக்கிக் கொண்ட ஒரு வந்தேறிப் பொருளியல் கட்டமைப்பாயிருந்த மெய்ம்மையோடு ஒப்பிட்டு அதை விளங்கிக் கொள்ளலாம்.

கி. பி. 1213ஆம் நூற்றாண்டுகளில் வடுகச் சோழர் பொருளியல் நிலைகுலைந்த சூழலில், பெரியநாடு என்னும் பேரவை தோற்றுவிக்கப் பட்டது. அந்த அவையினரைச் சித்திரமேழிப் பெரியநாட்டார் என்றனர். (சித்திரமேழி என்பது ஏர்க்கலப்பைக் குறியாகும்) புதிய பட்டணங்களும் அந் நிலையில் தோன்றியதால், பழைய பிரமதேயங்களின் அதிகாரங்களும் பிடிப்புகளும் குன்றின. வணிகச்சாத்துகளின் வழியாக வந்த கமுகு, மிளகு போன்ற பண்டங்களின்மீது வரி விதித்தல், அதன் வாயிலாகத் தண்டிய பணத்தைக் கோயிலுக்கு ஒதுக்குதல், அதைக் கோயிற்சுவரில் கல்வெட்டாக எழுதிவைத்தல் ஆகியனவே அந்தப் பெரியநாட்டாரின் பணிகளாயிருந்ததாகக் கி. பி. 1288ஆம் ஆண்டுக்குரிய மன்னார்குடிக் கல்வெட்டொன்று கூறுகிறது.[180]

சித்திரமேழிப் பெரியநாட்டாரில் வேளான் எனப்பட்ட அதிகாரிகள் உறுப்பினராயிருந்தனர்.[181]

வடுக வந்தேறியத்தின்கீழ் விளங்கிய நிலக்கிழமைப் பொருளியல், நடுவப்படுத்தப்பட்ட ஒரு பொருளியலாயிருந்தும், அது நாட்டுப் புறத்தைச் சார்ந்த ஓர் இயற்கைப் பொருளியலாகவே இருந்தது.

## வந்தேறிப் பொருளியலால் வந்த குழப்பங்கள்

கி. பி. 4ஆம் நூற்றாண்டு முதல் 7ஆம் நூற்றாண்டு வரையிலான காலமே அகரகார நிலக்கிழமை தமிழகத்தில் வேரூன்றிய காலமாகும். கி. பி. 9வது நூற்றாண்டிற்கும் 13வது நூற்றாண்டிற்கும் இடையில்தான்

www.tamilarangam.net



சோழநாட்டில் அந்தப் பிரமதேயங்கள் மளமளவெனப் பெருகின. கி. பி. 11-13ஆம் நூற்றாண்டுகளில் அந்த அகரகார நிலக்கிழமையில் நெருக்கடி முற்றிப் பெரும் குழப்பங்கள் தோன்றின.

முதல் பராந்தகனின் 25ஆம் ஆண்டில் (கி. பி. 932) மேற்குக் கங்க அரசனான இரண்டாம் பிரிதிவிபதி (செம்பியன் மாவலி வாண ராயர்) சோழப் பேரரசனிடம் இசைவுபெற்று, படுவூர்க் கோட்டத்து மேல்அடையாறுநாட்டுக் கடைகோட்டூர் என்னும் ஊரை உதயசந்திர மங்கலத்துடன் சேர்த்து வீரநாராயணசேரி என்னும் பிரமதேயத்தை உருவாக்கினான். பொற்கருப்பைக் கொடை, எடைக்கு எடைக் கொடை முதலான கொடைகளைப் பிராமணர்க்கு நல்கினான்.[182]

யாருக்கும் ஒதுக்கப்படாதிருந்த பொதுநிலம் ஊரவையால் ஊருக்குப் பொதுவாக வைக்கப்பட்டது. இன்னாருக்கென இறுதி யாக ஒதுக்கப்படுவதற்குமுன் இப் பொதுநிலங்கள் சிலவற்றைச் சுழற்சி முறையில் ஊராருக்கு விட்டனர். இத்தகைய கூட்டுநிலங்களையே "நிலம் கலந்தபடி" (nilam kalandapadi) என்றனர்.[183] வந்தேறி வடுகச் சோழர் ஆட்சியின் தொடக்கக் காலத்தில், ஊர்ப்பொது நிலங்கள் கூறுபோடப்பட்டு மிகப் பரவலாக விற்கப்பட்டன. கோயில்களுக்கும் தனியாட்களுக்கும் விற்கப்பட்ட ஊர்நிலங்கள் யாவும் திருத்தப்பட்டு, வேளாண்மை பெருக்கப்பட்டது. பயிரிடாது கிடந்த நிலங்களையும் பொதுநிலங்களையும் திருத்திப் பயிர்நிலங்களாக்கிய இந்த நிகழ்வு, வடுகச் சோழரின் ஆட்சிக்காலத்தில் பரவலாகத் தோன்றிய பெருங் கோயில்களின் எழுச்சியையும் அதன் கோயில் பண்பாட்டையும் தழுவியதாயிருந்தது.[184] கல்வெட்டுகள் அதைக் காட்டுகின்றன.

இதனால், ஊர்ப் பொதுநிலங்கள் ஊரின் எல்லைப்புறங்களில் ஒதுங்கிச் சுருங்கின. எஞ்சிய ஊர் நிலங்களெல்லாம், விளைப்புத்திறன் குறைந்த கடைநிலங்களாகவோ களர்நிலங்களாகவோ உவர்நிலங்களா கவோ பாசனப்புரவு இல்லாத பாழ்நிலங்களாகவோ இருந்தன.

## ஆணை மீறல்கள்

தேவதானங்கள், சைனப் பள்ளிகள், பிராமணரின் பிரமதேயங் கள் ஆகிய அறநிலையங்களுக்கு வழங்கப்பட்ட நிலக்கொடைகளைப் பொதுவாக விற்று அயற்படுத்தவோ, ஒற்றிவைக்கவோ முடியாது என்னும் அரச ஆணை இருந்தது. பாழ்படுத்தவோ கெடுக்கவோ விற்கவோ செய்யாத வகையில் இன்னொருவருக்குச் சொந்தமான நிலத்தினால் விளையும் பயன்கள் அனைத்தையும் நுகரும் நிலஅடகு முறையே ஒற்றி (Usufructory Mortgage) எனப்பட்டது. ஆயினும், அந்த ஆணையை அப் பிரமதேயங்களும் கோயில்களும் மீறவே செய்தன. கோயில் நிலங்களையும் பிரமதேய நிலங்களையும் அவ்வப் போது விற்கவோ ஒற்றிவைக்கவோ செய்ததைக் காட்டும் கல்வெட்டு களும் செப்பேடுகளும் உண்டு.

www.tamilarangam.net



தனியார் சிலர் பிராமண அகரங்களை உருவாக்கியபோது, அவற்றை விற்கவோ ஒற்றிவைக்கவோ கூடாது என முன்கூட்டியே எழுதிவைத்தனர். பரகேசரிவர்மனின் 3வது ஆட்சியாண்டில், திரிப்பா திரிப்புலியூரைச் சேர்ந்த பட்ட சபையதிப சோமயாசி என்னும் பாரதுவாச கோத்திரத்து வடுகப் பிராமணன், மூன்று காணிகளை 5 பிராமணர்க்கு ஈந்து ஒரு பிரமதேயத்தை உருவாக்கி, அந் நிலங்களை விற்கவோ ஒற்றி வைக்கவோ கூடாது என எழுதிவைத்ததை ஓர் எடுத்துக்காட்டாகச் சொல்லலாம்.[185]

முதல் பராந்தகனின் காலத்தில், செங்கை மாவட்டத்தில் உள்ள நின்றவூரிலிருந்த பிரமதேயத்தவரால் அரசனுக்குக் கட்ட வேண்டிய காணிக்கடனைச் செலுத்த முடியாமல் போனது. அவற்றின் நிலுவையும் கூடியது. இதனால், கி. பி. 926ஆம் ஆண்டில் அந் நின்றவூரின் ஊரவையினர் சில நிலங்களை விற்றுக் காணிக்கடனைச் செலுத்தினர்.[186] கி. பி. 954-55ஆம் ஆண்டுகளில் கொடுப்போலை (grant of occupancy) வழியாக விடப்பட்டிருந்த சில நிலங்கள், உக்கல் என்னும் விக்கிரமசதுர்வேதிமங்கலத்து ஊரவைக்கு மீண்டன. அந் நிலையில், தத்தம் காணிக்கடன் நிலுவைகளை அடைப்பதற்காகக் காராண்மையாளர்கள் அவற்றை விற்று அயற்படுத்த அவ் வூரவை இணங்கியது.[187]

கி. பி. 966-67ஆம் ஆண்டுகளில் (இரட்டர் அரசன் மூன்றாம் கன்னரதேவனின் 28வது ஆட்சியாண்டில்), மருத்துவர்களுக்கும் ஆசீவகர்களுக்கும் கொடையாக அளிக்கப்பட்டிருந்த காணிகளை விற்போரும் வாங்குவோரும், ஒற்றி வைப்போரும், ஒற்றிய நிலத்தை எடுப்போரும் ஒரே சாதியினராக இருக்க வேண்டுமென வடவார்க்காட்டுக் காவனூரின் ஊரவை தனி விதிமுறை வகுத்தது.[188]

பிரமதேய, தேவதான நிலங்களை விற்பதைத் தடைசெய்து கி. பி. 1002ஆம் ஆண்டில் முதல் இராசராசன் மீண்டும் ஓர் ஆணை பிறப்பித்தான். இந்த ஆணையை மீறி விற்கப்பட்ட பிரமதேய, தேவதான நிலங்களையெல்லாம் பறித்தெடுத்து, அங்காடி விலைக்கு விலைகூறி விற்று, அவற்றால் வந்த பணத்தை அரசுக்குக் கட்டிவிட வேண்டுமென இராசராசன் ஆணையிட்டான். பணிமக்களுக்குத் தரப்பட்ட காணிகளுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்பட்டது.

ஆயினும், திருத்தப்படாத பொட்டல் நிலங்களையும், வெள்ளத்தால் கெட்ட நிலங்களையும், பயிரிடப்படாது கிடந்த நிலங்களையும் திருத்திப் பயிர்செய்வதற்காகக் கோயில் நிலங்களைப் புதிய காணியாளருக்கு விற்பதை அவன் தடைசெய்யவில்லை.

## வந்தேறிப் பிராமணர்க்குத் தமிழர் காணி விற்கச் சொல்லி ஆணை!

கடமையும் வரியும் கட்ட இயலாத நிலையிலேயே பிரமதேயங்களும் தத்தம் நிலங்களை விற்கத் துணிந்தனவென்பதைப் பின்னர்

www.tamilarangam.net



அவன் உணர்ந்தான். அரசின் வருவாய்த் தேவையைக் கருதி, பிரம தேயங்களிலுள்ள பிராமணக் காராண்மையாளரும்கூடத் தத்தம் காணி களை விற்றுக் கொள்ளலாம் என்னும் புதிய ஆணையை முதல் இராச ராசன் பிறப்பித்தான். பணிமக்களின் காணிகளை மட்டும் அவ்வாறு விற்க முடியாது என்பதும் அந்த ஆணையின் அக்குத்தாகும். இதனால், தஞ்சாவூரின் புறநகராயிருந்த கருந்தட்டான் குடியின் (இராசகேசரி சதுர்வேதிமங்கலத்தின்) ஊர்ப்பேரவையார், ஊர்நிலங்கள் சிலவற்றை விற்றனர். முதல் இராசராசனின் தமக்கையான குந்தவை அதை விலைக்கு வாங்கிக் கோயிலுக்குக் கொடையாக்கினாள்.[189]

கி. பி. 1002ஆம் ஆண்டில் முதல் இராசராசன் இன்னோர் ஆணை பிறப்பித்தான். கருந்தட்டான்குடி (இராசகேசரி சதுர்வேதிமங் கலம்) என்னும் அகரகாரத்திலுள்ள பிராமணரல்லாதார் எல் லாரும் தத்தம் நிலங்களை உடனே விற்றுவிட வேண்டுமென்றும், அந் நிலங்களையெல்லாம் பிராமணர்கள் மட்டுமே விலைக்கு வாங்க வேண்டுமென்றும் அந்த ஆணையிலிருந்தது. ஊழியக்காணி களுக்கு (service tenures) மட்டும் விலக்குத் தரப்பட்டது. இந்தக் கட்டளையை ஊர்ச்சபை நடைமுறைப்படுத்துகிறதாவெனப் பார்ப் பதற்காக ஒரு தனி அதிகாரியையும் அவன் விடுத்தான். கையகப் படுத்தப்பட்ட நிலங்களைப் பிராமணர்கள் காசு கட்டி வாங்க வழி செய்தான். அவ்வாறு விற்கப்பட்ட காணிகள் சிலவற்றை இராசராச னின் தமக்கையான குந்தவைப் பிராட்டியாரே விலைக்கு வாங்கி அவற்றைக் கோயிலுக்கு ஈந்தாள்.[190] புலியூர்க் கோட்டத்தில் ஒரு பிரமதேயத்தில் குடியிருந்த பிராமணரல்லாதாரெல்லாம்கூட அவ்வாறே தத்தம் காணிகளைப் பிராமணருக்கு விற்றுவிட வேண்டு மென முதல் இராசேந்திரனும் ஓர் ஆணை பிறப்பித்தான்.[191]

சோழமண்டலத்திலும் செயங்கொண்ட சோழமண்டலத்திலும் விசயாலய சோழன் முதல் உத்தம சோழன் வரையிலான ஆட்சிக் காலத்தில் (கி. பி. 850-985) எல்சோறு செலுத்துவது மிகப் பரவலா யிருந்தது. முதல் இராசராசனின் காலத்தில் அது பாதிக்கும் கீழே குறைந்தது. இவ்வாறு குறைந்ததற்கான காரணம் இருக்கத்தானே வேண்டும்? வடுகன் விசயாலயன் சோழநாட்டைப் பிடித்தபோது, அவ் வந்தேறிகளின் போர்க்காலப் படைப் புடைப்பெயர்ச்சிகள் அரக்கப் பறக்கப் பெருமளவில் இருந்தன. இந் நிலையில், வந்தேறிப் படைகளுக்குக் கட்டாய ஊழியம் செய்யுமாறு தமிழர்கள் பெருமள வில் பணிக்கப்பட்டனர். வடுக வந்தேறிகளின் ஆட்சி இராசராசனின் காலத்தில் ஓரளவு குதிர்ந்த நிலையில், எல்சோற்றுப் பணியின் தேவை அதனால் குறைந்திருக்கத்தானே வேண்டும்?

## பாண்டியர் வழியில் வளநாடுகள்

முதலாம் இராசராசனின் காலத்தில்தான் பாண்டியநாடு வடுகச் சோழரிடம் முற்றிலும் அடிமைப்பட்டது.[192] அவன் திணித்த

www.tamilarangam.net



வந்தேறிப் போர்க்காலப் பொருளியலால் வந்த வினையைத் தமிழ் மக்கள் ஒட்டுக்காகச் சுமக்க வேண்டியதாயிற்று. இதனால், நாட்டில் மிகப் பெரும் பொருளியல் நெருக்கடி நிலவியது. இராசராசனது போர்க்கோலத்தால் விலைவாசி மளமளவென உயர்ந்தது. உத்தம சோழனின் காலத்தில் (கி. பி. 970-85) ஒரு காசுக்கு 10 கலம் நெல் கிடைத்தது. ஆனால், இராசராசனின் காலம் முதல் வீரராசேந்திரனின் காலம் வரையில் ஒரு காசுக்கு 8 கலம் நெல்தான் கிடைத்தது. முதல் குலோத்துங்கனின் காலமான கி. பி. 1117இல், தஞ்சை மாவட்டத்தி லுள்ள ஆலங்குடியில், காசுக்கு 13 கலம் நெல்லும் விற்கும் அளவுக்கு நிலைமை ஒருவாறு தேறியது. காசின் மதிப்போ, ஏறத்தாழப் பாதி யாகக் குறைந்தது.[193]

இந் நிலையில், முதல் இராசராசன் சோழநாட்டை 9 வள நாடுகளாகப் பகுத்தான். நாட்டுக்கும் மண்டலத்திற்கும் இடைப் பட்டவையே அவ் வளநாடுகள். ஆனால், பல்லவர் காலப் பாண்டிய மன்னர்களான முதல் இராசசிம்மன், இரண்டாம் வரகுணன் ஆகி யோரின் காலத்திலேயே (கி. பி. 730-880) பாண்டியநாடு வளநாடு களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கேரளசிங்க வளநாடு, திருவழுதி வள நாடு, சீவல்லப வளநாடு, அமிர்தகுண வளநாடு ஆகிய வளநாடுகள் அவர்களின் காலத்தில் இருந்தன.[194] பாண்டியநாட்டைப் பார்த்தே வடுகச் சோழன் முதல் இராசராசனும் அக்காலச் சோழநாட்டை வளநாடுகளாகப் பிரித்திருக்க வேண்டும். தொண்டைநாட்டில் (செயங் கொண்ட சோழமண்டலத்தில்) 'கோட்டம்' என்று வழங்கிவந்த உட் பிரிவின் பெயர், முதல் குலோத்துங்கன் காலத்தில்தான் வளநாடு என்றானது.[195]

## வடுகக் கெடுபிடிகள்

வடுகச் சோழனாகிய முதல் இராசராசனின் காலத்தில் நிலத்தை அளத்தலும் தரப்படுத்தலும் நாடுவகைசெய்தல் என்னும் பெயரில் பெருமளவு நெறிப்படுத்தப்பட்டன. அச் சோழரின் நிலத் தரப்படி முறையில் சீர்மையோ, நிலையான அளவுகோலோ இல்லை. அதைத் தான்தோன்றித்தனமாகக் குறிக்கவோ குறைக்கவோ செய் தனர். ஒரு காணியின் விளைப்புத் திறனை வைத்துக் கணக்கிடாமல், நிலத்தீர்வையை மட்டுமே வைத்து அத் தரப்படியை முடிவு செய் தனர். இதனால், 14ஆம் தரத்திலிருந்த நிலத்திற்கான காணிக்கடனை 20வது தரத்தில் வைத்தும்கூடத் தீர்வையைத் தண்டினர். இரண்டு தரப்படி நிலைகளுக்கு இடையிலான இந்த வேற்றுமையை இறைகுறைப்பு என்றனர்.[196]

கி. பி. 11ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், ஒரு காசுக்கு 2 கலம் நெல் விற்றது. வட்டி விழுக்காடோ, 12% என்றிருந்தது.[197] வடுகச் சோழ வந்தேறி ஆட்சியில் இறையும் வரிகளும் சுமக்க முடியாத அள

www.tamilarangam.net



வுக்கு மக்கள்மீது திணிக்கப்பட்டதால், மேல்குடிகளும் கீழ்க்குடிகளும் அவற்றைக் கட்ட இயலவில்லை. வெள்ளாண்மையும் செய்ய முடிய வில்லை. இறையும் வரியும் தண்டுவதில் அரசு மிகக் கடுமையாகவும் கொடுமையாகவும் நடந்து கொண்டது.

ஒரு வேலி நிலத்திற்கு 100 கலம் நெல்லெனக் காணிக்கடன் விதிக்கப்பட்டது.[198] காணிக்கடனைச் செலுத்துவதில் காலம் தாழ்த்தி யோரின்மீது முதல் இராசராசன் கடும் நடவடிக்கை எடுத்தான். மூன்றாண்டுகளுக்குமேல் கடமை கட்டத் தவறியோரின் நிலங்களை யெல்லாம் வலியப் பறித்தெடுத்து, விலைகூறி விற்கச் செய்தான். கடமை செலுத்தாமையால் கையகப்படுத்தப்பட்ட காணிக்குச் சொந்தக் காரனே அந் நிலத்தை மீண்டும் விலைக்கு வாங்குவதைத் தடுத்தான். தனியாள் ஒருவர் காணிக்கடனைக் கட்டத் தவறினால், அதற்கு ஊரே பொறுப்பேற்க வேண்டுமென்றும் ஆணை விடுத்தான். தனியாள்கள் கட்டத் தவறிய காணிக்கடன் நிலுவைகளுக்காக ஊரவையாரையே உடல்வருத்தித் துன்பப்படுத்திய நிகழ்வுகள் ஏராளம். இதனால், ஊர்க்கோயிலின் நகை நட்டுகளை அடகு வைத்தோ, விற்றோ அக் காணிக்கடனை ஊரவையார்கள் கட்டினர். இறையும் வரியும் கட்டாது போனவர்களின் நிலங்களையோ ஊர்ப்பொதுநிலங்களையோ விற்றும் அரசனுக்குக் காணிக்கடனைச் செலுத்தினர். ஊரும் நகரமும் நாடும் மட்டுமன்றி, பிரமதேயங்களும் படைப்பற்றுகளும்கூட இத்தகைய இடர்பாடுகளுக்கு ஆளாயின.

இது போன்ற அரசுக் கெடுபிடிகளால் கி. பி. 1001ஆம் ஆண்டில் திருவிடைமருதில்லில் அவ்வாறு விற்கப்பட்ட நிலத்தைச் சுந்தர சோழன் என்னும் இரண்டாம் பராந்தகனின் அரசியான பராந்தக தேவி விலைக்கு வாங்கினாள்.[199] இராசராசனின் மகனான முதல் இராசேந்திரனும்கூட இதே முறையைக் கையாண்டான்.

முதல் இராசராசனின் காலத்திலும் முதல் இராசேந்திரனின் காலத்திலும் பிராமணர்களுக்கு நிலக்கொடை அளிக்கும் வழக்கம் மிகப் பரவலானது. பிரமதேய ஊரவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பிராமணர்கள் வேதங்களையும் மந்திரங்களையும் நன்கு கற்றவராக இருக்க வேண்டும் என்னும் விதி முதல் இராசராசனின் காலத்தில் மிகக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டது.[200]

## கொள்ளிடத்திற்கு வடக்கே வந்தேறிய கதை

சோழநாட்டின் கருப்பகுதியான காவிரிக் கழிமுகப் பகுதியில் மட்டுமன்றி, கொள்ளிடத்திற்கு வடக்கேயும்கூடப் பெரிய பொருளியல் நெருக்கடி நிலவியது. கைக்கு வந்ததே போதும் என்னும் போக்கில் சோழநாட்டு உழவர்குடிகள் தத்தம் காணிகளை விற்கத் தலைப்பட்டனர். இந் நிலையில், காவிரிக்குத் தெற்கேயிருந்து வந்த செல்வர்

www.tamilarangam.net



களும் அரசக்குடியினரும் விலை மலிவாகிப்போன அந் நிலங்களை யெல்லாம் அரக்கப் பறக்க வாங்கிக் குவிக்கத் தொடங்கினர்.[201]

கொள்ளிடத்திற்குத் தெற்கேயுள்ள நிலம் மிகவும் வளமானது. அதனால், அங்கிருந்த நாடாள்வார்களும் அரசக்குடியினரும் செல் வாக்கு மிக்கவர்கள். இதைக் கருதியே கொள்ளிடத்திற்கு வடக்கே வந்து காணிகளை மளமளவெனக் கையப்படுத்துவதைத் தடுக்கும் முகமாக, முதல் இராசேந்திரன் அது போன்ற நிலவிற்பனையைத் தடைசெய்து ஆணை பிறப்பித்தான். அதையும் மீறிக் காணி விற்பனை களும் கையகப்படுத்தல்களும் தொடரவே செய்தன.

குன்றக்கூற்றத்தில் (உத்துங்கவளநாட்டில்) அரசக்குடியைச் சேர்ந்தவர்கள் எனச் சொல்லிக்கொண்டவர்களும் காவிரிக்குத் தெற்கே யிருந்து வந்தவர்களும் இரண்டாம் இராசராசனின் 19வது ஆண்டுக்குப் பின் 'இராசராசப்பெருவிலை' என்னும் பொதுஏலத்தில் நிலத்தை ஏலம் கூறி எடுத்தலோ, காணியாளரிடமிருந்து நேரடியாக நிலங்களை விலைக்கு வாங்குதலோ கூடாது எனக் கி. பி. 1174-75ஆம் ஆண்டில் மீண்டும் ஓர் அரசாணை விடுக்கும் அளவுக்கு அது போன்ற குடியேற் றங்கள் இடையறாது நிகழ்ந்தன.[202]

ஆகவே, காவிரிக் கழிமுகத்திலும், அக் காவிரியாற்றுக்கு வடக் கேயும், கொள்ளிடப் பகுதியிலும் தெற்கேயிருந்து வந்தவர்கள் நிலங் களை வாங்கிக் குவிப்பதைத் தடுக்கும்வண்ணம், அவ்வாறு வாங்கப் படும் நிலம் 2 வேலிக்கு மிகாமல் இருக்க வேண்டுமென்னும் புதிய கட்டுப்பாட்டைச் சோழ அரசு விதித்தது. பழைய காணியாளர்கள் மீண்டும் திரும்பி வந்து உழவை மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வண்ணம், சலுகை விலையில் அவர்களுக்கு மனைக்கட்டுகளை வழங்கு வதைப் போன்ற ஊக்குவிப்புகளைத் தந்தது. பொருளியல் பாதிப்புக்கு ஆளாகாத திருவரங்கம் உள்ளிட்ட மேலைக்காவிரிப் பகுதிகளில் இது போன்ற சலுகைகள் வழங்கப்படவில்லை.[203]

## தலைமாறிய பிரமதேயம்

பழையனூர் ஒரு பிரமதேயம். சிங்களாந்தக சதுர்வேதிமங்க லத்தின் ஊரவையாரிடமும் இருந்தது அப் பிரமதேயம். இந்த ஊரவை யாருக்கு வேறு நிலத்தைத் தந்து ('தலைமாற்றப்பட்டு'), அந்தப் பிரம தேயத்தை வெள்ளான்வகை நிலமாக்கினர். இவ்வாறு வெள்ளான் வகையாக்கியபின், அப் பழையனூரைத் திருவாலங்காட்டுக் கோயிலின் தேவதான ஊராக மாற்றினர்.[204]

இவ்வாறு செய்ததற்குக் காரணம் இருக்கத்தானே வேண்டும்?

முதல் இராசேந்திர சோழனின் காலத்தில் வெள்ளான்வகை இருவகைப்பட்டது. ஆண்டுதோறும் இறையை அரசுக்கு நேரடியாகவே செலுத்திவந்தது ஒரு வகை. வெள்ளாண்மை அளவைப் பொறுத்து

www.tamilarangam.net



அந்த இறையின் அளவு இருந்தமையால், ஆண்டுக்கு ஆண்டு அது வேறுபட்டது. காணிக்கடனை அரசுக்கு நேரடியாகக் கட்டாமல், கோயில் போன்ற நிறுவனத்திற்குக் கட்டுவது இரண்டாவது வகை. ஏறத்தாழ நிலையானதும் தரப்படுத்தப்பட்டதுமான இறைதான் இவ் வகையில் கட்டப்பட்டுவந்தது. நிலையாயிருந்த இறையை நின்ற இறை என்றனர். பிரமதேயமாக இருந்த பழையனூரை முதலில் வெள்ளான் வகையாக ஆக்கிவிட்டுப் பிறகு அதைத் தேவதான ஊராக ஆக்கியதன் நோக்கம் தெரியுமா? காணியாளர்களையும் கீழ்க் குடிகளையும் உழுகுடிகளையும் விற்கப்பட்ட நிலத்திலிருந்து நீக்காமல் (குடிநீக்காமல்) இருந்த வெள்ளான்வகை ஊர்களைப் போன்றே குடி நீக்காமல் அரசனுக்குக் கட்ட வேண்டிய இறையை மட்டும் இனிக் கோயிலுக்குக் கட்டும்படி செய்வதே அந் நோக்கமாகும். இந்த வகைத் தேவதானத்தை வெள்ளான்வகைத் தேவதானம் என்றனர். பழைய னூர் ஒரு பிரமதேயமாக இருந்தபோது, 3288 கலம் 7 குறுணி 5 நாழி நெல்லும், 193 கழஞ்சு 1 மஞ்சாடி 1 மா பொன்னும் கோயில் காணியாள ரால் மேலாட்சியாகக் கட்டப்பட்டுவந்தது. இக் கடமையை நின்ற இறையாக இனிக் கோயிலுக்குக் கட்ட வேண்டியதாயிற்று.[205]

கி. பி. 11ஆம் நூற்றாண்டில் கமுகு(பாக்கு)த் தோட்டங்களின் மீதான இறை குறைக்கப்பட்டு அவற்றின் வேளாண்மை புரக்கப் பட்டது. வாழைத்தோட்டங்களையும் கமுகுத் தோட்டங்களையும் உருவாக்குவது திட்டமிட்டு ஊக்குவிக்கப்பட்டது. அரச அதிகாரி களின் ஆணைக்கு ('கடையீட்டுக்கு') இசையக் கமுகுத் தோட்டமாக மாற்றப்பட்ட காணிகளை, கி. பி. 1098இல் இறையிலியாக்கித் திரி புவனியில் கமுகு விளைப்பை ஊரார் ஊக்குவித்த செய்தி அதற்கான எடுத்துக்காட்டாகும்.[206]

முதல் இராசேந்திரனின் காலத்திலும் வீரராசேந்திரனின் காலத் திலும், வெள்ளமும் வறட்சியும் மாறிமாறி வந்து பருவப்பயிர்களை அழித்தன. இதனால், பொருளியல் நெருக்கடி முற்றியது.

## காடு திருத்தி அகரமேற்றல்

காணியாளர் கட்டிவந்த கடமையின் அளவைக் கூட்டுவதன் வாயிலாகவும் — கீழ்க்குடிகளும் உழுகுடிகளும் கட்டிவந்த பல்வகை யான வரிகளை நெல் போன்ற கூலவடிவிலோ காசு வடிவிலோ தண்டுவதன் வாயிலாகவும் — வடுகச் சோழர்கள் தம் அரசின் வரு வாயை மேம்படுத்தப் பார்த்தனர். இதனால், மக்களின் எதிர்ப்பு வலுத்தது. ஆகவே, இரண்டாம் இராசேந்திரனின் (கி. பி. 1058) காலம் தொட்டு மூன்று வழிகளில் நிலைமையைச் சரிகட்டப் பார்த்தனர். முதலில், காணியாளர்கள் செலுத்த வேண்டிய காணிக்கடனைக் குறைத்தனர். காணிக்கடனைக் கட்ட முடியாமல் ஊரைவிட்டே ஓடிப்போனோரை அல்லது நிலத்தை விட்டு இடம்பெயர்ந்தோரை

www.tamilarangam.net



அழைத்துவந்து மீண்டும் ஊரில் குடியமர்த்தினர். கட்ட வேண்டிய கடமைக்கு ஓர் உச்சவரம்பை வரையறுத்தனர். இதற்கு முன்னோடியாக, பயிரிடப்படாமல் கிடந்த நிலங்களைச் சீர்ப்படுத்தியவர்க்கெல்லாம், நான்கு ஐந்து ஆண்டுக்காலத்திற்குப் படிப்படியாகக் குறைந்த கடமை தள்ளுபடி கிடைத்தது. குறுவைச் சாகுபடிக்கும் கூடுதலாக விளைவிக்கப்பட்ட பயிர்களுக்கும் சலுகைகள் கிடைத்தன.[207]

ஆவத்தம்ப நூலின்படி ஒழுகிய தெலுங்குப் பிராமணர்கள் ஆயிரக்கணக்கில் வந்து காவிரிக் கரையில் குடியேறியதை முதல் இராசேந்திரனின் கரந்தைச் செப்பேடுகள் காட்டுகின்றன.[208]

இத்தகைய குடியேற்றங்களுக்கு இடையில் வளர்ந்த வடுகப் பிராமண நிலக்கிழமையின்கீழ் — பிராமணரும் நிலக்கிழார்கள் வணிகர்களும் பிறரும் அக்கால வேளாண்மை முறையில் சில அடிப்படை மாற்றங்களை விளைவித்தனர். அவை:[209]

1. காடுகளை அழித்தும், சதுப்புநிலங்களையும் புல்வெளிகளையும் செப்பனிட்டும், உழவுநிலங்களின் பரப்பளவைப் பெருக்கினர்.

2. நீர்ப்பாசனத்தில் புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்தினர்.

3. கரும்பு, தென்னை, வெற்றிலை, பாக்கு முதலான காசுப்பயிர்களைப் பெரிய அளவில் நடும் வழக்கத்தைக் கொணர்ந்தனர்.

நெடுங்காலம் பயிரிடப்படாது கிடந்த நிலங்களில் புதிய காணியாளரை அமர்த்திய பிரமதேய ஊர்ப்பேரவையார், அவர்களை அங்கெல்லாம் பயிர்த்தொழிலைத் தொடங்க ஊக்குவித்தனர். முதல் குலோத்துங்கனின் 5வது ஆட்சியாண்டில் (கி. பி. 1075), திரிபுவனி என்னும் பிரமதேயத்தில் 15 ஆண்டுகளுக்கு மேலாகப் பயிரிடப்படாது கிடந்த நிலங்களை 12வது தரத்தினது என்று வகைப்படுத்தி அவற்றைப் புதிய காணியாளர்க்கு விட்டனர்.[210]

## தரம் போய் விரிப்பு வந்தது

முதல் குலோத்துங்கனின் நேரடிச் சளுக்கிய வடுக ஆட்சியின்கீழ், தமிழகப் பொருளியல் இன்னும் சீர்கெட்டது. மக்கள், பெரும் இன்னல்களுக்கு ஆளாயினர். அரசனுக்குச் செலுத்த வேண்டிய இறை(கடமை)யைக்கூட முறையாகக் கட்ட இயலாத அளவுக்கு தமிழரின் நாட்டுப்புற வாழ்வியலை வறுமை வாட்டி வதைத்தது. வடுகரான பொய்ச் சோழரின் வந்தேறி ஆட்சிக்குக் கட்டவேண்டிய நிலுவையைக் கட்டித் தொலைப்பதற்காகப் பல ஊரினர் தத்தம் ஊர்ப் பொதுநிலங்களையே விற்கலாயினர். இவ்வாறு விற்கப்பட்ட காணிகளை யெல்லாம் வந்தேறி வடுக அரசக்குடும்பத்தினரே விலைக்கு வாங்கி, அவற்றைக் கோயில் இறையிலி நிலங்களாகவும் மடவளாக நிலங்களாகவும் மாற்றினர்.[211] இதற்கான கல்வெட்டுச் சான்றுகள் பல உண்டு.

www.tamilarangam.net



காணியின் தரத்தைப் பார்க்கும் மரபை விடுத்து, பரப்பு அடிப் படையில் ஊரில் காணிக்கடனைத் தண்டும் புதிய வழக்கத்தை வடுகச் சோழராட்சி புகுத்தியது. பரப்பு அடிப்படையிலான காணிக்கடன் முறை, ஒருதலையானதாகவும் சீர்மையற்றதாகவும் இருந்தது. இம் மாற்றத்தால், தமிழ் உழவர்கள் மிகப் பெரும் துன்பத்திற்கு ஆளா யினர். இதனால், பெரிய நெருக்கடி தோன்றியது.

தமிழ் உழவர்குடியினர்க்குத் தரப்படிக் கணக்கு ஏற்புடையதா, விரிப்புக் கணக்கு ஏற்புடையதாக இருந்ததா என்பதைப் பற்றி ஆய்ந் தோர், கூடுதலானதாயிருப்பினும் மடக்குமா (Standard *Mâ*) அடிப் படையில் காணிக்கடன் கட்டுவதையே மக்கள் விரும்பினர் என்பர். காணியின் விளைப்புத்திறனைக் (Productiveness) கணக்கில் கொள் ளாத இந்த மடக்குமாக் கணக்கும்கூடத் தீர்வையையே அடிப்படை யாகக் (Assessment Classification) கொண்டிருந்தது. காணிக்கடனை விரிப்பு அடிப்படையில் கணக்கிட முயன்ற போதெல்லாம், தமிழ் வேளான்குடியினர் அதற்கு எதிர்ப்புக் காட்டினர்.[212]

நெருக்கடிகள் முற்ற முற்ற, தமிழ் வேளான்குடி மக்களான காணி யாளர்கள் தங்களின் காணிகளை ஒற்றி (அடகு) வைக்கவோ, இறுதியில் அவற்றை விற்றுவிட்டு வேற்றூர்களுக்குக் குடிபெயர்ந்து போகவோ முற்பட்டனர். இனி ஊரில் இருந்து கொண்டு வெள்ளாமை செய்து பிழைக்க முடியாது என நினைத்த வேளாளர்கள், ஊரைவிட்டே குடிபெயர்ந்து போகும் அளவுக்கு நிலைன்ம சீர்கெட்டது.*

## புதிய உடன்பாடுகள்

வடுகச் சோழனுக்குக் கட்டவேண்டிய இறை (கடமை) மள மளவென உயர்ந்தது. அதற்கு நேர்மாறாக, கீழ்க்குடிகளுக்கும் உழு குடிகளுக்கும் ஒதுக்கப்பட்ட கீழ்வாரம் என்னும் வெள்ளாண்மைப் பங்கு, தலைகீழ் மேனியில் குறைந்துகொண்டே வந்தது. வடுக வந் தேறிச் சோழ அரசும் காணியாளரும் ஒருபுறமாகவும், காணியாளரும் கீழ்க்குடிகளும் உழவர்களும் மறுபுறமாகவும் நின்று இழுபறிப் பூசலில் இறங்கினர். இதனால், நிலவுடைமைகளிலும் குடியானவர் உறவு களிலும், கீழ்க்குடி-உழுகுடிக் கடப்பாடுகளிலும் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்தன.

இவற்றிற்கிடையில், அரச அதிகாரிகளின் அலைக்கழிப்புகள் உழவர்குடியை ஆட்டிப்படைத்தன. அரசியல் குழப்பங்களுக்கு இடை யில், கண்டவன் எல்லாம் வந்து வரியும் தீர்வையும் எனக் குடியான வர்மீது விதிக்கலானான். இதனால், அரசுக்குப் பெரும் சிக்கல் ஏற்

---

* "நம்மூர்ப் பரப்பிலே காசும் நெல்லும் ஆக பலவகை வந்தபடி தண்டிக் கொள்ளுகையாலே எங்களுக்குத் தரிப்பருடியாலே வெள்ளாமை செய்து குடி இறுக்க போகுதில்லை என்று நாட்டவர் வந்து சொல்லுகையாலும், இப்படியாகையால் ஊர் தரிப்பருடி உண்டாயிருக்கையாலும்..."[213]

www.tamilarangam.net



பட்டது. காணிக்கடன் தண்டுகையில் இன்னின்ன வகையில்தான் காணியாளரிடமும் கீழ்க்குடிகளிடமும் உழுகுடிகளிடமும் அரசு அதிகாரிகள் நடந்து கொள்ள வேண்டுமென்னும் நெறிமுறைகள் அடங்கிய ஆணைகள் இரண்டாம் இராசராசன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றாம் இராசேந்திரன் ஆகிய வடுகச் சோழரால் அவ்வப்போது பிறப்பிக்கப்பட்டன.

கி. பி. 1118ஆம் ஆண்டில், மன்னார்குடியின் (தனியூர் இராசாதிராசசதுர்வேதிமங்கலத்தின்) ஊர்ப்பேரவை கூடி, நகரத்திற்கும் கள்ளர்களுக்கும் நாட்டுக்கும் சொந்தமான நிலங்களின்மீது கட்ட வேண்டியிருந்த 30,000 காசு ஆண்டுக் காணிக்கடனை மடக்குமா (Standard *Mā*) அடிப்படையில் பகிர்ந்து கொள்வதென அதிகாரிகளின் முன்னிலையில் முடிவுசெய்தது.[214] காணிக்கடனைத் தண்ட வந்த அதிகாரிக்குக் கட்டிவந்த இறைக்கூலியை உழுகுடிகள் இனியும் கட்ட வேண்டியதில்லையென அப்போது முடிவானது. குரம்பு என்னும் பொதுப்பணிக்குப் பங்கு தரும் மரபு, இனி மடக்குமா அடிப்படையில் தான் இருக்க வேண்டுமெனத் தீர்மானிக்கபபட்டது. பிராமணரும் வேளாளரும் எந்த வடிவிலும் குடிமையைக் கட்ட வேண்டியதில்லை என்னும் மரபு மீண்டும் உறுதிசெய்யப்பட்டது. பணி கருதி ஊருக்கு வருகை தரும் அரசு அதிகாரிகளின் செலவை ஏற்கும் பொறுப்பும் கூட நெறிப்படுத்தப்பட்டது.

கீழ்க்குடிகள் செலுத்த வேண்டியவற்றையும் அவர்களின் கடப்பாடுகளையும்பற்றி முடிவெடுக்கக் கி. பி. 1169ஆம் ஆண்டில் மன்னார்குடியில் கூட்டப்பட்ட கூட்டத்தில், பிராமண அகரத்தின் பேரவையும் ஐந்து பேரிளமை நாடுகளின் நாட்டார்களும் பங்கெடுத்தனர். இக் கூட்டத்தில் கீழ்க்குடிகளிடமிருந்தும் உழுகுடிகளிடமிருந்தும் முறையற்ற வகைகளில் தண்டப்பட்டுவந்த வரிகளை வாங்குவதை நிறுத்தும் வகையில், பின்வருமாறு முடிவுசெய்யப்பட்டது:[215]

1. குறிப்பிட்ட நேரங்களில் குறிப்பாக ஆற்ற வேண்டிய குரம்பு போன்ற பணிகளுக்காகக் கீழ்க்குடிகளிடமிருந்தும் உழுகுடிகளிடமிருந்தும் காசு வடிவில் வரி வாங்குவதை நிறுத்த வேண்டும்.
2. குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்ட வடிவங்களில் வருவதைத் தவிர, மரபுவழிப் பணிகளுக்கும் மேலே கூடுதல் பணிகளைச் செய்யுமாறு வற்புறுத்தக் கூடாது.
3. படைஞர்களும், வருவாய்த்துறைத் தண்டுநர்களும், நாடாள்வார்களும் அரசனின் ஆட்களும் ஊரவையும் காசாகவோ நெல்லாகவோ கூடுதல் செலவுப்படிகளைச் செலுத்துமாறு கீழ்க்குடிகளையும் உழுகுடிகளையும் வற்புறுத்தக் கூடாது.
4. உள்குடி (resident-holders) குடியானவர் தவிர பிற யாரிடமிருந்தும் மேல்ஒப்பம் (surety) கேட்கக் கூடாது.

www.tamilarangam.net



5. அகரகார நிலங்களும் வேளாளர் நிலங்களும் தனித்தனியாகவோ ஒட்டுமொத்தமாகவோ காணிக்கடன் கட்டாத சூழலில், அந்தக் கடனைக் கீழ்க்குடிகளின் தலைகளின்மீது சுமத்தக் கூடாது.

6. இறையையும் வரிகளையும் ஒட்டுக்காக ஒரே தொகையாய் வாங்காமல், அவற்றையெல்லாம் தனித்தனியாகத் தண்டக் கூடாது.

இந் நிலையில், கீழ்க்குடிகளும் உழுகுடிகளும் காணியாளருக்கும் ஊருக்கும் அரசனுக்கும் அரசனின் அதிகாரிகளுக்கும் செலுத்த வேண்டிய குடிமையைக் கட்டுவதைப் பற்றிய புதிய நெறிகளையும் (கி. பி. 1169) உருவாக்கினர்.[216]

அதன்படி, அரசனின் அழைப்புக்குட்பட்ட பணிகளுக்கும் காவிரிக் கரையைப் பேணுவதற்குமான செலவைத் தத்தம் காணியுடைமையின் அளவிற்கேற்ப வெள்ளாளரே கட்ட வேண்டும். அரசன் விடுக்கும் தூதுவர்களுக்கு உணவிடுவதையோ, புதுப்பெருக்குக்குமுன் நீர்க்கால்களைத் துப்புரவு செய்வதையோ சுழற்சி முறையில் கூட்டாகச் செய்ய வேண்டும். அரசக் கருவூலத்திற்குக் கொண்டு சென்று சேர்க்க வேண்டிய நெல் கொள்முதலை மேற்பார்வையிட ஒரு மா* அளவு நிலத்திற்கு ஒருவர் என்னும் மேனியில் மட்டுமே ஆளை விடுக்க வேண்டும். காணிக்கடனை எடுத்துச் செல்லும் வண்டிக்குக் கூலியோ மாட்டுக் கூலியோ தரப்பட மாட்டாது. அரசக்குடியினருக்கோ, அவர்களின் பணியாளருக்கோ பணிவிடை செய்வதற்கான மக்கள் சேவகப்பேறு என்னும் வரி ஒரு மாவுக்கு ஒரு குறுணி என்றிருக்க வேண்டும். இம் மக்கட்சேவகப்பேற்றைக் காசாகத் தண்டக்கூடாது. சிவன் கோயில், மால் கோயில் திருவிழாக்களுக்காகும் செலவுகளுக்கு ஒரு மா அளவு நிலத்திற்குத் தலைக்கு ஒரு காசும் ஒரு நாழி நெல்லும் தரப்பட வேண்டும். கடமைகட்டத் தவறியவர்க்கு மேல்ஒப்பம் (surety) இட்டவர்களிடமிருந்து படைஞர் யாரும் காசு தண்டக் கூடாது. ஊர் அம்பலத்தின் கூரையைப் பழுதுபார்க்கவும் கூரை மாற்றவும் இவ்வளவு புல்லோ புரியோ என்று மட்டுமே பெற வேண்டும். குடும்பு என்னும் ஊரவைத் தேர்தலில் தொகுதி உறுப்பினர்கள், ஒவ்வோர் ஆண்டும் மாற வேண்டும். வேளாளரும் பிற சாதியரும் வாழும் குடும்புகளைப் பிராமணரின் குடும்புகளோடு இணைக்கக் கூடாது. கி. பி. 1160ஆம் ஆண்டு வரை இருந்ததைப் போன்றே, கார்க்காலப் பயிர்[$] மீதான வரி ஒரு மடக்குமாவுக்கு (Standard Ma) 30 காசு என்றும், பிசானப் பயிருக்கு 50 காசு என்றும் இருக்கும். நிலத்தின் பரப்பைத் தழுவி, ஒரு மா அளவு நிலத்திற்கு ஒரு காசு எனக் கடமை

* 33 cent

$ கார் என்பது முதற்பயிர்; பிசானம் என்பது இரண்டாம் பயிர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தண்டுவது நிறுத்தப்படும். பிராமணரையும் வேளாளரையும்பற்றி அரச அதிகாரிகளிடமும் நாடாள்வார்களிடமும் முறையிடக் கூடாது. அவ்வாறு முறையிடுபவர், நாட்டுக்கும் ஊருக்கும் எதிரானவரெனக் கருதப்படுவார். எழுத்து வடிவில் ஊர்ப்பேரவை இயற்றிய தீர்மானங் களின் அடிப்படையிலான வரிகளை மட்டுமே தண்ட வேண்டும். குடிமையைப் பற்றிய புது உடன்பாடு இவ்வாறிருந்தது.

இரண்டாம் இராசராசனின் 14வது ஆட்சியாண்டில் (கி. பி. 1176), காணியாளருக்கும் கீழ்க்குடிகளுக்கும் இடையிலான உறவுகள் திருத்தியமைக்கப்பட்டன. அக்கூர்நாட்டின் உட்கூறாயிருந்த அம்பர் நாட்டின் திருக்கடவூரின் ஊர்ப்பேரவை, உழவடையைப் பற்றியும், பிறங்கடையின்றி யாரும் உரிமை கொண்டாடாத சொத்துகளைப் பற்றியும் ஆய்ந்து அதை (உழுகுடி முதியோரான) 240 பேரிளமை யர்க்குத் தெரிவித்தது.[217]

குடியானவர்களுக்கும் பிரமதேயத்தின் ஊர்ப்பேரவையார்க்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாடுகளில், இரண்டாம் இராசாதிராச னின் காலத்தில் (கி. பி. 1176) வெட்டப்பட்ட தஞ்சை மாவட்டத்துத் திருக்கருகாவூர், ஆச்சாள்புரத்துக் கல்வெட்டுகளில் உள்ள உடன்பாடு கள் மிக விரிவானவை. இராசாதிராச வளநாட்டிலிருந்த வெண்ணெய் யூர் நாட்டின் திருச்சிற்றம்பலம் உடையார் கோயிலுக்குரிய தேவதான ஊரின் பெயர் குலோத்துங்கசோழ சதுர்வேதிமங்கலம் (பஞ்சவன்மா தேவி). அந்த ஊரின் பெருங்குடி பெருமக்களுக்குச் சொந்தமான கால்செய்[ய] நிலங்களிலிருந்த உழுகுடியினர், கி. பி. 1176ஆம் ஆண்டு முதல் அளக்க வேண்டிய அடைப்படி கடமையின் (obligation for tenancy) தரத்தை அல்லது கடமை மேனியைக் குறிக்கும் தலைவரி சையைச் (highest grade or rate) சற்றுக் குறைத்ததைப்பற்றி அக் கல் வெட்டுகள் கூறுகின்றன.[218]

வெள்ளாண்மையில் பெருங்குடிமக்களுக்கு அளக்கப்பட்ட பங் காகிய பெருங்குடிப்பற்றும், உழுகுடிமக்களுக்கு அளந்த பங்கும் இவ் வளவுதான் இருக்க வேண்டுமென அதில் மறுவரையறை செய்யப் பட்டது. அதன்படி, தலைவரிசை முறைக்குள் அடங்கா நிலம், அரச னுக்கு நேரடியாக இறை செலுத்திவந்த வெள்ளான்பற்று, சிவன் கோயிலுக்குச் சொந்தமான தேவதானப்பற்று, ஊருக்கு அப்பால் வாழ்ந்துவந்த கீழ்க்குடிமக்களுக்கு விட்ட புறப்பற்று ஆகிய நிலங்களின் உழுகுடிமக்களுக்கு வெள்ளாண்மையில் $^2/_5$ பங்கு தரப்பட்டது. காணி யைக் குடிவாரத்திற்கு எடுத்தவர், அந்த நிலத்தில் ஏர் பூட்டி உழுத வர்க்குத் தந்த குடிவாரத்தாட் கூலியும்கூட அப் பங்கில் அடங்கும். காராண்மை உரிமையுடன் காணியை நேரடியாக உழுது விதைத்து வந்த பெருங்குடிப்பற்றாக இருப்பின், கூலியாட்களுக்குத் தந்த உடன் வாரத்து ஆட்கூலியும் சேர்த்து வெள்ளாண்மையில் $^1/_3$ பங்கை உழுகுடி

[ய] கால்வாய்ப் பாசனம்பெற்ற நிலம்.

www.tamilarangam.net



மக்களுக்குக் கீழ்வாரமாகத் தந்தனர். ஏற்றப்புரவால் நீர்ப்பாசனம் பெற்ற காணிகளில் கூலி உள்ளிட்ட குடிவாரம், அவ் வெள்ளாண்மையில் ½ பங்கு என்றிருந்தது. ஆற்றுப்புரவு, கால்செய்ப் பகுதிகளில் ஒரு மா நிலத்துக்கு இவ்வளவு எனப் பெருங்குடியினரே விதை நெல்லைத் தர வேண்டும். பயிர்க்காலத்திற்குப் பிறகு நிலப்பாழாக உழாது கிடந்த காணியில் எள்ளும் பாசிப் பயறும் விளைவித்தால், விளைச்சலில் பாதிக்குப் பாதி மேல்வாரமாகவும் கீழ்வாரமாகவும் பங்கிட்டுக்கொள்ள வேண்டும். அரசுக் கருவூலத்திற்கு எடுத்துச்செல்லப்படும் மேல்வாரக் கார் நெல் பங்கை ஏற்றிச் செல்லும் வண்டிச் செலவைப் பெருங்குடிமக்களே ஏற்க வேண்டும். பெரும்பயிராகிய செந்நெல்லைக் கொண்டு வர ஆகும் வண்டிச்செலவில் பாதியைப் பெருங்குடிமக்கள் தர வேண்டும். புன்செய் நிலங்களுக்கான கடமையும்கூட அவ்வாறே குறைக்கப்பட்டது.

காணிக்கடனைத் தண்ட வரும் அரசு அதிகாரிகள் குடியான வரின் வீட்டுக்குள் நுழையவோ, கடுஞ்சொற்களை ஆளவோ, துன்புறுத்தவோ கூடாது. காணிக்கடனைக் கட்டத் தவறியவர்களையும் நிலுவை வைத்திருப்போரையும் அரசு அதிகாரிகளுக்குக் காட்ட வேண்டும். ஒட்டுமொத்தமாக எல்லார்மீதும் கூட்டுத் தண்டம் விதிக்கக் கூடாது. தன்னிடம் அடிமையாயிருந்த பெண் ஒருத்தியை மணந்தவன் இறந்துபட்டால், அவனது காணிகளையும் கொத்தடிமைகளையும் தனி நகைநட்டுகளையும் மாடுகளையும் கன்றுகளையும் கொத்தடிமையான மணவாட்டியையும் அவள் வழியாக அவனுக்குப் பிறந்த மக்களையும் அந் நிலவுடையாரின் மகன்தான் பேண வேண்டும். பிராமணர்கள், ஏர் பூட்டி எருது பூட்டி நிலத்தை உழக் கூடாது. (வெறுமர், அரசும் போன்ற) சில வகைச் சிறப்புகளைப் பணிமக்கள் பெற முடியாது. காவிதிகள், குயவர்கள், உவச்சர், அம்பட்டர் ஆகியோர் குடுமி வைக்கக் கூடாது. நல்லது கெட்டது நேரும்போது பேரிகை முழக்கக் கூடாது. அடிமைகளை வைத்திருக்கக் கூடாது. அகல் விளக்கையும் மண்பாண்டங்களையும் படைத்தளிக்கும் குயவர்கள், உணவும் உடையும் மட்டுமே கூலியாகப் பெற வேண்டும். வளர்க்கச் சொல்லிப் பணித்தாலன்றி, பணிமக்கள் யாரும் ஆடு மாடுகளை வளர்க்கக் கூடாது. இந்த நெறிகளை மீறும் எவரும், அரசனின் திருவாணையை மீறிய குற்றத்தை இழைத்தவராக வைத்துத் தண்டிக்கப்படுவார். திருக்கருகாவூர்க் கல்வெட்டு, இவ்வாறெல்லாம் வரையறுத்தது.[219]

### ஊர் ஊராகப் படர்ந்த வடுக பட்டர்!

திருக்கருகாவூர்க் கல்வெட்டுகளில் வரும் கவுணியன் கேசவ பட்டன், பாரத்வாஜி பஞ்சநெதிவாணர், திருவெண்காடு பட்டன், மகாதேவ பட்டன், ஸ்ரீஉருத்திர பட்டன், நாயக பட்டன், தாமோதர

www.tamilarangam.net



பட்டன், கவுணியன் குஞ்சிதபாதம் சுவேதவனவாச பட்டன், குமார கிருஷ்ண பட்டன், தட்சிணாமூர்த்தி பட்டன் ஸோமயாஜி, சீதர பட்டன், யக்ஞமூர்த்தி பட்டன், திருவெண்காடு பட்டன், கனஅத்தி கோவிந்த பட்டன், சீராம பட்டன், பிச்சதேவ பட்டன் முதலான பெயர்கள் யாவும் அந்தப் பிரமதேயத்தில் வடுகப் பிராமணரே — குறிப்பாகக் கன்னடப் பிராமணரே — வந்தேறிகளாய் வாழ்ந்துவந்தனர் என்பதைக் காட்டுகின்றன.[220]

திருவாலிநாட்டிலிருந்த எதிரிலிச்சோழச் சதுர்வேதிமங்கலமான திருவாலி என்னும் ஊரின் பிராமணப் பெருங்குடிமக்களுக்கும் சிறுகிளை, குமாரமங்கலம் உள்ளிட்ட ஊர்களைச் சேர்ந்த வெள்ளாள உழுகுடிமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாட்டை ஒத்தவையே அத் திருக்கருகாவூர்க் கல்வெட்டுகள்.[221]

காணிகளை உழவடைக்கு எடுப்பதற்கான நெறிகளும், விளைப்பு உறவுகளும் என்றென்றும் மாறாமல் மருவாமல் அப்படியே நீடித்தன என்னும் கதையை இது போன்ற உடன்படிக்கைகள் பொய்யாக்குகின்றன. வடுக வந்தேறி ஆட்சிகளின் போது அவை அவ்வப்போது மாறிவந்தன வென்பதையே அவை யாவும் புலப்படுத்துகின்றன. குறிப்பாக, கி. பி. 12ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் நாட்டுப்புற விளைப்புறவுகளில் ஏற்பட்ட நெருக்கடிகளையும் குழப்பங்களையும் காட்டுகின்றன.

மக்களின் மீதான வரிச்சுமை ஏறுமுகத்தில் இருந்த போதிலும், தேவதான நிலங்களின் பெயரில் கட்ட வேண்டியிருந்த காணிக் கடனை மட்டும் வடுகச் சோழர்கள் குறைத்தனர். திருவிடைகுலம் உடையார் கோயிலின் தேவதான நிலங்களுக்கு நெல்லாகக் கட்டப்பட்டுவந்த கடமை, கி. பி. 1192-93ஆம் ஆண்டில் 40% அளவுக்குக் குறைக்கப்பட்டது. அஃதாவது, அதுவரை 10 கலம் நெல் கடமையாக அளக்கப்பட்டு வந்ததை 6 கலமாகக் குறைத்தனர். இவ்வாறு குறைக்கப்பட்ட கடமையின் அளவைத் தழுவி அந்தராயமும்கூடக் குறைக்கப்பட்டது.[222]

### வந்தேறிகளால் வந்த பஞ்சங்கள்

சோழநாட்டையே கைப்பற்றிய கன்னட வந்தேறிகளின் சுரண்டல் ஆட்சிகளால் தமிழகத்தில் பஞ்சங்கள் பல தோன்றின; வேளாண்மை கெட்டது. வரிச்சுமை தாங்கமாட்டாத அளவுக்கு உயர்ந்தமையால், தமிழ் உழவர்குடியினர் ஊரைவிட்டே ஓடலாயினர். இந்நிலை 12ஆம் நூற்றாண்டு முழுவதும் — 13ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரையிலும் — நீடித்தது. கி. பி. 13ஆம் நூற்றாண்டு வரையில் அவ் வடுகச் சோழரால் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. சோழ-பாண்டியப் போர்களினால், மூன்றாம் குலோத்துங்கனின் காலத்தில் வடுகச் சோழர்கள் வலிமை இழந்தனர்.

www.tamilarangam.net



வந்தேறிகளின் சுரண்டல்களால் கி. பி. 1201ஆம் ஆண்டில் தோன்றிய பெரும் பஞ்சத்தின்போது, திருப்புறம்பியத்தில் ஒரு காசுக்கு 3 நாழி நெல் மட்டுமே விற்றது. கி. பி. 1115இல் ஒரு காசுக்கு 13 கலம் நெல் என நீடாமங்கலத்தில் விற்ற நிலைமையுடன் அதை ஒப்பிட்டு, அப் பஞ்சத்தின் கொடுமையை அறியலாம்.[223] மூன்றாம் குலோத்துங்கனின் காலத்தில் (கி. பி. 1178–1216) பெரும் வெள்ளத்தின் காரணமாகத் தொண்டைநாட்டில் ஒரு பஞ்சம் வந்து பன்னிரு ஆண்டுகள் (கி. பி. 1190–1202) வரை நீடித்தது. இந்தப் பஞ்சத்தின்போது காசுக்கு ஓர் உழக்கு அரிசி விற்றதாகக் கல்வெட்டுகள் பகர்கின்றன.[224] கி. பி. 1202 ஆம் ஆண்டில் திருவண்ணாமலையில் ஒரு காசுக்கு ¼ படி நெல் விற்றது. இதனால், குழந்தைகள் பல மடிந்தன.[225] இந்தப் பஞ்சக்காலத்திலும் மூன்றாம் இராசராசனின் ஆட்சியின்போது (கி. பி. 1244), வாலிகண்டபுரத்தில் கீழ்க்குடிகளும் உழுகுடிகளுமாகிய தமிழர்கள் வந்தேறி வடுகப் பிராமணர்க்கு அகர வினியோகம் என்னும் பங்கைக் கட்ட வேண்டியிருந்தது.[226]

## நிலம் விற்றுக் கடன்கட்டிய கடவுள்!

இந் நிலையில், கி. பி. 1200 முதல் 1206 வரையில் வெள்ளாண்மை செய்யப்பட்ட நிலத்தில் பாதியை மட்டுமே கணக்கில் கொண்டு, குடிமை தண்டப்பட்டது. கி. பி. 1207ஆம் ஆண்டில் வருவாய்த்துறை அதிகாரிகள் அச் சலுகையை நீட்டிக்க மறுத்தனர். இதனால், மக்கள் சோழ மன்னனிடம் சென்று மன்றாடவே, அவன் அச் சலுகையை நீட்டித்தான்.[227] காணிக்கடனில் 40% அளவுக்குத் தள்ளுபடி இருந்தும், மக்களால் அக் காணிக்கடனைச் செலுத்த முடியவில்லை. அந்த அளவுக்குப் பொருளியல் வீழ்ச்சியுற்றுக் கிடந்தது. சாளுவன்குப்பத்து முருகன் (சுப்பிரமணியர்) கோயில் காணிக்கடனைக் கட்ட இயலாமல் கி. பி. 1215இல் ஒரு நிலத்தை விற்றுக் காணிக்கடன் கட்டியது.[228] இது, அக் காலத்தில் விளங்கிய சீர்கேட்டின் ஆழத்தையும் அகலத்தையும் காட்டும். வேளான்குடியினர்மீது பொன்வரி, அந்தராயம், கோயில் தமர்பேறு முதலான கூடுதல் வரிகளைச் சுமத்தியதால், கி. பி. 1258-59ஆம் ஆண்டுகளில் பட்டுக்கோட்டையில் கோயில் நிலங்கள் உட்படக் காணிகள் பல பயிரிடப்படாது போயின. களப்பாளன் என்னும் கன்னட வந்தேறி நாடாள்வான் இந்தக் கூடுதல் வரிச் சுமையைத் தளர்த்திய வரையில், நிலைமை மிகவும் சீர்கெட்டுக் கிடந்தது.[229]

இடையில், பயிரிட முடியாத நிலங்களைத் திருத்திப் பயிர்நிலங்களாக்கும் போக்கும் வலுப்பெற்றது. திருத்திய பாழ்நிலங்களில் புதிய புதிய குடியானவர் தெருக்களைத் தோற்றுவிக்க அரசும் இணங்கியது. அச்சுதமங்கலத்துக் கோயில் அதிகாரிகளுக்கும் உள்குடிகளுக்கும் இடையில் கி. பி. 1200ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஓர் உடன்படிக்கை, தரமிலி நிலங்கள் என்று வகை செய்யப்பட்ட கோயில் நிலத்தில், அவ் வூரின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள்குடிகள் ஒரு தெருவையே உருவாக்கிக் கொள்ள வழிசெய்தது. காணியாளரும் பணியாளரும் புதிய தெருவில் வீடு கட்டிக்கொள்ளும் செலவை அக் கோயிலே ஏற்றுக்கொண்டது. இது போன்று, வீட்டு மனைகளின் மீதான வரியைக் குறைக்க அரசனும் இணங்கினான்.[230]

## கலகத்தை அடக்கக் கன்னடக் கூலிப்படை!

இந் நிலையில், முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (கி. பி. 1216–38) சோழநாட்டின்மீது படையெடுத்து, கி. பி. 1219 ஆம் ஆண்டில் அந் நாட்டைப் பிடித்தான். தன் தந்தையான சடையவர்மன் குலசேகரனைக் கி. பி. 1202ஆம் ஆண்டில் தோற்கடித்த மூன்றாம் குலோத்துங்கன் என்னும் வடுகச் சோழன் மதுரையில் செய்த அட்டூழியங்களுக்குப் பழிவாங்கும் நோக்கில், தஞ்சையையும் உறையூரையும் அழித்தான். பின்னர், அச் சோழ நாட்டைத் தன்னிடம் தோற்ற மூன்றாம் இராசராசனிடமே மீண்டும் ஒப்படைத்துவிட்டான். கன்னடனான ஒய்சள அரசன் இரண்டாம் பல்லாளனும் அவனுடைய மகனான வீரநரசிம்மனும் ஒய்சள அரசியை மணந்திருந்த அவ் வடுகச் சோழனுக்குத் துணைபுரிய முன்வந்த சூழலைக் கருதியே, அவன் அவ்வாறு செய்தான்.

இந்தச் சூழலில், சோழநாட்டில் கலகங்கள் வெடித்தன. 1221ஆம் ஆண்டில் வாணகோவரையன் சோழனுக்கு எதிராகக் கலகம் செய்தான். அவனையடுத்துக் கோப்பெருஞ்சிங்கனும் கலகம் செய்தான். இந்தக் கலகங்களையெல்லாம் ஒய்சளரின் கன்னடப்படைகள் அடக்கின. கலகங்களுக்கு ஆளான நாடுகளிலிருந்த மக்கள், பிறநாடுகளுக்கு இடம்பெயர்ந்தனர். அங்கும்கூட அவர்கள் பெரும் துன்பங்களுக்கு ஆளாயினர்.

மூன்றாம் இராசராசனின் காலத்தில், காணிக்கடன் நிலுவைகளைக் கட்ட இயலாத உழவர்குடிகள், தத்தம் காணிகளையும் காணிப்பேறுகளையும் பகுதி பகுதியாகவோ முழுமையாகவோ விற்கத் தலைப்படுவது கட்டுக்கடங்காமல் போனது. இயற்கையின் அழிவுகள் வேறு வந்து நிலைமையை இன்னும் மோசமாக்கின. பயிர்த்தொழில் முடங்கியது. இப் பயிர்த் தொழிலை மீட்க வேண்டி, அரசனுக்குக் கட்டிய கடமையைக் குறைக்க வேண்டியதாயிற்று. இந் நிலையில், வேற்றூர் ஆட்களைக் கொண்டுவந்து அமர்த்தி அவர்களைக் கீழ்க்குடிகளாக்கினர். இதனால், அரசு அதிகாரிகளும் நாடாள்வார்கள் சிலரும் நிலைமையை விரைவில் கட்டுக்குள் கொண்டுவர வேண்டுமெனச் சோழ மன்னனிடம் உரத்த குரலெழுப்பத் தொடங்கினர்.

மூன்றாம் இராசராசனின் காலத்தில் குடியானவர்மீது தாங்கொணா அளவுக்கு வரிச்சுமைகளை ஏற்றினர். இதனால், தேவதான, பிரமதேய நிலங்களை விற்று அயற்படுத்தக் கூடாதென நெடுங்

www.tamilarangam.net



காலத் தடையிருந்தும், அத் தேவதான, பிரமதேய நிலங்களை விற்பதன் வாயிலாகவே வடுக அரசனுக்குக் கட்ட வேண்டிய நிலுவைகளைக் கட்டி அடைக்க முடிந்தது. அம் மூன்றாம் இராசராசனின் காலத்தில், தொடையூர் என்னும் ஊரவையின் உறுப்பினர்களாயிருந்த மூன்று பிராமணர்கள் 60 வேலி புன்செய் நிலத்தைச் சுந்தர பாண்டியனிடம் பணிபுரிந்துவந்த மண்டல முதலிக்கு (ஆளுநனுக்கு) விற்றனர். விழுப் பரையன் என்னும் பட்டத்தையுடைய இன்னோர் உயர்அதிகாரிக்கு அதே ஊரார், ஊர்நத்தம், நீர்நிலம் (நன்செய்), புன்செய் அடங்கிய 40 வேலி நிலத்தை விற்றனர்.[231] இவ் விரண்டும், வரிச்சுமையால் வந்த நெருக்கடியால் அகரகாரத்துக் காணிகள் விற்கப்பட்டதைக் காட்டும் சான்றுகளாகும்.

## கிளர்ந்த உழவர்க்குக் கிடைத்த சலுகைகள்

பெருங்குடிகளாகிய காணியாளர்கள், குடிமையைக் கண்டபடி உயர்த்தி, அதைக் கறக்க உழுகுடிகள்மீது அவ்வப்போது வன்முறையை ஆண்டுவந்தனர். இக் கொடுமையை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்த உழு குடிகள், தங்களது வறுமை நிலையையும் தாங்கள் படும் வன்முறைக் கொடுமைகளையும்பற்றிச் சொல்லிப் புலம்பியதைக் கேட்ட மூன்றாம் இராசராசன், தனது 16வது ஆட்சியாண்டில் (கி. பி. 1232) சில சலுகை களை வழங்கினான். அவற்றைக் குலோத்துங்கசோழ தனிநாயக சதுர் வேதிமங்கலத்து ஊர்ப் பேரவையும் ஊரவையும் தலைஞாயிற்றுக் கோயிலில் கல்லில் வெட்டிவைக்கச் செய்தான்.[232]

அதே ஆண்டில், திருவிந்தளூர்நாட்டுச் சிறீ இராசசிகாமணி சதுர்வேதிமங்கலம் என்னும் அகரத்தைச் சேர்ந்த பெருங்குடிப் பெரு மக்களும் பிறரும் கூடி ஓர் உடன்பாட்டுக்கு வந்தனர். அதை மூன்று நாடுகளைச் சேர்ந்த நாட்டவர்க்கும் குடும்பர்களுக்கும் (மேல்வாரம் பெற்றுவந்த பெருங்குடியினரான) கரையர்க்கும் அறிவித்தனர். கோப் பெருஞ்சிங்கன் சோழநாட்டைப் பறித்தபோது குடியானவர்க்கு நேர்ந்த துன்பங்களை அதன் வழியாகக் களைய முயன்றனர். அந்த உடன் பாட்டின்படி, கீழ்க்குடிகளும் உழுகுடிகளுமான குடியானவர்கள் பெருங்குடிமக்களுக்கு 22 காசு குடிமை கட்ட வேண்டும். இந்தத் தொகையை அரசனின் அதிகாரிகள் வாங்கக் கூடாது. காளைகளை ஏரில் பூட்டுபவர்க்கும், களத்தில் நெல்லடிக்க மாடுகளைக் கொண்டு வருபவர்க்கும் (கட்டியடிப்பாருக்கும் புனைப்பாருக்கும்) இரண்டு முறைக்கு மேல் நெல்லளப்பு இல்லை. நெல்லையோ பாசிப்பயற் றையோ பெருங்குடிமக்கள் களத்தில் சென்று அளக்கலாம். ஆனால், கீழ்க்குடிகளும் உழுகுடிகளும் அந்தப் பெருங்குடிமக்களின் இருப்பிடங் களுக்குக் கொண்டு சென்று சேர்க்க வேண்டும். குடிமையைக் காசாகக் கட்டுவதற்கு மாறாக நெல்லாகக் கட்டினால், குடிமைக்காசாக 22 காசுகளை வாங்க கூடாது. நெட்டாள் என்னும் மேற்பார்வையாளரை

www.tamilarangam.net



ஒரு மடக்கு மா (Standard *Mâ*) பயிருக்கு ஓர் ஆள் என்னும் மேனியில் பெருமக்கள் அமர்த்த வேண்டும். பெருங்குடிமக்கள் கடமையைக் கட்டத் தவறினால், கீழ்க்குடிகளும் உழுகுடிகளும் அதற்குப் பொறுப் பாக மாட்டார்கள். பயிரிடப்படாது கிடந்த தரிசு நிலத்தில் பயிரிடும் கீழ்க்குடிகளுக்கும் உழுகுடிகளுக்கும் வெள்ளாண்மையில் பாதிப் பங்கைப் பிழைப்புக்கூலியாகத் தர வேண்டும். அரசனின் குதிரைப் படையை ஓம்புவதற்காகக் காசாகக் கட்ட வேண்டிய குதிரைக்காசு என்னும் வரியைப் பெருங்குடிமக்களே செலுத்த வேண்டும். கீழ்க்குடி களோ உழுகுடிகளோ காசு வடிவில் கூலியாகத் தந்த கொடுப்புக் கூலியை மேல்வாரத்திலிருந்து கழித்துக் கொள்ள வேண்டும். எழுத்து வடிவில் ஓலைகளை வாங்கிவரும் தலையாரிக்கு 4 காசுகள் தர வேண்டும். அரச ஊழியர்களுக்கோ படைஞர்களுக்கோ கைத்தளைக் கை கூட்டம் என்னும் வரியைக் கீழ்க்குடிகளும் உழுகுடிகளும் கட்ட வேண்டும்.[233] இவைதாம் அச் சலுகைகள்.

## சோழனிடம் திறை கேட்டவன், வடுகனிடம் திறை கட்டினான்!

மூன்றாம் இராசராசன் பாண்டியனுக்குத் திறை செலுத்த மறுக்கவே, கி. பி. 1238ஆம் ஆண்டில் சுந்தர பாண்டியன் சோழ நாட்டின்மீது மீண்டும் படையெடுத்தான். தோற்றோடிய வடுகச் சோழன் மூன்றாம் இராசராசன் குந்தலநாட்டுக்குச் செல்லும் வழி யில், தெள்ளாற்றில் கோப்பெருஞ்சோழன் அவனைத் தளைப்படுத்தி னான். சேந்தன்மங்கலம் கோட்டையில் அவனைச் சிறை வைத்தான். கொப்பெருஞ்சிங்கன்மீது ஒய்சள வீரநரசிம்மன் படையெடுத்து, அவ் வடுகச் சோழனை மீட்டான். இதனால், பாண்டியன் அந்தக் கன்னட னுக்குத் திறை செலுத்தலானான். ஊரைவிட்டே ஓடிப்போன சோழ நாட்டுக் குடிகளை அந்தப் பாண்டியன் முதலாம் மாறவர்மன் குல சேகரன் (1268-1311), தத்தம் சொந்த ஊர்களில் மீண்டும் குடியேறச் செய்தான்.

கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் (கி. பி. 1259) சிதம்பரத்தில் காசுக்கு 15 கலம் நெல் விற்கப்பட்டது. வடுகச் சோழரின் காலத்தில் விளங்கிய காசுகளின் மதிப்புகள் மிகவும் வேறுபட்டன. காசின் மதிப்பு படிப்படியாக வீழ்ந்துவந்த நிலையிலும், ஒரு காசுக்கு விற்ற நெல்லின் அளவு மெல்லக் கூடிவந்தது ஏன் என்பது ஒரு பெரிய புதிராகவே உள்ளதென்று ஆய்ந்தோர் கூறுவர்.[234]

மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன், மூன்றாம் இராசேந்திரன் ஆகியோரின் காலங்களிலும் குடிமுறை உறவுகளில் மாற்றங்கள் நிகழ்ந்தன. மூன்றாம் இராசராசன் வலுவற்றவனாக இருந்தும் — கோப்பெருஞ்சிங்கனின் தலைநகரில் அவன் நெடுங்காலம் சிறைபட்டுக் கிடந்ததும் — நாட்டில் பெரிய அரசியல் குழப்பங்களை

www.tamilarangam.net



விளைவித்தன. இந் நிலையில், அரசக்குடும்பத்தினரும் நாடாள்வார்களும் தான்தோன்றித்தனமாகக் குடியானவரை மேன்மேலும் பிழிந்தெடுத்தனர். காவிரியாற்றுக்கு வடக்கே இருந்த காணிகளை மேன்மேலும் கைப்பற்றினர்.

## வரிசையும் வாடாக்கடனும்

உழுகுடிகளுக்கும் பெருங்குடிமக்களுக்கும் இடையிலான பங்கீட்டு உறவுகளும் கட்பாடுகளும்கூடத் திருத்தியமைக்கப்பட்டன.

இரு வகையான குடியுடன்படிக்கைகள் வழக்கில் இருந்தன. பயிர்த் தரப்படி அமைந்த வரிசை என்பது அவற்றில் ஒன்றாகும். அடையோலை என்னும் எழுத்துவழி உடன்படிக்கையின் அடிப்படையில், பயிர் வகைக்கு ஏற்பப் புள்ளி பார்த்துக்'' கடமையை மதிப்பிடுவதே வரிசை முறையாகும். விளைந்த பயிரின் அளவை வைத்துப் பெருங்குடிமக்களின் பங்காகிய மீயாட்சி (மேல்வாரம்) அளக்கப்பட்டது. வெள்ளாண்மையை இங்குக் கண்கூடாகக் களத்திலேயே மதிப்பிட்டனர். அளவு மாறாது நிலைகுத்திய விழுக்காட்டில் உடைவாரத்தை (மொத்த வெள்ளாண்மையை)ப் பங்கிட்டபோது கட்டிவந்த காணிக் கடனே 'வாடாக் கடன்' அல்லது 'நின்ற இறை'. ஆண்டுதோறும் அளக்கப்படும் மீயாட்சி (மேல்வார) அளவு இங்கு மாறவே மாறாது. அவ் வரிசை முறையின் எதிர்மறையே இந்த வாடாக்கடன். இரண்டாவது வகையான இந்த வாடாக்கடன் உடன்படிக்கையின் கீழும்கூட, வெள்ளாண்மையைக் களத்திலேயே மதிப்பிடவும் மேற்பார்வையிடவும் செய்தனர். வாடாக்கடன் முறையின்கீழ், உழுகுடி மக்களுக்கு வெள்ளாண்மையில் ¼ பங்கு கீழ்வாரமாகத் தரப்பட்டது.[235]

வரிசை நிலங்களின் மீதான குடிமையும், வீட்டுமனை மீதான மனைவரிவகையும் காசாகச் செலுத்தப்பட்டன. பின்னர், குடிமைப் பணம் வாங்குவது விலக்கிக் கொள்ளப்பட்டது. கூடுதலான பயிர்களை விளைவித்தால் ('கூட்டும் வர்க்கத்துக்குக்') கூடுதல் வரி தண்டப்பட்டது. ஒரு மா அளவு காணிக்கு இவ்வளவு என்னும் மாப்பணம், வீட்டுமனைக்கான மனைப்பணம், காசு மதிப்பு மாற்றத்திற்கான பணவட்டம், ஒரு வேலி நிலத்திற்கு இவ்வளவு என்னும் வேலிப் பணம், நாடு விதித்த நாட்டாட்சி போன்ற வரிகள் உழுகுடிகளிடமிருந்து கறக்கப்பட்டன. விதை நெல்லைப் பெருங்குடிமக்களே தந்திருந்தால், வெள்ளாண்மையிலிருந்து அது திரும்பப் பெறப்பட்டது. நெல்லைக் குற்றி உமியெடுத்த பின்னர் மீயாட்சி (மேல்வாரம்) கட்டினால், அந் நெல்லைக் குற்றுவதற்கு ஆன செலவைப் பெருங்குடி மக்கள் தர வேண்டியதாயிற்று. களத்தில் நெல்லை அடிக்கையில் அதைப் பார்வையிடுவதற்கெனக் கட்டிய நெட்டாள்கூலியை உழுகுடிகளே தந்ததோடு, அந் நெட்டாளுக்குச் சோறிடவும் வேண்டியிருந்தது. புடைபெயர்ந்து செல்லும் படையினருக்குச் செலவிடவும் சோறிடவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனத் தண்டப்பட்ட படையில் ஆளவழி என்னும் செலவை உழு குடியினர்மீது திணிக்கக் கூடாது என்று முடிவானது.

ஐந்து பிரமதேயத்தினருக்கும் புறக்கரம்பைநாட்டு நாட்டாருக்கும் உழுகுடிமக்களுக்கும் இடையில் மன்னார்குடி வட்டத்திலிருந்த திருக் களரில் இந்த உடன்பாடு எட்டப்பட்டது. இந்த உடன்படிக்கை, கி. பி. 1311-12ஆம் ஆண்டில் ஏற்பட்டது.[236]

## பாண்டியநாட்டில் அகாரகாரம்

பல்லவர் காலப் பாண்டியர்களில், கோச்சடையன் இரணதீரன் (கி. பி. 700–30) பல்லவ இளவரசியை மணந்தான். இக் கோச்சடை யனின் மகனான முதல் இராசசிம்மன் என்னும் அரிகேசரி பராங்குச மாறவர்மன் (கி. பி. 730–65) கங்க வடுகனான பராங்குசனின் மகளான பூசுந்தரியை மணந்தான். அந்தப் பூசுந்தரிக்கும் முதல் இராசசிம்மனுக் கும் பிறந்தவனே முதல் வரகுணன் எனப்படும் நெடுஞ்சடைய பராந் தகன் (கி. பி. 765–90). இவனுடைய மகனான சீமாறன் சீவல்லபன் (கி. பி. 835–62) தெலுங்குச் சோழ இளவரசியான அக்கள நிம்மடியை மணந்தான். இவர்களுக்குப் பிறந்தவனே பராந்தக வீரநாராயணன் (கி. பி. 880–900).

பல்லவர் காலப் பாண்டியர் குடியிலும்கூட வடுகக் கலப்பு ஏற்பட்டுவிட்டதையே இந்த மனைவினைச் செய்திகள் காட்டுகின்றன.

### பாண்டியநாட்டில் வடுகக் குடியேற்றங்கள்!

பல்லவர் காலத்துப் பாண்டியநாட்டிலும்கூடப் பிராமண அகரங்கள் உருவாக்கப்பட்டன. ஆசிநாட்டுத் திருமங்கலத்தைப் பன்னிரு பிராமணர்க்கு வழங்கிய பாண்டியன் கடுங்கோன் (கி. பி. 575–600), அதை ஒரு பிரமதேயமாக்கியதே அதற்கான ஒரு சான்றாகும்.[237] அக்காலப் பாண்டிய நாட்டிலும்கூடப் பிராமணரல்லாதாரின் ஊர் களெல்லாம் 'வெள்ளான்வகை ஊர்கள்' என்றே அழைக்கப்பட்டன.

நெடுஞ்சடைய பராந்தகனின் (கி. பி. 765–90) அமைச்சர்களில் ஒருவனான மாறன் காரி என்பான் மதுரைக்கு அருகிலான ஆனை மலையில் ஒரு பெருமாள் கோயிலைக் கட்டி, அக் கோயிலையொட்டி ஒரு பிராமண அகரத்தை அமைத்தான்.[238]

பாண்டியன் பராந்தக வீரநாராயணன் காலத்திய தளவாய்ப் புரச் செப்பேடு, அப் பாண்டியனை

"எண்ணிறந்த பிரமதேயமும் எண்ணிறந்த தேவதானமும்
எண்ணிறந்த தடாகங்களும் இருநிலத்தி லியற்றுவித்தும்"[239]

எனக் குறிப்பதால், பல்லவர்களால் பாண்டியர்கள் வடுகப் பிராமணி யத்திடம் முற்றாக அடிமையுண்ட நிலை விளங்கும். இவன் தோற்று வித்த சோமாசிக்குறிச்சி, மதுரகரநல்லூர், திருமங்கலம் ஆகிய பிராமண

www.tamilarangam.net



அகரங்களில் சிரீநாராயண கேசவன், சாண்டில்ய கோத்திரத்து ஏக சந்தி, காத்தியாயன கோத்திரத்துச் சிரீவல்லபமங்கலத்துக் கணசுவாமி பட்டன், யோகேசுவர பட்டன், திருவடிச் சோமாசி, சிரீமாதவன், சிரீ மாதவ சரணேசுவரன் போன்ற வடுகப் பிராமணரே குடியமர்த்தப் பட்டதை அவனது செப்பேடுகள் மிகத் தெளிவாகக் காட்டுகின்றன. குறிப்பாக, தெலுங்குப் பிராமணர் கடைப்பிடிக்கும் 'பௌதாயன சூத் திரத்' தின்படி ஒழுகிய பிராமணரின் பெயர்கள் அச் செப்பேடுகளில் வருகின்றன.* இது போக, 'தமிழில் ஆரியம் கலந்து எழுதும் போக்கை ஊக்குவித்தவன்' என்னும் பொருளமைய "ஆரியம்விராய்த் தமிழ் தொடுத்த"[241] என வந்தேறி வடுகர்கள் அச் செப்பேட்டின் வழியாக

---

* "சோமாசிக் குறிச்சியிது தோல்லை மேற்படி கிடந்ததனை
ஸோமபான மநோசுத்தராகிய காடகசோம யாஜியார்க்கு
யாகபோக மதுவாக எழிற்செப்பேட்டொடுகுடுத்தனன்
ஆகியஇவ் வூரிரண்டின் செப்பேடு மறக்கேட்டில்
இழந்துபோ யினவென்றும் ஏதமில்சோமாசி குறிச்சிச்
செழுந்தரைய நிலத்துப்படும் நிலத்தைக் கடன்றிருக்கைய
கீழ்வன மணிதருபெரு நான்கெல்லை இட்டுக்கொண்டு
மற்றதனை மதுரகர நல்லூரென்று பேரிட்டுக்
குடிநிலனா கக்கொண்ட நிலமதுவும் அவ...கூடி
நிலனாகேய்ந் தவிரயிது தொம்டுசோ மாசிகுறிச்சி
மேலைபுரவேற்ப பெ(று)வதென்றும் சொல்லியவூரிரண்டுந் தம்மி
லெல்லைகலந்து கிடக்குமாதலில் ஒன்றாக வுதவுமென்றும்
வாசநாள் மலர்கமழ்பொழில் லாசிநாட்டுள்...மாகிய
கருவமைந்த கனகமாளிகைத் திருமங்கல நகர்த்தோன்ற
சோமாசிகுறிச்சில் என்னும் காமர்வண் பதிகாவலன்
வடிவமைவான கோத்திரத்துப் பௌதாயந சூத்திரத்துக்
குடியினனாக வெளிப்பட்டுக் குணகணங்கட் கிடமாகி
மறைநான்கின் துறைபோகிய மாயானமவி பட்டற்குச்
சிறுவனாகிய பெருந்தகைஒன் திசைமுகன்வெளிப் பட்டனையன்
தர்ம வத்சலன்
மாய்நாராயணபட்டர் மஹாபந்தி வயிறுயிர்த்த
சேயான திருத்தகைஒன் ஸ்ரீநாராயணங் கேசவன்
கல்விக்கடல் கரைகண்டு மக்ஷத்தியான மதமுணர்ந்து
சொல்வித்தகந் தனதாக்கி சத்சீலா சாரனாகி
மீனவன் வீரநாணற்கு விஸ்வாச குணங்கட்
கான தன்மையை னாதலில்லரு ளறிந்துவிண் ணப்பஞ்செய்
மதுரதர நாணுஎனும் வளம்பதிசோ மாசிகுறிச்சி
அதன்மேலே புரவேற்றி ஆங்கதுந்திரு மங்கலமும்
உடன்கூடப் பிடிசூழ்வித் துலகறியக் குடுத்தருளினன்"
"ஈண்டிய பெரும்புகழேயுஞ் சாண்டில்ய கோத்திரத்து
எண்ணார்புகழ் ஏகசந்தி காத்யாயன கோத்திரத்து
வரிவண்டு மதுநுகர்பொழிற் சிரீவல்லப மங்கலத்துச்
செப்பரிய செழுஞ்செல்வத் துப்பமவிரால் மேதக்க
கலையில் கனஸ்வாமிபட்டற்கு தற்பெரு மாமதலை

www.tamilarangam.net



அப் பாண்டியனை ஏத்தும் அளவுக்கு மிக இழிந்த வடுகக் கைக்கூலி யாக அவன் விளங்கினான்.

பாண்டியன் மூன்றாம் இராசசிம்மன் (கி. பி. 900–20) எண்ணிறந்த பிரமதேயங்களையும் தேவதானங்களையும் பள்ளிச்சந்தங்களையும் எத் திசையிலும் நிறுவினான். அப் பாண்டியனின் 16ஆம் ஆட்சியாண்டில் சின்னமனூர் என்னும் நற்செய்கைப் புத்தூரை மாந்தர கவுரவமங்கலம் என்னும் பெயரில் பிராமணன் ஒருவனுக்குக் கொடையாகத் தந்தான் எனச் சின்னமனூர்ச் செப்பேடுகள் பகர்கின்றன.[242] இப் பாண்டியனின் காலத்தில்தான் மாபாரதம் தமிழ்ப்படுத்தப்பட்டதாம்.[$]

முதல் சடையவர்மன் குலசேகர பாண்டியன் (கி. பி. 1190–1218) "அறநெறி வளர மனுநெறி திகழ" ஆண்டுவந்ததாகக் கல்வெட்டுகள் குறிப்பிடுவதும் அவ் வழியிலானது.[244]

சகேதபுரி என்னும் ஊரிலிருந்த ஈராயிரத்து எண்மரைத் தமிழ கத்திற்குக் கொண்டுவந்து மதுரை மாவட்டத்து வேம்பற்றூரில் (சங்கதமொழியிலான நிம்பையில்) அவர்களுக்குக் காணியையும் மனை யையும் குலசேகர பாண்டியன் வழங்கியதால், அவ்வூர் குலசேகரசதுர் வேதிமங்கலம் ஆனது.[245]

பல்லவர் கால ஹிரஹதள்ளி, காசக்குடி, தண்டன்தோட்டம் செப்பேடுகளெல்லாம், பிரமதேயங்களாக ஊர்களைப் பெற்றோரும் அவர்தம் பிறங்கடையினரும் மட்டுமே அவற்றின் பயன்களைத் துய்க்க வேண்டுமேயன்றி, அவற்றின் நிலபுலங்களைப் பிறர்க்கு விற்கவோ கொடையாகத் தரவோ கூடாது என வரையறுத்தன.[246]

## பங்குடையார்மக்கள் பிராமணப் பெருங்குடிமக்களே!

கி. பி. 9ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட மானூர்க் கல்வெட்டு, பல்லவர் காலப் பாண்டியரின் நாட்களில் தமிழகத்தில் விளங்கிய ஊராட்சி முறையைப்பற்றி விளக்குகின்ற கல்வெட்டு களிலெல்லாம் மிக முந்தியது. களக்குடிநாட்டு மானநிலை நல்லூர் என்னும் பிரமதேயத்தின் ஊர்ப்பேரவையார் கூடி எடுத்த தீர்மானத் தைப்பற்றி அது கூறுகிறது. பிராமண அறநூல் ஒன்று உட்பட — மந்திரங்களை நன்கு கற்றுத் தேர்ந்தவராய் நன்னடத்தையுள்ள பங்கு டையார்மக்கள் மட்டுமே ஊரின் பேரவையில் உறுப்பினராகும் தகுதி யுடையவர்களாவர். விலை கொடுத்து வாங்கியோ — கொடை

---

உலவுசீர்த்தி யோகேஸ்வர பட்டற்கு விசிஷ்டனாகிய
திருவடிச் சோமாசியென்னுஞ் சீர்மறையோன் மகள்பயந்த
திருமருசீர்ச் சிரீமாதவன் ஸ்ரீமாதவ சரணேஸ்வரன்
வேதவேதாங்களும் விவிதாசாரமும் தன்னொடுபிற
ரோதிக்கேட்டுத் தரப்பெய்த நீரைக்காமா சால்யனாகி
பெருந்தகைப் பிரமதேயமிதற்கு பிரஸஸ்தி செய்தோற்கு"[240]

$ "மகாபாரதந் தமிழ்ப்படுத்து மதுராபுரிச் சங்கம்வைத்தும்"[243]

www.tamilarangam.net



யாகவோ — மனையாள் வழியாகவோ ஒரு பங்கை வைத்திருப்பவரோ, வேதம் மந்திரங்களில் நன்கு தேறி நன்னடத்தையுடையவராய் இருந் தால்தான் ஊரவையின் நடவடிக்கைகளில் பங்கு பெற முடியும். விலை கொடுத்து வாங்கிய பங்கு தன்னிடம் உண்டு என உரிமை கோருபவர் எவரும் முழு வேதத்தையும் கற்றவராகயிருக்க வேண்டும். இது போன்ற தகுதி இல்லாத ஒருவர், ஊர்ப் பேரவையின் உறுப் பினராயினும், அவரால் அவையின் கலந்துரையாடலில் பங்கெடுக்க மட்டுமே இயலுமேயன்றி, ஊரவையின் வாரியங்களுக்குத் தேர்ந் தெடுக்கப்படும் உரிமை இல்லை. இவைதாம் மானூர்க் கல்வெட்டு கூறும் நெறிகளாகும்.[247] இக் கல்வெட்டில் வரும் பங்குடையார் அல்லது பங்குடையார்மக்கள் என்னும் பெயர், பிற்காலச் சோழர்களின் கல் வெட்டுகளில் வரும் பெருங்குடிமக்கள் என்பதற்கு ஈடான பிராமணக் காராண்மையாளரையே குறிக்கும்.

பல்லவர் காலப் பாண்டிய அரசரின் செயலகத்தை எழுத்து மண்டபம் என்றனர். மன்னனின் ஆணைகளை நிறைவேற்றியவர் திருமந்திரஓலை எனப்பட்டார். அவருக்கும் மேலே திருமந்திர ஓலைநாயகம் இருந்தார். அகப்பரிவார முதலிகள் என்போர் அரசன் இட்ட பணிகளைச் செய்து முடித்தனர்.

இரண்டாம் பராந்தகனான சுந்தர சோழன் இரண்டாம் இராச சிம்ம பாண்டியனின் மகனான வீரபாண்டியனோடு போரிட்டு, அவனைக் காட்டுக்குத் துரத்தினான்.

## பாண்டியரின் இறக்கம்
## அகரங்களின் பெருக்கம்

முதல் இராசராசனின் காலத்திலும் முதல் இராசேந்திரனின் காலத்திலும் — அஃதாவது, கி. பி. 985க்கும் 1044க்கும் இடையில் — வளமான பொருநை ஆற்றங்கரைப் பகுதிகளில் வடுகர் வந்து மெல்லக் குடியேறினர். கி. பி. 11ஆம் நூற்றாண்டிற்கும் 13ஆம் நூற்றாண்டிற்கும் இடையில், வைகை ஆற்றங்கரையிலும்கூட இவ் வடுகக் குடியேற்றங்கள் மளமளவெனப் பெருகின. மதுரைக்கு மேற்கிலும் விக்கிரமங்கலத்திலும் கோயில் குருவித்துறையிலும் வடுகச் சோழரான முதல் இராசராசன் காலத்திற்கும் முதல் இராசேந்திரனின் காலத்திற்கும் இடையில் பிரம தேயங்கள் பல தோற்றுவிக்கப்பட்டன.

முதல் இராசராசன் காலத்தில்தான் பாண்டியநாடு வடுகச் சோழரிடம் முற்றாக அடிமைப்பட்டது.[248] அதன் பிறகே, பாண்டிய நாட்டில் பிராமண அகரங்கள் மளமளவெனப் பெருகின. இதற்காகப் புத்தம் புதுக் காணிகளைப் பொருநையாற்றங்கரையிலும் வடுகச் சோழர் தோற்றுவித்தனர். பிரமதேயங்களில் மக்கள்பெருக்கம் கூடியதே அதற்கான முதற்பெரும் காரணமாகும். இது போன்ற புதுக் காணிகள் தோன்றும் போக்குக் கி. பி. 13ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது.[249]

www.tamilarangam.net



வடுகச் சோழரிடம் அடிமைப்பட்டிருந்த பாண்டியநாட்டில் காணிகளைத் திருத்தும் போக்கு சிவகங்கை வட்டத்துக் காளையார் கோயிலின் தெற்கிலிருந்த முடிக்கரையிலிருந்த வறண்டு வானம் பார்த்த மேட்டுநிலங்கள் வரையில் விரிந்தது. அருகிலுள்ள மங்கலம் என்னும் ஊரைச் சேர்ந்த பிராமணர்களுக்குச் சூளாமணிநல்லூர் என்னும் பெயரில் நிலக்கொடையாகத் தரப்பட்ட நிலம், பயிரிடப் படாது முள்காடுகள் மண்டிக் கிடந்தது. அந்த ஊரிலிருந்த ஏரி, பாழடைந்த நிலையில் இருந்தது. இந் நிலையில், ஊர்க் கோயிலைப் பழுதுபார்க்கவும் அதற்கான முதலீட்டுத் தொகையை ஈட்டவும் வேண்டி, அரசு அதிகாரிகள் பிராமணர்கள் சிலரைக் கொண்டுவந்து அவ்வூரில் அவர்களைப் பெருங்குடிமக்களாக அமர்த்தினர்.[250]

பொட்டல் காடுகளாகக் கிடந்த பாண்டியநாட்டு நிலங்களைத் திருத்தி அங்கெல்லாம் காணியாளரையும் உழுகுடிகளையும் குடியமர்த்த விரும்பிய வடுகச் சோழர்கள், அதற்காகக் குடிமைக்கடனை விலக்குவது போன்ற ஊக்கங்களைத் தந்தனர்.

சில ஊர்களில், ஊருக்குப் புறம்பே குடியிருந்த காணியாளரான புறக்குடியினர் கட்டிவந்த புறவரி குறைக்கப்பட்டது. அப் புறக்குடிகளுக்கு ஊருக்குள் மனைக்கட்டுகளையும் ஒதுக்கினர்.[251]

எளிதில் எட்டவியலா மூலைமுடுக்குகள் வரையில் இவ்வாறு நிலத்தைத் திருத்திப் புதுப்புதுக்காணிகளை உருவாக்க வேண்டிய இக்கட்டான நிலையில் கி. பி. 12-13ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாடும் இருந்தது. வடுக வந்தேறிகள் பாண்டியநாட்டில் பெருமளவில் வந்து மொய்த்ததால், அவர்களுக்கெனப் புதிய காணிளைத் தேட வேண்டிய சூழலின் அழுத்தத்தின் காரணமாகவே அது நேர்ந்தது.

### பாண்டியர் மண்ணிலே கன்னட வடுகர்!

முதல் குலோத்துங்கனுக்குக் கீழடங்கித் திறை செலுத்திவந்த சடையவர்மன் சீவல்லபனின் 9வது ஆட்சியாண்டில், நாராயண பட்ட வாசபேயி என்ற கன்னடப் பிராமணனுக்கு நிலக்கோட்டை வட்டத்திலுள்ள கோயில் குருவித்துறையில் ஒரு நிலம் குடிநீங்காக் காராண்மையாகத் தரப்பட்டது. வைகை ஆற்றில் கட்டப்பட்ட ஓர் அணையிலிருந்து வெட்டப்பட்ட பராக்கிரம பாண்டியன் கட்டளை என்னும் கால்வாயால் புரக்கப்பட்ட கால்செய் காணிகளில் ஒன்று, கன்னடப் பிராமண வந்தேறிகளுக்குத் தரப்பட்டது.[252]

அக் கோயில் குருவித்துறையிலிருந்த இன்னொரு காணி, தொண்டைமண்டலத்தைச் சேர்ந்த மாங்காடு என்னும் ஊரைச் சேர்ந்த ஒருவனால் வாங்கிக் கோயிலுக்கு இறையிலியாக்கப்பட்டது. வடுகப் பிராமணரான பட்டர்கள், கோயில் குருவித்துறையிலிருந்த தேவதான நிலங்களில் இவ்வாறெல்லாம் குடிநீக்காக் காராண்மை

www.tamilarangam.net



யாளராக அமர்த்தப் பெற்றனர்.[253] தேவதானங்களாகவும் திருவிடையாட்டங்களாகவும் ஆக்கப்பட்ட தமிழரின் நிலங்களில் கன்னடப் பிராமணர் பலர் குடிநீக்காக் காராண்மையாளராகக் குடியேற்றப்பட்ட மெய்ம்மை இவற்றால் விளங்கும்.

வடுகச் சோழரிடம் அடிமைப்பட்டுக் கிடந்த பாண்டிய நாட்டின் திருப்பாச்சோற்றி, இராசகம்பீரம் முதலான இடங்களில், விக்கிரம பாண்டியனின் காலத்திலும் (கி. பி. 1180-90) சடையவர்மன் குலசேகரனின் காலத்திலும் (கி. பி. 1190-1218) பிரமதேயங்கள் பல தோன்றின. இந் நிலையில், கருநாடகத்திலிருந்து வந்த மலைநாட்டுக் கன்னடப் பிராமணர்கள் திருப்பாச்சோற்றியில் குடியேற்றப்பட்டனர். இக் கன்னடப் பிராமண வந்தேறிகளுக்கு வளமான காணிகளை வழங்குமாறு ஊரவையார் கட்டாயப்படுத்தப்பட்டனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவன் சந்திரபட்ட விக்கண்ணா என்னும் கன்னட வந்தேறி. இவ் வடுகப் பிராமணர்கள், கி. பி. 1209ஆம் ஆண்டுக்குப் பிறகே அரசனுக்குக் காணிக்கடன் கட்டத் தொடங்க வேண்டும் என்றும், அதுவரை அவர்கள் இறையும் வரிகளும் கட்டத் தேவையில்லை என்றும் ஆணை விடுக்கப்பட்டது.[254]

பொருநை ஆற்றங்கரையில் வடுகப் பிராமணர்கள் வந்தேறுவது கி. பி. 13ஆம் நூற்றாண்டு வரையில் தொடர்ந்தது. திருநெல்வேலிக்கு அருகில் அப் பொருநை ஆற்றங்கரையிலிருந்த அந்தக் குன்றத்தூர் அதுவரை யாருமே குடியேறாத தேவதான ஊராயிருந்தது. அவ் வூரிலிருந்த நிலங்கள் யாவும் பயிரிடப்படாத பாழ்நிலங்களாயிருந்ததே, அங்கு யாரும் வந்து குடியேறாததற்கான காரணம். முதல் குலோத்துங்கனின் காலத்தில் உத்தமசோழ சதுர்வேதிமங்கலத்துப் பிராமணர்கள் அங்குக் குடியேற்றப்பட்டனர். இவர்களுக்கென உத்தமசோழன் கால்வாயிலிருந்து ஒரு புதிய மதகு அமைக்கப்பட்டது.[255]

பொருநை ஆற்றங்கரையிலிருந்து 3 கல் தொலைவிலுள்ள திருநாராயணன் கோயில் குன்றின் அடியிலுள்ள ஊர் குன்றத்தூர். முற்காலத்தில் இவ் வூரில் வானம் பார்த்துக் கிடந்த அவ் வூர் நிலங்களெல்லாம் ஆயர்குலத்தவரால் புரக்கப்பட்டுவந்தன. இந் நிலங்களுக்குச் சொந்தக்காரராகிய குலசேகரசதுர்வேதிமங்கலத்து ஊரவையார், ஒரு வடுகச் சோழ அரசனுக்குக்கோ இளவரசனுக்கோ தத்தம் காணிகளை 'உழவொற்றி' வைத்தனர். காணியில் பயிரிடும் உரிமையை அடகாக ஒற்றிவைப்பதே 'உழவொற்றி' ஆகும். உழவொற்றிக்குக் காணியெடுத்த அரசகுலத்தான், பண்டிதப்பேரேரி என்னும் புதிய ஏரியை வெட்டி வளமாக்கி அக் காணிகளைக் கால்செய் நிலங்களாக்கினான். இந் நிலையில், அவ்வூர் நிலங்களுக்குச் சொந்தக்காரராயிருந்த கன்னடப் பிராமணர்க்கு, அந்த நிலங்களின் வெள்ளாண்மையிலிருந்து சாமிபோகம் வழங்கப்பட்டது. அவ்வாறு சாமிபோகம் வழங்குவது காலப் போக்கில் நிறுத்தப்பட்டது. அந் நிலங்களும் அப் பேரேரியும் பின்னர்

www.tamilarangam.net



கி. பி. 13ஆம் நூற்றாண்டில் அரசனால் கையகப்படுத்தப்பட்டுக் கண்டுழவு என்னும் அரசநிலங்களாக மாற்றப்பட்டன.[256]

## வாய் செத்துப்போன தமிழர்கள்!

முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் 8வது ஆட்சியாண்டில் (1276), திருநெல்வேலிக்கு மேற்கே புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட அனவரததானசதுர்வேதிமங்கலம் என்னும் பிரமதேயத்தில் வந்தேறிய பட்டர்களுக்கு (கன்னட பிராமணர்களுக்கு) அப்பேரேரியின் ஆயக்கட்டில் 1½ வேலி நிலத்தைப் பாண்டிய இளவரசன் கொடையாகத் தந்தான். இக் கன்னட வந்தேறிகள், திருநெல்வேலிக் கோயிலுக்கு $4^5/_8$ அச்சுக்காசு தீர்வையாகக் கட்ட வேண்டும் என்றானது. அக் காணிகளின் பழைய சொந்தக்காரர்களான தமிழர்கள், ஏரிக்குக் கரையெடுத்துத் தங்களின் காணிகளைக் கையகப்படுத்திய அந்தப் பாண்டிய இளவரசனை எதிர்த்துக் குரலெழுப்பவும்கூட அஞ்சி வாய் செத்துப் போயினர். காணியாளர்களாயிருந்த அவர்களுக்குத் தரப்பட்டு வந்த சாமிபோகமும் நிறுத்தப்பட்டது. இறுதியில், அந்த ஏரியின் ஆயக்கட்டு நிலங்களிலடங்கிய ஒரு நிலம், அவ் வந்தேறி வடுகப் பிராமணர்க்குப் பிரமதேயமாக ஆக்கப்பட்டது.[257]

கி. பி. 1248ஆம் ஆண்டில், பொருநை ஆற்றுக்குத் தெற்கிலிருந்த முறப்பநாட்டுப் போசள வீரசோமிசதுர்வேதிமங்கலம் போன்ற புதிய அகரங்கள் உருவாக்கப்பட்டன.[258]

சோழ-பாண்டியப் போர்கள், அவ்விரு நாட்டுப் பொருளியல்களின் மீதும் பெரும் சீரழிவை ஏற்படுத்தியதால், பாண்டியர் காசின் மதிப்பு குறைக்கப்பட்டது. கன்னடரான ஒய்சளரின் படையெடுப்பு இடையில் குறுக்கிட்டது. வடுகச் சோழருடனான போர் நின்றபின், முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் குடிமக்களுக்குச் சில சலுகைகளை வழங்கினான்.

கி. பி. 1224ஆம் ஆண்டில் தேனாறு வளம்சேர்த்த கீழ்க்குன்றாறு, திருஅரற்றாங்குடி, கோனேரி, திருவிங்கைக்குடி, பனைக்குடி, குறட்டி ஆகிய ஊர்களடங்கிய அடையூர்நாட்டுக் குடிகளுக்கும் முகவை மாவட்டத்தின் திருப்பத்தூர் வட்டத்திலுள்ள குன்றக்குடிக் குடிகளுக்கும் கண்டன் ஆளுடையான் கல்வாயில் நாடாள்வான் என்பவனும் அடலையூர் நாடாள்வான் என்பவனும் சில சலுகைகளை வழங்கினர்.[259]

## நாடா, காடா?

முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் காலத்தில் அரசுக்கு வந்த வருவாய் மிகவும் அருகியது. அரசுக்கு ஏற்பட்ட வருவாய்த் தட்டுப்பாடுகளைக் கருதி, நிலவருவாய்த் தரப்படிகள் திருத்தியமைக்கப்பட்டன. அரசுக்கு மிக இன்றியமையாத நிலவருவாயைப் பெருக்கு

www.tamilarangam.net



வதற்காக நிலங்களை வகைப்படுத்தவோ திட்டப்படுத்தவோ செய்வதைத் தரம் பிரித்தல் என்றனர். இத் தரம்பிரித்தலால், மக்கள் கூடுதல் வரி விதிப்புகளுக்கு ஆளாயினர். மண்ணின் தரங்களுக்கு ஏற்ப, கடமையின் அளவு இருந்த முறையை மாற்றி, 1227இல் நிலத்தின் பரப்பளவை (விரிவை) வைத்து வரியை மதிப்பிடும் புதிய வருவாய் முறை புகுத்தப்பட்டது. காணியின் தரத்தை அடியொற்றிக் கடமை விதிப்பதை விடுத்து நிலப்பரப்பை அடியொற்றிக் கடமை தண்டும் புதிய முறையைப் புகுத்தியது, மக்களிடம் பெரும் கொந்தளிப்பையும் எதிர்ப்பையும் ஏற்படுத்தியது.[260]

பாண்டியநாட்டு மக்கள் இதனால் இறையும் வரியும் கட்ட முடியாமல் நிலைகுலைந்தனர். சிறுபெருச்சியூர், கண்றாப்பூர் ஆகிய ஊர்களிலிருந்த குடிமக்கள், வரிச்சுமைகளால் தளர்ந்து போயினர். நாட்டு வாழ்க்கையைவிடக் காட்டு வாழ்க்கையே மேல் எனப் புலம்பலாயினர்.[261]

திருநெல்வேலியிலிருந்த குலசேகரசதுர்வேதிமங்கலத்துப் பிராமணர்கள், 8 தரங்களில் காலங்காலமாகக் காசாகவும் நெல்லாகவும் கடமை கட்டிவந்தனர். ஆனால், தரப்படி முறை விலக்கிக் கொள்ளப் பட்டு விரிப்பு அடிப்படையில் இறை கேட்கப்படவே, அவர்கள் அரசனிடம் முறையிட்டு மன்றாடி, அதுவரை கட்டிவந்த அளவுக்கே இறையைக் கட்டும் ஆணையைப் பெற்றனர்.[262]

புதிரான அந்தப் புதிய நிலவருவாய் முறையை ஒழித்துவிட்டு, மீண்டும் பழைய முறையைப் பாண்டிய அரசன் மீட்டான். அது வரை எட்டுவகைத் தரங்களாக நிலங்களைப் பிரித்து அவற்றிற்கேற்ப இறை தண்டிவந்த பழைய தரப்படி முறைக்கு மாறாக, கி. பி. 1228-29ஆம் ஆண்டில் அத் தரங்களை மூன்றாகக் குறைத்தது பாண்டிய அரசு. பாண்டிய அரசக் குடியினனான கண்டிய தேவனின் தலையீட்டினால்தான் அது போன்ற சலுகை கிடைத்தது.[263]

முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் 14வது ஆட்சியாண்டான கி. பி. 1230-31ஆம் ஆண்டில் மீண்டும் போர் மூண்டது. இப் போரின்போது வந்த ஓய்சளரின் இரண்டாவது தலையீட்டால், அப் பாண்டியனுக்குப் பின்னடைவுகள் ஏற்பட்டன.

## அளவைகளில் தெகிடுதத்தம்

அச் சுந்தர பாண்டியனின் 19வது ஆட்சியாண்டான கி. பி. 1235இல் கண்டன் அழகு கண்ட பெருமாள் (காங்கேயன்) என்னும் நாடாள்வான் குடிகளின் வறுமை நிலையைக் கண்டு ("குடி தளர்ந்து ஆற்றாமையால்...") வருந்தி, காணிக்கடன் கட்டுவதில் கூடுதலான சலுகைகளை வழங்கினான்.[264] இதனால், 60% அளவுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டதைப் போல் தோன்றின. அந்தக் காங்கேயன், நிலவருவாய்க் கணக்கில் காட்டிய கண்கட்டி வித்தைகளால் இந்தச் சலுகை

www.tamilarangam.net



கள் பெரிதுபடுத்திக் காட்டப்பட்டன. இறையும் வரியும் இருந்த அளவைக் குறைக்காமல், அடிப்படை நிலஅலகின் (unit) பரப்பளவைக் குறைத்தும், காணியை அளந்த 'குடிதாங்கிக்கோலின்' நீளத்தை ¼ மடங்கு கூட்டியும், சின்னஞ் சிறு சலுகைகளை அவன் வழங்கினான். நெல் அளக்கும் படியின் அளவைக் கூட்டித் தரப்படுத்தினான். மேல்வார, கீழ்வாரப் பங்குகளின் மேனியை மட்டும் குறைக்காமல், வருவாய்க் கணக்கில் பெரிய தெகிடுதத்தம் செய்தான்.[265]

புதுக்கோட்டை, முகவை மாவட்டங்களில் நாட்டார்கள் கூடி அரசனுக்கும் அவனது பரிவாரங்களுக்கும் மக்கள் வழி வழியாகக் கட்டிவந்த காணிக்கடன் மட்டுமீறாமல் இருக்க வழி வகைகளை ஆராய்ந்தனர். பிராமண அகரங்களின் ஊர்ப்பேரவையாரும், பேரிளமையர் எனப்பட்ட பெருந்தலைகளும் கூடி, அரசனுக்கு இவ்வளவு தான் காணிக்கடனைச் செலுத்துவது என்றும், கீழ்க்குடிகளும் உழுகுடிகளும் காராண்மையாளர்க்கு இன்னின்ன பணிகளைத்தான் செய்ய வேண்டும் என்றும், கீழ்க்குடிகளுக்கும் உழுகுடிகளுக்கும் இன்னின்ன சலுகைகளைக் காராண்மையாளர்கள் நல்க வேண்டும் என்றும் முடிவு செய்தனர்.[266]

## பெருங்கோயில் பண்பாடு

ஆந்திரர் (சதவாகனர்) காலத்தில் கௌதமி புத்திர சதகர்ணி என்னும் அரசனால் கி. பி. 2ஆம் நூற்றாண்டில் புத்தச் சமயக்குரவர்க்கு வழங்கப்பட்ட நிலக்கொடையே தென்னிந்திய வரலாற்றில் ஒரு சமய நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட முதல் நிலக்கொடையாகும்.[267]

கொங்குநாட்டின் மேற்குப்பகுதியைப் பிடித்து அதைக் கங்க நாடாக ஆக்கிய வடுகர்கள் முதன்முதலில் வழங்கிய இரு நிலக்கொடைகளில் ஒன்று கி. பி. 370ஆம் ஆண்டுக்குரியது; மற்றது கி. பி. 425ஆம் ஆண்டைச் சார்ந்தது. இவ்விரண்டுமே கோலார் மாவட்டத்திலுள்ள மாலூர் வட்டத்திலிருந்த அருக(சைன)ரின் மூலச்சங்கத்திற்கு ஊர்களை முழுதுமாக வழங்கிய நிலக்கொடைகளாகும்.[268]

சந்திநந்தி என்னும் அருக (சைன) முனிவனும் பிற மூலசங்கத் தவரும் நிறுவிய உரனூர் அருகன் கோயிலுக்கு முதுகொத்தூர்நாட்டுப் பெரும்புழல் (Pebbolal) என்னும் ஊரையும் குமாரபுரம் என்னும் ஊரையும் கி. பி. 370ஆம் ஆண்டில் இறைநீக்கிக் கொடுத்ததாகக் கூறும் அந்தக் கோயில் கல்வெட்டு, இறுதியில் மனுநூலின் நூற்பாக்களைக் கொண்டுள்ளது.[269]

அதே செய்தியைச் சொல்லும் அதே கோயிலிலுள்ள இன்னொரு கல்வெட்டு, விஷ்ணுகோபனுடைய மகனான கொங்கணிவர்மன், கி. பி. 425ஆம் ஆண்டில் பரம அருகத முனியான விசயகீர்த்தியின் அறிவுரையின்படி உரனூர் அருகன் கோயிலுக்குக் கோரிகுந்தநாட்டு

www.tamilarangam.net



வெண்ணெல் கழனிகளையும், பேரூர் ஏவானி அடிகளின் அருகன கோயிலுக்கு ¼ காசு பணத்தையும் அளித்தான்.[270]

வாதாபிச் சளுக்கியரின் எழுச்சிக்குப் பின்னர் (அஃதாவது, கி. பி. 6ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில்) கருநாடகத்தில் பெருங் கோயில் பணபாடு தோன்றியது.[271] கருநாடகமே பெருங்கோயில் பண பாட்டின் தாயகமாகும்.

அருகர் கட்டிய அருகன் கோயில் சினகரம் எனப்பட்டது. பௌத்த கோயிலின் பெயர் சேதியம். விண்டுவின் கோயில் விண ணகரம். அருகமும் புத்தமும் வட்க்கத்தியப் பெருவணிக மதங்கள் ஆனதால், அம் மதத்தவர்கள் கட்டிய மடவளாகங்கள் பரப்பளவில் பெரியனவாக இருந்திருக்க வேண்டும். இவற்றுடன், பௌத்தர்களும் அருகர்களும் உறைந்த பள்ளிகளும் (மடங்களும்) இருந்தன.

## பெருங்கோயில் பிறந்த இடம் கருநாடகமே!

கோயிலை நடுவமாகக்கொண்ட மதத்தைக் கருநாடகத்தில் தோற்றுவித்தவர்கள் காளமுகப் பிராமணரே ஆவர்.[272] இந்தக் காள முகப் பிராமணர்க்குப் போட்டியாக அருகர்(சைனர்)களும்கூடக் கோயில்களைக் கட்டத் தொடங்கினர். சளுக்கியப் பேரரசன் இரண் டாம் புலிகேசி கி. பி. 634ஆம் ஆண்டில் ஐம்பொழிலிலுள்ள (Aihole) மேல்குடியில் (Melgudi) கட்டிய அருகன் கோயிலே அவற்றிலெல்லாம் பழமையானது.[273] அதற்குமுன், அருகத் துறவியர்கள் பாழிகளில் மட்டுமே உறைந்து வந்தனர்.* கோயில்களையும் மடங்களையும் கட்டும் வழக்கம், கி. பி. 10ஆம் நூற்றாண்டில் அவர்களிடம் வலுப்பட்டது. கங்கைக்கரையில் தோன்றிய அருகமதம் இந்தத் துணைக்கண்டத்தின் பெரும்பகுதியில் ஒழிந்துவிட்ட போதிலும், கருநாடகத்தில் மட்டும் ஒருவாறு நீடித்தது.[274]

கோயில்களுக்கு நிலக்கொடை வழங்கும் போக்குக் கருநாட கத்தில் கி. 'பி. 8-9ஆம் நூற்றாண்டுகளில் வேகப்பட்டது. பிராமண அகரங்கள், மடங்கள், கடிகைகள் ஆகியவற்றிற்கு நிலக்கொடை வழங்கு வது, 10ஆம் நூற்றாண்டு முதல் 12ஆம் நூற்றாண்டு வரையிலான கால வெளியில் மிகப் பரவலானது.[275]

கி. பி. 11ஆம் நூற்றாண்டில் கருநாடகத்திலிருந்த 48 பெரிய கோயில்களில், 35 கோயில்கள் தாரவாடு, பீசாப்பூர், பெள்காம் மாவட் டங்களில் மட்டுமே இருந்தன.[276] கி. பி. 1150க்கும் 1350க்கும் இடையி லான 200 ஆண்டுகளில் குறைந்தது 450 சிவன் கோயில்களும் 100 வைணவக் கோயில்களும் கருநாடகத்தில் கட்டப்பட்டன.[277]

---

* கி. பி. 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய முதல் கன்னட நூலான கவிராச மார்கம் அருகரால் இயற்றப்பட்டது.

www.tamilarangam.net



## கற்றளிகள் வந்த கதை

கி. பி. 3ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே செங்கட்சோழன் பல மாடக்கோயில்களை எழுப்பினான். கோயில் கருவறையின் மேலுள்ள மேற்கட்டி (விமானம்), யானை ஒன்றுபடுத்திருப்பது போன்று இருந்த கோயிலையும் அவன் கட்டினான். அதுவே தூங்கானைமாடக் கோயில். செய்குன்றுமேல் கட்டப்பட்ட கோயிலைப் பெருங்கோயில் அல்லது மலைக்கோயில் என்றனர்.

கரக்கோயில், ஞாழற்கோயில், கோகுடிக்கோயில், பெருங்கோயில், இளங்கோயில், மாடக்கோயில், தூங்கானைமாடக்கோயில், மணிக் கோயில் முதலிய கோயில் கட்டடவகைகளைப் பற்றித் திருநாவுக் கரசரும் திருஞானசம்பந்தரும் கி. பி. 7ஆம் நூற்றாண்டில் பாடிய தேவாரப் பதிகங்கள் குறிப்பிடுகின்றன. இது போன்ற கோயில்கள் செங்கற் கட்டடங்களாக இருப்பினும், அக் கட்டட வகைகள் திடீ ரெனத் தோன்றியிருக்க முடியாது. அந்தக் கட்டட வகைகள் தோன்றப் பல காலம் பிடித்திருக்கும்.[278]

செங்கற்களைக் கொண்டு மாடக்கோயில்களைக் கட்டும் வழக்கம் போய், கருங்கற்களைக் கொண்டு அவற்றைக் கட்டுகின்ற வழக்கம் பல்லவர் காலத்தில் தோன்றியது. கி. பி. 7ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில்தான் தமிழர்நாட்டில் கருங்கற்கோயில்கள் (கற்றளிகள்) கட்டப்பட்டன. முதல் மகேந்திரவர்மன் குன்றுகளைக் குடைந்து குடைவரைக் கோயில்களை அமைத்தான். பல்லவன் முதல் நரசிம்ம வர்மன் வடித்த பாறைக் கற்கோயில்களில் அகநாழிகை (கருப்ப கிருகம்) இல்லை.[279] தமிழகத்தில் கற்களைக் கொண்டு முதன்முதலில் கட்டப்பட்ட கோயில், பல்லவன் பரமேசுவரவர்மன் (கி. பி. 669-90) கட்டிய கூரம் கோயிலாகும். அக் கூரம் கோயிலுக்குத் தன் பெயரில் பரமேசுவரமங்கலம் என்னும் பெயரை வைத்து ஓர் ஊரையே அவன் கொடையாகத் ஈந்தான். பாரதக் கதையைக் கோயில்களில் படிக்க ஏற்பாடு செய்த முதல் மன்னன் பல்லவ வடுகன் பரமேசுவரவர்மனே யாவான். அவனுக்குப் பிறகே கோயில்களில் பாரதம் படிப்பது ஒரு வழக்கமானது. அடுத்து, கருங்கற்களை ஒன்றின்மீது ஒன்றாக அடுக்கிக் காஞ்சியிலுள்ள கைலாயநாதர் கோயில் என்னும் கற்றளியைக் கட்டு வித்தவன் பல்லவன் இரண்டாம் நரசிம்மன் (கி. பி. 690-729) ஆவான்.[280]

தமிழரின் கட்டடக்கலை, இசைக்கலை, ஆடற்கலை ஆகிவற்றி லான துறைச்சொற்களையெல்லாம் வலிந்து மிக வெறித்தனமாகச் சங்கத(சமற்கிருத)ப்படுத்தியவன் பல்லவ வடுகனான முதல் மகேந்திர வர்மனேயாவான். அடுத்து வந்த பல்லவர்களும் அந்தப் புரட்டையும் திருட்டையும் அடாது விடாது தொடர்ந்தனர். இதனால், தமிழர் வளர்த்த கட்டடக்கலையில் விளங்கிய நிலைக்களம் என்பது 'அதிட் டானம்' என்றும், தூண் என்பது 'ஸ்தூபி' ஆகவும், கொடுங்கை என்பது 'சுபோதம்' என்றும், மேற்கட்டி என்பது 'விதானம்' என்றும், கோயில்

www.tamilarangam.net



என்பது 'தேவகோட்டம்' என்றும், தூங்கானை என்பது 'கஜபிருஷ்டம்' என்றும், கழுத்து என்பது 'கிரீவம்' எனவும் வலியச் சங்கதமயமாக்கப் பட்டன.

பல்லவர்க்கு முன்னரே செங்கல், மரம், மாழை (கனிமம்), சுதை இன்றிக் கல்லாலான குடைவரைக் கோயில்களை அமைத்தவர்கள் பாண்டியரே ஆவர். பாண்டியநாட்டின் பிள்ளையார்பட்டியில் எக் காட்டுருக்கோன் பெருந்தச்சன் என்னும் சிற்பியால் வடிக்கப்பட்ட குடைவரைக் கோயில், கி. பி. 5ஆம் நூற்றாண்டிற்குரியது.[281] பல்ல வரைவிடப் பாண்டியர் அமைத்த குடைவரைக் கோயில்களே எண் ணிக்கையில் மிகுதியானவை. சிற்பங்களும் கூடுதலானவை.[282]

பெருங்கோயில் பண்பாட்டிற்கு அடிகாலிட்ட வடுக வந்தேறிக ள், தமிழர்நாட்டில் கட்டிய பெருங்கோயில்களைத் தமிழ்க் கட்டடக் கலைஞரையும் சிற்பிகளையும் வைத்தே கட்டினர் என்பதை மேற் போந்த குறிப்புகள் உணர்த்துகின்றன.

வடுகச் சோழனான முதல் ஆதித்தன், காவிரிக்கரை நெடுகிலும் அடுத்தடுத்து வரிசையாகச் சிவன் கோயில்களைக் கட்டியதாகச் சுந்தர சோழனின் அன்பில் செப்பேடுகள் கூறுகின்றன.[283]

பல்லவ வடுகர் தோற்றுவித்த பெருங்கோயில் பண்பாட்டு இடைக்கால வடுகச் சோழர் காலத்தில் மேம்பட்டு உயர்ந்தது. இராச ராசன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலே அதற்குச் சான்றுரைக்கும்.

## கோயில் ஊர்களும் மடங்களும்

தமிழரின் மண்ணைப் பறித்தெடுத்த வந்தேறி வடுகர்கள், கோயில்களுக்குப் பெரிய பெரிய நிலக்கொடைகளை அளிக்கத் தொடங்கினர். அதன் வாயிலாகத் தமிழகத்தில் பெரிய பெரிய கோயில்களைக் கட்டுவித்த பெருங்கோயில் பண்பாடு தோன்ற வடுக வந்தேறியமே காரணமானது. சிவன் கோயில்களுக்கு அளிக்கப்பட்ட தேவதானங்கள், திருமால் கோயிலுக்கு வழங்கப்பட்ட திருவிடையாட் டங்கள், அருகன் கோயில்களுக்குத் தரப்பட்ட திருப்பள்ளிச்சந்தங்கள் முதலான காணிக்கொடைகளின் தோற்றத்தை அடுத்தே அப் பெருங்கோயில் பண்பாடு தோன்றியது. வடுக அநாகரிகரின் கீழமைந்த வந்தேறி நிலக்கிழமை என்னும் ஒரு வரலாற்று நிலையை அது குறித்தது.

தனியொரு வடுகப் பிராமணனுக்கு வழங்கப்பட்ட முற்றூட்டு (சர்வமானிய) நிலங்களையும், வடுக வந்தேறிப் பிராமணர்க்கு வழங்கப் பட்ட பிரமதேய ஊர்களையும் பார்க்க, இக் கோயில் நிலக்கொடைகள் மிகப் பெரியவை. கோயில்களைத் தழுவிச் சமய மடங்களும் தோன் றின. வடுகப் பிராமணரின் உடும்புப் பிடிக்குள்ளிருந்த கோயில்களுக் கும் மடங்களுக்கும் ஊர் ஊராக வழங்கப்பட்டன. நிலக்கொடை களால், கோயில் ஊர்கள் உருவாகின. ஒற்றை வடுகப் பிராமணனின்

www.tamilarangam.net



தனி ஆளுமையின் கீழிருந்த முந்தைய முற்றூட்டுக் காணிகளையும், பிராமண அகரங்களையும் விஞ்சி வளர்ந்த இந்தக் கோயில் ஊர்களை, ஒட்டுக்காக ஒன்றாய்ப் பங்காளிகளாயிருந்து அவ் வடுகப் பிராமணர்கள் கூட்டாகத் துய்த்துவந்தனர். கோயில் ஊர்களெல்லாம் வடுகப் பிராமணரின் கூட்டுஅதிகாரத்தைக் குறித்தன.

## இலிங்க வழிபாடு

சிவனின் ஆடல்களெல்லாம் பெரும்பாலும் சுடுகாட்டிலேயே ஆடப்பட்டவை.* அந்தச் சிவன் அதனால் சுடலையாண்டியானான். தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் சிவன் ஆடிய ஆட்டம் மட்டும் ஒரு புறனடை (விலக்கு) ஆகும். தக்கன் நடத்திய வேள்வி முடிந்தபின், காளியின் சினத்தைத் தணிப்பதற்காக அச் சிவன் சுடுகாட்டில் ஆடினான்.

நிருத்தம் என்னும் சங்கதச் சொல், நித்தம் என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபேயாகும்.

"நித்தம் திகழும் நேரிறை முன்கையால்
அத்தக அரிவையர் அளத்தல் காண்மின்"[294]

என்னும் பரிபாடலின் வரிகளால் அவற்றை அறியலாம்.

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டிருந்த கொடுஞ் சிவனியரான பாசுபதர்கள் அச் சிவனை ஆண்குறியான இலிங்க

---

* "புறங்காட் டெரியாடி பூதஞ் சூழப்"[284]
"பேய்தங்கு நீள்காட்டில் நட்ட மாடிப்"[285]
"முடைநாறு முதுகாட்டி லாடலானை"[286]
"மாண்டார் எலும்பணிந்த வாழ்க்கை யானை
மயானத்திற் கூத்தனைவாள் அரவோ டென்பு
பூண்டானைப் புறங்காட்டி லாடினானை"[287]
"பிணம்படு காட்டில் ஆடுவ தாகில்
இவரலா தில்லையோ பிரானார்"[288]
"மங்கைய வள்மகி ழச்சுடு காட்டிடை
நட்டம் நின்றாடிய சங்கரன்.."[289]
"இறந்தார் என்பும் எருக்குஞ் சூடிப்
புறங்காட் டாடும் புனிதன் கோயில்"[290]
"முதுவாய் ஓரி கதற முதுகாட்
டெரிகொண் டாடல் முயல்வானே!"[291]
"வாரிடங்கொள் வனமுலையாள் தன்னொடு மயானத்துப்
பாரிடங்கள் பலசூழப் பயின்றாடும் பரமேட்டி"[292]
"...... சுமப் புறங்காட்டிற்
பேயோ டாடல் புரிவானே!"[293]
என அப்பரும் சுந்தரரும் அச் சிவனைப் பற்றிப் பாடினர்.

www.tamilarangam.net



வடிவிலேயே வழிபட்டனர். அச் சிவனை இவர்கள் மயேச்சுவரன் என்றனர். பாசுபதர்களில் சிலர் தலையை மழித்துக் கொண்டனர். உடல் முழுவதும் சுடுகாட்டுச் சாம்பலைப் பூசிக்கொண்டு வெறிபிடித் தவராய் ஆடிப்பாடியே சிவனை வழிபட்ட இப் பாசுபதர்கள், மாந்த வுயிரையும் பலியிடல், செத்தவரின் பிணத்தின் கறியை எடுத்துச் சமைத்துண்ணல் போன்ற கொடிய அருவருப்பான வழிபாட்டு முறை களைக் கைக்கொண்டிருந்தனர்.

சிவனைப் பைரவனாக வைத்து வழிபட்டுவந்த கபாலிகர்கள், மண்டையோடுகளையே மாலையாக அணிந்திருந்தனர். மாந்தவுயிர் உட்பட எல்லா உயிர்களையும் பலியிட்டனர். நன்றாகக் குடித்துவிட்டு அவற்றின் கறியைத் தின்றுவந்த கொடிய வழக்கத்தையுடைய அவர் கள், அச்சமூட்டும் தோற்றமுடையவராவர். மந்திர தந்திரங்களில் வல்ல இவர்கள், சிவனை வழிபடுகையில் மெய்மறந்து வெறிபிடித்து ஆடினர். இக் கபாலிகர்கள், பெண்களை 'ஆதிசத்தி' எனச் சொல்லிச் சத்தி வழிபாட்டையும் அதன்வழியான காமப்புணர்ச்சிச் சடங்கு களையும் போற்றினர். கபாலிகன் ஒருவனும் அவனது மனைவியும் நன்றாகக் குடித்துவிட்டு நட்ட நடுத்தெருவில் ஆடிக்கொண்டிருந்ததைப் பற்றிய குறிப்பு, பல்லவன் முதல் மகேந்திரவர்மன் எழுதிய மத்த விலாசம் என்னும் நாடகத்தில் வருகிறது.[295]

பாசுபதரையும் கபாலிகரையும் பார்க்க மிக வெறித்தனமான கொடிய வழிபாட்டினராக இருந்தவர்கள் காளமுகரே ஆவர்.[296] பிணங் களை எரித்தபின் கிடைத்த சாம்பலை எடுத்து முகத்தில் பூசிக்கொண்டு கருப்பானவர்களே காளமுகர் ஆயினர்.

லகுலிச (கி. பி. 3-4ஆம் நூற்றாண்டுகள்) என்னும் குசராத்திப் பிராமணர் காளமுகத்தைத் தோற்றுவித்தார். பாசுபதத்தை முறைப் படுத்தியவரும் இவரேயாவார்.[297]

காளமுகர்களுக்கும் கபாலிகர்களுக்கும் இடையில் பெரிய வேற் றுமையொன்றும் இல்லை. கபாலிகரைப் போன்றே இவர்களும் பிராமணர், பிராமணரல்லாதார் எனப் பிரிந்து நின்றனர். காளமுகர் கள் தங்களை மாவிரதர்கள் எனச் சொல்லிக் கொண்டனர். சிற்றின் பமே பேரின்பத்திற்கான பெருவாயில் என்னும் கருத்தியலின் போக்கில் இக் காளமுகரின் வழிபாட்டில் சத்தி வழிபாட்டை ஒத்த கூறுகள் உண்டு. அவை: 1. மண்டையோட்டில் உண்ணுதல்; 2. எரித்த பிணத்தின் சாம்பலை உடம்பெல்லாம் பூசிக்கொள்ளல்; 3. அந்தச் சாம்பலையே உண்ணுதல்; 4. கையில் ஒரு தடியை வைத்திருத்தல்; 5. கள்ளையோ சாராயத்தையோ மொந்தையில் வைத்திருத்தல்; 6. மாந்தவுயிரைப் பலியிடல் என்பனவாகும்.

காளமுகச் சிவனியம் ஆதிசங்கரரின் ஒருமையியக் கோட் பாட்டை எதிர்த்தது. பின்னர், ஆதிசங்கரரின் மெய்யியலையே அது தழுவிக்கொண்டது.[298]

www.tamilarangam.net



## பெருங்கோயிலைப் பெற்றெடுத்த காளமுகர், வடுகரே!

கி. பி. 9ஆம் நூற்றாண்டு முதல் 10ஆம் நூற்றாண்டு வரையில் தென்னிந்தியாவில் இந்தக் காளமுகர்கள் பரவலாக இருந்தனர். தெலுங்குப் பிராமணர்கள் கடைப்பிடித்த ஆவத்தம்ப சூத்திரத்தின் படி ஒழுகிய தசபுரியன் என்னும் காளமுகன் ஒருவன் வடவார்க் காடு மாவட்டத்தில் இருந்தான்.[299] அதே மாவட்டத்தின் மேல்பாடியில் லகுலீசுவர பண்டிதனின் தலைமையில் ஒரு காளமுக மடம் இருந்தது.[300] திருவொற்றியூரிலும் சதுரானன பண்டிதன் தலைமையில் ஒரு காளமுக மடம் இருந்தது.[301] காஞ்சியையும் தஞ்சையையும் கி. பி. 940இல் கன்னரதேவன் வென்றபோது, திருவொற்றியூர்க் காளமுக மடத்திற்கு அவன் தலைவனாக இருந்தான். இரண்டாம் பராந்தக சோழனின் காலத்தினனான கொடும்பாளூர்த் தலைவன் விக்கிரம கேசரி என்பான் மூவர் கோயில் என்னும் கோயிலைக் கட்டி, அத்துடன் ஒரு மடத்தையும் உருவாக்கி அவற்றை மதுரையிலிருந்து வந்த ஆத்திரேய கோத்திரத்தைச் சேர்ந்த மல்லிகார்ச்சுனன் என்னும் கன்னடனுக்கும் காளமுகத் துறவியர்க்கும் கொடையாக அளித்தான். துறவியர்க்கு உணவிடவென 11 ஊர்களையும் அம் மடத்துக்கு உரிமையாக்கினான்.[302]

இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால், இக் காளமுகர்கள் பெரும்பாலும் வடுகராகவே இருந்ததைக் காணலாம்.

சிறுதெய்வ வழிபாடுகள் பொதுவாகத் தாய்த்தெய்வ வழிபாடுகளாகவே இருந்தன. காடுகாண்கிழாள், அணங்கு போன்ற பேய்வழிபாடுகளின் வழிவந்தவையே அச் சிறுதெய்வ வழிபாடுகள். இதனால், மாந்தவுயிர் உட்பட, பல்லுயிர்களைப் பலியிடும் வழக்கம், சிறுதெய்வ வழிபாடு மேலோங்கியிருந்த தாயாண்மை வாழ்வியலில் மிகப் பரவலாக இருந்தது.

## வள்ளுவ வானியலே பெருந்தெய்வ வழிபாடு

ஆனால், பெருந்தெய்வ வழிபாடோ தந்தையாண்மை வாழ்வியலில் தோன்றியது. வான்கோள்களையும் உடுக்களையும் (விண்மீன்களையும்) மாந்த உருவகங்களாக்கி, அவற்றின் வானியல்-கணிய இயற்பாடுகளையும், அரிய வான் நிகழ்வுகளையும் கட்டுக்கதைகளாகப் புனைந்த சூழலில்தான் பெருந்தெய்வ வழிபாடு தலையெடுத்தது. ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் இயறபாடுகளைக் குறித்த முப்பெருந்தெய்வங்களாக நான்முகனும் திருமாலும் (விண்டுவும்) சிவனும் கற்பிக்கப்பட்டனர். இம் மூவர்க்கும் அடுத்து முருகனும் மூத்த பிள்ளையாரும் உருவாக்கப்பட்டனர். ஆளும் வேந்தன், இந்திரனானான்.

www.tamilarangam.net



பல்லவர் காலத்தில் முருகனுக்கென்று தனிக் கோயில்கள் இல்லை. கொற்றவை வழிபாடு, துர்கை வழிபாடானது. உருத்திரன் சிவன் ஆனான்.[303]

வான்கோளத்தை இரண்டாக வகுத்திடும் வான்நடுவரை (Celestial Equator) என்னும் வட்டத்தை ஞாயிற்றின் பாதையான ஞாயிற்று மண்டிலம் ஈரிடங்களில் வெட்டுகின்றது. அவ்வாறு வெட்டுகின்ற ஈரிடங்களான இருண்டு விழுக்களும் (Equinoxes), வான்கோள்வட்டத்தை (Celestial Sphere) அந்த ஞாயிற்றுமண்டிலம் தொடுகின்ற ஈரிடங்களான முடங்கல்களும் (Solstices) ஆக அந் நான்கு பெரும் புள்ளிகளையே வள்ளுவக் கணியர்கள் நான்முகன் என உருவகப் படுத்திக் கதை கட்டினர். ஞாயிற்றுமண்டிலத்தில் சுற்றிவரும் ஞாயிற்றைத்தான் விண்டு என்னும் திருமாலாகக் கற்பித்தனர். சூன் 21 அன்று வேனில்முடங்கலில் (Summer Solstice) ஞாயிறு விழும் வான் நிகழ்வையே இந்திரன் என உருவகப்படுத்தினர்.

வானியலில் வரும் செம்பூத வகையைச் (Red Giants) சேர்ந்த கபிலை (சிவப்பு) நிறத்திலான 11 பெரும் உடுக்களே 'உருத்திரர்' என்றும் 'கபிலர்' என்றும் கதை புனைந்தனர். இந்தப் பதினொரு செம்பூத உடுக்களில் ஒன்றான λ-ஓரையன் என்னும் உடுவும், அதன் அருகில் ஓடும் பால்வெளியும், காளை வடிவிலான விடை ஓரையும் பிறவும் சேர்ந்து முதலில் உருத்திரனாகவும், பின்னர் சிவனாகவும் வடிக்கப் பட்டது. முதலில் ஆரல் (கார்த்திகை) உடுக்கூட்டமும், பின்னர் முறம் (வைசாகம்) என்னும் உடுக்கூட்டமும் ஆறு உடுக்களைக் கொண்டதாய் வெறுங்கண்ணுக்குத் தெரிந்ததை வைத்து ஆறுமுகனான முருகனைக் கற்பித்தனர்.

வள்ளுவக் கணியர்களால் புனையப்பட்ட உருவக(தொன்ம)க் கதைகளையும் வானியல் நிகழ்வுகளையும் தழுவியதே பெருந்தெய்வ வழிபாடு என்பது இவற்றால் விளங்கும்.[304]

சிவனும் மாலும் நான்முகனும் முருகனும் பிற தெய்வங்களும் வானியல் உருவகங்களே என்னும் அறிவும் தெளிவும் ஓரளவு இருந்தமையால், அவ் வானியல் நிகழ்வுகளை உளத்தியல், மனத்தியல் நிகழ்வுகளோடும் உடம்போடும் இணைத்து இலைமறை காயான அறிவியல் விளக்கங்களாக ஒரு புறமும் — புரியாத அகவழிபாட்டு மாயமந்திரங்களாக மறுபுறமும் — இரு வேறு கூறுகளாக்கி மிக நுட்பமான மெய்யியல் விளக்கங்களைத் தமிழ்ச் சித்தர்கள் வடித்தனர்.

> "நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
> வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
> ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரந்
> தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே"[305]

என்னும் திருமூலரின் பாடலில் வரும் "வான்பற்றி நின்ற மறைப் பொருள் சொல்லிடின்" என்னும் வரியே அதற்கு சான்று கூறும்.

20

www.tamilarangam.net



## வடுகரின் அநாகரிக வழிபாடுகள்

இது போன்ற நுட்பமான சமய விளக்கங்களை விளங்கிக் கொள்ள இயலாத வடுக வந்தேறிகள், வள்ளுவக் கணியர்கள் வடித்த தொன்ம(புராண)க் கதைகளையெல்லாம் உண்மையாக நிகழ்ந்த நிகழ்வுகள் என மடத்தனமாக நம்பிக்கொண்டு, பெருந்தெய்வ வழிபாட்டிற்கு முந்தைய தாய்த்தெய்வ-போர்த்தெய்வ (சத்தி)ச் சடங்குகளையும் உள்ளடக்கிய காமப்புணர்ச்சியைக் கருவாகக் கொண்ட இலிங்க (ஆண்குறி) வழிபாட்டையே பெரிதாகப் போற்றினர். அநாகரிக வடுகரின் வழிபாட்டுணர்வில் விளங்கிய இப் பிறழ்ச்சியே, அருவருக்கத் தக்க கொடிய சடங்குகள் அடங்கிய பாசுபதம், கபாலிகம், காளமுகம் முதலான காமவழி வழிபாடுகள் அவர்களிடம் காலூன்றவும் பரவவும் காரணமானது. இந்தப் பின்புலத்தில்தான், இலிங்க வழிபாடும் வீரசிவனியமும் கன்னட வடுகரின் வழிபாட்டு வெளிப்பாடுகளாயின.

இதனால்தான், வடுக வந்தேறிகள் தமிழகத்தில் தோற்றுவித்த சிவன் கோயில்களில் இலிங்கமே முகாமையான இடத்தைப் பிடித்துக் கொண்டது. கோயில் பரத்தை (தேவடியாள்) முறை அவர்கள் உருவாக்கிய பெருங்கோயில்களில் ஓர் இன்றியமையாத் தேவையானது.

## ஆரியனாம் வடுகனையே ஆண்டவனாக்கிய சமயக்குரவர்!

வடுகச் சிவனியரான பாசுபதரின் கொடிய தோற்றத்தையே இறைவனின் தோற்றமாக வைத்து அப்பரும் சுந்தரரும் பிற தமிழ்ச் சிவனியரும் ஏத்திப் பாடினாலும்,* அக் கொடுஞ்சிவனியத்தால் தமிழரை முற்றாக ஆட்கொள்ள முடியவில்லை. இதனால்தான், சிவனிய நெறியில் நின்ற வேதாந்தமும் சித்தாந்தமும் (சிவனியக் கொள்முடிபும்) காளமுகர், பாசுபதர், கபாலிகர் போன்ற வெறியரின் கொடிய நெறிகளைப் பின்பற்றவில்லை. ஆயினும், சிவனியக் கொள்முடிபின் மூலக்களஞ்சியம் எனக் கருதப்படும் திருமூலரின் திருமந்திரம், வடுகப் பிராமணியத்திடம் அடங்கியொடுங்கி அடிபணிந்து வடுகமயமானது; அஃதாவது, ஆரியமயமானது. வடுகப் பிராமணியத்திற்கு ஒத்து ஊதியது. எண்ணிக்கையில் ஒன்பதாயிருந்து பின்னர் 28 என்றான சிவனிய ஆகமங்களே திருமந்திரத்திற்கு மூலம் எனப் பெருமைப்பட்டுக் கொண்டது.$

---

* "பார்ப்பதற்குப் பாசு பதமருள் செய்வதன் பத்தருள்ளூர்"[306]
"படையானைப் பாசுபத வேடத்தானைப்"[307]
"பாசுப தாபரஞ் சுடரே!"[308]

$ "ஆகமம் ஒன்பான் அதிலான நாலேழு
மோகமில் நாலேழு முப்பேத முற்றுடன்
வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்மையொன்
றாக முடிந்த வருஞ்சுத்த சைவமே"[309]

www.tamilarangam.net



பன்னிரு ஆழ்வார்களில் பெரும்பாலோர் தனித்தமிழராக இருக்கையில், 63 சிவனிய நாயன்மார்களில் கூற்றுவ நாயனார் போன்ற களப்பாள வடுகரும், ஐயன் காடவர்கோன், கழற்சிங்க நாயனார் முதலான பல்லவ வடுகரும் இருந்தனர்.[௨] வணங்கத் தக்க சமயக்குரவர்களாக வடுகரும்கூடச் சீரும் சிறப்பும் பெற்றனர். இதனால், சிவனையே 'ஆரியன்' எனப் போற்றி வணங்கும் அளவுக்கு,

"சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே"[312]

என்றும்,

"புரைஅற்ற பாலினுள் நெய்கலந் தாற்போல்
திரைஅற்ற சிந்தைநல் ஆரியன் செப்பும்
உரையற் றுணர்வோர் உடம்பிங் கொழிந்தாற்
கரையற்ற சோதி கலந்தசத் தாமே"[313]

என்றும்,

"வேதத்தைவிட்ட அறமில்லை...."[314]

என்றும்,

"இருக்கு வாம்எழில் வேதத்தி னுள்ளே"[315]

என்றும் வலிந்துரைக்கும் திருமூலரின் கொள்முடிபு, வடுகத்தின் முன் — அஃதாவது, ஆரியத்தின்முன் — நெடுஞாணாக விழுந்து கிடந்தது.

## வடுகக் கள்ளர் குகைகள்

தமிழகத்தின் கோயில்களில் தேவாரமும் திருப்பாவையும் திருவெம்பாவையும் ஓதுவதை விடுத்து, சங்கதத்தில் மட்டுமே வழிபாடு நடத்துவதன் வாயிலாகத் தமிழைத் தமிழ்நாட்டுக் கோயில்களிலிருந்து அடியோடு விரட்டியவர்கள் வடுகப் பிராமணரே ஆவர். பெருங்கோயில்களெல்லாம் இவ் வந்தேறி வடுகப் பிராமணர்க்குப் புகலிடம் தந்த கள்ளர் குகைகளாயின.

அப்பரும் சம்பந்தரும் சுந்தரரும் ஆகிய சிவனிய சமயக்குரவர்கள் பாடிய 96,000 தேவாரப் பதிகங்கள் அடங்கிய ஓலைச் சுவடிகள், வடுகப் பிராமணரின் தமிழ் எதிர்ப்புச் சூழ்ச்சியால் தில்லையம்பலத்தில் செல்லரித்துப் போயின. அதைப்பற்றிக் கேள்வியுற்ற முதல்

---

[௨] "சத்தித் தடக்கைக் குமரன்நற் றாதைதன் தானமெல்லாம்
முத்திப் பதம்ஓரார் வெண்பா மொழிந்து முடியரசாம்
அத்திற்கு மும்மைநன் றாள்அரற் காய்ஐயம் ஏற்றல்என் னும்
பத்திக் கடல்ஐ யடிகளா கின்றநம் பல்லவனே"

"காடவர் குரிசி லாராம் கழற்பெருஞ் சிங்க னார்தாம்
ஆடக மேரு வில்லார் அருளினால் அமரில் சென்று
கூடலர் முனைகள் சாய வடபுலங் கவர்ந்துகொண்டு
நாடற நெறியில் வைக நன்னெறி வளர்க்கும் நாளில்"

www.tamilarangam.net



இராசராசன் மீட்டெடுத்த பதிகங்கள் வெறும் 796 மட்டுமாகும். "அரசே கவலையற்க! இக்காலத்திற்கு வேண்டியனவற்றை மட்டுமே வைத்துக்கொண்டு வேண்டாதவற்றை யாமே செல்லரிக்க விட்டுவிட்டோம்"[316] என அவ் வடுகச் சோழனுக்கு இறைவனின் வானுரை ஒலி கேட்டதாகவும், அதனால் அவன் அந்த வடுகப் பிராமணரை ஒன்றுமே செய்யவில்லை என்றும் விட்ட பெருங்கரடி, இராசராசனே நடத்திய ஒரு கவட நாடகமாக இருந்திருக்கலாம். தேவாரத்தைக் கோயில்களிலிருந்து அப்புறப்படுத்திய வடுகச் சூழ்ச்சிக்கு எதிராக மக்களிடம் புகைந்து கொண்டிருந்த கொந்தளிப்பைத் தணிக்கவே அவ் வடுகன் அவ்வாறு செய்திருக்கலாம்.

## சங்கதம் பிறந்தது தெற்கேதான்!

சங்கத (சமற்கிருத) மொழி தமிழகத்தின் தெற்கில் குமரி மாவட்டத்தில் அல்லது சேரநாட்டில் தோன்றி வடக்குநோக்கிச் சென்றது. அம் மொழி, வடக்கிலிருந்து தெற்குநோக்கி வந்த மொழி அன்று. சங்கதமொழி, தொடக்கத்தில் பல்லவ வடுகரால் வடிக்கப்பட்ட கிரந்த எழுத்துகளைக் கொண்டே எழுதப்பட்டது. (நாகர்களின் எழுத்தில் அமைந்த தேவர்களின் மொழியெனப் பொருள்படும்) தேவநாகரி எழுத்தில் எழுதப்படவில்லை. இதனால், வந்தேறிப் பல்லவ வடுகரின் காலம் தொட்டு எழுதப்பட்ட ஆகமங்கள் யாவும் தமிழ்க் கிரந்த# எழுத்தமைதியிலேயே எழுதப்பட்டன.[317]

உருவ வழிபாடு, கோயில் அமைப்பியல், உருவற்ற வெளி (சிதம்பர) வழிபாடு ஆகியன யாவும் வானியலையும் கணியத்தையும் அருவகப்படுத்தி வடிக்கப்பட்ட உடல்— ஒலி —ஒளி என்னும் சூழ்ச்சிமத்தின் அடிப்படையிலமைந்த தமிழ்ச் சிவனியக் கருத்தமைதியைச் சார்ந்தவை. இந்த விளக்கத்தை எதிரொளிப்பதாக ஆகமம், சிற்பம், உபநிடதம், ஆரணியம், வேதம் என்று அடுத்தடுத்து வரும் முறையியல் வடிக்கப்பட்டது. அம் முறையியலைத் தழுவிய சமய மெய்யியல் விளக்கம் படிப்படியாகத் தோன்றியது.

இவ் வரலாற்று வளர்ச்சியைப் பற்றிய அறிவை விளங்கிக் கொள்ளாத வடுக அநாகரிகரால், தாம் படையெடுத்து வென்ற தமிழர் நிலத்தில் விளங்கிய அக்காலச் சமய விளக்கங்களின் உள்ளீடுகளையும்கூடப் புரிந்துகொள்ள முடியவில்லை. முதலில் வேதம், அடுத்து ஆரணியம், அதையடுத்து உபநிடதம், அதன் பின்னர் சிற்பம், பிறகு ஆகமம் என்று அம் முறையியலைத் தலைகீழாகப் புரட்டிப்போட்டு[318] விளக்கம் கூறிய வந்தேறி வடுகப் பிராமணர்கள், தாம் புகுந்த கோயில்களில் தம் வயிற்றுப் பிழைப்பை உறுதிசெய்துகொள்வதிலேயே கண்ணாயிருந்தனர்.

---

# 'பார்த்தல்' என்றும் 'கட்டுதல்' என்றும் பொருள்படுவதே 'கிரந்தம்' என்னும் சங்கதச் சொல்.

www.tamilarangam.net



## தெற்குநோக்கிச் சிவனியமும் வடக்குநோக்கி மாலியமும்

சங்கீதைகள் மாலியராலும், ஆகமங்கள் சிவனியராலும், தந்திரங்கள் காளி வழிபாட்டினராலும் போற்றப்படுவன. இம் மூன்றும், கி. பி. 5ஆம் நூற்றாண்டிற்குப் பிறகே தோன்றின.[319]

தமிழரிடையே தோன்றிய சிவனியம் மளமளவென வடுகமய மாயினும், சிவனைத் தென்னாடுடைய சிவனாகத் தென்னாட்டுடன் உறவுபடுத்தினர். மால் வழிபாடும்கூடத் தமிழரிடையே தோன்றிய வழிபாடுதான். அந்த மால் வழிபாட்டிற்குப் புதிய அளவைகளைத் தந்த ஆழ்வார்களில் பெரும்பாலோர் தமிழராயினும், அவர்கள் வடக்கையே — வடஇந்தியாவையே — வலிந்து வழிபட்டனர். மாலியத்தின் பத்துத் தோற்றரவு (அவதார)க் கதைகளில் பல வானியல் நிகழ்வுகளின் உருவகங்களேயாயினும், அம் மாலியத்தை அவர்கள் மளமள வென வடுகமயமாக்கினர். அஃதாவது, ஆரியமயமாக்கினர். யமுனைக் கரையிலிருந்த மதுரையில் தோன்றிய கண்ணனையும், கோசலத்து இராமனையும் பெரும் தோற்றரவு(அவதாரங்)களாகக் கொண்டு வடக்கு நோக்கியே தன் பார்வையை நிலைக்குத்திக் கொண்ட சமயமாக அம் மாலியம் திரிந்தது.

தென்மயமான சிவனியத்திற்கும், வடமயமான மாலியத்திற்கும் இடையிலான முரண்பட்ட இந்தத் திசைப் பெயர்ச்சிகள், பெரும் புதிராகவே உள்ளன.

கீழை வடுகப் பல்லவர்களாலும் வடுகச் சோழர்களாலும் தமிழ் மண்ணில் ஆழ அழுத்தமுடன் குந்திக்கொண்ட சிவனியம், அக்கால் அரசு மதமாக இலங்கியது. வடுகச் சோழர் காலத்தில் தமிழ்நாட்டிலிருந்து வலிய விரட்டப்பட்ட மாலியம், வடுகர் நாடுகளில் புகலிடம் தேடியது. பின்னர், விசயநகர வடுக வந்தேறியர் காலத்தில் தமிழகத்திற்கு மீண்டு, தன்னை நிலைநிறுத்திக் கொண்டது.

## பற்றி இயக்கத்தின் உள்ளீடு

களப்பாளர் வழியாகத் தமிழகத்தில் அருகரின் எண்ணிக்கை பெருகியது. இவ் வந்தேறித் துறவிகளின் கொற்றத்தைத் தாங்கப் பொறுக்காது புழுங்கிக்கொண்டிருந்த தமிழ் மக்களின் உள்ளங்களில், நாயன்மார்களும் ஆழ்வார்களும் கட்டியமைத்த அருக-புத்த எதிர்ப்பு, எரிகின்ற தீயில் எண்ணெய்யை வார்த்தது. எண்ணாயிரம் அருகர்களைப் பாண்டிய அரசன் கழுவிலேற்றிய நிகழ்வு, அந்த எதிர்ப்புணர்வுக்கு ஒரு வடிகாலானது. அருக, புத்தத் துறவியரைப் புரந்துவந்த வடக்கத்திய அருக வணிகர்களின் அடாவடித்தனங்களைக் கண்டு வெகுண்டெழுந்த தமிழ் நிலக்கிழார்கள், அருக-புத்த எதிர்ப்பு வடிவிலான வடவர் எதிர்ப்புக்கும் களப்பாள வடுக எதிர்ப்புக்கும் முனைப்புடன் தோள்கொடுத்தனர்.

www.tamilarangam.net



களப்பாள வடுகரின் படையெடுப்புக்கு முந்தைய கடைக்கழகக் காலத்தில், வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகைப் பாக்கள் மட்டுமே தமிழில் இருந்தன. களப்பாளர் காலத்தில் வந்த பாகத, சங்கதமொழிகளின் ஊடுருவல்களால், தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூவகைப் பாக்கள் புதிதாகத் தோன்றின. அவற்றால், பன்னிரு வகையான செய்யுட்கள் பிறந்தன. இந் நிலையில், அகப்பொருள், புறப்பொருள் பற்றிய புதிய விளங்கங்கள் பிறந்தன.[320]

கழக(சங்க)க் காலப் புறப்பாட்டுகள் தலைமகனின் போர் வீரத்தையும் போரையும் பற்றியன. காதலையும் கற்பையும் பற்றியனவாக அகப்பாடல்கள் இருந்தன. ஆனால், வடுகர் வழியாக வடக்கத்தியார் கொணர்ந்த அருகமும் புத்தமும் துறவுநெறியைத் தழுவியவை. இதனால், போர்க்களத்தில் ஈட்டும் புற வெற்றியைவிட, மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களையும் அடக்கிக் காமம், வெகுளி, மயக்கம் என்னும் அகப்பகைகளை வெல்வதே உண்மையான வெற்றியென அவ் வடக்கத்திய பெருமதங்கள் பாடம் படித்தன.

இந்தச் சூழ்நிலையில், அதுவரை அடங்கிக் கிடந்த சிவனியரும் மாலியரும் சமய-மதக் கோணத்தில் அகப்பொருளுக்கான புதிய விளக்கங்களைத் தேடத் தொடங்கினர். உலகியல் வாழ்க்கையிலிருந்தும் உணர்வுகளிலிருந்தும் அறுபடாமலேயே முந்தைய அக, புற மரபுகளைத் தழுவிய விளக்கத்தை அவர்கள் காண முற்பட்டனர்.

ஆணும் பெண்ணும் காதலித்துப் பெறும் சிற்றின்பத்தைவிட, மாந்த உயிர்கள் கடவுளையே காதலித்துப் பெறும் பேரின்பமே இன்பங்களிலெல்லாம் மிகச் சிறந்த இன்பமென அகப்பொருளுக்கு அவர்கள் ஒரு புதிய விளக்கத்தைப் படைத்தனர். காதலி-காதலன் நிலையில் கடவுளிடம் மெய்மறந்த இறைப்பற்று வைத்தால், பேரின்பமாகிய வீடுபேறு கிடைக்கும் என்பதே அவர்களின் கூற்று.[321] அதை அவர்கள் இறைப்பற்றி (பத்தி) வழி என்றனர். இவ் வழியில், சிவனிய நாயன்மார்களும், மாலிய ஆழ்வார்களும் கடவுளின்மீது அகப்பொருட்டுறையில் அமைந்த பாடல்களைப் பாடினர்.

இந் நிலையில், அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் இம்மை வாழ்விற்குரியனவென்றும், வீடு என்பது மறுமைக்குரியது என்றும் கூறப்பட்ட நான்கு பயன்களில், இம்மைப்பயன்கள் எனக் குறிப்பிடப்பட்ட அறம், பொருள், இன்பம் ஆகியவற்றைப்பற்றி மட்டுமே பாடுகின்ற நூல்களைக் கீழ்க்கணக்கு நூல்கள் என வகைப்படுத்தித் தொகுத்தனர்.

"அடிநிமிர் வில்லாச் செய்யுட் டொகுதி
அறம் பொருள் இன்பம் அடுக்கி அவ்வகைத்
திறம்பட வருவது கீழ்க்கணக் காகும்"[322]

எனப் பன்னிருபாட்டியல் ஓர் இலக்கணத்தையே வகுத்தது.

www.tamilarangam.net



## இறையனார் அகப்பொருளில் இல்லாத பேரின்பக் காதல்

தொல்காப்பியத்தின் அகப்பொருள் உலகியல் காதலைப் பற்றி மட்டுமே விளக்குகிறது. எனவே, இறையடியானுக்கும் ஆண்டவனுக்கும் இடையிலான உறவைக் காதலி-காதலன் என்னும் பேரின்பக் காதலாக்கி அகப்பொருளுக்கு இலக்கணம் கூறி வந்த நூல், அன்று இல்லை. இதைக் கருதியே, இறையனார் அகப்பொருள் (களவியல்) என்னும் புதிய அகப்பொருள் இலக்கண நூலும் உரையும் கி. பி. 5ஆம் நூற்றாண்டில் சிவனியரால் ஆக்கப்பட்டன. அந்த இறையனார் அகப்பொருளும்கூட, ஆண், பெண்ணாகிய மாந்தர்க்கு இடையிலான உலகியல் காதலைப் பற்றியே கூறுகிறது. மாந்தர்க்கும் கடவுளுக்கும் இடையிலான காதலைப்பற்றி அந் நூல் பாடவே இல்லை. ஆனால், அதன் உரை மட்டும் அம் மாந்தர்க்கும் கடவுளுக்கும் இடையிலான பேரின்பக் காதலைப்பற்றி இட்டுக்கட்டிச் செப்புகின்றது.[323]

> 'அஃதேயெனின் ... அவ் வெட்டு (எண்வகை) மணமும் உலகினுள்ளன; இஃது (இறையனார் அகப்பொருள்) அன்ன தன்று. இல்லது இனியது நல்லதென்று புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கமாகலின், இதனை (இறையனார் அகப்பொருளை) உலக வழக்கினோடு இயையாதென்பது.'[324]

என அந்தக் களவியல் உரையின் முதலாம் சூத்திர உரை கூறுவதே அதை மெய்ப்பிக்கும். இறையனார் அகப்பொருள் நூலிலும் உரையிலும் அப் பேரின்பக் காதலைப் பற்றிய இலக்கணம் எதுவும் உள்ளபடியே இல்லை. இதனால்தான் நெடுநாட்களாக அந் நூலையும் உரையையும் நூல் வடிவில் எழுதிவைக்கவே இல்லை. எழுத்து வடிவில் இல்லாமலேயே — மந்திரம் போல் மறைபொருளாகவே — அந்த நூலும் உரையும் செவிவழியாகவேதான் பத்துத் தலைமுறைகளாகக் கிடந்தன.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகியோரின் தேவாரப் பாடல்கள் தோன்றி ஓர் இலக்கியமான பிறகே, அந்த இறையனார் அகப்பொருள் நூலையும் உரையையும் கி. பி. 8ஆம் நூற்றாண்டில் ஏட்டில் எழுதிவைத்தனர்.[325]

இறைவன்மீது கொண்ட பேரின்பக் காதலைப் பற்றிய பத்திப் பாடல்களைச் சிவனியரும் மாலியரும் பரப்பத் தொடங்கினர். அதைத் தமிழ்ப் புலவர்களும் மக்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. தொல்காப்பியம் கூறும் உலகியல் அகப்பொருள் இலக்கணத்தை மட்டுமே புலவர்கள் பின்பற்றி வந்தமையால், இந்தப் புதிரான போக்கை அவர்கள் எதிர்த்தனர். இதனால், இறைவன் மீதான பேரின்பக் காதலுக்கு இலக்கண ஏற்பு வேண்டும் என்று கருதி, அந்த ஏற்புநிலையை உருவாக்கவே இறையனார் அகப்பொருள் அல்லது களவியல் என்னும் நூலையும் உரையையும் ஓர் இலக்கணச் சான்றாகக் கற்பித்துக்

www.tamilarangam.net



காட்டினர். இந் நூலுக்குத் தெய்விகமும் பழமையும் கற்பிப்பதற்காக வேண்டி, அந் நூல் இறைவனால் (சிவபெருமானால்) ஆக்கப்பட்டது என்றும், இறைவனாலேயே ஆக்கப்பட்டதால் அஃது ஒரு 'முதல்நூல்' என்றும், இந் நூலுக்கு உரை எழுதக் கேட்டவன் கடைக் கழக(சங்க)க் காலத்தில் அகநானூற்றைத் தொகுத்த உருத்திரசன்மன் என்றும், அதற்கு மெய்யான உரை எழுதியவர் அக் கடைக்கழகத்தின் புலவரான நக்கீரர் என்றும் கதை கட்டினர். இது, ஆய்வறிஞர் மயிலை சீனி வேங்கடசாமியின் அரிய விளக்கமாகும்.[326]

## தேவடியாள் முறை

அறத்துப்பாலிலும் அடங்காமல், பொருட்பாலிலும் அடங்காமல், காமத்தைப் பொருளாக வைத்துப் பாடி ஆடவல்ல பாடல் இலக்கணமே பரிபாடல் எனத் தொல்காப்பியம் வரையறுத்தது.*

"கடவுள் வாழ்த்திலும், மலை விளையாட்டிலும், புனல் விளையாட்டிலும் பிறவும் எல்லாம் காமம் கண்ணியே வரும்"

எனப் பேராசிரியர் அதற்கு உரை கூறுவார்.[328] கொச்சகம், அராகம், சுரிதகம், எருத்து ஆகியன அப் பரிபாடலின் உறுப்புகளாகும். இவற்றில், ஆடலுக்கு உரிய தெய்வப் பாடலாக மட்டுமே அராகம் இருந்தது.

மருதத்திற்குரிய நீர்விளையாட்டு, முல்லைக்குரிய ஏறுதழுவல் ஆகியவற்றைத் தழுவிய பாடல்களாகவே இருக்கும் கலித்தொகையில் வரும் கலிப்பாவிற்குத் தரவு (எருத்து), இடைநிலைப்பாட்டு (தாழிசை), தனிச்சொல் (அடிநிலை), சுரிதகம் (போக்கு, வைப்பு, அடக்கியல், வாரம்) ஆகிய உறுப்புகளுண்டு. கலித்தொகையிலும் பரிபாடலிலுமே காமன் விழாவைப்பற்றி முதன்முறையாகக் கூறப்படுவதாக ஆய்ந்தோர் கூறுவர். காதலும் வழிபாடும் மயங்கி, பாடுபொருளான ஒரு போங்கையே அது காட்டும்.[329]

ஒரு பெண் தன்னந்தனியாக அகப்பட்டுக் கொண்டதால், காம உணர்ச்சி மேலிட்ட ஒரு முதுபார்ப்பான், அவள்மீது விழுந்து விழுந்து பேசித் தன்னுடைய பொருந்தாக் காமத்தை வெளிப்படுத்துவதே கூருங்கூத்து என்னும் கூத்து வடிவம் எனக் கலித்தொகை[330] கூறும். காமத்தை உள்ளீடாகவும் வெளிப்பாடாகவும் கொண்டது இக் கூத்து வடிவம்.

துணங்கையும் குரவையும் மக்கள் அன்றாடம் ஆடிய ஆட்டங்களாகும். தனித்தும் இணைந்தும் — கொண்டுநிலை என்னும் நெடும் பாடலைப் பாடிக்கொண்டு ஆடவரும் பெண்டிரும் கை கோர்த்து ஆடினர். குன்றம்வாழ் குறிஞ்சி மக்கள் ஆடிய இது போன்ற ஆட்டமே

* "கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்தொடு
செப்பிய நான்கும் தனக்குறுப் பாகக்
காமங் கண்ணிய நிலமைத் தாகும்"[327]

www.tamilarangam.net



குன்றக்குரவை. முல்லை நிலத்து ஆய்ச்சியர் ஆடியது ஆய்ச்சியர் குரவை. ஏறு தழுவி வென்ற ஆடவரோடு சேர்ந்து மகளிர் குரவை ஆடினர். சாமியைக் கும்பிட்ட போதும் அவ்வாறே குரவை ஆடினர். ஆணும் பெண்ணும் தழுவி ஆடுதல் தழூஉ எனப்பட்டது. விழாக் களிலும் போர்க்களத்திலும் ஆடிய துணங்கை ஆட்டத்தில் காமம் என்னும் கூறு உள்ளடங்கியிருந்தது. நாளாவட்டத்தில், அது மருத நிலத்துத் தலைமக்கள் பரத்தையருடன் சேர்ந்தாடும் காமக்களியாட் டமாகத் திரிந்தது.[331]

## ஆடலும் கூத்தும்

கூத்து இருவகைப்பட்டது. வேத்தியலும் பொதுவியலும் என்றோ, வரிக்கூத்தும் குரவைக்கூத்தும் என்றோ அதன் வகைகள் இருந்தன.[$] தமிழ்க்கூத்தின் இலக்கணங்களை வந்தேறிகள் வடுகமயமாக் கியபோது — அஃதாவது, சங்கதமாக்கியபோது — அக் கூத்துகளைப் புகழ்க்கூத்து-வசைக்கூத்து, ஆரியம்-தமிழ், தேசிக்கூத்து-இயல்புக் கூத்து, விநோதக்கூத்து-சாந்திக் கூத்து எனத் திரித்துரைத்தனர்.[333]

சொக்கம், மெய், அவிநயம், நாடகம் ஆகியனவே வேத்தியலின் (சாந்திக்கூத்தின்) உறுப்புகளெனக் கி. பி. 11ஆம் நூற்றாண்டில் வடுகச் சோழரின் காலத்தில் சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார் கூறுகிறார்.[334] சொக்கம் என்பது முழுமையான நடனம். அகத் தில் எழுகின்ற உணர்வுகளை உடலசைவுகளால் (மெய்த்தொழில் வழி யாய்) காட்டித் தேசி, வடுகு, சிங்களம் என்னும் மூன்று வகைகளில் ஆடிய நிலையே மெய் எனப்பட்டது. பாட்டின் பொருளுக்கு ஏற்பக் கையசைக்கும் திறனே அவிநயம் ஆகும். ஒரு கதையைத் தழுவிய கூத்துத்தான் நாடகம்.

ஆடல் அரங்குகளிலும் அரண்மனைகளிலும் உயர்திணை மக்க ளிடம் ஆடப்பட்டதே வேத்தியல் கூத்து. எளிய மக்களின் வாழ் வில் கண்ட ஆடல்கள் யாவும் பொதுவியலுக்குள் அடங்குவன. குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை, வெறியாடல் ஆகிய எழுவகைக் கூத்துகளும் அந்தப் பொதுவியலின் உறுப்புகளாகும். இதனை,

---

$ "வேத்தியல் பொதுவியல் எனவிரு திறத்து
மாத்திரை அறிந்து மயங்கா மரபின்.
ஆடலும் வரியும் பாணியும் தூக்கும்
கூடிய குயிலுவக் கருவியும் உணர்ந்து
நால்வகை மரபின் அவினயக் களத்தினும்
ஏழ்வகை நிலத்தினும் எய்திய விரிக்கும்
மலைப்பருஞ் சிறப்பின் தலைக்கோ லரிவையும்
வாரம் பாடும் தோரிய மடந்தையும்
தலைப்பாட்டுக் கூத்தியும் இடைப்பாட்டுக் கூத்தியும்"[332]

www.tamilarangam.net



"எழுவகைக் கூத்தும் இழிகுலத்தோரை
ஆடவகுத்தனன் அகத்தியன் தானே"[335]

என அடியார்க்குநல்லார் விளக்குகிறார். வேந்தர்களும் குறுநிலமன்னர்களும் போரில் வெற்றி ஈட்டிய நிலையில் எளியரும் படைஞரும் அவர்களின் முன்னால் ஆடவல்ல கூத்தாகவும் அந்தப் பொதுவியல் கூத்து இருந்தது.*

கூத்துகள் இரு வகையெனில், ஆடல்கள் பதினொரு வகைப் படும். அவை:[337]

| | |
|---|---|
| 1. கொடுகொட்டி | சுடுகாட்டில் சிவன் ஆடியது. |
| 2. பாண்டரங்கம் | நான்முகன் பார்க்கும்வண்ணம் தேரின்முன் நின்று பாரதி வடிவில் ஆடிய ஆட்டம். |
| 3. அல்லியம் | வஞ்சகனான கஞ்சனை வெல்வதற்காகக் கண்ணன் ஆடிய ஆட்டம். |
| 4. மல்லாடல் | மல்லனாகச் சென்று வாணன் என்னும் அவுணனை வெல்ல, கண்ணன் ஆடியது. |
| 5. துடியாடல் | சூரன் என்னும் அவுணனை வென்றபின் முருகன் ஆடிய ஆடல். |
| 6. குடையாடல் | அவுணர்கள் தோற்கும்வண்ணம் குடையைத் தாழ்த்தி முருகன் ஆடியது. |
| 7. குடமாடல் | காமனின் மகன் அநிருத்தனைச் சோ என்னும் நகரில் வாணன் என்பான் சிறையிட்ட போது, அவனை மீட்பதற்காகத் திருமால் ஆடியது. |
| 8. பேடியாடல் | ஆண்மையை இழந்து பேடியான நிலையில் காமன் ஆடிய ஆட்டம். |
| 9. மரக்காடல் | அவுணரை வஞ்சம் தீர்க்க வேண்டித் திருமாயவள் ஆடியது. |
| 10. பாவையாடல் | திருமகள் ஆடிய ஆட்டம். |
| 11. கடையம் | அயிராணி வயல்வெளியில் நின்றாடிய ஆட்டம். |

இந்தப் பதினொரு ஆடல்களையும் அந்தந்தத் தெய்வத்தின் கோலத்தைப் புனைந்து மாதவி ஆடிய ஆடல்களெனச் சிலப்பதிகாரம் கூறுகிறது.[338] மதத் தொன்மங்களைத் தழுவி அமைந்த ஆடல்கள் இன்னும் கோயிலுக்குள் கொண்டுபோகப்பட்டு அதற்குள் முற்றாக முடக்கப்படாத நிலையையே அது காட்டுகின்றது.

---

* "கொடிதேர் வேந்தரும் குறுநில மன்னரும்
பகை வென்றிருந்த விடத்து விநோதங் காணும்"[336]

www.tamilarangam.net



ஒரு கதையில் வரும் ஆளைப்போல் கோலம் புனைந்துகொண்டு ஆடிய கூத்தே வரிக்கூத்து. வேட்டுவர் மகளான சாலினியைக் கொற்றவைக் கோலம் பூணச் செய்து, வேட்டுவர் ஆடிய கூத்தான வேட்டுவவரியை அதற்கான எடுகோளாகக் காட்டலாம்.

எழுவரோ எண்மரோ ஒன்பதின்மரோ கையைக் கோர்த்துக் கொண்டு காமத்தையும் வெற்றியையும் ஆடலுக்கான பொருளாக வைத்து ஆடிய கூத்தே குரவைக்கூத்து. குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் ஆகிய ஏழிசைகளை ஆயர்குலப் பெண்டிர் எழுவராக உருவகப்படுத்தியும், குரலை மாயோனாகவும், இளியைப் பலராமனாகவும், துத்தத்தை நப்பின்னையாகவும் வைத்து வட்ட வடிவில் கைகோர்த்து நின்று முல்லைப்பண்ணைப் பாடிக் கொண்டு ஆடிய ஆய்ச்சியர் குரவையில், மதக்கருத்து உள்ளடங்கி இருக்கத்தான் செய்தது.

தொண்டகப்பறையையும் சிறுபறையையும் முழக்கிக் கோடும் மணியும் ஒலிக்க நறும்புகை காட்டிப் பூப்பலி செய்து குறிஞ்சிப் பண்ணைப் பாடி. வேலவனான குறவனை ஏத்திப் பாடி ஆடும் குன்றக் குரவையிலும்கூட, ஆடலும் வழிபாடும் மயங்கி நின்றன.

கண்கூடுவரி, காண்வரிக்கோலம், உள்வரி, ஆடல், புறவரி, கிளர் வரிக்கோலம், தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துகோள்வரி என வரிக் கூத்துகள் எண் வகைப்பட்டன.[339]

வேடர் பெண்ணான சாலினியைக் கொற்றவையாகக் கோல மிட்டு அமரச் செய்து, வேட்டுவர் ஆடிய கூத்தே வேட்டுவவரியானது.

கூத்தையும் ஆடலையும் தொழிலாகக் கொண்ட பெண்டிர், காலப்போக்கில் ஒரு தனி வகுப்பாகி, ‘அரங்கியல் மகளிர்’, ‘நாடக மகளிர்’ ஆயினர். ஊரின் நடுப்பகுதியான அகநகரில் அவர்களுக் கெனத் தனி இடம் ஒதுக்கப்பட்டது.[$] கலைகள் அவர்களின் முற்று டைமையாயின.

## வடுகரின் காமக்களியாட்டங்கள்

இந் நிலையில், அடுத்தடுத்து நடந்த வடுகப் படையெடுப்பு களால், தமிழரின் மண்ணும் கொடியும் முடியும் கோலும் கொற்றமும் உரிமையும் பறிக்கப்பட்ட நிலையில், அவர்களின் தன்னுரிமை-தனி யுரிமை — தனிநாட்டுரிமை ஆகிய ஓர்மைகளை மழுங்கடிப்பதற்காக

---

* “காவற் கணிகையர் ஆடற் கூத்தியர்
பூவிலை மடந்தையர் ஏவற் சிலதியர்
பயில்தொழில் குயிலுவர் பன்முறைக் கருவியர்
நகைவே ழம்பரொடு வகைதெரி இருக்கை”[340]

$ “எண்ணான் கிரட்டி யிருங்கலை பயின்ற
பண்ணியல் மடந்தையர் பயங்கெழு வீதி”[341]

www.tamilarangam.net



வென்றே கோயிலை நடுவமாகக் கொண்ட வடுகப் பிராமண வாழ் வியலும் கருத்தியலும் தமிழர்நாட்டில் ஊன்றப்பட்டன. தாம் கவர்ந்த தமிழரின் செல்வக்குவியல்களின்மீது மிக உயரக் குந்திக்கொண்டு கொற்றம் புரியத் தொடங்கிய வடுக வந்தேறிகளுக்குக் காமக்களியாட்டங்களே பெரும் பொழுது போக்குகளாயின. கழக(சங்க)க் காலத்தின் இறுதியில் 'கலையிலும் களியிலும் காமுற்றும் கழலைக் கிண்கிணி மடவோரிடமும்' மயங்கிப் பரத்தைத் தெருவே அடைக்கலம் என்று கிடந்தோரின் நிலையைக் கண்டு வருந்திய தமிழ்ச் சான்றோர்கள், அந்தக் கணிகையரின் தொடர்பால் வரும் இழிவைப்பற்றி எடுத்துக் கூறி நல்ல அறங்களையும் நெறிகளையும் மக்களிடம் நிலை நிறுத்தத் துடித்தனர்.

ஆனால், வடுக வந்தேறி அடிமைத்தனத்தின்கீழ் தோன்றிய பெருங்கோயில் பண்பாட்டைக் கட்டியெழுப்பத் துணைநின்ற இறைப் பற்றி (பத்தி) இயக்கத்துச் சமயக்குரவர்களோ, கூத்தையும் ஆடலையும் தொழிலாகக் கொண்ட கணிகையரை வந்தேறி வடுகர் கட்டிய பெருங் கோயில்களுக்குள் கொண்டுவந்து அவர்களை இறைவனுக்கே படைய லாக்கினர். "ஊர்தோறும் கோயில்கள், திங்கள்தோறும் விழாக்கள், கூத்தறாத கோயில்கள், விழவறாத வீதிகள், பூசனையில் கூத்தொலி, விழவொடு ஒலமிகு மங்கையர் தரும் ஆடல்கள் என இவ்வாறு ஆடலும் பாடலும் கோயிலுக்கு உரியதாக மாறின. கலையை ஆடல் மகளிரிடம் இருந்து பிரிக்காமல், அவர்களோடு கொணர்ந்து கோயில் களில் இணைத்தனர்."[342]

## சதிராட்டம் இல்லாத திருவிழாவா?

காளமுகப் பிராமணர்களுக்குத் தரப்பட்ட பரிசுப்பொருள் களில் உணவு முதலாவதாகவும், நிலமும் பெண்டிரும் அதற்கடுத்த தாகவும் இருந்தன.[343] அவர்கள், வரைமுறையற்ற ஒழுக்கத்தினர். அக் காளமுகப் பிராமணர்கள், வாத்சியாயனர் எழுதிய காமசூத்திரத்தைக் கரைத்துக் குடித்திருந்தனர்.[344]

பிற்காலக் கன்னடக் கல்வெட்டொன்று ஒய்சள அரசன் ஒரு வனைப் பற்றிக் கூறுகையில்,

> "..எங்கோ இருந்த தேவடியாள் தெருவை ஆண்டவனுக்கு அருகில் கொணர்ந்தவன்"[$]

எனக் கூறுவதைக் கொண்டு, அக் காலத்தில் வடுகர் எழுப்பிய கோயில் கள் எடுத்த கோலத்தைக் காணலாம். இதனால், பரத்தைகளெல்லாம் 'திருவிழை மகளிர்' என்றும், 'திருநிலை மகளிர்' என்றும், 'தேவரடி யாள்' என்றும் எளியர் வழக்கில் 'தேவடியாள்' என்றும் புதுப்புதுப் பெயர்களைப் பெற்றனர். தேவடியாள்களின் சதிராட்டம் இன்றிக்

---

$ "... to the vicinity of god, he brought a street of public women *(Vesya Veedhi)* which had been situated elsewhere (formerly)"[345]

www.tamilarangam.net



கோயில்கொண்ட தெய்வம் ஏதுவும் ஊரில் உலாப் போகாது.[@] கூத்தும் இசையும் இன்றிப் பூசனைகள் இல்லை. இறையடியார்க்கெல்லாம் அத் தேவடியாள்களே கண்ணின்மணியாயினர்.[#]

## ஆடல் இல்லாத வழிபாடா?

இறைவனுக்குரிய பதினெட்டு வழிபாடுகளில் பதினைந்தாவது இடத்தில் ஆடல் வைக்கப்பட்டது. ஆடலிலும பாடலிலும் வல்ல மகளிர் கோயில்களில் ஆயிரம் பேர் வரை இருக்க வேண்டும் என்றும், பூசையின் இறுதியில் ஆடல் நடைபெற வேண்டும் என்றும் சிவ புராணம் கூறுகிறது.[350] கோயில்களுக்காகத் தன்னையே ஒப்படைத்து விட்டு ஆடல்மகளான தேவடியாள் எவளும் தேவருலகில் நிலைத்திருப் பாள் எனப் பத்மபுராணம் பாடம் படித்தது.[351] கதிரோனின் கோயி லுக்கு ஆடல்மகளிரை அடியாளாக அமர்த்துவோரெல்லாம் அந்தக் கதிரோனின் ஒளியுலகத்தைச் சென்றடைவர் என்றொரு தொன்மம் கூறுகிறது.[352] எந்தெந்த நேரத்தில் எந்தெந்த வகையான ஆடலை ஆண் டவன் முன்னிலையில் நடத்த வேண்டுமென ஆகமங்கள் என்னும் கோயில் ஒழுகுகள் மிகத் தெளிவாக வரையறுத்தன.[353] இதனால், கோயில்கள் காமவேள்விக் களங்களாக விளங்கின.

தேவடியாள்களைக் கோயில்களில் அமர்த்தியதைப்பற்றிக் கிடைத்த முதல் குறிப்பைக் காஞ்சிபுரம் முத்தீச்சரர் கோயிலிலுள்ள பல்லவன் இரண்டாம் நந்திவர்மனின் கல்வெட்டில் (கி. பி. 759) காண லாம். அதையடுத்து, பல்லவன் பரமேசுவரவர்மனின் கூரம் செப்பேடு களும் கோயில்களில் பெண் அடிகள்மார் அமர்த்தப்பட்டதைப்பற்றிக் கூறுகின்றன. இந்தக் கோயில் பணிமகளிர் 44 பேரில் பன்னிருவர் கூத்திகளாவர். அடிகள்மார், மாணிக்கத்தார், கணிகையர், உருத்திரங் கண்ணிகையர் என்னும் பெயர்களில் கோயில் தேவடியாள்கள் இருந் தனர். பல்லவர்க்கு அடிமைப்பட்டிருந்த பாண்டியநாட்டிலிருந்த கீழ் வேம்பாநாட்டின் திருநெல்வேலியிலிருந்த கோயிலில், நடம்புரிவதற் கெனச் சாந்தன் தெய்வம் என்னும் தேவடியாள் அமர்த்தப்பட்டதாக

---

@ "கதிரொளி தீபம் கலசமும் உடனேந்தி
சதிரிள மங்கையர்தாம் வந்தெதிர் கொள்ள
இறைவன் உலாப்போந்தார், பூசனையில்
கூத்தொலி நிகழ்ந்தது"[316]

"அருமணித் தடம் பூண்முலை அரம்பையரொ டருளிப்பாடியார்
உரிமையிற் றொவார் உருத்திர பல்கணத் தார்
விரிசடைவிர திகளந்தணர் சைவர் பாசுப தர்கபா லிகள்
தெருவினிற் பொலியுந் திருவாவூ ரம்மானே"[317]

"பக்தர்க ளோடு பாவையர் சூழப் பலிப் பின்னே"[318]

\# "பண்ணிடைச் சுவைகள் பாடி ஆடிடும் பத்தர்க் கென்றும்
கண்ணிடை மணியர் போலும்...."[319]

www.tamilarangam.net



இரண்டாம் வரகுண பாண்டியனின் கல்வெட்டு (கி. பி. 865) கூறுகிறது.[354] கோயிலில் கூத்தாடத் தேவடியாள்களை அமர்த்தும் இவ் வழக்கம் தமிழகத்தில் பல்லவ வடுகரால் புகுத்தப்பட்டது என்பதையே இக் கல்வெட்டுகள் காட்டுகின்றன.

முதல் இராசராசன், தன்னுடைய 9வது ஆட்சியாண்டில் (கி. பி. 994) திருவாடுதுறைத் திருவிழாவில் ஆரியக்கூத்து ஆடிய வடுகக் கூத்தர்க்குச் சாக்கைக்காணி (நிருத்தியபோகம்) வழங்கினான்.[355] தேவடியாள் முறையை மிகப் பெரிய அமைப்பாக்கியவன் அந்த முதல் இராசராசனேயாவான். தன் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளிலிருந்த கோயில்களில் தேவடியாள்களாயிருந்த பலரை, தான் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலுக்கு மாற்றிய அவன், அக் கோயிலில் அமர்த்தப்பட்ட 402 தேவடியாள்கள் ஒவ்வொருத்திக்கும் ஒரு வேலி நிலத்தில் விளைந்த 100 கலம் நெல் ஒரு பங்கு என்னும் மேனியில் ஆடவல்லான் மரக்காலில் பங்கு அளந்தான். இந்தத் தேவடியாள்கள் போக, அவர்களைச் சுற்றி நின்ற நட்டுவனார், இசைஞர் முதலானோர்க்கும்கூடப் பங்கு வழங்கினான்.[356]

சுந்தரர் என்னும் நாயனார் பரவையார் என்னும் கணிகையை மணந்தார். சமயக்குரவர்களுக்கும் தேவடியாள்களுக்கும் இடையில் விளங்கிய மிக நெருங்கியஉறவை இது காட்டும்.*

## கொழுத்த மடங்கள்

விரித்திகளால் பிராமண அகரங்கள் மேலும் மேலுமென வீங்கிக் கொழுத்தன. இதனால், அகரகார நிலக்கிழமையின் அடுத்த கட்டமான மடங்களும் மடவளாகங்களும் தோன்றின. பிராமண மடவளாகங்கள் எல்லாம் பிராமண நகரங்களாகவே பொதுவாக இருந்தன. ஓர் ஊர் — ஒரு கோயில் என்றிருந்த பழைய நிலை போய், ஒரே மடத்தின்கீழ்ப் பல கோயில்கள் — பல ஊர்கள் — என்னும் நிலை இம் மடங்களினால் தோன்றியது. அகரகார நிலக்கிழமையின்கீழ் விளங்கிய விளைப்பு உறவுகள் அதனால் புதிய வடிவங்களை எடுத்தன. சில பத்துப் பிராமணக் குடும்பங்கள் என்றிருந்த பழைய அகரகாரங்கள் போய், புதிய மடவளாகங்களின் வழியாக நூற்றுக்கணக்கான பிராமணக் குடும்பங்களைப் புரக்க வேண்டிவந்தது. மடவளாகங்களின் பிடிப்பும் வீச்சும், நாடுகளையும் கூற்றங்களையும் கடந்து, வளநாடுகளையும் பெருவளநாடுகளையும்கூட வளைத்துப் போடும் அளவுக்குப் பெரிதாய் விரிந்தது.

மடவளாகம் என்னும் குமுகப்-பொருளியல் கட்டுமானத்தின் எழுச்சிக்கு ஏற்ப, ஊராட்சி அதிகாரத்தின் கட்டுமானமும் உரிய மாற்றம் பெற்றது. இதனால், பெருமக்கள் (மகாசனங்கள்) என்போரின் அகரகாரப் பேரூராட்சி தோன்றியது.

---

* அடுத்துச் சங்கிலியார் என்னும் வேளாளப் பெண்ணையும் மணந்தார்.

www.tamilarangam.net



மடவளாகப் பொருளியலின் வலிமைக்கேற்ற அரசியல், ஆட்சியியல் கட்டுமானங்களும் அவற்றுடன் உருவாகின. அகரகார நிலக்கிழமைப் பொருளியலின்கீழ் அம் மடங்களுக்குத் தன்னுரிமை இருந்தது. அகரகாரங்கள், மடங்கள் ஆகியவற்றின் அதிகாரங்களில் அரசும்கூடத் தலையிட முடியாத நிலையில், "நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்!" என அகரகாரங்களும் மடவளாகங்களும் இறுமாப்புடன் தோள்தட்டி அக்கால் பாராண்ட மன்னனின் ஆட்சி வரம்பையே கேள்விக்குரியதாக்கின.

## தமிழரைச் சுரண்டி மடங்களை வளர்த்தனர்!

கோயில்களில் பெருஞ்செல்வங்கள் குவிக்கப்பட்டன. தமிழரிடமிருந்து சுரண்டிய வடுகப் பிராமணர்கள் குவித்துவைத்த பெருஞ்செல்வங்களைக் காப்பதற்கென்றே வந்தேறிகளின் அரசுகள், பெரிய கோயில்களில் தனிப் படைப்பிரிவுகளை நிலையாக நிறுத்தி வைத்தன. கடைகண்ணிகள், வணிக நிறுவனங்கள், தொழில் நடுவங்கள், சத்திரங்கள், சேமிப்புக் கிடங்குகள் முதலானவை தோன்றுவதற்குப் பெருங்கோயில்களில் குவிந்த பணமும் மடவளாக அமைப்பியலுமே வழிகோலின. பல்வகைப்பட்ட வேளான் விளைப்புப் பண்டங்களை அக்கம் பக்கத்து உழவர்குடியினர் கொண்டுவந்து பண்டமாற்றுச் செய்யவோ விற்கவோ, அகரகாரங்களும் மடங்களும் ஊக்குவித்தன. தமக்குத் தேவையான வணிகத்தையும் ஊழியங்களையும் கம்மாளரையும் அவை கவர்ந்து ஈர்த்தன. கோயில் நகரங்கள் தோன்றியபின், பிராமணர்க்கு உணவிட்டுப் புரந்த ஊட்டுப்புரைகளும் சத்திரங்களும் துணைஅமைப்புகளாகத் தோன்றின. ஊர்த் திருவிழாக்கள் பெரிய அளவில் நடந்தன. இதனால், வழிபாட்டுத் தலங்களாயிருந்த கோயில் ஊர்களும் நகரங்களும் மடங்களும், மக்களைத் திருப்பயணம் வந்துபோக ஊக்குவித்தன. இந்த இயற்பாட்டால் நகரமயமாக்கத்தின் வேகமும் வரம்பும் கூடின.

கோயில்கள், நிலஅடைமான வங்கிகளாகவும் விளங்கின. கடன் கேட்டு வந்த குடியானவர்களும் உழவர்களும் கம்மாளரும் தத்தம் நிலங்களைக் கோயில்களுக்கு ஒற்றிவைத்தனர். நன்கொடைகள், அறக்கொடைகள், நில ஒற்றிவைப்புகள் ஆகியவற்றின் வாயிலாகக் கோயில் சொத்துகள் மளமளவெனப் பெருகின.[357]

## அரசரையே ஆட்டிப்படைத்த மடங்கள்!

கோயில் அறநிலைய, மடவளாகச் சொத்துகளின் பெருக்கத்தால் கி. பி. 7ஆம் நூற்றாண்டில் எழுந்த சமய இயக்கமே இறைப்பற்றி (பத்தி) இயக்கம். அந்தப் புதிய சொத்து வடிவத்திற்குக் காப்புத் தேடப் புகுந்ததால் வந்த இயக்கமே, அப் பற்றி இயக்கம் என்பதும்

www.tamilarangam.net



ஒரு விளக்கம். வந்தேறி வடுகப் பிராமணர்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட இறையிலி நிலவுடைமைகளாகவே கோயில் சொத்து களும் மடச்சொத்துகளும் பெரிதும் இருந்தன. ஊருக்கே புதியவரா யிருந்த இவர்களுக்கும் இவர்களின் சொத்துகளுக்கும் போதிய பாது காப்பு இல்லை. இவர்களுக்கான அகரங்களை அமைக்கையில் காணி களைப் பறிகொடுத்த தமிழ் மக்களின் எதிர்ப்பு வேறு மிக வலுவாக இருந்தது. தனிப்படை கட்டி அச் சொத்துகளைக் காக்கும் திறனில் லாத அந்த ஒட்டுண்ணிக் கூட்டம், மக்களை இறைவனிடம் முற்றாக அடிபணியச் சொன்னது. பற்றி (பக்தி) என்னும் கருத்தியலைப் பரப் பியது.[358] கோயில், மடவளாகச் சொத்துகளுக்குக் காப்பாகவும் காவ லாகவும் கருவியாகவும் அந்தக் கருத்தியல் வடிக்கப்பட்டது.

முதலீடுகளையும் வணிகச் செல்வங்களையும் வட்டிக்கடன்களை யும் வைத்து அரசர்களையே ஆட்டிப்படைக்கவல்ல அருக, புத்த மதத் தலைவர்களைத் தங்களின் மிகப் பெரும் போட்டியாளராகப் பார்த்த தமிழ்ப் பார்ப்பனரும் தமிழ நிலக்கிழார்களும், வடக்கத்தியரான அந்த அருக, புத்தத் துறவியர்களையும் அவர்களின் மடங்களையும் ஒழிக்க எண்ணித் தொடங்கிய ஓர் இயக்கமே அந்த இறைப்பற்றி (பத்தி) இயக்கம்.

அக் காலத் தமிழரிடம் தமிழ் ஓர்மை எழுவதற்கு வடுக வந் தேறிகள் எழுப்பிய கட்டுமானங்கள் ஓரளவு வாய்ப்பளித்தன. வடுகப் பிராமணர்கள் ஏந்திவந்த ஆதிசங்கரரின் ஒருமையியம் (அத்துவைதம்), மிகவும் அருவமானதாகவும் எளிய மக்களின் தலைக்கு எட்டாததாக வும் இருந்தது. ஆனால், இறைப் பற்றி இயக்கத்தால் எளியவரை எளிதில் எட்ட முடிந்தது.

## காராண்மையர் போராடினர்

தமிழர்களின் நிலங்களைக் கோயில் நிலங்களாக வடுகச் சோழர் கள் வல்லந்தமாக மாற்றியபோது, காராண்மையாளரும் கீழ்க்காராண் மையாளரும் அதை எதிர்த்து வெள்ளாண்மை செய்யாமல் ஒழிந்த நிகழ்வுகளும் உண்டு.

முதலாம் பராந்தக சோழனின் 11வது ஆட்சியாண்டில் (கி. பி. 918), ஆண்டநல்லூரிலுள்ள கோயிலுக்கு 3 வேலி நன்செய் நிலத்தைக் குடிநீக்கிய தேவதானமாக வழங்குவதற்கு இசையுமாறு செம்பியன் இருக்குவேள் என்னும் பூதி பராந்தகன், சோழ மன்னனை வேண்டி னான். குடிநீக்கிய அத் தேவதான நிலத்திலிருந்து ஒரு வேலிக்கு 120 கலம் நெல் என்னும் மேனியில் மொத்தம் 360 கலம் நெல்லைக் கோயி லுக்குக் கட்ட வேண்டியதாயிற்று. ஏழாண்டுகள் கழித்து, அரையன் வீரசோழன் என்பவனைக் குடிநீக்காக் காராண்மையாளனாக அந் நிலத்தில் அமர்த்திட அரசன் ஆணையிட்டான். இதனால், அவ் வீர சோழன், கோயிலுக்கு 300 கலம் நெல்லை அளக்க வேண்டியிருந்தது.

www.tamilarangam.net



எஞ்சிய 60 கலம் நெல், அந்த வீரசோழனுக்குக் கிடைத்தது போலும். ஏழாண்டுகளுக்குப் பிறகு, ஆண்டநல்லூர் ஊராருக்கு அந்த 3 வேலி நிலத்தையும் தான் கட்டிவந்த கடமை அளவுக்கே அந்த அரையன் வீரசோழன் விட்டுக்கொடுத்தான்.[359] அவ்வாறு அந்த ஊர்நிலத்தைக் குடிநீக்கித் தேவதானமாகச் செய்ததை எதிர்த்துப் பதினான்கு ஆண்டு காலமாக அவ் வூரார் போராடிவந்ததையே அது காட்டும்.

பாண்டியநாட்டை வென்ற வடுகச் சோழர்கள் அந் நாட்டைச் சில காலம் நேரடியாக ஆண்டுவந்தனர். அவர்களின் ஆளுநர்கள் அப்போது சோழபாண்டியர் என்றழைக்கப்பட்டனர். அச் சோழ பாண்டியரில் ஒருவனான சடையவர்மன் சுந்தரன், கி. பி. 1026ஆம் ஆண்டில் தன்னுடைய தந்தையின் பெயரில் தோற்றுவித்த இராசேந்திர விண்ணகர் என்னும் கோயிலுக்கு மானபரண சதுர்வேதிமங்கலத்திலிருந்து வரும் வருவாயைத் தருமாறு பணித்தான். அக் கோயிலுக்குச் செலுத்த வேண்டிய நிலவருவாயான 3,840 கலம் 2 தூணி 7 நாழி நெல், பத்தாண்டுகளாகக் கட்டப்படவில்லை. அந்தப் பிரமதேயத்தின் நிலங்கள் யாவும் அளத்தல் செய்யப்பட்டிருப்பினும், அரசனின் அந்த ஆணைக்குத் தம் எதிர்ப்பைக் காட்டும் முகமாக் காராண்மையாளர் யாரும் அக் காணிகளில் வெள்ளாண்மை செய்யவில்லை. இதனால், அவ் வூருக்கு 10 வேலி நிலத்தைக் கூடுதலாகத் தந்து, அதை ஆறு பேருக்குக் குடிநீக்காக் காராண்மையாகச் செய்த பின்னரே, நிலைமை ஒருவாறு திருந்தியது.[360]

## புதிய வரிகள்

சடையவர்மன் சுந்தரன் கி. பி. 1037இல் பொருநை ஆற்றின் கிழக்கரையிலிருந்த மேல்வேம்பாநாட்டு ஊரான கல்லூரிலிருந்த 2 வேலி நிலத்தைச் சேரன்மாதேவியிலுள்ள கைலாசமுடையார் கோயிலுக்குத் தேவதானமாக்கிச் சிவபாதசேகரநல்லூர் எனப் பெயரிட்டான். இந் நிலங்களிலிருந்து 16 காசும் 6 மாவும், வேலிக்கு 219 கலம் 1 தூணி 1 பதக்கு 4 நாழி நெல்லும் காணிக் கடனாகக் கட்ட வேண்டுமென ஆணையிட்டான்.[361] ஈராண்டுகள் கழித்து, அந்த நிலங்களின்மீது காராண்மையுரிமை பெற்றிருந்த நக்கன் பலதேவன் என்னும் வெள்ளாளனும், மாதவன் ஈசன், சுப்பிரமணியன் கருணாகரன், சாத்தன் தேவன், சாத்தன் திட்டை, நக்கன் பேரான், நக்கன் சேந்தன், தேவன் தான்தோன்றி, திட்டன் பட்டன் ஆகிய பிறரும் அந்த நிலங்களின் மீதான காராண்மையுரிமை தங்களுக்கு வேண்டவே வேண்டாமெனக் கடைசெறிப்பு (relinquishment deed) எழுதிக்கொடுத்தனர். தம்முடைய ஊரான கல்லூரிலிருந்து பிரித்தெடுத்துத் தேவதான இறையிலி நிலமாக்கப்பட்ட 2 வேலி நிலத்தில் பயிரிடவும், காணிக்கடனைச் சேரன் மாதேவி கைலாசமுடையார் கோயிலுக்குக் கட்டவும் முடியவில்லை என்பதே அவர்களின் கூற்றாகும். அதனால், அந் நிலங்கள் தங்களுக்கு இனி வேண்டாமெனச் சொல்லி அரசு அதிகாரியாகிய நாலாறு

21.

www.tamilarangam.net



உடையாரிடம் திருப்பித்தந்துவிட்டனர். ஆகவே, கோயில் அதிகாரிகளான தேவகன்மிகள் தாங்களாகவே சிலரைக் குடியானவர்களாக அமர்த்தி நேரடியாகவே உழுவித்துக் கொள்ளலாம் என்று முடிவானது.[362]

கி. பி. 1258-59ஆம் ஆண்டில், கீழ்க்குடியினர்மீது கூடுதலாகப் பொன்வரி, அந்தராயம், (அரச அதிகாரிகளுக்குத் தேவதான நிலங்கள் கட்ட வேண்டியிருந்த) கோயில்தமர்பேறு முதலான கூடுதல் வரிகளை வடுகச் சோழர்கள் விதித்தனர். வரிச் சுமையைத் தாங்கவியலாத பட்டுக்கோட்டைக் கீழ்க்குடிகள், கோயில் நிலங்களில் பயிரிடுவதையே நிறுத்தினர். இதனால், கோயில்கள் பழுதுபார்ப்பு யாதுமின்றிப் போனதுடன், அக் கோயில்களில் வழிபாடுகளும் ஓய்ந்தன. களப்பாளன் என்னும் நாடாள்வான், உழவர்குடியை வருத்திய வரிகளை ஒழித்துக் கோயில் வழிபாட்டை மீட்டான்.[363]

வெள்ளான்வகை நிலத்தைக் கோயில் இறையிலியாக வல்லந்தமாகச் செய்த வடுக வந்தேறிகளின் செயலை எதிர்த்த அமைதி வழியான எதிர்ப்பையே அவை காட்டும்.

## குடியானவர் தலையில் கோயில்!

கோயிலுக்கு ஒரு நிலத்தைக் கொடையாக்கும்முன், அரசுக்கு ஒருவர் செலுத்திவந்த காணிக்கடன் அந்தக் கோயிலுக்கு அளந்த மீயாட்சி(மேல்வார)ப் பங்கில் அடங்கியது. வெள்ளான்வகையின்கீழ், ஒரு காணியாளன் நெற்களத்திலேயே ஊராருக்கு நேரடியாகவே காணிக்கடன் கட்டும் வழக்கம் இருந்தது. ஆனால், காணிக்கடனாகக் கட்ட வேண்டிய நெல்லை உலர்த்தல், அழிமானங்கள், வண்டிச் சத்தம் ஆகியவற்றால் நேர்ந்த செலவினங்களையும்கூடக் கோயில் பற்றை உழவடைக்கு எடுத்த காணியாளரே செலுத்த வேண்டியிருந்தது. ஊரவை மீதும், கோயில் மீதும், பிரமதேயத்தின் மீதும் விதிக்கப்பட்ட புதிய புதிய பணிக்கடன்களும் தீர்வைகளும் இறுதியில் காணியாளர் தலைமீதும் குடியானவர்களின் தலைமீதும்தான் வந்து விடிந்தன.[364] அவ் வகையில், 642 கலம் 6 குறுணி $2\frac{3}{4}$ நாழி $2\frac{1}{2}$ செவிடு நெல்லை 5 நாழி அடங்கிய நாராயம் என்னும் முகத்தலளவையில் அளந்தது போக, $35\frac{1}{4} + \frac{3}{80}$ காசை உருவுகோல் நிலன் காசாகவும் 5 காசைக் காட்சி எருதுகாசாகவும் ஆண்டுதோறும் கட்ட வேண்டுமென வரையறை செய்து, பிரமதேயமாயிருந்த 5 வேலி நிலத்தைத் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அம்பாசமுத்திரத்திற்கு அருகிலுள்ள திருவாலீச்சரம் கோயிலுக்கு வெள்ளான்வகைத் தேவதானமாக ஆக்கினர்.[365]

சுசீந்திரம் கோயிலுக்குத் தேவதானமாக விடப்பட்டிருந்த ஊர் தான் நிருபசேகரநல்லூர். இவ்வூரிலுள்ள கீழ்க்காராண்மை உடைய குடிகளும் (tenants having sub-occupancy with cultivating rights), அவர்தம் பங்காளிகளும் தத்தம் மீயாட்சியுடையார்க்கு (the principal

www.tamilarangam.net



grantees) ஒரு மா நிலத்திற்கு 3 கலம் என்னும் மேனிக்கு நெல்லை அளக்க வேண்டுமெனப் பெரியான் மூவேந்த வேளார் என்னும் அதிகாரி கி. பி. 999ஆம் ஆண்டில் ஆணையிட்டான். ஒரு மா அளவி லான ஒருபூ (single crop) நிலத்திற்கு அளந்த 'முறைப்படி' போக, 3 கலம் 1 தூணி நெல்லைக் கோயிலுக்கு மீயாட்சியாக (மேல்வாரமாக) அளக்க வேண்டுமெனச் சொல்லி அந்த அளவைப் பின்னர் உயர்த்தி னான். இருபூ (two crop) நிலங்களுக்கு இம் மீயாட்சி இரு மடங்காக்கப் பட்டது. ஒருபூ நிலத்திற்கு 11% என்றும், இருபூ நிலத்திற்கு 22% என் றும் மீயாட்சி உயர்வு இருந்தது. ஆனால், கோயில் ஆட்சியர்களான மூலப்பருடையார்கள், கி. பி. 1000இல் கோயிலையும் தேவதான நிலங் களையும் ஊர்ப் பேரவையிடம் திருப்பித் தந்துவிட்டனர்.[$] தேவதான நிலங்களிலிருந்து காணிக்கடனைத் தங்களால் தவறாமல் தண்டவோ, கோயிலைச் சரிவர நடத்தவோ முடியவில்லையென ஊராரிடம் அவர் கள் கூறினர்.[366]

## கடைத் தேங்காயும் வழிப்பிள்ளையாரும்!

கோனாட்டின் முருங்கூரில் விழுமியன் என்னும் புவன முழு துடையான் பல்லவராயன் என்பான் வாங்கிப் போட்ட நிலங்கள் யாவும் அவனுடைய பிறங்கடையினர் ஊரைவிட்டே போய்விட்ட தால் காராண்மையுரிமை (oocupancy right) கொண்டாடுவாரின்றி வெறுமே கிடப்பதாகச் சொல்லக் கேட்ட பாண்டியர் தலைவன் காங்கேயராயன், அந்த நிலங்களைக் குடுமியான்மலையில் புதிதாகக் கட்டப்பட்ட ஆளுடைய நாச்சியார் கோயிலுக்குக் கொடையாக அளித்துவிட்டான். பின்னர், அந்த நிலத்தின் சொந்தக்காரனான உடையனாயர் என்னும் சயதுங்கராயன் என்பான் வந்து தன் உரிமை ஆவணத்தைக் காட்டிய பிறகு, அந்த நிலங்கள் அவனிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டன.[367]

முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் (1268-1311) ஆட்சிக் காலத்தில், தேவர் ஆரியச் சக்கரவர்த்திகள் என்பான் சில நிலங்களைக் குத்தகைக்கு எடுத்தான். சிவப்பிராமணர் சிலர் அவனுக்கு மேல் ஒப்பம் (குடிப்புனை) இட்டனர். இந் நிலையில், அவ் வூர்ப் பிராமணன் ஒருவன் கொல்லப்படவே, ஊரே வெறுமையானது. இதனால், கோயி லுக்குக் கட்ட வேண்டிய காணிக்கடன் செலுத்தப்படவில்லை. அக் கோயிலின் ஊழியர்களான ஆண்டார்கள், அக் குடிப்புனையிலிருந்து விடுபட வேண்டி, கோயிலிடமிருந்தே 350 பணத்தைக் கடனாகப் பெற்றனர். குத்தகைக்கு எடுக்கப்பட்ட நிலங்கள் அந்தக் கோயிலுக்கு மீண்டன. இவ்வாறு வாங்கிய கோயில் கடனைக் குறிக்கும் முகமாக,

$ பருடை என்பது கோயில் ஆட்சிப்பணியைப் பார்த்துவந்த ஓர் அமைப் பாக இருந்திருக்கலாம்.

www.tamilarangam.net



அந்தக் காணிகளில் முத்தலைவேல் (திரிச்சூலம்) பொறித்த கற்கள் நடப்பட்டன. இந் நிலையில், ஆரியச் சக்கரவர்த்தி உள்ளிட்ட குத்தகை யாளர்கள் (lesses) அனைவரும் ஊருக்குத் திரும்பினர். அவர்கள் கட்ட வேண்டியிருந்த பணத்தை வாங்கிக் கொண்டு, அந் நிலங்கள் மீண்டும் குடிநீங்கா இறையிலி நிலங்களாகவே அந்தந்தக் காராண்மையாளரிடம் ஒப்படைக்கப்பட்டன.[368]

## புறநீசல்களாய்ப் பிரமதேயங்கள்!

கண்ட கண்ட நிலங்களெல்லாம் கோயில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்டு இறையிலியாக்கப்பட்டன.

இரண்டாம் இராசாதிராசனின் 11வது ஆட்சியாண்டில் (கி. பி. 1174-75) வாரணவாசி எனப்பட்ட கீழசார் என்னும் ஊரே கோயிலுக்கு இறையிலி ஆக்கப்பட்டது. ஆனால், அச் சோழ அரசன் அவ்வூரில் காராண்மையுரிமை கொண்டிருந்த மன்றாடிகள் தொடர்ந்து காராண்மையாளராக நீடிக்கலாம் என்றும், கோயிலுக்கு அவர்கள் 70 மாடை காசையும் அந்தராயத்தையும் பாட்டத்தையும் கட்ட வேண்டும் என்றும் ஆணையிட்டான்.[369]

நாட்டார், பிரமதேயக் கிழவர், தேவதானத்து ஊர்களிலார், பள்ளிச்சந்தம், சாலைபோகம், நகரங்களிலார் ஆகியோருக்கு ஒரு கட்டளை விடுத்து, இராசேந்திரநல்லூர் என்னும் புதிய ஊரை வீர ராசேந்திர சோழன் உருவாக்கினான். அதைத் திருத்தாடகை ஈச்சரம் என்னும் கோயிலுக்குத் தேவதானமாக்கினான். இந்த ஏற்பாடு, முதல் குலோத்துங்கனின் 11வது ஆண்டு முதல் (கி. பி. 1081) நடைமுறைக்கு வந்தது.[370]

நாடாள்வான் ஒருவன், வாலிகண்டபுரத்தைத் திருநாமத்துக் காணியாக்கிக் கோயிலுக்குக் கொடையாக்கியதைப்பற்றி இன்னொரு கல்வெட்டும் கூறுகிறது.[371]

குடிநீங்கித் தேவதானமாகவும், பள்ளிச்சந்தமாகவும் இருந்த சிறுகாளூர், கல்லகம், துடரி, குறிஞ்சிப்பாடி ஆகிய ஊர்களிலிருந்த நிலங்கள், குடிநீங்கா இறையிலிகளாக ஆக்கப்படுவதற்குமுன் காராண்மையாளராயிருந்தவர்களுக்கு அவரவரிடமிருந்த பழைய காணிகள் திருப்பித் தரப்பட்டு, அவர்கள் தாங்கள் செலுத்த வேண்டிய காணிக் கடனைக் கோயிலுக்குச் செலுத்த வேண்டுமென அந்த அரசாணை அறிவித்தது.[372] இவ்வாறு, குடிநீங்கித் தேவதானங்கள் குடிநீங்காத் தேவதானங்களாக ஆக்கப்பட்டதும் உண்டு.

திருவயிந்திரபுரம் என்னும் புதிய பிரமதேயத்தை கி. பி. 12ஆம் நூற்றாண்டில் உருவாக்கியபோது, அதில் குடியேற்றப்பட்ட பிராமணர்கள், ஒரு வேலிக்கு 20 கலம் நெல்லையும் அப்போது நாட்டில் வழக்கத்திலிருந்த காசு வடிவிலான வரிகளையும் கட்ட வேண்டு

www.tamilarangam.net



மெனச் சோழ அரசன் ஆணையிட்டான். அந்த ஊர் நிலங்கள் குடி நீங்காத் திருவிடையாட்டமாயின.[373]

தனியர் ஆக்கிய இறையிலிகள்

காணிகளை வாங்கிக் கோயில்களுக்குக் கொடையாக அளிக்குமாறு தனியாட்களும்கூட ஊக்குவிக்கப்பட்டனர்.

வடுகச் சோழன் முதலாம் இராசாதிராசனின் 31வது ஆட்சியாண்டில் (கி. பி. 1049) திருவொற்றியூர்ப் பிரமதேயத்தார், ஆரிய தேசத்தைச் சேர்ந்த பிராமணத்தியான பிராமணி என்பாளுக்கு ஒரு நிலத்தை விற்றனர். அந்த வடுகச்சி, அதைக் கோயிலுக்கு எழுதிவைத்தாள். இவ்வாறு கோயில் நிலமாக்கப்பட்ட நிலத்திலிருந்த உழுகுடிகள் அதனால் சில்லிறை, சோறுமாட்டு (எல்சோறு), வெட்டி, அமஞ்சி முதலானவற்றைக் கட்டுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டனர்.*

வன்னாட்டில் காணியுரிமையுடைய சுத்தமலன் என்னும் செயங்கொண்டசோழ வன்னாடானுடையான் என்பவன் முதலாம் குலோத்துங்கனின் 29வது ஆட்சியாண்டில் (கி. பி. 1099) தன் நாட்டிலுள்ள 20 ஊர்கள் அடங்கிய 20 வேலி அளவிலான தன் சொந்தக் காணியை இறையிலியாக்கி வாலிகண்டபுரத்துக் கோயில் ஒன்றுக்கு அதைத் திருநாமத்துக்காணி ஆக்கினான்.[375] ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு தனக்கு ஒரு பிள்ளை பிறந்ததற்காகத் தன்னுடைய சொந்தக் காணியான ஓர் ஊரையே வாலிகண்டபுரத்துச் சிவன் கோயிலுக்கு அதே வன்னாடுடையான் கொடையாக ஈந்தான்.[376]

அனபாய சதுர்வேதிமங்கலத்துக் கிழவன் ஒருவனிடமிருந்து நிலத்தை வாங்கிய ஒரு பிராமணன், அதைக் கோயிலுக்குக் கொடையாகத் தந்தான்.[377] அதே போல், அனபாயசதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த சிரீகிருஷ்ண பட்டனிடமிருந்து நிலம் வாங்கிய பெரிஞாறு என்னும் ஊரின் நெசவாளர்கள், அதைக் கோயிலுக்குக் கொடையாகத் தந்தனர்.[378]

வாயலூர்ப்பள்ளி என்னும் ஊரில் காணி வைத்திருந்த கொடும்பாளூர்க் கிழவன் ஒருவன், கன்னத்தூரில் வாங்கிய ஒரு நிலத்தையும் அனபாய சதுர்வேதிமங்கலத்தில் வாங்கிய இன்னொரு நிலத்தையும் கோயிலுக்குக் கொடையாக அளித்தான்.[379]

கிளியூரில் ஆறு காணிகளை இறையிலியாக்கிய மூவேந்த வேளான் ஒருவன், அவற்றைக் கோயிலுக்கு வழங்கினான். அவற்றில் இரண்டு நிலங்கள் இரு நடனக்காரிகளால் தரப்பட்டவை.[380]

* "இந்நிலத்தில் குடியிருந்து இந்நிலம் உழும் குடிகளை சில்லிறை, சோறு மாட்டும், வெட்டி, அமஞ்சியும் உள்ளிட்டன எப்பேர்ப்பட்ட இறைகளும் கட்ட பெறாதோம் ஆகவும் விற்றுக் குடுத்தோம்..."[374] எனச் செங்கை மாவட்டத் திருவொற்றியூர்க் கல்வெட்டுக் கூறுகிறது.

www.tamilarangam.net



குறுக்கை (இக்காலப் பெரிய குறுக்கை) என்னும் ஊரின் உடையானாயிருந்த சொக்கன் என்னும் மறைகலந்தான் தென்னவரையன் மூன்றாம் இராசராசனின் 26வது ஆட்சியாண்டில் (கி. பி. 1242) தட்டான் குறிச்சி என்னும் ஊரைச் சிவன் கோயிலுக்குக் கொடையாக ஈந்தான். இதனை அவன் 'இராசராசப் பெருவிலை' என்னும் அரசு ஏலத்தில் எடுத்தான். இதற்குமுன் அந்தக் கோயிலுக்குத் தான் அளித்திருந்த கால்பங்கையும் சேர்த்து, முழு ஊரையுமே அவன் அக் கோயிலுக்கே தந்தான்.[381]

அதே சொக்கன் மறைகலந்தான் தென்னவரையன், மூன்றாம் இராசராசனின் 27வது ஆட்சியாண்டில் (கி. பி. 1243) குறுக்கையில் தான் வாங்கிய நன்செய் 1½ வேலி நிலத்தையும், புன்செய் 10½ வேலி நிலத்தையும், சண்மங்கத்திலிருந்த ஊர்நத்தம், நன்செய், புன்செய் உள்ளிட்ட தன் சொந்த நிலங்களில் $1/_8$ பங்கையும் சேர்த்து, அதே சிவன் கோயிலுக்குக் கொடையாக அளித்தான். தன் ஊராகிய சண மங்கலத்தில் தனக்கிருந்த $3/_8$ பங்கு நிலங்களை அவன் பிராமணர்க்கு ஏற்கெனவே கொடையாக அளித்திருந்தான்.[382]

மூன்றாவது இராசராசனின் காலத்தில் திருவரங்கத்திற்கு அருகில் காவிரிக்கரையிலுள்ள வாளாடி என்னும் ஊரிலிருந்த காணியைத் தருமபுரம் உடையான் என்பான் திருவானைக்கா கோயிலுக்கு விற்றான். அதற்குமுன் அவன் ஏழு வாளாடி உடையார்களிடமிருந்து அந்த ஊரை வாங்கி, தன் தனிச்சொத்தாக வைத்திருந்தான். அந்த நிலத்தில் புன்செய், ஊர்நத்தம், புலைச்சேரிநத்தம், மனைவீடு ஆகியன அடங்கியிருந்தன.[383]

கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலக்கொடைகள் யாவும் இறையிலியாக்கப்பட்டவை. இது போன்ற சான்றுகளை அடுக்கிக் கொண்டே போகலாம். நிலங்களை வாங்கிக் கோயில்களுக்கு இறையிலிகளாக்குவது பழைய தஞ்சை மாவட்டத்தின் தென்கிழக்குப் பகுதியில் — குறிப்பாக, வடுகச் சோழ வல்லரசின் அறுதிநாட்களில் — பெருமளவில் நடந்தது.[384] பிரமதேயமாயினும், வெள்ளான்வகை ஊராயினும், நகரமாயினும், நிலங்களை இவ்வாறு கோயில்களுக்கு இறையிலி யாக்குவது வடுகச் சோழர் காலத்தில் மிகப் பரவலாயிருந்தது.

## கோயிலுக்கு மட்டும் அடிமட்டத் தரப்படி!

கோயில் பணிகளுக்குக் கைமாறாக ஒரு நிலத்தைக் கொடையாய்ப் பெற்ற பூசாரியையே கோயிலார் என்றனர்.[385] ஆண்டார் எனப்பட்ட கோயில் பணியாளர்க்கு அவர்களின் வாழ்க்கைச் செலவுக்காகவெனக் கோயில் நிலங்கள் ஒதுக்கப்பட்டன. திருவாரூர்க் கோயிலில் இந்த ஆண்டார்கள் நூறு பேரளவுக்கு இருந்தனர். திருவாரூர்க் கோயிலுக்குச் சொந்தமான மூன்று தேவதான ஊர்களி

www.tamilarangam.net



லிருந்த ஆண்டார்களுக்கென 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் 31 வேலி நிலம் ஒதுக்கப்பட்டிருந்தது.[386]

திருவாய்ப்பாடித் தேவர் கோயிலின் நிலங்களை — எண்ணாயிரத்திலிருந்த திருமால் கோயில் நிலங்களைத் தரப்படுத்தியதைப் போன்றே — எவ்வளவு குறைவாக இருக்க முடியுமோ அவ்வளவு குறைவாக வைத்துக் காணிக்கடன் தண்டச் சொல்லிச் சோழன் இராசாதிராசன் கி. பி. 1048ஆம் ஆண்டில் ஆணையிட்டான்.[387] ஊரின் பிற நிலங்களின் தரங்களை மாற்றினாலும், கோயில் நிலங்கள், திரிபுவனி கல்லூரி ஆகியவற்றின் காணித் தரங்களை மட்டும் மாற்றவே கூடாதென அந்தச் சோழன் ஆணையிட்டான்.[388] முதல் குலோத்துங்கனின் ஆணைப்படி, திருவயிந்திரபுரத்து ஆழ்வார், வீரநாராயண விண்ணகர் ஆழ்வார் (கி. பி. 1079) முதலானோர்க்குத் தரப்பட்ட நிலங்களெல்லாம் 12வது தரத்தில் வைக்கப்பட்டன.[389] கி. பி. 1103ஆம் ஆண்டில் பெண்ணாடத்திலிருந்த தேவதான நிலங்களின் மீதான காணிக் கடனை அவன் பாதியாகக் குறைத்தான்.[390]

கி. பி. 1236-37ஆம் ஆண்டில் குடந்தை வட்டத்திலுள்ள மருத்துவக்குடியில் கோயில்கொண்டிருந்த கடவுளுக்குத் தரப்பட்டிருந்த தேவதான நிலங்களின் மீதான கடமையை 40% அளவுக்கு மூன்றாம் இராசராசன் குறைத்தான். அரசுக்குக் கட்ட வேண்டிய அந்தராயத்தையும்கூடக் குறைத்தான். காவிரிக் கழிமுகப் பகுதியில் இவ்வாறு இறையைக் குறைத்த சோழ அரசு, அது போன்ற சலுகையைத் தொண்டைநாட்டுக் கோயில் நிலங்களுக்கு வழங்கவில்லை. செங்கை மாவட்டத்தின் சாளுவன்குப்பத்திலிருந்த முருகன் (சுப்பிரமணியர்) கோயில், அரசுக்குச் செலுத்த வேண்டிய கடமையைக்கூடக் கட்ட இயலாமையால், கோயில் கருவூலத்திலிருந்து காசை எடுத்து அந்தக் கடமையைக் கட்டினர்.*

வந்தேறி வடுகச் சோழர்கள் தமிழர்நாட்டில் இவ்வாறெல்லாம் பிரமதேயங்களையும் கோயில்களையும் கட்டியமைத்து, வரைமுறையோ வகைதொகையோ இன்றிச் சுரண்டிக் கொழுத்தனர் என்பதையே இவை யாவும் காட்டுகின்றன.

## நிலம் திருத்தல்

காவிரியின் தென்கரையிலிருந்த அல்லூர், ஈசானமங்கலம் ஆகிய ஊர்களில் வெள்ளத்தால் அழிவுண்டு மணல் மண்டிக் கிடந்த நிலங்களைத் திருத்தும் பணி, முதல் பராந்தகனின் காலம் முதல் இராசராசன் காலம் வரையில் பெருமளவில் நடந்துவந்தது. அல்லூருக்கும் ஈசானமங்கலத்திற்கும் அப்பால் கிழக்கிலிருந்த காரைக்குடி, தண்டுரை முதலான தேவதான ஊர்களிலும் அத்தகைய பணிகள்

* "உள்ளூரில் இறை இறுப்பு அரிதாய் சிறீபண்டாரத்தில் தட்டிறை இறுக்கையில்"[391]

www.tamilarangam.net



முதல் குலோத்துங்கனின் காலத்திலும் விக்கிரம சோழன் காலத்திலும் (கி. பி. 1070–1155) மும்முரமாக நடைபெற்றன. இந் நிலங்கள், திருவரங்கம் கோயிலின் சமையற்கட்டுகளுக்காகக் கொடையாக அளிக்கப்பட்டவையாகும்.[392]

கி. பி. 1141–42ஆம் ஆண்டுகளில் இரண்டாம் குலோத்துங்கனின் காலத்தில் குலோத்துங்கசோழமங்கலம் என்னும் தேவதான ஊரை உய்யக்கொண்டான் வளநாட்டிலிருந்த வெண்ணாடு என்னும் நாட்டிலிருந்த கேரளாந்தகசதுர்வேதிமங்கலம் என்னும் பிரமதேயத்திலிருந்து பிரித்தனர். தண்டன்தோட்டத்து வாமனன் அன்பர்க்கரசன் என்னும் திருநறையூர் நாட்டுக்கோனுக்கு அதை எழுதிக்கொடுத்தனர். இந் நிலங்கள், அதுவரை பயிரிடப்படாது புதர் மண்டிக் கிடந்தன.[393]

சோழன் தலைகொண்ட வீரபாண்டியனின் 19வது ஆட்சியாண்டில் (கி. பி. 965) சுசீந்திரம் கோயிலுக்குச் சொந்தமான தேவதான நிலங்கள் சிலவற்றை வங்கண்ண தேவர் என்பான் ஒற்றி வைத்தான். அதிகார மேலெழுத்து என்னும் பதவியை வகித்த சேரலாந்தகப் பிரமராயன் என்பான் அதைப்பற்றி உசாவுமாறு ஊரவையைப் பணித்தான்.[394]

## கோயில் காணிகளையும் கவர்ந்தனர்!

சில நேரங்களில் கோயில் நிலங்களை ஊரவையாரே கவர்ந்ததும் உண்டு.

கி. பி. 892–93ஆம் ஆண்டுகளில் ஒரு நிலம் தவிர்த்துச் சிற்றிராயூர் என்னும் ஊர் ஒரு சிலரால் கோயிலுக்குத் தேவதானமாக ஆக்கப்பட்டது. கி. பி. 943ஆம் ஆண்டில் அவ்வாறு அத் தேவதானக் கொடையில் அடங்காத அந்த ஊரும்கூட அந்தக் கொடையில் இணைக்கப்பட்டது. ஆனால், புதுப்பாக்கத்தைச் சேர்ந்த ஊர்ப் பேரவையார் அந் நிலத்தையும் சேர்த்துக் கொடையாக அளித்ததை ஏற்க மறுத்து, அதிலிருந்து வந்த வருவாயைத் தாங்களே எடுத்துக் கொண்டனர். இதனால், சீற்றமுற்ற கோயில் பூசாரிகளும் கோயில் ஆண்டார்களும், உத்தமசோழனிடம் சென்று அவ்வூர்ப் பேரவைமீது முறையிட்டனர். கி. பி. 985ஆம் ஆண்டில் இந்த வழக்கை உசாவிய உத்தம சோழன், ஊரார் அந்தக் கோயிலுக்கு 3,000 காடி நெல்லைத் தந்துவிட வேண்டுமெனச் சொல்லிக் கோயிலுக்குச் சார்பாகத் தீர்ப்பளித்தான்.[395]

திருவிடைமருதூரிலுள்ள திறைமூர் என்னும் ஊரிலிருந்த தேவதான நிலம் குடிநீக்கிக் காராண்மை நிலமாக இருப்பதைக் கி. பி. 959ஆம் ஆண்டில் அதைப்பற்றி உசாவிய அரசு அதிகாரி கண்டறிந்தான். பஞ்சவாரம் என்னும் பெயரில் 226 கலம் நெல்லை அப் பிரமதேயத்தின் காராண்மையாளர்கள் கோயிலுக்கு அளக்க வேண்டியிருந்தது. அதனால், திறைமூர் தேவதானம் குடிநீக்கிக் காராண்மை

www.tamilarangam.net



யின்கீழ் இல்லை என்னும் சாக்கில், அவர்கள் வெறும் 160 கலம் நெல்லை மட்டுமே அளந்து வந்தனர். அந்த அதிகாரியின் உசாவ லால், அவர்கள் அவ்வாறு செய்வது தவறு எனத் தெரியவந்தது. அதனால், கி. பி. 958ஆம் ஆண்டுதொட்டே அந்தக் கோயிலுக்கு அப் பிரமதேயம் 256 கலம் நெல்லை அளக்க வேண்டியதாயிற்று.[396]

கோயிலுக்குச் சொந்தமான நிலத்திலிருந்து வந்த வருவாயை 35 ஆண்டுகளாகத் திருக்கொள்ளிக்காட்டின் ஊரவையார் கையகப் படுத்தி வந்ததை எதிர்த்து கி. பி. 1036இல் வடுகப் பிராமணனும் கோயில் ஆண்டானும் (மகேசுவரனும்) ஆகிய அன்னதானயோகி என் பான் முதல் இராசேந்திரனிடம் முறையிட்டான். இந்த வழக்கை உசாவுமாறு பணிக்கப்பட்ட அரச அதிகாரி, கோயிலுக்குச் சார்பாகத் தீர்ப்பளித்து, அந்த ஊரவையாரை இரட்டை மடங்கு பணத்தை — அஃதாவது, 400 காசை — அக் கோயிலுக்குத் தரச் சொல்லிப் பணித் தான். இவ்வளவு பெரிய தொகையைக் கட்ட இயலாத ஊரார்கள், ஒரு நிலத்தை விற்று 100 காசுகளைக் கட்டினர். நிலுவையான 300 காசை ஒரு வைப்புக்கடனாக ஆக்கி, அதிலிருந்து கிடைத்த வட்டியைக் கொண்டு எஞ்சியதைச் செலுத்தினர்.[397]

விக்கிரம பாண்டியனின் 3வது ஆட்சியாண்டில் (கி. பி. 1183) தென்னார்க்காட்டுத் திருப்பாதிரிப்புலியூரில் அந்தப் பாண்டியனின் படைத்தலைவர்களில் ஒருவனான காலிங்கராயன் என்பான் (வடுகரால் சுப்பிரமணியனாக்கப்பட்ட) முருகனின் கோயிலுக்கு 2 மா அளவு நிலத்தை வாங்கி அதை அந்தக் கோயிலுக்குக் கொடை யாக அளித்தான். அந் நிலம் வடுகப் பிராமணர்க்குச் சொந்தமான நிலம் ஆனதால், அதை அந்தக் கோயிலால் விற்க முடியாது என்று கூறி, அவ்வூரின் பிராமணக் காணியாளர்கள் அந் நிலத்தின்மீது உரிமை கொண்டாடினர்.

இதற்கிடையில், அதை எதிர்த்துக் கோயில் ஆண்டான்களில் (மகேசுவரரில்) ஒருவன் தீக்குளித்து மாண்டான். இந்தச் செய்தி அரச னின் காதுக்கு எட்டியது. இந்தப் பிணக்கைத் தீர்த்து வைக்குமாறு இரண்டு நாடாள்வார்களை அவன் பணித்தான். அக்கம் பக்கத்து நாட்டார்களும் அந் நிலத்தின்மீது உரிமை கொண்டாடிய பிராமணர் களும் அதனால் கூடினர். அது பிராமணர்க்குரிய நிலம் என்றால், அந்த நிலத்தில் அதுவரை ஏன் அவர்கள் பயிரிடவில்லை என்றும், காணிக்கடனை ஏன் செலுத்தவில்லை என்றும் அந் நாடாள்வார்கள் அப் பிராமணரை நோக்கி வினவினர். வெள்ளாளர்களும் ஆழவார் களும் பள்ளிகளும் பரம்பர்களும் பிறருமே அந்தக் காணியில் ஆண் டாண்டுக் காலம் பயிரிட்டுக் கொண்டும் — தங்களுக்குள் அதை மாறி மாறிப் பகிர்ந்து கொண்டும் — இருந்து வந்துள்ள உண்மையையும் அவர்கள் சுட்டிக்காட்டினர். "இந் நிலம் உங்களால் திருநாமத்துக் காணியாகக் கோயிலுக்கு விடப்பட்டது என்பதைக் காட்டவல்ல

www.tamilarangam.net



கல்வெட்டு, செப்பேட்டுச் சான்றுகள் உண்டா?" என்றும் அப் பிராமணரை நோக்கி அவர்கள் கேட்டனர். அந்தப் பிராமணர் காட்டிய போலிச் சான்றுகளை அந் நாடாள்வார்கள் ஏற்க மறுத்து விட்டனர்.

அடுத்து, அந் நிலம் கோயிலுக்குரிய நிலம் என்பதை மெய்ப்பிக்க வல்ல சான்றுகளைக் காட்டுமாறு கோயில் அதிகாரிகளை நோக்கி அவர்கள் கூறினர். அந் நிலத்தின்மீது கிழமை (உரிமை) பாராட்டிய பிராமணரே அந்த நிலத்திற்காக ஆண்டுதோறும் இவ்வளவு நிலவரியையும் வித்துமுதலையும் (seed capital) செலுத்துவதாக எழுதிக் கொடுத்த பற்றுச்சீட்டை அவர்கள் காட்டினர். திருப்பாதிரிப்புலியூரிலிருக்கும் நிலங்கள் எல்லாவற்றையுமே இறையிலியாக்கி அரசன் ஆணையிட்டதையும், விற்கப்பட்ட அந் நிலங்கள் திருநாமத்துக்காணியாகப் பதியப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டினர். இதனால், பிராமணரின் உரிமைக் கொண்டாடல் தவறு என்று அந் நாடாள்வார்கள் தீர்ப்பளித்தனர்.[398]

இத்தகைய சூழ்ச்சிகளின் வழியாக வந்தேறி வடுகப் பிராமணர்கள் கோயில் நிலங்களையும்கூடக் கவர்ந்து தம்வயமாக்கி வந்தனர்.

## தற்கொலைத் தெய்வம்!

ஊரவையினருக்கும் (கன்னடத்தில் மகேசுவரர் எனப்பட்ட) கோயில் ஆண்டார்களுக்கும் இடையில் அவ்வப்போது பூசல்கள் எழுந்தன.

திருச்சி மாவட்டத்திலுள்ள அன்பில் என்னும் ஊரில் எழுந்தருளிய தெய்வத்தின் பெயரில் இருந்த ஒரு நிலம் கி. பி. 1250இல் திருத்தப்பட்டது. இந் நிலத்திலிருந்து வந்த வெள்ளாண்மையில் கூடுதலாகவே காணிக்கடனாக ஊரவையார் எடுத்துக்கொண்டனர். இதை எதிர்த்துப் பழுதை ஆண்டார் என்னும் கோயில் பணியாளன் தற்கொலை செய்துகொண்டான். இதைக் கோயில் ஆண்டார்களும் (மகேசுவரர்களும்) மடத்துத் தலைவனும் (முதலியாரும்) நாட்டவரும் உசாவி அறிந்து, அக் கூடுதல் கட்டணத்தை ஊரார் இனியும் பெறக் கூடாது எனத் தீர்மானித்தனர். மடிந்த பழுதை ஆண்டானுக்குச் சிலை நிறுவி, அதையே தெய்வமாக்கி அப் புதிய தெய்வத்திற்கு இறை நீக்கிய திருநாமத்துக்காணியையும் அளித்தனர்.[399]

இரண்டு ஊர்களுக்கு இடையில் ஒரு நிலத்தைப் பற்றிய பூசல் எழுந்தால், இரு சாராரும் இசைய அந் நிலத்தை ஊர்க் கோயிலுக்கு எழுதிவைத்த நிகழ்வுகளும் உண்டு. சீகண்ட சதுர்வேதிமங்கலம் என்னும் பிரமதேயத்தின் ஊர்ப்பேரவையார்க்கும் எறும்பியூர் என்னும் ஊரின் ஊராருக்கும் இடையில் ஒரு நிலத்தைப் பற்றிய பிணக்கு முற்றவே, அந்த நிலத்தைத் திருவெறும்பூர்க் கோயிலின் கோபுரத்தைக் கட்டிய ஒருவனுக்கு எழுதிவைப்பதென முடிவு செய்யப்பட்டது.[400]

www.tamilarangam.net



புலியூர் என்னும் ஊரின் ஊராருக்கும் அவனிமார்த்தாண்டபுரம் என்னும் நகரத்து நகரத்தார்க்கும் சீவல்லபசதுர்வேதிமங்கலம் என்னும் பிரமதேயத்தின் ஊரவையார்க்கும் இடையில் நிலங்கள் சிலவற்றைப்பற்றி எழுந்த பூசலுக்குத் தீர்வாக, அந் நிலங்களைக் கி. பி. 1209ஆம் ஆண்டில் இராசேந்திர விண்ணகரிலுள்ள குலசேகரர் கோயிலுக்கு எழுதிவைத்தனர்.[40] இவ் வகையிலும், தமிழர்களின் நிலபுலங்கள் வடுகப் பிராமணர் கைகளுக்கும் — அவர்களின் பிடிப்பிலிருந்த கோயில்களுக்கும் — கைமாறின.

## சூத்திரன் யார்?

பண்டைத் தமிழரிடம் விளங்கிவந்த தொழில்வழிச் சாதிகள் யாவும் வடுகப் படையெடுப்புகளாலும், வடுக மண்கவர்புகளாலும் பிறப்புவழிச் சாதிகளாயின. பிற்கால வடுக வந்தேறிகள் சிலர் தமிழர் மீது சூத்திர முத்திரையைக் குத்தத் துணிந்தனர். வடுக அல்லது ஆரியப் பார்ப்பனியத்தைச் சேரலத்தில் வடித்தெடுத்த பரசுராமன் என்னும் வடுகனால்தான் சூத்திரப் பட்டம் தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும். அப் பரசுராமன் உருவாக்கிய நாயர்-நம்பூரி மருவு ('சம்பந்தம்') உறவும், சாதிவழிப் பாலியல் சுரண்டலும் அதை மெய்ப்பிக்கின்றன. சேரநாட்டின்மீது பரசுராமன் காலத்தில் நடந்த படையெடுப்புகளுக்குப் பிறகே அச் சூத்திரமுறை பிறந்திருக்க வேண்டும். இருபத்து நான்கு சத்திரியரைக் கொன்ற பரசுராமன், பின்னர்க் குமரிமுனைக்குச் சென்று குளித்துவிட்டுக் குமரித் தெய்வத்தை வழிபட்டபின், கடலில் தன் மழுவை எறியவேதான் கேரளம் தோன்றியது என்னும் கதையே இக் கருதுகோளை மெய்ப்பிக்கும்.

பரசுராமனால் பண்டைச் சேரலத்தில் கட்டமைக்கப்பெற்ற வடுகப் பிராமணிய வாழ்வியலில் எழுந்த ஒரு வகுப்பின் பெயரே 'சூத்திரர்' என்னும் பெயர். சூல் என்பது பகுதி. திறன் என்பது விகுதி. 'சூல்+திறன்' என்பதே 'சூத்திரன்' என்னும் சொல்லானது. இதில் 'சூல்' என்பது 'கருப்பம்' எனப் பொருள்படும். பரத்தைக்குப் பிறந்தவன் என்பதே அதற்கான பொருளாகும். இந்தப் பெயர்ச் சொல், பரசுராமன் கற்பித்த மருவு ('சம்பந்தம்') என்னும் பரத்தமை முறையோடும் கோயிலோடும் தொடர்புடையது.

சூத்திரன் என்பதைச் சூத்தை + திறன் என்றும் பிரிக்கலாம். சொத்தை — சூத்தை = பொக்கானது, உள்ளீடற்றுக் காய்ந்து போனது, பொக்குச் சூம்பிப் போனது, அழுகிப்போய் வதங்கிப் போனது, வாழ்க்கையில் புறக்கணிக்கப்பட்டவர்கள், ஒழுங்கற்றவர்கள் என்றெல்லாம் பொருள்படும்..

கோயில் பரத்தையர்க்கும் வடுகப் பிராமணர்க்கும் இடையிலான வெற்றுப்புணர்ச்சி உறவால் பிறந்தவருக்கு மட்டுமே 'சூத்திரன்' என்னும் பெயர் சூட்டப்பட்டது. அரசகுலத்தவரும் வணிக குலத்த

www.tamilarangam.net



வரும் தவிர்த்த பிற எல்லாருமே சூத்திரர்தாம் எனக் கருதிய வழக்கு, மிக மிகப் பிற்கால வழக்கு. இதனால்தான், தொல்காப்பியம் உள்ளிட்ட பண்டைத் தமிழ் இலக்கியங்கள் வேளாளரைச் 'சூத்திரா' என்று அழைக்கவில்லை. உள்ளபடியே, பெண்களைச் சாமிக்குப் பொட்டுக்கட்டிவிட்டு அவர்களைக் கோயில் பரத்தைத் தொழிலைச் செய்வித்த சாதியர் மட்டுமே 'சூத்திரர்' ஆவர். 'சூத்திரன்' என்னும் பெயரே கோயிலை அண்டி வாழ்ந்துவந்த தேவரடியாளின் மகனையே குறிக்கும். ஆனால், சூத்திர விளைப்பு முறை (Shudra Mode of Production) என்னும் இல்லாத பொல்லாத கருதுகோளை இட்டுக் கட்டி, அதை இத் துணைக்கண்ட வரலாற்றின்மீது திணிக்க வடுகப் "புரட்சிகள்" சில முற்பட்டுள்ளன.[402] தமிழகத்தைப் பிடித்தாண்ட பிற்கால நாயக்கர் ஆட்சிக்காலத்தில்தான் தமிழரையே ஒட்டுக்காகச் 'சூத்திரர்' என்று வாய்கொழுத்த வந்தேறி வடுகர்கள் பழிக்கலாயினர்.

## பறையருக்கும் சுடுகாடு!

அக்கிரகார நிலக்கிழமைப் பொருளியல் தொழில்வழிச் சாதிகளைப் பிறப்புவழிச் சாதிகளாக இறுக்கியது. வடுகப் பிராமண ஒட்டுண்ணித்தனத்தின் மிக உயரிய வடிவமாக அமைந்த இந்த அகரகாரப் பொருளியல், தொழில்வழிச் சாதிகளை அவ்வாறு இறுக்கி வைத்ததுடன், சாதியை உயர்த்திக்கொள்ளும் பெயர்ச்சியும் — தொழிலை மாற்றிக்கொள்ளும் போக்கும் — எளிதில் இயலாதனவாக்கியது. உழைக்கும் சாதிகளையெல்லாம் ஊர் வரம்புக்குள்ளோ கோயில் மடங்களின் பிடிப்புக்குள்ளோ அது முடக்கி வைத்தது. இறையிலி முறைக்கு இந்தக் குமுக முடக்கம் இன்றியமையாததாயிருந்தது. இச் சாதி முடக்கத்தால், சாதிகளுக்குள் உட்சாதிகள் என்னும் உள்ளடுக்குகள் தோன்றின.

வடுக வந்தேறிய ஆட்சிக்காலத்தில் வேளாளருக்கும் பறையருக்கும் தனித்தனிச் சுடுகாடுகள் ஒதுக்கப்பட்டன. அவற்றை 'வெள்ளாளன் சுடுகாடு' என்றும் 'பறைச்சுடுகாடு' என்றும் முறையே அழைத்தனர். முதல் இராசராசன் காலத்தில் இருந்த ஈழச்சேரிகளே 'தீண்டாச்சேரி' எனப்பட்டன. தீண்டாச்சேரியும் ஈழச்சேரியும் இருந்த ஊர்களில் ஈழவர்களுக்கெனத் தனிச் சுடுகாடுகள் இல்லை. கம்மாளருக்கும் கூடத் தனிச் சுடுகாடு இல்லை.[403] (அடிக்குறிப்பு எண் 160 காண்க.)

பிணத்தைச் சுடுவது மிகச் சிறுபான்மையரான மேல்சாதி வழக்கு. தீண்டாச்சேரியில் தனிச் சுடுகாடு இல்லை. அவர்கள் பிணத்தைப் புதைத்துவந்ததையே அது காட்டும். பிணத்தைப் புதைப்பதையே மிகப் பரவலான வழக்காகக் கொண்டிருந்த பறையர்களுக்குச் சில ஊர்களில் பறைச்சுடுகாடு ஏன் வந்தது? அவர்களில் சிலர் பிராமண வழக்கைப் போலிமை செய்யத் தொடங்கியதைத் தானே அது காட்டுகின்றது?

www.tamilarangam.net



இந்த நிலைக்கு வடுகரின் படையெடுப்புகளும், அவர்கள் புகுத்திய அகரகார நிலக்கிழமையுமே பெருங்காரணங்களாகும். பிழைக்க வந்த வடுக வந்தேறிகள், தமிழரில் ஒரு பகுதியினரைத் 'தீண்டப்படாதோராக' ஆக்கினர். தமிழர்க்கு மனுநெறியைத் கற்பித் தனர். வடுகப் பிராமணியத்தை — அஃதாவது, ஆரியப் பிராமணி யத்தை — தமிழகத்திலும் புகுத்தினர்.

## அகரகாரத்து வணிகம்

யூத அரசன் சாலோமன் கப்பல் வழியாகப் பெற்ற பொருட் களைப்பற்றி எபிரேய மொழியில் எழுதிய விவிலியத்தில் *(The Holy Bible)* கூறப்பட்டுள்ளது. அவற்றில், தந்தம், மயில், கபி (குரங்கு), தோகை போன்ற தமிழ்ப் பெயர்ச்சொற்களும் வருகின்றன.[104] பண்டைத் தமிழரின் வாணிபத்தின் உலகாளாவிய வீச்சு இதனால் புலனாகும். கடல்வாணிபத்தில் இது போன்ற உலகளாவிய ஏற்றத்தைப் பெறச் சில நூறு ஆண்டுகளாவது பிடித்திருக்கும்.

மீன் பிடிக்கவும் பயணிகளையும் சரக்குகளையும் ஏற்றிச் செல்ல வும், நீர்விளையாட்டுக்கும், கடற்படைக்கும், கடற்கொள்ளைக்கும் எனத் தனித்தனி வகையான கலங்களின் பெயர்கள் பண்டுதொட்டே தமிழில் இருந்ததைக் காட்டும் கழக(சங்க) இலக்கியக் குறிப்புகள் உண்டு. அவை யாவும் தமிழரிடம் மேலோங்கியிருந்த கடல் வாணிபத்தின் தொன்மையையும் அதற்கான தொழில்நுட்பத்தையும் காட்டவல்லன. அவற்றில், மீன் பிடிக்கவும் பயணிகளை ஏற்றிச் செல்லவும் பயன் பட்டது ஓடம். மீன் பிடிக்கவும் பயணியரையும் சரக்குகளையும் ஏற்றிச் செல்லவும் நீர்விளையாட்டிற்கும் கடற்கொள்ளைக்கும் பயன் பட்டது வள்ளம். மீன் பிடித்தல், பயணிகளை ஏற்றிச் செல்லல், நீர் விளையாடல், கடற்கொள்ளை ஆகியவற்றிற்கு வஞ்சி என்னும் கலம் பயன்பட்டது. பயணிகளையும் சரக்குகளையும் கொண்டு செல்லல், நீர்விளையாட்டு ஆகியவற்றிற்குத் தோணி பயன்பட்டது. பயணி களை ஏற்றிச்செல்ல மட்டுமே பயன்பட்டது மரக்கலம். பயணி களையும் சரக்குகளையும் ஏற்றிச்செல்லவும் கடலில் கொள்ளையடிக்க வும் பயன்பட்டது படகு. சரக்குகளைக் கொண்டு செல்லவும் கடற் படைக்கும் கடற்கொள்ளைக்கும் பயன்பட்டது கப்பல்.

### பரதவர் யார்?

ஆற்றைக் கடக்க அம்பியும் ஓடமும் பள்ளியோடமும் பயன் பட்டன. கால்வாய்களிலும் ஆறுகளிலும் கரையோரக் கடலிலும் சரக்கு ஏற்றிச் செல்வதற்குத் தோணியும் பஃறியும் உதவின. கட்டு மரம், மேங்கா, புணை, மிதவை, தெப்பம், பரிசு, மதலை, படகு, சோங்கு ஆகியன கடலில் மீன்பிடிக்கப் பயன்பட்டன. தோணியை விடச் சிறியது படகு. அந்தத் தோணியைவிடப் பெரியது சோங்கு.

www.tamilarangam.net



முத்துக் குளிப்பதற்கென்றே திமிலும் சலங்குப் படகும் இருந்தன. கப்பல், மதலை, நாவாய், மரக்கலம், வங்கம் முதலான பெருங் கலங்கள் கரை கடந்து பிறநாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்யப் பயன்பட்டன. மதலை என்பது பெருங்கலம். கடற்படைஞரையும் யானைகளையும் ஏற்றிச்செல்லவும், கடல் கடந்து வாணிபம் நடத்த வும் அந்த மதலை உதவியது. குதிரைகளையும் வாணிபப் பொதி களையும் இறக்குமதி செய்யப் பயன்பட்டது கலம். பாய்மரம் பூட்டிய பெருங்கலமே மிக விரைவாகச் செல்ல வல்ல வங்கம். கடற்சண் டைக்கும் கடல்கடந்த வாணிபத்திற்கும் இவ் வங்கம் பயன்பட்டது.[405]

மீன்பிடித் தொழிலைச் செய்துவந்த படவர் அல்லது பரவர் என்போரில் சிலர், நெடுங்கடல் வாணிபத்திலும் ஈடுபட்டுவந்தனர். அவர்களின் தலைவருக்கான குடிப்பெயர் பரதர் அல்லது பரதவர் ஆகும். இந்தப் பரதவர்கள், நல்ல கடலோடிகளாவர் (mariners).[406]

இவற்றையெல்லாம் வைத்தே தமிழரிடம் தொன்றுதொட்டு விளங்கிவந்த உள்நாட்டு வணிகத்தையும், வெளிநாட்டு வாணிபத் தையும் மதிப்பிட வேண்டும்.

பண்டைத் தமிழரிடம் நிலவிய அடிமைக் கிழாரிய அமைப் பின் கீழிருந்த வணிகமும் வாணிபமும் பெருக்கமும் நிலக்கிழமை வாழ்வியலின்கீழ் எத்தகைய மாற்றங்களுக்கு ஆளாகின வென்பது இதுவரை ஆராயப்படவில்லை.

## சாத்தனும் மாநாய்க்கனும்

இரண்டாம் கரிகாலனின் காலத்தைத் தமிழ் நிலக்கிழமையின் இளமைப் பருவம் எனலாம். இக் கரிகாலனைப் பாடும் பட்டினப் பாலையில் வரும் காவிரிபூம்பட்டினம், கரை கடந்த தமிழரின் கடல் வாணிபம் ஓங்கி வளர்ந்திருந்த காலத்தைக் காட்டும். உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபத்தில் இந்த வளர்ச்சி நிலையை எய்தப் பல நூற்றாண்டுகள் பிடித்திருக்க வேண்டும். அடிமையுடைமைக் காலத் தின் இறுதி நிலையிலேயே தமிழகத்தில் உள்நாட்டு வணிகமும், அயல்நாட்டு வாணிபமும் சீருடனும் சிறப்புடனும் மேலோங்கி இருந் திருக்க வேண்டும்.

இரண்டாம் கரிகாலன் காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்திற் கிருந்த வணிகச் சிறப்பு, கி. பி. 2ஆம் நூற்றாண்டிற்குரியது எனக் கருதப்படும் சிலப்பதிகாரத்தின் காலம் வரையில் தொய்வின்றித் தொடர்ந்து நீடித்ததைக் காண முடிகின்றது. உள்நாட்டு வணிகச் சாத்துகளை நடத்திவந்த சாத்தன்கள் முதல் கடல்கடந்த பெருவாணி பர்களான மாநாய்க்கன்கள் வரையில் என்றிருந்த அக்காலத் தமிழ் வணிகமும் வாணிபமும், கட்டுக்கோப்பான வணிக, வாணிபக் கழகங் கள் இன்றிச் சீரும் சிறப்புமுடன் நிலைத்திருந்திருக்க முடியாது.

www.tamilarangam.net



சீனம், தென்கிழ் ஆசியா ஆகியவற்றுடன் நாகைத் துறைமுகத்தின் வாயிலாகக் கடல்வாணிபம் நடைபெற்றது. அந் நாடுகளிலிருந்து மருக்கொழுந்து இறக்குமதி செய்யப்பட்டது.[107]

பண்டமாற்று என்னும் நிலையினும் மேம்பட்டு, நுகர்வதற்கென்றே பண்டங்களை ஆக்கி விற்பது என்னும் மேனிலைக்கு மிக்குயரவும், அவ்வாறு ஆக்கிய பண்டங்களை வாங்கவும் விற்கவும் காசு என்னும் கருவி வேண்டும். காசு என்னும் இடைத்தரகனின் சுழற்சியையும் பெருக்கத்தையும் சார்ந்தே வணிக வகுப்பின் எழுச்சி இருந்திருக்கும்.

இத் துணைக்கண்டத்தில் வெளியிடப்பட்ட காசுகளில் மிகவும் பழமையானவை முத்திரைக்காசுகளேயாகும். இம் முத்திரைக் காசுகள் வெள்ளியாலும் செம்பாலும் ஆனவை.

## முன்னோடிக் காசுகள்

"தமிழ்நாட்டில் பழங்காலக் காசுகள் கிடைக்காத இடங்களே கிடையாது" என நாணயவியல் ஆய்வர்கள் அடித்துக் கூறுவர்.[408] பண்டைச் சேரரின் காசுகள் அமராவதி ஆற்றுப்படுகையிலமைந்த வஞ்சியில் (இன்றைய கருவூரில்) பெருமளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கருவூர், மாம்பலம், வெம்பாவூர், தாராபுரம், தொண்டைமானத்தம், வீரசிகாமணி ஆகிய ஊர்களில் புதையல்களாகக் கிடைத்த கழக(சங்க)க் காலக் காசுகள் யாவும் மிகவும் பழமையானவை. அம் முத்திரைக்காசுகளைச் செய்யப் பயன்படுத்தப்பட்ட ஓர் அச்சு, கருவூரில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது போன்ற அச்சு, கி. மு. 3ஆம் நூற்றாண்டினது என்பர்.[409] கி. மு. 5ஆம் நூற்றாண்டிற்கும் கி. மு. 2ஆம் நூற்றாண்டிற்கும் இடையில் புழக்கத்திலிருந்த முத்திரைக்காசுகள் வெள்ளியால் ஆனவை. தமிழரசர்கள் வெளியிட்ட இந்தக் காசுகள், இந்தியத் துணைக்கண்டத்தில் வெளியிடப்பட்ட காசுகளுக்கெல்லாம் முன்னோடிகள் என்று நாணயவியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.[410]

பாணினி என்னும் வடமொழி இலக்கண ஆசிரியர் குறிப்பிடும் 'கார்ஷாப்பணம்' என்னும் வெள்ளிக்காசுவின் பெயர் 'காசுப் பணம்' என்னும் தமிழ்ச்சொல்லின் திரிபேயாகும்.

முத்திரைக்காசுகளை அடுத்து வந்த வார்ப்புக்காசுகளும் தமிழகத்தில் கிடைத்துள்ளன. ஆண்டைகளும் நிலக்கிழார்களும் பெருவணிகர்களும் ஆண்டுவந்த தங்கக்காசுகள் போக, எளிய மக்களால் ஆளப்பட்டுவந்த வெள்ளி, செப்புக் காசுகளும் உண்டு. கழக(சங்க)க் காலத் தமிழ்க் காசுகள் பெரும்பாலும் வெள்ளியாலும் செம்பாலும் ஆனவை. கி. மு. 3ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வெளியிடப்பட்டதாகக் கருதப்படும் கழக (சங்க)க் காலச் சோழரின் செப்புக்காசுகள் கருவூரில் கிடைத்துள்ளன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் கழக(சங்க)க்

www.tamilarangam.net



காலச் சேரர் வெளியிட்ட செப்புக்காசு ஒன்று கருவூரின் ஆன் பொருநையாற்றுப் படுகையில் கிடைத்துள்ளது.[411] நாணயப் புழக்கம் தமிழகத்தின் அடிமட்ட மக்கள்வரையில் குறிப்பிடுமளவுக்கு இருந்த உண்மை இவற்றால் விளங்கும். பண்டைச் சேரரில் இரண்டு கிளைகள் உண்டு. பொறையர்குடியின் முதல்வன் எனப்படும் அந்துவன் சேரல் இரும்பொறை, இரும்பொறைக் குலத்தில் பெரிதாய்ப் போற்றப் படுபவன். இப் பெருஞ்சேரல் வெளியிட்ட காசு கருவூரில் கிடைத்துள்ளது.[412] அதே போல், கழக(சங்க)க் காலத்துச் சேரமான் மாக்கோதை என்னும் அரசன் வெளியிட்ட வெள்ளிக்காசுகளும் கருவூரில் கிடைத்துள்ளன.

கழக இலக்கியத்தில் தமிழரசர் வெளியிட்ட பொற்காசுகளைப் பற்றிக் கூறுகின்றன. ஆனால், அந்தப் பொற்காசு எதுவும் இதுவரை கிடைத்தில[413] என்னும் மெய்ம்மையையும்கூடக் கருத்தில் கொள்ள வேண்டும்.

## வழுதிக் காசு

தமிழகத்தில் போடிநாயக்கனூரில் கொத்தாகக் கிடைத்த 1,138 வெள்ளிக்காசுகளை ஆராய்ந்த டி. டி. கோசாம்பி, அக் காசுகள் யாவும் மோரியர் வெளியிட்டவையெனத் தவறாகப் பாடம் படித்தார். வெளியிட்டவர் இன்னார் என்பது தெரியாத அக் காசுகளின் பின்புறத்தில் மீன் குறி இருந்தது. அதையடுத்து, மதுரை வைகைக் கரையில் அதே போன்ற நான்கு முத்திரைக்காசுகள் கிடைத்தன. அவை யாவும் மோரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் கி. பி. 187ஆம் ஆண்டளவில் பாண்டியரால் வெளியிடப்பட்டிருக்கலாம் என்று வடக்கத்திய காசியல் ஆய்வர்கள் மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் கூறினர். 1985ஆம் ஆண்டில் அதே போன்ற செப்புக்காசுகள் சிலவற்றை ஆய்ந்தோர், அவற்றில் பெருவழுதி என்னும் பெயர் பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டனர். அந்தக் காசுகள் யாவும் கழக(சங்க)க் காலப் பாண்டியர் வெளியிட்ட காசுகள் என்பதை நிறுவினர்.[414] அவற்றில் சிலவற்றில், வேள்விக்குண்டமும் கந்தும் உள்ளன. அக் காசுகள், பிராமண வேள்விகளை நடத்திய பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டியன் வெளியிட்ட காசுகள் என்பதையே அவை காட்டின.

கி. மு. 240 ஆம் ஆண்டளவில் தோன்றி கி. பி. 250ஆம் ஆண்டு வரையில் நீடித்திருந்த ஆந்திர(சதவாகன)ப் பேரரசின் காசுகள் கண்டு பிடிக்கப்பட்ட இடங்களைக் காட்டும் வரைபடத்தை முன்னரே பார்த்தோம். அந்த ஆந்திர(சதவாகன)ப் பேரரசின் எழுச்சிக்கு முன்னும் பின்னும் சேர, சோழ, பாண்டியப் பேரரசர்கள் வெளியிட்ட காசுகள் கண்டெடுக்கப்பட்ட இடங்களும் இவ்வாறு வரைபடமாக இதுவரை தரப்பட்டுள்ளதாவென்பது தெரியவில்லை. ஆயினும், ஆந்திர(சதவா

www.tamilarangam.net



கன)ப் பேரரசில் விளங்கிய வணிக வளர்ச்சிக்கும் மேம்பட்ட —அல்லது அதற்கு ஈடான — வளர்ச்சியை முந்தை மூவேந்தர் ஆண்ட தமிழகம் கண்டிருக்கவே வேண்டும்.

இவை போக, கி. மு. 46ஆம் ஆண்டில் ஜூலியஸ் ஸீசர் ஆப்பி ரிக்காவிலிருந்து வெளியிட்ட ஓர் உரோமானியக் காசும் கொங்கு நாட்டின் திருப்பூரில் கிடைத்துள்ளது. இதைப் போன்ற உரோமானியக் காசுகள் தமிழகத்தில் வேறு சில இடங்களிலும் கிடைத்துள்ளன.[415]

காஞ்சி, மாமல்லபுரம், எல்லேசுவரம் முதலான இடங்களில் எருது உருவம் பொறித்த பல்லவர் காசுகள் கிடைத்துள்ளன. அவை பொன், வெள்ளி, செம்பு, ஈயக் காசுகளாகும். அதே போன்ற ஈயக்காசு கள் திருவான்மியூரிலும் கிடைத்துள்ளன. அரிமா உருப்பொறித்த பல்லவர் காசுகளும்கூடக் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆயினும், அவை எண்ணிக்கையில் மிகுதியாக இல்லை. காணம் என்னும் காசு, பல்ல வர் கல்வெட்டுகளிலேயே பெரும்பாலும் வருகின்றது.[416] காசு, கிருஷ்ண காசு, பழங்காசு, ஈழக்காசு ஆகிய காசுகள், அக் காலத்தில் புழக்கத்தில் இருந்தன.

ஒரு கழஞ்சுப் பொன்னுக்கு 3 மஞ்சாடி வட்டியாகப் பெறப் பட்டதாகப் பல்லவர் காலக் கல்வெட்டுகள் கூறுகின்றன. அவ்வா றாயின், 15% மேனிக்கு வட்டி வாங்கப்பட்டுவந்தது.[417]

மதுரை, கொற்கை ஆகிய இடங்களில் பல்லவர் காலத்தில் ஆண்ட வரகுண பாண்டியனின் செப்புக்காசுகள் கிடைத்தன. பல்ல வர் காலப் பாண்டியர் காசுகள் குறைந்த அளவிலேயே கிடைத் திருப்பினும், அவற்றில் செப்புக்காசுகளே மிகுதி.[418] சோழரின் காசுக்கு மாறாகப் பணம் என்னும் பொற்காசு, பாண்டியர் காலத்திலும் அதற்குப் பிறகும் புழக்கத்தில் இருந்தது.

## உருப்படாத கோட்பாடு

ஆசிய விளைப்புமுறை (Asiatic Mode of Production) என்னும் உருப்படாக் கருதுகோளுக்கு ஆட்பட்டுள்ள வறட்டியர்களும் 'முற் போக்கு'களும், கி. பி. 4ஆம் நூற்றாண்டிற்கும் 10ஆம் நூற்றாண்டிற்கும் இடையில் வெளியிடப்பட்ட காசுகள் இத் துணைக்கண்டத்தில் இங்குமங்கும் ஏதோ ஒன்றிரண்டுதான் இது வரை கிடைத்துள்ளதை வைத்து, நாணயப் புழக்கம் அக்காலத்தில் பெருமளவில் இல்லை யென வலிந்து பாடம் படிக்கின்றனர்.[419]

கி. பி. 14ஆம் நூற்றாண்டு முதல் தமிழகத்தில் புழங்கிய இத்தா லிய வெனீசுநாட்டுக் காசுகள் மட்டும் எத்தனை கிடைத்துவிட்டன? நாமக்கல் வட்டத்தின் பவித்திரம் என்னும் ஊரில் அந்தக் காசுகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றின் எண்ணிக்கை வெறும் 129 மட்டும் தானே? திருச்சி மாவட்டத்திலிருக்கும் குளத்தூர் வட்டத்திலுள்ள

22

www.tamilarangam.net



பெரம்பலூரில் 1, கருவூர் வட்டத்தின் பள்ளப்பாளையத்தில் 2, முசிறி வட்டத்தில் 1, பொள்ளாச்சி வட்டத்திலுள்ள வடுகப்பாளையத்தில் 2, லால்குடி வட்டத்துத் தாதமங்கலத்தில் 2, ஈரோடு வட்டத்துக் குன்றத்தூரில் 4 என்று மட்டும்தானே அவ் வெனீசுநாட்டுக் காசுகள்[420] கிடைத்துள்ளன? இதனால், வெனீசு வாணிபர்கள் தமிழகம் வந்தபோது 150 காசுகளுக்கு மேல் கொண்டுவரவில்லை என்றாகுமா? சென்னை அருங்காட்சியகத்திலிருக்கும் விசயநகரப் பேரரசின் காசுகள் மொத்தம் 645 மட்டும்தான்.[421] இதனால், விசயநகரத்து வடுக மன்னர்கள் மொத்தத்தில் 1000க்கும் குறைவாகவே காசுகளை வெளியிட்டதாகக் கருத முடியுமா? தமிழகத்தில் களப்பாள வந்தேறிகள் வெளியிட்ட காசுகள் இதுவரை கண்டெடுக்கப்பட்டுள்ளனவா?

கி. பி. 4ஆம் நூற்றாண்டு முதல் 650 வரை ஆண்ட கங்கர் வெளியிட்ட காசு ஒன்றுகூட இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.[422] அதே போன்று, 200 ஆண்டுகளுக்குமேல் ஆண்ட இரட்டரின் ஒற்றைக் காசும்கூட இதுவரை கிடைக்கவில்லை.[423] ஆயினும், இவர்களின் நில ஆவணங்கள் காசைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. வாதாபிச் சளுக்கிய அரசன் முதலாம் விக்கிரமாதித்தனின் காலத்திற்குரிய ஒரேயொரு பொற்காசைத் தவிர, கி. பி. 6ஆம் நூற்றாண்டு முதல் 10ஆம் நூற்றாண்டு வரையிலான 400 ஆண்டுகள் கருநாடகத்தை ஆண்ட சளுக்கியரின் காசு எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.[424] ஆயினும், காசுகளின் பெயர்கள் அவர்களின் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் வருகின்றன. கி. பி. 10ஆம் நூற்றாண்டுக்குப்பின் வந்த ஒய்சளர் வெளியிட்ட காசுகளில் வெறும் 13 பொற்காசுகள் மட்டுமே, இதுவரை கிடைத்துள்ளன.[425]

கல்வெட்டுகளும் செப்பேடுகளும் பல்லவரின் காசுகளைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. ஆனால், அந்தக் காசுகள் பரவலாகக் கிடைக்கவில்லை. இதனால், அப் பல்லவர் காலத்தில் காசுப் புழக்கமே இல்லையெனக் கொள்ளலாமோ?

காசுப் புழக்கம், இக் காலத்திய அளவுக்கு இல்லாதிருந்திருக்கலாம். கிடைத்த காசுகளைப் பின்னால் வந்தவர்கள் உருக்கி, மீண்டும் காசாக்கிப் புழக்கத்தில் விட்டிருக்கலாம். தங்கக்காசுகளை உருக்கி அவர்கள் தங்க நகைகளாக ஆக்கிக் கொண்டிருக்கலாம். பண்டைக் காலத்தில் தமிழகத்தில் புழக்கத்திலிருந்த உள்நாட்டுக் காசுகள் இது போன்ற காரணங்களாலேயே கிடைத்தில. உரோமானியக் காசுகள் மட்டும் பெருமளவில் கிடைத்துவிட்டதாகச் சொல்லலாகுமோ? இங்கொன்றும் அங்கொன்றுமாகத்தானே அவை கிடைத்துள்ளன? இதனால், பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்துடன் உரோமர் நடாத்திய வாணிபத்தில் அந்த அளவுக்குக் குறைந்த எண்ணிக்கையில்தான் காசுப் புழக்கமே இருந்ததெனக் கூறலாமோ? உரோமானியர்கள், பண்டமாற்று வழியாகவா தமிழருடன் வாணிபம் செய்துவந்தனர்?

www.tamilarangam.net



காசு என்னும் இடைத்தரகன் இன்றி, கடல் வாணிபம் பெருமளவில் நடந்திருக்க முடியாதே!

ஆந்திர(சதவாகன)ப் பேரரசின் காலத்தில் வானளாவ ஓங்கி நின்ற பட்டணங்கள், பின்னர்த் திடுமெனச் சிறப்பிழந்து, பொலிவிழந்து மக்களே இன்றி வெறுமையானதைக் கருநாடகத்திலிருக்கும் பிரமகிரி, சந்திரகிரி, பெம்மிகே (Hemmige), படாகாவோங்-மாதவபூர் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் காட்டுகின்றன.[426] கடம்பரின் தலைநகரமான வனவாசியைத் தவிர, ஆந்திரர் (சதவா கனர்) காலத்தில் விளங்கிய அத்தனை பட்டணங்களும் திடுமென மறைந்துவிட்டன. இதனால், பட்டணத்து மக்கள் திடீரென நாட்டுப் புறத்தை நோக்கி இடம் பெயர்ந்த ஒரு பெரிய வரலாற்று நிகழ்வையே இது காட்டும் என்பர்.

சேர, சோழ, பாண்டியப் பேரரசுகளின் எல்லைகளுக்குள் கிடைத்த உரோமக் காசுகளும் அத் தமிழ்ப் பேரரசுகளின் துறைமுகப் பட்டினங்களிலேயே பரவலாகக் கிடைக்கப் பெற்றவை. அதே போல், ஆந்திர(சதவாகன)ப் பேரரசில் புழங்கிய உரோமக் காசுகள், அப் பேரரசிற்குள்ளடங்கிய துறைமுகப் பட்டினங்களிலேயே பெரும்பாலும் கிடைத்தவை. இதனால், தென்னிந்தியத் துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதியாகிய பண்டங்களைத் தங்கக்காசுளைக் கொடுத்தே உரோமர்கள் வாங்கியது புலப்படும்.

## கடலாடி இனமடா!

உரோமானிய வரலாற்றுக் குறிப்புகளை வைத்து அடையாளம் காணப்பெற்ற நரவு (Naours), தொண்டி (Tundis), முசிறி (Mouziris), நீராணம் (Nelkunda), பொற்காடு (Bakare), வர்க்கலை (Balita), குமரி (Komaroi), கொற்கை (Kolkai), புதுச்சேரி (Podouke), மரக்காணம் அல்லது எயில்பட்டினம் (Sapatma), உறையூர் (Argaru) ஆகிய துறைமுகங்களும் நகரங்களும் தமிழகத்தில் இருந்தவை.

இந்தத் துறைமுகங்களும் பட்டணங்களும் தோன்றியபோது, அவை அக்காலத் தமிழகத்தின் விளைப்பு உறவுகளின்மீது பெரிய தாக்கங்களை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இத் துறைமுகப் பட்டினங் களும் உள்நாட்டுப் பட்டணங்களும் ஒன்றையொன்று சார்ந்தே வளர்ந்திருக்க வேண்டும்.

கி. பி. 250ஆம் ஆண்டளவில் தமிழகத்தின்மீது அடுத்தடுத்து அலையலையாய் வந்த வடுகக் களப்பாளர் படையெடுப்புகளால், தமிழ்ப் பேரரசுகள் ஒவ்வொன்றாக வீழ்ந்தன. இந் நிலையில், மூன்று நூற்றாண்டுகளுக்கு அரசும் ஆட்சியும் கொடியும் கொற்றமும் அமைதி யும் இழந்து கட்டுக்குலைந்து கிடந்த தமிழகத்தில், வணிக வகுப்பின் சீரும் சிறப்பும் குன்றின. உள்நாட்டு வணிகமும் கடல்வழி வாணிபமும் சீர்குலைந்தன.

www.tamilarangam.net



களப்பாளக் கன்னட வடுக அநாகரிகரின் படையெடுப்பு, ஆந்திர(சதவாகன)ரின் பட்டணங்களிலிருந்த வடுகர் பலரைத் தமிழகத்தை நோக்கிக் குடிபெயர வைத்தது. இவர்களின் பணியாளராயிருந்த வடுகக் கீழ்ச்சாதியினரும் அவர்களுடன் சேர்ந்து வந்தனர். இது போன்ற வடுகக் குடியேற்றம் ஒரு பெரிய வரலாற்று நிகழ்வாகும். தமிழரின் வளம் கொழிக்கும் மண்ணைக் கவர்ந்த அவ் வந்தேறிகள், அவற்றைத் தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டதுடன், தம்முடன் வந்த பணிசெய் சாதியினர்க்கும்கூட எஞ்சிய தமிழ்நிலங்களைக் கூறு போட்டுக் கொடுத்தமையால், தமிழரின் வாழ்வியலே தலைகீழாய்ப் புரண்டது.

தமிழகத்தின் வணிக, துறைமுகப் பட்டினங்களும் சிறப்புக் குன்றவும் மறையவும், இந்தக் களப்பாளர் படையெடுப்பும் மண் கவர்புமே மிகப் பெரிய காரணங்களாகும்.

## படையெடுப்புகளால் வந்த ஊரகமாக்கம்

களப்பாளர் படையெடுப்பு முதல் அடுத்தடுத்து வந்த பிற வடுகப் படையெடுப்புகளால், தமிழகத்தின் வணிகமும் வாணிபமும் ஏறத்தாழ முற்றாகக் குலைந்தன. தமிழ வணிகரும் வாணிபரும் அருகினர். வந்த படையெடுப்பாளர் படைவழி ஆட்சியை அமைத்தபின், பொது அமைதி திரும்பி இயல்புநிலை மீள்வதற்குள் இன்னொரு படையெடுப்பு வந்தது. வடுகப் படைகளின் பெயர்ச்சிகளும் நடமாட்டங்களும் தமிழ் மக்களை வருத்தி நிலைகுலையச் செய்தன.

வந்த வடுகப்படைகள் தமிழகத்து நாட்டுப்புறங்களைக் கொள்ளையடித்து போக, வழி நெடுகிலுமுள்ள ஊர்களிலிருந்த தமிழ் மக்கள் அப் படைகளுக்குச் சோறிடவும் கட்டாய ஊழியங்களைச் செய்யவும் வேண்டியிருந்தது. இந் நிலையில், வணிகச் சாத்துகளின் பெயர்ச்சி மிகவும் அருகியது. வடுகர் புகுத்திய அகரகார நிலக்கிழமையிலான தேக்கத்திற்கும் பெயர்ச்சியின்மைக்கும் வணிகத்தின் இது போன்ற முடக்கமும் காரணமானது. இந்தச் சூழலில், தனக்குள் முடங்கிய ஒரு தற்சார்புப் பொருளியலாகத் தமிழகத்து நாட்டுப்புறப் பொருளியல் குறுகியது.

வந்தேறி வடுகர் புகுத்திய பிராமண நிலக்கிழமையினால் பெரிய குமுகிய மாற்றங்கள் நிகழ்ந்தன. அக் காலத்தில் நிகழ்ந்த பட்டணக் குலைவும் ஊரகமயமாக்கமும், வடுகப் படையெடுப்பாளர்கள் தமிழ்ப் பட்டணங்களைக் கொள்ளையிட்டுச் சூறையாடி அழித்ததன் விளைவுகளாகும். இதனால், தமிழ வணிக வகுப்பு நிலைகுலைந்து கெட்டது. ஊரகமயமாக்கம் என்னும் நிகழ்வு, கி. பி. 3ஆம் நூற்றாண்டு தொடங்கிப் பத்தாம் நூற்றாண்டு வரை நீடித்தது.

அரசுத் தலைநகரங்களையும் சேர்த்துப் பத்துப் பதினாறு பட்டணங்கள் மட்டுமே பெயரளவுக்கு நகரங்களாயிருந்தன. மீண்டும்

www.tamilarangam.net



கட்டமைக்க இயலாத அளவுக்கு வடுகப் படையெடுப்பாளர்கள் தமிழ்ப் பேரரசுகளின் தலைநகரங்களையே அழித்தொழித்தமையால், புதிய தலைநகரங்கள் தோன்றின.

களப்பாளர் படையெடுப்புக்குமுன் பெருவணிக வகுப்பின் கை ஓங்கியிருந்த நிலையில், வடநாட்டுப் பெருவணிகர் நுழைத்த பெரு மதங்களான அருகமும் புத்தமும் தமிழகத்திற்குள் ஊடுருவியிருந்தன. இவ் வடக்கத்திய மதங்கள், பெரிய நகரங்களுக்கு அப்பால் பெரிதாகப் பரவவில்லை. தமிழகத்து ஏழை பாழைகளின் மதங்களாக அவை என்றுமே இருந்ததில்லை.[427]

வந்தேறி வடக்கத்தியப் பெருவணிகர்கள் பண்டைத் தமிழ்ப் பெருவணிகரை நொடிந்து குன்றி ஒடுங்கச் செய்தனர். புத்த மடங் களின் தலைவர்கள் பின்னாளில் சில இடங்களில் நேரடி வணிகத் திலும் வட்டித்தொழிலிலும்கூட ஈடுபட்டனர்.[428] அவர்களின் பெரும் பணமுதலீட்டுக்குத் தமிழ் வணிகர்களால் ஈடுதர முடியவில்லை. தங் களின் பணமுதலீடுகளுடன் வட்டி முதலீடுகளிலும் அவர்கள் செம் மாந்து நின்றமையால், தமிழகத்தின் ஆண்டைகளும் அரசர்களும் கூட அவர்களிடம் பெருங்கடன்பட்டு அல்லலுற்றனர். வடக்கத்திய பணமுதலீட்டின்முன் தமிழகத்து அரசுகளே மண்டியிட்டன.

வடுக (அகரகார) நிலக்கிழமையின்கீழ் முற்றும் அடிமைப்பட்டுக் கிடந்த நிலையில், தமிழகத்து நகர்ப்புறங்களில் வணிகம் பெரிதாக இல்லை. இருந்த நகரங்கள் யாவும் அரசின் தலைநகரங்களாகவோ, வளநாட்டு அல்லது பெருவளநாட்டுத் (மண்டலத்) தலைநகரங்களா கவோ, கோயில் நகரங்களாகவோ, மடவளாக நகரங்களாகவோ மட்டுமே இருந்தன. ஒரேபோழ்து தலைநகரங்களாகவும் கோயில் நகரங்களாகவும் இருந்த நகரங்களும் உண்டு.

ஆயினும், நாட்டுப்புறத்து அளவில் வணிகமே நடைபெறவில்லை எனக் கூற முடியாது. குறிப்பாக, உப்புச் சுமைகளை ஏற்றிச் சென்ற உப்புவணிகச் சாத்துகள், பட்டிதொட்டி வரை தம் வணிகத்தைத் தொடர்ந்து நடத்தி வந்திருக்க வேண்டும். உப்பளங்கள் எல்லாம் அரசனுக்குச் சொந்தமாயிருந்தன. அந்த உப்பளங்களைக் குத்தகைக்கு எடுக்கப் பெரும் தொகையைச் செலுத்த வேண்டியிருந்தது.

உணவுக்கூல வணிகமும் குறைந்த அளவுக்காவது கடைநிலை வரையில் இருந்திருக்க வேண்டும். இவை போக, ஆளவந்தாருக்கென விலையுயர்ந்த மணிகள், நகை நட்டுகள் ஆகியவற்றிலான வணிகமும் விளங்கிவந்தது.

பல்லவர் காலத்தில் கள் இறக்குதல் ஒரு பெரிய தொழிலானது. ஆயினும், அகரகாரங்களிலுள்ள தென்னை, பனைமரங்களின்மீது அகரகாரத்துப் பிராமணரின் இசைவு இன்றி ஈழவர் யாரும் ஏறக் கூடாது என்னும் தடை இருந்தது.

www.tamilarangam.net



## வடுக வந்தேறியத்தின்கீழ் வணிகத்தின் புத்தெழுச்சி

பல்லவன் மூன்றாம் நந்திவர்மனின் இசைவுடன், கற்பூரம் முதல் செருப்பு வரையிலான எல்லாப் பண்டங்களையும் காஞ்சியிலிருந்த விடேல் விடுகு குதிரைச்சேரி என்னும் இடத்தில் கடையமைத்து விற்க வேண்டுமெனக் காடுபட்டித் தமிழ்ப் பேரரையன் என்பான் ஆணையிட்டான்.[429] பிற்காலப் பல்லவர்கள் வணிகத்தை ஊக்குவித்ததைக் காட்டும் குறிப்பு இஃதாகும்.

வணிகர் வாழ்ந்த இடம், நகரம் அல்லது புரம் எனப்பட்டது. ஊர்க்கிழானாயிருந்த குலோத்துங்கசோழ விசயபாலன் என்னும் வணிகன், ஒரு நாட்டில் பல ஊர்களைப் பெருமளவில் வாங்கி, வணிகர் பலரை அழைத்துவந்து அவர்களுக்குக் காணியுரிமை வழங்கி ஒரு புதிய நகரத்தையே உருவாக்கினான். இத்தகைய புதிய நகரத்தை உருவாக்க அரசன் அவனுக்கு ஒப்புதல் அளித்திருந்தான். அதனை அவன் கொங்குகொண்ட சோழபுரம் என்றழைத்தான். காவிரிக்கரையிலுள்ள உய்யக்கொண்ட திருமலைக் கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டு அதைப்பற்றிக் கூறுகிறது.[430] வணிக நகரங்கள் தோன்றிய முறையை இது போன்ற குறிப்புகள் காட்டுகின்றன.

வணிக நகரங்களில் பொன்னாகத்தான் வரிகளைக் கட்டினர். வைசியர் என்னும் வரணம் தமிழரிடம் இல்லை. வைசியர் என்போர் பொதுவாக வடுகராகவோ பிற வடவராகவோ இருந்தனர். வந்தேறிகளான இவ் வைசியர்களைத் தமிழர்கள் பொதுவாக வெறுத்தனர்.

வணிகப்பண்டங்களை விற்றுவந்த கடைகளின்மீது அங்காடிக் கூலி என்னும் வரி பல்லவர் காலத்தில் விதிக்கப்பட்டது. அறுவை (துணி) வணிகர் வாழ்ந்த இடம் அறுவை வாணியச்சேரி ஆகும். நின்றவூரில் வடுக வாணியச்சேரி இருந்தது.[431] ஐங்கொல்லர்கள் வாழ்ந்த் பகுதி ஐம்பனைச்சேரி எனப்பட்டது. அரசகுடியினருக்குத் துணி நெய்துகொடுத்த நெசவாளர்சேரிகள் காஞ்சிபுரத்தில் இருந்தன.[432] அக் காஞ்சி மிகப் பெரும் நெசவுத் தொழில்நடுவமானது.

10ஆம் நூற்றாண்டு வரையில், இடைக்கால நகரங்கள் பெரும்பாலும் கோயில் நகரங்களாகவே இருந்தன. வணிக நகரங்கள் பல முன்னர் கோயில் நகரங்களாயிருந்து வணிக நகரங்களாகத் திரிவாக்கம் பெற்றவை. அவ் வணிக நகரங்களின் எண்ணிக்கை, போகப் போகக் கூடியது.[433]

கருநாடகத்தில் காணும் போக்கும் ஏறத்தாழ அதே போன்றது. கி. பி. 7ஆம் நூற்றாண்டில் கருநாடகத்திலிருந்த ஒன்பது பட்டணங்களில் ஒன்றுகூட வணிக அல்லது வாணிப நகரமாக இருக்கவில்லை. அவை எல்லாமே கோயில் நகரங்களாகவோ ஆட்சி நடுவங்களாகவோ இருந்தன. கி. பி. 9ஆம் நூற்றாண்டில் அக் கருநாடகத்திலிருந்த

www.tamilarangam.net



ஒன்பது பட்டணங்களின் கதையும் அஃதேயாகும். பத்தாம் நூற்றாண்டு வரையில் பட்டணங்களின் எண்ணிக்கை மெல்லக் கூடினாலும், அவற்றில் மங்களூர் மட்டுமே ஓய்சளரின் ஓரேயொரு வாணிப நடுவமாக இருந்தது. பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில்தான் கருநாடகத்தில் பட்டணங்களின் எண்ணிக்கை பெருகியது.[434]

கோயிலைச் சுற்றிலும் கடைகண்ணிகள் இருந்ததாகச் சுந்தரர் குறிப்பிடுவார்.* கடைகண்ணிகள் வைக்க உரிமம் பெறப்பட்டதாகக் காஞ்சி உலகளந்தான் கோயில் கல்வெட்டு ஒன்று கூறும்.[436]

"புலன்கொள் நிதிக்குவையோடு புழைக்கைமா களிற்றினமும்
நலங்கொள் நவமணிக்குவையும் சுமந்தெங்கும் நான்றொசிந்து
கலங்கள் இயங்கும் மல்லைக் கடல்மல்லைத்......"[437]

எனத் திருமங்கையாழ்வார் பாடுவார்.

கருநாடகத்தில் — 'புரம்' அல்லது 'துருகம்' என்று முடிந்த பெயர்களையுடைய நகரங்கள் அரணிடப்பட்ட நகரங்களைக் குறித்தன. 'கந்தவரம்' என்னும் பெயரோடு முடிந்த ஊர்கள், படைகள் நிலை கொண்டிருந்த படைவீடுகளாயிருந்தன. 'நகரங்கள்' அல்லது 'மகாநகரங்கள்' என்னும் பெயரொட்டியுடைய நகரங்கள் எல்லாம் செல்வம் மலிந்த நகரங்களைச் சுட்டின. 'இராசதானி' என்பது அரசின் தலை நகரமாகவும், 'பட்டணம்' அல்லது 'பணஜ வட்டணா' என முடிந்த பெயர்களையுடைய நகரங்கள், வளர்ந்து வந்த வணிக நகரங்களாகவும் இருந்தன.[438] தமிழகம் இக் கன்னட வடுகரிடம் அடிமைப் பட்டுக் கிடந்ததால், இதையொத்த துணைப்பெயர்களே தமிழகத்து நகர்ப்புற நடுவங்களுக்கும் வழங்கலாயின. ஆயினும், வடுகரின் படையெடுப்புகளுக்கு முன்னர் பண்டைத் தமிழகத்தில் விளங்கிவந்த பாகுபாடுகளைத் தழுவியவையாகவே அவ் வடுகர் கண்ட நகர்ப்புறப் பாகுபாடுகளும் இருந்தன.

மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருவொற்றியூர் முதலானவை தொண்டைநாட்டிலும், கொற்கை, தென்காசி, முகவை, குலசேகரன் பட்டினம், தொண்டி, மதுரை ஆகியன பாண்டியநாட்டிலும், உறையூர், திருமறைக்காடு, காவிரிப்பூம்பட்டினம், கருவூர், திருநாமநல்லூர், குடந்தை, தஞ்சை ஆகியன சோழநாட்டிலும் பல்லவர் காலத்தில் தமிழகத்தின் பெரிய வணிக நகரங்களாயிருந்தன. கொற்கைப் பெருவழி, சத்திரப் பெருவழி முதலான பெருவழிகளின் பெயர்கள் கல்வெட்டுகளில் வருகின்றன.[439]

கொற்கை, குலசேகரப்பட்டினம், தொண்டி, நாகபட்டினம், காரைக்கால், மாமல்லபுரம், மயிலார்ப்பூர் முதலான துறைமுகங்கள் பல்லவர் காலத்தில் இருந்தன. மாமல்லையிலிருந்து யானை, முத்து

---

* "கடையும் புடைசூழ் மணிமண்டபம்"[435]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முதலியன ஏற்றுமதியானதைப் பற்றியும், பிற பொருள்கள் இறக்குமதி யானதைப் பற்றியும் பல்லவன் இரண்டாம் நந்திவர்மனின் காலத் தவரான திருமங்கை ஆழ்வார் முன்சொன்ன பாசுரத்தில் குறிப்பிடு கின்றார்.

துறைமுகப்பட்டினங்களில் கப்பலும் படகும் கட்டிவந்த பெரும் தச்சர்கள் இருந்தனர்.

தென்கிழக்கு ஆசிய நாடுகள் வரையில் பல்லவரின் வல்லரசும் வாணிபமும் பரந்து விரிந்து நின்றது. தாய்லாந்திலுள்ள கிளாந்தோம் என்னுமிடத்தில் பல்லவர் காலப் பொருள்கள் அகழ்ந்தெடுக்கப்பட் டுள்ளன. அவற்றில், பல்லவர் காசுகளும்கூட அடங்கும்.[440]

தாய்லாந்து நாட்டுத் தாக்குவா-பா என்னும் இடத்தில் கண் டெடுக்கப்பட்ட கி. பி. 9ஆம் நூற்றாண்டிற்குரிய தமிழ்க் கல்வெட் டொன்று தஞ்சை மாவட்டத்திலிருந்து சென்ற நாங்கூர் வேள் என் பான் அவனிநாரணம் என்னும் பெயரில் நீர்நிலை யொன்றை அமைத்து அதை மணிகிராமத்தார் என்னும் வணிகக் குழாத்தினரின் பொறுப்பில் வைத்ததாகக் கூறுகிறது.[441]

கொங்கவாளார் அங்காடி, இராசராச பிரமமகாராசன் அங் காடி, திருபுவனமாதேவிப் பேரங்காடி ஆகிய பெரிய அங்காடிகள் தஞ்சையில் இருந்ததாக முதல் இராசராசனின் கல்வெட்டுகள் கூறு கின்றன.[442] நெசவாளர்க்கெனத் தனியாயிருந்த தெரு, சாலியத்தெரு எனப்பட்டது. தஞ்சைத் திருபுவனமாதேவி பேரங்காடிக்குச் சாத்தன் வடுகன் என்னும் வந்தேறி வடுகன் தலைவனாயிருந்தானென இன் னொரு கல்வெட்டுக் கூறுகின்றது.[443] பெருவாணிகத்தில் வடுகர்களுக்கு இருந்த பிடிப்பையே அது காட்டும்.


## ஐம்பொழில் ஐந்நூற்றுவர்

கி. பி. 10ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்த் தோன்றிய நகரமய மாக்கத்தால், புதிய வணிகக்குழுக்கள் சில தோன்றின. தமிழகத்தின் வணிகர்களும் வாணிபர்களும் பெரும்பாலும் தமிழரல்லாதாராகவே இருந்தனர். வணிக நகரங்களின் நகராட்சிகளிலும், அவற்றிலிருந்த கோயில் அறங்காப்புகளிலும், அந்த வடுக வணிகர்கள் பெரும் ஈடு பாட்டைக் காட்டினர்.

வாதாபிச் சளுக்கியரின் ஆட்சி ஒடுங்கி இரட்டரின் ஆட்சி எழுந்த கி. பி. 8ஆம் நூற்றாண்டில், பீசாப்பூர் மாவட்டத்தின் தெற்கி லுள்ள வாதாபிக்கு மிக அருகில் ஐம்பொழில் என்னும் வணிகநகரம் தோன்றியது.[444] அந்த ஐம்பொழிலைக் கன்னடர்கள் ஐஹொளே (Aihole) என்று வேண்டுமென்றே திரித்து வழங்கினர். ஐம்பொழில் ஐந்நூற்றுவர் (Aihole 500) என்னும் வணிகக்குழு அந்த ஐம்பொழிலி லிருந்து இயங்கிவந்தது. கி. பி. 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் அக்

www.tamilarangam.net






வரைபடம் 11

குழு மெல்ல மங்கத் தொடங்கியது. இந்தியத் துணைக்கண்டத்திலேயே மிகப் பெரிய வணிகக் குழுவாக ஐம்பொழில் ஐந்நூற்றுவர் வணிகக் குழு இருந்தது. இன்றைய கருநாடகம், தமிழர்நாடு, ஆந்திரத்திலுள்ள சோழமண்டலக்கரையின் தென்பகுதி ஆகிய பகுதிகளில் இந்த ஐந் நூற்றுவர் இயங்கிவந்தனர். இலங்கை, சீனம், சாவகம் முதலான தென் கிழக்கு ஆசிய நாடுகள் ஆகியவற்றுடன் இவர்கள் கடல் வாணிபம் செய்துவந்தனர். காவிரிக்கும் வைகைக்கும் இடைப்பட்ட இடைத்துறை நிலத்திலிருந்த பட்டணங்களில் ஐந்நூற்றுவரின் வணிகம் செழித்து விளங்கியது. ஐம்பொழில் ஐந்நூற்றுவர் இயங்கிவந்த பட்டணங்கள், ஒட்டுமொத்தத்தில், கருநாடகத்திலேயே அடர்ந்து செறிந்து இருந் ததை வரைபடம் 11 காட்டும்.[445]

www.tamilarangam.net



சேர, சோழ, பாண்டிய நாடுகள், மலையம், மாகதம், கோசலம், சௌராட்டிரம், தனுட்டிரம், குறும்பம், காம்போசம் (கம்போடியா), கௌல்லம் (இலங்கை), லாலா (மார்வார்), பார்வாரம் (பருச் அல்லது பஸ்ரா), பாரசீகம், நேபாளம், ஏகபாதம், லம்பகரண்ணம், ஸ்திரிராச் சியம், கோலமுகம் (சீனம்) ஆகிய நாடுகளுக்கும் இந்த ஐந்நூற்றுவரின் வணிகச்சாத்துகள் சென்று வந்தன. யானைகளையும், சாதிக் குதிரை களையும், முத்தும் பவழமும் வைரமும் வைடூரியமும் மாணிக்கமும் மரகதமும் பச்சைக்கல்லும் நீலக்கல்லும் நிலாமணிக் கல்லும் சிவப்புக் கல்லும் ஆகிய மணிக்கற்களையும், ஏலமும் இலவங்கமும் சந்தனமும் கற்பூரமும் மஞ்சளும் காசறையும் ஆகிய நறுமணப் பொருள்களையும் கொண்டு சென்று அங்கெல்லாம் விற்றுப் பொருள் தேடிவந்தன.[446]

அரசரும் அரசியரும் அரசகுடியினரும் நிலக்கிழார்களும் ஆகிய மேட்டுக்குடியினர் மட்டுமே ஆளவல்ல பண்டங்களை மட்டுமே ஐந்நூற்றுவர்கள் பெரிதும் விற்றுவந்தனர். எளிய மக்களின் தேவை களை நிறைவு செய்யும் பண்டங்களை உள்ளடக்கிய வணிகமாக அவர் களின் வணிகம் இல்லை. மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் எளிய பண்டங்களை வைத்து வணிகம் செய்யாத தால், இவர்களின் வழியாக நடந்த வணிகமும் வாணிபமும் அக்கால நிலக்கிழமை வாழ்வியலில் பெரிய நெளிவு சுழிவுகளை ஏற்படுத் தவோ, அதைப் புரட்டிப் போடவோ வல்ல பண்டப்பெருக்கத்தை விளைவிக்கவில்லை. நிலக்கிழமைக்கு அடங்கிய வணிகமாகவும் வாணிபமாகவுமே அவர்களின் வணிகமும் வாணிபமும் இருந்தன.

மணிக்கிராமம், நானாதேசியர், ஐம்பொழில் (ஐயப்பொழில்), ஐந்நூற்றுவர், சித்திரமேழிப் பெரியநாடு முதலான வணிகக்குழுவின ரின் வழியாகவே இந் நிலக்கிழமை வணிகம் தமிழகத்தில் நடந் தேறியது. புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள முனிச்சந்தையிலுள்ள ஐந் நூற்றுவர் பேரேரி, திருவிடை மருதூரின் ஐந்நூற்றுவன் மண்டபம், போளூருக்கு அருகிலிருக்கும் கலசப்பாக்கத்திலுள்ள ஐந்நூற்றுவன் அம்பலம், சிவகங்கை அருகிலிருக்கும் திருமலையிலுள்ள ஐந்நூற்றுவக் காவனம், பிள்ளையார்பட்டியில் உள்ள ஐந்நூற்றுவப் பெருந்தெரு, மைசூருக்கு அருகிலுள்ள மாம்பள்ளியிலிருக்கும் ஐந்நூற்றுவப் பெருந் தெரு, ஆந்திரத்தின் விசாகப்பட்டினத்திலுள்ள ஐந்நூற்றுவப் பெரும் பள்ளி முதலானவை ஐந்நூற்றுவரின் இருப்பிடங்களாக இருந்தன.[447]

ஐம்பொழில் ஐந்நூற்றுவரில் பல்வேறு சாதியினர் இருந்தனர். இவ் வணிகக்குழாத்தில் பிராமணரும் இருந்தனர்.[448] கருநாடகத்தைப் பொறுத்தவரையில், இந்த ஐந்நூற்றுவர் வணிகர்கள் பெரும்பாலும் பிராமண வட்டத்தவராகவே இருந்தனர்; அகரகாரங்களிலேயே பெரும் பாலான ஐந்நூற்றுவர் கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டன.[449] அக் கருநாடகத்தில் இவ் வணிகக் குழு, காளமுகப் பிராமணரின் தலைமை யிலேயே பெரும்பாலும் இயங்கிவந்தது.[450]

www.tamilarangam.net



## அகரகாரம் தாலாட்டிச் சீராட்டிய வணிகம்

தோன்றியது முதல் மறைந்தது வரை, பிராமண அகரங்களோடும் அகரத்துப் பிராமணரோடும் தொடர்புடையதாகவே அந்த ஐம்பொழில் ஐந்நூற்றுவர் வணிகக்குழாம் இருந்தது. ஐம்பொழில் ஐந்நூற்றுவருடைய பணியிடங்களும் கடைகண்ணிகளும் அகரகாரங்களுக்கு உள்ளேயே பெரும்பாலும் இருந்தன. அதன் வணிக ஈடுபாட்டில் பிராமணரும் பங்கெடுத்தனர். தமிழகத்தின் புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள விரையாச்சிலையிலுள்ள ஐந்நூற்றுவன்மங்கலம் என்னும் ஊர், பிராமணருக்கு என்றே அமைக்கப்பட்ட அகரகாரமாக இருப்பது இதற்கோர் எடுத்துக் காட்டாகும். ஐந்நூற்றீச்சரர் என்னும் பெயரில் பல இடங்களிலுள்ள சிவன் கோயில்களும் ஐந்நூற்றுவருடன் தொடர்புடையவை. பல்லாவரம் அருகிலுள்ள பொழிச்சலூர்ச் சாலையருகேயுள்ள சுடுகாட்டுக்கு எதிரே கண்டுபிடிக்கப் பட்ட ஐந்நூற்றுவன் குளம் என்னும் கல்வெட்டு கி. பி. 12-13ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ளதையும் இங்கு நோக்க வேண்டும்.[451]

## வேளைக்காரப் படைகள்

வணிகக்குழுக்களுக்குத் தனிப்படைகளும் இருந்தன. அவற்றிற்குத் தனித்தனிக் கொடிகளும் இருந்தன. இவ் வணிகக்குழுக்களுக்கு மூன்றுகை மாசேனை, எறிவீரர் ஆகிய பெயர்களிலான தனிப் பாதுகாப்புப் படைகள் இருந்தன. தவறிழைத்த உறுப்பினரை ஒறுக்கும் அதிகாரமும் அவற்றிற்கு இருந்தது. வணிகக் குழுக்கள் கூடுவதற்கென்றே, வணிகப் பேரவைகளும் மண்டபங்களும்கூட இருந்தன. கோயில்களுக்கும் பிறவற்றிற்கும் அவ் வணிகக்குழுவினர் அறக்கொடை பல வழங்கினர். வணிகத்திலும் வாணிபத்திலும் கொடிகட்டிப் பறந்த இவ் வணிகர்கள், உள்ளூராட்சி, வருவாய்த்துறை, வழக்குத்துறை ஆகியவற்றிலும் நல்ல பிடிப்பைக் கொண்டிருந்தனர்.[152]

'முக்கியர்' என்பவரின் தலைமையில், நானாதேசியர் என்னும் வணிகக்குழுவினர் இயங்கிவந்தனர். முதலில் அருகராயிருந்த இவர்கள், பின்னர் வீரசைவராகவும் மாலியராகவும் மாறினர்.[453].

மணிக்காரர் (மணிகிராமத்தார்) என்னும் வணிகக்குழுவினர், உயர்மணி வணிகம் நடந்திவந்தனர். ஓய்சளர் காலத்தில் வேளூர் (பேளூர்), பழவீடு (Halebeedu), விஷ்ணுசமுத்திரம் முதலான இடங்களில் இம் மணிக்காரர்களின் வணிகக்குழாம் வலுவாக இருந்தது.[454]

ஐந்நூற்றுவர் வணிகர்க்கு வலங்கைப் படையான வேளைக்காரப் படை* உதவியதாகக் கி. பி. 15ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற

* வேளைக்காரப் படை, வேளை வரும்போது மட்டுமே திரட்டப்பட்டதா அல்லது நிலையான நிலைப்படையா என்பது வெள்ளையினத்து 'முற்போக்குகள்' எழுப்பும் ஒரு கேள்வியாகும்.

www.tamilarangam.net



வலங்கைமாலை என்னும் நூல் கூறுகிறது.[455] வணிகர்கள் சிலர் வடுகச் சோழ அரசனுடன் வேறுபட்டு வேற்றிடங்களுக்குச் சென்று குடியேறினர். இவ் வணிகர்களை இடங்கைப் படையினரும் சோழ மன்னனும் துன்புறுத்திவந்தனர்.

வலங்கை வாணிபர்களுக்கும் இடங்கை வலைஞர்களுக்கும் இடையில் கப்பல் வாணிபத் தொடர்பாக ஒரு பெரிய பூசல் எழுந்தது. வணிகர்களுக்கும் கம்மாளர்க்கும் இடையில் வெண்கல வாணிபம் பற்றிய மிகக் கடுமையான சண்டை மூண்டது. இவற்றைப் பற்றி வலங்கை நூல்கள் குறிப்பிடுகின்றன. இவ்விரு பூசல்களிலும் வலங்கைச் சான்றோர் படை, வணிகர் பக்கம் நின்று இடங்கையரை ஒடுக்கியது.[456] கி. பி. 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் வணிகர்களுக்கும் சோழ மன்ன னுக்கும் இடையில் முரண்பாடு முற்றிப் பெரும் பூசலே எழுந்தது. கி. பி. 12ஆம் நூற்றாண்டில் சோழ அரசன் வெண்கலத்தின் மீதான சுங்கத்தை விலக்கினான். முதல் குலோத்துங்கனே சுங்கம் தவிர்த்த சோழன் ஆவான்.[457]

வடுகச் சோழப் பேரரசு வீழ்ந்த பின்னர், தமிழகத்தில் வணிக மும் வாணிபமும் மீண்டும் முடங்கின. இந் நிலையில், வலங்கைச் சான்றோர் என்னும் எழுநூற்றுவர் படை ஈழத்தின் வணிகரின் கைவயம் இருந்த பகுதிகளை ஆண்டுவந்தது.[458] ஈழத்தின் வழியாகப் பருத்தி, பட்டு இறக்குமதி நடந்துவந்தது.[459]

ஐந்நூற்றுவர், வளஞ்சியர் அல்லது நானாதேசியர் ஆகிய வணிகக் குழுக்களின் பக்கம் நின்ற கூலிக்கார வலங்கை வேளைக்காரப் படை கள், இலங்கை அரசனுக்கு உதவின.[460] இலங்கையிலிருந்த வலங்கைச் சான்றோர் படை 13ஆம் நூற்றாண்டில் பாண்டியநாட்டிற்குள் குடி புகுந்தது.

### ஊர்ச் சந்தையால் வந்த அங்காடி

வடுகரின் வந்தேறி நிலக்கிழமையின் முற்பகுதியில் ஊர்த் தொழிலாளரின் நிலையும் கைவினைஞரான கம்மாளரின் நிலையும் அடிமைக் குடியானவரின் (bonded tenants) நிலையையே ஒத்திருந்தது. வெள்ளாமையிலிருந்து பங்கு தந்து ஊர்த் தொழிலாளரையும் கம்மா ளரையும் குடியானவர்கள் பேணிவந்தனர். நிலவுடையார்களுக்கு அக் குடியானவர்கள் தந்த மேலாட்சி (மேல்வாரம்) போக, ஊர்த் தொழிலாளர்க்கும் கம்மாளர்க்கும் பங்கு தர வேண்டியிருந்தது. அது, குடியானவரின்மீது ஒரு கூடுதல் சுமையானது. ஆனால், ஊர்த் தொழி லாளரும் கம்மாளரும் ஆக்கிய பண்டங்களையும், அவர்தம் பணி களையும் பெருமளவு துய்த்து வந்தவர்கள் நிலவுடையாரே ஆவர்!

அவ்வாறே, மடவளாகத்துக்கோ கோயிலுக்கோ உழைத்து வந்த பணியாளர்களின் உழைப்பையும், கம்மாளரின் பண்டங்களையும்

www.tamilarangam.net



பணிகளையும் பெருமளவு துய்த்து வந்தவர்கள் வடுகப் பிராமணரே ஆவர். தொழிலாளர்க்கும் கம்மாளர்க்கும் துண்டு நிலங்களைப் பணி மக்கள் காணிகளாக விட்ட ஊரார்கள், அவர்களைக் குடியானவ ராகவும் ஆக்கினர். ஊர்த் தொழிலாளரையும் கம்மாளரையும் மேரை அல்லது களவாசப் பங்கு முறையை வைத்து நிலத்தோடு பிணித்து வைத்த நிலக்கிழார்களும் காணியாளர்களும், எளிதில் புலம் பெயரா வண்ணம் அவர்களை ஊருக்குள்ளேயே முடக்கி வைத்தனர். இவ் வாறுதான், வடுக நிலக்கிழமைக் காலப் பண்டவிளைப்பு (commodity production), நிலத்தோடு பின்னிப் பிணிக்கப்பட்டு முடங்கியது.

வாணிபத்தையும் வணிகத்தையும் ஐங்கொல்லரின் தொழில் களையும் சுரங்கங்களையும் அரசே கட்டுப்படுத்தியது. வேளாண்மை யையும் அரசே நெறிப்படுத்தியது. ஆறுகளையும் அணைகளையும் ஏரி குளங்களையும் புரந்தது.

இடையறாப் போர்களினால், ஊர்ப்பொருளியல் தனக்குள் முடங்கியது. போர் ஓய்ந்து ஒப்பீட்டளவு அமைதி திரும்பிய சூழலில், உழவர்களும் குடியானவர்களும் கம்மாளரும் தாம் விளைவித்த பொருள்களில் மிகையானவற்றைப் பண்டங்களாக ஊர் வரம்பு களுக்கு அப்பால் கொண்டு சென்று விற்க வேண்டிய சூழல் வாய்த்தது. அப் பண்டங்களை வாங்கி விற்க வல்ல இடைத்தரகரான வணிக வகுப்பு ஏற்றம் பெற்றது. கிழமைக்கு ஒரு முறை கூடிய ஊர்ச் சந்தை கள், புதிய அங்காடி வினைபாட்டையும் உறவுகளையும் தோற்று வித்தன.[461] கி. பி. 10ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு, இந்தச் சந்தைவழி வணிக வினைபாடு பெருகியது.

மக்கள்பெருக்கம் பெருத்த அகரகாரங்களிலும் மடவளாகங் களிலும் பண்டமாற்றும் விற்பனையும் கூடுதலாயிருந்தன. இதனால், ஊர்ச்சந்தைகள் அமைவதையும் கூடுவதையும் பிராமண நிலவுடை யார்களும் பிற நிலக்கிழார்களும் ஊக்குவித்தனர். மிஞ்சிய உணவுக் கூலங்களை(தவசங்களை)யும் ஆடுமாடுகளையும் காணியாளரும் குடி யானவரும் விற்றுக் காசாக்க உதவிய வணிகக்களமாக மட்டுமன்றி, ஊர்ப் பொருளியலின் மிக இறுக்கமான கட்டுப்பாட்டுத் தளைகளி லிருந்து ஊர்க் கம்மாளரைக் கட்டவிழ்த்துவிட உதவிய ஒரு நல்ல வடிகாலாகவும் அந்த ஊர்ச்சந்தைகள் மெல்ல மிக்குயர்ந்தன. இச் சந்தைகளின் வழியாக வளர்ந்த அங்காடி முறை, வணிகர் சிலரைச் சந்தை கூடிய ஊர்களிலேயே நிலையாகக் குடியேறச் செய்தது.

அங்காடிப் பேரூர்களெல்லாம் அங்காடி நகரங்களாக உருப் பெறப் பிராமணர்களும் நிலக்கிழார்களும் ஊக்குவித்தனர். வணிகர் களுக்கும் வணிகக்குழுக்களுக்கும் வரிச் சலுகைகளையும் நகராட்சி அதிகாரங்களையும் அரசு வழங்கியதைப்பற்றிக் கூறும் கல்வெட்டு களும் செப்பேடுகளும் அதைக் காட்டுவன. தலைமை வணிகருக்குப் பட்டணத்தார் போன்ற பட்டங்களைத் தந்து நாடாள்வார்கள்

www.tamilarangam.net



அவர்களைச் சிறப்பித்தனர்.[162] அப் பட்டணங்களின் எழுச்சியையும் மேம்பாட்டையும் வடுக அரசர்கள் ஊக்குவித்ததையே அது காட்டும்.

இச் சந்தைகள் போக, திருவிழாக்களும் வணிக வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தன. கோயில் கொண்ட தெய்வங்களின் புகழும், பிராமண நிலக்கிழாரின் செல்வாக்கும் பெருக இத் திருவிழாக் கள் வழிகோலின. திருவிழாவைக் காணக் குவிந்த மக்களிடம் சில பண்டங்களின் விற்பனை பெருகத் திருவிழாக்கள் உதவின.

## கடன் அங்காடிகளான கோயில்கள்

இது போன்ற வணிகப் பெருக்கத்தால் அரசுக்கு நல்ல வருவாயும் கிடைத்தது. வணிகத்தின்மீது விதித்த வரிகளும் சுங்கமும் அரசின் கருவூலங்களில் குவிந்தன. காசின் சுழற்சியையும் அது வேகப்படுத்தி யது. இதனால், புழக்கத்திலிருந்த காசுகளின் அளவும் பெருத்தது. பாய்முடைவோர், பூவிற்போர், பாலும் வெண்ணெய்யும் நெய்யும் விற் போர் ஆகியோரும்கூட அரசுக்கு வரி கட்டும் அளவுக்கு மேம்பட் டனர். வண்ணாரும்கூடக் காசு வடிவில் வரி கட்டுமளவுக்குப் பணப் புழக்கம் மக்களிடம் பெருகியது. காணிக்கடன், வரிகள் என்னும் பெயர்களில் அரசின் பிய்த்தலும் பிடுங்கலும் பெருத்தன.

வருவாய்த்துறைக் கட்டணங்களையும்கூடக் காசு வடிவில் கட்டுவது, செய்த வேலைக்குக் காசாகக் கூலி தருவது ஆகிய போக்கு கள் யாவும், அக்காலப் பணப்புழக்கத்தின் அளவைக் காட்டுவன. பிராமண அகரங்களுக்கும் கோயில்களுக்கும் கொடையாகத் தந்த நிலத்தையோ பொருளையோ வைத்துக் காசாக்கி நல்ல வட்டியை ஈட்டித்தந்ததும்கூட, அந்தப் போக்கையே காட்டும். ஈட்டிய வட்டித் தொகையிலிருந்து ஊழியர்க்கும் தொழிலாளர்க்கும் கூலி தந்ததும்கூட அதைக் காட்டும். வைப்புத்தொகையையே கொடையாகப் பெற்ற தால், பிராமணப் பெருங்குடிமக்களிடமும் கோயில்களிடமும் கெட்டிக் காசு (hard cash) பெருமளவு குவிந்தது. கடன் அங்காடியின் (credit market) தோற்றத்தையும், கடுவட்டி (usury) முறையின் பெருக்கத்தையும் அது குறிக்கும்.[163]

## பண்டவிளைப்பு துளிர்த்தது

பருத்தித் துணிகள், எண்ணெய், வெல்லம், கருப்பட்டி, சட்டி பானைகள், கூடைகள், தோல்கருவிகள், இரும்பாலும் செம்பாலும் வெண்கலத்தாலும் ஆன பொருள்கள் ஆகியவற்றின் தேவைகள் கோயில் நகரங்களில் குறிப்பாகப் பெருகின. அப் பொருள்களைத் தேவைக்கேற்ப விளைவித்தது போக, பண்டங்களாக மேம்படும் அள வுக்கும் அவற்றின் ஆக்கங்கள் பெருகின. துப்புரவுத் தொழிலாளர் கள், அம்பட்டர், வண்ணார், கள்விற்போர், வட்டிக்கடன் தருவோர், பூமாலை தொடுப்போர், சமையற்காரர், கணியர், கொத்தனார், கல்

www.tamilarangam.net



தச்சர் ஆகிய பணியாளர்களின் தேவை இன்றியமையாததானதால், இவர்கள் நகர்ப்புறங்களில் நிலையாகக் குடியேறி நிலையான தொழிலை அமைத்துக் கொண்டனர். உப்பு, வேர்க்கடலை, எள், வெல்லம், சர்க்கரை, பருப்பு வகைகள், சீரகம், மிளகு, கடுகு, இஞ்சி, பூண்டு, மஞ்சள் போன்ற பலசரக்குகள், துணி வகைகள், சாயப்பொருள்கள், இரும்பு, எஃகு, எண்ணெய் ஆகியவற்றின் பயன்பாடும் பெருத்தது.

பிரமதேயங்களை உருவாக்குகையில், எண்ணெய் ஆட்டும் செக்கையும் அதில் கட்டாயம் அமைக்க வேண்டும் எனக் குறிப்பாக வற்புறுத்தப்பட்டது. எல்லாப் பெரிய ஊர்களிலும் செக்காட்டும் தொழில் இருந்தது.

வணிகக் கழகங்கள், கடற்சிலந்தியைப்போல் நீண்டு வளர்ந்தன. ஐந்நூற்றுவர் (நானாதேசிகள்), உபயநானாதேசிகள், கன்னடரிலும் தெலுங்கரிலும் செட்டிகள், வீரபனஞ்சியர் ஆகியோரின் வணிகக் குழாம்கள் தமிழகத்திற்குள்ளும் ஊடுருவின.

இவ் வணிகமயமாக்கம், ஊர்ப் பொருளியலின்மீது பிராமணர்கள் கொண்டிருந்த கொடும்பிடியை ஆங்காங்கே முறிபடச் செய்தது. குமுகச் செல்வம் மீண்டும் வணிகரிடம் குவியத் தொடங்கியது. துணி, எண்ணெய், வெற்றிலை, பாக்கு ஆகிய வேளாண் பண்டங்களின் தேவை மிகுதியால், அப் பண்டங்களைச் சார்ந்து தனித்தனிச் சாதிகள் தோன்றலாயின. அவ்வவற்றிற்கேற்ற தனித்தனித் தொழில்நுட்பங்களும் வளரலாயின.

ஊர்த்தளைகளிலிருந்து கட்டறுந்து, பண்ட விளைப்பின் வழியாக ஊர்க் கம்மாளர்கள் தனித்து நிற்க முயன்றபோதெல்லாம், நிலக்கிழார்கள் சிலர் அதை எதிர்க்கத்தான் செய்தனர். இதனால், அக் கம்மாளரில் சிலர், பட்டணங்களை நோக்கி ஓடப் பார்த்தனர்.

முற்கால வந்தேறி (அகரகார) நிலக்கிழமை வாழ்வியலில், வணிகமும் வாணிபமும் பெருமளவில் இல்லாமல் இருந்திருக்கலாம். ஆயினும், தனக்குள் முடங்கிய அந்த அகரகார நிலக்கிழமை வாழ்வியலிலும்கூட வணிக வினைபாடு ஓரளவு இருக்கவே செய்தது. முற்கால, பிற்கால நிலக்கிழமைக் காலங்களில் விளங்கிய வணிகத்தை நிலக்கிழமை வணிகம் (feudal trade) எனப் பொதுப்படக் கூறலாம்.

## புதிய வடுக வணிகம்

கி. பி. 14ஆம் நூற்றாண்டில் விசயநகர வந்தேறி (நாயக்கர்) ஆட்சியில் வீரபனஞ்சிகர் என்னும் வடுக வணிகச் சாதியினரின் கை தாழ்ந்து, (உணவுக்) கூலவணிகத்தில் ஈடுபட்டிருந்த சாலுமூலைப் பனஞ்சிகர் என்னும் வடுக வணிகச் சாதியின் கை ஓங்கியது. சந்தைகளை அமைப்பதில் ஆர்வம் காட்டிய சாலுமூலைப் பனஞ்சிகர்கள், பட்டணவராக ஏற்றம் பெற்றனர்.[464] இவர்கள், தமிழகத்திற்குள்ளும் ஊடுருவினர்.

www.tamilarangam.net



வடுகப் படைகளின் பாதுகாப்புக் குடைகளின்கீழ் கோமுட்டிச் செட்டிகளும் வளையல்கார (பலிசா) நாயுடுகளும்கூடத் தமிழர்நாட்டில் வந்தேறினர்.[465]

விசயநகர ஆட்சிக்காலத்திய தமிழகத்தில் 73 நடுவங்களிலும், கருநாடகத்தில் 33 இடங்களிலும், ஆந்திரத்தில் 24 இடங்களிலும் நெசவுத்தொழில் நடந்துவந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன.[466] கைக்கோலர் என்னும் பெயர், விசயநகர வந்தேறிகளின் காலத்தில்தான் பரவலாக அடிபட்டது.[467]

நாயக்கர் வந்தேறிகளின் ஆட்சி குதிர்ந்த நிலையில், பட்டுநூல்காரர் என்னும் சௌராட்டிரர்கள் பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டனர். அப் பட்டுநூல்காரர்கள், மதுரை, பரமக்குடி, திண்டுக்கல், திருச்சி முதலான இடங்களில் குடியேற்றப்பட்டதாகக் கொங்குதேச ராசாக்கள் என்னும் நூல் கூறுகிறது.[468]

பாளையக்காரர்க்கு இடையிலான ஓயாத சண்டைகளால் வடுக நாயக்கர் ஆட்சிக்காலத்தில்வணிக முதலீடு சீர்கெட்டது. குறிப்பாக, நெடுந்தொலைவு தரைவணிகம் முடங்கியது. கம்மாளரின் தொழில் கெட்டது.

வலங்கை, இடங்கைப் பூசல்களில் வடுக நாயக்க அரசன் தலையிடுவது கி. பி. 15ஆம் நூற்றாண்டில் இடையறா நிகழ்வாயிருந்தது.[469] சாதிச் சண்டைகளை வடுக அரசுகளே ஊதிப் பெரிதாக்கின.

இடங்கை, வலங்கை சாதிப் பிரிவுகளில் அடங்கிய பேரிச் செட்டி, குசராத்தி, ஜைனர், கம்மா, கோமட்டி, லம்பாடி, இலாடர் ஆகிய வந்தேறி வடுகரின் எண்ணிக்கையே கூடுதலாயிருந்தது. அப் பிரிவுகளிலிருந்த நெசவாளரில், தேவாங்கர், பட்டுநூல்காரர், ரங்காரே, பத்மசாலியர், பட்டுச்சாலியர், சேடர், கன்னடியச் சேணியன், வடுகச் சேணியன் முதலான வந்தேறிச் சாதிகளின் கை ஓங்கியிருந்தது.[470]

படைகள் நிறுத்தப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்டிருந்த கடைகளை விசயநகர வடுகர் காலத்தில் சேனையங்காடி என்றும், கோயில்களில் இருந்த அங்காடிகளைக் கோயிலங்காடி என்றும் அழைத்தனர். குதிரை வாணிகத்தில் ஈடுபட்டிருந்த குதிரைச்செட்டிகள் என்னும் வணிகருக்கு "நாயக்கர்" என்னும் பட்டப்பெயர் இருந்தது.[471]

நாயக்கர் காலத்தில் விளங்கிய பாளையப்பட்டுகளில் கொலையும் கொள்ளையும் தலைவிரித்தாடியது. ஆட்சியும் அரசும் குலைந்து தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரனாய்த் திரிந்த சூழலில், வணிகமும் வாணிபமும் முடங்கின. உள்நாட்டு வணிகத்தின் கதையே இதுவென்றால் வெளிநாட்டு வாணிபத்தைப்பற்றிச் சொல்லவா வேண்டும்? வடுக நாயக்கரிடம் கப்பற்படையும் கப்பல்களும்[472] பெரிதாக இல்லாமையால் கடல் வாணிபம் ஏறத்தாழ இல்லை.

www.tamilarangam.net



## பெருகி ஓய்ந்த அகரகாரம்

விசயநகரப் பேரரசைத் தோற்றுவித்த முதல் புக்கனின் மகனான குமார கம்பணன், கி. பி. 1363ஆம் ஆண்டில் தொண்டை மண்டலத்தின் பெரும்பகுதி அடங்கிய நிலப்பரப்பை ஆண்டுவந்த சம்புவராயர் என்னும் சிற்றரசர்களை வீழ்த்தினான். அடுத்து, மதுரை சுல்தான் ஆட்சியை ஒழித்தான்.

கி. பி. 14–15ஆம் நூற்றாண்டுகளில் தமிழர்நாட்டின்மீது நடந்த வடுகப் படையெடுப்புகளால் தமிழகம் முழுவதையும் கட்டுக்கோப்பான விசயநகர வடுகப் பிடிப்புகளுக்குள் கொண்டு வர முடியவில்லை. சாளுவ நரசிம்மனும் அவனுடைய மகனான நரச நாயக்கனும் வந்து தொண்டை மண்டலத்தையும் சோழ, பாண்டிய மண்டலங்களையும் கைப்பற்றிய பின்னர்தான் விசயநகர வடுகரின் முற்றாளுமைக்குத் தமிழகம் ஆட்பட்டது.

ஆனால், இடையில் கபிலேசுவர கசபதி என்னும் ஒட்டநாட்டு (கலிங்க) அரசனும், கி. பி. 1463-64ஆம் ஆண்டில் அவனுடைய மகனான ஹம்வீரனும் தமிழர்நாட்டின்மீது தொடுத்த படையெடுப்பால், விசய நகர வடுகர் தமிழகத்தின்மீது கொண்ட பிடி தளர்ந்தது. இறுதியில், கன்னர(கிருட்டின)தேவராயன் ஏவிய வடுகர் படைகளால்தான் விசய நகரத்தின் பிடிப்பு தமிழகத்தில் உறுதிப்பட்டுக் குதிர்ந்தது.[473]

### கணவாய்க்கும்கூடக் காவல்!

நாயக்க வடுகர்கள் தமிழகத்தில் நிலவிய ஆட்சியமைப்பை மாற்றி, 224 கணவாய்களையும் 32 மணியக்காரர்களையும் 72 பாளையப் பட்டுகாரர்களையும் அமர்த்தியதாகக் கி. பி. 1528ஆம் ஆண்டில் வெளி யிடப்பட்ட பழனிச் செப்பேடு கூறுகிறது.*

தங்குதடையின்றித் தமிழர்நாட்டுக்குள் வடுகர்கள் வந்து போவ தற்கு ஏற்ற வகையில் தமிழகத்தின் 224 கணவாய்களைக் காப்பதற் கென்றே **கணவாய்** என்னும் பட்டப்பெயருடன் 224 படையதிகாரி களை மதுரை நாயக்கர்கள் அமர்த்தினர். தமிழகத்துக் கணவாய்களின் படையியல் சிறப்பை வடுகர்கள் அவ்வளவு நன்றாகத் தெரிந்துவைத் திருந்தனர். தொன்றுதொட்டு வந்த நாடு முறையை ஒழித்தது போக, **மணியக்காரர்** என்னும் பட்டத்துடன் வடுக வந்தேறிகளையே பாண் டியநாட்டில் ஊருக்கு அதிகாரிகளாக அமர்த்திய செய்தியும் அத னூடே விளங்கும்.

---

* "இருநூற்றி இருவத்திநாலு கணவாய்க்கும், முப்பத்திரெண்டு மணியக் காரருக்கும் எழுவத்திரெண்டு பாளையக்காரருக்கும் அதிபதியாகியராய ராணுவங்களுக்குக் கர்த்தரான நாகப்ப நாயக்கர் குமர கிருஷ்ணப்ப நாயக்கர் கஸ்தூரிரங்கப்ப நாயக்கர் ரங்ககிஷ்ணப்ப நாயக்கர் திருமலை நாயக்கர் இவர் கள் நான்மாடக்கூடலில் மதுரை மாநகரில் வீற்றிருந்தருளி..."[474]

23

www.tamilarangam.net



## எல்லைக்காவல் ஓட்டையான வரலாறு

"தல்லைக் கண்ணி வடுகர்முனையது
வல்வேற் கட்டி நல்நாட்டு உம்பர்
மொழி பெயர் தேஎத்தர் ஆயினும்"[475]

எனக் கட்டியின் நாட்டைப்பற்றி மாமூலனார் குறிப்பிடுகிறார். 'கட்டி என்பானின் நாட்டுக்கு அப்பாலுள்ள தமிழைத் திரித்துப் பேசுகின்ற எருமைநாடு என்னும் வடுகர்நாட்டு எல்லையில்' என்றே அது பொருள் படும். இதனால், அந்தக் கட்டி, ஒரு தமிழனாகவே இருந்திருக்க வேண்டும்.

வடுகரின் எருமைநாட்டுக்கும் கொங்குநாட்டுக்கும் இடைப்பட்ட கட்டியின் நாடு (பெருங்கதையின் மொழியில்) 'நாட்டுச்சந்தாகவே' இருந்தது என்னும் கருத்து[476] ஏற்புடையதன்று. 'கட்டு' என்பதற்கு 'கட்டுதல்', 'உருவமைத்தல்' என்றும் 'சிறுகோட்டை' அல்லது 'கோட்டை' என்றும் பொருள் உண்டு. இவ்வாறாயின், 'கோட்டைத் தலைவன்' அல்லது 'கோட்டைக்காரன்' என்னும் பொருளிலேயே 'கட்டி' என்னும் பெயர் வந்திருக்க வேண்டும்.[477] அக் கட்டியைப் பற்றிப் பாடிய மாமூலனாரின் காலம், கி. மு. 325 முதல் கி. மு. 250 வரை என்று அண்மையில் மிகத் துல்லியமாக வரையறுத்துள்ளனர்.[478] அதனால், அநாகரிக வடுகப் படையெடுப்புகளிலிருந்து தமிழர் நாட்டையும் தமிழகத்தின் எல்லைப்புறக் கணவாய் வழிகளையும் காப்பதற்காகக் காவல் கோட்டைகளும் அரண்களும் கட்டப்பட்டு அதற்குப் படைத்தலைவர்களை அமர்த்தும் வழக்கு மாமூலனார்-பரணர் காலத்திலேயே வழக்கத்திலிருந்தது புலப்படும்.

நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், புன்றை ஆகிய சேரர் படைத் தலைவர்களோடு தானும் ஒரு தானைத்தலைவனாகச் சோழனை எதிர்த்துப் போர்க்களத்தில் நின்றவன்தான் கட்டி. அப் போரில், சோழர் படைத்தலைவன் பழையன் களத்தில் மாண்டான். அழும் பிலைப் போன்ற வளம்கொழித்த குடவாயிலை ஆண்டுவந்த பெரும் பூட்சென்னி என்னும் சோழன் அதனால் வெகுண்டெழுந்து, கழு மலம் என்னும் இடத்தில் கணையன் என்னும் படைத்தலைவன் உள் ளிட்ட சேரர் படைத்தலைவர் எல்லாரையும் முறியடித்து வாகை சூடினான். இந்தச் செய்தியை மாமூலனாரின் காலத்தவரான குட வாயில் கீரத்தனார் கூறுகிறார்.[479]

அந்நாளில் உறந்தையைத் திதியன் ஆண்டுவந்தான். பாணன் என்பானோடு சேர்ந்து கட்டி, அத் திதியனின் உறையூரின்மீது படை யெடுத்தான். அப்போது, திதியனின் நாளவையில் கிணையை மீட்டி. அத் திதியனின் புகழைப் பாடிய பாடலைக் கேட்டு அரண்ட அக் கட்டி, போர்க்களத்தை விட்டே ஓடிவிட்டான்.[480]

சேரர் எல்லைப்புறக் காவற்படைத்தலைவர்களாயிருந்த அந்தக் கட்டி மரபில் வந்த பிறங்கடையினரின் நிலை என்ன தெரியுமா?

www.tamilarangam.net



அதைப்பற்றிச் சிலப்பதிகாரம் கூறும். அது, கி. பி. 50க்கும் 125க்கும் இடைப்பட்ட சாத்தனார்-இளங்கோவடிகள் காலச் செய்தி. சிலப்பதி காரம் பாடும் சேரன் செங்குட்டுவன் அன்று ஆண்டுவந்தான். அப் போது, கொங்கணர், கலிங்கர், கொடுங்கருநாடர், பங்களர், கங்கர், வடஆரியர் ஆகியோருடன் அணிசேர்ந்த கட்டி என்னும் சேர நாட்டு எல்லைப்புறக் கோட்டைக்காவல் படைத்தலவனும்கூட வடுகப் படைகளோடு சேர்ந்துகொண்டு சேரன் செங்குட்டுவனின்மீது படையெடுத்து வந்தான். 'கொங்கணர், கலிங்கர், கருநாடர், பங்களர், கங்கர், கட்டியர் முதலியோர் வடஆரியருடன் வந்து தமிழ்ப் படை களுடன் கைகலந்த அக் காட்சி என் கண்களிலிருந்து இன்னும் மறைய வில்லை' என்னும் பொருளில்,

"கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்
பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர்
வடவா ரியரொடு வம்தமிழ் மயக்கத்து உன்
கடமலை வேட்டமென் கட்புலம் பிரியாது"[48]

என்று வில்லவன் கோதை அச் செங்குட்டுவனிடம் அப்போது சொன் னான்.

சேரர் படைத்தலைவர்களாயிருந்து தமிழகத்தின் எல்லைப் புறக்காவல்பணியில் கண்ணும் கருத்துமாக இருந்துவந்த கழகக் காலக் கட்டியின் மரபினர், சிலம்பு பாடும் சேரன் செங்குட்டுவனின் காலத் தில் தாய்த்தமிழ் மண்ணையே வஞ்சித்து இனக்கேடராகத் திரிந்து — தமிழர்நாட்டின்மீது படையெடுத்து வந்த வடுக அநாகரிகருக்குத் துணைபோய் — கங்கைக்கரையிலிருந்து அவ் வடுகர் அழைத்து வந்த வடஆரியப் படைகளுக்கும் துணைபோய் இருக்கலாம். எவ்வாறா யினும், கட்டியின் நாட்டைப் பின்னர் வடுக அநாகரிகர் பிடித்துக் கொண்டனர் என்பதே வரலாறு.

தகடூர் மாவட்டத்தின் செவிடப்பாடி (ஒசூர்) வட்டத்திலிருந்து நான்கு கணவாய்களைத் தமிழகத்திற்குள் ஊடுருவ வடுகர் பயன்படுத் தியிருக்க வேண்டும். (கருநாடகத்திலுள்ள கோலார் மாவட்டத்தின் பங்காரப்பேட்டை வட்டத்தில், அத் தகடூர் மாவட்டத்தின் எல்லை யில், தொடங்கும்) புழுதி(பூதி)க்கோட்டைக் கணவாய், சூலமலை (சூலகிரி)க் கணவாய், தேன்கனிக்கோட்டைக்கும் பெண்ணாகரத்திற்கும் இடையிலான அஞ்செட்டிக் கணவாய், கருமலை (கிருட்டினகிரி) வட்டத்திலிருந்து ஊடுருவ வழிகோலும் பாலக்கோட்டுக் கணவாய், இராயக்கோட்டைக் கணவாய் ஆகியனவே அவையாகும். புழுதிக் கோட்டைக்கு அருகில் இருந்தமையாலேயே, இன்றைய பெங்களூர் ஊரக மாவட்டத்திலுள்ள தேவனள்ளிக்கு 7 கல் தொலைவிலுள்ள குந்தாணி என்னும் நகரம் கி. பி. 13ஆம் நூற்றாண்டில் வடுகனான ஒய்சளன் இராமநாதனின் தலைநகரங்களில் ஒன்றாயிருந்தது. அதிய மான் (அதமன்) கோட்டை காத்து நின்ற தொப்பூர்க் கணவாய், ஊற்றங்

www.tamilarangam.net



கரை வட்டத்தில் ஓடும் செங்கம் கணவாய், கோட்டைப்பட்டிக் கண வாய் ஆகியவற்றின் வாயிலாகவும் வடுகர் வந்திருக்க வேண்டும்.

ஔவையாரின் அறிவுரைப்படி சேர, சோழ, பாண்டிய முடி மன்னர்கள் கூடித் தத்தம் நாட்டு எல்லைகளை முறைப்படி வரையறுத் ததாலேயே சேலம் மாவட்டத்தின் ஆற்றூர் வட்டத்தின் தலைவாச லுக்கு அப் பெயர் வந்ததாக ஒரு மரபுச் செய்தி உண்டு. அத் தலை வாசலுக்குப் பக்கத்திலுள்ள மும்முடி என்னும் ஊரின் பெயரே அதற்குச் சான்றுரைக்கும். 'தலைவாசல்' என்பதையும் 'மும்முடி' என்ப தையும் வைத்து மூவேந்தர் பெருவாயில் (Gateway of the Three Crowns) என்று பொருள் கொள்வர். இதனால், வடுக வந்தேறிகள் பெருமள வில் ஊடுருவுவதற்கான பெருவாயிலாக இந்தத் தலைவாசல் இருந்தது என்பதை அறிக.[482]

பாணர்நாடு என்னும் எல்லைப்புறக் காவல்நாட்டைப் பிடித்துக் கொண்ட வடுகர்கள், முதலில் தங்களையும் பாணர்கள் எனக் கூறித் திரிந்து, பின்னர் பா(Ba)ணர் என்று ஆகவில்லையா? வடகொங்கு நாட்டைப் பிடித்த வடுகர்கள் தங்களையும் "கொங்கர்" எனச் சொல்லிக்கொள்ளத் தொடங்கி, பின்னர்க் கங்கர் என்றாகவில்லையா? அதே போல், போர்உத்திச் சிறப்பு மிக்க காவல்நாடான கட்டிகளின் நாட்டைப் பிடித்த வடுகர் சிலர், தங்களையும் கட்டி மரபினர் எனச் சொல்லிக்கொண்டு, பின்னர்க் க(Ga)ட்டி மரபினராயினர். இந்தக் க(G)ட்டிகள், வடுகராவர். இவ் வடுகக் கட்டிகள் கி. பி. 7-8ஆம் நூற் றாண்டில் தகடூர் நாட்டை ஆண்டுவந்தனர். நுளம்ப வடுகரின் எழுச் சிக்குப்பின், இவர்கள் மறைந்தொழிந்தனர்.[483]

வடுகப் படையெடுப்புகளால் சேர, சோழ, பாண்டியரான தமிழ் மூவேந்தரின் கூட்டணி முறிந்த நிலையில் — தமிழகத்தைக் காத்து வந்த எல்லைப்புறக் காவல்நாடுகளும் கணவாய்களும் கோட்டை யரண்களும் வடுக அநாகரிகரால் கைப்பற்றப்பட்டுவிட்ட சூழலில் — தமிழரின் எல்லைப்புறக் காவல் கட்டுக்குலைந்தது. இந்தப் பொல் லாத வரலாற்று நிகழ்வே, பிற்காலக் களப்பாள வடுகரின் சூறாவளிப் படையெடுப்புகளுக்கும் முன்னோடியானது; தமிழரினத்தின் வீழ்ச் சிக்குக் கட்டியம் கூறியது. இதை நன்குணர்ந்த விசயநகர வடுகப் படையெடுப்பாளர்கள், அதனால்தான் கொங்குநாட்டுக் கணவாய் களை வழிமேல் விழி வைத்துக் காத்துவந்தனர்.

கட்டியமானடிகள், கட்டிமான் ஆகிய பெயர்கள் இடைக்கால வடுகச் சோழர் காலத்திலும் வழங்கவே செய்தன. சுந்தர சோழனின் (கி. பி. 956-73) படைத்தலைவனான சிறிய வேளார் என்பவன் முதலி என்னும் பட்டத்தைப் பெற்றான். இந்தச் சிறிய வேளாரின் மகனின் பெயர், கட்டி ஒற்றியூரன் ஆகும். இவனுக்குக் கொல்லி மழவன் ஓரியூரன் என்னும் பெயரும் உண்டு.[484] மழவர் என்பதால் இவர்கள் தமிழர்கள். இவர்கள் தங்களை 'வேளாளர்' எனக் கூறிக்கொண்டனர்.

www.tamilarangam.net



அதனால், இவர்கள் கட்டி வடுகரிடமிருந்து வேறானவர்கள். எல்லைப் புறக் கோட்டை அதிகாரிகளாயிருந்ததால், இவர்கள் தாரமங்கலம் கட்டி முதலிகள் என்றாயினர்.[485]

நாடாள்வானைக் குறிக்கும் 'நாடுவாழி' என்னும் பெயர், சேர நாட்டுப் பெயர் வழக்காகும். கட்டி முதலிகளையும் கூட அவ்வாறே 'நாடுவாழி' என்றனர்.[486]

காவிரியின் வலப்புறத்திலிருந்த கட்டி முதலிகளின் தலைநகரம், மைசூருக்குச் செல்லும் வழியிலிருந்த போர்உத்திச் சிறப்பு மிக்க ஒரு கணவாயை நோக்கியபடி இருந்தது.[487]

அமரக்குன்று, தாரமங்கலம், காவிரிபுரம், ஓமலூர், ஆற்றூர், குளத்தூர், தென்கரை, குன்றத்தூர் (சங்ககிரி), பவானி கூடுதுறை, மேல்சேரி, சாம்பள்ளி, ஆறகலூர், நாமக்கல், பேளூர், குமாரப் பாளையம், அந்தியூர், பெரும்பாலை, சோழப்பாடி ஆகிய இடங் களிலிருந்த கோட்டைகளில் இருந்து கொண்டு பாளையக்காரராக ஆண்டுவந்த கெட்டி முதலிகளின் கதை, திருமலை நாயக்கன் காலம் முதலே தொடங்கும். வேடர்களுக்குச் சொந்தமாயிருந்த பாளையப் பட்டு இவர்களின் கைக்கு மாறியதை அந்தக் குடிவரலாறு காட்டு கின்றது. காஞ்சிபுரத்திலிருந்து வந்து சேலம் மாவட்டத்தில் குடியேறிய ஒரு பிரிவினரே, இத் தாரமங்கலம் கட்டி முதலிகளாவர். இவர்கள் கி. பி. 1539 முதல் 1689 வரை பாளையக்காரராயிருந்தனர்.[488]

காவிரிபுரம், தொப்பூர், பொன்முடிக் கணவாய் ஆகிய கண வாய்களின் வழியாகத்தான் எருமையூரிலிருந்து (மைசூரிலிருந்து) தமிழகத்திற்குள் நுழைய முடியும். இதனால்தான், நாமக்கல், சேந்தன் மங்கலம், பெரிய சேலம், குன்றத்தூர் (சங்ககிரி), ஆற்றூர், பரமத்தி ஆகிய இடங்களிலெல்லாம் மலைத்தொடர்களில் மதுரை நாயக்கர் கள் கோட்டைகளைக் கட்டினர்.

காவிரிப்புரத்து ஆலம்பாடி என்னும் ஊரிலுள்ள கோட்டை யின் உள்கோட்டை வேடர்கள் கட்டியது. வெளிக்கோட்டையோ, மைசூர் மன்னர்கள் கட்டியது.[489] அந்தியூர்க் கோட்டையைக் கட்டிய வரும் வேடரேயாவர்.[490]

சேலம் மாவட்டத்திலுள்ள ஓமலூர்க் கோட்டையும் ஆற்றூர் கோட்டையும் போர்உத்திச் சிறப்புடையன. மதுரை நாயக்கராண்ட பகுதி மைசூர்நாட்டைத் தொட்டுநின்ற பகுதிக்குக் காவலாகக் காவிரி புரம் கோட்டை விளங்கியது.

அறுபத்திரண்டு குறுக்கம் (ஏக்கர்) பரப்பில் அமைந்த ஆற்றூர்க் கோட்டையில், பெரிய அகழியும் பெரிய கருங்கல் மதில்களும் உள்ள துடன், தகரிகள் (பீரங்கிகள்) வைப்பதற்கேற்ற குழிகளும்கூட உண்டு. பெரிய மாளிகைகள், பாளைய ஆட்சி அலுவலகங்கள், நீராழி மண் டபம், களஞ்சியக் கொட்டாரம், வெடிமருந்துக் கிடங்கு ஆகியனவும்

www.tamilarangam.net



அங்கு இருந்தன.[491] தமிழகத்தின் கிழக்குக் கரைக்குச் செல்லும் மிக அருகலான பாதை ஆற்றூர் வழியாகச் சென்றது. வெள்ளாற்று பள்ளத்தாக்கின் வழியாகத் திருச்சியை அடையவல்ல பாதையையும் அது காத்து நின்றது. ஓமலூர்க் கோட்டையின் வெளிச்சுற்று மதிலில் 8 கொத்தளங்களும், உள்சுற்று மதிலில் 6 கொத்தளங்களும் இருந்தன. இவற்றின் உச்சியில் மேடமைத்துக் கருங்கற்களை நிறுத்து அவற்றின் மீது தகரிகளை நிறுத்தியிருந்தனர். தொப்பூர்க் கணவாய் வழியாக வரும் பகைவரை அழிக்கும்வண்ணம் அவை அமைந்திருந்தன.[492]

இவ்வாறு தமிழகத்தின் எல்லையிலிருந்த 224 கணவாய்களைக் காவல் காப்பதில் வந்தேறிய வடுகர்கள் காட்டிய மிகப் பெரிய கவனத்தின் அளவைகள் இவற்றால் விளங்கும்.

தமிழகத்திற்குள் ஊடுருவிய வடுகர்கள் முதலில் வடக்கும் தெற்குமாகத் தமிழகத்தின் மேற்கு எல்லை முழுவதும் படர்ந்தனர். அவ் வடுகர்களுக்குப் பழக்கமான கரிசல்மண் காட்டுப் பகுதியாய்ப் பார்த்து அவர்களின் படர்ச்சி இருந்தது. இதனால், தமிழரில் குடித்தலைவர்களை அந்தப் பகுதிகளில் மெல்ல அப்புறப் படுத்திவிட்டுத் தெலுங்கு வடுகரான இரெட்டிகள் கொற்றம் புரியலாயினர்.[493]

## நாயக்கரும் போலிகளும்

நாயக்கர் ஆட்சிக்காலத்தில் வடுகப் படைஞரும் அவர்களின் பரிவாரங்களும் பணியாட்களும் தமிழர்நாட்டின் எல்லைப்புறப் பகுதிகளில் அலையலையாக வந்து மேன்மேலும் குடியேறத் தொடங்கினர். அவ்வாறு குடியேறிய தமிழ்ப் பகுதிகளிலிருந்த காடுகளை அழித்து நாடாக்கினர். கல்வெட்டுகளும் மக்கென்சியின் பாளையப்பட்டு வரலாறுகளும் அதைத் தெளிவாகக் காட்டுகின்றன.[494]

கி. பி. 1525-37ஆம் ஆண்டுகளில் விசயநகரப் பேரரசில் மொத்தம் 200 நாயக்கர்கள்* (ஆளுநர்கள்) இருந்தனர். கி. பி. 1371க்கும் 1422க்கும் இடையில் தமிழகத்தில் மட்டும் 6 நாயக்கர்கள் இருந்தனர். கி. பி. 1440க்கும் 1459க்கும் இடையில் மேலும் 6 நாயக்கர்கள் கூடி அவர்களின் எண்ணிக்கை 12 ஆயிற்று. கி. பி. 1465க்கும் 1491க்கும் இடையில் தமிழகத்தில் அந் நாயக்கர்களின் எண்ணிக்கை 9 ஆகக் குறைந்தது. கி. பி. 1491க்கும் 1508க்கும் இடையில் அது 19 ஆனது. கி. பி. 1509க்கும் 1530க்கும் இடையில் மொத்தம் 27 நாயக்கர்கள் தமிழகத்தில் இருந்தனர்.[495]

குறிப்பிட்ட எண்ணிக்கையில் யானைப்படையையும் குதிரைப் படையையும் காலாட்படையையும் வைத்துப் பேணி விசயநகரப் பேரரசன் போர்மேல் செல்லும் போதெல்லாம் அவனோடு போரில் சேர்ந்துகொள்ள வேண்டும் என்னும் அக்குத்து அடிப்படையில், ஒரு

* 'நாயக்கன்' என்பது 'நாயகன்' என்னும் தமிழ்ச்சொல்லின் வடுகத் திரிபேயாகும்.

www.tamilarangam.net



குறிப்பிட்ட நிலப்பரப்புக்குள் வருவாய் தண்டவும் ஆட்சி நடத்தவும் செய்யும் உரிமை ஓவ்வொரு நாயக்கனுக்கும் இருந்தது. இதனால், வடுகப் போர்வேளிர்களின் பெருங்கூட்டமைப்பாக விசயநகர வல்லரசு விளங்கியது..

நாயக்கர் ஆட்சி குதிர்ந்திராத நிலையிலேயே வந்தேறி வடுக ரோடு கூட்டுச்சேர்ந்துகொண்ட தமிழரில் உள்ளூர்த் தலைவர்களில் சிலர், தங்களையும் 'நாயக்கர்' எனச் சொல்லிக்கொள்ளத் தலைப் பட்டது ஒரு துணைநிகழ்வு. புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக் கொள்வதைப் போல், தமிழரில் போர்த்தொழில் பழகிவந்த சில சாதித் தலைவர்களும்கூட 'நாயக்கன்' என்னும் பட்டத்தைச் சூட்டிக்கொள் வதைப் பெரிய பெருமை எனக் கருதினர். ஆயினும், இந்தப் போலி நாயக்கரையெல்லாம் விசயநகர வல்லரசின் முகவர்களாகவோ, அதி காரிகளாகவோ, பேராளராகவோ அந்த வடுக வல்லரசு என்றுமே ஏற்றுக்கொள்ளவில்லை.[496]

## வடுகனுக்கு வந்த புது வலிமை

கி. பி. 15ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே விசயநகர வடுக அரசர்கள் முசுலிம் படைகளைக் கூலிக்கு அமர்த்திக் கொண் டனர். முதல் விசயநகர அரசை நிறுவிய அண்ணன் தம்பியர் உள்ள படியே தக்கணி முசுலிம் படைகளில் பணிபுரிந்தவர்களாவர்.[497] தம் முடைய முசுலிம் படைஞரின் நம்பிக்கையைப் பெறுவதற்காகவென்றே இரண்டாம் தேவராயன் (கி. பி. 1422-46) தன்னுடைய அரியணைக்குப் பக்கத்தில் திருக்குரானை வைத்திருந்தானாம்.[498] விசயநகரப் பேரரசில், முசுலிம் படைப்பிரிவுகளே போர்உத்தி நிலையில் தனிச் சிறப்பிடம் பெற்ற படைப்பிரிவுகளாயிருந்தன.

வடக்கத்திய முசுலிம்களின் போர்உத்திகளையும் படைக் கருவிகளையும் போலிமை செய்ததாலேயே விசயநகரப் படைகளும் புதுப் பொலிவையும் வலிமையையும் பெற்றன. மேம்பட்ட குதிரைப் போர் முறையையும், தகரி(பீரங்கி)யை ஆளும்முறையையும் முசுலிம் களிடமிருந்து கற்றது, அந்த விசயநகர வடுகர் படைகளுக்குப் புது வலிமை சேர்த்தது. இதனால்தான், போர்க்குதிரைகளைப் பெருமள வில் இறக்குமதி செய்வதில் விசயநகர வடுக வல்லரசர்கள் பெரிய முனைப்பைக் காட்டினர். கன்னர(கிருட்டின)தேவராயன் ஒவ்வோர் ஆண்டும் 13,000 (ஓர்முசு) அரபிக் குதிரைகளையும் பிற குதிரைகளை யும் விலை கொடுத்து வாங்கினானாம்.[499] குதிரைகளை இறக்குமதி செய்து விற்றுவந்த கரையோரப் பட்டினங்களில் விளங்கிய குதிரை விற்பனையின்மீது விசயநகர வல்லாண்டைகள் தங்களின் கொடும் பிடியை வலுப்படுத்தினர்.

விசயநகர வடுக வல்லரசின் நாயக்கர் ஆட்சியமைப்பு முழுக்க முழுக்க ஒரு படைவழிக் கட்டுமானமாகும். அதனால்தான் அதனைப்

www.tamilarangam.net



போர் அரசு (War State) என்றனர்.[500] வெடிமருந்து, துமுக்கி, கோட்டை கொத்தளங்கள், மேம்பட்ட குதிரைப்படை ஆகியவற்றைத் தழுவி அந் நாயக்கர்களின் படைவலிமை இருந்ததால், போர்ச்சுகீசியருடன் விசயநகர வடுகர்க்கு இருந்த மிக நெருக்கமான உறவுகள், அவர்களுக்கு இன்னொரு பெருந்துணையாயிருந்தது.

விசயநகர வடுகர்கள், தக்கணி முசுலிம்களிடமிருந்து தகரி (பீரங்கி)யை ஆளக் கற்றனர் என்றோம். ஆயினும், போர்ச்சுகீசிய கூலிப்படைகளைக் கொண்டே பின்னர் அத் தகரிப்போர் முறையை அவர்கள் ஆண்டனர்.

படைப்பெயர்ச்சியின் வேகத்தைப் பெருக்கிய குதிரைப்படை போருக்குத் துணைநிற்கும் முகமாக, வலிமை வாய்ந்த கோட்டை கொத்தளங்களை ஆங்காங்கே கட்டி அரணிட்டு உழிஞைப் போரின் ஆற்றலையும் பெருக்குவதிலும் கன்னர(கிருட்டின)தேவராயன் பெரிய முனைப்புக் காட்டினான். அவன் எழுதிய ஆமுக்த மால்யத என்னும் நூல் அதைக் காட்டும்.[501]

## நாயக்கனை அடக்கப் பிராமணன்!

இத் துணைக்கண்டம் அதுவரை கண்டிராத புதிய படையியல் உறுப்புகளும் உத்திகளும், அந்த விசயநகரப் பேரரசின் ஆளுநர்களாயிருந்த நாயக்கர்களின் படைவலிமையை மளமளவெனக் கூட்டின. அதுவரை இருந்திராத புதிய வலிமை பெற்ற அந் நாயக்க ஆளுநர்கள் சிலர், விசயநகர நடுவணரசையே எதிர்த்துச் சூழ்ச்சி செய்யவும் பணியாற்றவும் கலகம் செய்யவும் துணிந்தனர்.

இந்தச் சூழலில், விசயநகரப் பேரரசனான கன்னர(கிருட்டின) தேவராயனின் காலத்தில், வடுகப் பிராமணர்க்கு அரசியலில் மிகப் பெரிய பங்கும் பொறுப்பும் தரப்பட்டன. நாயக்க ஆளுநர்களின் கொற்றங்களை அடக்குவதற்கென்றே அக் கன்னர(கிருட்டின)தேவராயன் பிராமணரை -- குறிப்பாகத் தெலுங்குப் பிராமணரை — கோட்டை கொத்தளங்களுக்குப் படைத்தலைவர்களாக அமர்த்தினான். நாயக்க ஆளுநர்கள் நடுவணரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவதைத் தடுக்க அந்த ஏற்பாடு உதவியது. நாயக்கர்களைக் கண்காணிப்பதற்கென்றே தெலுங்குப் பிராமணர்கள் தமிழ்நாட்டிற்கும் அனுப்பிவைக்கப்பட்டனர்.[502] பிராமண அதிகார வகுப்பு, பூதமாய் வடிவெடுத்தது.

அரசியல் பேரவா பெரிதாக இல்லாதவர்கள் பிராமணரே என்றெண்ணிய விசயநகரப் பேரரசர்கள், சத்திரியரும் சூத்திரருமான வடுக நாயக்கர்களைக் கட்டுப்படுத்த ஏற்றவர்கள் அவர்களே என்று கருதினர். வீரமற்றவர் என்று ஏளனம் செய்யப்பட்டமையால் தம் படைத் திறமையைக் காட்டப் பிற சாதி வடுக நாயக்கருடன் அவர்கள் போட்டியிடுவர் என்றும் நினைத்தனர். இந்தக் காரணங்களாலே,

www.tamilarangam.net



வடுகப் பிராமணர்கள் கோட்டைப் படைநாயகர்களாக அமர்த்தப் பெற்றனர்.[503]

வடுகப் படைகளில் பிராமணர் சிலர், பெரிய அதிகாரிகளா யிருந்தனர். விசயநகரத்து முதல் அரசக்குடியான சங்கமரின் காலத் தில் தமிழகத்தின்மீது படையெடுத்து வென்ற விசயநகர வடுகப் படை களுக்குத் தலைமை தாங்கிய கோபநாராயன், சோமநாதன் ஆகியோர் வடுகப் பிராமணர் ஆவர்.[504]

சோழர் காலத்தில் பிராமண அகர வாழ்க்கையைத் துய்ப்பது, பிராமணப் பள்ளிகளில் கற்கவும் கற்பிக்கவும் செய்வது என்பதோடு, 'பிரமாதிராயன்' என்னும் படைத்தலைவன் பதவியையும்கூட வடுகப் பிராமணர்கள் வகித்துவந்தனர். விசயநகர நாயக்க வந்தேறியத்தின் காலத்தில் அவர்கள் மூவேந்த வேளான்களைப் பின்னுக்குத் தள்ளி விட்டு, அவர்கள் வகித்துவந்த ஆட்சித்துறைப் பதவிகளையும் கைப் பற்றித் தனிப்பெரும் அதிகார வகுப்பாகத் திரிந்தனர். தங்களின் அரசியல் செல்வாக்கைப் பன்மடங்கு பெருக்கிக் கொண்டனர். கணக் காளராகவும் ஆட்சியாளராகவும் பயிற்சி பெற்ற வடுக வந்தேறிப் பிராமணர்களில் சிலர், 'நியோகி பிராமணர்' என்னும் உட்சாதியாகத் திரிந்தனர். விசயநகர ஆட்சியில், இந்த நியோகி பிராமணர்களே அமைச்சர்களாகவும் படைநாயகர்களாகவும் மாகாண ஆளுநர்களாக வும் ஏற்றம் பெற்றனர்.[505]

விசயநகர வல்லரசின் ஆளுநர்கள் என்பதால், அந்த வடுக வல்லரசின் நல்ல முகவர்களாக நாயக்கர்கள் மிகத் திறம்படப் பணி யாற்றினர். வந்தேறி வடுக இன வல்லாண்மையின் தூதுவர்களாக வும் பேராளராகவும் செயல்படுவதில் மட்டும் அவர்கள் என்றுமே தவறியதில்லை.

விசயநகரப் பேரரசர்களுக்கும் நாயக்க ஆளுநர்களுக்கும் இடை யில் விளங்கிய முரண்பாடுகள் பல நேரங்களில் அரண்மனைச் சூழ்ச்சி களாகவும் கலகங்களாகவும் வெளிப்பட்ட போதும், வடுகரிடம் அடிமையுண்ட முந்தைய தமிழ்ப் பேரரசர் குடியினரும் சிற்றரசர் குடியினரும் அவர்களின் தமிழரசுகளும் மீண்டும் தலையெடுக்க விடாது பார்த்துக்கொள்வதில்[506] மட்டும் அவர்கள் மிகவும் விழிப் போடிருந்து தம்முடைய இன ஒற்றுமையைக் கட்டிக்காத்தனர்.

அவ் வந்தேறி வடுக நாயக்கர்கள், தமிழர்நாட்டின் மீதான தங்களுடைய மேட்டிமையையும் பிடிப்பையும் வலுப்படுத்திக் கொள் வதில் மட்டும் என்றுமே சளைத்ததில்லை. தம் தந்நலம் கருதித் தமிழ ரில் சில சாதியினர் அவர்களுக்குத் தோள்கொடுத்தனர். அவ் வடு கர்க்கு அவ்வாறு தோள்கொடுத்தவர்கள், அன்று போர்த்தொழில் பழகிவந்த சாதியராகவே பெரும்பாலும் இருந்தனர். நடுவில்நாட்டி லும் கொங்கு நாட்டிலும் பள்ளிச் சாதியரும், பாண்டியநாட்டில் மறவர் சாதியரும் அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள்.

www.tamilarangam.net



தெலுங்குப் பிராமணரை வைத்து நாயக்கர்களின் கை ஓங்காமல் பார்த்துக்கொண்ட விசயநகரப் பேரரசர்களின் உத்தி, தக்கணி முசுலிம் படைகளுக்கு எதிரான தலைக்கோட்டைப் போருக்குப்பின் — கி. பி. 1565ஆம் ஆண்டில் — கெட்டுக் குலைந்தது. ஆயினும், தமிழ்நாட்டில் வல்லாட்சி புரிந்துவந்த நாயக்க வந்தேறிகளுக்கு இடையில் சண்டை மூண்ட கி. பி. 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை, தமிழகத்தில் மட்டும் அதே உத்தியைத் தொடர்ந்து கடைப்பிடித்துவந்தனர்.[507]

## பாளையக்காரன் கொள்ளை!

வடுகச் சோழர் காலம் வரையில் சிறந்து விளங்கிய நாடு முறையையும், நாட்டார், பெரியநாட்டார், ஊரார், அகரப் பேரவையார் ஆகியோரின் வழியான உள்ளாட்சிக் கூறுகளையும் விசயநகர வடுக வந்தேறியம் முற்றாகச் சீர்குலைத்தது. தமிழகத்தின் நிலபுலங்களை வலியக் கவ்விய வடுக நாயக்கர்கள், தம் இனத்தவரைப் பெருமளவில் இறக்குமதி செய்து தத்தம் ஆட்சிப் பரப்புகளில் குடியேறச் செய்தனர். இதனால், கூட்டுஅதிகாரமுள்ள ஊரவைகள் மதிப்பிழந்து, உள்ளூரில் கொற்றம் புரிந்துவந்த தனிப் பெருந்தலை ஒருவனிடம் ஊரே கட்டுண்டது. வடுகச் சோழரும்கூடக் கலைக்கவும் குலைக்கவும் துணியாத 'நாடு' என்னும் ஆட்சியியல் தனிமம், அதனால் சீரழிந்தது.

தொன்றுதொட்டு விளங்கிவந்த நாடு முறையை ஒழித்த வடுக நாயக்கராட்சி, 72 பாளையப்பட்டுகளாகப் பாண்டியநாட்டைப் பிரித்துப் பாளையக்காரர் என்னும் போர்வேளிர்களிடம் அவற்றை ஒப்படைத்தது.

நாயக்கர்களுக்கும் ஊர் மணியக்காரர்களுக்கும் இடையில் விளங்கிய இடைநிலை அதிகாரங்களாக அப் பாளையக்காரர்கள் இருந்தனர். ஒவ்வொரு பாளையப்பட்டிலும் 10 முதல் 50 வரையிலான ஊர்கள் இருந்தன. இப் பாளையக்காரர்கள், தங்களுக்கெனக் குதிரைப் படைகளையும் அடியாள்களையும் வைத்துக்கொண்டனர். உழவர் மீதும் குடியானவர் மீதும் கம்மாளர் மீதும் வணிகர் மீதும் வரி விதித்தனர். தங்களுக்கெனச் சிறிய கோட்டைகளையும்கூடக் கட்டிக்கொண்டனர். மதுரைக் கோட்டையிலிருந்த 72 கொத்தளங்கள் ஒவ்வொன்றையும் 72 பாளையக்காரர்கள் விடுத்த படைகள் காவல் காத்தன.

பாளையங்களில் காட்டாட்சி நடத்திய பாளையக்காரர்கள் வைத்ததே சட்டம் என்றானது. நடுவண் நாயக்கர் மேட்டிமையையும் அவர்கள் மதித்தாரில்லை. தடி எடுத்தவனெல்லாம் தண்டல்காரனானான். இவர்கள் ஆக்கிய பொருளியல் போர்க்காலப் பொருளியலேயாகும். போர்மேல் சென்ற போதெல்லாம், அப் பாளையக்காரர்கள் மக்களிடமிருந்து மடிபறித்துச் சென்றனர். விளைந்திருந்த பயிர்களை வலிய அறுத்துச் சென்றனர். வழிப்பறிக் கொள்ளையே இவர்களின் நெறியானது.

www.tamilarangam.net



“காட்டிலுங் கொள்ளை வீட்டிலுங் கொள்ளை
கட்ட பொம்மு கொள்ளை யாகுதய்யா!
காட்டிலுள்ள கதிர்களெல்லாம்
கட்ட பொம்மு கொள்ளை யாகுதய்யா!
ஆறும் குளத்தூருப் பண்ணையிலே பாவி
அஞ்சாறு பிஞ்சைக் கதிரெடுத் தான்!
கன்னல் கட்டையூர் மால் தனியே
கற்ற நல்லூர் சோழ புரம்
யெல்லைச் சதுரிலே மேய்ந்த மாட்டை
யெழுநூறு மாட்டையும் கொள்ளை செய்தான்!
யெப்போது வென்றான் காட்டு நாயக்கன்பட்டி
யெல்லைச் சதுரிலே மேய்ந்த மாட்டை?
மட்டுக் கடங்காத கட்டபொம்முதுரை
மன்னனும் கொள்ளைகள் செய்து கொண்டான்!
கட்டபொம்முக்குக் கொள்ளை கொடுப்போமோ? —
நாங்கள்
கும்பினி காணிக்கை கட்டு வோமா?
கொள்ளை கொடுத்து அரண்மனை பூமியில்
குடித்தனங்களு மேது செய்வோம்?”[508]

என்று வரும் வீரபாண்டிய கட்டபொம்மு கதைப்பாடலின் வரிகளே அப் பாளையக்காரரின் கொடிய ஆட்சிகளின்கீழ் மக்கள் பட்ட பாட்டைப் படம் பிடித்துக் காட்டும்.

## அமரக்காணி முதல் பண்டாரவாடை வரை

விசயநகரப் பேரரசு உருவாக்கிய அமரநாயக முறை என்னும் படைவழி நிலக்கிழமையின்கீழ், பாளையக்காரர்கள், நிலக்கிழார்கள் (சமீன்தார்கள்), தேசமுக்குகள் ஆகியோர்க்கு ஊர்கள் பல கொடைகளாக்கப்பட்டன. வருவாய் தண்டவும் வந்தேறி ஆட்சியைப் புரக்கவும் வல்ல நிலக்கிழமை அதிகாரவகுப்பாகவே இவர்கள் இருந்தனர்.

பிராமண வரணநெறியை வெறித்தனமாகக் கடைப்பிடிப்பதில் விசயநகரத்து நாயக்க வந்தேறிகள் கண்ணும் கருத்துமாக இருந்தனர். ஆயினும், பாளையப்பட்டு முறையின் எழுச்சிக்குப் பிறகு, புதிய அகரகாரங்களை அமைக்கின்ற போக்குக் குறைந்தது. இறையிலி நிலங்களைப் பிராமணர்க்கு விரித்தியாக வழங்கும் வழக்கமும் குன்றியது. பதினைந்தாம் நூற்றாண்டிற்குப் பிறகு, தனிப் பிராமணர்க்குக் கொடை வழங்குவதைவிட, கோயில்களுக்கும் மடங்களுக்கும் கொடை வழங்கும் போக்கு வலுப்பட்டது. ஆயினும், தங்களின் தனி இறையாண்மையைக் காட்டிக் கொள்ளும் வகையில், இந்தப் பாளையக்காரர்கள் அந்தப் பிராமணர்க்கு இங்கும் அங்கும் சின்னஞ்சிறு நிலக் கொடைகளை வழங்கவே செய்தனர்.

www.tamilarangam.net



முதல் இம்முடி கட்டி முதலியார், கி. பி. 1539ஆம் ஆண்டில் விசயநகரத்து வடுகனான அச்சுதராயன் (கி. பி. 1530-42) ஆட்சியின் போது காவிரிப்பட்டியைக் 'கோட்டைசமுத்திரம்' எனப் பெயர்மாற்றி அதை ஒரு பிராமண அகராமாக்கினான்.[509] அதே இம்முடி கட்டி முதலி, திருச்சிற்றம்பலத்தில் வணங்காமுடி மடத்தைக் கட்டி, அதில் பூசை நடத்துவதற்கெனப் படைவீடு என்னும் ஊரைக் கொடையாக வழங்கினான். எழுகரைநாட்டிலிருந்து வரும் தீர்வையும் அம் மடத்துக்கே சேர வேண்டுமென கி. பி. 1541ஆம் ஆண்டில் ஆணையிட்டான்.[510] கி. பி. 1545ஆம் ஆண்டில் அதே கட்டி முதலி, இராமகூடல் என்னும் ஊரை வணங்காமுடி சமுத்திரம் எனப் பெயர்மாற்றி, அதை ஒரு பிராமண அகரமாக்கினான்.[511] இவ்வாறு ஓரிரு பிராமண அகரங்களே விசயநகர வந்தேறியர் ஆட்சியின்போது அமைக்கப்பெற்றன. ஆயினும், கோயில்களுக்கும் மடங்களுக்கும் காணிக்கொடை வழங்குவது மட்டும் ஓரளவு பரவலாயிருந்தது. பின்வருவன, அதற்குச் சான்றுரைப்பவையாகும்.

ஒய்சளரிடம் அடிமைப்பட்டிருந்தபோது, கி. பி. 1268ஆம் ஆண்டில் தாரமங்கலத்துக் கைலாயநாதர் கோயிலுக்குக் காணி வழங்கிய இராகுத்தாராய கண்ணாக்கர் முதலானோர் அதை ஓர் இறையிலித் தேவதானமாக்கினர்.[512]

தாரமங்கலத்தின் திருத்தோன்பட்டியை இளமசமுத்திரம் எனப் பெயர்மாற்றிக் கி. பி. 1568ஆம் ஆண்டில் வீரவசந்தராயர் என்னும் வடுக நாயக்கன் காலத்தில் இம்முடி இளம்நயினா முதலியார் என்னும் கட்டி முதலியார், அதை இளமீசுரம் கோயிலுக்கு இறையிலித் தேவதானமாக்கினான்.[513]

கி. பி. 1274இல் ஒய்சளன் வீரராமனாதன் ஆண்டபோது தாரமங்கலத்து ஊராரும் ஆறு முதலிகளும் இளமீசுரம் கோயிலுக்குக் காணிகளை வழங்கி அதைத் தேவதானமாக்கினர்.[514]

கி. பி. 1655ஆம் ஆண்டில் இலவம்பட்டி என்னும் ஊரைக் கைலாசபுரம் எனப் பெயர்மாற்றிய இம்முடி கெட்டி முதலியார் அதை ஒரு திருவிடையாட்டமாக்கினான்.[515]

பிராமண அகரங்களை அமைத்த வேகம் சோழன் முதல் இராசராசனின் காலத்தில் உச்சநிலையை எட்டியதெனின், பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப்பின் புதிதாகப் பிராமண அகரங்களைத் தோற்றுவிக்கும் போக்கு மெல்ல மங்கத் தொடங்கியது. நாயக்க வந்தேறி ஆட்சியின்போது, அதுவும் போய், ஏறத்தாழ இல்லை என்றானது.[516]

கோட்டைக்காவல் புரிந்துவந்த படைநாயகர்கள் பெரும்பாலும் தெலுங்குப் பிராமணராயிருந்தனர். கோட்டை கொத்தளங்களைக் கட்டிக் காத்தலே அவர்களின் பணியாக இருந்தது. அதற்கென ஒதுக்கப்பட்ட ஊர்களிலிருந்து கிடைத்த வருவாயை வைத்தே இப் பணிக்

www.tamilarangam.net



கான செலவைப் பார்க்க வேண்டியிருந்தது. இவ்வாறு கோட்டை யரண்களைப் பேணுவதற்கென்றே விடப்பட்ட அரசு நிலங்களைப் பண்டாரவாடை என்றனர். இப் பண்டாரவாடை ஊர்கள், அமரக் காணி என்னும் படைப்பற்று ஊர்களிலிருந்து வேறானவை.[517]

பண்டாரம் என்றால் ‘அரசர்க்குரியது’ அல்லது ‘பொதுவானது’ என்று பொருள். பொதுச்சொத்தைப் ‘பண்டாரசொம்’ என்றனர். ‘சொம்’ என்றால் ‘சொத்து’ என்றாகும். பொதுப் பணியில் ஈடுபட்டு வந்த காவல்துறை அதிகாரியின் பணியாளைப் பண்டாரப்பிள்ளை என்றனர். நாடு அல்லது கூற்றம் என்பதைப் போன்ற ஆட்சிக்கூறு தான் வன்னிமை. அந்த வன்னிமைக்குப் பொறுப்பாயிருந்த வன்னியர் என்னும் அதிகாரியின் பணியாளரே அப் பண்டாரப்பிள்ளைகள். அரசு அறிவிக்கைகளைப் பறையறைந்து தெரிவிப்பதற்காக முழக்கப்பட்ட மேளத்தின் பெயர் பண்டாரமேளம். அரசு அதிகாரிகள் தங்கிய விருந்தினர் விடுதியே பண்டாரவிடுதி. பொதுவூழியத்தைப் பண்டாரவூழியம் என்றோ பண்டாரவேலை என்றோ குறிப்பிட்டனர்.[518] இவற்றின் வழியாக வந்ததே ‘பண்டாரவாடை’ என்னும் பெயர்ச்சொல்.

பல்லவ வடுகனாயினும், சோழ வடுகனாயினும், விசயநகர நாயக்க வடுகனாயினும், அவ் வந்தேறிகள் அனைவரும் ஆண்டு வந்த ஆட்சியியல் சொற்களெல்லாம் தமிழாகவும் தமிழ்வழி வந்தவையாகவும் இருப்பதே கண்கூடு. அந்த வகை வடுகத் திருட்டுக்கும் குறும்புத் தனத்திற்கும் ஏற்பவே பண்டாரம் என்னும் தூய தமிழ்ச்சொல்லை ‘பண்டார’ (Bhandara) எனத் திரித்தனர். அதில் வரும் பகரத்தை bha என்று அடிவயிற்றிலிருந்து அவ் வடுகர்கள் ஒலிக்கலாயினர்.

குடந்தைக்கு அருகில் பண்டாரவாடை என்னும் ஊரே உள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தின் அந்தியூர் வட்டத்திலிருந்த குறிச்சி என்னும் ஊரிலடங்கிய கூத்தம்பூண்டி என்னும் ஊர் ஒரு பண்டாரவாடையாக இருந்தது. பின்னர் அஃது ஒரு பிராமண அகரமானது.[519]

விசயநகர வல்லரசனின் நேரடிப் பொறுப்பின்கீழ் இருந்த பிராமணப் படைத்தலைவர்கள் தத்தம் கோட்டை கொத்தளங்களையும் அவற்றிலடங்கிய கட்டடங்களையும் பேணுவதற்கான செலவுகளை அரசனுக்குச் சொந்தமான பண்டாரவாடைக் காணிகளிலிருந்து வந்த வருவாயைக் கொண்டே மேற்கொண்டனர். இடைக்கால வடுகச் சோழர் காலத்தில் பிராமண அகரத்திற்கிருந்த இடத்தையும் பீடு பெருமையையும் மேட்டிமையையும் விசயநகர வடுகர் காலத்தில் அந்தப் பண்டாரவாடை பறித்துக்கொண்டது.[520]

## காணிகள் எல்லாமே வடுகரிடம்!

விசயநகர நாயக்க வடுகரின் ஆட்சிக்காலத்தில் தமிழகத்தில் இறையிலி (மானிய) நிலம், அமரக்காணி, பண்டாரவாடை ஆகிய

www.tamilarangam.net



மூவகைப் பெரிய நிலவுடைமைகள் இருந்தன. அவற்றுள் பண்டார வாடைக் காணிகள் மிகச் சிலவாகும். பிராமணர்களுக்கும் கோயில் களுக்கும் மடங்களுக்கும் சொந்தமான இறையிலி நிலங்கள் பல வாகும். ஆயினும், வடுக வந்தேறிகளின் படைப்பற்றுகளான அமரக் காணிகளே தமிழகத்திலிருந்த மொத்த நிலவுடைமைகளில் முக்கால் பங்காக (அஃதாவது, 75%) இருந்தன.[521]

அன்று விசயநகரப் பேரரசிலேயே மீமிக வளம் கொழித்த பகுதி எது தெரியுமா? காவிரிக் கழிமுகமான தஞ்சைதான்.[522]

முதல் இராசேந்திர சோழனின் காலத்தில் ஆனைமங்கலம் பிரம தேயத்தை அமைக்க 26 ஊர்கள் தத்தமிடமிருந்து நிலம் அளித்தன. அந்தப் பிரமதேயத்திற்கு 57 ஊர்கள் நிலம் அளித்ததாகக் கரந்தைச் செப்பேடு கூறுகின்றது. ஆனால், வெள்ளான்வகை ஊர்களாயிருந்த அந்த 57 ஊர்களும் விசயநகர வடுக நாயக்கர் காலத்தில் அவ் வெள் ளான்வகைத் தகுதியை இழந்தன. அவற்றின் காணியுடையார்களின் காணியுரிமைகள் பறிக்கப்பட்டன.[523] தமிழ் வெள்ளாளரின் நிலங்கள் மிகப் பெருமளவில் தெலுங்கு வந்தேறிகளால் வலியப் பறிக்கப்பட் டதையே இது காட்டும்.

சோழ, பாண்டிய நாடுகளான கருப்பகுதியில் இரெட்டிகள் முதலான வடுகர்கள் ஊடுருவித் தமிழரின் நிலபுலங்களைக் கைப்பற்றி ஆளாத பகுதியே பதினைந்தாம் நூற்றாண்டில் இல்லை. பாலாற்றங்கரையிலும் சோழநாட்டுக் காவிரிக் கரையிலும் முறையே தொண்டைமண்டல வேளாளரும் சோழிய வேளாளரும் காணியாள ராயிருந்த நிலை போய், அவ்விடங்களில் முறையே தெலுங்கு இரெட்டி களின் கையும் தமிழரில் கள்ளரின் கையும் முறையே மேலோங்கின.[524] பழைய நாட்டார் முறை சிதைந்து நொறுங்கிவந்த நிலையில், பட்டக் காரர் என்னும் பட்டத்தைப் புனைந்து கொண்டு மேம்பட்ட கொங்கு வெள்ளாளரைப் போன்ற காணியாளர் மட்டும் ஒருவாறு தப்பிப் பிழைத்தனர்.[525]

முற்றூட்டைக் குறிக்கும் 'சர்வமானியம்' என்னும் சங்கத (சமற் கிருத)ச் சொல், விசயநகர வந்தேறிகளின் காலத்தில் தான் பரவலாக ஆளப்பட்டது.[526] இடைக்காலப் பாண்டியர்கள் 'சந்திவிக்கிரகி' அல்லது 'வர்கம்' என்னும் சொல்லாட்சியையும், விசயநகர வடுகர்கள் 'ஜோடி' அல்லது 'வர்த்தனை' என்னும் சொல்லாட்சியையும் புகுத்தினர்.[527] பாசனக்குளத்திற்குக் கீழோ, பக்கத்திலோ உள்ள நிலத்தைத் தாங்கல் என்றனர்.[528] இந்தப் பெயர் வழக்கு, நாயக்கர் காலத்தில் தோன்றி யிருக்கலாம்.

வண்ணார், கொல்லர், தச்சர், குயவன், வெட்டியான் போன்ற ஊர்த்தொழிலாளர்களுக்கு வெள்ளாமையிலிருந்து படியளக்கும் கள வார முறை வடுகச் சோழர் காலத்திலேயே விளங்கியது. கூட்டுஅதி

www.tamilarangam.net



கார மரபில் வந்த ஊரவையை ஒழித்த வடுக நாயக்கர்கள், மணியக் காரன் (அம்பலம்), கரணம், தலையாரி என்னும் ஊரதிகாரிகளை நேரடியாக அமர்த்தினர்.[529] வடுக வந்தேறி அரசின் நேரடி அதிகாரி களான இவர்களுக்கு, இறை தவிர்த்த காணிகள் ஒதுக்கப்பட்டன. களவாரத்தை நாயக்க வடுகர்கள் 'ஆயக்கார' முறை என்றனர். ஊரின் காணிவளத்தைப் பெருக்குவதற்குத் தம் சொந்தப் பணத்தை முதலீடு செய்து ஏரி குளங்களை வெட்டிப் பாசனத்தைப் பெருக்கியோருக்கு வெள்ளாண்மையில் அளிக்கப்பட்ட பங்கை வடுகச் சோழர் காலத் தில் நீர்விலை என்றனர். விசயநகர வடுகர்கள் அதையே தெலுங்கில் 'தசபந்தம்' என்றும், கன்னடத்தில் 'கட்டுக் கொடகே' என்றும் குறிப் பிட்டனர். அந் நீர்விலையையே விசயநகர வடுகர்கள் 'சோடி' (Jodi) என்றனர். வெட்டிய ஏரி குளங்களைப் பழுதுபார்க்கும் பொறுப்பு முறை வைத்து நீர் பாய்ச்சி நீர்விலை பெற்று வந்தோருடையது.[530]

## வடுகன் திணித்த மணியம்!

விசயநகர வடுக வந்தேறிகளின் காலத்தில், பழைய ஊரவை யிடமிருந்த அதிகாரத்தைத் தனியாளான ஊர்ப் பெருமுகனும் ஊரதிகாரியுமான மணியக்காரன் (அம்பலம்) பிடித்துக்கொண்டான். விசயநகரப் பேரரசிலிருந்த கன்னடத் தெலுங்குப் பகுதிகளில் பெத்த ராயர், ரெட்டி, காப்பு, துரை, படேல், கௌடன் போன்று தனியாட் களான பெரிய பெருமாள்களிடம் ஊராட்சிப் பொறுப்பு அளிக்கப் பட்டது. அவற்றின் இறக்குமதி தமிழகத்தில் செல்லுபடியாகவில்லை. இவ் வுண்மையை ஃபிரான்சிஸ் ஒயிட் எல்லிஸ் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டினார்.* அதனால்தான், வந்தேறி வடுகர்கள் தமிழகத்தைப் பொறுத்த வரையில், ஊர் மணியத்துடன் நின்று கொண்டனர். ஆயினும், அந்த ஊர் மணியக்காரனும், ஊர்க் கரணம் என்றான ஊர்க் கணக்குப்பிள்ளையும் பல ஊர்களில் கன்னடரும் தெலுங் கருமான வடுகராகவே இருந்தனர். சில ஊர்களில் வெள்ளாளரும் முதலிகளும் அந்தப் பதவியில் அமர்த்தப்பட்டனர்.

அந்த அவலத்தின் வலுவான எச்சங்களை இன்றும் காணலாம். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல், அதற் கான ஒரு நல்ல சான்று உண்டு. வடவார்க்காட்டு மாவட்டத்தின் ஆம்பூர்ப் பகுதியிலுள்ள மணியக்காரர்களில் பெரும்பாலோர் வடுகர் களாவர். கணக்குப்பிள்ளைகளெல்லாம் கன்னடப் பிராமணர்கள். தோட்டிகளும் தலையாரிகளும் மட்டுமே தமிழர்கள்!

---

* "Hence the officers established in the neighbouring provinces, as the lords the lords of a single town, under the name of Patels, Gaudas, Reddis, Mandels, Mucuddims, &c., are entirely unknown in these countries, those districts excepted (in Sheramandalam, Coyembatur chiefly) into which they have been introduced in recent times by foreigners."[531]

www.tamilarangam.net



இந்த வடுகரிடம் மண்ணையும் மாந்தவுரிமையையும் இழந்தோர் யார் தெரியுமா? தொல்தமிழர்கள்.

ஆம்பூருக்கு மேற்புறத்தில் பாலாற்றங்கரையிலுள்ள துத்திப்பட்டு, 60 ஆண்டுகளுக்கு முன்வரையில், முழுக்க முழுக்க ஒரு கன்னடப் பிராமண அகரமாயிருந்தது. "துத்திப்பட்டுப் பார்ப்பானிடம் கேட்டு விட்டு வந்து செய்!" என்னும் சொலவடை அந்தப் பகுதி மக்களிடம் வழங்கிவந்தது. இந்தத் துத்திப்பட்டில் விண்ணுயர நிற்கும் பிந்து மாதவ ஈசுவரன் கோயில் உண்டு. அந்தக் கோயிலிலிருந்த கன்னடப் பிராமணனைக் காவாகெட்டை என்னும் ஊரிலுள்ள பள்ளிக் கவுண் டர்கள் பொங்கலன்று சீர்வரிசையுடன் வந்து மேளம் கொட்டி அழைத்துச் செல்வர். வடுகப் படையெடுப்புகளின்போது அவர் களுக்குத் துணைநின்றதன் வாயிலாகத் தம்மைத்தாமே தற்காத்துக் கொண்ட தொல்தமிழரில் சிலர், பள்ளிக் கவுண்டராகத் தம்மை உயர்த்திக் கொண்டதன் அடையாளமாகவே மேளதாளத்துடன் வந்து வடுகப் பூசாரிக்குச் சீர்வரிசை செய்யும் சடங்கு நிகழ்ந்து வருகிறது போலும். வடுகப் பொறிஞர் விசுவேசுவரையாவின் அழிம்புத் திட்டத் தின்படி கோலார் மாவட்டத்திலுள்ள விசயாதித்தமங்கலத்தில் (பேத்த மங்கலத்தில்) பாலாற்று நீரை மடக்கித் தமிழகத்தில் அப் பாலாற்றைப் பாழாறாகச் செய்தபின், ஆம்பூர்ப் பகுதியில் நச்சுக்காளான்களாக முளைத்த தோல் பதனிடும் தொழிலால் கன்னிநிலங்கள் பாழ்பட்டுக் கெட்டன. இதனால், அக் கன்னடப் பிராமண வந்தேறிகள் பலர் தம்மிடமிருந்த காணிகளையெல்லாம் விற்றுவிட்டு ஊரை விட்டே போய்விட்டனர். எஞ்சிய கன்னடர்கள், திருமணம் போன்ற நிகழ்வு களுக்கு உணவு சமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ஆம்பூருக்கு மேற்கேயுள்ள பாலாற்றங்கரையிலிருந்து 5 கல் அகலமும், தெற்கே உதயேந்தரத்திலிருந்து வடக்கே (வடுகக்) குடி யேற்றம் (குடியாத்தம்) வரையிலுமுள்ள ஏறத்தாழ 32 கல் நீளமுள்ள நிலப்பரப்பிலுள்ள பன்னூறு குறுக்க (ஏக்கர்) நிலங்களெல்லாம் இன்றும் நாயுடு, இரெட்டி சாதியரான தெலுங்கு வடுகருக்கே சொந்தமானவை. ஆம்பூரிலிருந்து 3½ கல் தொலைவில் இருக்கும் உம்ராபாது, 11 கல் தொலைவிலுள்ள பேரணாம்பட்டு ஆகிய இசுலாமியர் வாழும் ஊர்களைத் தவிர, கார்கூர், சின்ன வரிகம், பெரிய வரிகம், கண்ராம் பள்ளி, பாட்டூர், கூரமங்கலம், கொத்தூர், அத்திமார்க்கப்பள்ளி, வெங் கடசமுத்திரம், பாலூர், காரப்பட்டு, கதவாளம், கரும்பூர் முதலான ஊர்களிலெல்லாம் வந்தேறி வடுகர்களே வளமுடன் வாழ்ந்து வருகின் றனர். தேவலாபுரம், காவாகெட்டை (இராமச்சந்திரபுரம்) போன்ற ஓரிரு ஊர்களில் மட்டும் மண்ணுரிமையை இன்னும் இழக்காத பள்ளி கள் (கௌண்டர்கள்) உள்ளனர்.*

* வெங்காலூர்த் தனித்தமிழன்பர் க. எ. மணவாளன் அவர்கள் கூறிய செய்திகள்.

www.tamilarangam.net



வடவார்க்காட்டுத் தேவிகாபுரம் கோயில் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் வரும் நாயக்கர்கள், மருதரசர் படைவீட்டிலிருந்த கன்னட நாயக்கர் படைப்பிரிவைச் சேர்ந்தவர்களாக[532] இருந்ததை இங்கு நினைவுகூர்க.

## கோயில்களின் பெருக்கம்

வடுகப் பிராமணியம் தமிழகத்தில் புகுத்திய பெருங்கோயில் பண்பாடு, விசயநகர வந்தேறிகளின் காலத்தில் முதிர்ச்சி நிலையை எய்தியது.

விசயநகர வந்தேறிகளின் காலத்துக் கோயில்கள் பெரும்பாலும் அரண்களைப் போலவே தோன்றின. பெருங்கோயில்களைச் சுற்றி 15 முதல் 20 அடி பெருஞ்சுவர்கள் எழுப்பப்பட்டன.[533]

ஒன்பது இரவு (நவராத்திரி) என்னும் பண்டிகையைக் கொண்டாடியபின் பத்தாவது நாளன்று 'தசரா' என்னும் பூசை நடத்தும் வழக்கத்தை முதன்முதலில் ஏற்படுத்தியவர்கள் விசயநகரத்து வடுகப் பேரரசர்களேயாவர்.[534]

தஞ்சைப் பகுதியைத் தவிர்த்த தமிழகத்தில் கி. பி. 1300க்கும் 1450க்கும் இடையில் தோன்றிய பெருங்கோயில்களில், சிவன் கோயில்கள் 45%, பெருமாள் கோயில்கள் 29%, முருகன் கோயில்கள் 3%, பிள்ளையார் கோயில்கள் 4%, அம்மன் கோயில்கள் 8% என்று இருந்தன. அவற்றுள், இந்தக் காலவெளியில் கொங்குமண்டலத்தில் 0%, பாண்டியமண்டலத்தில் 13%, தஞ்சை தவிர்த்த தமிழ்நாட்டில் 8% என அம்மன் கோயில்கள் இருந்தன. கி. பி. 1450க்கும் 1550க்கும் இடையில் தஞ்சை தவிர்த்த தமிழகத்தில் தோன்றிய பெருங்கோயில் களில், சிவன் கோயில்கள் 33%, பெருமாள் கோயில்கள் 26%, முருகன் கோயில்கள் 5%, பிள்ளையார் கோயில்கள் 8%, அம்மன் கோயில்கள் 18% ஆகும். அவற்றுள் அம்மன் கோயில்கள் கொங்குமண்டலத்தில் 36%, பாண்டிய மண்டலத்தில் 15%, தஞ்சை தவிர்த்த தமிழகம் முழுவதிலும் 18% என்றிருந்தன. கி. பி. 1550க்கும் 1650க்கும் இடையில் தஞ்சையைத் தவிர்த்த தமிழகத்தில் புதிதாகத் தோன்றிய பெரிய கோயில் களில், சிவன் கோயில்கள் 29%, பெருமாள்கோயில்கள் 28%, முருகன் கோயில்கள் 4%, பிள்ளையார் கோயில்கள் 9%, அம்மன் கோயில்கள் 20% என்றிருந்தன. அம்மன் கோயில்கள் கொங்குமண்டலத்தில் 35%, பாண்டியமண்டலத்தில் 19%, தஞ்சை தவிர்த்த தமிழகத்தில் 20% என்றும் இருந்தன. கி. பி. 1650க்கும் 1750க்கும் இடையில் தஞ்சை தவிர்த்த தமிழகத்தில் எழுந்த புதிய பெருங்கோயில்களில், சிவன் கோயில்கள் 25%, பெருமாள்கோயில்கள் 27%, முருகன் கோயில்கள் 3%, பிள்ளையார் கோயில்கள் 11%, அம்மன் கோயில்கள் 25% என் றிருந்தன. அவற்றில், கொங்கு மண்டலத்தில் 43%, பாண்டியமண் டலத்தில் 25%, தஞ்சை தவிர்த்த தமிழகத்திற்கு 25% என அம்மன்

www.tamilarangam.net



கோயில்கள் இருந்தன. கி. பி. 1300க்கும் 1750க்கும் இடையில் தஞ்சை தவிர்த்த தமிழகத்தில், தோன்றிய புதிய கோயில்களில், சிவன் கோயில்கள் 29%, பெருமாள் கோயில்கள் 27%, முருகன் கோயில்கள் 4%, பிள்ளையார் கோயில்கள் 21%, அம்மன் கோயில்கள் 21% என்றிருந்தன. அவற்றில், கொங்குமண்டலத்தில் 38%, பாண்டியமண்டலத்தில் 20%, தஞ்சை தவிர்த்த தமிழகம் முழுவதிலும் 21% என அம்மன் கோயில்கள் இருந்தன. இந்தக் காலக்கட்டத்தில், சிவன் கோயில்களின் எண்ணிக்கை குறைந்துவந்ததையும், பெருமாள் கோயில்களின் எண்ணிக்கைகள் ஏறத்தாழ நிலையாக இருந்ததையும் காணலாம்.

முருகன் கோயில்களின் எண்ணிக்கை எல்லாக் காலங்களிலும் பெரிதாக உயரவில்லை. பிள்ளையார் கோயில்களின் எண்ணிக்கை ஏறி இறங்கி ஒரு நிலையில் நின்றன. அம்மன் கோயில்கள் — குறிப்பாக, கொங்கு மண்டலத்தில் — எண்ணிக்கையில் ஏற்றம் பெற்றன. புள்ளியியல் உண்மைகள் அவ்வாறு காட்டுகின்றன.

தொண்டைமண்டலத்திலும் பாண்டிய மண்டலத்திலும் இருந்த கோயில்களின் எண்ணிக்கை கி. பி. 1550க்கும் 1650க்கும் இடையில் இரு மடங்காகியது. ஆனால், கி. பி. 1450க்கும் 1550க்கும் இடையில் அந்த எண்ணிக்கை நடுவில் நாட்டில் 6 மடங்காகவும், கொங்குமண்டலத்தில் 16 மடங்காகவும் உயர்ந்தது. மேலே கூறிய புள்ளிக்குறிப்புகளில், தொண்டைமண்டலத்தில் சென்னை மாநகரமும் திருவண்ணாமலைநகரமும், நடுவில்நாட்டில் சிதம்பரம் நகரமும் திண்டிவனம் நகரமும், பாண்டியமண்டலத்தில் பழனி நகரமும் அடங்கா.[535]

அம்மனைச் சிவனின் துணைவியாக வைத்து வழிபடத் தொடங்கிய சூழலில்தான் தமிழகத்தில் அம்மன் கோயில்கள் பெருகினவாம்.[536] அம்மனை வடுகமயமாக்கியதால் வந்த மாற்றம் அஃதாகும். ஆயினும், கி. பி. 1300க்கும் 1750க்கும் இடையில் தஞ்சை தவிர்த்த தமிழகத்தில் மொத்தம் 2035 பெருங்கோயில்கள் தோன்றின. கி. பி. 1300க்கும் 1400க்கும் இடையில், தஞ்சை தவிர்த்த தமிழகத்தில் வெறும் 81 மட்டுமே என்றிருந்த சிவன் கோயில்கள், கி. பி. 1750இல் 598 ஆக உயர்ந்தன; அதே காலவெளிகளுக்குள், வெறும் 51 என்றிருந்த பெருமாள் கோயில்கள் 555 என்றாகி, ஏறத்தாழ சிவன் கோயில்களின் பெருக்கத்திற்கு ஈடுகொடுத்தன.

ஆனால், கி. பி. 1300க்கும் 1450க்கும் இடையில் வெறும் 6 மட்டுமே என்றிருந்த மொத்த முருகன் கோயில்கள், கி. பி. 1750இல் வெறும் 76 என்னும் அளவுக்கு மட்டுமே உயர்ந்தன. ஆனால், கி. பி. 1300க்கும் 1450க்கும் இடையில் வெறும் 7 என்றிருந்த பிள்ளையார் என்னும் வடுக இறக்குமதிக் கடவுளுக்கு மட்டும் கி. பி. 1750இல் 181 கோயில்களாயின. கி. பி. 1300க்கும் 1450க்கும் இடையில் வெறும் 15 மட்டுமே என்றிருந்த அம்மன் கோயில்கள், கி. பி. 1750இல் 424 என்று எண்ணிக்கையில் பெருகின.[537]

www.tamilarangam.net



## ஆங்கிலேயனால் வந்த குழப்பம்

கி. பி. 1650ஆம் ஆண்டில் தொண்டைமண்டலத்தைப் பீசாப்பூர் சுல்தான் பிடித்தான். தமிழ் வெள்ளாளர் வழிவழியாக வகித்துவந்த நாட்டார் என்னும் பதவியின் சிறப்பு அப்போது குன்றியது. 'தேசாயி' என்னும் புதிய பதவி அந்த நாட்டார் பதவிக்கு மாற்றாகத் தோற்று விக்கப்பட்டது. அந்தத் தேசாயி பதவிகளெல்லாம் தெலுங்கு பலிசா சாதியருக்கே தரப்பட்டன. வலங்கை வழக்குகளைத் தீர்த்துவைக்க அதுவரை நடுவம் செய்துவந்த தமிழ் வேளாளரின் உரிமையில் தங்க ளுக்கும் பங்கு தர வேண்டும் என்று 'நாடுதேசம்' என்னும் புதிய பதவியைப் பெற்ற தெலுங்கர்கள் முரண்டு பிடித்தனர். இதனால, தமிழ் வெள்ளாளருக்கும் தெலுங்கு பலிசாக்களுக்கும் இடையில் பூசல் எழுந்தது.[538]

நாயக்க வந்தேறிக் காலத்தில் நாட்டுப்புற மக்களெல்லாம் ஊர்த் தலைவர்களின் கொடும்பிடிகளில் சிக்குண்டு இன்னலுற்று வந்த மைக்கு 18ஆம் நூற்றாண்டில் தலைவிரித்தாடிய ஆட்சிக் குலைவும் குழப்பமும் முந்தைய முசுலிம் ஆட்சியாளரின் கொடுங்கோன்மையுமே காரணமென ஆங்கிலேய வந்தேறிகள் தவறாகப் பாடம் படித்தனர்.[539] வடுக நாயக்கர் ஆட்சி புகுத்திய அமரநாயக முறையும், சோழர் காலம் வரையில் காணியாளராயிருந்த தமிழர்கள் காணிகளை இழந்ததுமே அந் நிலைக்கான காரணம் என்பதை அவர்கள் உணரவில்லை. தமிழ்த் தேசிய இனம் வடுக வந்தேறிகளால் சிதைத்துச் சீரழிக்கப்பட்டு வந்த நிலையில் விளங்கிய வடுக இனச் சுரண்டலின் ஒரு வெளிப்பாடே அதற்கான உண்மையான காரணம் என்பதை அவர்களால் காண முடியவில்லை.

காணியாட்சியைக் குறிப்பதற்கு 'மிராசி' என்னும் சொல்லை 1799ஆம் ஆண்டில் முதன்முதலில் ஆண்டவர் லையொனெல் பிலேஸ் (Lionel Place) என்னும் கிழக்கிந்தியக் குழுமத்தின் ஆங்கிலேய அதிகாரி யேயாவார்.[540]

கருநாடக நவாபுகளின் காலத்தில் சாகிர்கள் (Jahirs) என்னும் ஆட்சிப்பகுதிகள் இருந்தன. சாகிர்தார்கள் என்போர் தமிழகத்திலிருந்த நாடாள்வார் என்னும் அதிகாரிகளைப் போன்ற நிலக்கிழார்கள் ஆவர். காணியாட்சியின் கீழிருந்த காணிப் பங்காளிகளை அந்த ஆங்கிலே யர்கள் பயிர்க்காரர் (Pyacarries) என்றனர். காணிப்பங்குகளைப் பங்காளிகள் தங்களுக்குள் சுழற்சி முறையில் மாற்றிக்கொண்ட பசுங் கரைக் காணியாட்சிக்குத் தாமசு மன்றோ போன்ற ஆங்கிலேய வந்தேறி கள் சூட்டிய பெயரே வீசப்படி என்னும் பெயராகும்.[541] பதினாறில் ஒரு பங்கையே வீசம் என்றனர். அதை மாகாணி என்றும் அழைத் தனர். ஓர் ஊர் முழுவதும் ஒட்டுக்காக இவ்வளவு (நிலையான) வாடாக்கடனைக் காசுக்கடமையாகக் கட்ட வேண்டும் எனத் தீர்வை செய்யப்பட்ட ஊரிலிருந்த பங்காளிகள் ஒரு நெல்மணி எடையுள்ள

www.tamilarangam.net



பொன்னாகவோ நெல்லாகவோ கட்ட வேண்டியிருந்த நெல்லிடைப் பொன்னையே 'வீசம்' என்றனர்.[542] ஆந்திரத்தின் கடப்பை மாவட்டத்தில் தாம் கண்ட 'வீசப்படி' என்னும் பெயரைக் கொண்டு வந்து தமிழரின்மீது திணித்தவர் தாமசு மன்றோ ஆவார்.[543] 1807க்கும் 1812க்கும் இடையில், பழைய சென்னை மாகாணத்தின் வருவாய்த் துறைத் தண்டலே இந்த வீசப்படி முறையில்தான் இருந்தது. 1808ஆம் ஆண்டில் இந்த வீசப்படி முறைக்குச் சார்பாகக் கிழக்கிந்தியக் குழுமத்தின் வருவாய்த்துறை வாரியம் (Board of Revenue) பரிந்துரைத்தது. இதுவே, பின்னாளில் தாமசு மன்றோ புகுத்திய 'அரையத்துவார' அல்லது 'கூலவார' முறையானது.[544]

ஏறத்தாழ 300 ஆண்டுக்கால ஆங்கிலேய ஆட்சியாளரே தமிழர் மீது தமிழரின் அரசியல், குமுகிய வரலாறுகளை மிகப் பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியவராவார். உள்ளபடியே, கன்னட வடுகரோ, தெலுங்கு வடுகரோ, மராத்திய வடுகரோ என்று எந்த வடுகனின் வந்தேறிச் சுரண்டல் ஆட்சிகள் சென்ற ஓரிரு நூற்றாண்டுகள் வரையில் நீடித்திருந்தால், ஆங்கிலேயர் ஏற்படுத்திய குழப்பத்திற்கு ஈடான குழறுபடிகள் தமிழரின் வரலாற்றியலில் விளைந்திருக்கா என்றே தோன்றுகிறது. தமிழரினத்தை அடிமைகொண்டு சாதிவழியில் சிதைத்துக் குலைத்து அழித்து வரும் பகை இனங்கள் வடுக இனங்களே என்னும் மெய்ம்மை இந்தக் காலத் தமிழ்கூறு நல்லுலகத்திற்கு நன்கு புரிந்திருக்கும். ஆனால், இந்து-முசுலிம் என்னும் மதவியக் கோணத்தில் ஆங்கிலேயர் கற்பித்த ஆரிய, திராவிடக் கோட்பாடுகளால் வந்த புரட்டு வரலாற்றியலால், தமிழரின ஓர்மை தலையெடுக்காமல் போனது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுந்த தமிழரின ஓர்மையின் வித்துக்களையும் முளைகளையும், அந்த ஐரோப்பியப் புரட்டல் வரலாற்றியலை வைத்துத் தமிழகத்தில் ஒட்டுண்ணிகளாய் வாழ்ந்துவந்த வடுக வந்தேறிகளில் ஒரு பகுதியினர் கட்டிய 'திராவிட' அரசியல் திறம்பட மடைதிருப்பிக் கொன்றது. இந்த வடுக அணியினர் கடைவிரித்த 'ஆரிய-திராவிட' நச்சுக் கருத்தியல் கொடிய கள்ளிகளாய்க் காழ்த்துக் கிடக்கையில், அவற்றை வெட்டியெறிந்து தமிழரின் அறிவு உலகத்தைப் பண்படுத்துவதே பெரும்பாடாக உள்ளது. ஆயினும், அந்தப் பெரும்பாட்டின் இறுதியில், தமிழரினம் வானளாவ மீண்டும் உயிர்த்தெழத்தான் போகிறது என்பது மட்டும் உறுதி.

## குறிப்புகள்

1. ஞா. தேவநேயன் (பாவாணர்), தமிழிலக்கிய வரலாறு, நேசமணி பதிப்பகம், 1979, பக்கம் 182.

2. Dr. K. Gopalachari, *Early History of the Andhra Country*, University of Madras, 1976 (First Edition 1941), p 166 *ff*.

3. Naboru Karashima, *South Indian History and Society, Studies from Inscriptions, AD 850-1800*, Oxford University Press, Madras, 1984, p 138.

www.tamilarangam.net



4. *South Indian Inscriptions (SII),* Vol. XIV, No. 37.

5. *AR* No.90 of 1907, line 15.

6. Saki, *Making History, Karnataka's People and their Past, Stone Age to Merchantalism,* Vol I, Vimukthi Prakashana, Bangalore, 1998, p 136.

7. பாண்டியன் நெடுஞ்சடையன் பராந்தகனின் வேள்விக்குடிச் செப்பேடுகள், தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை-1, 1977, சேர்க்கை I, பப 1-5.

8. கொடுமுடி சண்முகப் பிரகதம், குறும்பொறைக் கோமான், ஆய்வுக் களஞ்சியம் வரிசை-3, தேனோலை, சென்னை-20, 1981, பப 23-26.

9. Saki, *Making History, Karnataka's People and their Past, Stone Age to Merchantalism,* p 139.

10. *Epigraphia Carnatica,* Vol. X, Inscriptions in the Kolar Districts, ed., Lewis Rice, 1905, Mb 157, p 112.

11. *SII,* Vol III, Part I, 90.

12. Dr. K. Gopalachari, *Early History of the Andhra Country*, p 91.

13. *Epigraphia Indica,* Vol. III, 76.

14. புறநானூறு 175:6-9.

15. Dr. K. Gopalachari, *Early History of the Andhra Country*, p 2.

16. பதிற்றுப்பத்து 88:9.

17. *EC,* Vol. X, Mb 126, p 108.

18. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், முதற்பகுதி, தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, தமிழ் வளர்ச்சி இயக்ககம், 1990, ப 320.

19. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், முதற்பகுதி, ப 313.

20. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், முதற்பகுதி, ப 325.

21. தொல்காப்பியம், பொருள். 2:5:15-16.

22. *EC,* Vol. X, Sp 5, p 343.

23. *EC,* Vol. X, Kl 200, pp 69 and 61.

24. *EC,* Vol. X, Sp 5, p 272.

25. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், முதற்பகுதி, ப 328.

26. *EC,* Vol. X, Kl 79, p 22.

27. Naboru Karashima, *South Indian History and Society, Studies from Inscriptions, AD 850-1800,* pp 139 and 141.

28. *EI,* Vol.VIII, Nasik, Nos.3-5; cited by Dr. K. Gopalachari, *Early History of the Andhra Country,* p 120.

29. S. Leela Santa kumari, *History of Agraharas, Karnataka 400-1300,* New Era Publications, Madras, 1986, p 12.

www.tamilarangam.net



30. Saki, *Making History, Karnataka's People and their Past, Stone Age to Merchantalism*, p 136.

31. K. V. Ramesh, *Chalukyas of Vatapi*, Agam Kala Prakashan, Delhi, 1984, p 6.

32. Saki, *Making History, Karnataka's People and their Past, Stone Age to Merchantalism*, p 211-12.

33. *சிலப்பதிகாரம் 30:159.*

34. *ஞா. தேவநேயன் (பாவாணர்), தமிழர் வரலாறு, பப 218-19.*

35-38. Edgar Thurston & K. Rangachari, *Castes and Tribes of Southern India, Vol II*, Asian Educational Services, New Delhi, 1987 [First Published 1909], p 330-31.

39. *EC*, Vol. X, Mb 157, pp 111-12.

40. *EC*, Vol. X, Ml 73, pp 172-73.

41. *EC*, Vol. X, Mb 263, pp 132-33.

42. *EC*, Vol. X, Kl 90, p 25.

43. *Corpus of Kadamba Inscriptitons*, Vol. I., ed., B. R. Gopal, Kadamba Institute of Cultural Studies, Sirsi, 1985, p 24.

44. H. V. Srinivasamurthy, *History and Culture of South India to1336 A.D.*, Vivek Prakashan, Mangalore, 1975, p 69.

45. R. S. Sharma and Vivekananda Jha, ed.,*Indian Society:Historical Probings*, People's Publishing House, New Delhi, 1974, p 177.

46. K. V. Ramesh, *Chalukyas of Vatapi*, Agam Kala Prakashan, Delhi,1984, p 36-37 and 85.

47. K. S. Shivanna, *An Aspect of Political Feudalism during the Rashtrakuta Period, in The Rashtrakutas of Malkhed, Studies in Their History and Culture*, ed., B. R. Gopal, Mythic Society, Bangalore, 1994, p 109; R. S. Sharma, *Indian Feudalism (c A.D. 300-1200)*, The Macmillan Company of India, Delhi, 1980, p 73.)

48. Sister Liceria, quoted by R. N. Nandi, *Social Roots of Religion in Ancient India, K. P. Bagchi & Co., Calcutta, 1986, p 157.*

49. S. Leela Santakumari, *History of Agraharas, Karnataka 400-1300*, New Era Publications, Madras, 1986, p 123.

50. Saki, *Making History, Karnataka's People and their Past, Stone Age to Merchantalism*, p 222; and Burton Stein, *Peasant State and Society in Medieval South India*, Oxford University Press, New Delhi, 1980, p 150.

51. C. Veeranna, *Kannada Sahitya: Charitrika Belavanige-I*, Prachina Sahitya Rajasatheya Vaibhava Kala, Nakarnataka Publications, Bangalore, 1986, p 27 quoted by Saki.

52. G. S. Gai, *Prakrit Inscriptions in Karnataka*, in *Archaeology of Karnataka*, ed., A. V. Narasimha Murthy, Prasaranga, University of Mysore, 1978, p 152.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



53. *Epigraphia Carnatica,* Vol. X, ed., Lewis Rice, *Inscriptions in the Kolar District,* 1905.

54. *EC*, Vol. X, Mb 157, p 112.

55. *Epigraphia Carnatica*, Vol. X, ed., Lewis Rice, *Inscriptions in the Kolar District,* 1905.

56. *EC*, Vol. X, Bp 54, pp 178 and 149.

57. *Epigraphia Carnatica,* Vol. X, ed., Lewis Rice, *Inscriptions in the Kolar District,* 1905.

58. ஞா. தேவநேயன் *(பாவாணர்), தமிழிலக்கிய வரலாறு, பப 286-89.*

59. *தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், முதற்பகுதி, ப 144.*

60. தி. வை. *சாதாசிவ பண்டாரத்தார், கல்வெட்டுகள் கூறும் உண்மை கள், மணிவாசகர் நூலகம், சென்னை, 1977, சி 30.*

61-62. T. V. Mahalingam, *Early South Indian Paleography,* University of Madras, pp 86 and 299.

*63-64. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், முதற்பகுதி, ப 87, 89-90.*

*65. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவ-பாண்டியர் காலம், தொகுதி இரண்டு, பப 481-537.*

66-67. *தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், முதற்பகுதி, ப 76, 320.*

68. S. S. Settar, *Memorial Stones in India,* in *Memorial Stones, A Study of Their Origins, Significance and Variety; ed., S. S. Settar and Gunther Sontheimer, Institute of Indian Art History and South Asia Institute, Manipal, 1982, pp 192-93.*

69. Saki, *Making History, Karnataka's People and their Past, Stone Age to Merchantalism,* p 236.

70. அடிப்படை: *தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், முதற்பகுதி, பப 53-105.*

71. அடிப்படை: *தருமபுரி கல்வெட்டுகள்,* பொறுப்பாசிரியர்: இரா. நாக சாமி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, *1975.*

72. கு. சேதுராமன், *கொங்குச்சீமைக் காணியாளர்கள்,* ஏர்முனை வெளி யீடு, ஈரோடு, *1983, ப 143.*

73. *தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், முதற்பகுதி, பப 60-61.*

74. அடிப்படை: *தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், முதற்பகுதி, பப 53-105.*

75. SII, Vol. II, Part III, 73 of 1895, *காசக்குடிச் செப்பேடுகள்.*

76-79. *தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், முதற்பகுதி, பப 334-35, 337-38, 201.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



80-81. எம். வின்சுலோ, தமிழ்-ஆங்கில அகராதி, Asian Educational Services, New Delhi, 1987 (First Published 1862), p 368.

82. Thurston & K. Rangachari, *Castes and Tribes of Southern India*, Vol II, pp 337-38.

83. W. T. Arnold, *The Roman System of Provincial Administration to the Accession of Constantine the Great*, Oxford, B. H. Blackdwell, MCMVI, p 177.

84. Francis Buchanan, *A Journey from Madras through the Countries of Mysore, Canara and Malabar*, Vol. II, Asian Educational Setrvices, New Delhi, 1988 [First Published 1807].

85. Saki, *Making History, Karnataka's People and their Past, Stone Age to Merchantalism*, p 173.

86. Francis W. Ellis, Lt. Col. Blackburn and Sir Thomas Munro, *Three Treatises on Mirasi Right*, ed., Charles Philip Brown, Madras, 1852, pp 41 and 89-90.

87. டாக்டர் ஆ தசரதன், வலங்கைச் சான்றோரும் சோழரும், (தமிழ்க் கதைப்பாடல் சுவடிகளில் வரலாற்றாய்வு), தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம், சென்னை-41, 1996, ப 65.

88. *SII*, Vol. I No. 151 of 1890, p 152, கூரம் செப்பேடுகள்.

89. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், தொகுதி இரண்டு, ப 111.

90. டாக்டர் ஏ. சுவாமிநாதன், பல்லவர் கால வரலாறு, மோகன் பதிப்பகம், சென்னை-5, 1981, ப 261.

91. SII, Vol II, Part III, pp 351 and 361, காசக்குடிச் செப்பேடுகள்.

92. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், முதற்பகுதி, ப 362.

93-94. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், தொகுதி இரண்டு, ப 44-45.

95. திருக்குறள், 1033.

96. *SII*, Vol. XXIII, AR no. 90 of 1907, p 54.

97. வித்துவான் வ. தங்கையா நாடார், தென்னிந்திய தமிழ்ச் சாசனங்கள், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை-1, ப 5 அடிக்குறிப்பு.

98. *SII*, Vol. I No. 151 of 1890, கூரம் செப்பேடுகள்.

99. *SII*, Vo. XXIII, No. 580 (நந்தலூரு, இராசம்பேட்டை வட்டம், கடப்பை மாவட்டம்).

100. *EI*, Vol.VIII, No.29.

101. டாக்டர் ஏ. சுவாமிநாதன், பல்லவர் கால வரலாறு, பப 282-82.

102. திருத்தொண்டர் மாக்கதை, கோட்புலி நாயனார் புராணம், 310.

103. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், தொகுதி இரண்டு, ப 72.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



104. *நந்திக்கலம்பகம் 17:2.* 105. *நந்திக்கலம்பகம் 58:1.*
106. *நந்திக்கலம்பகம் 86:4.*
107. *EI*, Vol. VIII, No. 29, pp 290-96.
108. *SII*, Vol II, Part III of 1895.
109. *SII*, Vol II, Part V, p 518.
110. *SII*, Vol II, Part V, No. 99, pp 521ö28.
111. *SII*, Vol II, Part V, p 519.
112. *SII*, Vol II, Part V, p 521.
113. *தமிழ்நாட்டு வரலாறு, பல்லவ-பாண்டியர் காலம், முதற்பகுதி, ப 388-98.*
114. *டாக்டர் கே. கே. பிள்ளை, தமிழக வரலாறு—மக்களும் பண்பாடும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1977, ப 202.*
115. K. A. Nilakanta Sastri, *The Côlas*, University of Madras, Madras, 1984, pp 103-04.
116. *டாக்டர் மா. இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி, ப 94.*
117. *திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 6:6:8:5-7.*
118. T. V. Mahalingam, *Kanchipuram in Early South Indian History*, p 58.
119. *மறைமலையடிகள், மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், ப 612.*
120. *தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், முதற்பகுதி, பப 288-91.*
121. K. A. Nilakanta Sastri, *The Côlas*, p 116; *SII*, Vol. III, Introduction, pp 4-5; *EI*, Vol XVIII, pp 26 *ff*.
122. *தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், முதற்பகுதி, ப 343.*
123. *SII* Vol II, Part III, 76 of 1895, p 386.
124. *கலிங்கத்துப்பரணி, 179-209.*
125. K. A. Nilakanta Sastri, *The Côlas*, p 110.
126. *SII* Vol I, No. 67.
127. K. A. Nilakanta Sastri, *The Côlas*, p 245.
128-31. *ஞா. தேவநேயன் (பாவாணர்), தமிழர் வரலாறு, நேசமணி பதிப்பகம், காட்டுப்பாடி விரிவு (வ. ஆ), 1972, பப 264-65.*
132. *SII*, Vol. I, No.67, pp 95-99.
133. *மயிலை சீனி வேங்கடசாமி, களப்பிரர் ஆட்சியில் தமிழகம், மக்கள் வெளியீடு, சென்னை, 1976, ப 26.*
134. *கெட்டி முதலி அரசர்கள், தொகுப்பாசிரியர்: தமிழ்நாடன், சேலம் மாவட்ட ஓவியர், எழுத்தாளர் மன்றம், சேலம், 1996, ப 128.*
135. *ஞா. தேவநேயன் (பாவாணர்), வேர்ச்சொற் கட்டுரைகள், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை-1, 1973, ப 43.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



136. ஞா. தேவநேயன் (பாவாணர்), சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை, 1992, ப 68.

137. ஞா. தேவநேயன் (பாவாணர்), தமிழர் வரலாறு, பப 285, 300.

138. சடையவர்மன் பராந்தக பாண்டியன் செப்பேடுகள், தி. வை. சதாசதாசிவ பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, சேர்க்கை 1, ப 10.

139-42. R. Tirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, University of Madras, 1987, pp 46, 95, 52 and 89.

143. *SII*, Vol. XXII, No. 33, திருக்கடையூர்.

144-46. R.Tirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, pp 89-91.

147. *SII*, Vol. VI, Nos. 48, 50 and 58.

148. *SII*, Vol. III, No. 210, திருக்களர்.

149. Naboru Karashima, *South Indian History and Society, Studies from Inscriptions, AD 850-1800*, Introduction, pp xxiöxxii

150. Naboru Karashima, *South Indian History and Society, Studies from Inscriptions, AD 850-1800*, pp 38-39.

151-52. A. Burton Stein, *Peasant State and Society in Medieval South India*, Oxford University Press, Delhi, 1980, pp 308-09 and 290.

153. K. A. Nilakanta Sastri, *The Côlas*, p 492.

154. SII, Vol. II, Part III, Nos. 69 and 70.

155. G. Kuppuram, *Imperial Cholas of Karnataka, A Critical Study*, Sandeep Prakashan, New Delhi, 1986, p 59.

156. K. A. Nilakanta Sastri, *The Côlas*, p 576.

157. *SII*, Vol. II, Part V, p 98 –வேலூர்ப்பாளையம் செப்பேடுகள், p 509.

158-59. R. Tirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, p 13 and 4-5.

160. *SII*, Vol. II, Part II, Nos. 4 and 5 of 1891.

161. Saki, *Making History, Karnataka's People and their Past, Stone Age to Merchantalism*, p 181.

162. ஞா. தேவநேயன் (பாவாணர்), சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், ப 50.

163-64. Naboru Karashima, *South Indian History and Society, Studies from Inscriptions, AD 850-1800*, pp 72,74-84 and 154.

165. *SII*, Vol. VI, p 297, உத்தரமேரூர்.

166-73. Naboru Karashima, *South Indian History and Society, Studies from Inscriptions, AD 850-1800*, pp 74-84, 119-26,115,131-33,58,60 and 65-66.

174. Saki, *Making History, Karnataka's People and their Past, Stone Age to Merchantalism*, p 177.

www.tamilarangam.net



175. *SII*, Vol. II, Part V, p 18.

176. *டாக்டர் குருசாமிச் சித்தர், மோரூர் நல்ல புள்ளியம்மன் பள்ளேசலில் கண்டுள்ள மள்ளர் வரலாறு—பண்பாடுகள், மள்ளர் மலர்*, நவம்பர் *1998, ப 24.*

177-78. K. A. Nilakanta Sastri, *The Côlas*, p 585.

179. R. Tirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, p 103-04.

180-81. Burton Stein, *Peasant State and Society in Medieval South India*, pp 217 and 223.

182. ஞா. தேவநேயன் *(பாவாணர்), தமிழர் வரலாறு, ப 264.*

183-84. R. Tirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, pp 55-56.

185. *SII*, Vol. VII, No. 742.

186-87. R. Tirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, p 116.

188. *ARE* 159 of 1921, *காவனூர் (வ. ஆ. மாவட்டம்).*

189. *SII*, Vol V, No. 1409, *கருந்தட்டான்குடி.*

190-91. K. A. Nilakanta Sastri, *The Côlas*, p 579.

192. *தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், முதற்பகுதி, ப 248.*

193. R. Tirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, p 138.

194. *தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், தொகுதி, இரண்டு, ப 403.*

195. Naboru Karashima, *South Indian History and Society, Studies from Inscriptions, AD 850-1800*, p xxvi..

196. *SII*, Vol. XXIV, No. 57, *திருவரங்கம்.*

197. *SII*, Vol. II, Part V, p 17.

198. *SII*, Vol. II, Part V, p 17.

199. *SII*, Vol V, No. 723, *திருவிடைமருதில்.*

200. *ARE* 1 and 2 of 1898.

201. *SII*, Vol XXII, 31, *திருக்கடையூர்*; ARE 259 of 1926, *கீழ்ப்பழுவூர்*; Naboru Karashima, *South Indian History and Society, Studies from Inscriptions, AD 850-1800*, p 29.

202-03. R. Tirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, pp 143-44 and 156.

204-05. K. A. Nilakanta Sastri, *The Côlas*, p 571-72.

206. *ARE* 201 of 1919.

207. R. Tirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, p 155.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



208. Burton Stein, *Peasant State and Society in Medieval South India*, p 368.

209. Saki, *Making History, Karnataka's People and their Past, Stone Age to Merchantalism*, p 229.

210. *ARE* No. 199 of 1976-77.

211-12. R.Thirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, p 130 and 112-15.

213. *SII*, Vol. VI, No. 58.

214. *SII*, Vol. VI, No. 57, மன்னார்குடி.

215. *SII*, Vol VI, Nos. 48, 50 and 58, மன்னார்குடி.

216. *SII*, Vol. VI, No. 58, மன்னார்குடி.

217. *ARE* No. 253 of 1925, திருக்கடவூர், மயிலாடுதுறை வட்டம்.

218. *ARE* No. 538 of 1918 and *ARE* 429 of 1918.

219. *ARE* No. 429 of 1918., திருக்கருகாவூர்.

220. *ARE* No. 429 of 1918, திருக்கருகாவூர்.

221. R. Thirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, p 166.

222. *SII*, Vol XXIII, 392, மருத்துவக்குடி.

223. R.Thirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, pp 134.

224. டாக்டர் ஆ. தசரதன், *வலங்கைச் சான்றோரும் சோழரும், (தமிழ்க் கதைப்பாடல் சுவடிகளில் வரலாற்றாய்வு)*, ப 80.

225. *SII*, Vol. VIII, No. 151.

226. *ARE* No. 267 of 1943-44.

227. *SII*, Vol. VIII, No. 263, களப்பாள்.

228. *SII*, Vol. IV, No. 381, சாளுவன்குப்பம்.

229. *ARE* No. 339 of 1925, பட்டுக்கோட்டை.

230. *ARE* Nos. 407-08 of 1925.

231. *ARE* No. 158 of 1938/39.

232. *ARE* No. 150 of 1927, தலைஞாயிறு.

233. *ARE* No. 536 of 1921.

234-36. R. Tirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, pp 138and 174-76.

237-38. *தமிழ்நாட்டு வரலாறு, பல்லவ–பாண்டியர் காலம், முதற்பகுதி*, பப 214, 232.

239-41. சடையவர்மன் பராந்தக பாண்டியன் தளவாய்புரச் செப்பேடுகள், தி. வை. சதாசிவ பண்டாரத்தார், *பாண்டியர் வரலாறு*, சேர்க்கை 1, பப 10–11, 13–14.

242. *SII*, Vol III, No. 209.

www.tamilarangam.net



243. சடையவர்மன் பராந்தக பாண்டியன் தளவாய்புரச் செப்பேடுகள், தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, சேர்க்கை I, பப 11, 13-14.

244. ARE No. 94 of 1907.

245. ஞா. தேவநேயன் (பாவாணர்), தமிழிலக்கிய வரலாறு, ப 182.

246. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், முதற்பகுதி, ப 382.

247. *EI*, Vol. XXII, p 9-11.

248. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், முதற்பகுதி, ப 248.

249-50. R. Tirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, pp 14 and 99.

251. *SII*, Vol XIII, 170, குற்றாலம்.

252-54. R. Tirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, pp 15-16.

255. *SII* Vol V, No. 436, திருநெல்வேலி.

256-58. R. Tirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, pp 18-19.

259. *ARE* No. 174 of 1937 and ARE 406 of 1954-55.

260-61. R. Tirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, pp 150-51.

262. *SII*, Vol. V, No. 431, திருநெல்வேலி.

263. *SII*, Vol. V, No. 414. திருநெல்வேலி.

264. *ARE* No. 73 of 1924, கண்டரமாணிக்கம்.

265-66. R. Tirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, p 152-54 and 140.

267. V. K. Thakur, *Urbanisation in Ancient India*, Abhinav Publications, New Delhi, 1981, p 314.

268. R. N. Nandi, *Social Roots of Religion in Ancient India*, K. P. Bagchi and Co., Calcutta, 1986, p 121.

269. *EC*, Vol. X, Ml 73.

270. *EC*, Vol. X, Ml 72.

271-72. Saki, *Making History, Karnataka's People and their Past, Stone Age to Merchantalism*, pp 171 and 213.

273. A. Sundara, *Some Jaina Temples in North Karnataka: Their Distinctive Features*, in *Jainism and Karnataka Culture*, ed., T. G, Kalghatgi, Karnataka University, Dharwad, 1977, p 187.

274-75. Saki, *Making History, Karnataka's People and their Past, Stone Age to Merchantalism*, pp 211 and 145.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



276. Sister Liceria, quoted by R. N. Nandi, *Social Roots of Religion in Ancient India, p 157.*

277. K. Ishwaran, *Religion and Society Among the Lingayats of South India, Vikas Publishing House, New Delhi, 1983, p 23.*

278. மயிலை சீனி வேங்கடசாமி, களப்பிரர் ஆட்சியில் தமிழகம், மக்கள் வெளியீடு, சென்னை, 1976, ப 126.

279. மயிலை சீனி வேங்கடசாமி, களப்பிரர் ஆட்சியில் தமிழகம், ப 126.

280. தி. வை. சாதாசிவ பண்டாரத்தார், கல்வெட்டுகள் கூறும் உண்மைகள், ப 100.

281-82. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், தொகுதி இரண்டு, பப 213, 211.

283. Burton Stein, *Peasant State and Society in Medieval South India,* p 364.

284. திருநாவுக்கரசர் தேவாரம் (தலமுறை), கோயில், 3:7.

285. திருநாவுக்கரசர் தேவாரம் (தலமுறை), திருப்பந்தணைநல்லூர், 1:3.

286. திருநாவுக்கரசர் தேவாரம் (தலமுறை), திருத்தலையாலங்காடு, 7.

287. திருநாவுக்கரசர் தேவாரம் (தலமுறை), திருக்கீழ்வேளூர், 9.

288. சுந்தரர் தேவாரம் (ஏழாம் திருமுறை: தலமுறை), திருப்பாச்சிலாச்சி ராமம், 8:7-8.

289. சுந்தரர் தேவாரம் (ஏழாம் திருமுறை: தலமுறை), திருக்கச்சி அனேக தங்காவாதம், 9:3-4.

290. சுந்தரர் தேவாரம் (ஏழாம் திருமுறை: தலமுறை), திருச்சோற்றுத்துறை, 7:1-2.

291. சுந்தரர் தேவாரம் (ஏழாம் திருமுறை: தலமுறை), திருக்கச்சூர் ஆலக் கோயில், 1:1-2.

292. சுந்தரர் தேவாரம் (ஏழாம் திருமுறை: தலமுறை), திருவெண்பாக்கம், 8:1-2.

293. சுந்தரர் தேவாரம் (ஏழாம் திருமுறை: தலமுறை), திருவாலங்காடு, 9:3-4.

294. பரிபாடல் 12:43-44.

295. மயிலை சீனி வேங்கடசாமி, மகேந்திரவர்மன், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை-1, 1978, பப 131-60.

296. K. A. Nilakanta Sastri, *The Côlas,* p 648.

297-98. Saki, *Making History, Karnataka's People and their Past, Stone Age to Merchantalism,* pp 212-13.

299-302. K. A. Nilakanta Sastri, *The Côlas,* pp 648.

303. டாக்டர் ஏ. சுவாமிநாதன், பல்லவர் கால வரலாறு, பப 291.

304. குணா, வள்ளுவத்தின் வீழ்ச்சி, தமிழக ஆய்வரண், வெங்காலூர், 1996.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



305. திருமந்திரம் 85.

306. திருநாவுக்கரசர் தேவாரம், கோயில், திருவிருத்தம், 5.

307. திருநாவுக்கரசர் தேவாரம், திருநள்ளாறு, திருத்தாண்டகம் (ஆறாம் திருமுறை), 2.

308. சுந்தரர் தேவாரம், திருவடமுல்லைவாயில், 2:8.

309. திருமந்திரம் 1429.

310. திருத்தொண்டர் திருவந்தாதி, 56.

311. திருத்தொண்டர் மாக்கதை, கழற்சிங்கநாயனார் புராணம், 2.

312. திருமந்திரம் 117:2-4.

313. திருமந்திரம் 134.

314. திருமந்திரம் 51:1.

315. திருமந்திரம் 53:1.

316. ஞா. தேவநேயன் (பாவாணர்), தமிழர் வரலாறு, ப 264.

317-18. டாக்டர் எஸ். பி. சபாரத்தினம், கோயில்களில் செந்தமிழ், சமஸ்கிருதம் (கட்டுரை), தினமணி, 28.11.1998.

319. (P. S.) சுப்பிரமணிய சாத்திரியார், வடமொழி நூல் வரலாறு, ப 309; மேற்கோள்: ஞா. தேவநேயன் (பாவாணர்), தமிழர் வரலாறு, ப 263.

320-26. மயிலை சீனி வேங்கடசாமி, களப்பிரர் ஆட்சியில் தமிழகம், பப 93–95, 166–68, 114, 160, 162, 164.

327. தொல்:பொருள்:8:117.

328-29. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்–பாண்டியர் காலம், தொகுதி இரண்டு, பப 430–32.

330. கலித்தொகை 65.

331. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்–பாண்டியர் காலம், தொகுதி இரண்டு, பப 433–34.

332. சிலப்பதிகாரம் 14:148–55.

333-36. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்–பாண்டியர் காலம், தொகுதி இரண்டு, பப 437–38.

337. சிலப்பதிகாரம் 6:35–63.

338. சிலப்பதிகாரம் 6:64–67.

339. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்–பாண்டியர் காலம், தொகுதி இரண்டு, ப 442.

340. சிலப்பதிகாரம் 5:50–63

341. சிலப்பதிகாரம் 22:138–39

342. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்–பாண்டியர் காலம், தொகுதி இரண்டு, பப 450–51.

343. K. Ishwaran, *Religion and Society Among the Lingayats of South India*, Vikas Publishing House, New Delhi, 1983, p 114.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



344. Saki, *Making History, Ķarnataka's People and their Past, Stone Age to Merchantalism*, pp 263.

345. K. Ishwaran, *Religion and Society Among the Lingayats of South India*, p 29.

346. *தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம்,* தொகுதி *இரண்டு, ப 458.*

347-48. திருநாவுக்கரசர் தேவாரம் (நான்காம் திருமுறை: தலமுறை), திருவாரூர்.

349-54. *தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம்,* தொகுதி *இரண்டு, பப 458-60.*

355. K. A. Nilakanta Sastri, *The Côlas*, p 575.

356. *SII*, Vol. II, Part III, No.66 of 1895.

357. K. S. Shivanna, *Agrarian System of Karnataka (1336-1761)*, Prasaranga, Mysore, 1983, p 31.

358. R. N. Nandi, *Social Roots of Religion in Ancient India*, pp 89-90.

359. *SII*, Vol. VIII, Nos. 668-69.

360. *SII*, Vol. XIV, Nos. 133 and 154.

361. *SII*, Vol. XIV, No. 157.

362. *SII*, Vol. XIV, No. 164.

363. *ARE* No. 339 of 1925, பட்டுக்கோட்டை.

364. R. Tirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, p53.

365. K. A. Nilakanta Sastri, *The Côlas*, pp 530ö31.

366. R.Tirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, pp 47-48.

367. *Pattukkottai Inscriptions* 517.

368. *ARE* No. 21 of 1928.

369. *SII*, Vol. V, No. 663, கீழப்பழுவூர்.

370. K. A. Nilakanta Sastri, *The Côlas*, p 573.

371. *ARE* No. 1943/44 No. 265.

372. *ARE* No. 259 of 1926, கீழப்ப்ழுவூர் (திருச்சி மாவட்டம்).

373. *SII*, Vol. XVII, No. 170.

374. *SII*, Vol. IV, No. 555.

375. *ARE* No. 283 of 1943/44.

376. *ARE* No. 274 of 1943/44.

377. *SSI*, Vol. XVII, No. 448.

378. *SII*, Vol. XVII No. 460.

379. *SII*, Vol. XVII No. 536.

www.tamilarangam.net



380. *SII*, Vol. XVII No. 540.

381. *ARE* No. 265 of 1912.

382. *ARE* No. 267 of 1912.

383. *ARE* No. 37 of 1937/38.

384-85. Naboru Karashima, *South Indian History and Society, Studies from Inscriptions, AD 850-1800*, pp 33 and 6.

386. R. Tirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, p 57.

387. *ARE* No. 330 of 1917.

388. *ARE* No. 176 of 1919.

389. *ARE* No. 198 of 1919.

390. *ARE* No. 238 of 1929.

391. *SII*, Vol. IV, No. 381, சாளுவன்குப்பம்.

392-94. R. Tirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, p 98, 101 and 118.

395. *SII*, Vol. III, No. 142, திருமால்புரம்.

396. *SII*, Vol. III, No. 203.

397. R. Tirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, p 23.

398. *SII*, Vol. VII, No. 759.

399. *SII*, Vol. VIII, No. 193.

400. *SII*, Vol. XIII, No. 50, திருவெறும்பூர்.

401. R. Tirumalai, *Land Grants and Agrarian Reactions in Côla and Pândya Times*, p 29.

402. Saki, *Making History, Karnataka's People and their Past, Stone Age to Merchantalism*, pp 97 and 133.

403. *SII*, Vol. II, Part II, Nos. 4 and 5 of 1891.

404. எம். வின்சுலோ, *தமிழ்-ஆங்கில அகராதி*, Preface, pp v-vi.

405. V.S. Arul Raj and G.Victor Rajamanickam, *Traditional Boats in Tamil Literature*, in *History of Traditional Navigation*, ed., Dr. G.Victor Rajamanickam and Dr. Y. Subbarayulu, Tamil University, Thanjavur, 1988, pp 7-14; ஞா. தேவநேயன் (பாவாணர்), *தமிழர் வரலாறு*, பப 92-93.

406. ஞா. தேவநேயன் (பாவாணர்), *தமிழர் வரலாறு*, ப 93.

407. டாக்டர் ஏ. சுவாமிநாதன், *பல்லவர் கால வரலாறு*, பப 284.

408-10. அளக்குடி ஆறுமுக சீதாராமன், *தமிழகத் தொல்லியல் சான்றுகள்*, 1994, முன்னுரை, ப 2, 14-15.

411. *The Hindu*, 31.10. 1998.

412. அளக்குடி ஆறுமுக சீதாராமன், *தமிழகத் தொல்லியல் சான்றுகள்*, ப 18-19.

25

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



413. கெட்டி முதலி அரசர்கள், தொகுப்பு: தமிழ்நாடன், ப 132.

414. R. Krishnamurthy, *Sangam Tamil Coins*, Garnet Publications, Madras, 1997, pp 18-20 and 26.

415. அளக்குடி ஆறுமுக சீதாராமன், தமிழகத் தொல்லியல் சான்றுகள், ப 17.

416-18. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், தொகுதி இரண்டு, பப 63, 68.

419. Saki, *Making History, Karnataka's People and their Past, Stone Age to Merchantalism*, p 158.

420. *Catalogue of Venetian Coins in the Government Museum, Bulletin of the Madras Government Museum*, Madras, 1989, p 1.

421. N. Sankara Narayana, *Catalogue of Vijayanagar Coins in the Government Museum, Bulletin of the Madras Government Museum*, Madras, 1994.

422. A. V. Narasimha Murthy, *The Coins of Karnataka*, Geetha Book House, Mysore, 1975, p 383.

423. R. S. Sharma, *Indian Feudalism, c A.D. 300-1200*, The Macmillan Company of India, Delhi, 1980, p 108.

424. Om Prakash Prasad, *Decay and Revival of Urban Centres in Medieval South India (c..A.D.600-1200)*, Commonwealth Publishers, New Delhi, 1989, pp 31.

425. Saki, *Making History, Karnataka's People and their Past, Stone Age to Merchantalism*, p 159.

426. R. N. Nandi, *Social Roots of Religion in Ancient India*, K. P. Bagchi & Co., Calcutta, 1986, p 20.

427. E. W. Thompson, *Religion in the Mysore State, Quarterly Journal of the Mythic Society*, Vol. I, No. 4, July 1910, pp 138-39.

428. Saki, *Making History, Karnataka's People and their Past, Stone Age to Merchantalism*, p 121.

429. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், தொகுதி இரண்டு, ப 58.

430. *ARE* No. 388 of 1939.

431-32. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம், தொகுதி இரண்டு, பப 59, 43.

433-34. Om Prakash Prasad, *Decay and Revival of Urban Centres in Medieval South India (c. A.D.600-1200)*, pp 53-59 and 36-48.

435. சுந்தரர் தேவாரம், ஏழாம் திருமுறை: தலமுறை, திருக்கச்சூர் ஆலக் கோயில், 4:3.

436. டாக்டர் ஏ. சுவாமிநாதன், பல்லவர் கால வரலாறு, ப 283.

437. திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 2::6:6:1-3.

438. Om Prakash Prasad, *Decay and Revival of Urban Centres in Medieval South India (c. A. D. 600-1200)*, p 74.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



439-41. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்–பாண்டியர் காலம், தொகுதி இரண்டு, பப 59, 61, 202.

442. *SII* Vol. II, Part V, p 12.

443. *ARE* No. 229 of 1907.

444. Meera Abraham, *Two Medieval Merchant Guilds of South India*, Manohar, New Delhi, 1988, p 45.

445. Saki, *Making History, Karnataka's People and their Past, Stone Age to Merchantalism*, p 161.

446. Meera Abraham, *Two Medieval Merchant Guilds of South India*, p 42.

447. *தினமணி, 16.11.1998, ப 2.*

448-50. Meera Abraham, *Two Medieval Merchant Guilds of South India*, pp 42, 79 and 119-20.

451 தினமணி, *16.11.1998, ப 2.*

452. Y. Gopala Reddy, *The Feudal Elements in Western Chalukya Polity* in *The Chalukyas of Kalyana (Seminar Papers)*, ed., M. S. Nagaraja Rao, The Mythic Society, Bangalore, 1983, p 125.

453-54. B. Sheik Ali, *History of the Western Gangas*, University of Mysore, Mysore, 1976, pp 238-39.

455-60. டாக்டர் ஆ. தசரதன், வலங்கைச் சான்றோரும் சோழரும், (தமிழ்க் கதைப்பாடல் சுவடிகளில் வரலாற்றாய்வு), தமிழ் ஓலைச்சுவடிகள் பதுகாப்பு மையம், சென்னை-41, 1996, ப 16, 64, 66-72.

461-63. R. N. Nandi, *Growth of Rural Economy in Early Feudal India*, Presidential Address, Indian History Congress, Annamalainagar, 1984, pp 59-60, 60-61 and 51-53.

464. B. Muddachari, *Economic History of Karnataka (Vijayanagara Period)*, Udaya Prakashana, Mysore, 1982, pp 94 and 92-93.

465. Saki, *Making History, Karnataka's People and their Past, Stone Age to Merchantalism*, p 302.

466. Saki, *Making History, Karnataka's People and their Past, Stone Age to Merchantalism*, p 303.

467. Naboru Karashima, *South Indian History and Society, Studies from Inscriptions, AD 850-1800*, p 130.

468. பு. இராசதுரை, உறவின் முறை, இளமாறன் பதிப்பகம், விருதுநகர், *1983, ப 77.*

469-70. Burton Stein, *Peasant State and Society in Medieval South India*, pp 485 and 474-75.

471-72. டாக்டர் கே. கே. பிள்ளை, தமிழக வரலாறு—மக்களும் பண்பாடும், பப *416—17, 432.*

473. Burton Stein, *Peasant State and Society in Medieval South India*, p 396.

474. பழனிச் செப்பேடு, வரிகள் 31-32, மள்ளர் மலர், அக்டோபர் 1998, ப 15.

www.tamilarangam.net



475. குறுந்தொகை, 11:5-7.

466-77. கெட்டி முதலி அரசர்கள், தொகுப்பு: தமிழ்நாடன், பப 89-90.

478. பேராசிரியர் பே. க. வேலாயுதம், ப. சீனிவாசன், சங்ககால மன்னர் வரிசை, திருச்சிராப்பள்ளி நாணயவியல் கழகத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவுவிழாச் சிறப்பு வெளியீடு, 23.2.1997), பாரதி நூலகம், திருச்சிராப்பள்ளி, 1997.

479. அகநானூறு 44:7-8.

480. அகநானூறு 226.

481. சிலப்பதிகாரம், 25:156-59.

482. F. J. Richards, *Madras District Gazetteers, Salem,* Vol. I, Part II, Madras, 1918, p 303.

483-88. கெட்டி முதலி அரசர்கள், தொகுப்பு: தமிழ்நாடன், ப 86-87, 90, 12, 76, 111.

489. பாளையப்பட்டுகளின் வரலாறு, தொகுதி III, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, 1981, ப 21.

490. பாளையப்பட்டுகளின் வரலாறு, தொகுதி I, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, 1981, ப 1.

491-92. கெட்டி முதலி அரசர்கள், தொகுப்பு: தமிழ்நாடன், ப 112-13.

493-97. Burton Stein, *Peasant State and Society in Medieval South India,* pp 395, 379, 398, 410, 400.

498. K. A. Nilakanta Sastri, *A History of South India, from Prehistoric Times to the Fall of Vijayanagar,* Oxford University Press, Madras, 1984, p 271.

499. Burton Stein, *Peasant State and Society in Medieval South India,* pp 400-01.

500. K. A. Nilakanta Sastri, *A History of South India,* p 307.

501-07. Burton Stein, *Peasant State and Society in Medieval South India,* pp 402, 371, 410-12, 440-41 and 414.

508. பு. இராசதுரை, உறவின் முறை, ப 77.

509. *AR* No. 28 of 1900, இளமீசுரம்.

510. *AR* No. 21 of 1900.

511. *AR* No. 27 of 1900.

512. *AR* No. 20 of 1900.

513. *AR* No. 19 of 1900.

514. *AR* Nos.26 and 29 of 1900.

515. *AR* No. 312 of 1919.

516. Saki, *Making History, Karnataka's People and their Past, Stone Age to Merchantalism,* p 333.

517. Burton Stein, *Peasant State and Society in Medieval South India,* p 412.

518. எம். வின்சுலோ, தமிழ்-ஆங்கில அகராதி, ப 722.

www.tamilarangam.net



519. *பாளையப்பட்டுகளின் வரலாறு*, தொகுதி III, ப 22.

520-25. Burton Stein, *Peasant State and Society in Medieval South India*, pp 413-14, 420-21, 399, 417-18.

526-28. Naboru Karashima, *South Indian History and Society, Studies from Inscriptions, AD 850-1800*, pp 141, 130 and 161.

529. பு. இராசதுரை, *உறவின்முறை*, ப 61.

530. Burton Stein, *Peasant State and Society in Medieval South India*, pp 425-26.

531. Francis W. Ellis, Lt. Col. Blackburn and Sir Thomas Munro, *Three Treatises on Mirasi Right*, p 63.

532. Naboru Karashima, *South Indian History and Society, Studies from Inscriptions, AD 850-1800*, p 160.

533-41. Burton Stein, *Peasant State and Society in Medieval South India*, pp 404,384,456-59, 463,465, 487,439, 435-36.

542. எம். வின்சுலோ, *தமிழ்–ஆங்கில அகராதி*, ப 954.

543-44. Burton Stein, *Peasant State and Society in Medieval South India*, pp 436-37.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சொல்லடைவு


அகப்பரிவார முதலிகள் 279
அகரமேற்றல் 177, 263
அகர வினியோகம் 271
அகிச்சத்திரம் 185-86
அகுதை 39, 68-69
அச்சுதராயன் 143
அங்காடிக்கூலி 328
அசோகன் 28, 51, 65, 107, 158-59
அடங்காப்பற்று 111, 116
அடிமை 116, 119, 213
அடிமையுடைமை 118
அடுக்குநுட்பம் 98
அடைநிலம் 111, 218, 236
அடைப்பு/அடைப்பர் 219
அண்டர் 70, 169, 180
அதியமான் நெடுமான் அஞ்சி 64-65, 68
அதியன் எழினி 65, 131
அப்பாதுரையார். க. 60, 161
அமஞ்சி 249, 311
அமரநாயகம்/அமரம் 349
அயலார்க்காட்சி 217
அலெக்சாண்டர் டவ் 3,23,
அழும்பில் வேள் 48, 68
அவந்திசுந்தரி கதா 221
அவியன் 83
அவுணர் 75, 121, 123-24, 129
ஆஅய் அண்டிரன் 66-67
ஆஅய் எயினன் 67
ஆசிய விளைப்புமுறை 7-8, 17, 23-24, 323
ஆடல் 298-302
ஆண்டார் 312-13, 315-16
ஆதனுங்கன் 31, 31-32அ
ஆதிச்சநல்லூர் 93
ஆதொண்டை 11-12,
ஆப்பிரிக்கா 2, 9-10, 23
ஆமுக்த மால்யத 346
ஆயக்கட்டு 253
ஆரியர்-திராவிடர் கோட்பாடு 6-7, 358
ஆரேலியன் 112
ஆளும்கணத்தார் 217
ஆளோலை 213
இந்திரன் 290-91
இரட்டப்பாடி 33
இராசராசப்பெருவிலை 262, 312
இராபர்ட் கிளைவ் 151
இராமச்சந்திர திட்சிதர் 94-95
இராமராயன் 144
இருங்கோ வேள்மான் 68, 82-84
இரும்புக் காலம் 93-94, 98, 102
இலெனின் 12
இளவேனில்-இலையுதிர்கால ஆண்டுக்குறிப்புகள் 125-26
இறைகுறைப்பு 260
இறைக்காவலாக வைத்த காசு 244
இறையிலி 187, 207-08, 211, 249, 264, 310-11, 316
உடைமை 231
உடையான் 22, 233
உட்கிழமை 188, 215
உம்பளிக்கை 183, 206
உழவடை 219, 268
உழவு
  ஏர்க்காட்டு 16
  கொத்துக்காட்டு 16, 102
  புழுதிக்காட்டு 103-04, 232
  புனம் 16, 103
உழவொற்றி 281
உழுகுடிகள் 233, 236, 245, 265-68, 270, 273, 276, 284, 308
உழையர்/குடிஉழையர் 199
உள்குடி 266, 272
உள்படுகருமத்தலைவர் 217
ஊடை 123
ஊட்சு எஃகு 99
ஊரார் 242, 250, 273
ஊராளி 206, 254
ஊர்க்குடியரசுகள் 4-5
ஊர்ச்சந்தை 334-35
ஊழியக்காணி 259
ஊன்பொதி பசுங்குடையார் 58
எட்டு இளவரசர் குழப்பங்கள் 123
எட்மண்ட் பர்க் 23
எமில் தர்க்கெய்ம் 2
எருமை 49-52
எல்சோறு/சோறுமாட்டு 249-51, 259, 311
எல்லம்மா 160-61
எல்லிஸ், ஃபிரான்சிஸ் ஒயிட் 353
எழுத்துகள்
  தேவநாகரி 197
  பிராமி 197, 199

www.tamilarangam.net



வட்டெழுத்து 196-98, 201-02
கிரந்த எழுத்து 196-97, 294
என்றி மெய்ன், சர் 2, 23
ஏரிப்பட்டி 247
ஐடன் சவுத்தால் 23
ஐதரலி 151-52
ஐந்நூற்றுவர் 330-34
ஐம்பொழில் 285, 330-33
ஒருகால்வழி மரபுக்குழுக்கள் 8-9
ஓலையர் 185-86
ஒற்றி 257-58, 281
λ-ஓரையன் 291
ஔவையார் 43, 79
கடமை 250, 275
கடம்பின் பெருவாயில் 42
கடைசெறிப்பு 307
கட்டபொம்மு 231, 349
கட்டி 59, 340
கட்டி முதலிகள் 59, 99, 343, 350
கட்டிப்பறையர் 99-100
கணவாய் 339
கணிகாரத்திகள் 211
கண்டுழவு 282
கபாலிகர்/கபாலிகம் 289, 292
கபிலர் 171
கயிலை வன்னியர் 22
கரணத்தான் 217
கரிகாலன் 224
முதலாம் 57
இரண்டாம் 57
மூன்றாம் 11-12
கருந்தட்டான்குடி 259
கருவும் புறமும் 17
கலங்கள் 319-20
கலிப்பாநூல் 126
கல்வெட்டுகள்
பால்மடி 187
ஹாதிகும்பா 53, 120
கவுட்ஸ்கி 12
களப்பாளர் 73, 122, 132, 178, 228, 230, 253, 295-96, 326-27
களப்பேறு/களமதிப்பு/மேரை 253
கள்வர்குடிகள் 112, 114-15
கற்காலம்
அச்சூலிய பண்பாடு 92
இடைக்கற்காலம் 91
நுண்கற்காலம் 93, 168
பழைய கற்காலம் 92
புதிய கற்காலம் 92-93
கற்பூரவிலை 244
கனிஷ்கன் 128
கன்ஃப்பூசியசு 126
காங்கேயன் 283-84
காசுகள் 321-25, 336
காடுவெட்டிகள் 218
காணியாட்சி 206, 208, 212, 218, 357
காரவேலன் 53, 120, 132, 159
காராண்மை
குடிநீக்காக் 234, 307, 310
குடிநீக்கிக் 211, 234, 310, 314-15
காராளர் 232
காராண்மையாளர் 233, 284, 306, 310
காராண்மையுரிமை 233, 307, 309
காலியனஸ் 115-16
காவிதி வடுகன் 201
காளமுகர்/காளமுகம் 285, 289-90, 292, 302
கான்ஸ்டான்டியனஸ் 114, 121
கிருட்டின(கன்னர)தேவராயர் 142-44, 345-46
கிழக்கிந்தியக் குழுமம் 1, 5, 358
கிழவன் சேதுபதி 149
கிளாடியஸ் 117
கீழாட்சி/கீழ்வாரம் 68, 233, 269
கீழையுலகக் கொடுங்கோலும் ஆட்சிக் குலைவும் 2-4
கீழ்க்குடிகள் 233, 236, 245, 265-67
குடப்புலவியனார் 51
குடிதாங்கிக்கோல் 284
குடிமக்கள் 253
குடிமை 116, 213, 235-36, 250, 267, 273
குடிவாரத்தாட்கூலி 268
குடும்பு 267
குப்தர்கள் 128, 187
குமுக மீத்தம் 15
குரம்பு 235
குழுமூர் 171-72
குறும்பு 61, 71, 107
கூத்து 298-302
கருங்கூத்து 298
கூறுண்ட அரசுகள் (குமுகங்கள்) 2,10-14, 17-20, 24, 116
கேம்ப்பெல் 100
கொங்குணி 179
கொங்குதேச ராசாக்கள் கதை 338

www.tamilarangam.net



கொங்கூர் 179
கொடுப்போலை 258
கொத்தடிமை 199, 212-13, 269
கொத்துணி 213
கொமரனள்ளி 98
கொலனஸ்/ வில்லெய்ன் 109-111
கோகின் பிரௌன் 94
கோடெக்ஸ் தியோயோசியானஸ் 110, 118
கோத்தியர் 74-75, 77, 117
கோப்பெருஞ்சிங்கன் 138-39, 272, 274
கோயிலங்காடி 338
கோயில்தமர்பேறு 271, 308
கோரசர்மன் 210
கௌதமபுத்திரன் சதகர்ணி 159, 284
கௌலாந்து, பேராசிரியர் 95
சந்திரகுப்த மோரியன் 73-74, 157-58
சந்திரசயனன் 186
சந்திரபட்ட விக்கண்ணா 281
சரஃபோஜி 152
சளுக்கியச் சோழர் 137, 228
சாணக்கியன் 158
சாத்தன் வடுகன் 330
சாமிபோகம் 281
சாம்பல் மேடுகள் 101-02
சார்லஸ் கிராண்ட் 3
சார்லஸ் மெட்காஃப் 4
சாலோமன் 319
சாளுவ திம்மன் 142
சித்திரமேழிப் பெரியநாட்டார் 256
சிவாஜி 148
சிசர்கள் 120
சீனி வேங்கடசாமி, மயிலை 298
சுந்தரர் 27-28, 329
சூத்திர விளைப்புமுறை 318
சூத்திரன் 317-18
செப்பேடுகள்
உதயேந்திரம் 210-11
காசக்குடி 210, 225, 278
கூரம் 210, 220
தண்டன்தோட்டத்துச் 210, 222
நுணமங்கலம் 186-87
பட்டத்தாள்மங்கலம் 210
பழனிச் செப்பேடு 339
பள்ளன்கோயில் 122, 210
புள்ளூர்ச் செப்பேடுகள் 210
முடியனூர் 179, 186, 192-93, 95
வேலூர்ப்பாளையம் 122, 210
சேக்கிழார் 225
சேரர்கள்
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் 43, 164, 171
கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் 172
கணைக்கால் இரும்பொறை 79
களங்காய்க்கண்ணி
நார்முடிச்சேரல் 44-45
சேரன் செங்குட்டுவன் 59, 172, 341
பல்யானைச் செல்கெழு குட்டுவன் 171
பெருஞ்சேரல் இரும்பொறை 71
பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் 168, 170-71
மாக்கோதை 55-56
மாந்தரன் பொறையன்
கடுங்கோ 45
மாவண்கோ 79
யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல்
இரும்பொறை 51, 64
சேனையங்காடி 338
சோழப்பாண்டியர் 307
சோழர்கள்
ஆதித்தன் 227, 287
இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி 79
இராசராசன்
முதல் 128, 228, 259-61, 279, 293-94, 304, 313
இரண்டாம் 262, 266, 268
மூன்றாம் 139, 271-74, 312-13
இராசாதிராசன்
முதல் 311
இரண்டாம் 266, 268, 310
இராசேந்திரன்
முதல் 228, 230, 259, 261, 279, 315, 352
மூன்றாம் 139, 266, 274
உத்தம சோழன் 137, 228
கிள்ளி வளவன் 51, 59-60
குலோத்துங்கன்
முதல் 172, 195, 228, 249, 264, 314
இரண்டாம் 314
மூன்றாம் 270-74
சுந்தர சோழன் 228
செங்கணான் 79
செருப்பாழி எறிந்த
இளஞ்சேட்சென்னி 54, 57-59, 132

www.tamilarangam.net



நலங்கிள்ளி 59
நெடுங்கிள்ளி 59
பராந்தகன், முதல் 227, 229-30, 257, 313
புகழ்ச்சோழன் 225
பெரும்பூட்சென்னி 45
விசயாலயன் 225-26, 231
வீரராசேந்திரன் 226
டாசிட்டஸ் 112, 117
டிரையம்பிளினி 118
டூப்ளே 150
டையோக்லெஷியன் 120-22
தகடூர் யாத்திரை 65
தசரா 355
தண்டி 196, 221
தத்தக சூத்திரம் 187
தமிழிசை 198-99
தரமிலி 256, 271
தரம் பிரித்தல் 283
தரம்-விரிப்பு 264-65, 283
தலைமகனுரிமை 3
தலையாலங்கானம் 51-52
தலைவரிசை 268
தலைவாசல் 43, 342
தனிஉழவர்கள் 111-12, 119
தாளகுண்டா 184, 187
திணைக்களத்தார் 217
திதியன் 45, 57, 59, 69, 340
திப்பு சுல்தான் 151-52
திருஞானசம்பந்தர் 297
திருநாவுக்கரசர் 297
திருப்புறம்பியம் 226-27, 271
திருமங்கை ஆழ்வார் 225, 329-30
திருமந்திரவோலை நாயகம் 279
திருவாய்க்கேள்வி 217
திருவிடையாட்டம் 207, 237, 243, 311
திரோபிரியாந்து 9
திறையாண்மை 16-17, 19
தீண்டாச்சேரி 244-46
துவரை 82-83
தெலுங்குப் பிருடைகள் 223
தென்னன் 31
தென்னிந்தியக் கல்வெட்டுகள் 245
தேசாயி 357
தேவடியாள் 298, 302-04
தேவதானம்
ஊட்டுப்புரை 243
குடிநீங்கித் 310
வெள்ளான்வகை 262
தொல்குடி அரையராட்சி 96
நகரங்களிலார் 244
நக்கீரர் 164-65
நடுகற்கள் 199, 201-02
நடுவில்நாடு 19
நடுவாண்மை 17
நற்கொற்றன் 178
நன்னன் 11, 35-47, 67, 119, 131, 340
நாடு 204, 238-40
நாடு வகைசெய்தல் 260
நாயக்கர்கள் 216, 230, 344-48
சொக்கநாதன் 147
திருமலை 146-47
மங்கம்மாள், இராணி 149
விசுவநாத 143-44, 230
நானாதேசியர் (வளஞ்சியர்) 332-33
நான்முகன் 291
நிசாம் 150
நிலக்கிழமை 5, 119, 326
காணியாட்சி 218
வடுக/அடிமை 207, 327
நிலம் கலந்தபடி 257
நிலைக்களத்தார் 217
நில்லாக்குடி 235-37
நீர்ப்பெயற்று 71-72
நூற்றுவர் கன்னர் 81-82, 168-69
நெட்டாள் 273
நெல்லரிசிப் பண்பாடு 188, 191
நெல்லிடைப்பொன் (வீசப்படி/வீசம்) 258
நேரடி ஆட்சி 17
பகாடே 112, 114-15
பங்குடையார்மக்கள் 278-79
பஞ்சவாரம் 221, 314
படையாட்சி 20-21, 204-06
பட்டக்காரர் 352
பட்டணத்தார் 335
பணம் 323
பண்டாரவாடை 349, 351
பண்ணையடிமை 109-11, 118-19, 212
பத்ரலோக் 7
பம்மதேயம் 177
பயல் 218
பயிர்க்காரர் 357
பரசுராமன் 77, 131, 160-61, 185-86, 317
பரணர் 44-45, 171
பரதவர் 58-59, 73, 320
பர்ட்டென் ஸ்டெய்ன் 23

www.tamilarangam.net




பராக்கிரமன் பாண்டியன்
கட்டளை 280
பல்லவர்
அபராசித்தன் 135-36, 201, 210
சிம்மவிட்டுணு 122, 198, 200, 202, 221, 225
தந்திவர்மன் 134-35, 201
நந்திவர்மன்
இரண்டாம் 122, 133-34, 171, 197, 201, 210-11, 222
மூன்றாம் 201, 210-11, 221-22, 329
நரசிம்மவர்மன்
முதல் 198, 200, 202, 286
இரண்டாம் 200, 210, 286
நிருபதுங்கன் 135-36, 201, 210
பரமேசுவரவர்மன்
முதல் 133, 198, 200, 210, 219-20, 222, 286
இரண்டாம் 133, 200
மகேந்திரவர்மன்
முதல் 132, 198, 200, 215, 218
இரண்டாம் 200, 202
மூன்றாம் 200
பழையன் 45, 340
பள்ளிச்சந்தம் 207, 237
பள்ளுநர் 98
பறைச்சுடுகாடு 318
பறையர்
உழுபறையர் 213
திடற்பறையர் 214
பற்றி இயக்கம் 20, 296, 306
பற்றுகள்
காணிப்பற்று (சீவிதம்) 236
கோயில்பற்று 237
புறப்பற்று 236
படைப்பற்று 237, 244
பற்றுமுறை 99
பாசுபதர் 288-89, 292
பாட்டம் 249
பாணன் 33, 59
பாணினி 321
பாண்டியர்கள்
கடுங்கோன் 122, 276
சடையவர்மன் பராக்கிரம
பாண்டியன் 137-38
கானப்பேரெயில் கடந்த
உக்கிரப்பெருவழுதி 79
சடையவர்மன் குலசேகரன், முதல் 137, 272, 278, 281
சந்திரசேகர பாண்டியன் 143
சுந்தர பாண்டியன் 140, 276-74
நின்றசீர் நெடுமாறன் 133, 225
நெடுஞ்செழியன் 51-52
பராந்தக நெடுஞ்சடையன் 134, 276
பராந்தக வீரநாராயணன் 276-77
பல்யாகசாலை முதுகுடுமிப்
பெருவழுதி 178, 322
மாறவர்மன் குலசேகரன், முதல் 140, 282, 309
மாறவர்மன் சுந்தர பாண்டியன்,
முதல் 139, 272, 282-83
வரகுண பாண்டியன் 136, 227, 260, 276
பாரதம் பாடிய பெருந்தேவனார் 171
பாவாணர் 76, 158-59, 163, 166-67
பாவைக் கொட்டிலார் 132,163
பாழ் 218
பாளையப்பட்டு/பாளையக்காரர் 12, 205, 348-49
பிட்டங்கொற்றன் 53-54, 56, 65-66, 119
பியூலர் 169
பிரமதேயம்
தேவதான பிரமதேயம் 243, 250
பிரமராயன் 251-52, 347
பிராமணர்
சித்பாவன் 7
தேசாந்த 5
பிரான்சிஸ் புக்கனன் 214
பிரிஜெட் ரேமாண்டும் ஆல்சினும் 92
புரவு 255
புரவுவரித் திணைக்களம் 251
புரோபஸ் 112, 117-18
புலிகடிமால் 83-84
புலிகேசி
முதல் 188
இரண்டாம் 132-33, 215, 285
புலிமெய் 82
புலையர் 110-12, 185-86, 213
மூலப்புலையர் 213
புல்லி 30-31, 64, 72, 109, 112, 114-15
புல்லிக்காடு 72, 145
புள்ளியம்மன் பள்ளேசல் 254
புறக்குடி 236
பூங்குடி வடுகன் 201
பூலித்தேவன் 153
பெரியநாடு 256
பெருங்கண்டூர் 220
பெருங்கற்படைகள் 97, 103, 105

www.tamilarangam.net




பெருங்குடிப்பற்று 233
பெருங்குடிமக்கள் 219, 233, 235-36, 251, 268, 270, 273
பெள்ளிகாமி அகரம் 187
பேரிளமையர் 268
பேரின்பக் காதல் 297-98
போரிடும் அரசுகளின் காலம் 125
ஃபிராங்குகள் 117
மகட்பாற் காஞ்சி 78
மக்கள்சேவகப்பேறு 267
மகாபத்ம நந்தன் 157
மகாவம்சம் 127, 166
மங்கையர்க்கரசி 225
மடக்குமா 265-67, 274
மடம்/மடவளாகம் 304-05
மணற்கால்நம்பி 223
மணிக்கிராமம் 332-33
மணியக்காரர் 1, 339, 353
மதங்கள்
சிவனியம் 294-95
மாலியம் 295
மத்தவிலாசம் 289
மதுரா விஜயம் 141
மயூரவர்மன் 162, 185-86
மராட்டியர் 34, 76
மருமக்கள் தாயம் 69
மருவு (சம்பந்தம்) 317
மலையமான் திருமுடிக்காரி 61, 64-65, 68
மழவர்/மழவர்நாடு 60-64, 109, 112
மனுநூல் 214-15
மனைஓக்கல் 214
மன்றாடிகள் 217
மஜீர் அபுரிஜா 140-41
மாக்சிமியன் 114-15, 120-21
மாணிக்கவாசகர் 21
மாமூலனார் 73, 170, 340
மாராயம் 181, 205
மார்க் வில்க்ஸ் 3
மார்க்சு 7, 12
மாலினோவ்ஸ்கி, பிரானிஸ்லாவ் 9
மால்கம் கால்டுவெல் 8
மாற்றநூல் 126
மிஞிலி/ஞிமிலி 37-40
மீத்தக் கோட்பாடுகள் 8
மீயாட்சி/மேலாட்சி/மேல்வாரம் 68, 233-34, 255, 269, 275, 308-09
மீர் ஜம்லா 146
முக்கண்ட காடுவெட்டி 220
முட்டாஆள் 249
முதல்பணம் 8
முதல் புக்கன் 141
மும்முடி 43, 342
முற்றூட்டு 183, 287, 352
மூக்கறுத்தான் படையெடுப்பு 147
மூலஉரிமையாளர் 111, 214
மெகஸ்தனிஸ் 8
மொழிகள்
சங்கதம் 35, 191, 195-98, 294
கன்னடம் 35, 75-76, 195-96
தெலுங்கு 75-76
பாகதம் 35, 177, 191, 197, 199, 202
மராத்தி 35
மலையாளம் 77
வடுகு 76, 202
மேல்குடி 235
மோகூர் பழையன் 52-55, 119, 131
மோரியர் 11, 51-53, 77, 104, 107, 157, 159, 165, 169-70
யுவான் சுவாங் 224
யூச்சி 128
ராபர்ட் ஓர்ம் 3
ரிச்சர்ட் ஜோன் 7
ரேட்கிளிஃப்-பிரௌன் 8
ரேநாடு-7000 224
லாய்ட் ஃபாலர்ஸ் 10
லோவோ ட்சி 126
லியு யுவான் 123
லெவி ரைஸ் 191
லையொனல் பிலேஸ் 357
வடக்கத்திய அரசுகள் 155-56
வடுகவழி 84, 180
வயக்கல் 218
வரலாற்றுநூல் 125
வரிகள் 17, 211, 223-24, 235-36, 274-75, 307
வரிசை 275
வரிப்பொத்தகம் 252, 255
வரியிலார் 255
வருவாய்த்துறை வாரியம் 358
வலங்கை-இடங்கை 215, 338
வலங்கைச்சுவடி 162
வலங்கைமாலை 334
வளநாடுகள் 238-40, 260
வன்னிமைகள் 21
வன்னியர்/வன்னிபம் 21


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாடாக்கடன் (நின்றஇறை) 234, 263, 275
வாட்டாற்று எழினியாதன் 45, 47, 51, 119
வாள்வாய்க் கவிழ்ப்பு 181-83
விசுவேசுவரையா 354
விடேல் விடுகு 217
வித்துமுதல் 316
விண்டு 291
விரித்திகள் 247, 304
பட்டவிரித்தி 208, 304
விவிலியம் 319
வீரநரசிம்மன், ஒய்சளன் 138
வெங்கோஜி 148
வெட்டி 235, 248-51, 311
வெள்ளம்பரவி 182
வெள்ளாளர்
நற்குடி 12
பசுங்குடி 12
வெள்ளான்வகை 237, 276, 308, 312, 352
வேத்தியல்-பொதுவியல் 299
வேலு நாச்சியார் 153
வேளான் 12,68,
மூவேந்த வேளான் 251-52, 256, 309, 311
வேளிர்/வேளிர்நாடுகள் 20, 66-69
ஶ்ராவோ, முந்தை 123
ஜவ், மேலை 125
ஜான் புரூஸ் 3
ஜான் ஸ்காட் வேரிங் 3
ஜின், மேலை 122-23
ஜேம்ஸ் கிராண்ட் 3
ஜோஷி, ஜி. பி. 95
ஹான் 122
கீழை 121
மேலை 121
ஷாங் 125

SEELAN BOOKS NORWAY SIGNATURE


www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்